தாய்க்கு ஒப்பான தாய்நாட்டை மறவாதிருப்போம்!

www.uthayannews.ca | 26ம் ஆண்டில்... 26 years of publishing | 27-05-2022


வெள்ளிக்கிழமைகளில் விருப்புடன் விரிகின்றான்


www.uthayannews.ca

UTHAYAN

# உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில்
எத்திக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்

# இலங்கைச் சிறப்பிதழ்




கலை...

இலக்கியம்...

அரசியல்...

சமூகம்...

சினிமா...

ஆன்மீகம்...

மனித நேயம்...


fssai 12421999000289

Tasty தமிழா (TM)

தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக

உலககெங்கும்...

வியாபார தொடர்புகளுக்கு...

கனடா .: 647 762 9512 | இந்தியா .: +91 7845 00 6977

விரைவில்...




VIBRANT
HOSPITALITY
GROUP
ONE OF CANADA'S FASTEST GROWING
HOSPITALITY AND DEVELOPMENT GROUPS
OVER
25 Years
IN THE HOSPITALITY
INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
ஐம்பது ஆண்டுகள் கலை இலக்கியத் தளத்தில்
இடைவிடாப் பயணம் செய்யும் வெற்றியை
கொண்டாடும் விழா கனடாவில் நிகழ்கிறது
அதன் நாயகர் 'நட்பின் நாயகர்' லோகேந்திரலிங்கம்
எத்தனையோ ஆண்டுகள் அருகிருந்து அன்போடு
பழகி வருகின்றேன் பாசமுள்ள 'லோகன்' அண்ணாவோடு
வர்த்தகத் துறையினருக்கு கனடாவில் ஒரு வடிகாலாய்
வாய்த்தவர்; இவர் வெற்றிகரமான பத்திரிகை வித்தகர்;
வெள்ளி விழா மலர்; தந்த 'உதயன்'
இப்போது 'இலங்கைச் சிறப்பிதழையும் படைக்கின்றான்.
வரவேற்போம்! வாழ்த்துவோம்!
சங்கர் நல்லதம்பி
LOCAL: 905 769 1509
TOLL FREE: 1 888 674 7770
VIBRANTHOSPITALITYGROUP.COM


NDP NPD
ANDREA
HORWATH
ஜூன் 2-இல், மருத்துவ சேவைகளை சீரமைக்கும், உங்களுக்கு ஆயிரக்கணக்கில் சேமிக்கும் NDP அரசை தேர்ந்தெடுங்கள்.
ஸ்கார்போறோவில் 1300 மேட்பட்ட புதிய தாதியர்களுக்கான பயிற்சி மற்றும் தொழில் வாய்ப்புகள்
பற்றாக்குறையாக செயல்படும் ஸ்கார்போறோ மருத்துவமனைகளிலும் புதிய சமூக சுகாதார மையங்களில் முதலீடுகள் செய்வது
OHIP-இல் மனநலம், பல் பராமரிப்பு, மருந்துசீட்டுகளை உள்ளடக்குவது
தமிழ் முதியோர்களுக்கு தனித்துவமான, மொழியும் கலாச்சாரமும் சார்ந்த சுகாதார சேவைகளும் வீட்டில் பராமரிப்பும் அளிப்பத
வாகனக் காப்புறுதி விலைகளை 40% குறைப்பது
$20 குறைந்தபட்ச ஊதியம், சம்பளத்துடன் 10 சுகாதார விடுப்பு நாட்கள் வழங்குவது
DOLY BEGUM
Scarborough Southwest
VERONICA JAVIER
Scarborough–Guildwood
JUSTIN KONG
Scarborough North
FELICIA SAMUEL
Scarborough–Rouge Park
NEETHAN SHAN
Scarborough Centre
Authorized by the CFO for the Ontario NDP

# GreatLIFE FINANCIAL

Speak with an advisor at GreatLife Financial for a NO-OBLIGATION quote.

## WE OFFER!



- HOME AND AUTO INSURANCE
- MORTGAGE & SUPER-VISA, FINAL EXPENSE INSURANCE
- LIFE, NON-MEDICAL, MEDICAL, CRITICAL ILLNESS
- RESP, RRSP, TFSA & Investment

109-885 PROGRESS AVE
TORONTO ON. M1H3G3

CALL Now!

T: 647-483-5433
F: 647-479-5433



JOIN OUR TEAM

*Be a GLF member!*

Jay Nadarajah, CHS,CLU
CEO/PRESIDENT
visit us at :
www.greatlife-fiinancial.com
admin@greatlifefinancial.com

UV INSURANCE
iA Financial Group
Canada Protection Plan
Simply Peace of Mind

*Make A Difference*
*Helping Is Giving*

RBC
Assumption Life
Canada Life



DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com — Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302.5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
RE/MAX
Direct: 416-897-9155
Office: 416-221-0999

26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில்
எத்திக்கும் சுடர் வீசும்
வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices

$1.00

416-752-1524 www.uthayannews.ca

Canadian Media Circulation Audit

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

உதயம் 1364 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 27, 2022

## ஞாயிற்றுக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள உதயன் இலங்கைச் சிறப்பிதழ் வெளியீட்டு விழாவும் பிரதம ஆசிரியரின் படைப்பிலக்கிய மற்றும் ஊடகப் பயணத்தின் 50வது ஆண்டு நிறைவு விழாவும்

எதிர்வரும் 29-05-2022 ஞாயிற்றுக்கிழமை கனடா ஸ்காபுறோ நகரில் ஒரே மேடையில் இரண்டு முக்கிய விழாக்கள் இடம்பெறுகின்றன. கனடாவில் கடந்த 26 ஆண்டுகளாக வெற்றிகரமாக இயங்கிவரும் உதயன் பத்திரிகையின் இலங்கைச் சிறப்பிதழ் வெளியீட்டு விழாவும் பத்திரிகையின் பிரதம ஆசிரியரும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் செயலாளருமான ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் படைப்பிலக்கிய மற்றும் ஊடகப் பயணத்தின் 50வது ஆண்டு நிறைவு விழாவும் இட்பெறவுள்ளன.

சிறப்பாக நடைபெறவுள்ள இந்த விழாவிற்கு கனடா ரொறன்ரோ மாநகர் வாழ் பேச்சாளரும் தமிழாசிரியையுமான திருமதி கோதை அமுதன் மற்றும் கனடா மொன்றியால் வாழ் எழுத்தாளரும் கவிஞருமான 'வீணைமைந்தன்' சண்முகராஜா ஆகியோர் தலைமை வகிக்கின்றார்கள். இரண்டு அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்த விழாக்களில் பல்வேறு துறை சார்ந்த பெரியோர்கள் மற்றும் துறைகள் பல சார்ந்த அன்பர்கள் பலர் உரையாற்றவுள்ளார்கள்.

விழாவின் பிரதம விருந்தினராக **East FM 102.7** வானொலி நிறுவனத்தின் அதிபர் நடா ராஜ்குமார் அவர்களும் சிறப்ப விருந்தினராக தமிழ் நாட்டிலிருந்து வருகை தந்திருக்கும் கவிஞரும் எழுத்தாளரும் முன்னாள் தமிழாசிரியையுமான அண்ணாமலை தமிழரசி அவர்களும் அழைக்கப்பெற்றுள்ளனர்.

மேலதிக விபரங்களுக்கு 416 893 0399, 416 270 4343, அல்லுத 416 669 6437 ஆகிய இலக்கங்களை அழைக்கவும்.

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

## ஊடகப் பயணத்தை தொழிலாகக் கருதாது தனது வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்டவர் கனடா 'உதயன்' லோகேந்திரலிங்கம் அவர்கள்

### தாயகத்திலிருந்து கனடா உதயனுக்கு அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் வலி. கிழக்கு பிரதேச சபை தலைவர் நிரோஷ் புகழாரம்



தான் புலம் பெயர்ந்து வாழும் கனடாவில் ஒரு வாராந்தப் பத்திரிகையான 'உதயனை' ஸ்தாபித்து அதன் நிர்வாகியாகவும் பிரதம ஆசிரியராகவும் பணியாற்றும் திரு ஆர். என். லோகேந்திரலிங்கம், பத்திரிகை நடத்துவதை ஒரு தொழிலாகக் கருதாமல் அதை தனது வாழ்க்கை முறையாக ஏற்றுக்கொண்டு உலகெங்கும் அறியப்பெற்ற ஒருவராக காணப்படுகின்றார்.

இவ்வாறாக படைப்பிலக்கியம் மற்றும் ஊடகத்துறையில் 50 ஆண்டுகளைக் கடந்து பயணிக்கும் அவருக்கு தாயக மக்கள் சார்பில் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இவ்வாறு தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார் வலி. கிழக்கு பிரதேச சபை தலைவர் நிரோஷ் அவர்கள்.

*(உள்ளே விபரமான வாழ்த்துச் செய்தி 38ம் பக்கத்தில்)*

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

MONEY PROBLEMS?™
உங்களின் சகல கடன்களுக்கும் ஒரு சிறு தொகையை செலுத்துக
Make one small payment for all your DEBTS!
Direct Tamil Line (416) 489-2000
Visit: www.GtaCredit.Com
North York, Scarborough & Brampton.

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
RE/MAX BLUE FORCE
416 2888882
கவாஸ். சோம சச்சிதானந்தன்

ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

# ஈழ இலக்கியப்போக்கில் திருகோணமலை கலை இலக்கியம்

## ஒரு வரலாற்றுப்பதிவு



**- கலாபூஷணம், திருமலை நவம்**

ஈழத்தின் கிழக்கு கரையில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வனப்புடன் கூடிய நகரம் திருக்கோணமலை. மிக நீண்ட வரலாற்றையும் இலக்கிய மற்றும் சமூகத் தொன்மையும் கொண்ட திருகோணமலை வெளிநாட்டவர்களின் ஆக்கிரமிப்புக்குட்பட்ட மிக முக்கியம் வாய்ந்த பிரதேசமாகவும் வடக்கு கிழக்கு மக்களின் பூகோள நடுநாயகமாகவும் விளங்கிவருகிறது.

கிழக்கு மக்களின் வாழ்க்கை முறைகளையும், வடக்கு மக்களின் பண்பாட்டு அடையாளங்களையும் இணைக்கும் பாலமாக விளங்கிவரும் திருக்கோணமலைப் பிரதேசம், பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக அதன் பூகோள அமைப்புக்கள், கலாச்சாரங்கள் வாழ்வு முறைகள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. திருமலை நாகரீகமும் மெகாஹஞ்சதாரோ நாகரீகமும் ஏறக்குறைய ஒரே காலத்தவை என வரலாற்று ஆய்வாளர்களால் குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

திருக்கோணமலைப் பிரதேசத்தின் முக்கிய அடையாளங்களாக் காணப்படுபவை கோணேசர் ஆலயம், கன்னிய வெந்நீருற்று, துறைமுகம், கந்தளாய்க்குளம், வெருகலம்பதி, தம்பலகமம்கோணேசர் ஆலயம், கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம், வில்கம் விகாரை, முத்து விளையும் கிண்ணியா, நிலாவெளி போன்ற இன்னோரன்ன அடையாளச் சின்னங்களிலிருந்து உருவாகியதே இப்பிரதேசத்தின் தொன்மைமிகு இலக்கியங்களும், கலைகளும், மரபுகளும், வரலாறுகளுமாகும்.

இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே போற்றப்பட்டுவரும் கோணேசர் ஆலயத் தொன்மங்களிலிருந்துதான் திருகோணமலை மண்ணுக்கான கலையும், இலக்கியமும் முகிழ்விடத் தொடங்கியதை முன்னைய கால புராணங்கள் இதிகாசங்கள், மற்றும் கல்வெட்டு ஆதாரங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

தோன்மையான கோணேசர்மரபை விளக்கும் அதன் புகழ்பாடும் புராணங்களான தட்ஷண கைலாசபுராணம், திரிக்கோணாசல புராணம், வாயு புராணம், கோணேசர் கல்வெட்டு திருகோணமலை அந்தாதி கோணேசர் கல்வெட்டு என்பவற்றுடன் சோழர் பாண்டியர் கால கல்வெட்டுக்கள் என்றவகையில் பெரியகுளக்கல்வெட்டு, மாங்கணாய்க் கல்வெட்டு, பளமோட்டைக் கல்வெட்டு, கந்தளாய்க் குளக்கல்வெட்டு (16ற்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள்) மூலம் இச்செய்தியை அறியக்கூடியதாகவுள்ளது.

சிங்கை செகராஜசேகர மன்னன் காலத்தில் வாழ்ந்ததாகக் கருதப்படும் பண்டிதராசர் எனும் புலவரால் இயற்றப் பெற்ற தட்ஷிண கைலாசபுராணம், கவிராசர் எனும் புலவரால் இயற்றப் பெற்ற கோணேசர் கல்வெட்டு மற்றும் திரிகோணாசலபுராணம், திருகோணாசலவெண்பா, திருக்கரசை புராணம் ஆகிய மரபுவழி இலக்கியங்கள் திருக்கோணேஷ்வரத்தின் பெருமைகளை எடுத்துக்கூறுபவை. இவை 17 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவை என்பதை பல ஆய்வாளர்கள் தமது ஆய்வுகளின் மூலம் நிறுவியுள்ளனர். 17 ஆம் நூற்றாண்டை திருமலை இலக்கியத்தின் எல்லையாகக் கொண்டாலும் இவற்றின் தோற்றம் முன்னைய காலத்திலிருந்தே தொடங்குகிறது.

18ம் நூற்றாண்டில் திருகோணமலையில் எழுந்ததாகக் கருதப்படும் திருக்கரைசைபுராணம், சித்திரவேலாயுதர் காதல், கோணமலை அந்தாதி என்பன முன்னைய காலப் புராணங்களின் தொடர்பரம்பரைப் பாடுகளின் பிறப்புக்களாக, திருமலையிலுள்ள ஆலய வரலாறுகளையும் அவை சார்ந்த முறைகளையும், சம்பவங்களையும், நம்பிக்கை மற்றும் மரபுகளையும் எடுத்து சொல்பவையாக காணப்படுகின்றன.

புராண இதிகாச இலக்கியங்கள் தோன்றிய 17ம், 18ம் நூற்றாண்டை தொடர்ந்து மறுமலர்ச்சி நூற்றாண்டென கூறப்படும் 19ம் நூற்றாண்டின் மாற்றங்கள், இலக்கிய வளர்ச்சிகள் இலங்கையின் ஏனைய பிரதேசங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியதைவிட திருகோணமலைப்பிதேசத்தின் கலை இலக்கியப்போக்கிலும் சமூக மரபு சார்ந்த விடயங்களிலும் கனதியான மாற்றங்களை கொண்டு வந்ததற்கு பல ஆதாரங்களுண்டு.

எனவேதான் 19ம் நூற்றாண்டின் மாற்றங்கள் நேரடியாகவே திருகோணமலைப் பிரதேசத்தில் கொண்டுவந்துள்ளது. இந்த மாற்றங்களையும் வளர்ச்சியையும் உடனடியாக தெரிந்துகொண்டவர்களாக திருக்கோணமலை அறிஞர்களாகிய திரு. தி.த.கனகசுந்தரம்பிள்ளை, அவருடைய சகோதரரான பண்டிதர் தி.த. சரவணமுத்துப்பிள்ளை ஆகியோரை குறிப்பிடலாம்.

19 நூற்றாண்டின் ஈழத்து இலக்கிய மாற்றம் இவர்களிடமிருந்துதான் ஆரம்பிக்கிறது என்று கூறக்கூடிய அளவுக்கு இவர்களுடைய பணி காணப்படுகிறது. தமிழ் இலக்கிய வரலாற்றில் 19 ஆம் நூற்றாண்டை ஈழத்தவர்களின் காலம் என சுட்டிக்காட்டும் அளவிற்கு இவர்கள் இருவருடைய இலக்கியப்பணியும் ஏனைய ஈழத்து தமிழ் அறிஞர்களின் பங்களிப்பும் முக்கியம் பெற்று காணப்படுகிறது.

நவீன வரவுகள் எனப்படும் சிறுகதை, நாவல், கவிதை, நாடகம், மெல்லிசை எனும் வடிவங்கள் தமிழகத்தில் காலூன்றத் தொடங்கிய அதே காலப்பகுதியில் திருக்கோணமலையிலும் அவை வளரத் தொடங்கியதற்கு ஆதாரமாக தமிழின் மூத்த நாவல்களான பிரதாப முதலியார் சரித்திரம், (1879) கமலாம்பாள் சரிந்திரம் (1896) எழுந்த அதே முன்பின்னான காலப்பகுதியில் திருகோணமலை அறிஞர்கள் ஆக்கித் தந்தவையே ஊசோன்பாலந்தை (1891), மோகனாங்கி (1895) ஆகிய இரு நாவல்களும்.

திருக்கோணமலையைச் சேர்ந்த எஸ். இன்னாசித்தம்பி, பண்டிதர் சரவணமுத்துப்பிள்ளை ஆகியோர் இவ்விரு நாவல்களையும் படைத்துள்ளனர்.

தமிழின் மூத்த நாவல்களான பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம் ஆகிய நாவல்கள் போலவே திருக்கோணமலை அறிஞர்களால் எழுதப்பட்ட இவ்விரு நாவல்களும் சரித்திர சான்றுடைய பாத்திரங்களையும் சம்பவங்களையும் வைத்து பின்னப்பட்டுள்ளது. கல்கி, அகிலன் சாண்டிலியன் போன்ற இலக்கிய வல்லுனர்கள், சரித்திர நாவல்களை எழுதுவதற்கு முன்பே திருக்கோணமலையை சேர்ந்த அறிஞர்கள் சரித்திர நாவல்களை எழுதியது ஆச்சரியம் தருகின்ற வரலாற்று ஆதாரங்களாகும். தமிழில் வெளிவந்த முதலாவது வரலாற்று நாவல் என்ற பெருமையை மோகனாங்கி பெறுகிறது.

ஊசோன்பாலந்தை என்ற நாவலானது போர்த்துக்கீச நெடுங்கதையொன்றை ஆதாரமாகக் கொண்டதாகவும், அதே போன்று தஞ்சை திருச்சி நாயக்கர் பரம்பரையை ஆதாரமாகக் கொண்டு புனையப்பட்ட வரலாற்று நாவலாக மோகனாங்கி நாவலும் காணப்படுகிறது.

இவ்விரு நாவல்களும் எழுந்த காலத்திலிருந்து சுமார் 60 வருட காலம் திருகோணமலையில் நாவல் எழுவதற்கரிய வாப்பில்லாமல் போய்விட்டதோ என்னவோ இந்த இடைவெளியை நிரப்பியவர் வ.அ. இராசரத்தினம் இவர் 1956ம் ஆண்டு எழுதிய கொழுகொம்பு என்ற நாவலே மோகனாங்கி நாவலுக்குப்பின் திருமலையில் எழுந்த நாவலாகும்.

(தொடர்ச்சி 34ம் பக்கம்)

PRIME MINISTER · PREMIER MINISTRE



May 29, 2022

**Mr. Logan Logendralingam**

Dear Mr. Logendralingam:

I am pleased to extend my warmest greetings and congratulations to you as you celebrate a 50-year journey in creative writing and journalism.

Over the years, you have made valuable contributions to the Tamil Canadian community through the written word as a journalist, editor and poet. This milestone offers a wonderful opportunity to reflect upon your many accomplishments and to set goals for the future.

I would like to commend you for helping to preserve and promote the rich Tamil language and culture in Canada and for your longstanding commitment to fostering fellowship in the community. You can take pride in your contributions to our vibrant, pluralistic society.

Please accept my best wishes for every happiness in the years to come.

Sincerely,

The Rt. Hon. Justin P. J. Trudeau, P.C., M.P.
Prime Minister of Canada

உதயன் கதிரோட்டம்

# ஆசிரிய பீடத்திலிருந்து மற்றுமொரு திறந்த மடல்...

இந்த வாரம் எம்மில் பலரை நாம் விழாக்கள் நிறைந்த மண்டபம் ஒன்றில் சந்திக்கவுள்ளோம் என்பதை எண்ணுகின்ற போது, மனது குதுாகலிக்கின்றது. குறைந்த தொகையில் இந்த மண்ணில் குடியேறத் தொடங்கிய எமது சமூகத்தின் அடையாளமாக விளங்கும் ஊடக நிறுவனம் என்ற வகையில் பல படிகளைக் தாண்டி வந்த நாம் ஒரு மேடையில் நின்ற வண்ணம் நாம் சந்திக்கவுள்ள தமிழ் உள்ளங்களோடு உரையாடப் போகின்றோம் என்பதும் அதிலும் பார்க்க சில மைல்க் கற்களை கடந்து வருவதற்கு இந்த தேசமும் அரசாங்கங்களும் எமது தமிழ்ச் சமூகமும் பாலமாக விளங்கியிருக்கின்றனவே என்பது நிதர்சனமாகத் தெரிகின்றபோது, யாவர்க்கும் நன்றி சொல்வதற்காக எம் நாக்குகள் அசைகின்றன.

தாய் மண்ணை விட்டு நீங்கி, நாம் கால் பதித்த கனடிய மண் எம்மைத் தாங்கிக் கொண்டாலும் மீண்டும் அதே தாய் மண்ணை எண்ணி ஏங்கிய நாட்கள் இன்னும் ஞாபகத்திற்கு வருகின்றன.

எம் சொந்தங்களான உறவுகள் தொடர்ந்து ஆபத்துக்கள் நிறைந்த அந்த மண்ணில் அனுபவித்த துன்பங்களும் மண் மீட்புக்காக தம்மை அர்ப்பணித்தவர்களின் தியாகங்கள். அவ்வாறான தியாக சீலர்களை காட்டிக் கொடுக்கப் புறப்பட்டவர்களினால் ஏற்பட்ட அதிர்ச்சியும் இவை போன்ற பல விடயங்கள், பறந்து வந்த வான் வழிப் பாதையை அண்ணாந்து பார்க்கத்தான் செய்தன.

எமது கனடா உதயன் பத்திரிகையின் முக்கியமான மூன்று நிகழ்வுகள் 29-05-2022 அன்று ஞாயிற்றுக்கிழமை கனடாவின் ஸ்காபுறோ நகரில் இடம்பெறுகின்றன என்ற செய்தி உலகத் தமிழர்களின் செவிகளிலும் பார்வையிலும் பட்டு தெறித்த விடயங்கள் எவ்விதத் தடைகளுமின்றி எம் காதுகளுக்கும் பார்வைக்கும் முன்னாள் நின்று சந்தோசச் சத்தம் எழுப்புகின்றன.

தாயகத்தில் படைப்பிலக்கியத் துறையில் இளம் வயதிலேயே கால் பதித்ததனால் இன்று 50வது ஆண்டை எட்டிப் பிடிக்க வகை செய்துள்ளது காலம். ஆமாம்! கால ஓட்டத்தோடும் எதிர் வந்த சவால்களோடும் நாம் இத்தனை ஆண்டுகள் பயணித்துள்ளோம் என்பதை நினைக்கையில் ஆச்சரியமாகவே இருக்கிறது.

ஐம்பது வருடங்களுக்கு முன்னர படைப்பிலக்கியத் துறையின் மீது பரவசத்தோடு கால்பதிக்கையில் புன்னகை பூத்த முகத்தோடு எம்மை வரவேற்று களம் தந்த பல சஞ்சிகையாளர்களுக்கு நன்றி சொல்வதற்காக அவர்களது இருப்பைத் தேட முனைகின்றோம். ஆனாலும் வெளிச்சமாகத் தெரிகின்றது, அவர்கள் எமக்கு களத்தைத தந்து விட்டு அவர்களில் பலர் 'காலம்' சென்று விட்டார்கள் என்று. எனினும் அந்த சஞ்சிகைப் போராளிகளின் அயராக உழைப்பையும் படைப்பாளர்கள் மீது அன்பு பாராட்டும் அதிசயத்தையும் அனுபவித்தவர்கள் என்ற வகையில் எங்கள் இதயங்களில் இன்னும் அவர்களுக்கு இடமுண்டு என்பதை பதிவு செய்யும் காலப் பகுதி இதுவொன்றே.

படிப்பதும் எழுதுவதும் பின்னர் எழுதுவதும் என்ற பழக்கம் தொடர்ச்சியாக எம்மை இயங்கச் செய்தது என்றால், அது மிகையாகாது. காலச் சக்கரம் சுழன்று செல்ல நாம் சந்தித்த அனைத்து விடயங்களிலும் எழுத்தும் சிந்தனையும் அவசியமாகி நின்றன. சமூகங்கள் பல இணைந்த ஒரு தேசத்தை ஒன்றுபட்டு வாழ்ந்து உயரச் செய்ய வேண்டிய நேரத்தில் அரசியல்வாதிகள் அதைச் செய்யாமல் தங்கள் பொருளாதார வளத்தை 'உயர்த்தி' நின்றார்கள். மக்களுக்கு சேவையாற்றுவதற்காகவே அரசியலுக்கு வருகின்றார்கள் என்று எண்ணியிருந்த மக்களுக்கு ஏமாற்றமே பரிசாகக் கிட்டின.

இனரீதியாகவும் சமூகங்களின அடிப்படையிலும் நாட்டில் பிரிவினையை ஏற்படுத்தினால் மோசமான ஆட்சி செய்பவர்களின் எண்ணங்கள் இடையூறு எதுவும் இன்றி என்பதை தெரிந்து கொண்டவர்கள் அதையே தொடர்ச்சியாகச் செய்து நின்றார்கள்.

இவ்வாறான பல்வேறு முரண்பாடுகள் கொண்ட சமூகமாக இருந்த நாம் பார்க்கையில். எம்மிடத்தில் படைப்பிலக்கியம் என்ற கருவியும் சிந்திக்கக் கூடிய சாதகமான சந்தர்ப்பங்களும் தாமாகவே கூடி வந்தன. இதனால் எமது எழுத்துக்கள் அரசியல் பக்கமும் ஆர்வத்தோடு படையெடுத்தன. சமூகத்தின் நலன் கருதி தலைவர்கள் செயற்படாத காரணத்தால் அவர்களைச் சாட வேண்டிய தேவைகள் குவிந்திருந்தன.

இன்னொரு பக்கத்தில் சமூகப் பிரச்சனைகளை ஆராய்ந்து பார்க்க முற்படுகையில் அதற்கு தத்துவார்தத் ரீதியான அறிவுத் தேடல் வேண்டும் என்பதற்காக அவற்றுள் முனைந்தோம்.

இவ்வாறான ஒரு நிலைப்பாட்டுடன் இருந்த எமக்கு முன்பாக இனம் சார்ந்த விடுதலைப் போராடத்திற்கான முனைப்புகள் முளைவிடத் தொடங்க. அந்தப் பக்கமும் நாம் கவனிக்க வேண்டிய ஒன்றாக இருந்தன. இன விடுதலைக்கான நம்பிக்கைகள் சார்ந்த தலைமைகளுக்கு பின்னால் அடிவைக்க வேண்டிய தேவையும் எமக்கிருந்தன என்பதையும் நாம் இங்கே உணர்ந்து கொண்ட காலப்பகுதியை கடந்த வசந்தோம்.

புலம் பெயர வேண்டிய நாட்கள் வந்தபோது தாய் மண்ணிலிருந்து நாம் கொண்டு வந்தவை படைப்புக்கள் மீது ஆர்வம் கொண்டதும் அதனால் அரசியல் சமூகம் சார்ந்து சிந்திக்க வேண்டும் என்ற வேட்கையும் எம்மிடத்தில் தோன்றியது.

அதன் விளைவே, நாம் தொடர்ச்சியாக கனடிய மண்ணிலே ஏறக் குறைய முப்பது வருடங்கள் கலை இலக்கிய ஊடகப் பணிக்குள் மூழ்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆதனோடு இணைந்து 50 ஆண்டுகளை நாம் இரு பெரும் துறைக்குள் கடந்து வந்துள்ளோம்.

சமூகம் என்ற கோட்டுக்குள் உள்ளவர்கள் அனைவருமே ஓரே நோக்கம் கொண்டவர்களாக இல்லை என்பதையும் அனுபவ ரீதியாகத் தெரிந்து கொண்டோம்.

எனினும் மிகவும் சிரமங்கள் நிறைந்த அனுபவத்தோடு எமது பணிகளைத் நாம் தொடர்ந்து வருகின்றோம். இந்த வேளையிலே கனடாவில் மட்டுமல்ல தமிழ் மக்கள் எங்கெங்கு வாழ்கின்றார்களோடு அங்கெல்லாம் நமது அக்கறையும் கவனிப்பும் இருக்க வேண்டும் என்ற எமது எண்ணத்தை இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# நூற்றாண்டைக் கடந்தும் லோகேந்திரலிங்கம் அவர்களின் பணி சிறக்கட்டும்....



பிரதேசத்தால் வேறுபட்ட நாம் பிறப்பால் ஒன்றுபட்டவர்கள். இருவருமே பதுளை மண்ணைச் சேர்ந்தவர்கள். நானும் திரு லோகேந்திரலிங்கம் அவர்களும் நண்பர் என்ற சொல்லுக்கு மேலாக அண்ணர் என்ற ஆத்மார்த்த உறவே எம் இருவரையும் இறுகப் பிணைத்துள்ளது.

அண்ணரின் 50 ஆண்டு கால கலை இலக்கிய ஊடக பயணத்தின் பொன் விழா-வின் போது அவரை வாழ்த்துவதில் பெருமை கொள்கின்றேன்.

மலையகத்தில் பிறந்து 12 வயது வரை அங்கேயே வாழ்ந்தமையானது மலையகத் தொழிலாளர் மீது பற்றும் இரக்கமும் கொண்ட பல படைப்புக்களை அவர் பிரசவித்துள்ளார். இதனால் "மலையன்பன்" என்னும் புனைப் பெயரையும் அவர் தனதாக்கிக் கொண்டார்.

இலக்கிய உலகின் பிரவேசத்தின்போது ஆரம்பகாலத்தில் அவர் எழு-திய இரு கவிதைகளை இங்கு சமர்ப்பிக்கின்றேன்.

***தாய் ஆடு***

***என் அம்மாவின் வளர்ப்பில்***
***இரண்டு ஒரு வாரக் குட்டிகளோடு***
***நின்ற என் வீட்டுத் தாய் ஆடு***
***நேற்று வீழ்ந்திறந்த போது..***
***அனுதாபம் தெரிவிக்க***
***அங்கு வந்த சிலரில் ஒருவரைத் தேடினேன்***
***"வளர்ந்த பின் எனக்கொன்று என்று***
***ஈனும் முன்னே இரந்து கேட்ட***
***அயல் வீட்டு பெண்***
***அங்கு வரவேயில்லை.***

***இலஞ்சம்***
***அந்தப் பதவிக்கு***
***அவர்கள் கேட்டிருந்த***
***ஆகக் குறைவான உயரம் எனக்கில்லை***
***வந்திருந்த நண்பன் வழி சொல்ல***
***ஐயாயிரம் ரூபாய் பணக்கட்டு***
***ஒன்றின் மேல்***
***ஏறி நின்ற வண்ணம்***
***என்னை அளக்கவிட்டேன்***
***உயரம் அப்போது சரியாக இருந்தது..***

தாயகம் தமிழகம் மலேசியா மற்றும் பல நாடுகளில் இருந்து இலக்கியவாதிகள் மற்றும் பல துறை சார்ந்தவர்களை தனது சொந்த செலவில் கனடாவிற்கு அழைத்து கூட்டங்களை நடத்துவதுடன் இலக்கிய சந்திப்புக்களையும் ஏற்பாடு செய்துள்ளார்.

தமிழக எழுத்தாளர் திரு பிரபஞ்சன் அவர்களை அவர் கனடாவுக்கு அழைத்து இலக்கிய சந்திப்புக்களை ஏற்பாடு செய்திருந்தார். அவ்வேளையில் நானும் திரு பிரபஞ்சன் அவர்களுடன் இணைந்து கொண்டேன்.

திரு லோகேந்திரலிங்கம் ஏற்பாடு செய்த கூட்டங்கள் சந்திப்புக்களுக்கு அப்பால் கனடாவில் உள்ள இலக்கிய அமைப்புகள் குழுக்கள் என்பன திரு பிரபஞ்சன் அவர்களை தனிப்பட்ட முறையில் சந்திக்க விரும்பி கேட்டபோது எவ்வித தயக்கமும் இன்றி அவர் சம்மதம் தெரிவித்தார்.

திரு லோகேந்திரலிங்கம் அவர்களின் இலக்கிய ஊடகப் பயணம் குறித்து நிறையவே பேசலாம். அந்தளவுக்கு நிறைந்த அனுபவத்தையும் ஆளுமையையும் அவர் கொண்டுள்ளார்.

அவர் தனக்குத்தானே வரித்துக் கொண்ட இந்த கலை இலக்கிய ஊடகப் பயணம் நூற்றாண்டையும் கடந்து வெற்றிகரமாகப் பயணிக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**வி.தேவராஜ்**
**பிரதம ஆசிரியர்** – Voice Of Ilankai
**பணிப்பாளர்** – Human Voice International
**வீரகேசரி வாரவெளியீடுகளின் முன்னாள் பிரதம பொறுப்பாசிரியர்**
**17.05.2022**



# வாழ்க்கை என்பது!

**- பவானி சச்சிதானந்தன்**

**தி**வ்யாவின் தொலைப்பேசி ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருக்க, அடுப்படியில் வேலையாய் இருந்தவள், கைகளைத் துடைத்துக் கொண்டு சீக்கிரமாக எடுத்து பதில் அளித்திட காதுக்கு அருகில் வைத்து "ஹலோ"! என்றாள்.

மறுமுனையில் அவள் கணவன் மதன் உரையாடினான். தனது பெற்றோர், மனைவி, பிள்ளைகள் நலம் விசாரித்தவன் தொடராக ஒரு மணிநேரத்துக்கு மேல் கதைத்தான்.

தொலைப்பேசியும் சூடாகிட மீண்டும் நாளை அழைப்பதாகக் கூறி துண்டித்தான். திவ்யாவின் சந்தோசம் முகத்தில் வெளிப்பட, வெளியில் சென்ற பிள்ளைகள் வீட்டுக்கு வரும் வரை அவளால் பொறுத்திருக்க மனது இடம் தரவில்லை.

இரு பிள்ளைகளுக்கும் அழைப்பை ஏற்படுத்தியவள் "உங்கட அப்பா இன்னும் மூன்று நாளில் வந்திடுவாராம். மீண்டும் வெளிநாட்டுக்கு போக மாட்டாராம். எங்களுடனேயே தங்கி விடுவாராம்" என்று ஆர்வக் கோளாரில் படபடப்பாய் பெரிய எதிர்பார்ப்போடு கூறினாள்.

திவ்யாவுக்கு எல்லாம் நிறைந்த சுகமான வாழ்க்கை வாழ்ந்தாலும், கணவன் ஒரு நாட்டிலும், தானும் பிள்ளைகளும் இன்னொரு நாட்டிலுமாக காலம் கழிப்பது அவ்வப்போது மனதுக்கு ரொம்ப வருத்தமாகவே இருக்கும்.

மதனின் தொடர்பில் விடைபெற்று, பிள்ளைகளுக்கும் விடயத்தை கூறி முடித்து, தன்னை மறந்து கைகளை கீழே ஊண்றி, கால்களை நீட்டி அமர்ந்தவளை முன்னைய நினைவுகளில் மனது இழுத்துக் கொண்டது.

மதன் திவ்யா இருவருக்கும் திருமணம் நடந்து இருபத்தி ஐந்து வருடங்கள் நடக்கின்றன.

திருமணம் நடந்து இரண்டாவது மாதமே தொழிலுக்காக மதன் "துபாய்" நாடு சென்றான். திவ்யா இரண்டாவது குழந்தைக்கும் அம்மாவானாள்.

காலங்கள் கடந்திட திவ்யாவும் தன் கணவனிடம் "இனி மேலும் எனக்கு குழந்தைகளை தனியாக வளர்க்க சிரமமாய் இருக்கின்றது.

சொந்த நாட்டில் ஏதேனும் வியாபாரம் செய்யுங்கள். நானும் உங்களுக்கு உதவியாக இருக்கிறேன்" என்றாள்.

அவன் வெளிநாட்டு மோகத்தில் இருந்தானேத் தவிர, உள் நாட்டில் சம்பாதிப்பதைப் பற்றி துளியும் நினைக்க வில்லை.

திவ்யாவும் இதற்கு மேல் அவனை வற்புறுத்தி தன்னோடும், பிள்ளைகளோடும் தங்கிடுங்கள் எனக் கூறிட விரும்ப வில்லை. தனக்கு இருக்கும் ஆசை அவனிடம் இல்லாத போது எத்தனை எடுத்துக் கூறியும் அர்த்தம் இல்லை என உணர்ந்தாள்.

அவன் போக்கிலேயே விட்டுப் பிடிக்க எண்ணியவள், கண்டுக் கொள்ளாமல் இருந்து விட்டாள்.

மதனிடமும் எந்த ஒரு தீய பழக்கங்களும் இல்லை. பணத்தின் மேலுள்ள ஆர்வம் மட்டுமே அவனை இவ்வாறு செயற்படுத்தச் செய்கின்றது.

திவ்யாவிடமும் எந்தத் தீய செயற் பாடுகளும் இல்லை. பிள்ளைகளுடன் தனியாகவே சிரமப்படுகிறேனே என்ற ஆதங்கம் மட்டும் தான்.

இப்போதெல்லாம் திவ்யாவும் எல்லா வேலைகளையும் தனியவே செய்திடவும், எந்த ஒரு விஷேசத்துக்கும், நல்லது, கெட்டது என எல்லாத் தேவைகளுக்கும் தனியாகவே போய் வந்திடுவதையும் பழக்கப் படத்திக் கொண்டாள்.

பிள்ளைகளும் வளர்ந்து பருவ வயதை அடைந்து விட்டார்கள். யாரும் தேவைகளுக்குக் கூறியதும் "அப்பா இங்கே இல்லாமல் நாம் வர முடியாது" எனக் கூறி அடம் பிடிப்பார்கள்.

திவ்யாவும் அவர்களை சமாதானப்படுத்திட ஏதேதோ ஆறுதல் கூறுவாள். "இவ்வளவு வளர்ந்து விட்டீங்க இன்னுமா புரியல, அப்பா நான் சொல்லுவதைக் கேட்க மாட்டார் என்று".! என விளங்கப் படுத்திட முயற்சிப்பாள்.

பிள்ளைகளோ "இல்லையம்மா, நீங்கள் அழுத்திச் சொல்லுறது குறைவு" என்பார்கள். திவ்யாவுக்கு வேதனையாக இருக்கும். எல்லாப் பிள்ளைகளுக்கும் இருக்கும் ஆசை, என் பிள்ளைகளுக்கும் இருக்கும் தானே!. அதை ஏன் மதன் விளங்கிக் கொள்கிறார் இல்லை என.

இருந்தும் தனது குடும்பத்தவர்களும், கணவரது குடும்பத்தவர்களும் எந்த விழாக்களுக்கு அழைத்தாலும் பிள்ளைகளையும் அழைத்துக் கொண்டு தவறாது சென்றிடுவாள்.

சொந்தங்களும், நட்புகளும் "வெளிநாட்டு காசு வருது" என நக்கலாகப் பேசுவார்கள். அக்கறையாக நலம் விசாரிப்பதோடு "என்ன இன்னுமா உன் வீட்டுக் காரர் வரவில்லை. வெளியூர் காசுக்கு ரொம்பவும் தான் முக்கியத் துவம் கொடுக்கின்றார் போலும்.

என்ன பணம் சம்பாதித்தாலும், மனைவி பிள்ளைகளுடன் ஒரே இடத்தில் குடும்பம் நடத்துவது போல சந்தோசம் வருமா ..... ?" என்பார்கள்.

பிள்ளைகளைப் பார்த்து "இம்முறை உங்கள் அப்பா வந்ததும், மீண்டும் உங்களை தனியாக விட்டிட்டு போக வேண்டாமென்று சொல்லுங்கள் என வசனம் வசனமாய்க் கதைத்து மனதில் சுமை ஏற்றி விடுவார்கள்.

திவ்யாவும் குழந்தைகளும் அணிந்து சென்ற அழகான உடைகளும், பூசிச் சென்ற அலங்காரமும் அப்படியே அழகாய் இருந்திட, மனசு வாடிப் போக அதன் வெளிப்பாடு அப்படியே முகத்தில் தெரி-ய கவலையோடு வீட்டுக்கு வந்திடுவார்கள்.

இது எல்லாம் இவர்களுக்குப் பழகிப் போன விடையங்களாகவே அமைந்து விட்டன.

கடந்த கால சிந்தனையில் ஆழ்ந்திருந்த திவ்யாவை "அம்மா ......அம்மா ....என மகள் கூப்பிட்டுக் கொண்டே வந்திட திடுக்கிட்டு சுய நினைவுக்கு வந்தவள் தன்னை சுதாகரித்துக் கொண்டவளாய் "வா....வா" ...என்ற வாரே எழுந்தாள்.

***** ***** ****

மதன் வரும் நாளும் வந்தது. திவ்யாவும், பிள்ளைகளும் விமான நிலையத்தில் மதனின் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் காத்து நின்றார்கள்.

மதன் மூன்று சக்கர கதிரையில் அமர்ந்த வாறு வருவதைக் கண்டிட, மூவரும் துடித்துப் போனார்கள். என்ன நடந்தது என முவரும் ஒருமித்து மதன் முகத்தைப் பார்த்துக் கேட்டிட, நேருக்கு நேர்ப் பார்த்து பதில் கூறிட தகுதியற்றவனாய் கீழேப் பார்த்தான்.

மதனுக்கு ஒருபக்க கையும் காலும் பாரிச வாதத்தால் பாதிக்கப்பட்டிட, மனைவி, பிள்ளைகளுக்கு அறிவித்தால் கவலைப் படுவார்கள் என்ற எண்ணத்தில் மௌனமாகவே சொந்த நாட்டுக்கு வந்து சேர்ந்தான்.

உழைக்க முடிந்த காலம் வரை வெளிநாடே தஞ்சமென தங்கியதை நினைத்து மன உளைச்சலுக்கும் ஆளானான். கணவன், மனைவியாகக் குழந்தைகளுடன் சுகமாக வாழ்ந்திட வேண்டிய காலங்களை உழைப்பதற்கு மட்டுமே கழித்து விட்டோமே என்ற மனசாட்சி ரொம்பவும் அவனை சிரமப்படுத்தியது.

பணத்தில் மட்டுமே குறியாக இருந்ததை நினைத்து வெட்கப்பட்டான். அவனின் உள்ளுணர்வைப் புரிந்துக் கொண்டவளாய் "சரி ..... சரி கவலைப்படாதீங்க, எல்லா வற்றுக்கும் நேரமும் காலமும் வரும் வரையிலும் நாம் காத்திருக்கத் தான் வேண்டும்.

இப்போ சரி வந்தீங்களே! ....அது போதும். வாழ்க்கைல உழைப்பையும், பணத்தையும் மட்டும் நம்பி இருப்பது தப்பு. அதையும் தாண்டி இன்பம் தர எத்தனையோ விடையங்கள் இருப்பதையும் புரிந்துக் கொள்ளுங்கள்.

நீங்கள் எந்த நிலையில் வந்தாலும் உங்களுக்குக் கொடுக்க வேண்டிய அன்பும், கருணையும், கௌரவமும் அப்படியே கிடைக்கும் என்றாள் திவ்யா.

மனைவி, பிள்ளைகள் கட்டி அணைத்து முத்தமிட்டிட தன்னையே மறந்தான் மதன்.

**முற்றும்**
**பவானி சச்சிதானந்தன்**
**கொழும்பு**

## தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம்
## Tamil National Green Organization

இல.109, அரசடி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்
greentamils5@gmail.com

No.109,Arasady Road,
kantharmadam, Jaffna
0094 21 221 4641

### இருள் விரட்டும் உதயசூரியன்போல் - இன விடியலுக்காய் கதிர் பரப்பும் கனடா உதயன்

**பொ. ஐங்கரநேசன்**

ஜனநாயகத்தின் தூண்களில் ஒன்றாக வர்ணிக்கப்படும் ஊடகங்கள்தான் இன்றைய உலகை ஆட்சி செய்கின்றன. ஊடகங்களே வேறு எதனை விடவும் வெகுசனக் கருத்துருவாக்கத்தில் பெரும் பங்காற்றி உலகைத் திசைமுகப்படுத்துவதில் முதன்மைப் பங்காற்றுகின்றன. ஊடகங்கள் ஆட்சியாளர்களின் ஊதுகுழல்களாகவோ, புரட்சியாளர்களின் போர்ப்பறைகளாகவே கருத்துகளை வெளிக்கொணர்கின்றன. அரசியல் மட்டுமல்ல; அறிவியல், பொருளாதாரம், சினிமா என்று சகல துறைகளும் ஊடகங்களினாலேயே வெளிச்சம் பெறுகின்றன.

வெறுமனே செய்திகளையும், தகவல்களையும் சொல்வதற்கு அப்பால் கருத்துருவாக்கலில் ஊடகங்கள் கொண்டிருக்கும் பிடிமானம் அதிகம் என்பதால், அரச ஊடகங்களையும் தாண்டி, அரசியற் கட்சிகளும் ஊடகங்களை நடாத்தி வருகின்றன. தனிப்பட்ட அரசியல்வாதிகளுங்கூட ஊடக முதலாளிகளாகின்றனர். பேரினவாதம் கோலோச்சுகின்ற இலங்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. இவ்வாறு ஊடகங்கள் கட்சி அரசியல்மயப்படும்போது உண்மைகளையும் பொய்மைகளையும் வேறுபிரித்தறிய முடியாமல் மூளைச் சலவை செய்யப்படும் வெகுமக்கள் ஊடகங்கள் கட்டமைக்கும் கருத்து வளையத்துக்குள் இலகுவாக உள்ளீர்க்கப்பட்டு விடுகின்றனர்.

தமிழ் ஊடகத்துறையில் இலங்கையும் தமிழகமும் என்ற எல்லைகளையும் தாண்டி இன்று புகலிடத் தமிழ்ச்சூழலும் கவனம் பெற்று வருகிறது. அதில் கனடா உதயன் தவிர்க்கமுடியாததொரு ஊடகப்பங்களிப்பைத் தமிழ்ச்சூழலுக்கு நல்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. ஒரு பத்திரிகைக்கு ஆசிரியத் தலையங்கமே அச்சாணி. உதயனின் ஆசிரியத் தலையங்கமான கதிரோட்டம் இருளை விரட்டும் உதயசூரியனாய் இன விடியலுக்காகத் தன் கதிர்களைப் பரப்பிவருவது கண்கூடு.

ஊடகங்களில் நடுநிலை என்ற சொல் பரவலாகப் பயன்படுத்தப்படுவதுண்டு. செய்திகளை உள்ளது உள்ளபடியே பகிருவதுதான் அந்த நடுநிலைமை. ஆனால், ஆசிரியத் தலையங்கம் அவ்வாறான செய்திகளின் தொகுப்பாக இருக்க முடியாது. உண்மைக்கும் பொய்மைக்கும் இடையில், நீதிக்கும் அநீதிக்கும் இடையில் எவ்வாறு நடுவுநிலைமை என்று ஒன்று இருக்க முடியாதோ, அதேபோன்று ஒடுக்குபவர்களுக்கும் ஒடுக்கப்படுபவர்களுக்கும் இடையே நடுநிலை வகிக்க முடியாது. இதனால்தான், உதயன் ஒடுக்கப்படுபவர்களின் பக்கமாக நின்று, தமிழ் இனம் சார்ந்து எப்போதும் தன் அக்கினிக் கதிர்களைப் பாய்ச்சி வருகிறது.

உதயன் கனேடியத் தமிழர்களின் வணிக நிகழ்ச்சிகளுக்கும் பண்பாட்டு நிகழ்ச்சிகளுக்கும் முக்கியத்துவம் வழங்குவதன் மூலம் புகலிடத் தமிழர்களின் பொருளாதார மேம்பாட்டிலும் தமிழ்ப் பண்பாட்டின் இருத்தலிலும் பெரும் பங்களிப்புச் செய்து வருகின்றது. கனேடியத் தமிழர்களை மாத்திரமல்லாமல் தாய் ஈழம், தமிழகம், மலேசியா, சிங்கப்பூர் என்று தமிழ்கூறும் நல்லுலகை இணையவழியாக இணைத்துச் செய்திகளை, கருத்துகளை, இலக்கியப் படைப்புகளைப் பரிமாறும் ஓர் ஊடகப் பாலமாகவும் உதயன் அரும்பணியாற்றி வருகின்றது. இதனொரு கட்டமாகவே உதயன் இலங்கைச் சிறப்பிதழை இப்போது வெளியிட்டுள்ளது.

உதயனின் நிறுவுநரும் ஆசிரியருமான திருவாளர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் அசாத்திய உழைப்பும் தமிழினப் பற்றுமே உதயனின் வளர்ச்சிக்கான காரணங்களாகும். உதயன் ஊடாகக் கிடைக்கும் தொடர்புகளைப் பயன்படுத்தி ரொறன்ரோவின் மனிதநேயக்குரல் அமைப்பினூடாகத் தாயகமாம் ஈழத்தில் அவர் ஆற்றிவரும் மனிதநேயப் பணிகள் எண்ணற்றவை. உதயனும் திருவாளர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களும் மென்மேலும் வளர்ச்சிபெற்று தமிழினமும் தமிழ் நிலமும் சிறக்க இயற்கை என்ற பேரன்னையின் ஆசீர்வாதம் எப்போதும் கிட்டுவதாக!

**பொ. ஐங்கரநேசன்**
தலைவர்
தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம்
0779476334 / 0777969644

பசுமைத் தேசத்தை நோக்கி
Towards a Green Nation



# முப்பத்தொரு ரூபா



மைதிலி தயாபரன்

சிறுகதை

இரண்டு எரிவாயு சிலிண்டர்களை இருபுறமும் வைத்தபடி நின்ற முகுந்தன் தன்னுடைய ரீசேட்டின் பொக்கற்றைத் துளாவிப்பார்த்தான்.
கழுத்தை இடது புறமாகத் திருப்பியவாறு கண்ணோட்டம் விட்டவனால் சரியாகப் பணத்தைக் கணக்கிட முடியவில்லை. சுற்றும் முற்றும் பார்த்தவாறு அப்படியே வலது கையால் அள்ளி எடுத்தான், எண்ணிப் பார்ப்பதற்கு.
அதற்குள் ஆரவாரம் தோன்றவே பணத்தை இறுக்கமாகப் பிடித்தபடி இரண்டு கைகளாலும் இரண்டு சிலிண்டர்களின் மேற்பகுதியைத் தொட்டான். தனது கைகளால் ஒரு 5 சென்ரிமீற்றர் முன்னோக்கி நகர்த்திவிட்டு நிமிர்ந்து பார்த்தான்.
சுகாதார எல்லையை சமூக இடைவெளியைக் கடந்து தனக்கு முன்னாலே காவல் இருந்தவரின் அருகில் வந்துவிட்டதை உணரமுடிந்தது. அவனது இருகால்களும் இரு சிலிண்டர்களும் மெதுவாகப் பின்நோக்கி நகர்ந்தன, ரயில் நிலையத்தில் சமிஞ்ஞை கிடைக்காததால் பின்நோக்கி நகரும் ரயிலைப்போல.
சற்றுமுன் சலசலப்பு எதனால் வந்திருக்கும் என்பதை யூகித்தபோது அருகில் இருந்தவர்களின் பேச்சொலி கேட்டது.
'அது யாழ்ப்பாணத்துக்குப் போகவந்த வாகனமாம்'
'அப்பிடியே' எங்கட சனம் முண்டியடிச்சு அதப்பிடிக்கப் பாத்துதுகள்'
'ஒரு கொஞ்சப்பேர் அதில போய் வாங்கிப் போட்டுதுகளாம்'
'அப்பிடியே.. ம்ம்' இந்தக் காலோட எப்பிடித்தான் ஓடிப் பிடிக்கமுடியும்..' என்றவாறு சலித்துக் கொண்டவனைப் பார்த்தபோது அவனுக்குள்ளும் அதே எண்ணம்'!
சே.. இந்தப் படிப்பை மட்டும் படித்திரா விட்டால் சாதாரணமானவர்களைப் போன்று முகக் கவசத்தைப் போடாமல் சமூக இடைவெளியைப் பேணாமல் அவனாலும் ஓடிச்சென்று ஓரிரு சிலிண்டர்களை வாங்கியிருக்க முடியும்'
ம்ம்ம்'. என்ன இருக்கு இந்த நாட்டில எதுக்கும் மதிப்பில்லாத நிலை'. என்று எண்ணிபோதுதான் கையில் இருந்த பணம் ஞாபகத்திற்கு வந்தது. வலது கையை விரித்து இரண்டு கைகளாலும் எண்ணத் தொடங்கினான். 1000 ரூபா நோட்டுக்கள் நான்கும் ஐநூறு ரூபா, நூறு ரூபா, ஐம்பது ரூபா நோட்டுக்களாக . 'முழுச் சில்லறையாக'. அந்த இடத்தில் மிச்சக்காசை எதிர்பார்க்க முடியாது என்ற எண்ணத்தில் அவன் எடுத்து வைத்திருந்தது.
அவனுக்கு நேரே பின்னாலே நின்ற பெண் 'களுக்' கென்று சிரிப்பது போன்று கேட்டது.
'ஓம் சிரியுங்கோ, சிரியுங்கோ' நாணயத்தின்ர மதிப்பு உங்களுக்குத் தெரிஞ்சாத்தானே' நான் வேலை செய்த சிங்கப்பூரில இந்த மாதிரியான எல்லா நாணயத்துக்கும் பெறுமதி இருந்தது. ஆனா இந்த நாட்டில பெரிய காசுக்கே பெறுமதி இல்லாமக் கிடக்கு. என்று மனதுக்குள் நினைத்தவாறு எண்ணி முடித்தபோது ஒரு சிறு குழப்பம்.
ஒரு சிலிண்டர் நாலாயிரத்துக்கும் மேல வரும் என்று சொன்னதையும் கவனிக்காமல் வரிசையில் இடத்தைப் பிடிக்க வேண்டும் என்ற அவசரத்தில் பணத்தைச் சரியாக எடுக்காதது மட்டுமல்ல கைத்தொலைபேசியையும் விட்டுவிட்டு, வீட்டைத் துப்புரவு செய்வதற்காகப் போட்டிருந்த அரைக்காற்சட்டை ரீசேட்டுடனே வந்து பிரதான பாதையில் வரிசையில் நிற்கின்றோம் என்ற விடயத்தை முழுமையாகப் புரிந்து கொண்டதும் நாணம் கலந்த சங்கோஜம் அவனுள் எழுந்தது. முடிந்தவரைக்கும் யாரும் பார்க்காதவாறு சனத்திரளில் ஒன்றித்தவனாக இருக்குமாறு நத்தை வேகத்தில் அவன் வரிசையில் முன்னேறிக் கொண்டிருந்தான்.
கால்கள் இரண்டும் பூமி சுற்றும் வேகத்தில் வரிசையில் முன்னேறிக் கொண்டிருக்க அவனுடைய நினைவலைகள் குதிரை வேகத்திற் பின்னோக்கிச் சென்றுகொண்டிருந்தன.
வாழ்க்கைப் பற்றிய அளவுகடந்த கனவுகளுடன் தொடங்கிய பல்கலைக்கழக வாழ்க்கை, காலம் செல்லச்செல்ல தொழில் பற்றிய கலக்கத்தை விளைவிப்பதாக இருந்தது. அந்த இடத்திற் செலவிட்ட காலம் அநியாயமாகப் போய்விடுமோ என்று எண்ணத் தோன்றியது.
2001 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம்.
இறுதியாண்டுத் தேர்வுக்காக படிப்பிற்கான விடுப்பில் இருந்தபோது அந்த சம்பவம் நிகழ்ந்தது.
அந்த மாதம் பதினோராம் திகதி அமெரிக்காவின் இரட்டைக் கோபுரத்தின் மீது குண்டு வீசப்பட்ட செய்தி அலையாகப் பரவிவந்தது. இனித் தகவல் தொழில்நுட்பத்தில் முன்னையப் போன்று தொழில் வாய்ப்புக்களைப் பெறுவது கடினமானதாக இருக்கும் என்று அப்போது யாவராலும் பேசப்பட்டது.
முயற்சியைக் கைவிடக்கூடாது. ஏதாவது ஒரு துறையிற் கால் பதிக்கலாம் என்றும் நம்பிக்கையை ஊட்டுவதற்கு சில நல்ல சிரேஸ்டர்கள் இருந்தார்கள். ஏதோ ஒரு நம்பிக்கையும் அந்த இடத்தில் இருந்து சித்தி பெற்று வெளியில் வந்துவிட வேண்டும் என்ற தீவிர எண்ணமும் அவனைப் படிக்கச் செய்தது. பரீட்சை முடிந்தவுடனும் அவனுக்கு பொறியியல் பீடத்திலேயே போதனாசிரியராக வேலை கிடைத்தது.
சம்பளம் பெரிதாக இல்லாதுபோனாலும் அன்றைய நாளில் தங்களுடைய சொந்தச் செலவைச் சமாளித்துக் கொள்ளும் அளவிற்குப் போதுமானதாக இருக்குமாம் என்று அந்த இடத்தில் கதைத்துக் கொண்டார்கள். ஆறாயிரமோ 'எண்ணாயிரமோ' சரியாகத் தெரியவில்லை.
வரும்போது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தான்.
அந்தச் சம்பளத்தில் அடுத்த கட்ட முயற்சியாக மேற்படிப்புக்கு புலமைப் பரிசில் பெற்று வெளிநாடுகளுக்குச் செல்லும் நோக்கத்துடன் அவனுக்கு முன்னால் படித்த சில நண்பர்கள் முயற்சி செய்து கொண்டிருந் தார்கள். இடைக்கிடையே வெளிநாடுகளில் வசிக்கும் அண்ணன், தம்பி, மாமா. போன்றோரின் உதவியும் கிடைத்திருக்க..
அடுத்த இருபதாம் திகதி கடந்தபோது அவனுடைய முதலாவது சம்பளத்திற்கான கூற்று வந்திருந்தது. பத்தாயிரத்து முப்பது ரூபா. முதன்முறையிலே வைப் பிகர் (five figure) சம்பளம் என்றவாறு அவனுடைய நண்பர்கள் சிரித்துக் கொண்டார்கள். அவ்வாறு சொல்லவைத்த அந்த முப்பத்தொரு ரூபாவை அவன் நன்றியுடன் பார்த்துக் கொண்டான்.
அவனால் ஓரளவுக்கு வெளியில் சொல்ல முடிந்தது.
'குடியியல் எந்திரவியலில் விஞ்ஞானமாணிப் பட்டம்'.. அதுவும் கௌரவப் பட்டம் (honour)' பட்டம் பெற்றவுடனும் பைப் பிகரில் (five figure) சம்பளம்'
பொறியியற் பீடத்திலேயே வேலை'
வெளிநாடு போவதற்கு முயற்சி '..
என்றெல்லாம் பெற்றோராற் தலைநிமிர்ந்து சொல்லவைத்த அந்த முப்பத்தொரு ரூபாவை அவனும் அவனுடன் தேர்ச்சியடைந்தவர்களும் என்றுமே நன்றியுடன் நினைவுகூருவதுண்டு'
தன்னுடைய சம்பளம் இவ்வளவு என்பதை முதன் முதலில் தன்னுடைய தாயாரிடம் சொல்லச் சென்றபோது அவனுக்கு சிறிது சங்கடமாகவே இருந்தது. அதே நேரத்தில் அவனுடைய சம்பளத்தில் மூன்று மடங்கு சம்பாதித்த ஓரிரு நண்பர்களும் இருந்தார்கள். தன்னுடைய சம்பளம் அவ்வளவு பொருத்தமானதாக அவனுக்குத் தெரியவில்லை. ஆனால் அம்மா அவ்வாறு நினைக்கவில்லை.
'ரெண்டு பவுண் வாங்குற காசு' என்றார். அம்மா எப்பொழுதும் பவுணை வைத்து ஒப்பீட்டுச் சொல்பவர். அவர் சொல்லும்போதே அவரிடத்திற் பெருமிதத்தைக் காணமுடிந்தது.
ஒரு வருடம் போதனாசிரியராகக் கடமை பார்த்தபோது தனியார் மற்றும் அரச நிறுவனங்களில் அவ்வப்போது வேலைக்கான நேர்முகத் தேர்வுக்கு சென்று வந்ததையும் நினைத்துப் பார்க்கத் தவறவில்லை. தன்னிடம் இருந்த படிப்பு சில வேலைகளுக்கு அதிகப்படியான தகுதி என்பதை அறிந்தபோது கவலையாகவே இருந்தது. தன்னுடைய அக்காவைக் கரை சேர்ப்பது எவ்வாறு..
ஓராண்டு கழிந்தது' போதனாசிரியர் வேலையில் தொடர முடியாததால் வேலை ஒன்றை அவசரமாய்ப் பெற்றுக்கொள்ளவேண்டிய கட்டாயம் எழுந்தது. சிங்கப்பூரில் வேலை செய்யும் நண்பர்கள் மூலமாக அங்கு செல்ல நேர்ந்தது. அங்கு கடுமையான வேலையின் பின்னால் கிடைத்த சம்பளம் அவனுடைய மனதை நிறைத்தது. அவனுக்கு ரெண்டு வயது அதிகமான அவனுடைய அக்காவுக்கு அவனுடைய செலவிலேயே நகைகள் வாங்கிக் கொடுத்து ஓரளவு சிறப்பாகத் திருமணம் செய்தபோது அம்மாவின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை.
தன்னந்தனியாக இரு பிள்ளைகளை வளர்த்துப் படிப்பித்து நல்ல நிலைக்கு உயர்த்திவிட்டார் என்று ஊரே சொல்லும்படியாக அம்மா இருந்தார். அடுத்த மூன்று வருடங்களில் அவனுக்கும் திருமணம் நடந்தது. ஓரளவு பணத்தை உழைத்துக் கொண்டு சொந்த நாட்டிற்குச் சேவை செய்யும் நோக்கில் சுமார் எட்டு வருடங்களுக்கு முன்னால் எம் நாட்டிற்கு வந்ததை நினைத்துப் பார்த்தான். அப்பொழுது அவனைத் தடுத்த ஒரு சில நண்பர்களையும் தற்போது நன்றியுடன் நினைவுபடுத்திப் பார்த்தான்.
அவனுடைய மனைவி கொழும்பில் ஒரு பாடசாலையில் ஆசிரியராக இருந்ததால் அவனுக்கு அங்கு இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இவ்வாறே நண்பர்களிடம் சொல்லி வர முடிந்தது. கொழும்பிலே தனியார் கட்டடத்துறை நிறுவனம் ஒன்றில் வேலை செய்யத் தொடங்கியதும் 'மகன் இங்கேயே செற்றில் ஆகிவிட்டான்' என்று அம்மா குதூகலமாகச் சொன்னார். அவன் தன்னுடைய புதிய வேலையில் சம்பளத்தைச் சொன்னபோதும் அம்மா சொன்னார். 'ரெண்டு பவுண் வாங்குற காசு'
இவ்வாறாக அவனுடைய வாழ்க்கை இந்த நாட்டில் நகர்ந்தது. வருடந்தோறும் அவனுடைய சம்பளம் அதிகரித்துக் கொண்டே வந்தது. அதற்குப் போட்டியாக பவுணின் விலையும் அதிகரித்துக் கொண்டே வந்தது. அம்மா சொல்லாவிட்டாலும் அவனால் தனக்குள்ளாக சொல்ல முடிந்தது. 'ரெண்டு பவுண் வாங்குற காசு'
ஆனால் தற்பொழுது தன்னுடைய சம்பளத்தை ஒப்பிட முடியாது என்பது புரிந்தது. வல்லூறுக்குச் சமமாக பறக்கவிழையும் காகம் அது உயரத்தே போகும்போது அதற்குப் போட்டி போட முடியாமல் வீழ்ந்து விடுவதைப்போன்று தற்போது அவனுடைய சம்பளம் பவுணின் விலையுடன் போட்டிபோட முடியவில்லை என்பதை இதுவரையிலும் அம்மாவுக்குச் சொல்லவில்லை.
'தம்பி தள்ளிப் போங்கோ' என்னத்தப் பாத்துக் கொண்டு நிக்கிறியள் 'நாங்களும் வாங்க வேணுமெல்லே.. ' ஒரு கிழவரின் குரல் தொடரவும் அவனுடைய நினைவுகள் நின்றன. கையில் இருந்த பணத்தில் பெறுமதியை மறுபடியும் கணக்கிட்டான்.
"அவசரத்துல வந்திட்டேனே' காசு காணாமல் இருக்கப்படாது' என்று அவனுடைய உள்மனம் வேண்டிக்கொண்டது. கையைக் கீழாகத் தட்டி காற்சட்டையில் சிறிது பணம் இருப்பதையும் உறுதிப் படுத்திக்கொண்டான். அவசரத்துக்கு உதவுமே'.
கடையை அண்மிக்கும்போது காரியம் நடக்கும் என்ற சந்தோசம் வந்தாலும் காசு போதுமா என்ற கலக்கமும் எழுந்தது. நகரும்போது ஒவ்வொருவரிடமும் கேட்டுப் பார்த்தான். ம்.. ஹூம் 'யாருக்கும் உண்மையான விலை தெரியவில்லை'
அருகிற் சென்றுவிட்டான்'
பணத்தைக் கொடுத்து சிலிண்டர்களை வாங்கிவிட்டான்' அதற்காக அவனுடைய ஆடைகளில் ஒளிந்திருந்த அனைத்துப் பணமும் எடுக்கப்பட்டு விட்டது. ஒருவாறு அனைத்தையும் எண்ணிக் கொடுத்தான்'.. என்ன ஆச்சரியம்'
ஒரு பொறியியலாளராக இருபது வருடங்களுக்கு முன்னதான அவனுடைய முதலாவது சம்பளத்தை ஒத்திருந்தது'. அம்மா சொன்ன அந்த 'ரெண்டு பவுண் வாங்குற காசு' இன்று 'ரெண்டு சிலிண்டர் வாங்குற காசு'
'அப்பாடா, ஒருவாறு மதிப்புக் குறையாமல் காப்பாற்றிவிட்டதே' முப்பத்தொரு ரூபா மிச்சமும் இருக்கிறது..
நிம்மதியாக இரு சிலிண்டர்களையும் தூக்குவதற்குக் குனிந்தான்.
படித்து முந்தவுடன் படிப்பின் மானத்தையும் அவனுடைய மானத்தையும் காப்பாற்றிய அதே முப்பத்தொரு ரூபா அவனுடைய சட்டைப் பொக்கற்றுக்குள் கவனமாகச் சென்று நிலைகொண்டது, "என்றும் நான் உன்னுடன்" என்று சொல்வதைப் போன்று.

- முற்றும் -

## எங்கே எம் தாய்நாடு?



சிறுவர்களாக நாம் பந்தடித்து விளையாடினோம்
பனை மரங்களை சுற்றி ஓடி, ஆடித் திரிந்தோம்
குண்டு சத்தத்தை கேட்டு புலம்பெயர்ந்து வந்தோம்
துயரத்தில் கேக்கிறோம் எங்கே எம் தாய்நாடு?

மண் பானை வைத்து சமையல் செய்தோம்
பள்ளிக்குச் சென்று பாடத்தைக் கற்றோம்
அரசுக்குப் பயந்து புலம்பெயர்ந்து வந்தோம்
வெறுப்பில் கேட்கிறோம் எங்கே எம் தாய்நாடு?

உறவுகளோடு பொங்கலை கொண்டாடினோம்
நண்பர்களோடு தீபாவளி, பட்டாசை வெடித்தோம்
பேரிடர்வு ஏற்பட்டதால் புலம்பெயர்ந்து வந்தோம்
ஆற்றாமையில் கேட்கின்றோம் எங்கே எம் தாய்நாடு?


கனடா நாட்டில் காலடி வைத்தோம்
புதிய சுற்றாடலை கண்டு பயந்து நின்றோம்
குளிர் காலம் வர நடுங்கி நின்றோம்
அச்சத்தில் கேட்கிறோம் எங்கே எம் தாய்நாடு?

புதிய வாழ்க்கை முறைக்கு எங்களை மாற்றிக் கொண்டோம்
குடும்பங்களை அமைத்து சந்தோசமாக இருந்தாலும்
ஏக்கத்தில் கேட்கிறோம் எங்கே எம் தாய்நாடு,

**செல்வி லக்சனா சிவகுமார்**
வகுப்பு - 10

# சிவி: அரசியல் எழுத்திற்குக் கிடைத்த பொக்கிஷம்

**லண்டனில் ஜூன் 11ஆம் திகதி விம்பம் அமைப்பின் ஏற்பாட்டில் நடைபெறவிருக்கும் மலையக இலக்கிய மாநாட்டில் வெளியிடப்படவிருக்கும் சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் "மலையக அரசியல்: தலைவர்களும் தளபதிகளும்" என்ற நூல் பற்றிய கட்டுரை இதுவாகும். எச்.எச்.விக்ரமசிங்க இந்நூலினைப் பதிப்பித்திருக்கிறார**




**க.**கைலாசபதி அவர்கள் தினகரனில் பிரதம ஆசிரியராக இருந்தபோதுதான் சி.வி.வேலுப்பிள்ளையின் மலையக அரசியல் தலைவர்கள், தளபதிகள் பற்றிய கட்டுரைத் தொடர் வெளியானது. 1958 செப்டம்பர் மாதத்திலிருந்து சி.வி.யின் மலையக அரசியல் கட்டுரைகள் 1959 ஏப்ரல் மாதம் வரை தினகரனில் தொடர்ந்து வெளியாகின. முதலில் இக்கட்டுரைத் தொடர் கேலிச்சித்திரம் என்று அறிமுகப்படுத்தப்பட்டு அப்துல் அசீஸ், எஸ். தொண்டமான் ஆகியோர் பற்றிய கட்டுரைகள் கேலிச்சித்திரமாகவே ஓவியர் யூனுஸ் அவர்களின் கேலிச்சித்திரத்துடன் வெளியாகின. அச்சித்திரங்கள் கேலிச்சித்திரங்களாக, political caricature/cartoon என்ற பாணியில் அமைந்திருந்தன. பின்னர் வெளியான அரசியல் தலைவர்கள், தளபதிகளின் கட்டுரைகள் அவர்களின் புகைப்படங்களுடன் வெளியாகின. கேலிச்சித்திரம் என்று அவை குறிக்கப்படாமல் வாழ்க்கைச்சித்திரம், பேனாச்சித்திரம் என்றே குறிக்கப்பட்டன.

"மலைநாட்டுத் தமிழ்மக்கள் தலைவர்கள்" என்ற தலைப்பில் முக்கிய பெரும் மலையக அரசியல் ஆளுமைகள் 13 பேரினதும், "மலைநாட்டுத் தமிழ் மக்களின் உரிமைப்போர்த் தளபதிகள்" என்ற தலைப்பில் இரண்டாம் நிலைப்பட்ட- வளர்ந்துவரும் மலையக அரசியல் ஆளுமைகள் 13 பேரினதும் வாழ்க்கைச் சித்திரங்களை சி.வி.அவர்கள் சிறப்பாக எழுதியிருந்தார்.

மலையகத்தின் அரசியல் தளத்தில் இயங்கிய 26 ஆளுமைகள் பற்றிய சி.வி.வேலுப்பிள்ளை அவர்களின் பதிவு ஆறு தசாப்தங்கள் கழித்து இன்று நூல் வடிவம் பெறுவது ஈழத்து அரசியல் எழுத்திற்குக் கிடைத்திருக்கும் பெரும் பொக்கிஷமாகும். மலையகத்தின் அரும்பெரும் ஆவணப்பதிவாளராக (chronicler) சி.வி. ஈழத்து அரசியல் வரலாற்றில் நிலைபெறுகிறார். ஒவ்வொரு அரசியல் தலைவரையும் மிக நுட்பமாக அவதானித்து, அரிய தகவல்களுடன் அந்த அரசியல் ஆளுமைகளின் உள்ளார்ந்த சாரத்தை, அங்கதச்சுவையுடன் அபூர்வமான எழுத்தில் வடித்திருக்கிறார் சி.வி.

ஈழத்தில் நாம் காணும் அரசியல் தலைவர்கள் பற்றிய வரலாறு என்பது அத்தலைவர்களின் புகழ்ப்பரணி பாடுபவையாகவே அமைந்துள்ளன.ஒவ்வொரு அரசியல் தலைவரையும் பற்றி சி.வி. எழுதும்போது, அவரின் நினைவுக்கிடங்கில் குவிந்திருக்கும் கொள்ளைத் தகவல்கள் அவரது நியாயமான பரிசீலனைக்குத் துணை நிற்கின்றன. கட்டுரையின் ஒவ்வொரு வசனத்திலும் புதிய- அரிய- வேறெங்கும் நாம் கேட்டிராத தகவல்கள் கட்டுரையின் செழுமைக்கு துணை சேர்க்கின்றன. ஒரு கவிஞனின் சாணைக்கல்லில் வார்க்கப்பட்ட அரசியல் சொல்லோவியங்களாக அவை மிளிர்கின்றன. ஓர் அரசியல் கட்டுரையை இத்துணை ரசனையோடு, அங்கதம் பளிச்சிட, ஆழ்ந்த பகுப்பாய்வுடன் எழுதவல்ல பிறிதொரு எழுத்தாளனை நாம் இங்கு கண்டதில்லை. இந்த அரசியல் கட்டுரைகள் மூலம் சி.வி. அரசியல் எழுத்தின் உன்னதத்தைத் தொட்டிருக்கிறார்.

மலைநாட்டுத் தொழிற்சங்க வரலாற்றின் முன்னோடி கே.நடேசய்யரைப்பற்றி சி.வி. எழுதும்போது, "தொழிலாளர் எழுச்சியுற்று , உரிமையுடைய மக்களைப்போல் தன்மானத்தோடு நடக்க, ஐயரவர்கள் கற்பித்தார் என்பதனை ஒருபொழுதும் அலட்சியம் செய்யமுடியாது" என்று குறிப்பிடும் அதேவேளை, "அவருக்கு நல்ல ஆலோசனை கூறுவோர் இருக்கவில்லை. ஆமாம் போடுபவர்கள் மட்டுமே இருந்தார்கள். அவருடைய ஸ்தாபனம் ஒரு திட்டவட்டமான கொள்கையுடையதல்ல. ஆனால், தான் மட்டும் தனியாய் நின்று நாடகத்தை நடத்தினார். அவருடைய சம்மேளனம், அவர் ஏறிச் சென்ற அந்த ரதம் 1947ஆம் ஆண்டில் நொறுங்கிச் சிதைந்தது" என்று துல்லியமான மதிப்பீட்டினை முன்வைக்கிறார்.

ஜனாப்.அப்துல் அசீஸ் அவர்களைப்பற்றி சி.வி.எழுதுகையில், "அவர் இரண்டு லட்சம் மக்களின் தலைவர் ஆயினும் அவர் நெருக்கடியான தருணங்களில் இனித்தான் முக்கிய முடிவுகள் செய்யவேண்டியவரா யிருக்கிறார். புதியவர்களைச் சுலபமாக வசீகரிப்பவர் ஆனால், அவர்களைத் தம்வசம் வைத்திருப்பதற்கு கஷ்டப்படுவார்" என்று எழுதுகிறார்.

எஸ்.தொண்டமான் அவர்களைப்பற்றி எழுதுகையில், "திரு.தொண்டமான் அரிசிச் சோறு அரைப்பங்குக்கும், தாழ்மையான தம்மைப்பற்றிய பத்திரிகைச் செய்திகள் என்னும் உணவை மூன்றரைப்பங்கும் உண்டு வாழ்கிறாரென்பது பொதுவான பேச்சாகும்" என்று சி.வி.எழுதுவதை வேறு யார் எழுத முடியும்?

"தெளிந்த சிந்தையும் அன்பு உள்ளமும் வாழ்க்கையிலுள்ள சகல நல்லவற்றையும் மேன்மையானவற்றையும் பயபக்தியுடன் போற்றும் மரியாதை உணர்ச்சியும் படைத்த பண்பாட்டின் சிறந்த வாலிபத் தலைவரான திரு. தேவராஜ் சமுதாயத்துக்கு ஒரு பொக்கிஷம்" என்று சான்று தருகிறார் சி.வி.

சி.வி. அவர்கள் தீட்டிய மலையகத் தலைவர்களின் சித்திரத்தில் வந்து சேர்ந்தவர்களில் இன்றும் எம்மிடையே வாழும் சீலராகத் தனித்துவம் பெறுகிறார் திரு. பி.தேவராஜ் அவர்கள்.

மலையக அரசியலைத் தொழிற்சங்க அரசியலிலிருந்து பிரித்துப்பார்க்க முடியாது. மலையக சமுதாய உருவாக்கத்தில் தொழிற்சங்கங்களே அந்த மக்களின் காவல் அரணாகத் திகழ் ந்திருக்கிறது. அவர்களின் தொழிற்களத்திலே நின்று அந்த மக்களுடன் போராடியிருக்கிறது. தொழிற்சங்கங்களை அமைப்பதற்கான போராட்டத்திலே இரண்டு இளஞ்சிங்கங்கள் தூக்குக்கயிறை முத்தமிட்டுள்ளன. மலையக மக்களின் மீட்சிக்குக் குரல் கொடுத்த இப்பெருந்தகைகள் எல்லாரும் ஏதோ ஒரு வகையில் தொழிலாளர் களோடும் தொழிற்சங்கங்களோடும் அந்தரங்க சுத்தியோடு உழைத்திருக்கிறார்கள். எளிமையோடு அந்த மக்களுடன் வாழ்ந்திருக்கிறார்கள். சி.வி. வடித்திருக்கும் அந்தப் பெரியார்களின் வாழ்க்கை கனம் பண்ண வேண்டிய பெருமக்களின் வாழ்வாக நம் கண்முன்னே விரிகிறது.

காந்தி, அம்பேத்கார், ராஜாஜி, பண்டிதர் நேரு, பெரியார் ஈ.வே.ரா, ராஜேந்திர பிரசாத், பாலகங்காதர திலகர், பிபின் சந்திரபால், கமலாதேவி சட்டோபாத்யாய, டாக்டர். ருக்மணி இலட்சுமிபதி, ஹரீந்திரநாத் சட்டோபாத்யாய, முஹம்மது அலி ஜின்னா, கஸ்தூரிரங்க ஐயங்கார், கல்கி, நீதியரசர் சதாசிவ ஐயர், சி.எப். அன்றூஸ் போன்ற இந்திய சுதந்திரப் போராட்ட வீரர்களுடனும் பெரியார்களுடனும் உறவு பூண்டிருந்த பேராளுமைகளைக் கொண்ட அரசியல் தலைமை மலையகத்தில் வேரூன்றியிருந்தது என்பதை சி.வி.அவர்களின் இந்த எழுத்துகள் இனங்காட்டுகின்றன.

சர்.பொன் அருணாசலம், தியாகராஜன் செட்டியார், சத்தியவாகீஸ்வர ஐயர், சர்.ஜேம்ஸ் பீரிஸ், லாரி முத்துகிருஷ்ணா, டாக்டர் சரவணமுத்து போன்ற பெருந்தகைகளுடனும் சேர்ந்து உழைத்த மலையக அரசியலின் முற்போக்குப் பாங்கினை இந்நூல் வலியுறுத்துகிறது. அந்த அரசியலின் பன்னிற மணிக்கலவை செழுமையானது. அந்த அரசியலில் ஆழ்ந்தவர்கள் நேர்மையானவர்களாக இருந்திருக்கிறார்கள். ஏழை எளிய மக்களின் சுபீட்சமே தங்கள் பணியின் இலக்காக வரித்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் கொண்டிருந்த தொடர்புப்பின்னல் ஆச்சரியமூட்டுகிறது. பெருமைப்படத்தக்க அரசியல் பாரம்பரியத்தை அவர்கள் மலையகத்திற்கு விட்டுச் சென்றிருக்கிறார்கள்.

அத்தகைய செழுமையான அரசியல் பாரம்பரியத்தை எழுத்திலே வடித்த மலையகத்தின் பெருங் கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களுக்கு மலையகம் நன்றிக்கடன்பட்டிருக்கிறது.இத்தகைய ஒரு அற்புதமான பதிவை அவரைப்போன்ற ஒருவரே சாதித்திருக்கமுடியும்.

ஒவ்வொரு கட்டுரையிலும் ஒவ்வொரு வசனத்திலும் பொருள் பொதிந்த கருத்துகளை, தகவல்களை, புதிய செய்திகளை அவர் வாரி இறைத்துச் செல்கிறார். இந்தக்கட்டுரைகள் 1958/1959 இல் எழுதப்பட்டு, இன்று 63 ஆண்டுகளுக்குப்பின் நூல் வடிவம் பெறுகிறது என்பது, நமது அரும்பெரும் இலக்கியப் பொக்கிஷங்களைப் பேணுவதில் நாம் காட்டும் அசிரத்தையைக் காட்டுகிறது. மலையக மக்களின் அரசியல் தலைவர்கள் குறித்த கட்டுரைத் தொடரை எழுத சி.வி. அவர்களை ஊக்குவித்து, தினகரனில் அதனைத் தொடராக வெளியிட்டு ஒரு சமூகத்தின் பாரிய தேவையை நிறைவு செய்த பேராசிரியர் க.கைலாசபதி அவர்களுக்கு நாம் நன்றி கூறுதல் தகும்.

மலையகத்தின் சென்றொழிந்துபோன ஒரு பழைய யுகத்தை மீட்டெடுத்து புதிதாய்ப் புனையும் பெரும் பணியைத் தோளில் சுமக்கும் பலம் சி.வி.யிடமே இருந்தது. அவரது விரிந்த வாசிப்பும் பரந்த கவியுள்ளமும் தொழிலாளர் நேசமும் தொழிற்சங்க ஈடுபாடும் அரசியல் தெளிவும் எழுத்துவன்மையும் தராசுபோல் சீர் தூக்கிப்பார்க்கும் பாங்கும் இந்த நூலுக்கு பேரழகைச் சேர்த்திருக்கிறது.

இந்நூல் வெறும் அரசியல் தலைவர்களையும் தளபதிகளையும் பற்றியது மட்டுமல்ல. மலையக சமுதாயத்தில் செயற்பட்ட பல்வேறு இயக்கங்களை, எதிரும் புதிருமான ஆளுமைகளை, மலையக உயர்குழாத்தின் பின்னணிகளை, நிலப்பிரபுத்துவ கூறுகளின் ஆதிக்கத்தை எல்லாம் விரித்து நிற்கும் களமாகவும் இந்நூல் சிறப்புப் பெறுகிறது. பெரிய கங்காணிமார்களின் போஷிப்பு, தோட்ட உத்தியோகஸ்தர்களின் அக்கறை, தோட்டத் தொழிலாளர்களின் முன்னேற்றத்தில் கல்வியின் பங்கு, சமூகநீதியின் அழுத்தம், மலையகம் தனது தனித்துவத்தைப் பேணுவதற்காக ஏனைய அமைப்புகளுடன் தொடர்பு கொள்ளக் கூடாது எனும் கருத்தியல், ஏனைய முற்போக்கு அமைப்புகளுடன் கைகோர்க்கவேண்டும் என்ற சிந்தனை, மலையகம் இந்திய அரசியல் ஆதிக்கத்திலிருந்து தன்னை தளைநீக்கம் செய்யவேண்டும் என்ற கருத்து, இங்கிலாந்தில் பயின்று மலையகத்தில் தொழிலாளர் நலனுக்கு உழைக்கமுன்வந்த அறிவுஜீவிகள் என்று நாம் கூர்ந்து நோக்கவேண்டிய பல சமூகக்கூறுகளை இந்நூல் பேசுகிறது.

இந்நூலில் தோட்ட அரசியலின் முன்னோடியாக அறிமுகமாகும் திரு. ஏ.எஸ்.ஜோன் என்பவரே காலத்தால் மிக மூத்த அரசியல் ஆளுமை ஆவார். 1902 ஆம் ஆண்டு ஜோன் இலங்கை வந்து சேரும்போதே, ஒரு கலகக்கார அரசியலுடன்தான் வருகிறார். இருபத்து நான்கு வயது இளைஞனாக இலங்கையில் கால்பதித்த ஜோன் இந்தியத்தொழிலாளர்களுக்கு பெருங் கஷ்டங்களை ஏற்படுத்திய சட்டங்களிலிருந்து நிவாரணம் தேடி பெரும் வழக்கறிஞர் ஏ.வி.குலசிங்கத்தின் துணையை நாடி, வெற்றி கண்டிருக்கிறார். சிறந்த வழக்கறிஞராகவும் "சிலோன் டெய்லி நியூஸ்" பத்திராதிபராகவும் திகழ் ந்த ஏ.வி.குலசிங்கத்துடன், அல்லது "ஜனமித்திரன்" பத்திராதிபர் லாரி முத்துகிருஷ்ணா போன்ற பெரியார்களுடன் நட்பு பேணி வந்திருக்கிறார்.

இதற்கும் மேலே, காந்தி தென் ஆபிரிக்காவில் செயற்பட்டுக் கொண்டிருந்தபோது, இலங்கையில் அவரது முகவராக இயங்கிய ஜோன், ஸி- .எப். ஆண்ட்றூஸ் அவர்களை இலங்கைக்கு வருவித்து இந்தியத்தொழிலாளர்கள் படும் கஷ்டங்களை அவருக்கு எடுத்து விளக்கியிருக்கிறார்.

தலைவர் அம்பேத்கர் பட்டியலின மக்களுக்கு தனித்தொகுதி கோரியதை காந்தி எதிர்த்ததிலிருந்து, அம்மனிதரிடம் வைத்திருந்த நம்பிக்கையை இழந்தேன் என்று கூறிய மனிதர் ஜோன்.

1941 இல் நடைபெற்ற சேனநாயக -பாஜ்பாய் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ளலாம் என்று ஜோன் அன்றைய தலைவர்களுக்கு ஆலோசனை கூறியிருக்கிறார். நேரு அந்த ஒப்பந்தத்தை நிராகரித்திருக்கிறார். "என்னைப்போன்ற ஒரு கிழவரின் சொல்லைக்கேட்பதில் எவரும் சிரத்தை காட்டவில்லை" என்று ஜோன் சொல்வதை சி.வி.பதிவு செய்கிறார்.

ஜோன் மலையகத் தலைவர்களில் புத்தம் புதிய சிந்தனைகளால் ஒளியூட்டிய முன்னோடியாகத் தெரிகிறார். சி.வி. எழுதியிருக்கும் மலையக அரசியல் தலைவர்களின் வரலாறு மலையகத் தொழிலாளர்களின் தொழிற்சங்க வரலாற்றின் பல கட்டங்களுக்கூடாக பயணிக்கிறது. சுதந்திரத்திற்கு முற்பட்டகாலத்தில் ஜோர்ஜ் மோத்தா, பெரி சுந்தரம், ஐ.எக்ஸ்.பெரேரா போன்ற ஆளுமைகளின் தலைமைப்பண்பு பற்றி துல்லியமான மதிப்பீட்டைத் தருகிறார் சி.வி.

1948 ஆம் ஆண்டு மலையகத் தமிழர்களின்பிரஜாவுரிமையை மறுக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டபோது, சுதந்திர இலங்கையில் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் சட்டவாக்கத்திற்கெதிராக முதல் அரசியல் போராட்டம் மலையகத்திலிருந்துதான் எழுந்தது. 1948 ஆம் வருடத்திலிருந்து தொடர்ச்சியாக வந்த மூன்று ஆண்டுகள் சமீப காலச் சரித்திரத்திலே காரிருள் சூழ்ந்த காலம் என்கிறார் சி.வி.

இக்காலப்பகுதியில் காங்கிரஸ் தலைவராகவிருந்தவர் தீனர்களின் தொண்டன் கே.ராஜலிங்கம் அவர்கள். முதலாம் வருடத்தில் காங்கிரஸ் காரியக்கமிட்டி பிரஜாவுரிமைச் சட்டத்தை பகிஷ்கரித்தது. இரண்டாவது ஆண்டு முடிவில், குறித்த காலத்துக்குள் 237,000 மனுக்களைச் சமர்ப்பித்தது. "எனினும், அவருடைய மக்கள் அரசியல் அநாதைகளாகிக் கொண்டே வந்தார்கள்" என்கிறார் சி.வி.

காங்கிரஸிற்குள் சத்தியாக்கிரகப்போராட்டத்திற்கு எதிராக எழுந்த குரல்களையும் சி.வி.பதிவு செய்கிறார். பதுளை பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். சுப்பையா பாராளுமன்ற விறாந்தையில் சத்தியாக்கிரகம் செய்யவிரும்பவில்லை தொழிலாளர்கள் வேலைநிறுத்தப்போராட்டத்தில் இறங்கவேண்டும் என்றிருந்திருக்கிறார் என எழுதுகிறார்.

தொழிற்சங்கங்களில் உழைத்த தலைவர்களை சி.வி.மிக உயர்ந்த இடத்தில் வைத்துப்போற்றினார். இறுதிவரை தொழிற்சங்கவாதியாகவே வாழ்ந்து மறைந்த சி.வி. அவர்களுக்கே அந்த போராட்ட அணியின் பெருமையும் வலிமையையும் தெரிந்திருக்கிறது. எனவேதான் சாதாரண தோட்ட மட்டத்தில், மாவட்டமட்டத்தில் உழைத்த தொழிற்சங்க வாதிகளை எல்லாம் பெருமைப்படுத்தியிருக்கிறார். தோட்டத் தொழிலாளர்களின் மேன்மைக்காகவே வாழ்ந்து, எளிமையான வாழ்வில் தோய்ந்து, காலவெளியில் தெரியாமலே போய்விட்ட பல தொழிற்சங்கவாதிகளை நாம் அறிவோம். கே.ஜி.எஸ்.நாயர் போன்ற போராட்டத் தொழிற்சங்கவாதிகளை சி.வி.யின் இந்த நூலிலே தரிசிக்க முடிகிறது.

மலையக அரசியல் வரலாற்றை அறிய விரும்பும் யாரும் சி.வி.எழுதிய இந்த வரலாற்றுப் புதையலைக் கடந்து போக முடியாது. இன்றைய மலையக அரசியல் தலைவர்கள் பற்றிய மதிப்பீட்டைத் தருவதற்கு ஒரு சி.வி. இல்லை என்ற ஏக்கம் இந்த நூலை வாசித்து முடிக்கையில் எழவே செய்கிறது.




# RED RIVER

“மூன்று சாத்தான்களின் கூரிய நகக்கீறல்கள் முகத்தில் கோரமாக விபரணச்சித்திரம் உறைய குருதிக் கொட்டியது அவள் முகத்தில்”

கண்களின் கலவரம், முதுகில் விழுந்த கசை தாக்குதல், தலைவிரி கோலத்தில் சுவரோரம் சரிந்து கிடந்தாள்.

“சரிதானா? பிழைதானா? நீங்களே முடிவு செய்யுங்கள். என “News Six செய்தி ஆறு” நிகழ்ச்சி தொகுப்பாளினி சரிதா நேற்று துப்பாக்கி முனையில் கடத்தப்பட்டார். இன்று மாலை வரை நரகநீதிமன்ற கூண்டில் ஏற்றப்பட்டார்!

WWW என்ற குழுதான் அவளைக் கடத்தியிருக்கக்கூடும் என்ற சந்தேகம் அந்த நகரில் ஒட்டப்பட்டிருந்த கறுப்பு சுவரொட்டியில் தெரிந்த சிகப்பு எழுத்துக்கள் சுட்டிக்காட்டின.

யார் அந்த WWW குழு? நாட்டுக்கு மட்டுமல்ல, உலக இணையங்கள்கூட தமது எட்டாம் அறிவு மூலம் தேடும்வினாத்தான் அதுவே.

W-wicked W-wine W-wellknown ஆகிய கீழுலக மனிதர்களின் நேச கூட்டணியே!

சிட்டுக்குருவியின் பூபாலராகம் வண்ணத்துப் பூச்சிகளின் சிறகடிப்பு, ஒற்றைப் பனையின் கீற்றுகளின் நடுவே எட்டிப் பார்க்கும் ஆதவனின் கதிரொளி என்பன ஊரைப் பற்றி நாற்பது வருடங்களுக்கு முன் “நடிகமணி” “கலையரசு” சொர்ணலிங்கம் ஐயா எழுதியவரிகள் பள்ளி மாணவர் வாய்ப்பாட்டிலும், நாடகமேடைகளிலும் காணக் கிடைத்தன. ஆனால் இன்று மாலை கறுத்தவுடன் தள்ளாடும் மனிதர்கள், கும்மாளமிடும் இரவு விடுதிகள் நுண்கடன் வசூலிப்பு என முப்பரிமாண குழுவின் அவமானத்தால் அகற்றப்பட்ட அந்தரங்க அறையாக சமூககாட்சிகள் அரங்கேறின.

ஓ! இது தகுமா? எனக் கேட்ட மங்கைதான் விசாரணைக் கைதியாக சரிந்து கிடக்கிறாள்.

“மசண்ட இருட்டு, அப்போது நடக்கும் மஞ்சுவிரட்டு, படித்த காளையை வெட்டிவிட்டு மறையும் சண்டியர்கள்...... அவன் சமூக ஊடகத்தில் உறிஞ்சும் மது என எழுதிய வரிகளால் “உசுரு போயிட்டுது” அதுபற்றி படித்தவனும் இறுதி மூச்சுநேரம் அவளுக்கு ஒளி அலைகளை பதிவேற்றி இருந்தான். “இப்போது அவர்களுக்கு சாட்சியான காட்சிகள் வேண்டும்!”

“ஒரு கொரில்லா குரங்கு சீதையிடம் இதயத்தைக் கேட்கிறது” “ஒரு தந்திர நரி திரௌபதையிடம் “அடகு கேட்கிறது” அவளிடம்என்ன கேட்பது? அவையே அவற்றை அக்கிரமாய் அள்ளிக்கொள்ளும். அக்கிரமகொடி ஏற்றப்பட்ட தம்பத்துக்கு ஆரத்தி எடுப்பதுகூட எமது சாணக்கியம். எனக் கூறும் Well-known முகங்கள்.

“சீட்டு விளையாட்டு, ராஜாவை வெட்ட ஒரு ஆறு போதும். ஒரு ராணியை வெட்ட ஒரு ஆறு போதும். சிகப்பு ராஜாவும், சிகப்பு ராணியும் கறுப்பு
ஆறு கொண்டு வெட்டப்படும். திடீரென ஆறுக்கு தெருமுனையில் கட்டவுட்டும் பதாதைகளும் கிடைத்துவிடும்.

அடுத்தநாள் சிந்தனைசிப்பி கதிரைவேற்பிள்ளை போன்று அறிக்கைகள் அச்சடித்து விநியோகிக்கப்படும்.

“கைலாசபதி அரங்கைவிட அரக்குமாளிகையும் அங்கு கொட்டிக்கிடக்கும் செவ்வரலிகளும் அந்த குழுக்களின் ஞானத்தில் பரவிக் கிடக்கின்றன”. இவை பற்றி சரிதா ஆறு மணி தொடக்கம் ஒரு மணிநேரம்
ஆறுகளின் கும்மாளம் என நொறுக்குச் செய்தி வாசித்தாள். முன்பெல்லாம் மூன்று ஆறுகள் பற்றியே மாணவர்கள் தெரிந்திருப்பார்கள். இங்கு ஆறு ஆறுகள் பற்றியே எங்கும் பேச்சு, எங்கும் தேடல்கள். மக்கள் தேடுவார்கள், ஊடகங்கள்தேடும், தூதரகங்கள் தேடும். ஆனால் நீதிமன்றம் தேடாது, காவலரண் தேடாது, கட்சிகள் தேடாது. ஆனால் அலரும் அன்னையர்கள் தேடுவார்கள், தவிக்கும் தந்தையர்கள் தேடுவார்கள்..

ஒரு தென்னந்தோப்பு ஓட்டு வீட்டில் தையிட்டி கனநாதபிள்ளை அதிபரின் மகளாய் பிறந்து விவாத மேடைகளில் பேசும்போதே இவள் சட்டத்தரணி ஆவாள் என கிளிசாத்திரம் கூறிய நடுவர் குழாம் கடல் கடந்து சென்ற பின் அவள் இதழியல் கல்லூரிக்குச் சென்றாள். அவள் மேடையில்

“குளிறு தென்திரைக் குரை கடாரமும்
கொண்டு மண்டலம் குடையுள் வைத்தும்”

என்ற கலிங்கத்துப்பரணி பாடி கடாரம் வென்ற இராஜேந்திர சோழனின் கம்போடிய வெற்றிபற்றிய குறும்படம் தயாரித்தபோது சிறந்த நெறியாள்கை பரிசினை அளித்து அவளை திரைப்படங்கள் வரவேற்றன. ஆனால் அவளின் உயிர் மூச்சு ஊடகம் ஊடகம் என உரைத்த காரணத்தால் தொலைகாட்சி நிகழ்ச்சி தயாரிப்பில் ஆர்வம் காட்டினாள். வீரமாகாளியின் துணிவும், செல்வச்சந்நிதியான் வாக்கோடு திரிந்தவளுக்கு பேரும் புகழும் கிடைத்தது. சிபார்சு இல்லாத காரணத்தால் நேத்திரம் மூடின வானொலிகள்.
ஆனால் அவளின் ஒளிமுகத்தை Sky, Rainbow என்பன பேரம் பேசின. அவள் ஆறு உடன் இருந்தாள். அவசரத்தனத்தால் பாய்ந்து விழாமல் துள்ளியே நடந்தாள்.

“அக்கா உங்கே சட்டவிரோத மது”
“அக்கா பெண்களுக்கு நுண்கடன் தொல்லை”
“மிஸ் வீதியில் தொல்லை” என்பாள் சிறுமி நிகழ்விடம்
சென்று பிரச்சினைகளை வடிவங்களாக்கி
பொதுமக்களிடம் குறைகேள் பொறுப்பை வழங்கி மனுநீதி தேடினாள் சரிதா.

இப்படியெல்லாம் அழைபேசியில் பலரும் பேசும்போது “ஆறு” என்ற இளைஞன் குருநகர்
கடலலையும் சேர்ந்து பேசும்படியாக எம்.ஜி.ஆர்சிலை அருகில் நின்று தகவல் வழங்கினான். அவன் பேர் சொல்லி பெருமைதேட விரும்பவில்லை. தனக்கு ஆறு என்ற செல்லப்பேர் என்பான். தனக்கு வலதுகையில் ஆறு விரல் இருப்பதால் ஊரார் ஆறு எனசொல்வதாகவும், ஐந்தும் ஐந்தும் பதினொன்று எனக்கூறி கணக்கு வாத்தியாரிடம் “என்னவிசரே?” என மட்டை வாங்கியதாகவும் கூறினான்.

அவனைத்தான் காணவில்லை! மட்டி, மடையன், ஒட்டி, ஒரா எல்லாம் இருக்கும்போது ஆறைத்தான் காணவில்லை! பெற்ற வயிறு பற்றிஎரிய கிடுகுவேலி அருகில் உடைந்த ஓடத்தில் சாய்ந்து ஒப்பாரிபாடிய
திரேசா கிறிஸ்தோபரியின் ஓலம் ரோம்வரையிலா கேட்கப் போகிறது? தொண்டை வற்றி, நா வரண்டு, கண்வெளிறி, அவள் பேசியபேச்சை “ஊடறுத்த ஆறு” என அவள் ஒளி ஏற்றியது...... ஒளிபரப்பாகியது.

அதனால் அவள் அந்தக் கூட்டத்தால் சிறைப்பிடிக்கப்பட நேர்ந்தது.

“நீதி சாகாது! அது நின்று பேசும்”. மனுநீதி மறைந்த போதும் அப்படி பேசிக்கொண்டும், நினைத்துக்கொண்டும் இருக்க முடியுமா?” தர்மன் சூதாடி தோற்றபின் தர்மத்தை வெல்ல பீமன் வரவேண்டுமே! எங்கள் மண் அவனைத்தேடி எங்கே போவது?

பருத்தித்துறை, யாழ்ப்பாணம் இருபாலைச் சந்தியில் அங்கே
போதையும் சண்டியும் போனதும் அவளைக் கடத்தின. அது அவளுக்கு சந்திராஸ்துமனம். அதைப்பற்றி சோதிடம் பேசவும் நேரமில்லை.

“என தங்கையை கடத்தாதே!” அப்படி பேச ஆம்பிளை அங்கில்லை.

“என் அக்காச்சியை தொடாதே!” எனக்கூவ யாழினி அங்கில்லை.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

MORTGAGE
⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா
கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?
மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....
MORTGAGE CLINIC
www.mortgageclinic canada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011
RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



# இலங்கைக்கு தேவை ஒரு லீ குவான் யு -- ரணில் மாறுவாரா?

- வி.தேவராஜ் - மூத்த ஊடகவியலாளர்

“கோதா கோ கம” என்பது ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ மற்றும் ராஜபக்ஷ குடும்பம் அவர்களுடன் இணைந்த ஆளும் வர்க்கம் அரசியலில் இருந்து அகற்றப்பட வேண்டும்.

ஊழல் மோசடிகள் அற்ற புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்படல் வேண்டும் என்ற கருத்தியலில் கட்டிஎழுப்பப்பட்டதாகும்.

இது இலங்கைக்கான பொதுவான கருத்தியலாக பொதுவில் பேசப்பட்டபோதும் உண்மையில் “கோதா கோ கம” வில் குடியேறி இருக்கின்ற இளைஞர் யுவதிகள் மற்றும் இவர்களைத் தத்தெடுத்துக் கொண்டுள்ள தென்னிலங்கை மக்களுமே இந்தக்கருத்தியலுக்கானசொந்தக்காரர்களாகும்.

ஏனெனில் வழமையாக தென்னிலங்கையில் முன் வைக்கப்படும் அரசியல் கருத்தியல்கள் நடைமுறையில்தென்னிலங்கையைநோக்கியதாவே அமைவது வழமை.

- 2010 ஆம் ஆண்டு அதாவது போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து நலலாட்சி குறித்த அரசியல் கருத்தியல் முன்வைக்கப்பட்டது.

- அவ்வேளையில் கொழும்பில் ஒரு பிரபல ஐந்து நட்சத்திர ஹோட்டலில் அபபோதைய ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவுடனான ஊடக சந்திப்பு ஒன்று நடைபெற்றது. இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட ஒரு தமிழ் ஊடகவியலாளர் தமிழ் மக்கள் சரத் பொன்சேகாவுக்கு வாக்களிக்க வேண்டும்.அவரை வெற்றி பெறச் செய்ய வேண்டுமென உரத்துக் குரல் எழுப்பிக் கொண்டிருந்தார்.

இதனைக் கவனித்த ஒரு பெரும்பான்மை இன சிரேஷ்ட ஊடகவியலாளர் என்னிடம் தமிழ் ஊடகவியலாளர் என்ன கூறுகின்றார் எனக் கேட்டார். நான் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துக் கூறினேன்.

அதனைக் கேட்ட அந்த ஊடகவியலாளர் “எங்களுக்கு நல்லாட்சி வேண்டும். அதற்காக நாம் சரத் பொன்சேகாவை ஆதரிக்கின்றோம். தமிழர்களுக்கு சரத் பென்சேகாவும் மஹிந்த ராஜபக்ஷவும் ஒன்றுதானே. இருவருமே தமிழர்களுக்குஎதிராகபோரிட்டவர்கள்தானே” என்று குறிப்பிட்டார்.

அதாவது நல்லாட்சி என்பது கூட அந்த ஊடகவியலாளரின் பார்வையில் “அது அவர்களுக்கானதாக: தென்னிலங்கைக்கு உரியதாகவே“ பார்க்கப்பட்டது.

இதே நிலைமைதான் இன்றும். “கோதா கோ கம” அரசியல் கருத்தியல் நடைமுறைக்கு வருமாயின் அது தென்னிலங்கைக்கு ஏற்பவே வடிவமைக்கப்படும் என்பதில் மாற்றுக் கருத்திருக்காது.

அதே வேளையில் “கோதா கோ கம” அரசியல் கருத்தியலுக்கு மாறாக ரணில்விக்ரமசிங்கவை பிரதமராக்கி “ராஜபக்ஷக்களின் பொதுஜன பெரமுன கட்சியின் நிழல் அரசாங்கத்தை” அமைத்துக் கொள்வதில் ராஜபக்ஷ குடும்பமும் ஆளும் வர்க்கமும் வெற்றியும் பெற்றுள்ளனர்.

அதாவது “புதிய போத்தலில் பழைய வைன்” என்பதற்கப் பதிலாக “பழைய போத்தல் பழைய வைன்” கதையாகவே உள்ளது.

அதற்கும் அப்பால் ஒருபடி மேல் போய் “கோதா கோ கம” அரசியல் கருத்தியலுக்குச் சொந்தக்காரர்கள் கட்சியை உருவாக்கி “ஜனநாயக மரபுக்குள் தமது அரசியல் அபிலாஷைகளை அடைந்து கொள்ள முன்வரவேண்டுமென்றும் அழைப்புவிடுக்கப்படுகின்றது.

அதாவது ராஜபக்ஷக்களினதும் அவர்கள் சார்ந்த அரசியல் அணியினரும் தமது இருப்பை தக்க வைத்துக் கொள்வதற்கு தொடர்ந்தும் வியூகங்களை வகுப்பதையே தென்னிலங்கை அரசியலில் காணக் கூடியதாக இருக்கின்றது.

- எனது முந்தைய கட்டுரையில் “கோதா கோ கம“ போராட்டம் என்பது “தேநீர் கோப்பை சூறாவளி“ அல்ல என்பதை ராஜபக்ஷக்கள் உணர்ந்து கொள்ள வேண்டுமென குறிப்பிட்டிருந்தேன். இந்த உண்மையை உணராது “கோதா கோ கமவில்“கைவைக்கப்போய் கையைச் சுட்டுக் கொண்டுள்ளனர்.

- “கோதா கோ கம“ வியாழக் கிழமையுடன் (26.05.2022) 48 நாட்களை எட்டியுள்ள நிலையிலும் போராட்டத்தின் வீரியம் குறைந்ததாக இல்லை.

இந்த இளைஞர் யுவதிகள் போராட்டத்தைத் தொடங்குவதற்கு முன்பாக பல அங்கத்துவ அமைப்புக்களுடன் கலந்துரையாடியுள்ளதுடன் சுமார் 60 சிவில் அமைப்புக்களுடன் சந்திப்புக்களை ஏற்படுத்தியுள்ளனர் அதற்கும் அப்பால் 200 க்கும் மேற்பட்டவர்களுடன் கலந்துரையாடல்களையும் மேற் கொண்டுள்ளனர்.இதனை அடிப்படையாகக் கொண்டு பின் வரும் கோரிக்கைகளை வடிவமைத்துள்ளனர்.

“கோதா கோ கம” போராட்டக் கள இளைஞர் யுவதிகளின் கோரிக்கை இதோ

1. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தலைமையிலான ராஜபக்ச ஆட்சி உடனடியாக அதிகாரத்தை கைவிட வேண்டும்.

2. ராஜினாமா செய்த பின்னர் ஆட்சியில் உள்ளவர்கள் இலங்கையின் ஆட்சி மற்றும் சட்டத்தின் ஆட்சியில் எந்தவொரு தேவையற்ற செல்வாக்கையும் செலுத்துவதைத் தவிர்க்க வேண்டும்.

3. தேசத்தை மீட்சியின் பாதையில் கொண்டு செல்ல ஒரு இடைக்கால அரசாங்கம் தீர்மானிக்கப்பட்ட காலத்திற்கு (18 மாதங்களுக்கு) நிறுவப்பட வேண்டும்.

4. அரசியலமைப்புச் சட்டத்தில் 20ஏ ஒழிப்பு போன்ற அத்தியாவசியத் திருத்தங்கள் கூடிய விரைவில் நிறைவேற்றப்பட வேண்டும்.

5. தற்போதைய நெருக்கடியை நிர்வகிக்க அரசாங்கம் அவசர நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். மற்றும் அனைத்து செயல்முறைகளும் வெளிப்படையாக இருக்க வேண்டும்.

6. நிலவும் சமூக பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகள் மனிதாபிமான நெருக்கடியாக மாறியுள்ளது. எனவே தற்போது நிலவும் நெருக்கடிகளைத் தீர்க்க குறுகிய நடுத்தர மற்றும் நீண்ட கால தீர்வுகள் தேவை.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் நியமிக்கப்பட்ட அனைத்து அதிகாரிகளும் தங்கள் சொத்துக்களை அறிவிக்க வேண்டும் மற்றும் சட்டப்பூர்வ வழிகளில் சட்டவிரோதமாக சம்பாதித்த சொத்துக்களை மீட்க விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

8. நாட்டின் அனைத்து குடிமக்கள் மற்றும் பார்வையாளர்களின் உரிமைகளை மதிக்க சட்டத்தின் ஆட்சி உடனடியாக மீண்டும் நிறுவப்பட வேண்டும்

9. இலங்கையின் அரசியலமைப்பில் அனைத்து பிரஜைகளுக்கும் வாழ்வதற்கான உரிமையை அடிப்படை உரிமையாக உள்ளடக்கவும். (இந்திய அரசியலமைப்புச் சட்டம் மற்றும் அது வாழ்வதற்கான உரிமை பற்றிய விதிகளைப் பின்பற்றவும்)

10. இடைக்கால அரசாங்கம் கலைக்கப்பட்ட பின்னர் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்துவதற்கு தேவையான சட்டங்கள் திருத்தப்பட வேண்டும்.

### அடுத்து என்ன?

இலங்கையின் இளைஞர் யுவதிகள் மற்றும் மக்கள் எதிர்பார்க்கும் மாற்றத்தை நிதர்சனமாக்க இலங்கைக்கு சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யூ போன்ற ஒரு தலைவரே தேவை. அவ்வாறான ஒரு தலைவரை காணமுடியாதிருப்பது இலங்கைக்கே உரித்தான அரசியல் சாபக் கேடாகும்.

இலங்கையின் தேசபிதா என போற்றப்படும் சேனனாயக்காவில் இருந்து எஸ்.டபிள்யூ.ஆர். பண்டாரநாயக்க ஜே.ஆர்.ஜெயவர்தன ரணசிங்க பிரேமதாச மஹிந்த ராஜபக்ஷ கோத்தாபய ராஜபக்ஷ வரை அனைத்து தலைவர்களும் இனவாத சேற்றுக்குள் முளைத்தவர்களே.

எனவேதான் சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யூ இலங்கை பற்றிக் குறிப்பிடுகையில் “இலங்கை ஒருபோதும் மீண்டும் ஒன்றிணைக்கப்படாது“ எனக் குறிப்பிட்டார். “சுதந்திர இலங்கை” இனத்துவ அரசியல் மொழி மத ரீதியாக துருவமயப்படுத்தப்பட்டுள்ளதினாலேயே ஒன்றுபட்ட இலங்கை ஒரு போதும் சாத்தியமாகாது என சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யு குறிப்பிட்டார்.

ஐ.தே.க. தலைவர் ரணில்விக்ரமசிங்கவைப் பொறுத்து தனதும் ஐதே. கவினதும் எதிர்கால அரசியல் தலைவிதியை தீர்மானித்தாக வேண்டிய தீர்மானமிக்க கட்டத்திற்குள் நிற்கின்றார். இதற்காக அரசியல் காய்களை நிறையவே நகர்த்தியாக வேண்டும்.

தனது எதிரிகளை குறிப்பாக சஜித் அணியினரைப் பலவீனப்படுத்தியாக வேண்டும். இந்த வேலைப் பளுக்களுக்கு மத்தியில் ராஜபக்ஷக்களை காப்பாற்றியாக வேண்டும். நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளுக்கு அமைய பிரச்சனைகளுக்குத் தீர்வைக் கண்டாக வேண்டும்.

- இவைகளுக்கு மத்தியில் “கோதா கோ கம“ இளைஞர்களும் யுவதிகளும் தென்னிலங்கை மக்களும் கொண்டுள்ள “அரசியல் கருத்தியலுக்கு ஏற்ப புதிய இலங்கையை “ பிரதமர் ரணில் விக்ரமசிங்கவால் சிரு்டிக்க முடியுமா?

- ஊழல் மோசடிகள் அற்ற அரசியல் கலாசாரத்தை உருவாக்க முடியுமா?

- “கோதா கோ கம“ இளைஞர்களும் யுவதிகளும் தென்னிலங்கை மக்களும் அரசியல்வாதிகளினால் கொள்ளையிடப்பட்டதாகக் கூறும் பணத்தை நாட்டின் கஜானாவுக்கு மீள கொண்டு வர முடியுமா?

- பிரதமர் ரணில் விக்ரமசிங்கவிற்கு இவைகள் அனைத்துமே பெரும் சவாலாக முன் நிற்கின்றன.




- தனது கட்சியை தூக்கி நிறுத்த வேண்டிய பெரும் சவாலான சுமையை ரணில் விக்ரமசிங்க தனது முதுகில் சுமந்து கொண்டிருக்கின்றார்.

- அவருடைய இரு கால்களிலும் ராஜபக்ஷ குடும்பமும் மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற எண்ணிக்கை பலமும் விலங்கிட்டு நிற்கின்றது.

இந்த ஒரு பின்னணியில் சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யு போன்றதொரு தலைவராக பிரதமர் பதவியேற்றுள்ள ரணில்விக்ரமசிங்கவால் உருவாக முடியாது.

மொத்தத்தில் தென்னிலங்கை இன்றைய நிலையிலாவது சிங்கப்பூரின் சிற்பியான லீ குவான் யு போன்றதொரு தலைவரைத் தேடவில்லையாயின் 21 வது திருத்தம் உற்பட ஒருசில சட்டவாக்க சீர்திருத்தத்துடன் “கோதா கோ கம“ இளைஞர்களும் யுவதிகளும் தென்னிலங்கை மக்களும் கனவு கண்டு கொண்டிருக்கின்ற “புதிய அரசியல் கருத்தியல்“ கல்லறைக்குள் முடக்கப்பட்டுவிடும் என்பது உண்மையாகும்.

இன்றைய நிலையில் தென்னிலங்கையில் வீசுகின்ற “புதிய அரசியல் மாற்றத்திற்கான கருத்தியல் “தமிழ் முஸ்லிம் மலையக மக்களையும் அணைத்து இணைத்துக் கொண்டு முழு இலங்கையையும் ஒன்றிணைப்பதற்கான கருத்தியலாக மாற்றம் பெற வேண்டும். இதுவே “புதிய இலங்கையின் உதயத்திற்கு“வித்திடுவதாக அமையும்.

“கோதா கோ கம“ இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் தென்னிலங்கை மக்களுக்கும் வடக்கு கிழக்கு மலையக தமிழ் மக்களினதும் முஸ்லிம் மக்களினதும் வேண்டுகோள் இதுதான்.

*Email : vathevaraj@gmail.com*
*27th May 2022*

# கோட்டா கோகமவில் நினைவு கூர்தல்



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

12 ஆண்டுகளாக எந்தக் காலிமுகத்திடலில் யுத்த வெற்றி கொண்டாடப்பட்டதோ, அதே காலிமுகத்திடலில் முள்ளிவாய்க்கால் கஞ்சி பகிரப்பட்டிருக்கிறது. எந்த காலிமுகத்திடலில் கடந்த 12 ஆண்டுகளாக பீரங்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு, படை அணிவகுப்புடன் யுத்த வெற்றிக் கோஷங்கள் ஒலிக்கப்பட்டனவோ, அதே காலிமுகத்திடலில் போரின் இறுதிக்கட்டத்தில் இறந்து போனவர்கள் நினைவு கூரப்பட்டார்கள்.

இது ஒரு அடிப்படை பண்பு மாற்றத்தின் தொடக்கம். 12 ஆண்டுகளாக மே18 எனப்படுவது காலிமுகத்திடலில் படைத்துறைப் பரிமாணத்தோடுதான் நினைவு கூரப்பட்டது. அது யுத்த வெற்றிவாதத்தின் வெற்றிவிழாவாக கொண்டாடப்பட்டது. ஆனால் கடந்த மே 18 அன்று அது ஒப்பீட்டளவில் சிவில் தன்மைமிக்க ஒரு நிகழ்வாக அனுஷ்டிக்கப்பட்டது என்பது ஒரு முக்கியமான பெயர்ச்சி. முள்ளிவாய்க்கால் கஞ்சியை அங்கே சமைத்துப் பகிர்ந்தமை என்பது, கொல்லப்பட்ட மக்களை அந்த மக்களின் துயரத்தை நினைவுகூர்ந்தமைதான். அது படைத்துறை பரிமாணம் அற்றது. சிவில் பரிமாணத்தைக் கொண்டது. மேலும் பாதிக்கப்பட்ட நிராயுதபாணிகளான மக்களின் உணர்வுகளை மதிக்கும் ஒரு நிகழ்வு. அந்த வகையில் அது ஒரு மாற்றம்தான். நிராயுதபாணிகளான மக்கள் அருந்திய ஓர் உணவை சமைத்துப் பகிர்ந்தமை வரவேற்கத்தக்கது. அது ஒரு மாற்றம். அது ஒரு தொடக்கம். ஆனால் அந்த மாற்றத்தில் தமிழ் மக்களுக்கு சில அடிப்படைக் கேள்விகள் உண்டு.

அங்கே நினைவு கூர்ந்த போது பின்னணியில் காணப்பட்ட பதாகையில் போரில் "இறந்தவர்களை" நினைவு கூர்வது என்று எழுதப்பட்டிருந்தது.அந்த வார்த்தைதான் இங்கே பிரச்சினை. வன்னி கிழக்கில் தமிழ் மக்கள் தாமாக இறக்கவில்லை. அதில் பெரும்பாலானவை இயற்கை மரணங்கள் அல்ல. அவர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களைக் கொன்றது போரும் போரின் விளைவுகளும்தான். எனவே முள்ளிவாய்க்காலை நினைவுகூர்வது என்பது கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வதுதான். அதை இன்னும் கூர்மையாகச் சொன்னால் ஓர் இனப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களை நினைவு கூர்வது. ஆனால் காலிமுகத்திடலில் அவ்வாறு கொல்லப்பட்டவர்கள் என்ற வார்த்தை இருக்கவில்லை.

அவ்வாறு இனப்படுகொலை என்று கூறுவதில் காலிமுகத்திடலில் குடியிருப்பவர்களுக்கு நெருக்கடிகள் இருக்கலாம். அவ்வாறு இனப்படுகொலை என்று அழைத்தால் அது நேரடியாக படைத்தரப்போடும், சிங்கள - பௌத்த யுத்த வெற்றிவாதத்தோடும் நேரடியாக மோதுவதாக அமையும். அதை அவர்கள் தவிர்க்க விரும்பியிருக்கலாம். ஆனால் தமிழ் மக்கள் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனென்றால் கடைசிக் கட்டப்போரில் இறந்தவர்களை நினைவு கூர்வது என்று பொதுவாக வகைப்படுத்தும்போது அதில் தமிழ்மக்கள் விடுதலைப் புலிகள், படைத்தரப்பு ஆகிய மூன்று தரப்புகளையும் நினைவு கூர்வதாக அமையும். ஆனால் தமிழ்மக்கள் நினைவுகூர்வது இனப்படுகொலையை. எனவே அங்கே படைத்தரப்பை நினைவு கூர முடியாது. இதை இன்னும் தெளிவாகச் சொன்னால், தமிழ் மக்கள் நினைவுகூர்வது ஓர் ஒடுக்குமுறையை. எனவே ஒடுக்கப்படும் மக்கள் ஒடுக்கும் தரப்புக்கும் சேர்த்து நினைவுகூர்வது சாத்தியமில்லை. இனப்படுகொலையை நினைவுகூர்வது என்பது இனப்படுகொலைக்கு எதிரான நீதியைப் பெறுவதற்கான ஒரு போராட்டத்தின் பிரிக்கப்படவியலாத பகுதிதான். அந்த நீதி இனப்படுகொலையாளிகளுக்கு எதிரானது. ஆயின் யாருக்கு எதிராக நீதியைக் கேட்கிறார்களோ அவர்களையும் எப்படி நினைவு கூர்வது?

இவ்வாறு கூறுவதன் மூலம் காலிமுகத்திடலில் போராடிக்கொண்டிருக்கும் சிங்கள இளம் தலைமுறையை ஒடுக்குமுறையின் பிரதிநிதிகளாக இக்கட்டுரை வர்ணிக்கவில்லை. அதில் ஒடுக்குமுறையை ஏற்றுக் கொள்ளாத தரப்புகளும் உண்டு. ஏற்கனவே ஒடுக்குமுறைக்கு எதிராக குரல் கொடுத்த தரப்புக்களும் உண்டு. எனவே எல்லாவற்றையும் ஒரு பெட்டிக்குள் போட்டு பார்க்க தேவையில்லை. அதற்காக இனப்படுகொலையில் கொல்லப்பட்டவர்களை இறந்தவர்களாக வர்ணிக்க முடியாது.

அதே சமயம், காலிமுகத்திடலில் ஏற்பட்டிருக்கும் மாற்றத்தின் தொடக்கத்தை தமிழ்மக்கள் உதாசீனம் செய்யத் தேவையில்லை. ஒடுக்கும் தரப்பையும் ஒடுக்கப்படும் தரப்பையும் ஒன்றாக நினைவு கூர்வதில் இருக்கும் தர்க்க வழுவை கோட்டா கோகமவிலிருப்பவர்களுக்கு விளங்கப்படுத்த வேண்டும். ஒடுக்குமுறை இல்லாத ஒரு பின்னணியில், ஒடுக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் ஒரு பின்னணியில் வேண்டுமானால் பொத்தாம் பொதுவாக போரில் இறந்த அனைவரையும் நினைவு கூரலாம். தமிழ்த்தரப்பு இதனை கோட்டா கோகம கிராமத்துக்கு விளங்கப்படுத்த வேண்டும்.

அக்கிராமத்தில் இருக்கும் சிங்கள இளையோர் சிங்கள தேசியவாதத்தை பிரதிநிதித்துவபடுத்துவதில் தவறில்லை. அவர்கள் தமிழ்தேசியவாதிகளாக மாற வேண்டும் என்று எதிர்பார்ப்பது அப்பாவித்தனமானது. அவர்கள் சிங்கள தேசியவாதிகளாகவே இருக்கட்டும். அதுதான் சரி. உதாரணமாக மனோ கணேசன். அவர் கொழும்புமைய அரசியலைச் செய்பவர். அங்கே அவர் இனவாதத்தின் சேவகனாக இல்லாமல் இருந்தாலே போதும். அவர் இனவாதத்துக்கு எதிராகக் குரல் கொடுத்தால் அது மகத்தானதே. அதேபோல திரைப்படக் கலைஞர் பிரசன்ன விதானகே ஒரு சிங்கள இனவாதியாக இல்லாமல் இருந்தாலே போதும்.அவர் இனவாதத்துக்கு எதிராகப் படம் தயாரிப்பாராக இருந்தால் அது மகத்தானது. அவர் தமிழ் தேசியவாதியாக மாறத் தேவையில்லை. யாரும் தங்களுடைய தேசிய இருப்பை இழக்கத் தேவையில்லை. இழக்கவும் கூடாது. ஏனென்றால், தமிழ்மக்கள் தமது தேசிய இருப்பை இழக்கக்கூடாது என்பதற்காகத்தான் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அதேசமயம் தமிழ் மக்களுக்கும் அவ்வாறு ஒரு தேசிய இருப்பு உண்டு என்பதை சிங்கள தேசியவாதிகள் ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு தேசமாக தமிழ் மக்களுக்கு உள்ள சுயநிர்ணய உரிமையை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு ஏற்றுக்கொள்வார்களாக இருந்தால், தமிழ்த் தேசமும் சிங்கள தேசமும் முஸ்லிம்களும் மலையகத் தமிழர்களும் இணைந்து இச்சிறிய தீவுக்குள் பல்லினத் தன்மை மிக்க ஓர் அரசுக் கட்டமைப்பை உருவாக்கலாம். அதுதான் பொருத்தமானது.

தமிழ்த் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளும் சிங்கள தேசியம் முற்போக்கானது. அதேசமயம் தமிழ் மக்களை ஒரு தேசமாக ஏற்றுக்கொள்ள மறுக்கும் சிங்கள தேசியம் இனவாத பண்பு மிக்கது. அது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பது. அதனால் அது பிற்போக்கானது. எனவே சிங்கள தேசியவாதத்தின் முற்போக்கான கூறுகளோடு தமிழ் மக்கள் சேர்ந்து வேலை செய்யலாம். காலிமுகத்திடலில் அதற்கான ஒரு வெளி திறக்கப்படுமாக இருந்தால் தமிழ் மக்கள் அங்கே உரையாட வேண்டும்

இந்த விளக்கத்தின் அடிப்படையில்தான் காலிமுகத்திடலில் நிகழ்ந்த நினைவு கூர்தலைத் தமிழ்மக்கள் பார்க்க வேண்டும். காலிமுகத்திடலில் உள்ளவர்களோடு இந்த விளக்கத்தின் அடிப்படையில் உரையாடலாம்.

ஆனால் தமிழ்தரப்பில் ஒரு பகுதியினர் அவ்வாறான உரையாடல்களுக்கு தயாரில்லை என்று தெரிகிறது. கடந்த ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையை மையமாகக் கொண்டு இயங்கும் புழுதி என்ற செயற்பாட்டு அமைப்பு ஒரு மெய்நிகர் சந்திப்பை ஒழுங்குபடுத்தியது. அதில் மேற்படி கருத்தை வலியுறுத்தி இக்கட்டுரையாளர் பேசியபோது, யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கைச் சேர்ந்த ஒரு நபர் அவ்வாறு சிங்களத்தரப்புடன் உரையாட முடியாது என்று வாதிட்டார். மேற்சொன்ன விளக்கத்தை அவரால் உள்வாங்கிக்கொள்ள முடியவில்லை என்றும் தெரிந்தது. அவர் கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்துக்காக யாழ்ப்பாணத்தில் வேலை செய்கிறார். அதேசமயம் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாட்டாளராகவும் காணப்படுகிறார்.

அவர் அவ்வாறு கதைத்த பின் தேசிய மீனவர் ஒத்துழைப்பு சங்கத்தின் வடகிழக்கு மாவட்டங்களுக்கான இணைப்பாளர் யேசுதாஸ் தனது கருத்துக்களை தெரிவித்தார். அவர் அதில் காலிமுகத்திடலில் நினைவு கூர்தலை ஒழுங்குபடுத்துவதில் காணப்பட்ட சவால்களை சுட்டிக்காட்டினார். அதேசமயம் தென்னிலங்கையில் சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படும் சிறு மாற்றங்களை வடக்கு கிழக்கில் இருப்பவர்கள் எதிர்மறையாக நோக்குகிறார்கள் என்றும் அவற்றை பரிசீலிக்க அவர்கள் தயாரில்லை என்ற பொருள்படவும் அவர் கருத்து தெரிவித்தார். அந்த மெய்நிகர் சந்திப்பில் அவர் தெரிவித்த கருத்துக்கள் அவர் சார்ந்த தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் யாழ்ப்பாணப் பிரிவைச் சேர்ந்தவரின் கருத்துக்களுக்கு எதிராகக் காணப்பட்டன.

ஒரு தனிப்பட்ட உரையாடலின்போது அவர் மேலும் விபரங்களைக் கூறினார். காலி வீதிக்கு அருகே கோட்டா கோகம கிராமத்தின் முன்பகுதியில் நினைவு கூர்வதற்கு அங்கிருந்தவர்கள் தயாராக இருக்கவில்லை என்றும், அதனால்தான் கடலுக்கு அருகே ஒரு ஒதுக்கமான இடத்தில் நினைவுகூர வேண்டியிருந்தது என்றும் அவர் கூறினார். கோட்டா கோகம கிராமத்தில் இருந்த எல்லா செயற்பாட்டாளர்களும் அதில் பங்குபற்றவில்லை என்றும், குறிப்பிட்ட சிறு தொகையினர்தான் பங்குபற்றினார்கள் என்றும் குறிப்பிட்டார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கம் உட்பட கொழும்பை மையமாகக் கொண்டியங்கும் ஆசிரிய தொழிற்சங்கமான இலங்கை ஆசிரிய சங்கத்தைச் சேர்ந்த வடபகுதி செயற்பாட்டாளர்கள் சிலரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியோடு சேர்ந்து செயல்படுகிறார்கள். முன்னணி, ஒரு நாடு இரு தேசம் என்ற கொள்கையை கொண்டது.

இலங்கை ஆசிரியர் சங்கமும் தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்பவை என்ற அடிப்படையில் அதன் உறுப்பினர்கள் தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் இணைந்து செயற்படுவதாக அவர்கள் கூறுகிறார்கள்.

அது சரி. தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக்கொள்ளும் சிங்கள தேசியவாதிகளுடன் தமிழ் மக்கள் இணைந்து செயல்படலாம். தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொள்ளும் சிங்கள முற்போக்கு தேசியவாதிகள் நினைவுகூர்தலை அதன் சரியான அர்த்தத்தில் அனுஷ்டிப்பார்கள். காலிமுகத்திடலில் கிராமம் அமைப்பு போராடும் தரப்புகளுக்கும் அவர்கள் அதனை கற்றுக் கொடுக்க வேண்டும்.

Sapphire Banquet & Catering
Specializing in Videography & Photography
- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Children's Party
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Holiday Party
- Religious Ceremonies
- Wedding Showers
SHIVA SUBRAMANIAM
(647) 406-4868



# கப்பல் வந்தும் கஷ்டம் தீரவில்லை

**- சிவா பரமேஸ்வரன் & கலாநிதி கணேசமூர்த்தி**

கடன்பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன் என்ற இராமாயணப் பாடல் கடன் பட்டு அதனை மீளச் செலுத்த முடியாத போது ஏற்படும் தவிப்பை உவமை காட்டுகிறது. ஆனால் உண்மையில் இப்போது கடன்பட்டு அதனை மீளச் செலுத்த இயலாத சூழ்நிலையில் அன்று இலங்கை வேந்தன் இராவணனுக்கு ஏற்பட்டதாகக் கம்பர் உவமை கூறும் அந்தப் பரிதவிப்பு இன்றைய இலங்கையின் ஆட்சியாளருக்கு இருக்கிறதா என்று பார்த்தால் அதனை ஒரு வேடிக்கை வினோத நிகழ்வாக எடுத்துக்கொண்டு தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்ள எதையும் செய்யும் போக்கில் செயற்படுவதைக் காண முடிகிறது. அரசு பெற்ற கடனை மீளச் செலுத்த இயலாத போது ஏற்படும் சுமை முழுவதயும் நாட்டின் பொதுமக்கள் மீது நாளும் பொழுதுமாக ஏற்றிவிடப்பட்டு வரும் போக்கினைக் காண முடிகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் 12ஆம் திகிகதிக்கு முன்னர் இலங்கை அரசு பெற்ற கடன்களுக்கான கடன் சேவைகளை நிறுத்துவதாக இலங்கை அறிவித்தது. அதாவது அப்போது நிலுவையிலிருந்த கடன்களாகக் காணப்பட்ட 51 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்காகச் செலுத்தப்படவேண்டிய தவணைக் கொடுப்பனவுகளை செலுத்த முடியாதுள்ளதாக அறிவித்தது. இதன் பின்னர் வழங்கப்படும் கருணைக்காலம் கடந்தவாரம் முடிவடைந்த நிலையில் இலங்கை இப்போது இறைமைக்கடன் மீளச் செலுத்துகையைத் தவற விட்ட நாடாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. 1948 இல் சுதந்திரம் பெற்ற காலப்பகுதியிலிருந்து கடந்த எப்ரல் 12 வரை இலங்கை தான் பெற்ற கடன்களை முறையாகத் திருப்பிச் செலுத்தி வந்திருக்கிறது. வரலாற்றில் முதற் தடவையாக இவ்வாறு கடன் மீளச்செலுத்தலை இலங்கை தவற விட்டிருக்கிறது. இந்த விடயத்தில் இலங்கை மட்டுமே தவறிழைக்கவில்லை. அதற்கு பல முன்னுதாரணங்கள் உள்ளன. வெனிசுவேலா, லெபனான், கிரீஸ், எக்வடார், அர்ஜெண்டினா போன்ற பல நாடுகள் வாங்கிய கடனை உரிய நேரத்தில் திருப்பியளிக்கவில்லை.

தனியார் நிறுவனங்கள் கடன்களைப் பெறுவதைப் போன்றே நாடுகளும் தத்தமது தேவைகளுக்கேற்ப உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் கடன்களைப் பெறுகின்றன. உலகிலேயே அதிக வெளிநாட்டுக் கடன்களை பெற்றுள்ள நாடு சர்வவல்லமை பொருந்திய ஐக்கிய அமெரிக்காவேயாகும். ஆனால் பெற்ற கடனைச் சரியான விதத்தில் பயன்படுத்தி ஒரு நாடு மிகப்பெரிய அனுகூலங்களை பெற்றுக்கொள்ளலாம். ஆனால் பெற்ற கடனை முறையற்ற விதத்தில் கையாண்டால் என்ன நடக்கும் என்பதற்கு இலங்கை ஒரு உதாரண நாடாக மாறியிருக்கிறது. தனியார் துறை நிறுவனங்களின் கடன் மீளச் செலுத்தும் ஆற்றலை மதிப்பிட்டு கடன் தரப்படுத்தலை (credit ratings) அறிவிக்கும் மூன்று பிரதான தொழில்சார் நிறுவனங்கள் காணப்படுகின்றன. பிட்ச் ரேட்டிங்கஸ் (Fitch Ratings) ஸ்டாண்டர்ஸ் அன்ட் புவர் (Standards and Poor) மற்றும் மூடீஸ் (Moodys) என்பனவே அம்மூன்று நிறுவனங்களுமாகும்.



இவை தனியார் நிறுவனங்களுக்குச் மட்டுமன்றி நாடுகளும் தாம் பெற்ற கடனை மீளச் செலுத்தும் ஆற்றலை மதிப்பீடு செய்து தரப்படுத்துகின்றன. இந்நடவடிக்கை இறைமைக்கடன் தரமிடல் (sovereign ratings) என்று அழைக்கப்படுகிறது. இதன் மூலம் ஒருநாட்டின் கடன் நம்பகத்தன்மை மதிப்பீடு செய்யப்படுகிறது. மேற்படி மூன்று நிறுவனங்களும் வெவ்வேறு குறியீடுகளைக் கொண்டு ஒரு நாட்டின் கடன் மீளச்செலுத்தும் ஆற்றல் மட்டத்தை வெளிப்படுத்துகின்றன. அத்தகைய தரப்படுத்தலுக்கு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நியமங்களை அவை பின்பற்றுகின்றன.

இலங்கை தான் பெற்ற கடன்களை எதிர்காலத்தில் செலுத்த முடியாமல் போகும் அபாய நிலை ஏற்படும் என்று இறைமைக் கடன் தரமிடலை மேற்கொள்ளும் அந்த மூன்று நிறுவனங்களும் இலங்கையைத் தொடர்ச்சியாக எச்சரித்து வந்துள்ளதுடன் இலங்கையின் தரமிடல் நிலையினை படிப்படியாகக் கீழ் நோக்கி நகர்த்திச் சென்றன. ஒவ்வொரு தடவையும் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதும் அதனை ஒரு எச்சரிக்கையாகக் கொண்டு தொழில்சார் ரீதியில் அதனை அணுகுவதற்குப் பதிலாக அந்நிறுவனங்களுக்கு எதிராக சீறிப்பாய்ந்து தாக்கவரும் காட்டெருமையைப் போன்று அரசாங்கமும் மத்திய வங்கியும் கோபத்துடன் அறிக்கை விட்டன.

இலங்கைக்கு எதிராக வேண்டுமென்றே அந்நிறுவனங்கள் நியாயமற்ற தரமிடலை மேற்கொள்வதாகச் சாடின. ஆனால் தரமிடல் நிறுவனங்கள் தமது நிலைப்பாட்டை மாற்றவுமில்லை எதிர்வினை காட்டவுமில்லை. மத்தியவங்கி ஆளுநராகப் பதவியேற்ற கப்ரால் இலங்கையிலே டொலருக்கு எவ்வித தட்டுப்பாடுமில்லை. டொலர் உள்வருகைகள் பிரகாசமாக உள்ளன யாவும் நலமாக உள்ளதென்று சற்றும் கூச்சப்படாமல் உண்மைக்கு புறம்பான தகவல்களை அளித்தார். ஆனால் கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளில் தெரியும் என்பது போல இலங்கையின் அந்நியச் செலாவணிக்கையிருப்புகள் கரைந்து மிக மோசமான நிலையினை அடைந்தன. டொலருக்கான தேவை மிகப்பெரியளவில் அதிகரிக்க ரூபாவின் பெறுமதி பாதாளத்தை நோக்கி நகர 203 ரூபா மட்டத்தில் டொலரைக் கட்டிப்போட்டது இலங்கை. அதனால் கள்ளச் சந்தையில் டொலரின் விலை 260 ரூபாவை எட்டியது. ஹவாலா உண்டியல் முறைமைகள் மூலம் கூடுதலான விலைக்கு டொலர்கள் பரிமாறப்பட்டன. மத்திய வங்கியின் டொலர் கையிருப்புகள் கரைந்து போன நிலையில் 203ரூபா விலையில் கட்டிவைத்திருந்த டொலரை திடீரென அவிழ்த்துவிட்டது இலங்கை. அது சுழன்றடித்த சண்டாமாருதத்தில் அதன் விலை 390 ரூபா வரையில் எகிறியது. இப்போது 360 ரூபா என்ற மட்டத்திற்கு வந்திருக்கிறது.

டொலர் உள்வருகையை அதிகரிப்பதற்கு அரசாங்கம் மேற்கொண்ட அத்தனை நடவடிக்கைகளும் தோல்வியை சந்தித்திருக்கின்றன. ஏற்றுமதி வருவாய்களில் ஒரு சிறிய அதிகரிப்பு அவதானிக்கப்பட்ட போதிலும் வருவாய் ஈட்டித்தரும் பிரதானதுறைகளில் ஒன்றாகிய உல்லாசப்பயணத்துறை முற்றாகப் படுத்துவிட்டது. அதனை மேம்படுத்தி உல்லாசப்பயணிகளை வரவழைக்க என்ன செய்யலாம் என்ற கேள்விக்கு பதிலளித்த இன்றைய பிரதமர் இலங்கைக்கு இப்போது அடவென்சர்களை விரும்பும் உல்லாசப்பயணிகள் தாராளமாக வரலாம் போஸ்டர்களை ஏந்தி ஜனாதிபதியையும் பிரதமரையும் வீட்டுக்குப்போகச் சொல்லி கோசம் எழுப்புபவர்களுடன் இணைந்து புதிய அனுபவம் பெறலாம் என்றும் பதிலளித்தார். எவ்விதமான ஜனநாயக விழுமியங்களுமின்றி பதவியேற்ற பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் இந்தக் கருத்து கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியது. இவ்வளவிற்கும் இந்த கருத்தை அவர் வெளியிடும் போது அவர் நிதியமைச்சரோ அல்லது சுற்றுலாத்துறை அமைச்சரோ இல்லை.




ஏற்கெனவே நாடுகள் பலவும் தமது பிரஜைகளுக்கு பயண எச்சரிக்கை விடுத்துள்ள நிலையில் உல்லாசப்பயணத்துறை வருவாய்களை தற்போது அதிகரிக்க முடியாது என்பதே யதார்த்தம். மறுபுறம் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் இலங்கைப்பணியாளர்களும் அனுப்பும் டொலர் உள்வருகைகளும் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில் ஐம்பது சதவீதத்திற்கும் மேலாக வீழ்ச்சியடைந்துள்ளன. வங்கிகள் அல்லாத முறையற்ற வழிகள் ஊடாக பணம் பரிமாறப்படுவதே இதற்கு காரணம் என மத்திய வங்கி கூறுவதுடன் இதனைத்தடுக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளுக்கான செலுத்தல்கள் வங்கிமுறையூடாக மட்டுமே அனுமதிக்கப்படுமெனவும் அதேபோல ஒருவர் கைவசம் வைத்திருக்கக் கூடிய டொலரின் அளவை 10,000 ஆக குறைத்த சுற்று நிருபங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் டொலர் உள்வருகைகள் அதிகரிக்குமா என்பதைப் பொருத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

ஒரு நாடு தான் பெற்ற கடன்களை மீளச்செலுத்த முடியாதென உத்தியோகபூர்வமாக அறிவித்தால் அதனால் பல்வேறு சிக்கல்கள் எழும் குறிப்பாக வட்டிவீதங்கள் அதிகரிக்கும் வேலையின்மை ஏற்படும், பணவீக்கம் உயரும், நாணய மாற்றுவீதம் மேலும் தேய்வடையம் உள்நாட்டுச் சந்தை முதலீட்டாளர்கள் நாட்டை விட்டு வெளியேறுவர் என்று பலவகைகளில் நெருக்கடி ஏற்படும். இவை அத்தனையும் இலங்கையில் இப்போது துரித கதியில் ஏற்பட்டு வருவதை ஒவ்வொருவரும் காணலாம். இதன் மூலம் சாதாரண பொதுமக்களின் வாழ்க்கையும் இருப்பும் கேள்விக்குறியாக மாறும். உணவு உடை உறைவிடம் போன்ற அடிப்படைத் தேவைகளை மக்கள் பூர்த்தி செய்ய முடியாத அவலநிலை தோன்றும். வறுமை அதிகரிக்கும் விரக்தியும் கையறு நிலையும் காரணமாக சமூக வன்முறைகள் அதிகரிக்கலாம். இப்போதுள்ள நிலையில் இன்னும் மூன்று மாதங்களில் இலங்கையில் உணவுப் பற்றாக்குறை ஏற்படுமென கூறப்படுகிறது. இது நிலைமையை மேலும் மோசமானதாக மாற்றும். உணவு விலைகள் பலமடங்கு அதிகரித்துள்ளன. எரிபொருள் விலைகள் குறுகிய காலத்தில் மிக மோசமாக உயர்ந்துள்ளது. அதேவேளை, இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் எரிபொருள் வந்தாலும் தட்டுப்பாடு குறைந்த பாடில்லை. அரசாங்கம் மக்களை முற்றும் முழுதாகக் கைவிட்ட ஒரு நிலையே தென்படுகிறது. பாராளுமன்றத்தில் வன்முறையால் பாதிக்கப்பட்ட தமது உறுப்பினர்களின் கண்ணீர் கதைகள் பேசப்பட்டவையேயன்றி மக்களின் கண்ணீர் துடைக்கும் எந்த ஆணியும் இதுவரையில் பிடுங்கப்படவில்லை. 21 வது அரசியலமைப்பு திருத்தம் தான் பட்டினியால் துவளும் மக்களின் முக்கிய தேவையாக உள்ளதாம். புதிய மொந்தையில் பழைய கள் என்பது போல அதே பழைய கூட்டம் வெகு ஜோராக மீண்டும் ஆட்டத்தைத் தொடங்கியுள்ளது. துடிக்கும் மக்களின் அவலக்குரல் இந்தக் காரியச் செவிடர்களின் காதில் எப்போதும் கேட்டதில்லை. வாழமுடிந்தவன் வாழ்ந்து கொள். சாகிறவன் செத்த ஒழி என்பது போல தங்களது நாளாந்த குடுமிப்பிடி சண்டைகளோடு நடந்து கொண்டிருக்கின்றன பாராளுமன்ற அமர்வுகள். இலங்கை மக்களை உண்மையில் இப்போது கடவுள் மட்டும் தான் காப்பாற்ற முடியும்.



ஆனால் இந்த ஆட்சியாளர்களும் பல கடவுகளின் சாபத்திற்கு ஆளாகியுள்ளனர் என்கிற கருத்துக்கள் சமூக ஊடகங்கள் எங்கும் பரவியுள்ளன. தமிழர் தாயகப் பகுதிகளில் இந்து ஆலயங்கள் விகாரைகள் அமைப்பதற்காக புராண பௌத்த பூமி என்கிற பெயரில் கபளீகரம் செய்யப்படுகின்றன. இதற்கு இராணுவம் துணை நிற்கிறது.

இதேவேளை இலங்கை மக்களுக்கு ஆட்சியாளர்களால் தொடர்ச்சியாகக் கூறும் பொய்களின் ஒரு பகுதியாக, "பொருட்களை ஏற்றிக் கொண்டு கப்பல்கள் வர ஆரம்பித்துள்ளன, எனவே நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடி என்பது தற்காலிகமானது தான், அவை விரைவில் சீராகிவிடும்" என்று "அம்புலிமாமா கதைகள்" போன்று மக்களுக்கு நம்பவைக்கும் வகையில் கூறுகின்றனர். இவ்வளவு நெருக்கடிகள் இருந்தும், ஒற்றை நபர் கட்சியின் தலைவராக இருந்த ரணிலைப் பிரதமராக்கிய பிறகு, இதர துறைகளுக்கு அமைச்சர்களை நியமித்த கோத்தாபய ராஜபக்ச கடந்த புதன்கிழமை (25) அன்றுதான் பிரதமரை நிதியமைச்சராக நியமித்தார். இதுவே அரசு நாட்டின் நிதிநிலைமையை கையாளும் விதத்தைக் காட்டுகிறது.




நாடு தற்போது மிகவும் அபாயகரமான நிலையில் கொந்தளிப்பில் உள்ளது, அதற்கு பொருளாதார நெருக்கடிகளே காரணம் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்திருந்தாலும், அந்தப் பிரச்சனை இயல்பாகவே சரியாகிவிடும் என்று தப்புக்கணக்கு போடுகிறார்கள். விலைவாசிகள் நாளாந்தம் தேள் கடித்தவனுக்கு விஷம் ஏறுவது போல ஏறுகிறது.

ஆட்சியாளர்கள் இனியும் ஆயுதப் போராட்டம், விடுதலைப் புலிகள், சர்வதேசத்தின் சதி, இந்தியா எம்மை அடிமைப்படுத்த நினைக்கிறது என்று கூறமுடியாது, சிங்கள மக்களும் அதை ஏற்கமாட்டார்கள்.

உலக வங்கி விடுத்த எச்சரிக்கையை கோத்தா-ரணில் ஜோடி காதில் விழுந்திருக்கும். "பேரினப் பொருளாதார அடிப்படை விஷயங்களை இலங்கை அரசு கட்டியெழுப்பாத வரை, தம்மிடமிருந்து எந்த கடன் அல்லது உதவிகளையும் எதிர்பார்க்க முடியாது" என்று திட்டவட்டமாக கூறியுள்ளது. இந்த எச்சரிக்கையை அரசு காத்திரமாக மனதில் எடுத்து உரிய மாறுதல்களைச் செய்யவில்லை என்றால், நாடு மேலும் அதலபாதாளத்திற்குச் செல்லும் என்பதில் ஐயமில்லை.

*கட்டுரையாளர்கள் பற்றி:*
*சிவா பரமேஸ்வரன்: மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்*
*கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி: பேராசிரியர், பொருளாதார பீடம், கொழும்பு பல்கலைக்கழகம்.*

(11ம் பக்கத் தொடர்ச்சி)

# RED RIVER

வ ா ய ி ல ் விசில் வைத்த காவல்காரனுக்கு அவசரமாய் சிகரட் தேவைப்பட்டதால் கடையின் பின்புறம் நழுவிச் சென்றான்.

செயற்கை சினிமாபோல் சூரியனோ, சந்திரனோ வந்து குதித்து எவரையும் உதைத்து தள்ளவில்லை.

``டேய் ஆறு அக்காடா! வளாகப் பொடியன்கள் அடையாளங் கண்டு சொன்னார்கள். அவளது ஸ்கூட்டி பருத்தித்துறை வீதியில் குறுக்காக கிடந்தது. மடிக்கணனி மண்ணில் புழுதி சுவாசம் செய்தது. கைபேசி ``குக்குக்கூ குக்குக்கூ என இயலாமை பேசியது. நிப்போன் ஒலிப்பதிவு சாதனம் ஒலிவில்லைகள் சிதறி வீணேகிடந்தன.

``ம்....அந்தப்பதிவை என்னிடம் கொடுத்துவிடு``

ஊடக சுதந்திரத்தின்படி உயிர் போனாலும் தரமாட்டேன்

``இந்தா இதைப் பாரு``

``அந்த ஆறு கொடிகாமத்து இரும்புப்பாதையில் கிடப்பது தெரிந்தது. காகங்கள் அவனிடம் வடைக்கதை கூறிக்கொண்டிருந்தன.

``உன்னை எனக்குத்தெரியும், உன் அப்பாதான் எனக்கு ஏடு தொடக்கினார்``. சரிதா தன் அப்பாவின் பாவச்செயலை மனத்தால் கடிந்தாள்.

``இதோ விமான டிக்கெட், நீ கனடா போகலாம். எடுத்த செய்தியை மட்டும் எங்கள்ட்ட கொடுத்துடு``

``இப்போ.... என் கிட்ட...... எதுவும் இல்ல....... கெமரா சந்தியில் விழுந்துட்டுது``. துர-ியோதனன் சகுனியிடம் உடனே தேடச்சொன்னான்.

``பொஸ்.....கெமரா கிடக்குது ஆனா மெமரிசிப்பை காணவில்லை... யாரோ சுட்டுட்டான்!

``ஐயோ! பொஸ் இங்க பாருங்க. YouTube ல விஷயம் ஏறிருச்சு!``

``இவளை அறையில் போட்டுபூட்டு, நாம் வெளியிலே போய் ஆகனும்``

``அறையின் மூடிய யன்னலை உடைத்து சரிதா வெளியே குதித்தாள். கண்ணாடி முகத்தைக் காயப்படுத்தியது. முழங்கால் கம்பத்தில் அடிபட்டு வீங்கியது. நொண்டினாள். நொண்டிக் கொண்டே நடந்தாள். காணாமல் போனோர் பட்டியலில் இருந்து அவள் மீண்டாள்.

``எனக்கு எதுவுமே நடக்கவில்லை`` என அவள் சொன்னால் எவரும் நம்பபோவதில்லை!

``அவள் கழுத்தின்கீழே சிகரட்டால் சுட்டகாயம் இராமனைக் கூட தடுமாறவைக்கும்``

``அவள் முகத்தில் ஆழமாக பதித்த கண்ணாடி......... இனி ஒளிக்காட்சியிலிருந்து தள்ளி வைக்கும்.

``யாழ்ப்பாணத்து இருபது வயது பெண் ஊடகவியலாளரின் போராட்ட வாழ்வு நிஜ வாழ்விலும் தொடரவே செய்யும். எந்த சட்டபுத்தகமும் அவள் நியாயத்தை பேசமுடியாது.

மௌனத்தில்கிடக்கும். அவள் நொண்டி நொண்டி சுவரைப் பிடித்தபடி Red River கலையகத்தை அடைந்தாள். அந்த ஆறு அலை வரிசை அவளுக்கு ஒரு இசைவாக்க சக்தியாக தெரிந்தது. தனது மண்ணின் மானிடஅவலத்தை அரங்கேற்றும் பணியில் மூழ்கி எழும் அந்தவஞ்சிரத்திற்கு நீச்சலே வாழ்க்கையானது.

அவளின் காயப்பட்ட உதடு சிகப்புரேகையை காட்டிக்கொண்டே இருக்கும்.

**பூனாகலை நித்தியஜோதி**
இலங்கை

# கூக்குரல்

*எங்கோ பிறந்து எங்கோ வளர்ந்து
எங்கோ மடிவது சாபமன்கறோ :?_ நித்தம்
விண்ணை பிளக்கும் வெடியின் சத்தம்
உயிணை அடக்கும் மணியன்றோ?*

*பள்ளி பருவ கனவு !_ நனவாக்க
துடிக்கும் மனது !_ தாயகம்
தந்திடா வாய்ப்பு _ பல்லாயிரம்
மைல் தாண்டி கிடைக்க _ பறந்கதோம்
உற்றாரை பிரிந்தோம் !*

*பசிக்கும் வயிற்றை அடக்கி !_ தூங்கும்
விழியை மிரட்டி !_ மருத்துவம்
என்ற ஒற்றை கனவைத் துரத்தி
ஓடினோம் ! ஓடினோம் !_ வாழ்க்கையை
புத்தகத்தில் தேடினோம் !*

*கனவுகளை சுமந்து கடல்தாண்டி
தத்தளித்த எங்களுக்கு _ வந்தது
எமனாக யுத்தம் !_ அண்டை
நாட்டினரின் வெடிகுண்டு சத்தம் !*

*பதுங்குழியில் வாசம் !_ மூக்கைத்
துளைக்கும் பிணக்குவியல் நாற்றம் !_ ஒரு
வேளை சோற்றுக்கு திண்டாட்டம் !_ என்று
முடியுமோ எங்களின் போராட்டம் ?*

*தாயகம் வரவே துடிக்கின்கறோம் !_ எங்களின்
பெற்றோரை காணத் தவிக்கின்கறோம் !_ இதை
உணருமா அண்டை ராஜாங்ம் ?_ எங்களை
மீட்டு செல்லுமா எங்களின் அரசாங்கம்?*

**- நிவேதிதா**



# தமிழக உதவியில் கால்வாசி மட்டுமே தமிழர்களுக்கு கிடைக்கும் நிலை

- நடராசா லோகதயாளன் - யாழ்ப்பாணம்




இலங்கையில் பொருளாதார நெருக்கடி நாளுக்கு நாள் அதிகரித்து மக்களுக்கு சொல்லொனா துன்பங்களை ஏற்படுத்துகிறது. பொருட்களின் விலைவாசி கட்டுக்கடங்காமல் சென்று கொண்டிருக்கிறது. அத்தியாவசியப் பொருட்களின் விலை காலையில் ஒன்றாகவும் மாலையில் ஒன்றாகவும் உள்ளது. அத்தியாவசியப் பொருட்களில் முக்கியமானதாகவுள்ள பெட்ரோல் மற்றும் டீசலின் தாறுமாறான விலையேற்றம் காரணமாக அதைச் சார்ந்துள்ள அனைத்தும் விலையேறியுள்ளன. பணம் கொடுத்தாவது வாகனங்களுக்கான எரிபொருளை வாங்கலாம் என்றால் அதற்கும் வழியில்லை.

மோட்டுவளையைப் பார்த்து உட்கார்ந்திருந்த மக்கள் மனதில் "காலம் ஒருநாள் மாறும் நம் கவலைகள் யாவும் தீரும்" என்ற பாடல் போன்று இந்தியக் கப்பல் வரும், அது வந்தவுடன் நாடு முழுவதும் பெட்ரோலும் டீசலும் ஓடும், அனைத்திற்கும் விடிவு பிறக்கும் என்று மக்கள் நம்பவைக்கப்பட்டிருந்தனர். அடிப்படையில், இந்திய அரசும், தமிழக அரசும் நல்லெண்ண அடிப்படையில் தம்மாலான உதவிகளை இந்த தீவில் வாழும் மக்களுக்குச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்திலேயே செய்து வந்தாலும் இலங்கை அரசோ நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை இந்தியா, அமெரிக்கா, மேற்குலக நாடுகள், சர்வதேச கொடையாளர்கள் ஆகியோர் தீர்த்துவைக்க வேண்டுமென்றே எதிர்பார்க்கிறது. இனப்பிரச்சனைகான தீர்வை தவிர அனைத்து பிரச்சனைகளையும் சர்வதேசம் தீர்க்க வேண்டும் என்று தொடர்ச்சியாகவந்த அரசுகள் எண்ணுகின்றன.

தமிழ் மக்களை மனதில் வைத்து இந்திய அரசு மூலம் அளிக்கப்பட்ட உதவியில் கால்வாசிக்கும் குறைவாகவே தமிழ் மக்களுக்கும் கிடைக்கவுள்ளது இப்போது தெரியவந்துள்ளது. இலங்கை அரசு வெளியிட்டுள்ள பங்கீடு இதனை நிருபணம் செய்கிறது. நிதி அமைச்சின் அத்தியாவசிய சேவைகளுக்கான ஆணையர்நாயகம், நாட்டின் உணவுத்துறை ஆணையருக்கு எழுதிய கடிதம் மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள பகிர்ந்தளிக்கும் பட்டியல் இதை தெளிவாக்குகிறது.

No of HHs for Distributing Rice and Milk Powder for the Lowest Expenditure Decile by Districts

| District | No. of HHs Rice to be Received | Required Rice (kg) | Required Milk Powder (kg) |
|---|---|---|---|
| Colombo | 65,618 | 1,312,360 | 16,405 |
| Gampaha | 123,527 | 2,470,540 | 30,882 |
| Kalutara | 85,330 | 1,706,600 | 21,333 |
| Kandy | 128,959 | 2,579,180 | 32,240 |
| Matale | 60,887 | 1,217,740 | 15,222 |
| Nuwara Eliya | 87,520 | 1,750,400 | 21,880 |
| Galle | 111,087 | 2,221,740 | 27,772 |
| Matara | 78,409 | 1,568,180 | 19,602 |
| Hambantota | 70,437 | 1,408,740 | 17,609 |
| Jaffna | 75,343 | 1,506,860 | 18,836 |
| Mannar | 9,199 | 183,980 | 2,300 |
| Vavuniya | 16,470 | 329,400 | 4,118 |
| Mullaitivu | 15,857 | 317,140 | 3,964 |
| Kilinochchi | 18,485 | 369,700 | 4,621 |
| Batticaloa | 84,191 | 1,683,820 | 21,048 |
| Ampara | 74,817 | 1,496,340 | 18,704 |
| Trincomalee | 51,689 | 1,033,780 | 12,922 |
| Kurunegala | 181,700 | 3,634,000 | 45,425 |
| Puttalam | 68,868 | 1,377,360 | 17,217 |
| Anuradhapura | 102,063 | 2,041,260 | 25,516 |
| Polonnaruwa | 48,623 | 972,460 | 12,156 |
| Badulla | 125,016 | 2,500,320 | 31,254 |
| Monaragala | 66,232 | 1,324,640 | 16,558 |
| Ratnapura | 152,525 | 3,050,500 | 38,131 |
| Kegalle | 97,157 | 1,943,140 | 24,289 |
| Sri Lanka | 2,000,000 | 40,000,000 | 500,000 |

* Milk Powder will be received for Households with pregnant or lactating mothers or children below age 5. However, if a household has more than one of the above categories, only one packet of milk powder need to be distributed.

Source : Household Income and Expenditure Survey - 2019 , Department of Census and Statistics

தமிழ் நாட்டில் உள்ள ஓர் சிறுமி தனது உண்டியலில் சேர்த்த பணத்தையும் இரந்து வாழ்பவர் தனது பங்களிப்பையும் செய்தது தமிழர்களிற்கே அன்றி இலங்கைக்கு அல்ல, அதனால் அடுத்தவன் வழங்குவதனைக்கூட "நந்தி வழிவிடாத நிலமை" அவலத்திலேயே காணப்படும்போது எமது இனப்பிரச்சனை தீர்வில் கொழும்பில் எவ்வளவு கரிசனை இருக்கும் என்பதனை தமிழ்நாடும் உலகமும் புரிந்துகொள்ள வேண்டும் என யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் ஒருவர் கூறினார்.

இதேநேரம் இனம் சார்ந்த விடயத்தில் எம்மை ஒதுக்கும் இலங்கை அரசு உதவிகள் தேவைப்படும்போது மட்டுமே எமது இனத்தவர்களிடமும் எமது புலம்பெயர்ந்தவர்களிடமும் கையேந்துவதோடு தமிழ்நாட்டையும் திரும்பிப் பார்க்கின்றது என யாழ்ப்பாணம் கல்வயலைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஆசிரியர் த.மாசிலாமணி உதயனிடம் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, இலங்கையில் நிலவும் அதிகரித்த பொருளாதார நெருக்கடி காரணமாக இலங்கை மக்கள் முழுமையாக தவித்தாலும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் உச்சகட்ட பாதிப்பினை எதிர்நோக்குவதனால் தமிழ்நாடு முதலமைச்சர் வழங்கிய உதவிப் பொருட்கள் இலங்கையை வந்தடைந்தவரைக்கும் நன்றி தெரிவிக்கும் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள், தமது அன்பளிப்பில் கூடுதலான அளவில் தமிழ் மக்களுக்கு அளிக்கப்பட இலங்கை அரசிற்கு தமிழக அரசு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் கோருகின்றனர்.

இந்தியாவின் மத்திய அரசு அனுமதி வழங்க தாமதம் செய்தபோது இலங்கைக்கான உதவி என தமிழ்நாடு முதலமைச்சர் தனது முடிவை மாற்றி அறிவித்தார். இதன்போதே தமிழ்நாடு மக்களின் உதவி தமிழர்களிற்கு அரைப்பங்குகூட கிட்டாது என தமிழர் தாயகப் பகுதியிலும் மலையகத்திலும் வாழும் மக்களும் எதிர்வு கூறினார்கள். அது இந்த சுற்று நிருபம் மூலம் உண்மை என்பது புலப்பட்டுள்ளது. யதார்த்தமாக நோக்கினால், இந்திய உதவி அல்லது இந்திய அரசின் மூலமான உதவி என்பது அடிப்படையில் தமிழ் மக்களுக்கான உதவியாக பார்க்கப்படுகிறது. தமிழக அரசு சார்பில் அளிக்கப்படும் உதவி, சிங்கள மக்களுக்கு பெருவாரியாக பகிர்ந்தளிக்கப்படுகிறது என்கிற செய்தி தமிழக மக்கள் மற்றும் தமிழ்நாடு அரசிற்கு தெரிந்தால் அதற்கான எதிர்வினை பாரதூரமாக இருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.


MINISTRY OF FINANCE

Mr. K.D.S. Ruwanchandra, Commissioner General,
Office of the Commissioner General of Essential Services
Mrs. J. Krishnamoorthy, Food Commissioner, Food Commissioner's Department

Dear Sir / Madam

**Donation of 40,000MT of Rice and 500MT of Milk Powder among Vulnerable Households and Around Rs. 1 Billion Worth of Medicine for the Ministry of Health**

As you may aware, the Government of India has express their willingness to donate essential food items to ensure the food security of vulnerable communities facing difficulties due to the present economic situation. Further, it is expected to donate a worth of Rs. 1 billion (approximately) essential medicine too.

The Government of India will deliver 40,000MT of rice and 500MT of milk powder in consignment-wise, and the first consignment will be received around 20th May 2022. It may include around 9,000MT of rice and 50MT of Milk powder and medicine.

It is expected to distribute rice and milk powder among 2 million vulnerable households through this program. Accordingly, the number of beneficiary households for each district will be selected from the lowest four poverty deciles submitted by the Department of Census and Statistics. Further, it is expected to distribute 20kg (2 * 10kg packs) for each vulnerable household while 1kg milk powder for only vulnerable households with pregnant or lactating mothers or children below age 5 in the bottom 40%. However, if a household has more than one of the above categories, only one packet of milk powder need to be distributed. (The total number of beneficiaries selected for the distribution of rice and milk powder for each district is attached as annex I).

Accordingly, rice and milk powder will be distributed to the vulnerable households by the Divisional Secretaries, under the supervision of District Secretaries in each district.

இந்தியாவின் உதவியை சற்றே பின்னோக்கிப் பார்ப்பது இந்த சமயத்தில் அவசியமாகிறது. கடந்த 1987 ஆம் ஆண்டு ஈழத் தமிழர்களிற்கு உதவ தமிழ்நாட்டின் அப்போதைய முதலமைச்சர் எம்.ஜி. இராமச்சந்திரன் இந்திய - இலங்கை அரசுகளிடம் அனுமதி கோரியபோது, இலங்கை அரசு மறுத்தும் பொருட்களை கப்பலில் ஏற்றி அனுப்பினார். இதனால் நடுக்கடலில் கப்பல் மறிக்கப்பட்டது. இதன் பின்பு இந்திய விமானப்படை விமானங்களில் அந்தப் பொருட்கள் ஏற்றி யாழ்ப்பாணத்தில் "ஒப்பரேசன் பூமாலை" என்ற பெயரில் விமானம் மூலம் போடப்பட்டது. அது எப்படியான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பது வரலாறு.

தமிழ்நாட்டு மக்களிடமிருந்து கிடைக்கபெற்ற உதவிகளைப் போன்றே இலங்கை அரசு அதன் நெருக்கமான கூட்டாளியான சீனாவிடமும் கோரி அரிசி, பெட்ரோல், டீசல் போன்றவற்றை வேண்டி அதையும் நாட்டு மக்களுக்கு பகிர்ந்தளித்திருக்க வேண்டும் என்ற கருத்தும் ஓங்கி ஒலிக்க ஆரம்பித்துள்ளது. இலங்கையில் அபிவிருத்தி என்ற போர்வையில் சீனா செய்த முன்னெடுப்புகள், அதன் மூலம் பலனடைந்தவர்கள், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையத்தை தமது வர்த்தக இலாபத்திற்காக பெற்றுக் கொண்டது, சீனாவை நம்பி பல ஹவெள்ளை யானைஹ திட்டங்களை ராஜபக்ச அரசாங்கம் முன்னெடுத்து நாட்டை பெரும் பொருளாதார இக்கட்டில் தள்ளியமை போன்றன வரலாற்றுப் பதிவுகளாகவே உள்ளன.

இந்தக் காலத்தில் தீவக மீனவர்களின் நன்மை கருதி இந்தியா 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணையை தற்போது அனுப்பி வைத்துள்ள செயல் அந்த மீனவர்களிற்கு ஆறுதல் அளித்தாலும் ஏனைய மீனவர்களை ஏக்கத்திலேயே வைத்துள்ளது. இலங்கையில் நிலவும் கடும் பொருளாதார நெருக்கடியினால் எரிபொருள் தட்டுப்பாடும் உச்சமாகவே உள்ளது. இதனால் இந்திய மீனவர்களின் ஊடுருவல் காரணமாக தொழில் பாதிப்பினை எதிர்கொண்ட தீவக மக்கள் விடுத்த கோரிக்கையின் பயனாக முதல் கட்டமாக 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்னை கொழும்பை அடைந்துள்ளதோடு விரைவில் யாழ்ப்பாணம் எடுத்து வரப்படவுள்ளது.



இது தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் கணபதிப்பிள்ளை மகேசனிடம் தொடர்பு கொண்டு கேட்டபோது, "யாழ் தீவக மீனவர்களின் கோரிக்கைக்கு அமைவாக 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணை இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. யாழ்.தீவக மீனவர்கள் முன்வைத்த கோரிக்கைக்கு அமைவாகவே இந்த 15 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணை இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ளது. அவை கொழும்பை வந்தடைந்துள்ளது. மிக விரைவில் யாழ்ப்பாணம் எடுத்துவரப்பட்டு தீவக மீனவர்களுக்கு மட்டும் வழங்கப்படும். நயினாதீவு, எழுவைதீவு, நெடுந்தீவு, அனலைதீவு உள்ளிட்ட தீவு பகுதி மீனவர்கள் 750 பேருக்கு அது பகிரப்படும். அந்த பணியை மீன்பிடி திணைக்களம், பிரதேச செயலகம் மற்றும் மீன்பிடி சங்கங்கள் மேற்கொள்ளவுள்ளன" என்று தெரிவித்தார்.

இலங்கையில் நிலவும் அதிகரித்த பொருளாதார நெருக்கடி காரணமாகவும், இந்திய மீனவர்களின் ஊடுருவல் காரணமாக பாதிக்கப்படும் மீனவர்களின் தீவக மீனவர்களும் அடங்குவதனால் அந்த மீனவர்களின் வாழ்வாதார மேம்பாடு கருதி உதவுமாறு யாழில் உள்ள இந்தியத் தூதரகத்திடம் கோரிக்கை விடப்பட்டது. இந்தக் கோரிக்கையின் அடிப்படையிலேயே இந்திய அரசினால் அன்பளிப்பாக இந்த மண்ணெண்னை வழங்கப்படுகின்றது.

இந்த படிப்பனைகளின் அடிப்படையில் இந்திய அரசு வழங்கும் உதவிகள் இலங்கைக்கான உதவிகளாக அமைந்து கொழும்பு ஊடாகக்கிட்டினாலும் தமிழ்நாடு மக்களின் உதவி ஈழத் தமிழர்களிற்கும் மலையக உறவுகளிற்கும் நேரடியாக கிட்ட வேண்டிய செயலையே தமிழ்நாடு முதல்வர் கூடுதல் கரிசனை கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை எழுகின்றது. அல்லலுறும் இலங்கை மக்களுக்கு இந்தியா மற்றும் தமிழக அரசிடமிருந்து மேலும் ஒரு தொகுதி நிவாரணப் பொருட்கள் விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று கூறப்படுகிறது. அதன் போது அந்தக் கப்பல்கள் கொழும்புக்கு வராமல் யாழ் காங்கேசன்துறைக்கு வந்து அங்கிருந்து நாட்டின் இதர பகுதிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் தமிழ் மக்களால் முன்வைக்கப்படுகின்றது.



இதேவேளை, தற்போது வந்துள்ள பொருட்களை பகிர்ந்தளிக்க விடுக்கப்பட்டுள்ள சுற்று நிருபத்தில் மாவட்டந்தோறுமுள்ள மக்கள் தொகைக்கு ஏற்ற வகையில் அது பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பது தெளிவாகிறது. அதிலும் குறிப்பாக பால்மா விநியோகத்தில் இந்தப் பங்கீடு சரியில்லை என்கிற கடும் விமர்சனமும் கவலையும் எழுந்துள்ளது.

எந்த தரவுகள் அல்லது கணக்கீடுகளின் அடிப்படையில் இந்த நிவாரணப் பொருட்கள் பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்பது குறித்து எவ்வித தகவலோ அல்லது விளக்கமோ கொழும்பில் இருந்து வெளியாகவில்லை.

தமிழ்நாட்டிலிருந்து இந்திய அரசின் மூலம் வந்துள்ள உதவி ஓரளவிற்கு உதவியாக இருக்குமென்றாலும், நாட்டின் தேவைகளை பூர்த்தி செய்ய இயலாது. புலம்பெயர் தமிழ் மக்கள் செறிந்து வாழும் கனடா, பிரித்தானியா, ஆஸ்திரேலியா, சுவிஸ், ஜெர்மனி, பிரான்ஸ் போன்ற நாடுகளும் மிகவும் நெருக்கடியான சூழலில் இலங்கை இருக்கும் நிலையில் உடனடியாக தமது மக்களிற்கு நிவாரண உதவிகளை வழங்கி உதவ வேண்டும் என்ற கோரிக்கை தமிழர் தாயகப் பகுதிகளிருந்து எழுந்துள்ளது. இந்த நாடுகளில் வசிக்கும் ஈழத் தமிழர்கள் அந்தந்த நாடுகளுக்கு அளப்பரிய பங்களிப்பை தொடர்ந்து செய்துவரும் நிலையில், அந்த அரசுகளும் இப்படியான சூழலில் இயன்றளவின் உதவ அழுத்தக் கொடுக்க வேண்டும் என்கிற கோரிக்கை தாயக தமிழர்கள் மத்தியில் உள்ளது.

முதற்படியாக கனேடிய அரசிடமிருந்து உணவுப் பொருட்கள், பாலமா, எரிபொருள் போன்ற உதவிகளை உடனடியாக எதிர்பார்த்து தாங்கள் காத்திருப்பதாக தாயக உறவுகள் உதயனிடம் தெரிவித்தனர்.

# இலக்கிய–கலை–சமூக தள பொன்விழா நாயகர் லோகேந்திர லிங்கம் அவர்களின் ஊடக மகன் உதயன், பொன்விழா காணட்டும்! தமிழன்னையும் துணை நல்கட்டும்!!



நக்கீரன்

**கோ**லாலம்பூர், மே 23:

ஜூலை மாதத்திற்கும் தீவு நாடாம் இலங்கைக்கும் வரலாற்றில் குறிப்பிடத்-தக்க இடமுண்டு. குறிப்பாக, ஜூலை 21-ஆம் நாள் உலக வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு நாள். 1960-ஆம் ஆண்டில் இதே நாளில்தான் உலகில் முதல் முறையாக, ஒரு பெண் ஒரு நாட்டின் பிரதமராக பொறுப்பேற்றார். அந்தப் பெண் சிறிமாவோ பண்டார நாயகே; நாடு இலங்கை;

அதைப் போல இலங்கையின் பூர்வ குடிகளாம் ஈழத் தமிழ் மக்கள்மீது சிங்கள இனவெறி காடையர்கள் வகைதொகையின்றி வன்முறையை ஏவி, அரச பயங்கரவாதத்தின் துணை கொண்டு பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்களின் உயிரைக் குடித்த கறுப்பு வரலாறு இடம்பெற்றதும் இதே ஜூலையில்தான். ஆண்டு 1983; நாள் 23.

இந்த இரு சம்பவங்களும் ஈழத் தமிழ் மக்களைப் பொறுத்தவரை கருப்பு அத்தியாயங்கள்.

அதேவேளை, மனிதன், முதன்முதலில் நிலவில் கால் பதித்த நல்ல வரலாற்றைக் கொண்டதும் இந்த ஜூலையில்தான்; நாள் 21, ஆண்டு 1969. அதைப்போல, என் வாழ்க்கையிலும் இதே ஜூலையில் ஒரு வெண் அத்தியாயம் உருவானது. நாள் ஜூலை 21; ஆண்டு 2007. இடம்பெற்ற இடம் மலேசியத் திருநாட்டின் முதல் உயர்க்கல்வி நிறுவனமான மலாயாப் பல்கலைக்கழகம்.

ஜூலை 20, 21, 23 ஆகிய மூன்று நாட்களுக்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் 10-ஆவது மாநாடு நடைபெற்ற அந்த நேரத்தில், 21-ஆம் நாளில் அண்ணன் நாகமணி லோகேந்திர லிங்கம் பேசினார்.

அந்த மாநாட்டின் நிகழ்ச்சி நிரலையும் இழந்து விட்டேன்; அவர் என்னத் தலைப்பில் பேசினார் என்பதும் நினைவில் இல்லை. ஆனால், அவர் பேசிய போது வெளிப்படுத்திய செம்மாந்த கருத்து மட்டும் இன்றளவும் என் மனதில் சிம்மாசனமிட்டு கொளுவீற்றிருக்கிறது.

மாந்தனை செம்மைப்படுத்தி செழுமையான சிந்தனைக்கு உட்படுத்த அந்தந்த நிலத்தே உருவான பலவகையான சமய சிந்தனை, இன்று மதவெறிப் போக்காக உருமாறிவிட்டது. இன்றைய உலகில், மனிதர்கள் எதிர்கொள்ளும் பெரும்பாலான சிக்கல்களுக்கு அடிப்படை மதவாதம்தான்.

அதேவேளை, நன்னெறிப் பண்பையும் ஆன்ம நேயத்தையும் உள்ளடக்கிய சமய சான்றோர்களும் இதே சமுதாய வீதியில் உலா வருவதையும் காண முடிகிறது. அதில் ஒருவராகத்தான், அந்த நேரத்தில் இன்னார் என்று தெரியாத.. ., அறிமுகம் இல்லாத அண்ணன் நாகமணி லோகேந்திர லிங்கம் அவர்கள் அந்தப்போதில் என் மனதில் தோன்றினார்.

**அவர் பேசியது இதுதான்:**



மனிதர்களுக்கு சமய நெறி தேவைதான்; ஆனால், அது எப்போதும் எங்கேயும் நல்லிணக்கத்தை முன்னெடுப்பதாக அமைதல் வேண்டும். பெரும்பான்மை-சிறுபான்மை என்பதெல்லாம் கூடாது. உதாரணத்திற்கு, 100 பேர் கூடியிருக்கின்ற ஓர் அவையில், 99 பேர் சைவர்களாக இருந்து ஒரேயோருவர் மட்டும் வேற்று சமயத்தினராக இருந்தால்க, அந்த இடத்தில்

**"தென்னாடுடைய சிவனே போற்றி**
**எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"**


என்று இறைவனை வாழ்த்தி வணங்குதற்குப் பதிலாக, எல்லார்க்கும் பொதுமறையான திருக்குறளின் "இறைமாட்சி அதிகாரத்தில் இருந்து இரண்டொரு குறட்பாக்களை ஓதலாம் என்றார்.

உலக அளவில், இன்றைய அவசியத் தேவையும் அவசரத் தேவையுமாக இருப்பது, சமய நல்லிணக்கம்தான். ஆயிரக் கணக்கான தமிழ் நெஞ்சத்தினர் குழுமியிருந்த அந்த அவையில் இவர் பேசிய அந்த மாந்தநேயக் கருத்து.. ., சமய நல்லிணக்கக் கருத்து என்னை வெகுவாகக் கவர்ந்தது.

**(தொடர்ச்சி _37__ பக்கம்)**

## கனடா–ரொறன்ரோ மாநகர சபையின் உறுப்பினர் Councillor Jennifer McKelvie அவர்கள் கனடா உதயன் பிரதம ஆசிரியரைப் பாராட்டி வழங்கிய வாழ்த்து மடல்

தனது ககலை இலக்கிய மற்றும் பத்திரிகைத்துறைப் பயணத்தின் 50வது ஆண்டை நிறைவு செய்யும் எழுத்தாளர் கவிஞர் பேச்சாளர் பத்திரிகையாளர் திரு. லோகேந்திரலிங்கத்தைப் பாராட்டி கனடா-ரொறன்ரோ மாநகர சபையின் உறுப்பினர் Councillor Jennifer McKelvie வழங்கிய வாழ்த்து மடல்




A fifty year career marked by its distinction and professionalism, it is with great pleasure that I extend my heartfelt congratulations to Mr. Logan Logendralingam, distinguished journalist and community leader, as he celebrates his 50th anniversary in creative writing and journalism.

Logan's renowned connection with readers here in Canada and around the world can be attributed to his innate ability to explore and decipher complex topics, make local and international content relatable, and provide critical facts which allow readers to make informed decisions.

For half a century, Logan has helped us to better understand our world and the people in it. His strong instincts and extensive experience allowed him to successfully grow the Canada Uthayan brand over the past 26 years, and showcase the rich and diverse stories of the Tamil-Canadian community.

Thank you, Logan for your extraordinary efforts to bring the stories which matter most to light, and for helping to shape a more creative and colourful world for all of us to enjoy.

Here's to many more rewarding years ahead,



Jennifer McKelvie
City Councillor
Scarborough – Rouge Park

100 QUEEN STREET WEST, SUITE B25 TORONTO, ON M5H 2N2
416-338-3771 • COUNCILLOR_MCKELVIE@TORONTO.CA

# வெண்பனிக்குள் சிக்கித்தவிக்கும் வாழ்க்கை

- சுவிஸிலிருந்து பொலிகை ஜெயா

**வே**லை முடித்து உடுப்பு மாற்றும் அறைக்கு போவதற்கு பன்னிரண்டு படிகளை தாண்டி கீழே இறங்கி சமையல் செய்வதற்காக அணியும் தொப்பி, சேட்டு, ரவுசர் ஆகியவற்றை கழட்டி தோய்க்கப்போடும் பெட்டிக்குள் போட்டபின் மறு உடுப்புக்களை அணிந்து கொண்டு தலைக்கான தொப்பியையும் மாட்டி கங்கரில் தொங்கிய குளிருக்கான ஜக்கெற்றை (மேலங்கி) எடுத்து அணிந்தபடி அவசரம் அவசரமாக உணவு விடுதியை விட்டு பஸ்சை (Bus) பிடிக்க புறப்பட்டான், அமுதன்.

பஸ்சை பிடிப்பதற்காக தனது கால் பாதங்களை அகட்டி வைத்து நடையின் வேகத்தை அதிகரித்தான். பனிக்காற்றின் வேகத்தில்; குளிர் காதுகளை விறைக்க வைத்தது. இதனால் மேலே அண்ணார்ந்து வானத்தை சற்று நோக்கினான். வானம் வளமையை விட இருண்டுபோய் இருந்தது. கார்முகில் அசைவற்று காணப்பட்டது. மழை பெய்யும் அறிகுறி அவன் கண்களுக்கு புலப்பட்டது. மழை பெய்யமுன் வீடு போய் சேரவேணும். கையில் குடை வேறு இல்லை. சுவிஸில் எப்ப மழை பெய்யும், காற்று வீசும், பனி கொட்டும் என்பது நீண்ட காலம் வாழும் எம்மவருக்கு இன்னும் அச்சொட்டாக தெரிவதில்லை. பனிக்காற்று உடலை துளைத்தபடி தன் இருப்பை உணர்த்தியது. ஜக்கற் பொக்கற்றுள் கை இரண்டையும் புதைத்த படியால்' கைகள் குளிரவில்லை. குளிரால் மூக்கு சிந்தியபோது! ஜக்கற் பொக்கற்றிலிருந்து ரிசுப்பேப்பரை எடுத்து மூக்கை துடைத்து வீதியோரம் இருந்த குப்பைத்தொட்டிக்குள் வீசி விட்டு இன்னும் கால்களை அகட்டி நடையின் வேகத்தை மேலும் அதிகரித்தான்.

இரண்டு நாரைகள் கத்தி குரலெழுப்பியபடி கடலை நோக்கி வானத்தில் பறந்தன. மஞ்சள் கோட்டை கடப்பதற்கான தெருச்சிக்னல் விளக்கு சிவப்பு ஒளியை பாச்சியது. பல வெள்ளைத்தோல்களும் என்னைப்போல பச்சை நிறத்துக்காக காத்து நின்றனர். அதுக்கு எங்கே தெரியப்போகிறது எனது அவசரமும், மனிசியின் நிலையும்.

பஸ்சில் ஏறியதும், ''வீட்டில் தனிமையில் இருக்கும் பிள்ளைத்தாச்சி மனைவியின் எண்ணமே அவன் மனதுள் ஓடியது. பனி கொட்டும் காலங்களில் இங்கு எங்கு பார்த்தாலும் வெண்பனிகளின் காட்சிகளே கண்ணுள் நிறைந்திருக்கும். அதுபோன்று மனம் முழுக்க அவளே நிறைந்திருந்தாள்.''

அவள் சுவிஸுக்கு புதியவள். அண்டை, அயலில் கூப்பிட்ட குரலுக்கு ஓடிவர தெரிந்தவர்கள் எவருமில்லை. அவளுக்கு டொச்சோ அல்லது பிறெஞ்சு பாசையோ கதைக்க தெரியாது. வயிற்று வலி வந்தால் ஆஸ்பத்திரி போக ரெலிபோனில் ரக்சியை கூட கூப்பிட தெரியாது என்ற பதகளிப்பு வேறு, அமுதனுக்கு.

பஸ்சில் இருப்பதற்கு போதிய இடமிருந்தும் வலது கையால் கம்பியை பிடித்துக்கொண்டு நின்றபடியே பயணம் செய்தான். போதிய இருக்கைகள் இருந்தும், நின்றபடியே பயணம் செய்தால் இந்த வெள்ளைகள் எனது நிறத்தை பார்த்து தம் மனதுள் ஏளனமாக ஏதும் எண்ணுவார்கள் என்பதற்காக முள்ளின்மேல் இருந்து பயணிப்பது போன்று சீற்றில் அமர்ந்திருந்தான்.

*ச்ச..ச்ச இதென்ன வாழ்க்கை? ஊர், உலகத்துக்கு நாம் சுவிஸில் ஒரு குறையுமில்லாது வாழுகிறோம் என்ற பெயர்தான். உறவுகள், அக்கம்பக்க உதவியற்ற, நிம்மதியை தொலைத்த இயந்திர வாழ்வு, விபரிக்க முடியாத வேதனைகளை சுமந்தவாறு வாழுகிறோம். என மனதில் விரக்தி கொண்டான்,* அமுதன்.

பஸ் தரிப்பிடத்திலிருந்து வீட்டுக்கு பத்து நிமிடங்கள் நடத்தல் வேண்டும். மீண்டும் அண்ணார்ந்து வானத்தை பார்த்தான். மழை வருமுன் வீடு போய் சேர்ந்திட வேண்டுமென்ற அவசரம். வரும் வழியில் ஒரு சுவிஸ் பெண் காதுகளை விறைக்க வைக்கும் இந்த குளிருக்குள் தனது குழந்தையை வண்டிலுக்குள் வைத்து தள்ளி கொண்டு போன காட்சி தனது குழந்தையையும் என்ர மனிசி இப்படித்தானே தள்ளிக்கொண்டு போவாள் என்ற மன அங்கலாய்ப்புடன் வீட்டை அடைந்தான்.

வீட்டின் பெல்லை அடித்து பிள்ளைத்தாச்சி மனிசியை சிரமப்படுத்தி கதவை திறக்க வைக்காது தனது திறப்பால் திறந்து உள்ளே போய் சப்பாத்தை கழட்டி, சப்பாத்து தட்டில் வைத்து, ஜக்கெற், உடுப்புக்களை களட்டி கங்கரில் கொழுவியபின் சாரத்தை உடுத்தியபடி மனைவியிடம் அறைக்கு சென்றான்.

''அவளோ நல்ல தூக்கத்தில் இருந்தாள். அவளின் தூக்கத்தை குழப்ப விரும்பாது அறைக்கதவை சத்தம் இல்லாது சாத்திய பின் குளிப்பதற்கு சென்றான்.''

உணவகத்தில் அடுப்படிக்குள் (குசினி) வேலை செய்வதென்றால் ஓய்வு (Break) நேரத்தை தவிர மற்றும்படி நின்ற நிலையில்தான் பணி புரிதல் வேண்டும். இதனால் கால்களில் உளைவும், வலியும் ஏற்படும். மேலும் சுத்தமான காற்றும் சுவாசிக்க முடியாததோடு! அடுப்பு வெக்கையும் அதிகம்.

குளியலறை பைப்பை திறந்து சுடுநீரில் வேலை அலுப்புத்தீர குளித்தான். குளித்து முடித்து உடுப்பை அணிந்து நேராக உணவு மேசையில் இருந்த அப்பிள் யூசை ஒரு கிளாசில் ஊற்றி மூன்று முடறு மடக், மடக் என குடித்து மீதி யூஸ் கிளாசை செற்றிக்கு (மெத்தை இருக்கை) பக்கத்தில் உள்ள ரீப்போவில் வைத்து செற்றியில் பின் பக்கம் சாய்ந்து கண்களை மூடியவாறு மனைவி அமுதா பற்றிய இளமைக்கால வசந்தங்களை இரை மீட்டான்.

நெல்லியடி சயன்ஸ் சென்ரரில் ஒரே வகுப்பில் இருவரும் ரியூசன் (பிரத்தியேக வகுப்பு) படித்தனர். அந்த நேரம் எல்லோரும் சைக்கிள்தான் பாவிப்பார்கள். ஒருநாள் இரவு எட்டு மணிக்கு வகுப்பு முடிந்து அவரவர் சைக்கிளை எடுத்து வீடு போக முயன்றபோது! ''அமுதாவின் சைக்கிள் பின் சில்லின் காற்று போய் விட்டது.'' அவள் என்ன செய்வது எனத்தெரியாது தவித்து நின்றாள். அதே நேரம் அமுதனும் தனது சைக்கிளை எடுக்க போன நேரம் இதை அவதானித்தான்.

''அவளின் பெயர்கூட அப்போது அவனுக்கு தெரியாது. அவனே கேட்டான், கலோ எங்கே இருக்கின்றீர்களென?''

''பொலிகண்டி என்றாள், அவள்.''

பொலிகண்டிக்கு நெல்லியடியிலிருந்து பஸ் இல்லை. கைத்தொலைபேசியும் இல்லா காலம் அது. நான் கிட்டடியில்தான் இருக்கிறன். விரும்பினால் நீங்கள் என்ர சைக்கிளை கொண்டு போங்கோ. உங்கட சைக்கிளை நான் சைக்கிள் கடையில் குடுத்து ஒட்டிப்போட்டு அடுத்த கிளாசில் தாறன் என்றான்.

''அவள் சற்று யோசித்து விட்டு ஓக்கே தாங்ஸ் என சொல்லி அவனது சைக்களில் தன் வீடு போனாள்.''

மாறு நாள் வகுப்பு முடிந்ததும் அவள் அமுதனின் சைக்கிளை அவனிடம் கொடுப்பதற்காக காத்திருந்தாள். அவனை கண்டதும் மிக்க நன்றி கூறி அவனது சைக்கிள் திறப்பை கொடுக்கும்போது! உங்கள் பெயர் என்ன என வினவினாள்?

''அமுதன்'' என்றான்.''

''உங்கள் பெயர் பிளீஸ்?''

''அமுதா'' என்றாள்.

ஓ.. அமுதாவா? இருவரின் பெயரும் ஒரேமாதிரி இருக்கிறதே என சொல்லி சிரித்தான் அவன். அவளும் பதிலுக்கு சிரித்தாள்.

''மறுநாள் வகுப்பில் அவள் அமுதனை தனது கண்களை அகட்டி துழாவினாள். அனால் அவன் வகுப்பு ஆரம்பித்து சிறிது பிந்தியே வகுப்பினுள் நுழைந்தான். அவன் பொடியள் பக்கம் வந்து இருந்ததும் அவளது கண்கள் அவனை நோக்கி இடதுபக்கம் திரும்புவதை அவளால் ஏனோ தடுக்க முடியவில்லை.''

அவன் திரும்பவும் தெரிந்தான். அவனின் நினைவுகள் தன்மீது ரோந்து செய்வதை அறிந்தும், அறியாதது போல நல்லையா வாத்தியார் சிகரட்டை ஊதியபடி கரும் பலகையில் கணக்கை (Mathematics) போட்டு கற்பிப்பதை கவனித்தாள், அவள்.

*அவன் பனை போல வளர்ந்து, தினவெடுத்த தோழனாக (தோழ்) அவள் கண்களுக்கு காட்சி கொடுத்தான். அவனது புடைத்த புட்டத்தின் அழகில் அவளது இளமை அவளை அறியாது கட்டுப்பாடற்று அலைபாய தொடங்கியது.*

''பிற்பாடு இருவரும் வகுப்பு நடக்கும் நாட்களில் அடிக்கடி சந்தித்து சிநேக பூர்வமாக பேசிக்கொள்வர். ரியூசன் வகுப்புக்குள்ளேயே வழமையான ஆண்பால், பெண்பால் என்ற பாலின்பால் - ஈர்ப்பாகி, எம் தமிழ் கலாச்சார காதலர்கள் கையாளும் கடிதம் விடும் தூது முறைமை இல்லாது பேச்சின் மூலமே காதலை தொட்டனர்.''

''மனமொத்த இருவரின் காதல் வெளிப்பாட்டின் பின், நாம் வணங்கும் கடவுளான அம்மனை ஒத்த பேரழகிய ஒரு பெண்' தன்னையும் விரும்புகிறாள் என தன் மனசுள் எண்ணி வானத்தில் உயர சிறகுவிரித்து சோடி, சோடியாக பறந்திடும் பட்சிகள் போல பறந்தான். அவளை தினமும் சந்திக்க பள்ளிக்கூடம் ரியூசன் கிளாசாகவும், ரியூசன் கிளாஸ் பள்ளிக்கூடமாகவும் மாறினால் எவ்வளவு நல்லாயிருக்கும் என எண்ணினான்.''

*இவ்வாறு தனது பள்ளிப்பருவ வாழ்வின் சிந்தனை அலைகள் இணை அமுதாவுடன் களவியல் காதலில் மூழ்கி திளைத்த வசந்த காலத்தை கடல் அலைபோல மன ஓட்டத்தில் அலைய விட்டான். 'பருவக்காதல் அலைகள்' அங்குமிங்குமாக மனதுள் தொட்டு ஓடியது.*

இருந்த போதும் பசி வயிற்றை சுரண்டியது. செற்றியை விட்டெழுந்து அடுப்படிக்குள் சென்றான். அங்கு தானே தனக்கான சோற்றை தட்டில் போட்டு, கறிகளை விட்டு, மீன் பொரியலையும் சோற்றின் மேல் ஒரு கரையில் வைத்து, அவுனுக்குள்ளே (சாப்பாடு சூடாக்கும் மெசின்) வைத்து, சூடாக்கினான்.

சாப்பாடு சூடாகியபடி இருந்தவேளை! அமுதா அங்கே வீட்டு சுவரை பிடித்தவாறு வயிற்றை தள்ளியபடி, மெது மெதுவாக வந்தாள். ஏனுங்கோ என்னை எழுப்பியிருந்தால் நான் சாப்பாடு போட்டு தந்திருப்பன். வேலையால வந்த களையுடன் நீங்கள் ஏன் உதெல்லாம் செய்யிறியள்? என்றாள்.

''இல்லை அமுதா. உனக்கு வர, வர உடம்புக்கு ஏலாது. நீ பிள்ளை பெறும் நாள் நெருங்குகிறது. உனக்கேன் இந்த கஷ்டம். நான் செய்வன் தானே. நீ நல்லா ஓய்வெடுக்கணும். அப்பதானே எனக்கு உன்னைப்போல ஒரு வடிவான சின்ன இளவரசியை சுகமாக பெத்து தருவாய் என சிரித்தபடி' அவளது வயிற்றை தடவினான்.''

''அவனின் இந்த பாசமான வார்த்தை, அவளுக்கோ - வெண்பனிபோல வானத்தில் மின்னிடும் நட்சத்திரங்களை மாலையாக தொடுத்து கழுத்தில் போட்டது போன்ற சந்தோசத்தை கொடுத்தது.''

*(தொடர்ச்சி _35__ பக்கம்)*

# இது மண்ணின் வாசமோ?

"உங்கள் மார்க்கம் உங்களோடு;
எங்கள் மார்க்கம் எங்களோடு..."
- புனித குர்ஆன் -
"இஸ்லாம் எங்கள் வழி; இன்பத் தமிழ் எங்கள் மொழி"
- சமுதாயக் குரல் -

*'சத்திய எழுத்தாளன்'*
**- கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர் கனி -**



**யாழ்** நகரில் பழைய வெலிங்டன் திரையரங்கிற்கு சற்று தள்ளி இருக்கும் மணியன் ஸ்டோர்ஸ் என்ற பெரிய கடையை தெரியாதவர்கள் எவரும் இருக்க மாட்டார்கள். கொழும்பு புறக்கோட்டை நாலாம் குறுக்குத் தெருவிலிருக்கும் சில கடைகளுக்கு, வெங்காயம் - கிழங்கு - பூடு என்பன போன்ற சாமான்களை நீண்ட காலமாக ஏற்றி அனுப்பும் பெரிய கடை இந்த மணியன் ஸ்டோர்ஸ்...

அதிக காலமாக அக்கடையின் 'கொழும்பு வசூலுக்கு' மாதாந்தம் கொழும்புக்கு போய் வருபவர் நம்ம அருணாசலம் ஐயா தான். கொரோனாவின் தாக்கத்தால் மனுஷன் மிகவும் உடைந்து போனதால், இம்மாத வசூலுக்கு அருணாசலம் ஐயா தலைநகர் போகவில்லை. யாரை அனுப்பலாம் என்ற கேள்விக்கு விடையாக - அதிஷ்டம் கைக்குலுக்கியது, அதே கடையில் ,ருபது வருடங்களாக கணக்குப்பிள்ளையாக - நம்பிக்கையின் நாயகராக வேலை செய்து வரும் நம்ம கணேசலிங்கத்துடன் தான்!

ஆம்... இன்றைய அந்தி சாயும் பொழுதில் நம்ம கணேசலிங்கம் கொழும்புக்கு பஸ் ஏறுகின்றார். அடேயப்பா... எவ்வளவு காலத்திற்குப் பிறகு இந்த கொழும்புப் பயணம்...? கொழும்பு என்றாலே... இந்த கணேசலிங்கத்திற்கு ஒரே குதூகலம்தான்... ஏன் தெரியுமா...? அந்த சல்மாதான்!

சல்மாவா? பெயர் என்னவோ முஸ்லிம் யுவதியின் பெயர் மாதிரி இருக்கே! ஆமாம்... முஸ்லிம் யுவதிதான். அந்த 'லைலா' விடமிருந்துதான் இந்த 'மஜ்னு' வின் கதையே ஆ ர ம் பி க் கி ற து . அப்படியென்றால்...இது துன்பியல் கதைதானோ? பஸ்ஸில் ஏறி பயணத்தை துவங்குங்கள். இன்பியலா? துன்பியலா? என்பது தானே புரிந்துவிடும்.

இதோ... கொழும்பு செல்லும் பயணிகளை - அவர்களில் ஒரு - வராக இந்த கணேசலிங்கத்தையும் சுமந்து கொண்டு, அந்த தனியார் பேரூந்து விரைந்தோடுகிறது. அந்த வேகத்தோடு போட்டிப் போட்டுக் கொண்டு இந்த கணேசலிங்கத்தின் மனோரதமும் பின்னோக்கி ஓடுகிறது. ஓ... அதுதான் எவ்வளவு இன்பமயமான காலம்! இறந்தகாலம் எப்போதும் சிறந்த காலமாக யிருப்பதை எண்ணி எண்ணி இந்த கணேசலிங்கத்தின் மனம் இறும்பூதெய்துகிறது! பின்னே இருக்காதா என்ன...?

அது வசந்த காலம் எனலாம். வாலிபத்தின் வாசலில் ஏறி - வரவேற்பறையையும் தாண்டி நடுகூடத்திற்கு வந்துவிட்ட சுமார் 25 வயது நிறைந்த இளைஞன - ாக வளர்ந்திருந்தான் இந்த கணேசலிங்கம். பெறற்கரிய பெற்றோருக்கு 3வது பிள்ளையாய், க. பொ. த. (உயர்தரம்) படித்துவிட்டு, யாழ் நகரின் சனசந்தடியான பகுதியில் - பஸாரில் கைப்பேசிகள் கண்சிமிட்ட ஆரம்பித்த புதிதில் ஒரு கைப்பேசி விற்பனை கடையில் 'சேல்ஸ்மேனாக' சேர்ந்த காலம். மக்கள் - குறிப்பாக இளைஞர் கூட்டம் அடிக்கடி வந்துபோகும் இடம்.

ஒவ்வொரு நாளும் காலை முதல் இரவு பத்து மணி வரை எவ்வளவோ பேர் வருவார்கள்; போவார்கள். எல்லோரையும் மனத்தில் வைத்திருக்க முடியுமா? ஆனால் சிலர் மட்டும் சிந்தையில் சிம்மாசனம் போட்டு அமர்ந்து கொள்வதுடன், சிந்தனைகளிலும் சதாவும் ஊஞ்சல் கட்டி ஆடத் துவங்கிடுவர். இது மனோவியல் உண்மை.

இந்த உண்மையின் உருவமாக உத்தமியொருத்தி, இந்த கணேசலிங்கத்தின் மனமேடையில் வந்தமர்ந்து கொண்டாள். யார் அவள்?

சனி - ஞாயிறு - விடுமுறை நாட்கள் தவிர்ந்த ஏனைய பள்ளிகூடத் தினங்களில், பக்கத்தே யிருக்கும் வித்தியாலயம் விட்ட பதினைந்து நிமிட செலவில், உயர் வகுப்பு மாணவியர் குழுவொன்று அந்த விற்பனை கடையை மொய்த்து விடும். உலகில் மிகப்பெரிய நீர்வீழ்ச்சியான நயாகரா விழும் இரைச்சல் சப்தம் சுமார் ஓரிரு மைல் தூரத்திற்கு கேட்குமாம். ஒருநாள் திடீரென அந்த இரைச்சல் சப்தம் கேட்கவில்லையாம்! என்னவென்று பார்த்தால், இரண்டு நாரிமணிகளான பெண்கள் நயாகராவின் அருகிருந்து அளவளாவிக் கொண்டிருந்தனராம்! கற்பனை கலந்த இச்சம்பவம் இரு பெண்டிரின் பேச்சொலியை உணர்த்தும் ஓர் உயர்வு நவிற்சியணியாகும்.


இரண்டு பெண்களின் பேச்சொலியே நயாகராவை மௌனிக்கச் செய்தது என்றால், ஒரு யுவதியர் கூட்டமே விற்பனை கடையினுள் புகுந்தது என்றால், எப்படி யிருக்கும் என்பது சிந்தனைக்கு விருந்தாகும்; நிந்தனைக்கு மருந்தாகும்.

வெண்ணிற சீருடை அணிந்த வெண்புறாக்களின் ஓசை எத்தனை நயாகராக்களை வீழ்த்தினாலும், அது வியாபாரம் 'களை' கட்டுவதாகவே எண்ணிக் கொண்டு, வந்தோர் மீது உபசரிப்பு வார்த்தைகளை அள்ளி வீசும் இளைஞனாகவே நம்ம கணேசலிங்கம் இலங்கினான்ஆ விளங்கினான். முகம் சுளிக்காத மனமும் - குணமும் கடை முதலாளியிடத்தில் கணேசலிங்கத்திற்கு நல்ல பெயரை பெற்றுத் தந்தன.

வெண்புறாக்களிடையே ஒரேயொரு யுவதி மட்டும், வெள்ளை நிறம் மங்கிய மாநிறத்து மங்கையாக - கருப்பழகியாக ஜொலித்தாள். "கருப்புத்தான் எனக்கு பிடிச்ச கலரு" என கவியரசு வைரமுத்து சினிமாவுக்கு பாட்டெழுதும் முன்னமே, இந்த கணேசலிங்கத்திற்கு கருப்பு நிறத்தின் மீது ஒரு கவர்ச்சி.

*(தொடர்ச்சி _32__ பக்கம்)*

CANADA'S OTHER VOICES
NATIONAL ETHNIC PRESS AND MEDIA COUNCIL OF CANADA
Conseil national de la press et des medias ethniques du Canada



May 10, 2022

Dearest Nagamany Logendralingam,

On behalf of the Board and the membership of the National Ethnic Press and Media Council of Canada, it is both my honour and privilege to wish you our sincerest congratulations on your **26th Anniversary of Canada Uthayan and the 50th Anniversary of your journey in Creative Writing and Journalism.**

Congratulations on celebrating this wonderful milestone and we thank you for your contributions to Canada's diverse media over the years. We share in your celebration and we are proud to stand with you as colleagues.

Sincerely,

Thomas S. Saras

President and CEO

National Ethnic Press and Media Council of Canada

# சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

## Manufacturing Workers & General Labour Needed

**உற்பத்தித் தொழிலாளர்கள் மற்றும் பொதுத் தொழிலாளர்கள் முழுநேர காலைப் பணிகளுக்குத் தேவை**

Manufacturing Workers and General Labour Needed
for Full-time Morning Shifts
Looking for Workers to add to our team.
We are looking for hard-working and dedicated people for long-term positions.
Located in Scarborough near Markham and Ellesmere.
Salary starting from $16.00 + with benefits.

**Contact - Essan : 647-993-2872**

## LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial,
Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

## Help Wanted

Part time (evenings and Saturdays).
General helper needed for a furniture finishing shop.

**தொடர்புகளுக்கு:**
**416-636-3655**

## Sales Representative Needed / விற்பனை பிரதிநிதி தேவை

We are looking for an individual who has a desire to succeed, is highly self-motivated, is client-oriented proactive, organized, have quick thinking, and has excellent time management skills. Eco-Friendly Pallet provides all training necessary to ensure you are set up for success and a complete understanding of the pallet industry.

Responsibilities:
-Present and sell company products to potential customers
-Find and cold-call new prospects in existing and in new markets
-Prospect and contact potential customers while generating quality leads
-Must be result-driven and reach agreed sales targets by the deadline
-Resolve customer inquiries and complaints about the products
-Strong organization, and communication skills and be goal-oriented
-Ability to work in B2B corporate sales environment
-Must have a professional appearance and manner

Qualifications:
-Must have 2 or more years of outside sales experience
-Great written and verbal communications skills
-Good Microsoft Office abilities
-Ability to build a great and strong rapport with clients
-Strong negotiation skills
-Deadline and detail-oriented
-Exceptional Time Management skills and Organizational Skills Required
-Must have a valid driver's license and reliable transportation
-Bonus: has experience in the pallet industry

Benefits:
-Competitive base salary + Uncapped commission
-On-going training and development to ensure your success
-Health Benefits option available

**Contact - Essan : 647-993-2872**

## ATSIN LAW
## சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

## வேலைக்கு ஆட்கள் தேவை

ஸ்காபுறோவில் அமைந்துள்ள தொழிற்சாலை ஒன்றில் வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண்/பெண்கள் இருவரும் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு உடன் அழைக்கவும்
**Jeya: (647) 669-2739**

## COOK WANTED

**Cook wanted for a Canadian Restaurant in Whitby Down Town**

-------------------------------

**Whitby** நகரில் அமைந்துள்ள கனடிய உணவகம் ஒன்றிக்கு அனுபவம் வாய்ந்த **COOK** ஒருவர் தேவை.

**உடன் அழைக்கவும்**
**647-200-0478**

## உணவகத்தில் உடனடி வேலை வாய்ப்பு

**Line Cooks** மற்றும் **Dishwashers** ஆகியோர் தேவை.
**150 Water Street, Port Perry ON L9L 1C4** என்னும் விலாசத்தில் அமைந்துள்ள **Anchor Point Grill House & Bar** உணவகத்தில் அமைந்துள்ள இடம் **intersection of Water Street and Mary Street**

**உடன் அழைக்கவும்**
**647-680-4785**




**KARAIKUDI CHETTINAD INDIAN RESTAURANT**
1225 Kennedy Rd, Scarborough, ON M1P 4Y1 Ph: 416 739 9107



# Majestic City இல் இரஜீவன் துஷியின் முன்று பரிணாமங்கள்




உங்கள் இராசிக்கேற்றபடி
அதிஸ்டக் கற்களில் பலவகையான
டிசைன்களில் மோதிரம் செய்து தரப்படும்

அழையுங்கள்
Tel: 416 - 587 - 8000

Lucksme Gold House
G9 - 2900 Markham Road,
Scarborough ON M1X 1E6

EXPRESS AIR
TRAVELS AND TOURS
"Fly with Confidence"

April 30 to May 30-2022 வரை எம்மிடம் சேவையை
பெற்றுக்கொள்ளும் வாடிக்கையாளர்களில்
இருவருக்கு Cuba சென்று வருவதற்கான
8 days all inclusive pacakage ஐ
வெல்லும் அரியவாய்பு காத்திருக்கின்றது

இன்றைய திறப்புவிழாவில் பங்குபற்றி
தாயகத்தில் கிடைக்கும்
உள்ளூர் வழங்களைப் பயன்படுத்தி
செய்யபப்பட்ட கைப்பணிப் பொருட்களை
கொள்வனவு செய்பவர்களும் இவ் அரிய
வாய்ப்பில் பங்கு பற்றலாம்.

இதில் கிடைக்கும் முழுப்பணமும்
அவர்களுக்கே சென்றடையும்.

*You can win 8 days all inclusive pacakage

416.828.9696 - expressair2022@outlook.com
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6



ல்ஷ்சுமி
திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம்
தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள்
மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும்
தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய
இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

சுலபமாய் ஒரு சுயம்வரம்
647-961-6886
"தனி நபர் தகவல்கள், படங்கள், மற்றும் குறிப்புகள் என்பன 100% பாதுகாக்கப்படும்"


# 26th YEAR IN PUBLISHING, NEWS, VIEWS AND TAMIL LITERATURE

## கனடா உதயன் 'இலங்கைச் சிறப்பிதழ் வெளியீடும் பிரதம ஆசிரியரின் 50 ஆண்டு கால கலை, இலக்கிய, ஊடகப் பயண விழாவும்

காலம்: **Sunday. May 29th, 2022**
**மாலை 5:30**

இடம்: **Metropolitan Centre**
**3840 Finch Avenue East**
**Scarborough, ON MIT 3TA**

வரவேற்புபசாரம்... உரைகள்... இசை மற்றும் நடனம்...







விழா பற்றிய விபரங்களுக்கு:

கதிர்: (416) 893-0399
சோதி: (647) 409-8966
வீணைமைந்தன்: (514) 684-3604
சங்கர்: (416) 270-4343
ஸ்ரீ: (416) 720-6811
மரியராசா: (416) 669-6437
சங்கர் சிவா: (647) 891-7725

(குறித்த நேரத்திற்கு விழா ஆரம்பமாகும்)

மீண்டும் தேர்வு செய்யுங்கள்

# VIJAY THANIGASALAM

ஸ்காபரோ றூஜ் பார்க்
MPP வேட்பாளர்



ELECTION DAY
RE-ELECT
JUNE
02
2022

1
2
3
4
5
6
7 VIJAY THANIGASALAM
PC Party of Ontario

ONTARIO PC

விஜயின் அணியில் இணைந்து
ஆதரிக்க அழையுங்கள்

vijaythani.ca info@vijaythani.ca 647-946-7761 362 Old Kingston Road

Authorized by the CFO for the Scarborough-Rouge Park PC Riding Association




ஈழத்துப் படைப்பாளிகளை மதித்து,
அவர்களை ஊக்குவிக்கும் வகையில்
“இலங்கைச் சிறப்பிதழை'த் தரும்
கனடா உதயன் பத்திரிகைக்கும்,
தனது படைப்பிலக்கிய
மற்றும் ஊடகத்துறைகள்
சார்ந்த பயணத்தில்
50வது ஆண்டை
பூர்த்தி செய்யும்
என் அன்பிற்குரிய
பிரதம ஆசிரியர்
ஆர்.என். லோகேந்திரலிங்கம்
அவர்களுக்கும் எனது
வாழ்த்துக்களைப் பகிர்ந்து
கொள்கின்றேன்



**வேந்தன் பேரின்பன்**
நிதி ஆலோசகர், காப்புறுதி முகவர்
(416) 731-2829












# DOLY BEGUM

## SCARBOROUGH SOUTHWEST

## Our Plan for a Stronger Scarborough

- Increasing Affordability and Lowering the Cost of Living
- Affordable Housing for All and Accessible Social Housing
- Safer Classrooms and Quality Childcare
- Better Healthcare for Scarborough
- Dignified and Culturally Appropriate Seniors' Care
- Protecting the Environment and Creating More Jobs
- A Better Transit System and Safer Roads
- A Strong and Fair Economy

Paid for and authorized by the CFO of the Doly Begum Campaign

ONTARIO NDP NPD

416-421-6066 www.dolybegum.com
info@dolybegum.com dolybegumssw
DolyforScarborough dolybegum
2279 Kingston Rd, Scarborough, ON M1N 1T8

# ஒலி அலைகளில் புதுயுகம்

yugam radio & TV

24 மணிநேரமும் உங்களுடன்



நிகழ்ச்சிகளில் பங்குகொள்ள: 416.455.4343, 647.450.4345

தொலைபேசியூடாக
நிகழ்ச்சிகளைக் கேட்க
416.623.8110
647.450.4345



இணையம்
www.yugamradio.com
www.webyugam.com

கணபதி ரவீந்திரன் 416 – 898 – 7284
Yugam Media Inc
2900 Markham Rd Unite U21, Toronto ON M1X 1E6
(Markham & McNicoll)
Tel: 416-297-5002

# வள்ளுவமாய் வாழும் "நட்பின் நாயகன்"
# ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

**(படைப்பிலக்கியம் மற்றும் பத்திரிகைத்துறை ஆகியவற்றில் கால்பதித்து, தனது பயணத்தின் 50 ஆண்டுகளைக் கடந்து, இவ்வாண்டு பொன்விழாக் காணும் அன்னார் பற்றிய எனது பார்வை)**

"தோன்றில் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று" என்றார் வள்ளுவர். புகழ் நம்மைத் தேடி வரவேண்டுமே தவிர நாம் புகழைத்தேடி அலையக்கூடாது.இன்று எம்மவர்கள் மத்தியில் புகழோடு வாழ்பவர்களில் ஒருவராக நண்பர் லோகேந்திரலிங்கம் திகழ்கிறார். இந்தப் புகழுக்கு அப்படி இவர் என்ன செய்தார் என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் உண்டு. அவரது அயராத அசராத கடின உழைப்பே காரணம். வள்ளுவப் பெருந்தகை அழகாக சொல்லுவார் "தெய்வத்தால் ஆகா தெனினும் முயற்சிதன் மெய் வருத்தக்கூலி தரும் " இவரது கடின உழைப்பு என்பது ஒருநாள் ஒருமாதம் ஒரு வருடம் என்பதல்ல. கனேடிய மண்ணிலே கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக உழைத்துவருகின்றார். முதல் மூன்று வருடங்கள் சூரியன் பத்திரிகையில் ஆரம்பித்த பயணம் பின்னர் உதயனில் தொடக்கி இன்றுவரை அவரது எழுத்துப்பணி தொடர்கிறது. இவரது உழைப்பு எப்படிப்பட்டது மெய்வருத்தம் பாரார்

பசிநோக்கார் கண் துஞ்சார்
எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார் - செவ்வி
அருமையும் பாரார் அவமதிப்பும் கொள்ளார்
கருமமே கண்ணாயினார்.

என்ற பாடலுக்கு ஒப்ப தன்னை வருத்தி ஊன் உறக்கமின்றி இந்தத் துறையில் உழைத்து வருகின்றார். இவர் ஒரு பிறவிக் கவிஞர. எழுத்து இவரது மூச்சு. எனவேதான் எழுத்தையே மூலதனமாகக் கொண்டு "எண்ணித் துணிக கருமம் துணிந்த பின் எண்ணுவம் என்பது இழுக்கு" என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு ஏற்ப மிகத் துணிச்சலோடு பணியாற்றி வருகின்றார். அதனால்த்தான் இவரைப்பற்றி எழுத முற்பட்ட போதே "வள்ளுவமாய் வாழும் நட்பின் நாயகன்" என்ற தலைப்பில் எழுத முற்பட்டேன்." "முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்" என்பதால்தான் இந்த எழுத்துப் பணியில் நிலைத்து நிற்கமுடிகிறது நிமிர்ந்து நிற்கமுடிகிறது. பொன்விழா காணவும் முடிகிறது. இவருக்கு கிடைக்கின்ற வாழ்த்துக்களும் பாராட்டுக்களும் இவரது உண்மையான உழைப்பிற்குக் கிடைத்த பரிசில்கள். ஒரு சிலருக்கு பாராட்டுக்கள் "விரகர் இருவர் புகழ்ந்திட வேண்டும்

விரல்கள்
நிறைய மோதிரங்கள் வேண்டும் - அரையதனில்

பஞ்சேனும் பட்டேனும் வேண்டும் அவர் கவிதை

நஞ்சேனும் வேம்வேம்பெனும் நன்று " என்று வாயாரப் புகழுவார்கள். ஆனால் திரு.லோகேந்திரலிங்கம் அவர்களுக்கான புகழ் வரவேற்பு என்பது அவரது கிடைக்கின்ற அங்கீகாரமாகவே பார்க்கப்படுகிறது. வள்ளுவப் பெருந்தகையின் குறளோடு இவர் வாழ்க்கை எவ்வாறு ஒத்துப்போகிறது என்று பாருங்கள்.

**மனைவி என்னும் மாதரசி**

நண்பர் லோகேந்திரலிங்கத்தின் இந்த அபரிமிதமான வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காலாகவும் காரணமாகவும் இருப்பவர் அவரது அருமைத்துணைவியார் சகோதரி பத்மா லோகேந்திரலிங்கம் என்றால் மிகையாகாது .வள்ளுவன் அழகாகச் சொல்லுவார். "மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை எனைமாட்சித் தாயினு மில்" இதன் பொருள் ஒருவர் எவ்வளவுதான் பேரும் புகழும் பெற்றிருந்தாலும் அவரது மனைவியிடம் இல் வாழ்க்கைக்கு ஏற்ற நற் பண்புகள் இல்லையென்றால் எவ்வளவு சிறப்புக்கள் இருந்தாலும் பயனில்லை. இதையே மூதுரையில் "ஔவையார் மிக அழகாகச் சொல்லுகின்றார்

இல்லாள் அகத்திருக்க இல்லாதது ஒன்றில்லை
இல்லாளும் இல்லாமே ஆமாயின் - இல்லாள்
வலிகிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்வில்
புலிக்கிடந்த தூறாய் விடும்"

எனவேதான் சிறந்த இல்லாளுக்கு ஏற்ப பல நற்குணங்களை கொண்ட சகோதரி பத்மா அவர்கள் தன் சிறந்த நற்குணங்களால் மட்டுமல்ல செயற்திறனால் ஆளுமையால் உதயன் பத்திரிக்கை ஒருவாரம் வரவில்லை என்ற குறையே இல்லாமல் அதனை அருமையாக நிருவகித்து வருகிறார். நண்பர் லோகேந்திரலிங்கம் அவர்கள் வேறு வேலை களுக்காக வெளியூர்களுக்கோ வெளிநாடுகளுக்கோ சென்றுவிட்டால் அவரது அத்தனை பணிகளையும் அப்பழுக்கின்றி செய்து முடிப்பார். அதுவுமின்றி இரவு வேளைகளில் தன் கணவருடன் வீட்டுக்கு வரும் நண்பர்களை உபசரித்து விருந்தோம்பல் செய்வதிலும் சகோதரி சிறந்து விளங்குகிறார். ஒரு சிறந்த தந்தைக்கு உரிய நற்பண்பை வள்ளுவன் மிக அழகாக பின்வருமாறு விளக்குகிறார் "தந்தை மகற்காற்று நன்றி அவையத்து முந்தி இருப்பச் செயல் " அந்தக்கடமையைக்கூட நண்பர் லோகன் மிகச் சிறப்பாக செய்து முடித்துள்ளார். முக்கனிகள்



போலும் தன் மூன்று பிள்ளைகளையும் கல்வி கேள்விகளில் சிறக்கவைத்து கற்றறிந்தோர் சபைகளிலிலே முன்னிருக்கத்தக்க வகையில் வளர்த்து ஆளாக்கியுள்ளார். இப்படிப்பட்ட தந்தைக்கு பிள்ளைகள் என்ன கைம்மாறு செய்ய வேண்டுமெனவும் கூறியுள்ளார். வள்ளுவர்

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை

என்நோற்றான் கொல்என்னும் சொல்" இப்படிப்பட்ட அருமையான பிள்ளைகளைப் பெற இவர்களின் பெற்றோர்கள் என்ன தவம் செய்திருக்க வேண்டும் என மற்றவர்கள் வியந்து பாராட்டத்தக்கதாக வாழவேண்டுமாம். அப்படியான ஒரு உன்னதமான வாழ்க்கையை பிள்ளைகள் வாழவேண்டுமாம். முக்கனி போலும் பிள்ளைகள் மூவரைப் பெற்றெடுத்து அவர்கள் இன்று எமது சமூகத்தில் உன்னதமான வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக அவரது அன்புப புதல்விகள் யாழினி மற்றும் ஜனனி ஆகியோர், உதயன் பத்திரிகையின் வடிவமைப்பில் இருந்து பக்கங்கள் தயாரிப்பதுவரை மிகப்பெரும் பங்காற்றிவருகின்றார்கள்.

**வேற்று இன மக்களாலும் விரும்பபடுபவர்.**

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் இவருக்கு "நட்பின் நாயகன்" என பட்டம் சூட்டியிருந்தார். இந்தப் பட்டத்திற்கு மிகப்பொருத்தமானவர் திரு. லோகன் அவர்கள். கனேடிய அரசியலில் மாற்றின அரசியல் பிரமுகர்களினாலும் பெரிதும் மதிக்கப்படுபவர் மத்திய பாராளுமன்றத்தை ஆட்சி செய்யும் எந்தக் கட்சியை சேர்ந்த பிரதம மந்திரியாக இருந்தாலும் அமைச்சர்களாக இருந்தாலும் அதே போன்று மாகாண பாராளுமன்ற உறுப்பினர்கள் அமைச்சர்கள் மாகாண முதல்வர்கள் ஆகியோரின் நட்பையும் நன் மதிப்பைப்பெற்று வாழ்ந்துவருகின்றார். எடுத்துக்காட்டாக முதியோர் அமைச்சர் ரேமன் சோ கல்வி அமைச்சர் ஸ்டிபன் லட்சே போன்றவர்கலின் பேரன்பை பெற்றவர்.

**மொழியாளுமை**

ஒரு ஊடகவியலாளருக்கு இருக்கவேண்டிய மிகப்பெரிய தகமையாக கருதப்படுவது சொல்லாட்சி சொல்வளம் புதிய சொற்தொடர்களை பயன் படுத்தும் முறை இவற்றில் கைதேர்ந்தவர் திரு. லோகன் அவர்கள் அதுவுமன்றி எழுத்துப்பிழை என்பது பத்திரிகையில் வந்துவிடக்கூடாது என்பதற்காகவே ஒரு தனியான புருரீடர்களை வைத்திருப்பார்கள். ஆனால் உதயன் பத்திரிகையில் இத்தனையாண்டு காலம் எழுத்துப் பிழையில்லாமல் வெளிவருகின்றது என்றால் அதற்கு காரணம் முழுக்க முழுக்க லோகன் அவர்கள்தான். முற்றுப்புள்ளி கம போன்ற ஒரு சின்னவிடயத்தைக்கூட மிகக் கவனமாக கையாளும் ஆற்றல் வாய்ந்தவர். இங்குள்ள பலநாட்டு வர்த்தக பிரமுகர்கள் தொழில் அதிபர்கள் ஆகியோரின் நட்பும் இவருக்குண்டு. இதேவேளை தமிழில் எப்படி ஆளுமைமையும் சொல்லாட்சியும் இருக்கிறதோ அதே போன்று ஆங்கிலத்திலும் புலமை மிக்கவராக இருக்கிறார். நான் பலதடவை அவரது காரியாலயத்திற்கு சென்று பேசிக்கொண்டு இருக்கும் போது தொலைபேசியில் பேசிக்கொண்டே ஆங்கிலத்தில் சில கட்டுரைகளை தட்டச்சில் அவர் பதிவுசெய்கின்ற வேகம் என்னை வியக்கவைக்கும். இரண்டு மொழிகளையும் கையாளுவதில் கை தேர்ந்தவராகவும் இருக்கின்றார்.



**கணபதி ரவீந்திரன்**

**கலைப்பாலம்**

உதயன் பத்திரிக்கை ஆரம்பிக்கப்பட்ட இந்த இருபத்தியாறு ஆண்டுகளில் உதயன் விழாவை பலவாண்டுகள் மிகச் சிறப்பாக நடாத்தி வந்திருக்கிறார். இந்த விழாவின் ஊடாக இலங்கை இந்தியா மடுமன்றி தமிழர்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்தும் கூட பல கலைஞர்களையும் கல்விமான்களையும் அழைத்து வந்து இங்குள்ளவர்களோடு பழகும் வாய்ப்பை வழங்கி வந்திருக்கின்றார். V + L கவிப்பேரரசு வைரமுத்து மனோரமா ஆச்சி பல நடிகர்கள் நடிகைகளை அழைத்துவந்திருக்கின்றார். இலங்கையில் இருந்து பிரபல எழுத்தாளர்களான திரு திருமதி பத்மா சோமகாந்தன் போன்றவர்களையும் அழைத்துவந்திருக்கிறார். இத்தகைய செயல்களின் மூலம் எமக்கொரு கலைப்பாலமாகவே திகழ்ந்து வருகின்றார்

**ஓடி ஓடி உழைக்கனும் ஊருக்கெல்லாம் கொடுக்கனும்**

யாரை நாங்கள் வாழ்ந்தவர்கள் என்று சொல்லுகிறோம் என்றால் யார் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கிறார்களோ அவர்களே வாழ்ந்தவர்கள் ஆகிறார்கள். விவேகசிந்தாமணியில் அருமையான ஒரு பாடல் சொல்லும்

"ஆபத்துக் குதவாப் பிள்ளை அரும்பசிக் குதவா அன்னம் தாபத்தைத் தீராத் தண்ணீர் தரித்திரம் அறியாப் பெண்டிர் கோபத்தை அடக்கா வேந்தன் குருமொழி கொள்ளாச் சீடன் பாபத்தை தீராத் தீர்த்தம் பயனிலை ஏழும் தானே" இவ்வாறு பயனில்லாத வாழ்க்கையை பலவாண்டுகள் வாழ்வதைவிட தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைப்பவர்களே வாழ்ந்தவர்கள் ஆகிறார்கள் அந்த வகையில் நண்பர் லோகன் அவர்களும் வாழ்வாங்கு வாழ்பவராக இருக்கிறார். ஒருவன் எப்படிப்பட்டவன் என்பதை அவனது நண்பர்களில் இருந்து அறிந்து கொள்" என்றொரு பழமொழி உண்டு. நண்பர் லோகனுடைய நண்பர்கள் எல்லாம்

"உடுக்கை இழந்தவன் கை போல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு " என்ற வகையில்

நண்பர் லோகேந்திரலிங்கம் அவர்கள் எடுக்கின்ற எந்த முயற்சிகளுக்கும் அவருக்கு தோளோடு தோள் நிற்கிறார்கள். உதவும் கரங்கள் ஊடாக ஈழத்தில் வாழும் எம்மவர்களுக்கு பலவழிகளிலும் நற்பணியாற்றி வருகிறார்கள் ஏழைப்பிள்ளைகளுக்கு புத்தகங்கள் கொப்பிகள் உணவுப்பொருட்கள் என காலமறிந்து பணியாற்றி வருகின்றார்.

எல்லாவற்றிக்கும் மேலாய் பெரும்

(.....28.....ம் பக்கம் பார்க்க)

(..27...ம் பக்கம் பார்க்க)

## வள்ளுவமாய் வாழும் "நட்பின் நாயகன்"

## ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

பொருட்செலவில் தனது கனடிய நண்பர்கள் சங்கர் நல்லதம்பி, மரியராசா. பாஸ்டர் சோதி.வி.எஸ். துரைராஜா. யோகராஜா அண்ணர் சங்கர் சிவநாதன், குமார் தம்பியப்பா, சிவா கணபதிப்பிள்ளை, விசு கணபதிப்பிள்ளை கிருஸ்ணா ஆகியோர் சேர்ந்தியங்கும் "ரொறன்ரோவின் மனித நேயக் குரல்" அமைப்பின் ஊடாக கிளிநொச்சி மக்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர் ஸ்ரீதரன் சிவஞானம் அவர்களின் வேண்டுகோளிற்கு ஏற்ப அம்புலன்ஸ் வண்டியைக்கூட கொள்வனவு செய்ய பக்கபலமாக இருந்துள்ளார்.

"ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது ஊதியம் இல்லை உயிர்க்கு" என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கு ஏற்ப பலவறிய குழந்தைகளுக்கும் பாதிக்கப்பட்ட பலருக்கும் பலவழிகளிலும் உதவி வருகின்றார்.

இந்தியாவில் இருந்து வெளிவரும் "நந்தவனம்" என்ற சஞ்சிகையை கனடாவில் வெளியிடும் பொறுப்பையும் எடுத்துக்கொண்டு இலைமறை காயாக இருக்கும் பலரை வெளியுலகத்திற்கு வெளிச்சம் போட்டுக்காட்டியுள்ளார். பல்வேறு நாடுகளில் இருக்கும் பலருக்கு விருதுகள் கிடைப்பதற்கும் இவரே காரணமாகவும் இருந்திருக்கிறார்.

**நானும் நட்பின் நாயகனும்**

நண்பர் R.N.லோகேந்திரலிங்கம் அவர்களை கனடாவில் மட்டுமல்ல ஊரிலேயே நான் நன்கறிவேன். மின்சார பொறியியலாளராக இருந்தவர். அப்போதே கவியாற்றும் வல்லமையும் அவருக்கிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் என் நினைவில் வருகின்ற ஒரு நகைச்சுவை சம்பவம் என்னுடைய இன்னும் ஒரு நண்பர் பொன்.குலேந்திரன் யாழ்ப்பாணத்தில் ஒரு கவியரங்கை நடத்தியிருந்தார். அதில் நண்பர் லோகனும் பங்கேற்றிருந்தார். லோகனை அழைக்கும் போது குலேந்திரன்

''போலி" லோகேந்திரலிங்கம் என்று அழைத்திருந்தார். சபையோர் சிரித்துவிட்டார்கள். அதற்கு குலேந்திரன் விளக்கம் சொன்னார். லோகன் போலி என்றொரு சிறுகதையை எழுதியிருந்தார். அதனால்த்தான் அப்படி அழைத்தேன் என்றார். என்னுடைய வாழ்க்கையில் பல நல்ல காரியங்கள் நடந்திருக்கிறது என்றால் அது கனடாவில் நண்பர் லோகனாலேயே நடந்திருக்கிறது. ஒன்று நான் கனடாவில் முதல் முதலாக பெற்ற தங்கப்பதக்கம் அவர் நடத்திய கவிதைப் போட்டிக்கு எனக்கு கிடைத்தது. அதை இன்றும் என் கழுத்தில் சுமந்துவருகின்றேன். இரண்டாவது நான் சிறுவனாக இருந்தபோது யாரவது உனக்கு பிடித்த நடிகையார் எனக்கேட்டால் சற்றும் தயங்காமல் மனோரமா (ஆச்சி) என்று சொல்லுவேன்.

எனக்கு மிகப்பெரும் கனவாக இருந்தது நான் வாழ்வில் ஒருமுறையாவது நடிகை மனோரமாவை பார்த்துவிடமாட்டேனா என்ற ஏக்கம் எப்போதும் எனக்கு இருந்தது. அந்தக் கனவை நனவாக்கியவர் லோகன் அவர்கள் அவரது உதயன் விழாவிற்கு பிரதம விருந்தினராக மனோரமா கலந்துகொண்டார். அவரை அந்தமேடையில் நேரடியாக பார்த்தது மட்டுமன்றி அவருக்கு முன்னாலேயே நடிக்கின்ற வாய்ப்பையும் தந்தவர் லோகன் அவர்கள். மனோரமா ஆச்சி வெறும் நடிகை மட்டுமல்ல ஒரு வரலாறு. மூன்று தசாப்தங்களாக மூன்று முதலமைச்சர்களோடு நடித்த பெருமைக்கு உரியவர். அவர் என்னை வாயாரப் புகழ்ந்து பாராட்டினார்.இது என்வாழ்நாளில் மறக்க முடியாத பொன் எழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாள்.மூன்றாவது கனடாவுக்கு வெறும் கணபதிப்பிள்ளை திரு ரவீந்திரநாதனாக வந்த என்னை "கணபதி ரவீந்திரன்" ஆக மாற்றிய பெருமை கீதவாணி EAST FM அதிபர் திரு.நாடா ராஜ்குமாரைச் சாரும்.

அதேவேளை இந்த மண்ணுக்கு என்னை ஒரு நாடக கலைஞனாக அறிமுகம் செய்துவைத்த பெருமை நண்பர் லோகேந்திரலிங்கம் அவர்களையே சேரும். இன்று எனக்கு கலைவேந்தன் கலைஞானி கலைமுரசு என்று பல பட்டங்கள் பாராட்டுக்கள் கிடைத்திருக்கிறது என்றால் அவை அத்தனைக்கும் அவர் தனது இரண்டாவது உதயன் விழாவில் ஒரு பத்து நிமிடம் நண்பர் சுப்பிரமணியம் சுந்தரேஸ்வரனின் "சிதம்பர சக்கரம்" நாடகத்தில் நடிக்க அளித்த வாய்ப்பே காரணம். இன்று தன்னுடைய எழுத்துப்பணியில் பொன்விழாவை காணும் நண்பருக்கு இத்தகைய ஒரு கட்டுரையை எழுத வாய்ப்பளித்த இறையருளுக்கும் நண்பர் லோகனுக்கும் நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

# உயிர்கொடுத்த கனடா தேசம்



செங்குருதி பாய்ந்த முள்ளிவாய்க்கால்
வடதிசையில்
சங்கக் கடைக்கருகில் தங்கக்
குழந்தையானேன் நான்
வங்கக் கடலினிலே தன் தொழிலாம்
மீனவராய்
வங்கிக் கடனெடுத்துத் தந்தை படிக்க
வைத்தார் கலாசாலையிலே

பகுடி வதையுற்ற காலத்தில் படித்ததினால்
பட்டதாரியானேன்
விடுதி நாண்பரிடம் விடைபெற்றுப்
பெற்றோரை வணங்கி நின்றேன்
ஈன்று புறம் தந்தாள் என் இனியதாய்
அன்று
சான்றோனாக்கினார் என் அன்புத்
தந்தை இன்று

அன்னையுடன் அடுப்படியில்
சோறுண்ட நேரத்தில்
அடுக்கடுக்காய் அயல்வீட்டில்
வெடிதீர்க்க
என்னையும் தன்கைப்பையுடனே
இழுத்துச் சென்று
தன்னையும் பங்கருக்குள் 'பாது
காத்தாள் தெய்வத்தாய்'

தன் கழுத்துத் தாலியையே பல
தடவை தடவிய தாய்
சன்னங்கள் பாயுதடா சரிந்து
படு தன்மடியிலென்றாள்
யாதும் ஊரே யாவரும் கேளீர்
என்ற வாசகம்
தாரக மந்திரமாய்த் தலை
நிமிர வைத்ததென்னை

பாசத்தின் சின்னமாக என் தந்தை
கட்டிய தாலியினை
நாசத்தைத் தவிர்ப்பதற்கு 'ஏஜென்சிப்'
பணம் கொடுக்க விற்றுவிட்டாள்
கண்கலங்கிய தந்தையை 'உன்மகனுக்கு'
என மகிழச்செய்தாள்
மண்மகளாள் மகனின் உயிருக்காகத்
தாலியையே தானம் செய்தாள்

வைகறையில் அனுப்பி வைத்தாள்
என்னைக் 'கனடா' தேசத்திற்கு
'கைகொடுத்த கனடாவில் மெய்வருந்தி
உழைத்தேன் தாயின் தாலிக்காக
'பை' நிறையப் பணம் பெற்றுக் கவனமாகச்
செலவு செய்து
'தை' பிறக்கப் பெருந்தொகையை
அனுப்பிவைத்தேன்
என் தெய்வத்திற்கு

அகம்குளிர்ந்த என் தாயாள்
அனுப்பி வைத்த கடிதத்தால்
சுகம்கண்டேன் எனி என் தாயகம்
'கனடா'வென்று
பலம்கொண்டே ஜேர்மனியும் அயல்
நாட்டின் தமிழ்நாடும்
புலம்பெயர்ந்த மக்களுக்குப்
புகலிடம் தந்தனவே.

நல்லிணக்க மூலமாக நலன்விரும்பித்
தாபனங்கள்
பல்லின மக்கள் வாழும் ஸ்ரீலங்கா
நாட்டினிலே
கல்விமான்கள் உதவியுடன்
நல்லிணக்கம் காண்பதற்குச்
சொல்லரிய ஒற்றுமையால் பல
முயற்சிகள் காண்கின்றார்

அகதிகளாய் புலம்சிதறி அளவற்ற
துன்பத்தில்
அபலைகளாய் அலைந்திட்ட
இனத்தினரை
அரவணைக்கும் நல்நாடுகளின்
அரச முயற்சிகள்
பரபரப்பாய் இன்றும் தொடர்கிறதே
முடிவில்லாத முடிவுகளாய்

சிறுபான்மை இனத்தவரின் வாழ்வாதாரம்
பெரும்பான்மை இனத்தவரின் அரவணைப்பில்
இனவாதமற்ற ஒரு இலங்காபுரியைப்
புனருத்தானம் செய்யப்
புலம்பெயர்ந்தோர் ஒன்று சேர்ந்து
புதுவழியைக் கண்டு
நிலஉரிமை தொட்டு இனஉரிமையும்
பெற்று வாழ்வோமாக!

பல்லினச் சமூகத்தில் பலருடன்
பாசம் காட்டி
மெல்லெனவே நம்நாட்டு
அரசியலில் மாற்றம் கண்டு
புல்லுரிவிகளை இனங்கண்டு
அகற்றிச்
சொல்லரிய ஒற்றுமை உருவாக்கி
நல்லிணக்கம் காண்போமே நாம்!

சிறுவயதில் ஓடி விளையாடிப் பருவத்தை எட்டாத
என் மைத்துனியை
மறுபிறப்பில்தான் எனிக் காண்பேனோ
எனவருந்திய எனக்கு
முறுவலிக்கும் தாய்தன் மருகியை 'ஸ்பொன்சரில்'
பொறுப்பேற்க இட்டகட்டளைக்கு
மறுப்பேனோ உன்பணி எனத் தாய்க்கிட்ட
சரணம் என் மைத்துனிக்கு ஆபரணமானதே

தரணியெல்லாம் புலம்பெயர்ந்த தமிழர்களின்
வாழ்த்துடனே
ஆரணிக்கும் எனக்கும் 'கனடா'தேசத்தில் திருமணம்
நடந்தேறியதால்
பரணியும் யாழினியும் என் குழந்தைகளாய்
'கனடாப்'பிரஜைகளானார்கள்
காரணிகள் எதுவானாலும் கருணை உள்ளங்கள்
என்றும் தெய்வங்களே

பொன்தாலிவிற்று என்னைத் தப்பவைத்த
தெய்வத்தை
தன்மகன் என்னை மீனவத் தொழிலால்
வாழவைத்த தந்தையை
தனியனாத்தவிக்க விடாது ஆசையுடன்
கைகோர்த்த ஆரணியை
கனிவான பரணியை மகள் யாழினியை
ஈரநெஞ்சம் என்றும் மறக்காதே.

**- சரவணமுத்து**
வெள்ளவத்தை.

# ஈழத்தமிழர்களுக்கான அரசியல் தோழமையினை தமிழக அரசிடம் எதிர்பார்க்கின்றோம்!



## நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் அரசவை தீர்மானம்

இலங்கை மக்களுக்கான தமிழக அரசின் மனிதாபிமான நிவாரண உதவிகள் தொடர்பில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் அரசவை தீர்மானம் நிறைவேற்றியுள்ளதோடு, நா.தமிழீழ அரசாங்கத்தின் கனேடிய உறுப்பினர் திரு.நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டு அரசாங்கத்தின் மனிதாபிமான நிவாரண உதவிகள், ஈழத்தமிழ் மக்களை சென்றடைவதை, தமிழக அரசு நேரடியாக கண்காணித்து உறுதிப்படுத்த வேண்டும் என கோரியுள்ள இத்தீர்மானம், ஈழத்தமிழர்களின் நீதிக்கும் அரசியல் இறைமைக்குமான அரசியல் தோழமையினையும் தமிழக அரசிடம் இருந்து ஈழத்தமிழர்கள் எதிர்பார்ப்பதாக கோரியுள்ளது.

சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணியாக இருக்கின்ற இராணுவச் செலவீனங்களின் அடிப்படையில் தமிழர் தாயகப்பகுதிகளில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினை வெளியேற்ற தமிழ்நாடு அரசு, இந்த வேளையில் வலியுறுத்த வேண்டும் என்பதனையும் எதிர்பார்ப்பதாக தீர்மானம் கோரியுள்ளது.

கடந்த மே21-22 ஆகிய நாட்கள் இடம்பெற்றிருந்த நா.தமிழீழ அரசாங்கத்தின் அசரவையில் உறுப்பினர் திரு நிமால் விநாயகமூர்த்தி அவர்களால முன்மொழியபட்டு, அரசவையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் முழுவிபரம்:

தமிழ்நாட்டுக்கும் ஈழத்தமிழர் தேசத்துக்குமான உறவு என்பது உணர்வுபூர்வமானது. அது தொப்புள்கொடி உறவு. நிலத்தால் வேறுபட்டிருந்தாலும், உணர்வால், கலாசாரத்தால் பிரிக்கவியலாத ஒரு இனமாகும். ஈழத் தமிழர்களுக்கான நீதிக்கும் அரசியல் இறைமைக்கும் செயல்வடிவம் கொடுப்பதில் இந்திய அரசின் பங்களிப்பு முக்கியமானதொன்றாகும் தங்கியிருக்கின்றது. இதற்கான திறவுகோல் எப்போதும் தமிழ்நாடாகவே இருக்கின்றது. இது வரலாறு முழுவதும் நிருபிக்கப்பட்டுவரும் உண்மையாகும்.

ஈழத்தமிழ் மக்கள் பாதிக்கப்படும் போதும், எமக்காக குரல் கொடுக்கும், எமக்குதவும் முதல் கரமாக, தமிழ்நாடே இருக்கின்றது. இந்த பின்புலத்தில்தான், மாண்புமிகு முதலமைச்சர், மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தமிழக அரசு, இலங்கைதீவின் வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிக்குள் சிக்கியிருக்கும் ஈழத்தமிழர் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதை, ஈழத்தமிழர்களாகிய நாம் வரவேற்று மகிழ்கின்றோம். இது தொடர்பில், ஏற்கனவே, நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர். உருத்திரகுமாரன் அவர்கள், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின், மனிதபிமான நிவாரண உதவி முயற்சியை வரவேற்றிருந்ததோடு, சிங்கள அரசாங்கங்கள் எவையும் தமிழ்மக்களை பாரபட்டசமின்றி நீதியாக நடத்தப் போவதில்லை. இந் நெருக்கடியில் இருந்து மீள்வதற்கான வழிமுறைகளிலும் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுவார்கள். இந்நிலையில் நேரடி உதவிப்பொறிமுறையொன்றினை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களே தலைமை தாங்கி உருவாக்குமாறும் கோரியிருந்ததர் என்பதனையும் இந்த சந்தர்பத்தில் மீண்டுமொருமுறை சுட்டிக்காட்டுகின்றது.

இதேவேளை ஈழத்தமிழர்களின் நீதிக்கும் அரசியல் இறைமைக்குமான அரசியல் தோழமையினையும் நாம் இவ்வேளையில் எதிர்பார்கின்றது.

**தீர்மானம்:**

1. நாடுகடந்த தமிழீழ அரசாங்கமானது, இலங்கைத்தீவில் தமிழர்களுக்கான அரசியல் வெளி முழுமையாக இல்லாத நிலையிலும், புலம்பெயர் ஈழத்தழர்களுக்கான தேசக்கட்டுமானமாகவும் ஈழத்தமிழர் தேசத்தின் அரசியல் பெருவிருப்பினை இலங்கைத்தீவுக்கு வெளியே சர்வதேச அரசியல் வெளியில் வெளிப்படுத்தும் ஜனநாயக போராட்ட வடிவம் என்னும் வகையில், மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் முன்னெடுக்கப்படும், நலிவுற்ற இலங்கை மக்களுக்கான, மனிதாபிமான நிவாரண உதவியை வரவேற்பதுடன், அதற்கான ஆதரவையும் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் தோழமையினை வெளிப்படுத்தும் வகையில் நிதியுதவியையும் வழங்கும்.

2. தமிழ்நாட்டு அரசாங்கத்தின் இந்த மனிதாபிமான நிவாரண உதவிகள், தமிழர் தாயகத்தின் நலிவுற்ற எமது உறவுகளை சென்றடைவதை, தமிழக அரசு நேரடியாக கண்காணித்து உறுதிப்படுத்த வேண்டும் என்பதனையும் வேண்டுகின்றது.

3. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள 1.4ம் சரத்தில் குறிப்பிட்டவாறு, இலங்கைத்தீவின் வடக்கு-கிழக்கு பகுதி தமிழர்களின் தாயகம் என்பதனை உறுதிசெய்தே, சிறிலங்காவுக்கான உதவிகள் வழங்கப்பட வேண்டும் என்பதோடு, சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணியாக இருக்கின்ற இராணுவச் செலவீனங்களின் அடிப்படையில் தமிழர் தாயகப்பகுதிகளில் இருந்து சிறிலங்கா இராணுவத்தினை வெளியேற்ற தமிழ்நாடு அரசு, இந்த வேளையில் வலியுறுத்த வேண்டும் என்பதனையும் எதிர்பார்கின்றது.

4. மேலும், உலகெங்கும் பரந்துவாழும் உலகத்தமிழ் உறவுகள், மாண்புமிகு, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் முன்னெடுக்கப்படும் இலங்கை மக்களுக்கான மனிதாபிமான நிவாரண திட்டத்திற்கு தாராளமாக உதவிகளை வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றது என தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உதயனை உச்சம் தொடவைத்த "எடிற்றர்"



ஐம்பது ஆண்டுகால கலை, இலக்கிய, ஊடகப் பயணவிழாக் காணும் "உதயன்" ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் நட்புணர்வு பொங்கித்ததும்ப இந்நாளில் வாழ்த்து மலர்களை எந்தன் கரங்களால் அள்ளிச் சொரிகிறேன்.

இரண்டு தசாப்த காலத்திற்கு முன்னர் கனேடிய நீரோட்டத்தில் இறங்க நான் திக்குமுக்காடிய வேளையில் எந்தவிதமான பிடிமானமும் இல்லாத ஒரு மனோநிலையில் சலிப்புடன் இருந்தேன். "சும்மா இருத்தல் தகாது, ஏதாவது எழுதுங்கள்" என என் அறிவார்ந்த நண்பர் ரஞ்சன் பிரான்சிஸ் அவர்கள் எனக்கு ஆலோசனை கூறினார்கள். "மலையில் படிந்த முகில்கள் அருவியாகக் கொட்டுவது போல் உங்கள் மனதில் பதிந்த நினைவுகள் பிரவகிக்கும்" என ஊக்கமும் கொடுத்தார் அவர்.

என்ன எழுதலாம், ஏது எழுதலாம், ஏதாவது எழுதினால் அதை யார் பிரசுரிப்பார்கள் என்ற யோசனை வேறு. இலங்கையில் என்றால் பத்திரிகையாளர்கள் எல்லோரும் எனக்குப் பழக்கமானவர்கள்.

அந்தக் கட்டத்தில் கலாபம் ஸ்ரீனிவாசனின் வீட்டில் என்னைக் கண்ட லோகேந்திரலிங்கம், "நண்பரே எழுதுங்கள் - எழுதுங்கள். பிரசுரிக்க நான் இருக்கிறேன்" என்று என்னை உற்சாகப்படுத்தினார். எனக்கு ரஞ்சன் பிரான்சிஸ் கொடுத்த ஆக்கபூர்வமான ஆலோசனையை செயற்படுத்த லோகேந்திரலிங்கம் கொடுத்த ஊக்கத்துக்கு கனடாவில் இதுவரை மூன்று நூல்களை எழுதி வெளியிட்ட நான் இந்த வேளையில் நன்றி சொல்கிறேன்.

பல்லாயிரக்கணக்கான அன்பு நேயர்களைப் பிரிந்துவந்த நான் கனேடிய தொலைக்காட்சியில் தோற்றம் காட்ட முன்னரே இரண்டாவது தாயகத்தில் எனக்கென்று ஒரு முகத்தையும், அடையாளத்தையும், உறவுகளையும் "பொன் இல்லா இடத்தில் பூப்போல்" உதயம் பெற வைத்தது உதயனே.

ஊடக உலகில் தேடல் செய்வதில் உதயன் லோகேந்திரலிங்கம் மகா சமர்த்தர்.

திரும்பிப் பார்க்கிறேன். 1970களின் முதற்கூறு.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன ஐந்தாம் இலக்கப் பெரிய கலையகம். ஒலிபரப்பில் என்னை யாரென்று அடையாளப்படுத்திய "சங்கநாதம்" நிகழ்ச்சி ஒலிப்பதிவு. கொழும்பு பல்கலைக்கழகம், சட்டக்கல்லூரி மற்றும் உயர் பாடசாலை இளைஞர், யுவதிகள் மத்தியில் உணர்ச்சியலைகள் வீசுகின்ற முகத்தினனாய் ஒரு கவிஞனைக் கண்டேன்.

**"இளைய ஈழமே எழுந்திடாய்**
**உன் இதயகீதமாய் மொழிந்திடாய்**
**எங்கள் நாடிதிது, பொங்கும் வாழ்வினை**
**சங்கநாதமாய் ஒலித்திடாய்"**

என்ற அங்கையன் கைலாசநாதன் வரிகளில் எம். ஏ. குலசீலநாதனின் எழுச்சிமிகு குறியிசைப் பாடலோடு ஒலிக்கும் சங்கநாதத்தில் குரல் கொடுக்க வந்த அந்த கெம்பீரமான இளங் கவிஞன் நண்பர் லோகேந்திரலிங்கமே. சங்கநாதத்தில் நானும், பங்குபற்றுபவர்களும் நண்பர்கள் என்ற அந்தஸ்திலேயே பழகி வந்தோம். வானலைகளில் நேயர்களைக்கூட நான் சந்திக்கையில் "வணக்கம் நண்பர்களே" என்றே தொடங்குவேன். அன்று நண்பராய் சந்தித்த லோகேந்திரலிங்கத்தை "நட்பின் நாயகராக" கவிப்பேரரசு வைரமுத்து கனடாவில் விருது கொடுத்து மதிப்பளித்தார். தாயகத்தில் சங்கநாதம் தந்த நட்பு இடையே பல்லாண்டுகள் துண்டிக்கப்பட்டிருந்தாலும் உதயன் அதை இரண்டாவது தாயகத்தில் ஒட்டவைத்தமை பெரிதே.

லோகேந்திரலிங்கத்தை "எடிற்றர்" என கூப்பிடுவான் மதி. மதியை "டிரக்டர்" என அழைப்பார் அவர். ஆனந்தம் அங்கு அலைமோதும்.

ஐம்பது ஆண்டுகால நண்பரே! புலம்பெயர்ந்த நாட்டில் ஊடக வாழ்க்கையைத் தேர்ந்தீர். ஊடகத்துறைக்கே உரித்தான போட்டிகள், பொறாமைகள், உள்குத்துகள் போன்றவற்றை சமாளித்து தயங்காத, தியங்காத மதிநுட்பத்துடன் அன்புத் துணைவியின் உறுதுணையோடு இயங்கி உதயனை உச்சம் பெறவைத்த நிந்தன் சுயமான ஆற்றலை போற்றி செய்கிறேன்.

உதயன், ஊடகச் சமநிலையை பேணிவரவேண்டுமென்ற விசேட வேண்டுகோளை இன்றைய நாளில் விடுக்கின்றேன்.

என்னை பல சந்தர்பங்களில் மகிழ்வித்த உதயன் பொன்விழாவை சந்திக்கும் வேளையிலும் நான் வாழ்த்தியாக வேண்டும் என்று சிந்திக்கின்றது என் உள்ளம்.

**"தமிழ்மணி வி. என். மதிஅழகன்**
**Deputy Director General (Former)**
**Sri Lanka Broadcasting Corporation**

பாலசிங்கம் சேர், ஆட்டோ மயூரன் வீட்டு வாசலில் நின்று சத்தமிட்டுக் கொண்டிருந்தார். காலை 6.00 மணியிருக்கும். கண்களைக் கசக்கியப் படி மயூரன் படலையைத் திறந்துக்கொண்டு வெளியே ஓடி வந்தான். பாலசிங்கம் சேர் எங்கேயோ அவசரப் பயணம் போவதுபோல் மயூரன் காதில் குசு குசுத்தார். அவரது அவசரமும் குசு குசுப்பும் சொந்த விவகாரம் பற்றியதாகத் தெரியவில்லை... மயூரன் சாரத்தைக் கழற்றி உதறி விட்டு, முக்கால் கால் சட்டையை மாற்றிக்கொண்டு ஆட்டோவை இழுத்தான்.

இன்று விடியற் காலையில்தான் அந்த விபத்து நடந்ததாம்...அந்த ரயில் கடவையில் ராணுவ வாகனமும் ரயிலும் மோதிக் கொண்டனவாம்... ஒழுங்கான தகவல் சொல்வதென்றால் ராணுவ வண்டிதான் ரயிலுடன் மோதியுள்ளது என்று சொல்லலாம்.

"ரயில் கடவையில் ராங்கித்தனம் காட்டினா..இதுதான் நடக்கும்..! ஒரு காலமும் கோச்சிக்காரன் மேல் விசாரணை கிடையாது!" பாலசிங்கம் சேர் எரிச்சலோடு முணு முணுத்துக் கொண்டிருந்தார்.

அரை கிலோ மீட்டர் தூரம் அந்த வாகனத்தை ரயில் என்ஞ்சின் இழுத்துச் சென்றுள்ளது. சப்பையாக்கப்பட்ட ஒரு பியர் டின்னைப் போல அந்தப் பெரிய வாகனத்தின் தகரக் கூடு ஒட்டிக் கிடந்தது.! ஊர் மக்கள் ஆண்களும், பெண்களுமாய் கூடி வாகனத்திலிருந்தவர்களை வெளியில் எடுப்பதற்கு பிரயத்தனப்பட்டுக் கொண்டிருந்தார்கள். அலவாங்கு, இரும்புக் கம்பிகள்...தடிகள் கொண்டு கதவுகளை நெம்பி ஒவ்வொருவராக வெளியில் எடுத்தார்கள்...

அந்த வாகனத்திலிருந்து பத்து உடல்களைத்தான் வெளியில் எடுக்க முடிந்தது. இன்னும் வாகனத்துக்குள்ளே சிலர் இருக்கலாம். இரத்தம் வடிய வடிய... சில உடல்கள் வலை மீன்களைப் போல துடிப்பதைக் காண முடிந்தது. அங்கு உடல்களைத் தூக்கி சுமந்து அந்த டிப்பர் வாகனத்தில் போட்டுக் கொண்டிருந்தவர்கள்... எல்லோரும் பெண்களேயாவர். அவர்கள் இரத்தத்தில் தோய்ந்திருந்தார்கள்...ஆண்கள் வாகனத்தை நெம்பிக் கொண்டிருந்தார்கள். அந்த ரயில் கொழும்புக்குப் போய்க் கொண்டிருந்த பயணயாகும். நூற்றுக் கணக்கான பிரயாணிகள் செய்வதறியாது மிரண்ட நிலையில் பார்த்துக் கொண்டிருக்க, சில பிரயாணிகள் வாகனத்திலிருந்தவர்களை வெளியில் எடுப்பதில் பெரும் பங்காற்றிக் கொண்டிருந்தனர்.

உயிர் பிரிந்துக் கிடக்கும் உடல்கள்... இரத்தம் கசிந்தோட... துடித்துக் கொண்டிருக்கும் உடல்கள்.. ஓடி ஓடி உடல்களைச் சுமந்து டிப்பர் வண்டியில் வைக்கும் காட்சிகள்... அவை எல்லாமே யுத்தக் காலத்துச் சம்பவங்களை நினைவூட்டிக் கொண்டிருந்தன.

பாலசிங்கம் சேர் கல்லாய், மரமாய், ஆடாது, அசையாது, கண் சிமிட்டாது வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தார்.! அவரது முகத்திலும், உடலிலும் எது வித பதட்ட உணர்வுகளும் தென்பட வில்லை. "என்ன மனுசன்..! மரக்கட்டை மாதிரி...! முகத்தில் புன்னகை வேறு...!" விடியற்காலையிலேயே ஆட்டோ பிடித்துக்கொண்டு ஆர்ப்பரித்தவாறு ஓடி வந்த மனுசனிடம் எந்த வித சலனமும் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை... அந்தத் திகில் நிறைந்த துயர நிகழ்வை ரசித்துக்கொண்டிருப்பது போலவே நின்றார்!

ஆனால் மனதுக்குள்... முன்னால் நடந்த பழைய சம்பவங்களையெல்லாம் படம் போட்டுப் பார்த்துக்கொண்டிருந்தார்... எத்தனை யெத்தனை பிணக் குவியல்களை அவர் கண்டிருப்பார்..? குண்டு வெடி பட்ட உடல்கள் குற்றுயிரும் குறையுயிருமாக துடிதுடிக்க குவியல் குவியலாகக் கண்டு மிரண்ட காட்சி...எத்தனையெத்தனை ஆயிரங்கள்...!அவரது பலகீனமான உடல் அந்தக் கோர நினைவுகளை நினைக்கையில் தள்ளாடியது.

அவரது நிஷ்டையைக் கலைத்ததுபோல் திடுதிப்பென பலத்த சத்தத்துடன் ஐந்தாறு கனரக வாகனங்கள் வந்து நின்றன. திமு திமு வென பல சீரணி உடையினர் குதித்து இறங்கி வாகனம் கிடந்த இடத்துக்கு ஓடினர். வண்டியை திறப்பதற்கு முழு முயற்சி எடுத்தனர். அவர்கள் வந்த பிறகு மூன்று சடலங்களை வெளியே எடுத்தனர். வேறு எவரும் இல்லை.

ரத்தம் தோய்ந்த நிலையில் நின்ற ஊர் மக்களைப் பார்த்து நன்றி உணர்வோடு வண்டிகளில் வந்தவர்கள் கும்பிட்டனர். மூன்று சடலங்களை வாகனத்தில் ஏற்றிக்கொண்டு திரும்பிச் சென்றார்கள்.

ரயில் சத்தமிட்டது. பிரயாணிகள் பாய்ந்தோடினார்கள்.

ஆஸ்பத்திரியை நோக்கி ஓடிய அந்த வாகனத்தில் ஒரு அதிகாரி மனம் நெகிழ்ந்து பேசினார். "தெவியன்கே மினிசு..! இந்த மக்கள் தெய்வப் பிறவிகள்... மனிதாபிமான இரத்தம் இவர்களிடம் ததும்பி ஓடுகிறது... நாங்கள் தான்... அந்த மக்களுக்கு..." அவருக்கு பேச்சு வரவில்லை. ஏதோ சொல்ல வந்தவரின் தொண்டை மனசாட்சியால் அடைத்தது..! மற்றுமொரு நடுத்தர வயதான அதிகாரி பேசத் தொடங்கினார். "எங்களது இந்த பன்னிரண்டு உயிர், அவர்களுடைய உயிர் இழப்புக்கு முன் எம்மாத்திரம்..?" என்று மனம் கலங்கியவாறு பேசினார். சில காலங்களில் கல்லுக்குள்ளும் ஈரம் கசியும் என்பார்கள்..!

விபத்து நடந்த இடத்தில் எவரும் இருக்க வில்லை. சில சீருடைகள் மட்டும், அந்த எலும்புக் கூடாய் கிடந்த வாகனத்தை உருட்டிக் கொண்டிருந்தார்கள். இன்னொரு பாரம் தூக்கி வாகனம் வந்து நின்றது.

சில மணித்தியாலங்களுக்குள் அந்த வாகனமும் அங்கிருந்து அகற்றப்பட்டுக் கொண்டிருந்தது. பாலசிங்கம் சேர் அந்த எலும்புக் கூட்டு வாகனம், மற்ற வாகனத்தில் செந்தூக்காய் தூக்கி... மறு வாகனத்தில் போடப்படுவதை பார்த்து ரசித்தபடி இன்னும் அந்த இடத்தில் கடைசி ஆளாக ... நின்றுக் கொண்டிருந்தார்.

சில மணித்தியாலங்களுக்குள் எல்லாமே நடந்து முடிந்தன. தான் மட்டுமே அந்த இடத்தில் நிற்பதையுணர்ந்து தன்னை சுதாகரித்தபடி மெதுவாக வீட்டுக்கு நடந்தார்.

****

# ஆற்றாமை

**- மு. சிவலிங்கம்**



வீட்டுக்கு வந்ததும் மகன் லேசாகக் கடிந்துக் கொண்டான். "அப்பா..! அந்த இடத்துக்கெல்லாம் போயிருக்கக் கூடாது..! சொன்னா கேக்க மாட்டியல்..." ஒரே மௌனம்... பாலசிங்கம் சேர் என்றுமில்லாதவாறு புன்னகையோடு மகனைப் பார்த்தார்... என்ன பெருமிதம்..! எதையோ சாதித்து விட்ட களைப்பில், வீட்டு முற்றத்தில் இருந்த செவ்விளநீர் கொப்பில் ஒன்றை வெட்டி.. வீராவேசத்துடன் சீவி மட மடவென வாய் வழிய... தொண்டையும், கழுத்தும், சட்டையும் நனையும்படி குடித்துக் கொண்டிருந்தார். ஓர் வீரா வேச மிடுக்குடன் சட்டையால் வாயைத் துடைத்துக்கொண்டார்.

எதிர்க்க முடியாத எதிரிக்கு கேடு வரும்போது மனம் எவ்வளவு ஆறுதலடைகிறது...? எவ்வளவு உள்ளூர வெற்றி பெருமிதம் கொள்கின்றது?

சமீப காலமாக அப்பாவின் நடவடிக்கைகளை கவனிக்கும் போது மகன் குணராசாவுக்கு கவலை கூடிக் கொண்டேயிருந்தது. அப்பா கொஞ்சம் மனம் குழம்பிப் போயிருக்கிறவர்.! பெரிய ஒரு தாக்கத்திலிருந்து அவரால் இன்னும் மீள முடியவில்லை...

குணராசா. மனைவி..குழந்தை... தாய்...மூவரையும் பறி கொடுத்து மனைத் கல்லாக்கிக்கொண்டு நடைப்பிணமாக நடமாடுகின்றவன்...தகப்பனை அவரது போக்கிலேயே விட்டு விடுவதின் மூலம் அவரது சுதந்திரத்தில் தலையிடாமல் இருப்பதாக நினைத்துக்கொள்கின்றான்..

அந்தி நேரம்...

இன்றைக்கு கார்த்திகை தீபம். சிட்டி விளக்குகளுக்கெல்லாம் திரி வைத்து எண்ணெய் வார்த்து விட்டு மகனை தீபம் ஏற்றும்படி சொல்லி விட்டு முருகன் கோவிலுக்குப் போனவர் எட்டு மணியாகியும் இன்னும் வீடு திரும்பவில்லை.!

அவர் மயூரனைக் கூட்டிக் கொண்டு விபத்து நடந்த ரயில்வே கடவைக்குப் போயிருக்கிறார்.! எப்போதும் சன சந்தடி இல்லாத மரங்கள் குவிந்து இருள் கவ்வி... மனப் பயத்தை உருவாக்கிக் கொண்டிருக்கும் அந்த இடத்துக்குப் போய் சூடம் பற்றவைத்துக் கொண்டிருக்கிறார்.! அக்கிரமக்காரர்களை தெய்வம் இன்று தண்டித்திருப்பதாகவும் ... நின்று கொன்றிருப்பதாகவும்..அந்த தெய்வத்துக்கு நன்றி செலுத்த வந்திருப்பதாகவும் மயூரதனிடம் ரகசியமாகச்சொல்லிக் கொண்டிருக்கும் போது பொலீஸ் ஜீப் வந்து நின்றது.

"பிரின்சிபல் சேர்..! இந்த நேரத்தில... இந்த இடத்தில...வந்து என்ன செய்றியல்?" மரியாதையோடு ஒரு பொலிஸ் அதிகாரி கேட்டார். பாலா சேர் திக்கு முக்காடிப் போனார். ஒன்டுமில்ல தம்பி...இளம்பராயத்துப் பிள்ளைகள் செத்திருக்கினம்..இவ்விடத்துல... "காத்துக் கறுப்பு" ...வரக்கூடாதென்டுதான் பிளைள்ளயாரை நினைச்சு...சூடம் காட்டி ஆராதனை செய்திட்டுப் போக வந்தனான்.." என்று பச்சைப் பொய்யை நுனி நாக்கில் தடவினார்...! "நல்ல காரியம் செய்த நீங்கள்..! ஜீப்ல ஏறுங்கோ வீட்ட கொண்டி விடுறன்!" அந்த அதிகாரி அவரது மாணவனாகவிருக்கலாம்.."மெத்தச் சந்தோசம் தம்பி... வீல்ல வந்தனான் அதில்லேயே போறன்!" என்ற ஆட்டோவுக்குள் நுழைந்தார்.! ஆட்டோ ஓடும்வரை பொலீஸ் நின்றது.

"ஏன்ட அடிமனசு ஆராதனையைப் ..போலீசுக்காரான் எப்படி அறியப்போறான் மயூரா!" என்று சிரித்துப்படி சென்றார்!.

000

குணராசா திருமணமாகி நான்காவது வருடத்தில்தான் அந்தத் துயரச் சம்பவம் நடந்தது. அம்மா, மனைவி, மகள் மூவரும் மோசம் போன துயரம் நிழலாக இருவரையும் தொடர்ந்துக் கொண்டே இருக்கின்றது.

யுத்தக் காலத்து... யாழ்ப்பாணத் தென்னை மரங்கள்...மூலியாகத் தரிக்கப்பட்டு... சோபையிழந்திருப்பதைப் போன்று அந்தக் குடும்பம்... தாழ்ந்திருந்தது...

பாலசிங்கம் சேருக்கு இந்த பிரபஞ்சமே அவரது பேரக் குழந்தை அபிராமிதான்.! அந்த வாரிசுதான் அவரது தேவதை! எந்தவொரு மனிதனுக்கும் வயது சென்ற காலத்தில்... மனமும் உடலும் தளர்ந்து போன காலத்தில்... புத்துணர்ச்சியைக் கொடுக்கும் இன்னொரு இன்பமான வாழ்க்கையை அனுபவிக்கும் பாக்கியம்தான் பேரக் குழந்தைகளின் பிறப்புக்கள்!

அந்த மாதத்தில் நவராத்திரி பூசைகள் முடிந்திருந்தன. விஜயதசமி நாளன்று, அன்னலெச்சுமி டீச்சர் வீட்டுக்கு பாலா சேர், மனைவி ராசம்மா, மருமகள் வதனி, பேரக் குழந்தை அபிராமி நால்வரும் ஏடு தொடக்கச் சென்று வந்தார்கள்.

வரும் வழியில் அன்னலெட்சுமி டீச்சர் "ஆனா" சொல்லிக் கொடுக்காமல், "ப" வும்,"ட" வும்..."ம" வும் சொல்லிக் கொடுக்க, அபிராமி சிரித்துச் சிரித்து அவளே எழுத்துக்களை மிக லேசாக எழுதிக் காட்ட...பிறகு "பட்டம்" என்ற சொல்லும் பிறக்க.. பெருமையாகப் பேசிக் கொண்டு வந்தார்கள். "டீச்சர் சொல்லிக் கொடுத்திருந்தால்.. செல்லக்குட்டி ஆனாவையும் ஈனாவையும் கூட எழுதிக்காட்டியிருப்பாள்!" என்று பாலா சேர் மனப் பூரிப்போடு பேசிக்கொண்டு வந்தார். அந்த மகிழ்ச்சி பொங்கிய தருணத்தில்தான் அது நடந்தது.

கண் மண் தெரியாமல் பின்னால் வந்த அந்தப் பிசாசு வாகனம் மூவரையும் சேர்ந்தாற் போல் அடித்துத் தூக்கி எறிந்தது.

பாலா சேர் மட்டும் தப்பினார். அவர் கண்ணாலேயே கண்டார். அந்த மாமரத்தின் உயரத்துக்கு பந்தைப் போல எறியப்பட்டு பாதையில் விழுந்து... கோழி முட்டையைப் போல நொறுங்கினாள் அபிராமி... மனைவி செல்லம்மா.. மருமகள் வதனி மூன்று சீவன்களையும் அடித்து வீழ்த்திய பெஜரோ வாகனத்தில் சீரணி சட்டைக்காரர்கள்நிறையபேர் இருந்தார்கள். அவர்கள் திரும்பிப் பார்க்காமல் ஓடி மறைந்தார்கள். மக்கள் வீதியில் நிறைந்தனர். வின்னதிர சத்தமிட்டனர். "இந்தக் கொடுமைகள கேக்க யாருமில்லையா..? இந்த அக்கிரமங்களுக்கு முடிவேயில்லையா?... வாகனத்துல அடிச்சிக்கொல்லுறதுக்கு பேரு விபத்தா?.." என்று கூடி நின்ற மக்கள் கதறிக்.. கதறி அழுதார்கள். உலகத்தில் இப்படியொரு மனிதக் கொலைகள் எந்த நாட்டிலேயும் நடந்ததாக அறிய முடியவில்லை... அவர்கள் எல்லோருமே இவ்வாறு உறவுகளைப் பறிகொடுத்தவர்கள். அவர்களின் ஆவேசக்குரல் இந்தப் பிரபஞ்சத்தை ஆட்டி அசைப்பதாகவிருந்தது...

போலிஸ் வண்டி வந்தது. குப்பைகளைப் போல மூன்று உடல்களையும் வாரிச் சென்றது. நகரசபை வண்டி வந்தது. குற்றங்களை... பாவங்களை... ஆனவங்களை... அட்டூழியங்களை கழுவித் துடைப்பதைப் போன்று.. கழுவித் துடைத்து விட்டுச் சென்றது. தெருவில் மயங்கிக்கிடந்த பாலசிங்கம் ஐயாவை வீட்டுக்குத் தூக்கிச் சென்றார்கள்.

**(தொடர்ச்சி _33__ பக்கம்)**

# தமிழினப் படுகொலைதான் எனக் கனடா அங்கீகரித்தமை தமிழ்மக்களின் நீதிதேடும் நெடும் பயணத்தில் ஒரு மைல் கல்

## பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு



இலங்கையில் நடந்தது தமிழினப் படுகொலையே என்பதை அங்கீகரித்துக் கனேடியப் பாராளுமன்றம் ஏகமனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது. இலங்கை அரசு மிகக் கொடூரமான யுத்தத்தைத் தொடுத்துத் தமிழினப் படுகொலையை நிகழ்த்தியே 2009ஆம் ஆண்டு முள்ளிவாய்க்காலில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. அப்போதிருந்தே தமிழினம் இனப்படுகொலைக்கு நீதிகேட்டு உலக நாடுகளினதும் ஐக்கிய நாடுகள் சபையினதும் கதவுகளைத் தட்டிவந்த நிலையில் உலகின் முதல் நாடாகக் கனடா இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளது. இது தமிழ்மக்களின் நீதிதேடும் நெடும் பயணத்தின் ஒரு மைல்கல் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

கடந்த 18ஆம் திகதி கனேடியப் பாராளுமன்றில் இலங்கையில் நடந்தது தமிழினப் படுகொலைதான் என்பதை ஏற்றுத் தீர்மானம் நிறைவேற்றியமை தொடர்பாகப் பொ. ஐங்கரநேசன் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில், இலங்கையில் நடந்த யுத்தம் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தமே என்று அரச தரப்புப் பரப்புரை செய்து வருகிறது. இது ஓர் போர்க்குற்றமே என்று அரசாங்கத்தைக் காப்பாற்றும் முகமாகச் சில தரப்புகள் கூறிவருகின்றன. ஆனால், நிகழ்ந்தது தமிழினப் படுகொலையேயென தமிழினம் நீதிகேட்டுத் தசாப்த காலத்துக்கும் மேலாகப் போராடி வருகிறது. இந்நிலையிலேயே அவர்களது போராட்டத்துக்குக் கிடைத்த ஒருபெரும் வெற்றியாகக் கனேடியப் பாராளுமன்றத்தின் தீர்மானம் அமைந்துள்ளது. கனேடியப் பாராளுமன்றில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரி "இலங்கையில் நடந்தது இனப்படுகொலைதான் என்பதை ஏற்று ஆண்டுதோறும் மே-18 ஆம் திகதியைத் தமிழர் இன்படுகொலை நினைவேந்தல் நாளாக அங்கீகரிக்க வேண்டும்" என்ற பிரேரணையை முன்வைத்தபோது எவ்வித எதிர்ப்பும் இல்லாமல் பிரேரணை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. தமிழினம் தன் இலக்கை நோக்கி முன்னேறிச்செல்ல கனேடியப் பாராளுமன்றின் இத்தீர்மானம் ஒரு கொழுகொம்பாக அமைந்துள்ளது.

கனேடியப் பாராளுமன்றில் இப்பிரேரணையைக் கொண்டு வந்தமைக்காக பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரிக்கும், ஏகமனதாக ஏற்றுக்கொண்ட ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இதன் பின்னால் நின்று உழைத்த புலம்பெயர் தமிழ்ச் சமூகத்துக்கும் தமிழ்கூறும் நல்லுலகு தலைசாய்த்துத் தனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது என்றும் தெரிவித்துள்ளார்.

# வாழ்ந்து காட்டு!

**- ஷாகரி சுகுமார் -**

*21ம் நூற்றாண்டு,
மாயமாய் கிடைத்த அம்மணற்கடிகாரம்
என் விரல்தனை பல்லாயிரம் ஆண்டுகளுக்கு
முன் சுழற்ற செய்தது.......*

*சில நூற்றாண்டுகளுக்கு முன்,
வீரத்தமிழ் தன் கொடி நாட்டி
நாற்படையும் தம் ரதம் பூட்டி
சேர, சோழ, பாண்டவர் அரியனைக்கொண்டு
முழங்கும் தமிழ் சங்கு - தமிழ் வாழ்க! என்று*

*தமிழ் மணம் கமழும் அச்சபை
பைந்தமிழ் சுரக்கும் அதன் சுவை
தெள்ளு தமிழ் வடியும் அவை
இனிப்பாட வார்த்தை இல்லா தமிழ்
வேரூன்றி நிற்க் தூய தமிழ் பாவலர்
தம் கானமிசைக்க......*

*காதிரண்டும் குண்டலம் பூண்டு
வளையல்கள் பண்பாட
சிந்தாமணிகள் சிதறாது
மேகலை தாளமிட
சிலம்புகள் தரித்த பாதமிரண்டும்
ஆதியாக பாக்கியம் பெற்ற தமிழ்
மொழியல்ல - உயிராய்!*

*தமிழ் வளர்த்த ஔவையும்
தமிழ் சுரந்த அகத்தியனும்
தமிழ் வார்த்த வள்ளுவனும் என
தமிழ் ஈந்த தமிழர்கள்
அவையெங்கும் அலை மோதக் கண்டேன்*

*காணி நிலம் வேண்டி நின்ற பாரதி
தமிழுக்கு அர்த்தம் தந்த நாவலர்
தமிழை மூச்சாய் கருதிய விபுலானந்தர் கூட
சபை வாயிலில் நின்று கொண்டிருப்பதை கண்டேன்...*

*ஏழு ஸ்வரங்களும் ஒன்று திரண்டு
பாகவதர் நாவின்னின்று தமிழை வாழ்த்த
வெற்றிக் களிப்பில் தமிழ் வளர்த்த வேந்தர்கள்
தமிழன்னை பாதம் வணங்க
பரதமும் பண்களும் நடம் ஆட
பாரில் வேறேதும் வேண்டாம் என உணர்தேன்*

*நன்னூல், தொல்காப்பியம், திருக்குறள்,
நாலடியார், வெண்பா, விருத்தம்,
இராமகாவியம் எல்லாம் தமிழன்னையை பூஜிக்க
மலர்களாய் பூத்ததை நுகர்தறிந்தேன்
பக்தி மொழியாம் தமிழ் அன்று
அரியாசனம் ஏறுவதை காண பேறுபெற்றேன்...*

*சங்ககாலம், சங்கமருவிய காலம்,
சோழர் காலம், பல்லவர் காலம் என
காலகாலமாய் தனித்துவம் பெற்ற
தமிழ் கொச்சயடைவது தெரிந்தது - என்
மாய மணற்கடிகாரம் உடைந்த போது..*

*அன்புதாயை அழைக்கவும் தமிழில்லை
ஆசிரியரை விளிக்கவும் தமிழில்லை
அரசியல் செய்யவும் தமிழில்லை
ஆன்மிகம் தொடரவும் தமிழில்லை
பரிந்துரைக்கவும் தமிழில்லை
பாசாங்கு செய்யவும் தமிழில்லை
தொலைவிற்கும் தமிழில்லை
தொடர்பாடலுக்கும் தமிழ் தேவையில்லை
இல்லை .. இல்லை .. இல்லை ..*

*தமிழா?
இல்லை
தமிழர்*

*தமிழ் என்றும் உயிக்கும்
தமிழன் போல உக்காது
செந்தமிழ் கண்ட தமிழன் தன்
உயிரை கூட வெறுக்க காரணம் யாதோ?
உயிர் - தமிழ் என்று நிற்க்*

*கடல் புரைய வீரம் கொண்ட தமிழன் - இன்று
கிணற்றுத்தவளையாய் வாழ்வதேனோ?
நுட்பம் பல கொண்ட தமிழன் - இன்று
மலிந்து நெலிந்து போவதேனோ?
சிகரம் வென்ற தமிழன் - தமிழ்
அகரமதை மறந்ததேனோ?
சிம்மாசனம் ஏறிய தமிழன் - இன்று
சிங்கத்திற்கு அஞ்சுவதேனோ?
வான சாஸ்திரம், விஞ்ஞானம் கண்ட தமிழன்
வனாந்தரங்களில் அலைவதேனோ?*

*தமிழ் மடிந்து விட்டதா?
இல்லை ..
வீரம் தளர்ந்து விட்டது தமிழனிடம்
விவேகம் குன்றி விட்டது தமிழனிடம்
பயம் குடிபுகுந்து விட்டது தமிழனிடம்....*

*தரணியெங்கும் மீண்டும் தமிழ் மணம் வீசும் காலமுண்டோ?
ஏன் இல்லை? நிச்சயமாய்*

*தமிழன்னையை மீண்டும் பல பூக்கள் பூஜிக்க இருந்தால்
இன்னும் பல தமிழ் வேந்தர்கள் இருந்தால்
பாரெங்கும் தமிழர் வியாபித்திருந்தல்
பண்பாட்டையும் பாரம்பரியங்களையும் கடைப்பிடித்தால்
தமிழ் மூதாதையரை உயிர்ப்பித்தால்
தமிழிசையினை வளர்த்தால்
தமிழ் இதிகாசங்களுக்கு உயிர் கொடுத்தால்
தமிழுக்கு பிரசாரம் செய்தால்
தமிழினை தாரை வார்த்தால்
அந்நியனை அடக்கினால்
அதிகாரத்தினை நிலை நிறுத்தினால்
தமிழை விளம்பரப்படுத்தினால்
ஆக மொத்தம்,
குமரிக்கண்டத்தை மீண்டெழுப்பினால்....*

*ஏன் இல்லை? நிச்சயமாய் மீண்டும்
தரணியெங்கும் தமிழ் மணம் வீசவைக்கலாம்
ஏன் இல்லை? நிச்சயமாய் - "ஒரு தமிழனின் கனவுகளில்"*

*ஆட்சி வேண்டாம் ..
அதிகாரம் வேண்டாம் ..
அரசு வேண்டாம் ..
ஏன் இல்லை? நிச்சயமாய் தரணியெங்கும்
தமிழ் மணம் வீசவைக்கலாம்..*

*தமிழா,
நீ வீரத் தமிழனாய் வாழ்ந்து காட்டு!!*

---

**ஷாகரி சுகுமார்**
**9, வில்ரெட் நகர்,**
**ஹட்டன்**
**இலங்கை**

(_19__ பக்கம் தொடர்ச்சி)

# இது மண்ணின் வாசமோ?

அதனால் அந்த... லைலா மீது (லைலா மஜ்னு கதையிலும் லைலா கருப்புத்தான் என்பது கவனிப்புக்குரியது) ஒரு கண்! அவள் தான் சாந்தி மார்க்கத்தின் சகோதரி சல்மா!

`காலமும் புயலும் மனிதனுக்காக காத்திருப்பதில்லை` என்ற ஆங்கிலக் குரலுக்கொப்ப, காலம் கனவேகத்தோடு ஓடியது. வியாபார ரீதியிலான உரையாடல் தவிர, வேறு எவ்விதமான தனி பேச்சும் வெண்புறாக்களோடு கணேசலிங்கத்திற்கு இல்லை. எப்படியும் அந்த சல்மா குட்டியுடன் பேசிவிட வேண்டும் என்ற வேணவா வேலி தாண்டிய உணர்வில் கணேசலிங்கம் களைத்துப் போனான்.

ஒருநாள்...

குழுவில் ஒரு மாணவி ``அண்ணே... உங்களிடம் நா. பார்த்தசாரதி எழுதிய `குறிஞ்சி மலர்` இருக்கா?`` எனக் கேட்க, கணேசலிங்கம் ``ஓ... இருக்கே... நாளைக்கு கொண்டு வந்து தாரேன்`` என்று, பழம் நழுவி பாலில் விழுந்த திருப்தியை அடைந்தான். ``கதைப் புத்தகம் எல்லாமே இருக்கா?`` என இன்னொரு மாணவி கனகா கேட்க, ``பழைய கதைகள் எல்லாமே அனேகமா இருக்கு`` என்றவன் சல்மாவை சாடையாக நோட்டமிட்டான். ``சல்மா... நீ என்னமோ புக் வேண்டும் என்றாயே... அண்ணனிடம் கேளேன்`` என ரேவதி என்பாள் பேசும் வாசலைத் திறந்து விட்டமை பாலில் விழுந்த பழம் கணேசலிங்கத்தின் வாயில் விழுந்த பரம திருப்தியை அளித்தது.

``உங்களிடம் கல்கியின் `பொன்னியின் செல்வன்` ரெண்டாம் பாகம் இருக்கா?`` மென்குரலில் சல்மா முதற்தடவையாக கணேசலிங்கத்திடம் கேட்டாள். ``என்னிடம் அஞ்சு பாகமும் இருக்கு... நாளைக்கு கொண்டு வந்து தாரேன்`` என்றான் மகிழ்ச்சிப் பொங்க... யாருக்கெல்லாமோ கொடுப்பவன் சல்மாவுக்கு கொடுக்காமல் இருப்பானா?

`பொன்னியின் செல்வன் கதையின் கதாநாயகன் வந்தியத்தேவன் வல்லவரையனின் கையை பெரிய பழுவேட்டையர் பற்றியதோடு முதலாம் பாகம் முடிகிறது. அதிலிருந்து கதை விறுவிறுப்பாக - சுவை குன்றாமல் - ரசனையின் உச்சம் நோக்கி முடிவு வரை போவது போல, சல்மாவிடம் வேலி தாண்டிய உணர்வில் பேச ஏங்கும் இளவலின் கதையும் தொடர்கதையாகுமா? அல்லது... தொய்வு விழும் நிலை வருமா?

அன்று முதல் சல்மா புத்தகங்கள் கேட்பதும், கணேசலிங்கம் கொடுப்பதும் பழக்கமாயின. கைப்பேசி - கதைப்புத்தகங்கள் என ஆரம்பித்த தொடர்பு, கிளை பரப்பி தொடர்ந்தது; படர்ந்தது. அந்த தொடர்பு அவர்களிடையே ஊமைக்காதலாக உருவாகி, நாளடைவில் அது பேசத் துவங்கியது. காதலர் இருவர், கருத்தொருமித்து பேசத் துவங்கினால் கேட்கவா வேண்டும்?

சல்மாவின் வீடுவரை துணைக்கு செல்வது - `ஸ்பெஷல்` வகுப்புகளுக்கு அழைத்துச் செல்வது - சிற்சிறு உதவிகள் பரிமாறிக் கொள்வது - எனத் தொடர்கதையின் அத்தியாயங்கள் விரிந்தன. தன் வீட்டிலும் தன் பெற்றோரிடம் கணேசலிங்கத்தின் நற்குணங்களை சல்மா அவ்வப்போது சொல்லியிருந்தாள். பண்டு தொட்டு வடக்கே தமிழ் முஸ்லிம்கள் ஒன்று கலந்து, அண்ணன் - தம்பியாக வாழ்ந்து வந்த மரபில், `கணேசலிங்கம் - சல்மா` கதை எவருக்கும் வித்தியாசமாகப்படவில்லை. பெருநாட்களில் சல்மாவின் வீட்டில் கணேசலிங்கம் சாப்பிடுவது - பொங்கலன்று சல்மா தன் தாயுடன் கணேசலிங்கம் வீடு சென்று சாப்பிடுவது போன்ற சம்பவங்கள் கதையின் சுவாரஷ்யமான கட்டங்கள்.

கணேசலிங்கம் - சல்மாவின் காதல் துளிர் விட்டு தளிராக - செடியாக - மரமாக வளர்ந்து நிழல் பரப்பிக் கொண்டிருக்கும் காலமதில், எதிர்பாராத அந்த சம்பவம் - நாணய குற்றியின் இரு பக்கங்களாக வடக்கே வாழ்ந்து வந்த தமிழ் முஸ்லிம் உறவில் மாறாத `கறை`யாக விழுந்த முன்னெப்போதுமே நடந்திராத - வித்தியாசமான வரலாற்றுத்தவறான அந்த நிகழ்ச்சி நடந்தது...

அது... அது... இற்றைக்கு 31 வருடங்களுக்கு முன் - அக்டோபர் மாத இறுதிநாளொன்றில் நடந்தது.

``முஸ்லிம்கள் எல `லோரும் ஜின்னா மைதானத்திற்கு வாருங்கள்...`` எனத் `தம`பியர்` கூவியழைத்த குரலுக்கு மதிப்பளித்து என்னமோ - ஏதோ என்னும் பதைபதைத்த நெஞ்சோடு யாழ்மண்ணின் மைந்தர்களான முஸ்லிம்கள் குறிப்பிட்ட மைதானத்தில் ஒன்றுகூடினர். ``முஸ்லிம்கள் எல்லோரும் யாழ் மண்ணில் தேடிய உடைமைகளையும் - வீட்டையும் விட்டு, இன்னும் இரு மணி நேரத்தில் யாழ் மண்ணிலிருந்து போய் விடவேண்டும்.`` என்ற `தம்பிகளின்` அதிகாரக் குரல் ஆணையிட்டது. இந்த ஆணையை மறுத்து எந்த முஸ்லிமும் எதுவும் பேசவில்லை; பேச வேண்டியவர்களும் பேசவில்லை. பல தமிழ் சோதரர்கள் மௌனமாகக் கண்ணீர் வகுத்தனர். அத்தகையவர்களால் வேறு என்னதான் செய்யமுடியும்?

சற்றைக்கெல்லாம் உடுதுணி பொதிகளுடன் - கனத்த இதயத்துடன் - இனி என்ன செய்வது? எங்கே போவது? என்றறியாத விரக்தியுடன் தமிழ்ப்பேசும் முஸ்லிம்கள் குடும்பம் - குடும்பமாக வெளியேறினர். அவர்களில் நம் சல்மாவும், அவளது பெற்றோரும் எட்டு வயது நிரம்பிய தங்கை அனிசாவும் அடங்குவர். தீந்தமிழில் சொன்ன இந்தத் தீச்செய்தியை கேட்டு, கணேசலிங்கம் சல்மா வீட்டாரைக் காண ஓடோடி வந்திருக்க வேண்டுமே! அவன்தான் நேற்று மாலையே பக்கத்திலுள்ள சில ஊர்களுக்கு வர்த்தக சுற்றுலா போய்விட்டானே! அதனால் சல்மாவுக்கு கணேசலிங்கத்தின் முகத்தைப் பார்க்கவோ - பேசி விடைபெறவோ - எதுவும் திட்டமிடவோ வழியில்லாமற் போனது பெரிய ஏமாற்றம்; தடுமாற்றம்!

படிப்படியாக முஸ்லிம்கள் எல்லோருமே பிறந்த பொன்னாட்டை துறந்து எங்கெங்கோ சிதறி போய்விட்டனர். அவர்கள் வாழ்ந்த இடங்கள் யாவும் வெறிச்சோடி போயின. அந்த வெறுமை நிலத்தை பார்க்க - நடந்த விஷயங்களை அறிந்து அன்று மாலையில் கணேசலிங்கம் ஓடோடி வந்தான். எவருமேயில்லை. சல்மாவும் இல்லை; அவள் வாழ்ந்த சாயலும் இல்லை. ``ஆண்கள் அழக்கூடாது; ஆண்கள் அழுதால் உலகமே அழுவதற்கு சமன்`` என அடிக்கடி கூறும் அந்த கணேசலிங்கம் தெருவோரத் திண்ணையில் அமர்ந்து அழுதான். தூரத்தே யிருந்த தெருவோர டீக்கடை ஒன்றிலிருந்து பழைய சினிமா பாடலின் வரிகள் கணேசலிங்கத்தின் செவி சபாக்களில் காற்றோடு கலந்து வந்து விழுந்தன.

``... விதி செய்த
சதியோ அத்தான்``

ஒவ்வொரு நாளும் சல்மாவை நினைத்து நினைத்து கணேசலிங்கம் கதறி அழுதான். ஆனால் சல்மாவோ... அவள் பெண்ணல்லவா... அவளால் கதறி அழ முடியுமா? அதனால் தினமும் மௌனமாக அழுதாள். இவ்விருவரின் அழுகைகளையும் காலம் சப்பித் துப்பியது. ஆம், காலத்திற்கு மறக்கடிக்கும் ஒரு சக்தியை இறைவன் கொடுத்திருக்கிறான் அதனால் வெறுமனே காலம் ஓடிக் கொண்டிருந்தது... `இதுவும் கடந்து போகும்` என்பார்களே அது இதுதானோ? காதலுமா?

சில மாதங்களின் மடிவுக்குப் பின், கல்பிட்டியிலிருந்து கணேசலிங்கத்திற்கு ஒரு கடிதம் வந்தது. அதன்பின் சிற்சில மாதங்களின் மறைவிற்குப் பின், புத்தளம் - நீர்கொழும்பு - கொழும்பு என கடிதங்கள் வந்தன. - `அந்தந்த ஊர்களில் கஷ்டப்பட்டு வாழ்ந்து வருவதாக` சேதி சொல்லின.

சல்மாவின் கடிதங்களுக்கெல்லாம் கணேசலிங்கம் ஆர்வத்தோடு பதில் போட்டான். ``நாம் திருமணஞ் செய்து சேர்ந்து வாழ்வது இறைவன் விரும்பவில்லை போல் தெரிகிறது. அதனால் கணேஷ் நீங்கள் நல்ல பெண்ணாகப் பார்த்து திருமணஞ் செய்து வாழுங்கள்.`` என சல்மா வலியுறுத்திய அதே எண்ணத்தில், ``சல்மா நீங்கள் நல்லவனாகப் பார்த்து திருமணஞ் செய்து நலமாக வாழுங்கள். அதுவே எனக்குத் திருப்தி தரும்`` என கணேசலிங்கமும் வற்புறுத்தி பதில் எழுதிவான். தன் பேச்சை எப்போதும் மறுக்காத மங்கை நல்லாள் சல்மா, `கொழும்பில் திருமணஞ் செய்து, குழந்தை குட்டிகளுடன் நல்வாழ்வு வாழ்வாள்` என்பது கணேலிங்கத்தின் தளராத நம்பிக்கை.

ஏன் தெரியுமா? கொழும்புக்கு சல்மாவின் குடும்பம் வந்தபின் கடிதங்கள் சல்மாவிடமிருந்து வருவது நின்றுவிட்டன. `தன் கணவர் விரும்ப மாட்டார்` என்பதால் எழுதாமல் விட்டாளோ? அப்படித்தான் இருக்க வேண்டும் என கணேசலிங்கத்தின் மனம் ஒப்புக் கொண்டது.

கொழும்பில் சல்மா எங்கே இருக்கிறாள்...?

கொழும்பு புறக்கோட்டை பஸாரிலிருந்து -நாலாம்குறுக்குத்தெருவிலிருந்து கிழக்கு நோக்கி ஒரு பொடி நடை நடந்தால், `வாழைத்தோட்டம்` என்ற பகுதி வரும். மூவினத்தாரும் வாழும் இந்த வாழைத்தோட்டம், தமிழ் வளர்த்த இன்னொரு மதுரை என்பார்கள். இலங்கையில் பத்துக்கு மேற்பட்ட தமிழ்ப்பத்திரிகைகள் மலர்ந்த தோட்டம் இது என்றால் யோசியுங்களேன்! இந்த வாழைத்தோட்டத்தில் அக்பர்லேனில் 37ஆம் இலக்க வீட்டில் சல்மா வாழ்கிறாள் என்பதை நம்ம கணேசலிங்கம் முன்கூட்டியே தெரிந்து வைத்திருந்தான்.

இம்முறை கொழும்பு வந்த கணேசலிங்கம் வந்ததும் வராததுமாக தன் வியாபார காரியங்களை எல்லாம் முடித்து விட்டு, மாலை மயங்கும் அந்தி வேளையில் தன் முன்னாள் காதலி சல்மாவை காண - குழந்தைகள் எல்லாம் இருப்பார்கள் என்ற நம்பிக்கையில் சில திண்பண்டங்களுடன் இதோ... அக்பர் லேனில் புகுந்து விட்டான்.

குறிப்பிட்ட வீட்டருகே வந்து திண்ணையில் பேசிக் கொண்டிருந்த இரு கிழவர்களிடம் ``இது சல்மாவின் வீடா?`` எனக் கேட்க, ``ஆமாம்`` எனத் தலையசைத்த ஒருவர் மற்றவரிடம் ``இந்த சல்மாவை பாருங்களேன் அவளது தாயும் இறந்து போய் ஒரு கிழமை ஆகுது... அவள் யாழ்ப்பாணத்தில் ஒருவனை விரும்பி இருந்தாளாம். அது கைகூடவில்லை. அதனால் வேறு ஒருவனை மணக்க மாட்டேன் என்று அடம்பிடிக்கிறாள்.`` என சொன்ன செய்தி, விசாரித்து நின்ற கணேசலிங்கத்திற்கு ஓ...வென அழனும்போலிருந்தது.

உடனே திரும்பி வந்த வழியே நடைகட்டிவிட்டான் கணேசலிங்கம்...

சல்மாவை நினைத்து கணேசலிங்கமும் வேறு கல்யாணம் செய்யவில்லை. கணேசலிங்கத்தை நினைத்து சல்மாவும் வேறு மணம் செய்யவில்லை. ஒரு காட்டிலிருந்து பிரிந்த இரு மரங்கள் மீண்டும் ஒன்று சேர்வதில்லை என்பார்கள். இவர்களும் எப்போதும் பிரிந்து போன தனி மரங்கள்தாமா? இது மண்ணின் வாசமோ? இதுபோல எத்தனை சல்மாக்களோ - எத்தனை கணேசலிங்கம்களோ?

(முடிவு)

உறுதிமடல்

பெயர் : எஸ். ஐ. நாகூர் கனி (S. I. Nagoor Ghany)

முகவரி : 24/15, பேரா வீதி, குணசிங்கபுரம், கொழும்பு – 12, இலங்கை

24/15, Beira Road - Gunasinghepura, Colombo - 12, Sri Lanka

அடையாள அட்டை இல (IC No) : 472033115V

"இது மண்ணின் வாசமோ?" எனும் இச்சிறுகதை எனது சொந்தப் படைப்பு என்றும், இதற்கு முன் வேறு எந்த ஊடகத்திலும் வெளிவரவில்லை என்றும் இத்தால் உறுதி செய்கிறேன்.

"உதயன்" மலர் மணக்க வாழ்த்துக்கள்.

- எஸ். ஐ. நாகூர் கனி -

( 30 பக்கம் தொடர்ச்சி)

# ஆற்றாமை

- மு. சிவலிங்கம்

எந்த நேரமும் மனதில் குமிழியிட்டுக்கொண்டிருக்கும் நினைவலைகள் சில நேரங்களில் திடீரென கொதிப்பதால் பாலசிங்கம் சேர் நேராக படுக்கையில் போய் சாய்ந்து விடுவார். அப்பா இன்று மிகவும் வேதனைப் பட்டுக்கொண்டிருக்கிறார். அவரைக் கடிந்துக்கொண்டதில் குணராசா தன்னை நொந்துக் கொண்டான். அறைக்குச் சென்றவர்..களைப்பில் நித்திரையானார்.

இன்று அதி காலை நடந்த விபத்து மரணங்கள்... அவரின். கனவில் வந்து மனைதக் குடைந்துக்கொண்டிருந்தன. விபத்தில் செத்துப்போன சீரணிக்காரர்களையெல்லாம் ஆகாயத்திலிருந்து கொக்கி போட்டு...அந்தரத்தில் மேலே மேலே இழுத்துக்கொண்டிருந்தார்கள்.! யார் இழுக்கின்றார்கள்? இழுப்பவர்களைப் பார்க்க முடியவில்லையே? ...எல்லோரும் அந்தரத்தில் தொங்கினார்கள்...அவர்கள் சொர்க்கத்துப் போவார்களா?... நரகத்துக்குப் போவார்களா?... பார்ப்பதற்கு ஆசையாகவிருந்தது.!

அவருக்கு உடம்பு காய்ந்தது. காய்ச்சலில் ...உருண்டு பிரண்டுக்கொண்டிருந்தார்.

000

இன்று மாவட்ட நீதிமன்ற விசாரணை...

பாலா சேர் சாட்சிக் கூண்டில் நிற்கின்றார். அரச சார்பு வக்கீல் ஒருவர் பாலா சேரை பார்த்துக் கேள்வி கேட்பதற்கு முனைந்தார். "அந்த விபத்து நடந்தபோது நீங்கள் எங்க இருந்தீர்கள்? பாலா சேர் பதில் சொல்லவில்லை..."என்ன முழிக்கிறீர்?" ..."முழிக்கல்ல..! முறைக்கிறன்!" பாலா சேரின் பதிலைக்கேட்டு அந்த வக்கீல் முழித்தார்! "கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுங்கள்.!" "கேள்விய... பிழையா கேட்டா... எப்படி பதிலை சொல்லுவது?" நீதி மன்றத்தில் வாத பிரதி வாதங்கள் வக்கீல்களுக்கிடையிலில்லாமல் கூண்டில் நிற்பவருக்கும் குறுக்கு விசாரணை செய்பவருக்குமிடையில் நடப்பது புதினமாகவிருந்தது.

பாலா சேர் மிகவும் அடக்கமாக... நீதிமன்றத்துக்குரிய மரியாதையோடு கொஞ்சம் உரத்துப் பேசினார். "நீங்கள் திரும்பத் திரும்ப "விபத்து சம்பவம்" என்று எனது மனைவி.. மருமகள் ..பேரக்குழந்தை கொலை செய்யப்பட்ட சம்பவத்தை பிழையாகத் திரிச்சி கேள்வி கேக்காதீர்!" என்றார். வக்கீல் தடுமாறினார் "அது வாகன விபத்துதானே?" என்றார். "அது வாகன விபத்தல்ல! வாகனத்தைக்கொண்டு.. மோதிக் கொலை செய்யும்..ஒரு புதுவகைக் கொலைகள்.! ...இங்க வாகனத்தால அடிச்சி.. சனங்களைக் கொல்லுகின்ற சம்பவங்கள் நூற்றுக் கணக்கா நடந்துள்ளன!... இந்த நவீனக்கொலைகள்...எல்லாமே விபத்துச் சம்பவங்களாக சோடிக்கப்படுது...!. எங்கட வீட்டு ... மூன்று பேரோட கொலைகள் விபத்து மரணங்களாகச் சோடிக்கப்பட்டவைதான்!. இந்தப் பாவங்களுக்குப் பரிகாரமே கிடையாது! இந்த நவீனக் கொலைகள் ஊர் முழுவதுமே நடக்குது! நீங்கள் மனசாட்சியுடன் செயல்பட வேண்டுமென்றால்...கொலைகளை விபத்துக்களாக மாற்றும் அதர்மத்தை மாற்றிக்கொள்ள கனம் நீதிபதியின் கட்டளையை நாடுங்கள்!" என்று உணர்ச்சி வசப்படாமல் தெளிவாக ...நிதானமாக விரலை நீட்டினார் பாலா சேர். நீதி தேவதை வடிவில் அவர் சிரசின் பின்னால் ஒளிவட்டம் தெரிந்தது... நீதி மன்றம் ஆடி நின்றது...

பாலா சேர் படுக்கையிலிருந்து எழும்பிவிட்டார். தான் நீதிமன்றத்தில் வாதாடிய சட்டக்கேள்விகளை மகனிடம் சொன்னார். உண்மைகளை அறிந்த நீதிமன்றம் மௌனித்து நின்றதையும் சொன்னார்.. மகன் குணராசா அப்பாவை நினைத்து ரொம்பவும் மனம் நொந்து போனான்..

"அப்பா! நீங்கள் கனவில கேட்ட கேள்விகள் அத்தனையும் லோயர் அண்ணர் தவ ராசா நீதி மன்றத்தில.. கேட்டவர்தானே.? அவர்ட கேள்விகளக் கேட்டு... பதில் சொல்ல முடியாமே..நீதிமன்றமே ஆடிப்போகல்லையா? கடைசியில அவருக்கு என்ன நடந்தது? அவர் காணமல் போகல்லையா?... இப்போ அவர்ட குடும்பம் பிள்ளைக்குட்டிகளோட நடுத்தெருவில வந்து நிக்கலையா?
".................."

மகன் கேட்டக் கேள்விகள் அத்தனையும் உண்மை.. ஒரு காலத்தில் கண்மண் தெரியாமல் விபத்து..விபத்து என்று ஒவ்வொரு நாளும் சனங்கள் கொல்லப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ... "இளம்பெடியல்கள் சைக்கில்ல போக முடியாது... முட்டி மோதித் தட்டிப் போட்டு போவான்கள்...! மாணவப்பிள்ளைகள் கூட்டங் கூட்டமாக போகமுடியாது ..., தட்டிப்போட்டுப் போவான்கள்...! பிறகென்ன?....சாவுதான்...,! இந்த அட்டூழியங்களை நேரில் பார்க்க முடியாமல்தான் புத்தப்பிரான் தலையைக் கவிழ்த்து மடியையே பார்த்துக்கொண்டிருக்கிறான்...! பாவம் தவராசா..இந்தப் புதுமாதிரி கொலைகள.. அந்தப் பிள்ளை ஒருவன்தான் தட்டிக்கேட்டான்.. வெளிச்சத்துக்கு கொண்டு வந்தான்... அவனும் காணாமல் போயிட்டான்...

பாலா சேர் கைகளை இறுகக் கட்டிக்கொண்டு மௌனமாக அறைக்குத் திரும்பினார்...

மனைவி ..மகள்...தாய் மூவரையும் இழந்து விரக்தியடைந்த நிலையிலிருக்கும் குணராசாவுக்கு அப்பா மட்டுமே துணை...அவரையும் இழந்து விட்டால் மிஞ்சிய வாழ்க்கை சூனியமாகிப் போய் விடும்..

அவன் கோப்பி... கோப்பையோடு அவரின் பின்னால் விரைந்தான்...

## வீழ்வோம் என்று நினைத்தீரோ

*வீழ்வோம் என்று நினைத்தீரோ*
*விதியின் கை நூல் பொம்மைகளாய்*
*ஆழ்வோம் துயரில் நெடுகவென*
*அகலக் கனவு கண்டீரோ*
*பாரும் புலத்தில் நடப்பதனை*
*புதிய சந்ததி எம் மிடுக்கை.*
*"இந்து சமுத்திரத்தின் கண்ணீர் துளி"யில்*
*இடர்மிகப் பட்டு உழன்ற பிறகு*
*வந்தேறு குடிகளாய் அலைந்தவர்தாம்*
*எம் தாயும் தந்தையும்.*
*ஆனாலும் இன்று எல்லாத்துறைகளிலும்*
*எம்மவர் ஒளிர்முகங்கள்.*
*புத்தெழில் பொலியும் தமிழ் முகங்கள்.*
*முன்பொருநாள் தமிழ்க் குருவிகள்*
*தமிழில் மட்டுமே பாடின*
*வெறுங்குரலை வாலாயம் செய்த பொழுதிலேயே*
*அவற்றின் குரல்வளைகள் அறுக்கப்பட்டன.*
*உரிமைக் குரலெடுத்த போதெல்லாம்*
*சுட்டுப் பொசுக்க பட்டன.*
*மண்ணில் புதைக்கப்பட்டன.*
*சாட்சிகள் ஏதுமில்லை*
*கேட்பதற்கு எவரும் இல்லை*
*நாங்களும் தமிழ் குருவிக் குஞ்சுகளே.*
*நம் நெஞ்சம் அதை மறப்பதில்லை,*
*நானிலத்து மொழிகளில் எல்லாம்*
*தமிழ் உரிமைகளைப் பாட வல்லோர் நாம்.*
*மறந்துவிடாதீர்கள்*
*நாம் தமிழிலும் உரத்துப் பாடுவோம்*
*எமது குரல்வளைகள் உமக்கு*
*எட்டும் தூரத்தில் இல்லை.*
*ஈழத் திருநாட்டில் எம்மூத்த சந்ததியை*
*முள்வேலிகளுக்குள் முடக்கினீர்கள்*
*வதைமுகாம்களில் உமது சட்டங்கள்*
*வலியுறுத்தப்பட்டன.*
*முள் வேலியின் மேலாக எம்பிப்பறந்து*
*நம்பிக்கையோடு புலத்தில் இறங்கினர்.*
*எம்பெற்றோர்*
*புதுவாழ்வு தொடங்கினர்*
*இன்றது பூக்கிறது காய்க்கிறது கனிகிறது*
*புதுத்தமிழ் உரிமைக்கீதம்*
*உச்சஸ்தாயிக்கு நகர்கிறது.*
*செம்மொழி சீரிய தமிழ் இருக்கை*
*தை மாதம் இனியிங்கு*
*தமிழ் மரபு மாதம்*
*அரச மொழிகளின் ஒன்றாய்*
*அருந்தமிழை*
*எமது குழந்தைகள் பயில்வர்*
*புரிகிறதா உங்களுக்கு?*
*ஓடுக்கப்பட்டவர் நாம் அல்லர்*
*உரிமைகளை ஒவ்வொன்றாய்*
*வென்றெடுப்பவர்கள்.*
*நிலமிழந்தவர் நாமல்லர்.*
*புலத்து மண்ணையும் பூக்க வைப்பவர்கள்.*
*தமிழ் கூறும் பண்டிகைகள்,*
*பண்பாடு, தமிழ்ப்பள்ளி, ஆலயங்கள்*
*அவை கூறும் ஒழுக்கங்கள்*
*அத்தனையும் கட்டமைத்து காப்பவர்கள்.*
*அருந்தமிழின் காவலர்கள்.*
*உமது இனவாதமுரசு மூச்சிழக்கும் காலமிது.*
*ஈழத்தில் நீவிராடிய மரண தாண்டவங்கள்*
*முற்றுப்பெறும் வேளையிது.*
*புதிய தமிழ் சந்ததியின் சுதந்திர பறையொலி*
*திசைகளெங்கும் அதிர்கிறது.*
*ஒரு கடல் அடித்தளப் பூகம்பம் போல.*
*துரத்தினீர்கள் ஏதிலிகளாய்*
*எம் மூத்த சந்ததியை*
*துளிகளாய் விழுந்தார்கள்*
*திசைகளெங்கும் தெறித்து.*
*இன்று துளிகள் எல்லாம் இணைந்தோம்*
*சமுத்திரமானோம்.*
*இது தமிழ் மகா சமுத்திரம்.*
*இதன் அலைகள் ஓய்வறியா.*
*ஒவ்வொரு நாட்டிலும்*
*எமது புதிய தமிழ் சந்ததியின்*
*ஆட்டம் ஆரம்பம்.*
*விடிவெள்ளிகளாய்ச் சுடரும் நாம்*
*வெகுவிரைவில்*
*சூரியர்களாக எம்மைப்பிரகடனம் செய்வோம்.*
*பேரொளி மின்னல்களை*
*வாரி எறிவோம்*
*எம் தாய் நிலம் வெளிக்க!*
*எம் தாய் நிலம் வெளிக்க!*

(_6_ பக்கம் தொடர்ச்சி)

# ஈழ இலக்கியப்போக்கில் திருகோணமலை கலை இலக்கியம்

- கலாபூஷணம், திருமலை நவம்

மூதுார் கிராமிய மணம் கமழும் பாத்திரங்களையும் சம்பவங்களையும் ஆதாரமாக வார்த்து வ.அ. கொழுகொம்பு நாவலைப் படைந்துள்ளார். "எனது கிராமத்து மாந்தர்களை கதாபாத்திரமாககொண்டு என்னால் படைக்கப்பட்ட முதல் நாவல் இதுதான். அதுவே அதன் பெருமை என அவர் குறிப்பிட்டுள்ளார். அதன் பின்பு வ.அ. எழுதிய துறைக்காரன் (1959) வெளிவந்துள்ளது. வ.அ. ஐந்து நவால்களையும் மூன்று குறுநாவல்களையும் ஈழத்து இலக்கழயத்துக்கு தந்துள்ளார்.

பண்டிதர் தி.த.சரவணமுத்துப்பிள்ளை பரம்பரையில் வந்த ந.பாலேஸ்வரிஎன்பார் 1966 ஆம் ஆண்டு சுடர்விளக்கு என்னும் நாவலை படைத்ததுடன் நாவல் இலக்கியத்தின் புதிய பிரவாகமாக பாலேஸ்வரி பார்க்கப்பட்டார். இவர் 12 நாவல்களுக்கு மேல் எழுதி சாதனைப் படைத்த பெண் படைப்பாளி ஆவார். இவருக்குப்பின் 1973ல் க.அருள்சுப்பிரமணியம் எழுதிய அவர்களுக்கு வயது வந்துவிட்டது என்ற நாவல் திருகோணமலை எழுத்தாளர்களை தேசிய நிலைக்கு கொண்டு சென்றது.

திருக்கோணமலையில் நவீன தமிழ்க்கவிதை போக்கொன்று முளைக்கொள்ளத் தொடங்கிய காலம் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இந்த முனைப்புக்கு காரணமாக இருந்தவர்கள் பலர். வே. அகிலேசபிள்ளை, தி.த.கனகசுந்தரம்பிள்ளை, தம்பையாப்பிள்ளை, தி.த.பண்டிதர் சரவணமுத்துப்பிள்ளை, தம்பலகமம் அ.அழகக்கோன், மா.முத்துக்குமாரு புலவர், சட்டம்பி தம்பையா, சு.தம்பையாபிள்ளை போன்றோரைக் குறிப்பிடலாம். இவர்கள் மரபுவழி இலக்கிய வல்லுனர்களாக இருந்த போதிலும் நவீன போக்கை ஆதரித்தவர்களாக காணப்பட்டார்கள்.

மறுமலர்ச்சிக் கவிதை மரபொன்று பாரதியுடன் பிறப்பெடுத்த காலத்தில் வடக்கே நாவற்குழியூர் நடராஜன், அ.ந.கந்தசாமி, சோ. நடராஜா மஹாகவி போன்றவர்கள் நவீக கவிதைகளை எழுதிய அதே சமச்சீரான காலப்பகுதியில் கிழக்கில் நவீன போக்குக்கு அமைவாக கவிதை எழுதியவர்களில் கிண்ணியாவைச் சேர்ந்த அண்ணல் (1930-1974) பிரதானமானவராக கணிக்கப்படுகிறார்.

1945ம் ஆண்டு முதல் தன்னையொரு கவிஞராக அடையாளப்படுத்திக்கொண்ட அண்ணல் எழுதிய கவிதைகள் 1964ல் அண்ணல் கவிதைகள் என்ற தலைப்பில் வெளியிப்பட்டது. வரது கவிதைகளில் தமிழ்த் தாகமும் வாலிப கனவுகளும் சமய நெறிகளும் விரவிக்காணப்பட்டன. காணப்பட்டன. அதே காலப்பகுதியில் தர்மு சிவராமு என்ற கவிஞரின் வருகை (1939-1997) தமிழ் நவீன கவிதைப் போக்கை புதிய பரிமாணத்துக்கு கொண்டு சென்றது.

கவிஞர் அண்ணலைத் தொடர்ந்து சற்று பிந்திய காலத்தில் திருக்கோணமலைக் கவிராயர் (1930-1990) தாமரைத்தீவான், கழகப்புலவர் பெ.பொ. சிவசேகரம், கவிஞர் ஈழவாணன் போன்றவர்களின் வருகை திருக்கோணமலையின் நவீன கவிதைக்கு வளம்சேர்க்க தொடங்கியது.

இவர்களில் தாமரைத்தீவானின் பங்களிப்பு கணிசமான முக்கியத்துவம் கொண்டதாக மதிக்கப்படுகிறது. 1932ல் ஆலங்கேணிக்கருகிலுள்ள தாமரைக்கேணியில் பிறந்த தாமரைத்தீவான் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை எழுதிக்கொண்டேயிருக்கிறார். 1992 இவரது கீறல்கள் என்ற கவிதைத்தொகுதி முதல் முதல் அச்சு வடிவம் பெற்றது தொடர்ந்து (புதிய) எட்டுத்தொகை கவிதைத்தொகுதி வரை. சுமார் 50 மேற்பட்ட கவிதை தொகுதிகள் வெளிவந்துள்ளன. பாரதி பாரதிதாசன் வள்ளுவன் கம்பன் மற்றும் சங்க இலக்கியங்களின் கருத்துக்களை அள்ளித்திரட்டி அழகுமிளிர பாடுவதில் வல்லவரான தீவான் நையாண்டிக்கருத்துக்களை நறுக்கு தெறித்தாற்போல் பாடவல்லவர். மரபுக்கவிதைகள் மீது பற்றுக்கோடும் ஆற்றலும் கொண்ட தாமரைத் தீவான் கவிதைகளில் தமிழ்ப்பற்றும் சமூக தரிசனமும் பரவிக் கிடக்கும்.

திருக்கோணமலை பிரதேசத்தின் ஆரம்பகால சிறுகதைத்துறையின் வளர்ச்சியை நோக்கின் ஈழத்தின் வடக்கே சி.வைத்திலிங்கம், இலங்கையர்கோன், சம்பந்தன், சிவபாதசுந்தரம் போன்றோர் (1930ம் ஆண்டுக்குப்பின்) இவ் வடிவத்தை ஈழத்துக்கு அறிமுகம் செய்தபோதும் அத்தகையதொரு முயற்சிகள் இதே காலப்பகுதியில் திருக்கோணமலையில் மேற்கொள்ளப்பட்டதற்கு ஆதரமெதுவமில்லை.

1950ம் ஆண்டுக்குப்பின் ஈழத்து சிறுகதை முன்னோடிகள் என்ற வகையில் செ.கணேசலிங்கம் டொமினிக்ஜீவா, கே.டானியல், எஸ்.பொ.இநீர்வை பொன்னையன் போன்றோர் சிறுகதைத்துறைக்குள் நுழைந்த காலத்தில் திருக்கோணமலையின் சிறுகதை முன்னோடியாக திகழ்கிறார். வ.அ.இராசரத்தினம். (1925-2001) இவரை ஈழத்தின் புதுமைப்பித்தன் என்று சொல்லக்கூடிய அளவிற்கு திருமலையின் சிறுகதை வரலாறு இவரிடம் இருந்துதான் ஆரம்பமாகிறது. 1948ம் ஆண்டு தினகரனில் வெளிவந்த மழையால் இழந்த காதல் சிறுகதை மூலம் இத்துறைக்குள் நுழைந்த வ.அ. தோணி (1962) என்ற தனது அற்புதமானபடைப்பின் மூலம் திருகோணமலைப்பிரதேச இலக்கியப்படைப்புக்களை உலகத்தரத்துக்கு கொண்டு சென்றார் என்று கூறப்படுகிறது.

இவருக்கு பின்னைய தலைமுறையாக திருக்கோணமலையில் தர்மு சிவராமு, ந.பாலேஸ்வரி, க.சா.அரியநாயகம், தி.அரியநாயகம், த.பி.சுப்பிரமணியம் ராயப்பு போன்றோர் இத்துறைக்கு வளம் சேர்க்க வந்தார்கள்.

இதில் தர்மு சிவராமு ஒருசில சிறுகதைகளை எழுதியபோதும் அவரின் நாட்டம் கவிதைத்துறையாகவே இருந்தது. இதேவேளை பின்னாளில் தினபதி சிந்தாமணி பத்திரிகைளின் பிரதம ஆசிரியராக பணிபுரிந்த திருகோணமலையில் பிறந்த எஸ்.டி. சிவநாயகம் சுதந்திரனில் 1952 எழுதிய சோமாவதி எனும் சிறுகதை (28.12.1952) திருகோணமலையை அடையாளப்படுத்தும் இன்னொருசிறுகதையாக அமைந்து.

ந.பாலேஸ்வரி இலக்கியப்பிரவேசம் அவர் 1957ல் தினகரன் பத்திரிகையில் எழுதிய தெய்வம் என்ற சிறுகதையுடன் இலக்கியப்பணி ஆரம்பமாகிறது. இவரது முதலாவது சிறுகதைத்தொகுதி 1973ல் சுமைதாங்கி என்ற தலைப்பில் வெளிவந்தது. தெய்வம் பேசுவதில்லை (2000) இவரது இரண்டாவது தொகுதியாகும்.

திருக்கோணமலையின் நவீன நாடக மரபுகள், நாவல்துறை போல் சற்று மாறுபட்ட முறையில் 19ம் நூற்றாண்டிலிருந்து வளர்ச்சியடைய ஆரம்பிக்கின்றது.

மரபுவழித் தன்மை கொண்ட கூத்துக்களும், விலாசங்களும் மிக நீண்ட காலமாக திருக்கோணமலை பிரதேசத்தில் வளர்ந்து வந்துள்ளதை அவதானிக்கலாம். குறிப்பாக 18ம் நூற்றாண்டு காலப்பகுதியிலிருந்தே கிராமப்புறங்களிலும், நகரமையப் பகுதியிலும் ஆடப்பட்டு வந்துள்ளதை பல்வேறு ஆதாரங்களின் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

மட்டக்களப்புக்கும், யாழ்ப்பாணத்திற்கும் மையமாக திருகோணமலை காணப்படுவதாலும் வன்னியின் அயலாகவும் இருக்கின்ற காரணத்தினாலும் இந்த பிரதேசங்களிற்கு உரிய அரங்குகள் கலந்த வகையில் உதாரணமாக வடமோடி, தென்மோடி யாழ்ப்பாண விலாசம் ஆகிய மரபுவழி கூத்து முறைகள் இப்பிரதேசத்தில் 18ம் நூற்றாண்டில் இருந்தே ஆடப்பட்டு வந்திருப்பதற்கு பல ஆதாரங்கள் உள்ளன.

இத்தகையதொரு கூத்து முறைகளின் தொடர்ச்சியான வரலாறாகவே நவீன நாடக மரபொன்று 19ம் நூற்றாண்டு முற்பகுதியில் திருக்கோணமலையில் தலைதூக்கிய காலம் அண்ணாவி தம்பிமுத்து காலத்திலிருந்து (1900-1960) ஆரம்பமாகின்றது. அவருக்குப்பின் சி.விசுவலிங்கம், எம்.சி.அந்தோனிப்பிள்ளை, அண்ணாவி சின்னையா, யேசுதாசன் போன்ற புதிய பரம்பரையின் வரவோடு நவீன நாடக மரபு திருக்கோணமலையில் உருவாகியதோடு பல்வேறு நாடக மன்றங்கள் உருவாகி நவீன நாடக பாரம்பரியங்கள் ஈழத்தின் எந்த பகுதியிலும் இல்லாத அளவிற்கு வளர்ச்சிக் கண்டுள்ளது. அதற்கு காரணம் நகரத்திலும், கிராமங்களிலும் பெருந்தொகையான நாடக மன்றங்களும், அரங்குகளும் தோன்றியமையேயாகும்.

இராவண தரிசனம் கொண்ட திருகோணமலையில் கர்நாடகம், மெல்லிசை போன்ற துறைகளின் வளர்ச்சி இன்னொரு துறையாக வளர்ச்சி அடைந்தமையை 19ம் நூற்றாண்டிலிருந்து அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. கோணேசர் கல்வெட்டில் கூறியதைப்போல் கோணேசர் கோயிலை மையப்படுத்தி ஓதுவார்கள், நடனமாதர், சங்கீத விற்பன்னர்கள், வாழ்ந்து பாரம்பரியக்கலைளான நடனக்கை சங்கீதக்கலை மற்றும் பல்வேறு வாத்திக்கலைகளை வளர்த்து வந்துள்ளனர் என்பதற்கு தட்ஷண கைலாசபுராணம் கோணேசர் கல்வெட்டு போன்ற நால்கள் வாயிலாகவும் பிற்காலத்தில் எழுதப்பட்ட நூல்கள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது.

19ம் நூற்றாண்டின் கடைக்கால் பகுதியில் மரபுரீதியான இசைத்துறைக்கு பங்காற்றியவர்களாக வீரக்கோன்முதலியார், வே. அகிலேசபிள்ளை, கார்த்திகேசு குருக்கள், அப்பாத்துறைஜயர், சாம்பசிவம் ஜயர் ஆகியோரைக் குறிப்பிட்டு 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலப்பகுதியில் இத்துறைக்கு தொண்டாற்றியவர்களாக வே.தில்லையம்பலம் மாஸ்ரர், சிவகாமசுந்தரி விஜயரட்ணம், இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ஆகியோரை குறிப்பிடலாம்.

சங்கீதம் என்னும் பாரம்பரிய கலை நிறுவனமயப்படுத்தப்பட்ட வகையில் இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தலைமையில் தட்ஷணகானசபா தோன்றிய காலத்திலிருந்து (1949ம்) ஆரம்பமாகிறது. செல்வி. இராஜராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தினால் (1920-1972) ஆரம்பித்த தட்ஷாணசபா அதைத் தொடர்ந்து பல்வேறு சங்கீத சபைகள் மரபு ரீதியான சங்கீத வளர்ச்சியை வளர்க்க காரணமாகின.

இதேவேளை காலத்தின் தேவைகருதி மெல்லிசை, துறை வளர்ச்சியும், திருக்கோணமலையில் வளர்சியடைய ஆரம்பிக்கிறது. இத்துறையின் பிதாமகனாக திகழ்பவர் திருமலை தாமோதரம்பிள்ளை பத்மநாதனாகும். இவருடன் இம்மானுவல். பரமேஸ் கோணேஷ் போன்ற கலைஞர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்ட திருகோணமலை இசைக்கழகம் (1964) பரமேஸ் கோணேஷ் இசைக்குழு (1968) கலைவாணி இசைக்குழு, கோணேஸ்வரா இசைக்குழு, (1968) நீரோ இசைக்குழு (1973) துரை இசைக்குழு (1979) ஆகியவற்றின் பங்களிப்பு முக்கியமானது. இதில் ஈழத்து இசைத்துறையின் ஜம்பவானாக கருதப்படும் திருமலை பத்மநாதனின் பங்களிப்பு முக்கிய பெறுமதி கொண்டது.

ஈழத்தில் முதல் முதல் தயாரிக்கப்பட்ட நிர்மலா (1966) தென்றலும் புயலும் (1968) ஆகிய திரப்படங்களுக்கு இசையமைத்த பெருமை இவரையே சாரும். இதே போன்றே 1970 ஆம் அண்டளவில் பரமேஸ் கோணேஷ் இசைக்குழுவினர் ஈழத்து மெல்லிசை வரலாற்றில் முதலாவது இசைத்தட்டை வெளியிட்ட பெருமை இவர்களையே சாரும்.

சிறுகதைத் துறையில் வ.அ.இராசரத்தினத்தைத் தொடர்ந்து 1960 பின் ந.பாலேஸ்வரி, க.அருள்சுப்பிரமணியம், தி.அரியநாயம், க.சா.அரியநாயகம் போன்றோர் சிறுகதைத்துறைக்கு வளம்சேர்த்தவர்களாகின்றனர்.

வ.அ. இராசரத்தினத்தின் கதைகளில் மண்வாசனைத் தன்மையும் அருளின் சிறுகதைகளில் தேசியத் தன்மையும், பாலேஸ்வரி அரியநாயகம் புரட்சிபாலன் தா.பி. சுப்பிரமணியம் போன்றோரின் கதைகளில் மெல்லியல் தன்மையும் க.சா. அரியநாயத்தின் கதைகளில் முற்போக்குத் தன்மையும் உள்ளீடாக இருக்க 1970ம் ஆண்டுக்குப்பின் முற்போக்கு சிந்தனை எழுத்தாளர்களான இராஜதருமராஜா, மு.ராஜ்கபூர், க.சா.அரியநாயகம் ஆகியோர் முன் வருகிறார்கள்.

1970ம் ஆண்டுக்குப்பின் கவிதைத் துறையில் ஓர் தேசிய விழிப்பு மிளிர்வதைக் காணலாம். 1971ம் ஆண்டின் சேகுவரா புராட்சி இடதுசாரி வலுவூட்டல்கள் இந்திய கவித்துறை சஞ்சிகைகளின் வருகைகள், புதிய போக்குடைய கவிஞர்கள் இத்துறைக்கு வருவதற்கு காரணங்களாகின்றன. அதற்கு உறுதுணையாக நிறுவனமயப்படுத்தப்பட்ட சமூக இயக்கங்கள், இலக்கிய மன்றங்கள், அரசியல் விழிப்புணர்வுகள் காரணமாகின. ஊதாரணமாக திருவள்ளுவர்கழகம் 1958 திருகோணமலை தமிழ் எழுத்தாளர் சங்கம் 1961 பின்னாளில் முன்னோடிகள், சங்கப்பலகை திருகோணமலை மறுமலாச்சி தமிழ் மன்றம், திருகோணமலை கலை வட்டம், முத்தமிழ் வளர்கலை மன்றம், ஈழத்து இலக்கியசோலை தாகம் கலை இலக்கியவட்டம் ஆகிய அமைப்புக்களை குறிப்படலாம்.

திருக்கோணமலையில் நல்லை அமிழ்தன் தலைமையில் இயங்கிய முன்னோடிகள் கலை இலக்கிய விமர்சகர் குழுவைச் சேர்ந்த பல கவிஞர்கள் இக்காலப்பகுதியில் தமது பல்வேறு பரிமாணங்களை கவிதை துறையில் காட்டினார்.

இராஜதர்மராஜா, திருமலை நவம், புஸ்பா கோமஸ் மு.இராஜ்கபூர், தங்க சச்சிதானந்தம், வின்சன், புதுவை இரத்தினதுரை இரத்தின விக்னேஸ்வரன், ஆசீர்வாதம், சிவலிங்கம், மு. ராஜ்கபூர் மட். வெலிங்டன் ஆனந்தபிரசாத் கி.பவானந்தம் பூநகர் மரியதாஸ் தங்கமகேந்திரன் செ.நவசோதிராஜாநூலகர் ஜோன் செல்வராஜா போன்ற இடதுசாரி சிந்தனையால் ஈர்க்கப்பட்ட இளைஞர் குழாம் இலக்கியத்துறையில் பாரிய பங்களிப்பை செய்தார்கள். பிரதிமாதந்தோறும் நடாத்தப்பட்ட இலக்கி கலந்துரையாடல்கள், உரைகள், விமர்சனங்கள், படைப்புக்களின் அறிமுகம் என்பன நடைபெற்ற காலத்தில் ஈழத்தின் புகழ் பூத்த எழுத்தாளாகளான செம்பியன் செல்வன், செங்கை ஆழியான், என்.கே.ரகுநாதன்,. செ.கணேசலிங்கம், கே.டானியல், சில்லையூர் செல்வராஜன், இக்பால், கலைவாதிகலீல், வி.ரி இளங்கோ, ஷெல்லிதாசன், ராஜம்புஸ்பவனம், பேனா மனோகரன், வ.அ. இராசரத்தினம், ரெஜினா வில்லியம், கஜதர்மா, ந.பாலேஸ்வரி, போன்ற இலக்கியகர்த்தாக்கள் இந்நிகழ்சிகளில் கலந்துகொண்டு திருகோணமலை கலை இலக்கியத்திற்கு புதிய பரிமாணத்தை பாய்ச்சினார்கள்.

முன்னோடி அமைப்பினால் நடாத்தப்பட்ட கவிதை அரங்கில் கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர் லோகேந்திரலிங்கம் கலந்துகொண்டது இவ்வமைப்பினாலையே புதுவை இரத்தினதுரையின் ஒரு தோழனின் காதல் கடிதம் (1974) என்ற கவிதை நூலை வெளியிட்டு வைத்தது எல்லாம் வரலாற்று பதிவுகளாகும் இதே போன்றே பிற்காலத்தில் மெல்லிய மனவயப்பட்ட கவிதைகளை எழுதிய இளைய தலைமுறையினர் இக்காலப்பகுதியில் காணப்பட்டார்கள். ஆலன், நிலா தமிழின்தாசன், திருமலை அ.சந்திரன் போன்றோரின் கவிதைகள் இதற்கு உதாரணமாகும்.

(தொடர்ச்சி _42__ பக்கம்)

(_18__ பக்கம் தொடர்ச்சி)

# வெண்பனிக்குள் சிக்கித்தவிக்கும் வாழ்க்கை

அமுதன், அவுனுக்குள் சூடாக்கிய சாப்பாட்டை எடுத்து வந்து சாப்பாட்டு மேசையில் இருந்து அரைக்கோப்பை அளவில் சாப்பாட்டை வயிற்றுக்குள் செலுத்திய வேளை! *அமுதா திடீரென வயிற்று வலியால் துடித்தாள். உடனே அவன் மலையிலுள்ள பீல் (Bienne) வைத்தியசாலைக்கு தொலைபேசி எடுத்து விடயத்தை கூறியபோது! மறு முனையிலிருந்து உடனே கொண்டு வரும்படி குரல் ஒலித்தது.*

ஏற்கனவே வைத்தியசாலை தேவைக்கென தயார்படுத்தி வைத்திருந்த பொருட்கள் அடங்கிய சூட்கேசையும் எடுத்து, அமுதாவையும் அணைத்தபடி லிப்ற் மூலம் கீழே போனார்கள். அதே நேரம் மழையும் வானத்துடன் மோதலில் ஈடுபட்டு தோற்றுப்போய் நிலத்தை தொட்டது. மழையில் அவள் நனையாதிருக்க அவன் தனது ஜக்கெற்றை கழட்டி மனிசியின் தலைமீது போட்டு காருக்குள் ஏத்தி வைத்தியசாலையில் சேர்த்தான்.

*உடனே நோயாளிகளுக்குரிய தள்ளுவண்டிலில் அவளை மெதுவாக கிடத்தி அறைக்குள் கொண்டு சென்றனர். கொஞ்ச நேரத்தின் பின் அவளை பரிசோதனை செய்த டாக்டர் அவனிடம் வந்து பிள்ளை குறுக்கே கிடக்கிறது. அறுவைச்சிகிச்சை செய்தல் அவசியமென கூறி, ஒரு பேப்பரில் அவனது கையெழுத்தையும் பெற்று சென்றார்.*

“அவனோ எவருமற்று தனிமையில் வைத்தியசாலை விறாந்தையில் இடிந்து போய் உட்கார்ந்திருந்தான். நேரம் செல்லச்செல்ல அவனின் மனம் பேதலித்தது. கனவு வேறு, காட்சி வேறுபோல் என எண்ணினான்.”

“அதிகாலை வரை எந்த தகவலுமற்று கடவுளின் மேல் பாரத்தை போட்டு கண்களை மூடியபடி சிந்தனையில் ஆழ்ந்தான்.”

*அமுதாவின் அப்பாவும், தம்பியும் இலங்கை போரின்போது! செல்லடியில் செத்து போனார்கள்.*

அன்றிலிருந்து அமுதா ஒரே கவலையில் இருந்தாள். முன்னர் சுவிஸிலிருந்து நான் ரெலிபோன் கதைக்கும் போது! போனை வைக்க மனமில்லாது நீண்ட நேரம் குதூகலித்து என்னுடன் பேசுவாள்.

“நீங்கள் அனுப்பிய காசில் அம்மாக்கு சீலை வாங்கினன், எனக்கு பஞ்சாபி எடுத்தன், தம்பிக்கு ரவுசர் எடுத்து கொடுத்தன் என மகிழ்ந்து கூறுவாள்”

“ஓ.. ஓ.. ஊரன் வீட்டு காசில் உங்களுக்கு கொண்டாட்டமோ என நான் கேட்டால்? நீங்கள் வேறு, நாங்கள் வேறா? என சொல்லி சிரிப்பாள். அவளின் சிரிப்போ தனி அழகு. முத்துபரல்கள் போன்ற அவளது பல் வரிசையும், கன்னத்து குழியும் பார்ப்பவர்களை மீண்டும் பார்க்கத்தூண்டும்.”

*அனால் தகப்பன், தம்பியை செல்லுக்கு இரை கொடுத்தபின் என்னுடன் அதிகம் பேசுவதில்லை. அவளின் கல கலப்பு, சிரிப்பு எங்கோ தொலைந்து போனது.*

அமுதாவின் அம்மா, நான் தொலைபேசியில் கதைக்கும்போது! மகளை கெதியாக சுவிஸுக்கு கூப்பிடும்படி சொல்ல தொடங்கினா. அனால் அமுதா இதுபற்றி வாயே திறப்பதில்லை.

“நான் சுவிஸுக்கு எப்படியும் எடுப்பன் என தெரிந்து கொண்டு அமைதியாக இருந்தாளோ என்னவோ தெரியவில்லை.”

அவளது சோக நிலமையை உணர்ந்த பின்பே எனக்கு காலியாண வயதில் ஒரு தங்கச்சி இருந்தும் அமுதாவை கூப்பிடும் முடிவுக்கு வந்தேன்.

அவளை நான் சுவிஸ் அரசின் ஆதரவுடன் (Sponsor) எடுப்பதற்காக பதிவு திருமணம் செய்து கொள்ள இலங்கைக்கு சென்றேன். எனது வீட்டுக்கு முதல் போய் அம்மா, அய்யா, சகோதரங்களை சந்தித்த பின் பொலிகண்டியிலுள்ள அமுதா வீட்டுக்கு சென்றேன்.

“அங்கு எல்லோரும் நிலை குலைந்து போய் இருந்ததை என்னால் அவதானிக்க முடிந்தது. என்னை கண்டதும் அமுதாவின் தாயின் கண்களிலிருந்து பெருகிய நீர் கோடு போட்டு அவளது கன்னத்தை நனைத்தது.”

*அமுதா ஓடிவந்து என்னை கட்டி அணைத்து என் மார்போடு சேர்த்து தன்னை அணைத்தபடி குலுங்கி, குலுங்கி அழுதாள். அவளின் கண்ணீர் எனது நீல நிற ரீ சேட்டை நனைத்து ஈரமாக்கியது. அவள் அழுவதை பார்த்த போது! நானும் அழணும் போல தோன்றியது. அனால் நான் அழவில்லை. எனது களிசான் பொக்கற்றுள் கையை விட்டு கை லேஞ்சியை எடுத்து அவள் கண்களை துடைத்தேன்.*

“மனிசி ஊரில் தாயுடன் இருந்திருந்தால் இப்படி இக்கட்டான நிலை தோற்றம் பெற்றிருக்காது அல்லவா..? சுகப்பிரசவமும் நடந்திருக்கும். எல்லோரும் சந்தோசப்பட்டுமிருப்பார்கள்.”

யாரோ ஒருவரின் குரல் கேட்டு தலையை உயர்த்தி பார்த்தான். ஒரு வெள்ளக்கார தாதி அவன் முன்னால் நின்றாள்.

“வணக்கம். உங்களுக்கு பெண் குழந்தை கிடைத்துள்ளது. பிள்ளை நல்ல சுகம். தாயை எங்கள் கண்காணிப்பில்தான் வைத்திருக்கிறோம். நீங்கள் பார்க்க முடியாது. இரவிலிருந்து இங்கேயே கண்விழித்து இருக்கின்றீர்கள். கன்ரீன் போய் எதாவது சாப்பிட்டு, கவ்வே (Coffee) குடித்து விட்டு வாருங்கள். ஏதும் மனிசியுடன் பேச வேண்டுமானால் உங்களை அழைப்போம். என தனது மொழியில் கூறிச்சென்றாள்.”

“அவள் சென்ற பாதையையே பார்த்த வண்ணம் கண்கள் கலங்கினான்.”

“விடிந்து விட்டது. ஒன்பது மணிக்கு வேலைக்கு போக வேண்டும். ஏற்கனவே முதலாளியுடன் அமுதனுக்கு ஆகாது. ஒருநாள் லீவு என்றால் கொடுப்பான். ஒரு கிழமை லீவு சாத்தியப்படாது. அழைப்பெடுத்து விடயத்தை கூறினாலும் அவன் ஏற்றுக்கொள்ள மாட்டான்.”

“இந்த நிலமையில் மனிசியை தனிய விட்டு போகமுடியாது. அவளுக்கு மொழிவேறு தெரியாது. மனிசிக்கு உடனடி தேவை ஒரு துணை. நானும் வேலைக்கு சென்று விட்டால்! அவள் நிலை..?”

“ஆண்டவனே இந்த நாட்டில் ஏன் எனக்கு இந்த சோதனை..? கொறோணா சூழ்நிலையில் இருக்கும் வேலையை கைவிட்டால் வேறு வேலை எடுப்பது குதிரைக்கொம்பு. வேலையா அல்லது குடும்பமா என்ற மனப்போராட்டம் மனதுள் முட்டி, மோதியது.”

*ஈற்றில் குடும்பமே என்ற கனத்த முடிவுடன் வேலையை துறக்க தீர்மானித்தான் கவலை பொங்க, அமுதன்.*

**********

P.Jeyakody
(பொலிகை ஜெயா)
Flur weg.12
2504.Biel/Bienne
07.03.2022
WhatsUp no:- 0041789274795

# எதிர்மறை வினை

*அன்பு காட்டியவன்*
*அரவணைக்கப்படுவான்*
*ஆத்திரமுற்றவன்*
*ஆண்டியாய் போவான்*
*அறிஞர் குழாமில்..நீ*
*அறிவிலியாக புகுந்து விடின்*
*அவமானப்படுவாய்*
*அரசினை நம்பி*
*புருசனை கைவிட்டால்*
*உனக்கேது குழந்தை*
*இயலாதென்பது..மடமை*
*இயலுமென்பது..வாழ்வில்*
*இன்னலை தவிர்க்கும்*
*இதயத்தை நேசி*
*இன்பம் பெறலாம்*
*உள்ளத்தை விரும்பு*
*உடலாரோக்கியம் கிட்டும்*
*உளி விழுவது வலியென..கல்*
*நினைத்தால் ..சிற்பமாகா*
*கண்விழித்து கல்வி*
*கற்க மறுப்பின்*
*காலமெல்லாம் கசந்திடும்*
*உன் வாழ்க்கை*
*கை கோர்த்துப்பார்*
*கர்வம் தூர விலகிவிடும்*
*கானல் நீரை நம்பி*
*கையிலுள்ள நீரை*
*கொட்டிவிடாதே*
*பின்னர் குடிக்க*
*ஏதுனக்கு.. நீர்*
*காற்று வீச மறுப்பின்*
*பூலோகம் பூகம்பமாகிவிடும்*
*தடி கொண்டால்..நீ*
*தண்டல்க்காரன்*
*தடி விட்டால்..நீ*
*போடுவாய் முட்டி*
*தெய்வத்தை நம்பில்*
*தெய்வீக சக்தியை உணரலாம்*
*செருப்பு கடிக்குமென்றால்..காலில்*
*முள் குத்தவே செய்யும்*
*வறுமைக்குள் சிக்கிப்பார்*
*வாழ்வில் பண்பு*
*பன்மடங்காகும்*

- சுவிஸிலிருந்து பொலிகை ஜெயா

# மலையக எழுத்தாளர் திரு.மு.சிவலிங்கம்

- *எச்.எச்.விக்கிரமசிங்க.*

மலையக அரசியல், தொழிற்சங்க, கலை இலக்கிய, பத்திரிகை, சினிமா, ஆசிரியர் பணி என்று எடுத்துக்கொண்டால் அவற்றில் மாபெரும் சாதனை புரிந்த ஒரு பெரும் ஆளுமையாக கொள்ளத்தக்கவர் ஈழத்து முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரான மு. சிவலிங்கம்.

தலவாக்கலை, பெரியமல்லிப்பூ, தோட்டத்தில் முத்து முருகன் அழகன், கண்ணம்மா தம்பதிகளுக்கு மகனாக 26.08.1946இல் பிறந்தவர். ஆரம்பக் கல்வியை தோட்டப் பாடசாலையிலும் பின்னர் சென்ற் பெட்றிக்ஸ் கல்லூரியிலும் உயர்கல்வியை அட்டன் ஹைலன்ஸ் கல்லூரியிலும் பயின்றவர். இர.சிவலிங்கம், எஸ்.திருச் செந்தூரன் ஆகியோரின் மாணவரான இவர் க.பொ.த உயர்தர பரீட்சையை எழுதிவிட்டு வீரகேசரியில் அச்சுக் கோப்பாளராக இணைந்து, ஒப்பு நோக்காளராக இணைந்து, ஒப்பு நோக்காளராக தொடர்ந்து, உதவியாசிரியரானார். அக்காலத்தில் எஸ்.டி. சிவநாயகம், எஸ்.எம். கார்மேகம் ஆகியோரின் உந்துதல் காரணமாக எழுதத் தொடங்கியதாக இன்றும் நன்றியுடன் நினைவுகூரும் இவர், வீரகேசரி தோட்ட மஞ்சரியில் 'கங்காணி காளிமுத்து' என்ற கேலிச்சித்திரத் தொடரை எழுதியவர்.



இவரது எழுத்து நடையோடு உதவி ஆசிரியர் கே.நித்தியானந்தன் அதற்கான ஓவியங்களை வரைந்தவர்.

இப்பகுதியை அக்காலத்தில் பெருந்தோட்டத் துறையில் மிக பரவலாக வாசித்தார்கள். அதன் பின்னர் ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஏ.அஸீஸ் தங்கள் தொழிற்சங்க பத்திரிகையான 'ஜனநாயக தொழிலாளியின்' பொறுப்பாசிரியர் ஆக்கினார்.

தெளிவத்தை ஜோசப் கதை வசனம் எழுதி அக்காலகட்டத்தில் ஜ.தொ.கா. பொதுச் செயலாளரான வி.பி.கணேசன் 'புதிய காற்று' என்ற திரைப்படத்தினை தயாரித்தபோது அதன் இயக்குனரான மாத்தளை எஸ்.இராமநாதன் அவர்களுக்கு உதவி இயக்குனராக செயற்பட்டார். அத்திரைப்படத்தில் தொழிற்சங்கத் தலைவர் என்ற பாத்திரம் ஏற்று நடித்தார். அக்கரப்பத்தனை ஊட்டுவள்ளி தோட்டத்தில் பாடசாலை நேரத்தில் ஆசிரியராகவும் மாலைநேரத்தில் தோட்ட காரியாலயத்தில் பணியாற்றி வந்த காலத்தில் தோட்ட உத்தியோகஸ்தர்கள் தொழிலாளர்களுடன் பழகக்கூடாது, தோட்ட லயன்களுக்கு செல்லக்கூடாது, தொழிலாளர்களின் மரண நிகழ்வுகளில் பங்கேற்கக் கூடாது என்று ஒரு நடைமுறை இருந்தது. தனது தோட்ட உத்தியோக நண்பர்களுடன் மு.சி. இந்த விதிமுறையை மாற்றி அமைக்க காரணமாக இருந்தார். பிரித்தானிய பழைமைவாத கலாசாரம் 1960களின் இறுதிப் பகுதியில் ஒழித்துக்கட்டப்பட்டது.

அக்கரப்பத்தனை தமிழ் வித்தியாலயத்தில் ஆங்கில ஆசிரியராக நியமனம் பெற்ற காலகட்டத்தில் வி.டி.தர்மலிங்கம், பெ.சந்திரசேகரன் ஆகியோரின் நட்பு கிடைத்துள்ளது. 1977 ஜுலை கலவரத்தில் நுவரேலியாக மாவட்டத்தில் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டன. பெ.சந்திரசேகரன், பி.செல்வராஜ் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்த இளைஞர் எழுச்சிக் கூட்டங்களில் ஆசிரியர் திருச்செந்தூரனும் மு.சி.யும் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியுள்ளனர். அக்கூட்டத்தில் கலவரங்கள் ஏற்படும் போதெல்லாம் இந்தியாவுக்கு மாற்றிவிட வேண்டும். இனவாதிகள் தாக்கினால் எதிரியுடன் எதிர்த்து நிற்கும்போது தான் அவர்களுடன் இணைந்து வாழமுடியும் என்ற சித்தாந்தத்தை இளைஞர்களிடம் முன்வைத்தனர். இந்த இளைஞர்கள் சந்திப்பும் இவர்கள் எடுத்த நிலைப்பாடுகள் பிற்காலத்தில் நடந்த இனக்கலவரங்களில் மலையக மக்கள் துணிவுடன் எதிர்த்து நின்றனர்.

1983இல் ஜுலை கலவரத்தின் போது மலையக இளைஞர்கள் இனவாதிகளின் தாக்குதலுக்கு எதிர்த்தாக்குதல் நடத்தினர். 1989இல் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இ.தொ.கா.வில் போட்டியிட பெ.சந்திரசேகரனுக்கு சந்தர்ப்பம் வழங்காமையினால் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியில் (புளொட்) இணைந்து நங்கூரம் சின்னத்தில் முதல் தடவையாக தேர்தலில் பெ.சந்திரசேகரனும், மு.சிவலிங்கமும் பிரதான வேட்பாளராக போட்டியிட்டனர். பெருந்தொகையான வாக்குகள் நிராகரிக்கப்படவே 10,509 வாக்குகளைப் பெற்றனர். இந்த தேர்தல் களம் இ.தொ.காவிற்கு பெரிதும் பின்னடைவை ஏற்படுத்தியது. எனினும் தலைவர் எஸ்.தொண்டமான் தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்றம் சென்றார். தொடர்ந்து 1989இல் மலையக மக்கள் முன்னணி என்ற அரசியல் கட்சியையும், மலைக தொழிலாளர் முன்னணி என்ற தொழிற் சங்கத்தினையும் தோற்றுவித்தனர். முன்னணியின் உபதலைவராகவும் புதிய காற்று பத்திரிகையின் ஆசிரியராகவும் மு.சி. பொறுப்பேற்றார்.

மலைநாட்டு நல்வாழ்வு வாலிபர் சங்கம், மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் ஆகியவற்றில் தன்னை இணைத்துக் கொண்டு செயற்படலானார். மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் வீரகேசியுடன் இணைந்து நடத்திய மூன்றாவது மலையக சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசையும், நான்காவது சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசையும் பெற்றார். அட்டனில் நடைபெற்ற மலைநாட்டு எழுத்தாளர் மன்ற ஏழாவது ஆண்டு விழாவில் (14.01.1971) மு.சிவலிங்கம் வரவேற்புரையை நிகழ்த்தி ஆண்டு விழாவை ஆரம்பித்து வைத்தார். 1960களின் பிற்பகுதியில் மலையக இளைஞர் முன்னணியின் மத்தியகுழு உறுப்பினரானார். முன்னணி வெளியிட்டு முன்னணி இதழின் ஆசிரியரான வனராஜன் என்ற புனைப்பெயர் கொண்ட ஆ.சுப்பிரமணியம் தாயகம் திரும்பவே முன்னணியின் ஆசிரியர் பொறுப்பை மு.சி. ஏற்றார்.

மலையக மக்கள் முன்னணி 1994 பொதுத் தேர்தலில் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிட்டு ஒரு ஆசனத்தை பெற்றது. கட்சியை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற சிந்தனையின் ஆசிரியராக பணியாற்றிய மு.சிவலிங்கம், வி.டி.தர்மலிங்கம் ஆசிரியர் பணியை விட்டு விலகி முழுநேர அரசியல் தொழிற்சங்கப்பணியில் ஈடுபட்டனர்.

மு.சிவலிங்கம், ராஜகுலேந்திரா இருவரும் 1999இல் நடந்த மத்திய மாகாண சபை தேர்தலில் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிட்டு வெற்றி பெற்றனர். சிவலிங்கம் மாகாண சபையின் உப தலைவராக நியமனம் பெற்றார். இவர் தனக்கு இருந்த வளங்களை மேற்கொண்டார். 2005ஆம் ஆண்டளவில் கருத்து முரண்பாடு காரணமாக மலையக மக்கள் முன்னணியில் இருந்து விலகிக் கொண்டார்.

அரசியல் செயற்பாட்டில் இருந்து ஒதுங்கி சமூக, அரசியல், எழுத்துத் துறையில் ஈடுபட்டு தற்போது தொடர்ந்து இயங்கி வருகின்றார். இவரது 13 சிறுகதைகளை தொகுத்து 'மலையக மக்கள்' என்ற நூலை பிரபல இலக்கியவாதி மாத்தளை கார்த்திகேசு தனது குறிஞ்சி பதிப்பகத்தில் வெளியிட்டார். அத்தொகுதி அவ் ஆண்டு சிறந்த சிறுகதைக்கான தேசிய சாகித்திய விருதையும், விபவி இலக்கிய நிறுவனத்தில் விருதையும் பெற்றுக்கொண்டது. தொடர்ந்து மு.சி. 'ஒரு விதை நெல்', 'ஒப்பாரி கோச்சி', 'வெந்து தணிந்தது காலம்', 'சிறுவர் பண்ணைகள்' என்ற சிறுகதை தொகுப்புகளையும் கவிமணி சி.வி. வேலுப்பிள்ளையின் (Born to labour, உழைக்கப் பிறந்தவர்கள்) என்ற ஆங்கில தொகுப்பை தேயிலையின் தேசம் என தமிழாக்கம் செய்திருக்கின்றார். நாட்டுப்புற பாடல்கள் என்ற ஒரு ஆய்வு நூலையும் தந்துள்ளார். தனது நான்கு படைப்புகளுக்கு அரச சாகித்திய விருதினையும், கலாபூஷன விருதினையும், கனக செல்விநாதன் விருதினையும் பெற்று மலையகத்திற்கு பெருமை சேர்ந்திருக்கின்றார்.

---

# தங்கமகன் லோகன் வாழ்க!



கண்ணீரை இனிப்பாக்கும் கவிதைகளின் புலவவே வாழ்க!
கதைகளை விழிப்பாக்கும் வரிகளின் கலைஞனே வாழ்க!
பன்னீரை வாசமாக்கும் பாசத்தின் பாவலனே வாழ்க!
படிகளை உயரமாக்கும் நேசத்தின் நாவலனே வாழ்க!

காலத்தின் தென்றலில் மகிழும் இலக்கியமே வாழ்க!
கருணையின் வெள்ளத்தில் குளிக்கும் இலக்கணமே வாழ்க!
உலகத்தின் நட்பில் நிமிரும் இலட்சியமே வாழ்க!
உள்ளத்தின் தெளிவில் வளரும் இனியவனே வாழ்க!

எண்ணியதை முடிக்கும் எழுத்தின் எளிமையே வாழ்க!
ஏழ்மையை மாத்தும் சிவப்பின் கடமையே வாழ்க!
விண்ணை வசமாக்கும் வெற்றியின் படிமமே வாழ்க!
விடியலை நிசமாக்கும் சக்தியின் சமத்துவமே வாழ்க!

கவிதை மழையில் நனையும் புலமையே வாழ்க!
காதல்(பாப்பா) நிலவில் குளிரும் இளமையே வாழ்க!
புதினத் தேரில் உலவும் **கனடாஉதயனே** வாழ்க!
பூக்களின் அழகில் சிரிக்கும் மனித நேயமே வாழ்க!

மண்ணின் மக்களுக்கு அள்ளிக்கொடுக்கும் வள்ளளே வாழ்க!
மலரும் முகங்களுக்கு அளவின்றி வழங்கும் உள்ளமே வாழ்க!
கண்ணில் புரியும் கிராமத்தை எழுதும் தோழமையே வாழ்க!
கவலைகளை மறக்கும் வரிகளை வார்க்கும் ஆளுமையே

வாழ்க!

மாங்கனித் தீவில் மலர்ந்த பூங்கனியே வாழ்க!
மக்கள் மனசில் நிறைந்த தேன்மொழியே வாழ்க!
சங்கப் பலகையில் அமர்ந்த மணிமகனே வாழ்க!
சமத்துவ நெறியில் வளர்ந்த அம்மா யுகனே வாழ்க!

**- அன்புடன் திருநெல்வேலி மக்கள்.**

---

# வேக நடை

வீதியில் வேகமாக நடவுங்கள்
மீது வாழ்வு நன்றே சிறக்கும்
பாதி அறிவு தானே வளரும்



ஆடம்பரம் இல்லா அப்பியாசம்
கூட வருவோரும் நன்றே வளரலாம்
கூடும் மனிதர் கண்டு களிக்கலாம்

நாடும் நடப்பும் அறிந்து கொள்ளலாம்
தெருவில் வாகன நெரிசல் குறையும்
பருவ சூழலுக்கு உடல் பழகும்

பாரில் சிறந்த அப்பியாசம்
காரில் போவோர் நோய்கள் வளரும்
சுவர் ஒட்டிகள் வாசித்து அறியலாம்

மனதின் மனத்தை நன்று அறியலாம்
தளிர் அழகு இன்பம் தரும்
மிளிரும் அரும்புகள் கண்டு கழிக்கலாம்

**- சி.குமாரலிங்கம்**
நல்லூர், யாழ்ப்பாணம்.

(_17__ பக்கத் தொடர்ச்சி)

-----------------------------------

# இலக்கிய–கலை–சமூக தள பொன்விழா நாயகர் லோகேந்திர லிங்கம் அவர்களின் ஊடக மகன் உதயன், பொன்விழா காணட்டும்! தமிழன்னையும் துணை நல்கட்டும்!!

-----------------------------------

அன்றைய காலக்கட்டத்தில் பணிபுரிந்த நாளேட்டிற்காக செய்தி சேகரிக்கச் சென்றதால், இந்தப் பொன்னான கருத்துடைய நன்மாந்தரை அறியவும் அவரை எந்நாளும் என் மனதில் இறுத்திக் கொள்ளவுமான நல்வாய்ப்பு அமைந்தது; அந்த நாள் ஜூலை 21, 2007.

அண்ணல் காந்தி பிறந்த அக்டோபர் 02-ஆம் நாளை உலக அகிம்சை நாளாகக் கொண்டாடும் முடிவை ஐநா மன்றத்தின் யுனெஸ்கோ அமைப்பு முடிவெடுத்ததும், இதே 2007-ஆம் ஆண்டில்தான்.

இப்போது, அடுத்த 15 ஆண்டுகளில் அதேக் காந்தியை மதவாதத்தால் கொன்று தீர்த்தவரைக் கொண்டாடும் நிலை எழுந்ததற்கு மதவாதம்தான் பளிச்சென்ற காரணம். இத்தகைய மதவாதம், இந்த நாடு; அந்த நாடு என்றில்லை; எந்த நாட்டிலும் இத்தகைய மதவாதக் கொள்கையும் அதை உள்ளடக்கிய வலச்சாரி சிந்தனையும் பரவி-விரவி வருவதை, பொதுவாகக் காண முடிகிறது.

அண்மையில் பிரான்சு நாட்டின் அதிபர் இமானுவேல் மெக்ரோன் கூட, தட்டுத்தடுமாறித்தான் மதவாதத்தின் பிடியிலிருந்து தப்பிப் பிழைத்து, அந்நாட்டின் அதிபராக இரண்டாவது முறையாகத் தேர்வானார்.

மலேசியாவிலும், மலாய் இனத்தவர் பெரும்பான்மையாக இருப்பதால், இந்த பெரும்பான்மை இன மக்களின் சமயமான இஸ்லாத்தின் அடிப்படையில், “மலாய் முஸ்லிம் அதிகாரம்” என்னும் புதியவகை அரசியல் சித்தாந்தத்தை ஒருசில கட்சிகள் முன்னெடுக்கின்றன.

ஆனாலும், இந்த மண்ணுக்கே உரிய சமய நல்லிணக்கப் போக்கும் இன இணக்கமும் பல இன கலாச்சாரமும் அத்தகைய குறுகிய அரசியல் போக்கை வென்று வருகின்றன.

உலகில் இன்று நிலவும் மத சண்டித்தனத்தை 15 ஆண்டுகளுக்கு முன்னமே அவதானித்ததாலோ என்னவோ, சமய நல்லிணக்கக் கருத்தை, உலகளாவிய தமிழ்ப் பெருமக்கள் தம் பண்பாட்டு மேன்மையை மேலும் செம்மைப்படுத்த குழுமியிருந்த அந்த வேளையில் வெளிப்படுத்தினாரோ என்று எண்ணிப் பார்க்கிறேன்.

இப்படிப்பட்ட இந்த ஊடகத் திருமகனார்க்கு இன்று, மே 23, பிறந்த நாள்!

1990-ஆம் ஆண்டுகளின் தொடக்கத்தில் கனடாவிற்கு குடும்பத்தோடு குடிபெயர்ந்த திருவாளர் நாகமணி லோகேந்திரனார், பல்லாயிரக் கணக்கில் அங்கு வாழ்ந்த தமிழ் மக்களுடன் இணைந்து, புதிய நிலத்திற்குரிய அரசியல்-பண்பாட்டு- பல இன கலாச்சாரக் கூறுகளை அவதானித்து, தன்னையும் தக அமைத்துக் கொண்டு வாழ்வைத் தொடர்ந்து வருகிறார்.

தமிழகத்தின் நியூஸ்7தமிழ் தொலைக்காட்சிக்கு அளித்த செவ்வியில் திரு. நாகமணி லோகேந்திரம் அவர்கள், குறிப்பிட்டதைப் போல, பல்லாயிரக் கணக்கான ஈழத் தமிழ் மக்கள் ஒருமித்து, ஒருங்கே சங்கமித்து வாழ முற்பட்ட வேளையில் ஓர் ஆபரண அகம், ஒரு துணிக் கடை, ஒரு புத்தகக் கடை, ஒரு மளிகைக் கடை போன்றவைக்கு எழுந்த தேவையைப் போல, தமிழர்களை ஒருங்கிணைக்கவும் தகவல் பரிமாற்றத்திற்கும் ஓர் ஊடகமும் அவசியம் என்பதை உணர்ந்த வேளையில் உதயமானதுதான் இந்த உதயன் என்று குறிப்பிட்டார்; இது முற்றிலும் உண்மைதான்.

கடந்த ஆண்டில் வெள்ளி விழாவைக் கொண்டாடிவிட்டு, அந்த உதயன் என்னும் பருவ-இணைய இதழை பொன் விழாவை நோக்கி நகர்த்தும் இந்தத் தருணத்தில் இவரின் எழுத்தாற்றலும் கவிதை வளமும் ஒருங்கிணைந்த இலக்கியப் படைப்பாற்றல், தமிழியப் பண்பாடுசார் கலை வளர்த்தல், ஊடகத்தை வழிநடத்துதல், பிறந்த மண்ணிலும் வாழும் நிலத்திலும் நலிந்தோரை நாடி நல்லாதரவு நல்குதல், இவை யாவற்றுக்கும் மேலாக உயிரணைய தமிழ் மொழி வளர்ச்சிக்கு பாடாற்றுதல் என பன்முகப்பட்ட இவரின் சமுதாயப் பயணம் பொன் விழாவைத் தொட்டு நிற்கின்ற இந்த வேளையில், இவரின் பிறந்த நாளும் இன்று பாங்குற பொருந்தி நிற்கிறது..

இந்தவேளையில், வரும் வெள்ளிக்கிழமை 2022 மேத் திங்கள் 27-ஆம் நாளில் மலரவிருக்கின்ற உதயன் பருவ இதழ், இலங்கை-ஈழச் சிறப்பிதழாக மலர இருப்பதை அறிந்து உதயனின் உற்ற வாசகன் என்னும் முறையில் மிகவும் மகிழ்கின்றேன்.

இவர் வாரப் பத்திரிகையை நடத்திக் கொண்டு, கூடவே இணைய இதழையும் இமைப்பொழுதுதோறும் புதுப்பித்துக் கொண்டு, சமூக வெளியிலும் அரசியல்-சமூக-கலை-கலாச்சார நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிகிறதென்றால், இவரின் அயராத உழைப்பும் தேனீயைப் போன்ற பரபரப்பும் காரணம் என்பதில் ஐயமில்லை.

உதயனின் ஊடகப் பயணத்தில் தந்தையுடன் இணைந்து சளைக்காமல் பாடாற்றும் இவரின் அன்பு மகள் திருமதி ஜனனிகூட, “கடின உழைப்பு.., கடின உழைப்பு என எந்த நேரமும் செயல்பட்டுக் கொண்டே இருக்கும் அப்பா, ஓயாத செயல்பாட்டுக்குச் சொந்தக்காரர் என்றார்.

அதைவிட, இன உணர்வும் மொழிப்பற்றும் மிகுந்திட்ட அப்பா, உதவி என்று நாடிவரும் எவரையும், வேறு இடத்தைத் தேடச்சொல்லி கைவிட்டுவிட மாட்டார். தம் இனம்; தம் மக்கள் என தமிழ் மக்களின்பால் தளராத பற்றுகொண்டு, ஆலய வளர்ச்சி, பாட சாலை மேம்பாடு, பொது மண்டப உருவாக்கம், கலை-இசை நிகழ்ச்சி ஆதரவு என எந்த நேரமும் ஏதாவது களப்பணியில் ஈடுபட்டுக் கொண்டே இருப்பார் என்று, தன் தந்தையாரைப் பற்றி ஜனனி நினைவுகூர்ந்தார்.

நினைவில் வாழும் கலைஞர் மு.கருணாநிதி ஒருமுறை, “உழைப்பு.. உழைப்பு.. . உழைப்பு; அதன் மறுபெயர்தான் ஸ்டாலின்” என்றார். இது, ஒரு தந்தை தன் மகனைப் பற்றி சொன்னது; இங்கு, ஒரு மகள், தன் தந்தையைப் பற்றி அதேவிதத்தில் சொன்னதைப் போல நான் உணர்கிறேன்.

அதேவேளை, குறித்த நேரத்தில் குறிப்பிட்ட பணியை முடிக்கவில்லையெனில் எவராக இருந்தாலும் அப்பாவிற்கு வரும் கோபம் அலாதியானது; இருந்தபோதும், இது நல்ல அம்சமா அல்லது கெட்ட பண்பா என்று என்னால் அவதானிக்க முடியவில்லை என்றும் சொன்னார் ஜனனி.

என்னதான், சுறுசுறுப்பிற்கும் ஓயாத உழைப்புக்கும் வருமுன் அவதானிக்கும் பண்புநலனுக்கும் சொந்தக்காரராக இருந்தாலும், இல்லத்தில் இவரின் சிந்தனைக்கு ஏற்ப செயல்படும் அன்புத் துணைவியாரின் ஒத்துழைப்பும் அனுசரணையும் ஈடுபாடும் இல்லாவிடில், இந்த அளவிற்கு இவரால் அகலக் கால் வைத்து செயல்பட முடியாது.

இவருக்கு கிட்டும் பெருமையிலும் புகழிலும் பாதி அந்த அன்பு அண்ணியாருக்கு சொந்தம் என்பது மறுக்கமுடியாத உண்மை.

**வாழ்க உதயன்!**
**வளர்க உதயன் குடும்பம்!!**

உதயனுக்கும் உதயன் குடும்பத்திற்கும் வேராகவும் விழுதாகவும் விளங்கும் திருவாளர் நாகமணி லோகேந்திரலிங்கம் அவர்கள் வாழ்க.. வாழ்க; நீடு வாழ்க!

இவர் பிறந்த இன்றைய மே 23, தமிழ் ஈழ வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க நாளும் ஆகும். மட்டக்களப்பு நகரை, போர்த்துகீசியரிடம் இருந்து ஒல்லாந்தர் கைப்பற்றியதும் இதே நாளில்தான்; ஆண்டுதான் 1633.

**நக்கீரன் - Nakkeeran 013-244 36 24**

---

**Dr. R. PRATAPKUMAR,** M.A., M.L., M.B.A., Ph.D.,
STATE INFORMATION COMMISSIONER

RIGHT TO INFORMATION ACT-2005

TAMIL NADU INFORMATION COMMISSION
No. 19, Government Farm Village,
Pempet, Nandanam, Chennai - 600 035.
Phone : 044-2951 5537
Mobile : 98410 27667
E-mail : solicitorpratap@gmail.com

**வாழ்த்துரை**

ஐம்பது ஆண்டு கால கலை, இலக்கிய சமூக மற்றும் ஊடக பயணத்தில் சிறப்பாக செயலாற்றி வரும் **திரு ஆர். என். லோகேந்திரலிங்கம்** அவர்கள் சிறந்த எழுத்து போராளி, சோர்வறியா உழைப்பாளி.

மலேசிய தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கான நாவன்மை 2022 எனும் நிகழ்ச்சியை கடல் கடந்தும், இனிய தமிழினை வளர்த்து வருவது சிறப்பு.

தமிழ்ப்பத்திரிகையின் புகழையும், சுயமரியாதையையும் **கனடிய** அரசாங்கத்தின் மத்தியில் மட்டுமல்லாமல், பல தளங்களிலும் புகழுற, பெரும் பங்காற்றியுள்ளார் இவர்.

கனடா உதயன் இலங்கை சிறப்பிதழ் மற்றும் அவருடைய ஐம்பதாண்டு கால எழுத்துலக சேவையை பாராட்டி, மே 29ஆம் தேதி **கனடா** ஸ்கார்புரோ நகரில் நடைபெறும் கோலாகல பல்சுவை நிகழ்ச்சி சிறப்புறவும், அவரின் பல்துறை சேவைகளை பாராட்டியும் எனது **வாழ்த்துகளை** தெரிவித்துக் கொள்கிறேன்.

முனைவர். ரா. பிரதாப்குமார்
மாநில. தகவல் ஆணையர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
நந்தனம், சென்னை - 600 035

கனடா உதயனின் "இலங்கைச் சிறப்பிதழ்"

# அடக்கமும் முடக்கமும்

(சிறுகதை)

- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் -

"ஹாட்அடக் பிடித்து ஹொஸ்பிடலுக்குக் கொண்டு செல்லப்பட்ட வாப்பா, இப்படித் திடீரென மௌத்தாகுவாரென ரமீஸோ அவனது குடும்பத்தவர்களோ கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

'ஹாப்சென்சரி' யைக் கடந்து நான்கு வருடங்களே அவருக்கு. ஊர் ஸ்கூலில் லைப்ரரியனாக வேலை பார்ப்பவர் பென்ஷன் போக இன்னும் ஆறு வருடங்கள் இருக்கின்றன.

சாதாரண காய்ச்சலுக்குக் கூட இதுவரை எந்த டாக்டரிடமும் சென்றவரல்ல. பஸ்பங்குவ, சமஹன் ...... இப்படி ஏதாவதொன்றோடு தேசிக்காய் இலை, குப்பைமேனி, ஆடைதோடையிலை என்பவற்றைக் கொண்டு ஆவி பிடித்தால் வந்த நோய் மூன்று நாட்களில் பறந்து விடும்.

"இரும்பு மாதிரி இருந்த மனிஷன்"

"யகடேன் மாதிரி உஜாராக இருந்தாளுக்கு என்ன நடந்தோ தெரியா"

ஊரவர்கள் இப்படியெல்லாம் கதைத்துக் கொண்டனர்.

இப்படி அவர்கள் கதைத்துக் கொள்ளவும் காரணங்கள் பல. லைப்ரரியன் வேலைக்குப் புறம்பாக மாலை நேரங்களில் ஸ்கூல் தோட்டத்தில் ஏதாவதொரு வேலையிலிருப்பார். லீவு நாட்களில் பிள்ளைகளின் வீடு மற்றும் சுற்றுப்புறங்களை அழகுபடுத்துவதில் நேரத்தைச் செலவிடுவார். ஒரு நேரமாவது சும்மா இருக்க மாட்டார்.

முஸ்லிம் கிராமம் என்பதனால் ஏதாவதொன்றைக் காரணம் காட்டி லொக்டவுண் போடுவதற்கென்றே சுற்றித் திரிகின்றது பொலிஸ் ஜீப். ஏற்கனவே பொய்க் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி தொடர்ச்சியாக இரண்டு மாதங்கள் லொக்டவுண் போடப்பட்ட ஊராச்சே!

"பொடி'ய எப்பிடிசரி ஒருமாதிரி



வெளியெடுக்க பாக்கோணும். வேலய கொழப்பி கொளபடாது........"

ஊரவராகிய பிரதேச சபை அங்கத்தவர், ஜனாஸா கமிட்டியைச் சேர்ந்தவர்கள், குடும்பத்தவர்கள் எனச் சிலர் பாணந்துறை ஆதார வைத்தியசாலைக்கு விரைந்தனர்.

அரசியல், அறிமுகம் எதுவுமே கைகொடுக்கவில்லை. "கொழும்புக்கு அனுப்பி பீசீஆர் பார்த்துத் தான் 'பொடி' தரப்படும்" என்ற பதில்தான் அங்கு கிடைத்தது.

"யன்ன யன்ன மெதென இன்ன எபா........"

"லங் வென்ன எபா. ஓகொல்லண்ட தேரென்னெத்த? கொரோனா போகரன்னே ஓகொல்லய் ....."

நேஸ்மாரின், பணியாட்களின் வழமையான கேஸ் கொஞ்சம் கூடித்தானிருந்தது. போதாக்குறைக்கு, முஸ்லிம்களே கொரோனாவைப் பரப்புபவர்களென்ற ஆதாரமற்ற அவச் சொல்லையும் நா கூசாமல் அள்ளி வீசிக் கொண்டிருந்தனர்.

இப்படியிருக்கும்போது அங்கு கூடி நின்ற ஒருவருக்கு வட்ஸ்அப் மெஸேஜொன்று வந்தது. பக்கத்து ஊரொன்றில் இரவோடிரவாக ஒரு மையத் அடக்கப்பட்ட விஷயம், நான்கு வீடுகள் தள்ளியுள்ள மௌத்தானவரின் தாத்தாவுக்குக் கேள்விப்பட்டதும் மறுநாள் காலையில் தானாம். விஷயம் நாலுபேரின் காதுகளுக்குப் போயிருந்தால் எப்படியோ பொஸிடிவ்'வாக்கி எரித்திருக்கவும் கூடும்!

இதற்கிடையில், எந்தவித சிக்கல்களுமில்லாமல் 'பொடி' கிடைக்க வேண்டுமென்பதற்காக ரமீஸின் வீட்டிலே துஆ பிரார்த்தனையும் இடம்பெற்றுக் கொண்டிருந்தது.

நேரம் நீண்டு கொண்டிருந்தது. ஊழியர்களின் ஏச்சுப்பேச்சுகளைப் பொருட்படுத்தாது ஹொஸ்பிடல் மோர்சரி அருகே ஆள்மாறி ஆள்மாறி அவர்கள் கூடி நின்றனர்.

காலையில் மௌத்தானவரின் ஜனாஸா பீஎச்ஐ, கொரனர், பொலிஸ் என எத்தனையோ இடியப்பச் சிக்கல்களுக்குப் பின்னர் மறுநாள் இரவுதான் கிடைக்கப்பெற்றது.

பதினைந்து பேருக்கு மேல் கலந்து கொள்ள முடியாதென்ற நிபந்தனையால் நெருங்கிய உறவினர்களாகிய குறிப்பிட்ட சிலரே ஜனாஸாவில் கலந்து கொண்டனர். தொழுகை கூட வீட்டில் அதுவும் பயந்து பயந்துதான் நடத்தப்பட்டது.

மக்கள் கொதித்துப் போயிருந்தனர். சமூக வலைத்தளங்களில் அனல் தெறிக்கும் பதிவுகள் நிறைந்து காணப்பட்டன. தத்தமது அறிவு மட்டத்துக்கேற்ப ஆளுக்காள் கருத்து பரிமாறிக் கொண்டனர்.

ஒவ்வொருநாளும் ஐந்து, ஆறு ...... என கொரோனா மரணங்கள். அதில் குறைந்தபட்சம் முஸ்லிம் ஒருவராவது இருக்கும்.

(தொடர்ச்சி _78__ பக்கம்)

---

## வலிகாமம் கிழக்குபிரதேச சபை –புத்தூர்

## Valikamam East PradeshiyaSabha – Puttur

| | | | | | |
|---|---|---|---|---|---|
| எனது இல. My No | NP/14/41/(13)/Chairman179/2022 | உமது இல. Your No | | திகதி Date | 22.05.2022 |

**ஊடக தர்மம் நின்று இனத்திற்கான கருத்துருவக்கி பத்திரிகை ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்கள்....**

தமிழ் ஊடகத்துறையில் பொன் விழா நாயகனாகத் திகழும் கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் மதிப்பிற்குரிய ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களை தாயகத்தில் இருந்து வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இன மோதல்கள் மிக்க ஓர் காலகட்டத்தில் ஊடகனாகப் பயணிப்பது என்பது மிகுந்த சவால் மிக்க பணியாகும். அச் சவால்களை ஏற்று தாயகப் பரப்பில் காத்திரமான ஊடகவியலாளராகச் சேவையாற்றிய திரு ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள், தாயகத்தில் இருந்து புலம்பெயர்ந்த நிலையில் கனடா உதயன் பத்திரியினை புலத்தில் தாபித்து அதன் நிர்வாகியாகவும் பிரதம ஆசிரியராகவும் தமிழ் மக்களின் அபிலாசைகளை தடம்மாறாது பிரதிபலித்துவருகின்றார்.

அவரது ஊடகப் பயணம் என்பது அவரது தொழில் சார்ந்த பணியாக அமையவில்லை. மாறாக அவரது வாழ்க்கை முறையாகவே அமைந்துள்ளது. இதுவே அவர் ஐம்பது ஆண்டுகளை ஊடகத்துறையில் காத்திரமாக எதிர்கொள்வதற்கான காரணமாக அமைந்துள்ளது. இதை விட அவரது பாரியர் திருமதி லோகேந்திரலிங்கம் அவர்களும் பத்திரிகைத்துறைப் பணிக்குள் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி கனடா உதயன் பத்திரிகையின் வளர்ச்சிக்குத் துணைநிற்கும் ஒருவர் என்பதையும் இங்கு கோடிட்டுக்காட்ட வேண்டும். ஊடக உலகில் குடும்பமாக தம்மை அர்ப்பணிக்கும் தம்பதியருக்கு மதிப்பளிக்கின்றேன்.

ஒடுக்கப்படும் இனம் ஒன்றின் விடுதலைக்காக அகக் கட்டமைப்பினுள் பன்முகக் கருத்துக்களுக்கும் இடமளித்து அதே சமயம் தன் இனத்தின் அபிலாசைகளை ஊடகத் தர்மம் நின்று கருத்துருவாக்கும் உன்னதமிக்க பணியையே கனடா உதயன் பத்திரிகை மேற்கொண்டு வருகின்றது. அவ்வாறாக அப்பத்திரிகை மிளிர்வதற்கு திரு ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களுடைய நேர்த்தி மிக்க ஊடக வழிகாட்டலும் ஈடுபாடும் கடமை உணர்வும் இன்றியமைதாதது. அவ் இன்றியமையாத பணியொன்றை அவரும் அவரது பாரியாரும் புலம்பெயர்ந்து சென்று கடந்த இருபத்து ஆறுவருடங்களாக பலதரப்பட்டவர்களையும் உள்வாங்கி ஒன்றினைத்து தொய்வின்றி பத்திரிகை ஒன்றை பிரசவிப்பது என்பது இலகுவானதல்ல.

திரு ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஊடகப் பணிக்கு அப்பால் அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் சர்வதேச இராஜதந்திரிகள் முதல் சர்வதேச அரசியல் பிரமுகர்களின் தொடர்பினைக் கொண்டுள்ளார். அத் தொடர்புகளினை அவர் எம்மவர்கள் சார்ந்த அரசியல் பிரச்சினைகளை ஊடாடுவதற்கும் அவலங்கள் நிறைந்த எமது இனத்தின் நிறுவனப்பட்டவர்களினதும் தனிநபர்களினதும் கருத்துப் பரிமாற்றங்களுக்குமான களங்களாகப் பயன்படுத்துகின்றார். தமிழ் மக்கள் தாயகத்தினைப் போன்று புலம் பெயர் தேசங்களிலும் விரவி வாழ்கின்ற ஓர் சூழ்நிலையில் இரு தரப்பிற்கும் இடையிலாக ஓர் இணைப்பாளராகக் கூட அவர் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்றார்.

மாற்றங்கள் எப்போதும் இனத்தின் முன்னேற்றமாக அமைய வேண்டும் என்பது திரு.ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களது செயல்வடிவமாகக் காணப்படுகின்றது. தாயகத்தின் சமூக கலாச்சார பொருளாதார அபிவிருத்திகள் எவ்வாறாக அமைய வேண்டும் என்பதில் ஆழ்ந்த சிந்தனையும் செயற்பாடும் அவரிடம் காணப்படுகின்றமையை அவருடன் நேரில் பழகும் பொழுதுகளில் தெரிந்து கொள்ள முடிகின்றது. இந் நிலையில், நான் உட்பட பலருக்கும் நல்ல வழிகாட்டுதல்களை நல்கும் சிறந்த ஆளுமைமிக்க அனுபவமிக்க ஆற்றல் மிக்க திரு ஆர்.என். லோகேந்திரலிங்கம் தம்பதியரை வாழ்த்துவதில் பெருமை அடைகின்றேன்.

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலிகாமம் கிழக்குப் பிரதேச சபை
இலங்கை.

பொதுசனதொடர்புஉத்தியோகத்தர் / PUBLIC RELATION OFFICER 021 205 8981
செயலாளர் / SECRETARY 021 205 8983
அலுவலகம் / OFFICE 021 205 8867
தொலைநகல் / FAX 021 205 8866
பருத்தித்துறைவீதி, புத்தூர்
secveps@yahoo.com
உபஅலுவலகம் / SUB OFFICE
புத்தூர் / PUTTUR 021 2058988
அச்சுவேலி / ATCHCHUVELY 021 2058972
நீர்வேலி / NEERVELY 021 2058973
கோப்பாய் / KOPAY 021 2058974

## SENIOR TAMILS' SOCIETY OF PEEL
பீல் தமிழ் முதியோர் சங்கம்
**Not profit Registration # 1406004 (Established in 2000)**

Dear Members of Senior Tamils Society of Peel Date: May 25, 2022

**Call for nominations for Board of Directors**

We call for applications for vacant positions of the Board of Directors from the Members in good standing and preferably with the following criteria.

1. Basic computer literacy
2. With communication skills
3. Previous experience working with Nongovernmental organisations
4. Talented members

***Please apply in the application form below on or before 3:00 pm on June 15, 2022. The application must be in a sealed envelope and dropped in the box assigned in front of the secretary at 206-250 Dundas Street West, Mississauga,*** L5B 1J2.

---

**Application form for Board of Director, STSP**

Full name of the Member: Membership No.

Nominated by: ------------------------------------ Membership No.

Signature of the nominee: ------------------------------------ Date: ---------------

Basic Computer literacy of the member proposed: ------------------------------------------------------

Communication skills of the member proposed: ------------------------------------------------------

Signature of the applicant: ------------------------------------------ Date: -----------------

## SENIOR TAMILS' SOCIETY OF PEEL
பீல் தமிழ் முதியோர் சங்கம்
**Not profit Registration # 1406004 (Established in 2000)**

Dear Members of Senior Tamils Society of Peel Date: June 1, 2022

**Annual General Meeting 2021**

We cordially invite all the Members in good standing for the Annual General Meeting to be held on June 25,2022 at 9:30 am at ***Mississauga Valley Community Centre, 1275 Mississauga Valley Blvd, Mississauga, ON, L5A 3R8 at 9:30 am, in the Taylor Room on upper floor.***

***Also, we invite proposed resolutions from members in good standing on or before June 15, 2022. Please ensure the proposed resolutions are received by STSP office latest by 1:00 pm on or before June 15, 2022.***

Please refer the agenda below.

| | |
|---|---|
| 9:30 am | Registration of participants – Members in good standing only can attend |
| 10:00 am | National Anthem, STSP song, & Tamil Thai Vanakam |
| 10:15 am | One minute silence for National Heroes |
| 10:20 am | President's address |
| 10:45 am | Minutes of last AGM held on August 21, 2021 |
| 11:00 am | Annual report of the Secretary |
| 11:20 am | Presentation of Annual Financial Statement |
| 11:45 am | Introduction of new Board of directors |
| 12:00 pm | Discussion on newly proposed resolutions if any and approval by voting if required |
| 12:15 pm | STSP announcements |
| 12:30 pm | AOB |
| 01:00 pm | Lunch |

Please note that the meeting will be in person, however, zoom facilities will be available via the link below

**https://us02web.zoom.us/j/84053631785?pwd=cHh4cm5XRGUwem8vbW9CemZmSkkzQT09**

**Meeting ID: 840 5363 1785**
**Passcode: 018178**

Nadarajah Moorthy
Secretary

Aru Moorthy
President

**250 Dundas Street West, Unit 206, Mississauga, Ontario, L5B 1J2**
**☎: 905-290-3000 : info@ peeltamilseniors.ca**
**Visit us at www.peeltamilseniors.ca**


காப்புறுதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும்
காப்புறுதி ஆலோசகர்களாவதற்கும்
ஒரு நம்பிக்கையான நிறுவனம்

FREE CLASSES
To Become RESP & INSURANCE ADVISORS

MEDICAL INSURANCE FOR SUPER VISA 100% REFUND IF VISA DENIED

LIFE • CRITICAL ILLNESS • HEALTH & DENTAL • MORTGAGE INSURANCE
• GROUP BENEFITS • RRSP • RESP
• DISABILITY INSURANCE • LONG TERM CARE



Sritharan Thurairajah
Chartered Life Underwriter, Certified Health Insurance Specialist

Direct: 416.918.9771
Business: 416.321.2500

MDRT Member of Million Dollar Round Table

Life100 INSURANCE & INVESTMENTS INC.

10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Web: www.life100.ca, E-mail: info@life100.ca

LaCapitale · INDUSTRIAL ALLIANCE INSURANCE AND FINANCIAL SERVICES INC. · Assumption Life · BMO Insurance

Are you getting Million Dollar advice?

- digi Media -

# அதிகாலை அஸ்தமனம்

- க. கலாமலர்

வானத்து முகிற்கூட்டங்கள் அப்படியே தரையிறங்கி வந்தது போல் வெண்பனிக் குவியல்கள் ஆங்காங்கு குவிந்து கிடந்தன. மஞ்சு அவற்றை வெறித்துப் பார்த்தபடி யன்னலோரம் அமர்ந்திருந்தாள். வெளியே சிறுவர்கள் கொட்டிக்கிடந்த சினோவில் சினோ மான் செய்தும் உருட்டிப் பந்துகள் செய்தும் விளையாடிக் கொண்டிருந்தார்கள். மஞ்சுவின் மனமோ இவற்றையெல்லாம் தாண்டி அவள் முதன் முதலாக கனடா நாட்டில் கால்பதித்த அந்த நாளை மீட்டு வந்தது.

ஆம். ஐந்து வருடங்களுக்கு முன் ஆவணி மாதம் இருபதாம் திகதி அவள் பியர்சன் எயாப்போட்டில் வந்து இறங்கியதும் அங்கு மதன் அவளை வரவேற்று நின்றதும் அவள் வாழ்வில் என்றுமே மறக்க முடியாத மனதோடு ஒன்றிப்போன ஒரு நிகழ்வு.



திருமணத்திற்குப் பின்பு தொலைபேசியில் அதிகம் கதைத்திருந்தாலும் சுமார் ஒரு வருடத்திற்குப் பின் மதனை நேரிற் பார்த்ததும் ஒரு கணம் அவளால் எதுவும் பேச முடியவில்லை. பயணங்கள் எப்படி இருந்தது… அவன் மௌனம் கலைத்தான். மிகவும் அமைதியாக பரவாயில்லை எனக் கூறிக்கொண்டே அவனின் பின்னால் நடந்தான். இரண்டு கைகளிலும் சூட்கேசுகளை இழுத்துக் கொண்டு அவன் முன்னே சென்று காரிற்குள் வைத்துவிட்டு காரின் முன்கதவைத் திறந்து அவள் இருந்ததும் சீற்பெல்ட் போட்டுவிட்டு தானும் அமர்ந்து கொண்டான். கார் நானூற்றி ஓராம் இலக்க நெடுஞ்சாலையில் கிழக்கு நோக்கிச் சென்று கொண்டிருந்தது. ஆங்காங்கு தெரிந்த மிகவும் உயரமான கட்டிடங்கள்…. அழகிய கண்ணாடிக் கட்டிடங்கள் இவற்றையெல்லாம் பார்த்து மஞ்சு 'ஆ……. எவ்வளவு உயரமான கட்டிடங்கள்' என தன்னையறியாமலே வியப்புடன் கேட்டாள். அவனும் பதிலுக்குச் சிரித்துக் கொண்டே 'இதென்ன உயரம் இன்னும் போகப் போக இதைவிட உயரமான முப்பத்தாறு …. முப்பத்தேழு… முப்பத்தெட்டு அடுக்கென பெரிய பெரிய உயரமான கட்டிடங்கள் எல்லாம் பாக்கலாம்' என்றான்.

காரின் வேகத்திற்கு அவளால் எதையும் வாசித்து அறிந்துகொள்ள முடியவில்லை. அவசர அவசரமாக கண்களால் படம்பிடித்துக் கொண்டாள். அதிஉயரமான கட்டிடங்களைக் கண்டதும் இரண்டு …. நாலு…. ஆறு…. எட்டு என எண்ணத்தொடங்கி இடையிலே நிறுத்திக் கொண்டாள். 'அங்க பாருங்கோ நிறையக் கார்கள் நிக்குது இது என்ன கார் விற்கிற இடமோ என நீங்கள் கேட்க முதலே நான் சொல்லிறன் என்றவன்- இது ஒரு மோல்… மோல் எண்டால் அதுக்குள்ள கடைகள், டொக்டர் ஒவ்வீஸ், சினிமாத் தியேட்டர், பார்மசி, போஸ்ற் ஒவ்வீஸ், கடையெண்டால் வீட்டுக்குத் தேவையான எந்தவிதமான பொருட்களையும் வாங்கக் கூடிய எல்லாவிதமான கடைகளும் இருக்கும். உடுப்புக் கடை, நகைக்கடை இப்படியெல்லாம் இருக்கும்'

'மோலுக்கு போனால் எல்லாத் தேவைகளையும் முடிச்சுக் கொண்டு வரலாம். சாப்பாட்டுக் கடைகளும் இருக்கு. அப்படியே சொப்பிங் முடிச்சிட்டு ஆறுதலாக இருந்து சாப்பிட்டும் வரலாம். குளிர்காலத்தில் ஒவ்வொரு தேவைக்கும் ஒவ்வொரு இடங்களாய் ஏறி இறங்குவது கஸ்டமாக இருக்குமெண்டு நினைச்சுத் தான் இப்படிக் கட்டியிருக்கினம் போல….' அவன் கூறிக் கொண்டே கடைக்கண்ணால் அவளைப் பார்த்தான். அவளும் அவதானமாக கிரகித்துக் கொண்டிருந்தாள். கார் பெருந்தெருவில் இருந்து வெளியேறி மைக்கோவன் வீதியில் சென்று கொண்டிருந்தது. 'இப்ப பாருங்கோ… இதுதான் ஸ்காபரோ ரவுண் சென்ரர்… இதுதான் எங்கட வீட்டுக்குக் கிட்ட உள்ள பெரிய மோல். சமர் காலத்தில் சனி, ஞாயிறு எண்டால் சனங்கள் நிரம்பி வழியும்' இடது பக்கம் காரைத் திருப்புவதற்கான சிக்னலைப் போட்டுவிட்டு வீதி விதிமுறையின் சிக்னலுக்காக காத்து நின்றான். 'இதென்ன பக்கத்தில் பெற்றோல் அடிக்கிற இடங்கள் இருக்குது' என மெதுவாக கதையைத் தொடர்ந்தாள் மஞ்சு.

'இங்கு வீட்டுக்கு மூண்டு, நாலு கார்கள் நிக்குது எத்தின காஸ்ரேசன் இருந்தாலும் எல்லாம் பிசியாகத் தான் இருக்கும். இங்க கார் இல்லையெண்டால் பெரிய கஸ்டம். கார் ஒரு அத்தியாவசியப் பொருள்'

'என்ன வடிவான பூக்கள் இப்படி றோட்டில் பூத்துப் போயிருக்கு பார்க்க பார்க்க ஆசையாய் இருக்கும்… நீலம், சிவப்பு, மஞ்சள், செம்மஞ்சள், வெள்ளை, கறுப்பு எல்லா நிறங்களிலையும்…. ஆ… எவ்வளவு வடிவாய் இருக்கு' அவள் தன்னை மறந்து இரசித்துக் கொண்டிருந்தாள். கார் ஒரு வீட்டின் முன்னால் நின்றது. 'இதுதான் எங்கட வீடு' மதன் கூறிக்கொண்டே கதவைத் திறந்தான். இருவரும் கொண்டுவந்த பொருட்களுடன் உள்ளே சென்றனர். சமையல் அறை, வரவேற்பறை, மூன்று படுக்கை அறைகள் என அளவான அழகான வீடாய் அவள் உணர்ந்து கொண்டாள்.

ஒருவாரம் விடுமுறையின்பின் அவன் வேலைக்குச் சென்றுவிட்டான். சமையல் அறையில் தொடங்கி கொஞ்சம் கொஞ்சமாய் வீட்டை மாற்றி ஒரு அழகான குடும்பம் வாழும் இல்லமாக இப்போ அந்த வீடு காட்சியளிக்கிறது. வீட்டிற்கு வருபவர்கள் எல்லோரும் மஞ்சுவின் திறமையைப் புகழ்ந்து கொண்டார்கள். திங்கள், செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி என நாட்கள் நகர்ந்து வாரங்களாகிய வாரங்கள் மாதங்களாகி மாதங்கள் வருடங்களாகி நான்கு வருடங்கள் கழிந்தும் ஒரு பிள்ளை இல்லை என்ற குறை எப்பவும் அவளுக்குள் ஒரு சுமையாகவே இருந்து வந்தது.

என்ன பிள்ளையே வேண்டாம் எண்டு இருக்கிறீங்களோ? என்ற பலரின் கேள்விகளுக்கு மதன் நாசூக்காக சொல்லும் பதில்கள் அவளுக்கு அவனிடத்தில் மேலும் பாசத்தை வளர்த்து விட்டது. பிள்ளை இல்லையெண்டால் என்ன… பிள்ளைகளைப் பெத்த எத்தனை பேர் அந்தப் பிள்ளைகளாலேயே வாழ்க்கையை இழந்து சீரழிந்து நிக்கிற நிலைமைகளையும் நிறையவே இப்ப பாக்கிறம். பிள்ளை இல்லையெண்டது என்னைப் பொறுத்தவரை அப்படி ஒண்டும் பெரிய குறை இல்லை. இருவரும் ஒருவருக் கொருவர் உதவியாக வாழும் வரை வாழ்ந்து போவம் என மதன் அடிக்கடி கூறும்போது அவளும் அதை நம்பிக்கையோடு ஆமோதித்துக் கொள்வாள். ஒவ்வொரு வருடமும் விடுமுறையென்றால் கியூபா, மெக்சிக்கோ, தாய்லாந்து என சென்றுவரும்போது வாழ்க்கை இனிமை நிறைந்ததாகவே அவர்களுக்குப் புரிந்தது. சமர் எண்டைால் வேலையால் வந்ததும் பார்க், பீச் எங்கையாவது போகவேணும்….. இயற்கையை நுணுக்கமாக இரசிக்கும் தன்மை நிறையவே மதனிடம் இருந்தது. மஞ்சுவும் அதற்கு இணைந்தவளாக அமைந்தது அவன் வரமே…… வேலை, விடுமுறை, உல்லாசப் பயணங்கள், ஒன்றுகூடல்கள் என வாழ்க்கை பந்தயக் குதிரையாய் ஓடிக் கொண்டிருந்தது.

ஒவ்வொரு வருடமும் உடற் பரிசோதனைக்காக வைத்தியரிடம் போய்வருதும் மதன் இவ்வருடமும் குறித்த திகதியில் சென்று பரிசோதனைகளை முடித்துக் கொண்டான். வைத்திய அறிக்கையை அவன் எதிர்பார்க்க வில்லை. ஏனெனில் அவன் உடலில் எந்தவித மாற்றத்தையும் அவன் உணரவில்லை. ஆனாலும் இந்த முறை வந்த வைத்திய அறிக்கை அவர்கள் வாழ்க்கையையே புரட்டிப் போடும் என கொஞ்சமும் எண்ணிப் பார்க்கவில்லை. வாழ்க்கை ஒரு நொடியில் மாறிப்போகும். கண்ணிமைக்கும் பொழுதில் கவுண்டுவிடும் என்றெல்லாம் கதைப்பார்கள். ஆனால் அப்படி ஒரு கணப் பொழுதை எதிர்கொள்ளும் மனம் எப்படியிருக்கும். ஆம்…. மதனுக்கு லிவர்க்கான்சர் என வைத்திய அறிக்கை காட்டி நின்றது. இதனால் தொடர்ந்து வைத்திய பரிசோதனைகள், வைத்திய சாலை வாழ்க்கை என வாழ்க்கைப் பயணம் திசை மாறியது. திடீரென தனித்தீவில் தனித்து விடப்பட்டவளாய் மஞ்சுவின் நிலை……

வெளியே வரமறுக்கும் மூச்சுக்காற்று….. தொண்டைக் குழிக்குள் சிக்கித் தவிக்கும் பல நூறு வார்த்தைகள்…… முழு உலகமும் அவள் தலைமீது விழுந்துவிட்ட சுமை…. வைத்தியசாலை, வீடு என வாழ்க்கை குறுகியது.

மதனின் பள்ளிக்கூட நண்பன் குமாரும் மனைவி வசந்தியும் என்றுமே அவனுடனும் மஞ்சுவுடனும் உறவாக உடனிருந்து அவர்களுக்கு அவ்வப்போது தேவைப்படும் உதவிகளைச் செய்து கொண்டார்கள். இப்போ மதன் வீட்டில்த்தான் இருக்கிறான். இடையிடையே வைத்தியர் வீட்டிற்கு வந்து அவனின் நிலைமையைப் பார்த்துக் கொள்வார். காலவோட்டத்தில் அவளும் ஓடிக் களைத்துவிட்டாள். அன்றும் வழமைபோல அவனுக்குச் செய்யவேண்டிய சில கடமைகளைச் செய்வதற்காக அவனருகில்ச் சென்றாள். கண்களின் ஓரம் கண்ணீர் வடிந்து கொண்டிருந்தது…… வார்த்தைகள் மரணித்து விட்டன.. கண்களோ ஆயிரமாயிரம் கதைகளைக் கூறத் துடித்தது……. அவள் மெதுவாக அவளது கண்ணீரை துடைத்துவிட்டாள். அவள் கண்களில் இருந்து ஓடும் கண்ணீரைக் கட்டுப்படுத்த முடியவில்லை. குமார் வைத்தியருக்கு தொலைபேசி அழைப்பு விடுத்தான். வசந்தி மஞ்சுவை அப்படியே அணைத்து கட்டிலில் படுக்க வைத்தாள்.

சிறிது நேரம் மயான அமைதி…… பாவம் மஞ்சு இரண்டு மூண்டு நாளாய் சாப்பாடும் இல்லை…. நித்திரையும் இல்லை……… மயக்கத்தில் படுத்திருக்க.. கொஞ்சம் ஆறுதலாய்க் கிடக்கட்டும்.


திடீரென கண்விழித்துக் கொண்ட மஞ்சு கனத்த இதயத்துடன் படுக்கையில் இருந்து கொண்டாள். வெளியே தொடர்ந்து சினோ கொட்டிக்கொண்டிருந்தது. படித்து சமுதாயத்தில் ஒரு நல்ல நிலையில் இருக்க வேணும். எண்ட அப்பா, அம்மாவின் எதிர்பார்ப்பு. அவர்கள் ஏமாந்துவிடக் கூடாது. வாழும்போதே அவர்களைச் சந்தோசப்படுத்த வேணும். அவர்கள் நினைத்ததை சந்தோசமாகச் செய்து முடிச்சன். முப்பத்தைந்து வயதில் திருமணம்… ஐந்து வருட இல்வாழ்க்கை…. எப்படி வாழப்போறன்…… உயிருக்கும் உடலுக்கும் இடையே போராட்டம்…… இடையிடையே உடலுறுப்புகள் கணநேரம் செயலிழந்து மறுபடியும் செயற்படுவது போல ஒரு பிரமை….

மஞ்சு…. வசந்தியின் குரலைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள். கறுப்பு நிறத்தில் வெள்ளைப் புள்ளிகள் போட்ட சாறியுடன் வின்ரர் ஜாக்கெட் அணிந்தபடி வசந்தி நின்றிருந்தாள். ஐந்து மணியில் இருந்து ஒன்பது மணி வரையும் பார்வைக்கு வைக்கினம்…. குடும்பம். அதுக்கு முதல்ல போகலாம். மெதுமெதுவாய் வெளிக்கிடுங்கோ. குமார் கொஞ்ச நேரத்தில் எங்களைக் கூட்டிக்கொண்டு போக வருவார். கூறிவிட்டு வெளியே வந்து சோபாவில் அமர்ந்து கொண்டாள் வசந்தி. என்ன வாழ்க்கை …… நல்லவேளை காசு…….. வசதி……… எல்லாமே முடிஞ்சு போச்சு……. வாழ்க்கை ஒரு வரம். அது ஒரு தடவைதான் எல்லோருக்கும் கிடைக்கும். கிடைக்கிற வாழ்க்கையை சந்தோசமாக அனுபவித்து முடிக்கிற பாக்கியம் எல்லோருக்கும் கிடைக்குமா என்பது இன்று வரை சந்தோசமாய்த் தான் இருக்குது.

நீண்ட பெருமூச்சுடன் மஞ்சுவை அழைத்துக் கொண்டு காரில் ஏறிக் கொண்டாள். கார் நானூற்றி ஓராம் இலக்க நெடுஞ்சாலையில் கிழக்கு நோக்கி அந்த இறுதிக் கிரியை மண்டபத்தை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. வசந்தி மஞ்சுவை அணைத்தபடி ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள்.

**- முற்றும் -**

# யுகவாரிதி லோகன் வாழி!



மதுரத் தமிழின் உதயக் கனியே வாழி!
மக்கள் எழுத்தின் இதயக் கவியே வாழி!
புதினத் தேனின் புன்னகை நதியே வாழி!
பூக்கும் வரிகளின் வண்ணக் கலையே வாழி!

மாற்று(ம்) மனித நேயத்தின் ஒளியே வாழி!
மாறாத புனித நெறியின் வழியே வாழி!
கீற்று நிலவின் கேள்விக் கொடியே வாழி!
கேட்கும் ஒலியின் வள்ளல் வடிவே வாழி!

கற்கண்டு கதை கவிதைகள் ஈன்றவனே வாழி!
காலனை மிதித்து ஊடகம் இயக்குபவனே வாழி!
முற்றத்து நிலவில் பேசிச் சிரித்தவனே வாழி!
மூட்டிய தீயினில் நடந்து, குளித்தவனே வாழி!

திசைகள் வாழ்த்தும் தேன் குடமே வாழி
திரைகள் விலக்கும் வான் நிறமே வாழி
மலையைப் பிளக்கும் நாகமணி செல்லம்மா புத்திரனே வாழி!
மனங்களில் இனிக்கும் பாப்பா பத்மலோஜினி காதலனே வாழி!

இலங்கை கல்வியால் உலகத்தை வென்றவனே வாழி!
இலட்சிய ஊடகத்தால் வலிகளைக் கண்டவனே வாழி!
கலங்காத நெஞ்சுடன் எரிமலைகளை மிதித்தவனே வாழி!
கனடா உதயன் பூமழையே, ஆசிரியனே வாழி!

போலிகளை விரட்டும் புதுமையின் உறவே வாழி!
புரட்சியை விதைக்கும் நல்லையின் சிறகே வாழி!
வெற்றிகள் குவிக்கும் விடியல் சூரியனே வாழி!
வறுமையை குடிசையை விரட்டிடும் ஊடகனே வாழி!

– தோழமையுடன்
**நல்லை அமிழ்தன்**, கொழும்பு.

# கனடா Jay's Professional Truck Training Centre நிறுவனம் தமிழ் இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது

JAY'S PROFESSIONAL TRUCK TRAINING CENTRE

கனடாவில் அதிக தட்டுப்பாடுகள் நிறைந்த கனரக வாகன சாரதிகளை **(Truck Drivers)** உருவாக்குவதில் பல வருட அனுபவம் கொண்ட **Canada's Jay's Professional Truck Training Centre** நிறுவனம் இங்குள்ள தமிழ் இளைஞர்களுக்கு அழைப்பு விடுக்கின்றது.

ஒன்றாரியோ மாகாணத்தில் மாத்திரம் சுமார் இரண்டு இலட்சம் கனரக வாகன சாரதிகளுக்கு **Truck Drivers** - வெற்றிடம் உள்ளதாக மாகாண அரசு அறிவித்துள்ளது.

இவ்வாறான நிலையில் இங்குள்ள தமிழ் இளைஞர்களுக்கு தகுந்த பயிற்சி அளித்து அவர்களுக்கு உடனடியாகவே புகழ்பெற்ற நிறுவனங்களில் வேலை வாய்ப்பையும் பெற்று தர முடியும் என்று **Jay's Professional Truck Training Centre** நிறுவனத்தின் அதிபர் திரு ஜே ஜெயானந்தன் தெரிவித்துள்ளார்.

தொலைபேசியில் தொடர்பு கொள்ள 416-771-8041 என்னும் இலக்கத்தை அழைக்கவும்.


## TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

**Tel: (416) 754-4024**

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9


**ONTARIO SENIOR TAMILS BENEVOLENT ASSOCIATION - (OSTBA)**
**EST. 2012. REG: NOT FOR PROFIT ORGANIZATION #1866873,**
**ONTARIO, CANADA**

## Annual General Meeting

**of the Ontario Senior Tamils Benevolent Association (OSTBA) will be held on Wednesday June 22,2022 from 9.30 am to 4.00 pm.**
**VENUE: Mississauga Valley Community Centre, (Shed A)**
**1275 Mississauga Valley Blvd Mississauga, ON L5A 3R8**

Agenda
1. Registration of Participants – Members of Good Standing
2. National Anthem
3. Thamil Thai Vaalthu
4. A Minute of Silence in memory of Deceased Members
5. President's Address
6. Welcoming New Members
7. Minutes of the AGM held on August 28,2021
8. Filling of vacant positions in the Board of Trustees
9. Audited Financial Statements -April 01.2021 -March31.2022
10. Vote of Thanks
11. A.O.B

**Breakfast and Lunch will be prepared on site. All are kindly requested to follow instructions regarding wearing Mask.**

Tel: 647 795 0504
Email: ostba2019@gmail.com
Web:ostba.ca

Mailing Address: OSTBA, P.O.BOX 48068, Mississauga, ON. L5A 4G8 (Dundas & Sheppard Intersection)

Mrs.T Suppuladchumy
Secretary (OSTBA)
Date : May 18,2022

Mr.S.Arianayagam
President (OSTBA)
Date: May 18.2022

## தமிழ்ப்பூங்காவின்
-----------------------------------
# பாடுங்குயில் – 2022

தமிழ்பூங்காவின் பாடுங்குயில் 2022 இற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வயது 4 முதல் 12 வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: **May** (வைகாசி) **31, 2022**
விபரங்களுக்கு: **(647) 706-6123**

**3001 Markham Road #21 Scarborough, ONM1X 1L6**




# Dr. புஷ்பா வன்னித்தம்பி
## பல் வைத்தியர்

## Dr. Pushpa.V & Associates
**Dentist**

**New Patients Welcome**

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்



**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
**416-289-7187**

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
**905-201-8900**

(_34__ பக்கம் தொடர்ச்சி)

# ஈழ இலக்கியப்போக்கில் திருகோணமலை கலை இலக்கியம்

**- கலாபூஷணம், திருமலை நவம்**

——————————————————————

நாவல் இலக்கியப் படைப்பில் 70ம் ஆண்டுக்குமுன் ந.பாலேஸ்வரி ஆகியோரைத் தவிர வேறு எவரும் இத்துறையில் ஆர்வம் காட்டவில்லை. 1970ம் ஆண்டுக்குப்பின் வ.அ. இராசரத்தினம் அவர்கள் ஐந்து நாவல்களையும், மூன்று குறுநாவல்களையும் படைத்திருந்தார்.

சற்றும் பிந்திய காலப்பகுதியில் ந.பாலேஸ்வரி சுடர்விளக்கு, உறவுக்கப்பால், பூஜைக்கு வந்தமலர் ஆகிய மூன்று நாவல்களை எழுதியிருந்தார். இவரது நாவல்கள் மெல்லிய உறவுகளையும், இளைய துடிப்புக்களையும், எண்ணங்களையும் சொல்லும் நாவல்களாக காணப்பட்டது. ஆனால் 1973ம் ஆண்டு க.அருள்சுப்பிரமணியத்தின் அவர்களுக்கு வயது வந்துவிட்டது என்ற நாவலுடன் ஓர் தேசிய தரத்தை திருக்கோணமலை இலக்கிய படைப்புக்கள் பெற முற்பட்டன.

மேடை நாடகத் துறையில் 1970ம் ஆண்டு கணிசமான பதிவுகளை வாங்கிக் கொண்ட காலமாக இக்காலம் திகழ்கிறது. பெருந்தொகையான நாடக மன்றங்கள் உருவாகிய காலம் இதுவாகும். இம்மன்றங்களின் பெருக்கத்தின் காரணமாக இயக்குனர்கள், நடிகர்கள், காட்சி அமைப்பு விற்பன்னர்கள் அதிகமாக உள்வரத் தொடங்கிய காலமாக இது காணப்படுகின்றது.

1980ம் ஆண்டுக்கும் 1990ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலம் கலை இலக்கிய வளர்ச்சியில் ஒரு வரட்சி கொண்ட காலத்தன்மை நிலவியதை சகல துறைகளிலும் அவதானிக்கக்கூடியதாகவுள்ளது. வடகிழக்கு யுத்த நெருக்கடிகள், இடம்பெயர்வுகள், அகதி வாழ்க்கைகள், கோரச்சம்பவங்கள், கொடிய இனநெருக்கடிகள் மலிந்துபோய் கிடந்த சூழ்நிலையில் இலக்கியவளாச்சி ஏற்பட வாய்ப்பில்லாமல் போனபோதும் மென்தன்மையான பொதுவளர்ச்சியே காணப்பட்டது. இக்காலப்பகுதியில் கவிதைகளில் பல்துறை சார்ந்த வளர்ச்சி காணப்பதற்கு அடையாளமாக கலாநிதி சி.சிவசேகரம், (நதிக்கரைமூங்கில், பாலை. போரின் முகங்கள், செப்பனிடப்பட்ட படிமங்கள், கல்லெறிதூரம் வடலி) என பலகவிதைத்தொகுதிகளை படைத்து ஈழத்து இலக்கியப்பரப்பை வளப்படுத்திய பெருமை இவரைச்சாரும். மூதார்முகைதீன் (முத்து, இழந்துவிட்ட இன்பங்கள் 2003, ஒரு காலம் இருந்தது 2010) மைக்கல் கொலின் போன்றோரின் வீச்சுக்கவிதைகளும் அஸ்ரப்பா நூர்டீன் நில தமிழின் தாசன் கிண்ணியா ஏ.எம்.எம். அலி போன்றவர்களின் நடுத்தன்மையான போக்கும், கவிதை வளர்ந்து வந்துள்ளமையினைக் காட்டுகிறது. இவர்களில் மூதார் முகைதீன் தனக்கென ஒரு தனியான வாசகர்களை சேமித்துவைத்திருக்கும் கவிவாணனாக வலம் வந்தார்.

1980 பின்னைய காலப்பகுதியில் எழுந்த யுத்தம் இனப்போர், நெருக்கடிகள் சித்திராநாகநாதன் (கிரமத்து மண்கள் சிவக்கின்றன 1990) கனகசரை தேவகாட்சம் எழுதிய (காலக்கீறல்கள் 1996) (குமுறல்கள் 1998) (குருதி மண் 2000) எம்.ஐ.எம் தாஹிர் நந்தினி சேவியர் போன்றவர்களின் படைப்புக்கள் தீருகோணமலை சிறுகதை வளர்ச்சியில் காத்திரமான பங்களிப்பை செய்தன.

நாவல் இலக்கிய துறையின் இக்காலம் சற்றும் வேறுபட்ட முறையில் தேசியதரம் அல்லது சர்வதேச பார்வை கொண்ட நாவல்கள் எழுந்த காலமாக இக்காலப்பகுதியைக் கூறலாம். அ.அ.ஜெயராஜாவின் சேகுவரா, (1979) அப்பா 1979) போரும் மனிதனும் (1986) மற்றும் (சூ.நோபேட்) கோவிந்தனின் புதியதோர் உலகம் (1985) ஆகிய நாவல்கள் மிக முக்கியம் கொண்ட நாவல்களாக காணப்படுகின்றது. ஜெயராஜாவின் நாவல்கள் சேகுவரா போராட்டத்தை மையப்பொருளாக கொண்டு எழுந்த நாவல்களாக காணப்பட கோவிந்தனின் நாவல் விடுதலைப் போராட்டத்தில் காணப்பட்ட இயக்க முரண்பாடுகள் ஈழப்போரின் அரசியல் கொதிநிலைகளை சொல்லும் நாவலாக காணப்படுகிறது.

இதேவேளை ந.பாலேஸ்வரியின் கோவும் கோயிலும் 1980 உள்ளக்கோயில் 1983 பிராயசித்தம் 1984 உள்ளத்தினுள்ளே 1990 தத்தைவிடுதூது 1992 வி. தில்லைநாதன் இதய தந்திகள் மீட்டப்படுகின்றன (1978) புரட்சிபாலன் செல்வகுமார், எழிலோன் கா. இரத்தினலிங்கம் வீ.என். சந்திரகாந்தி ஆகியோரின் நாவல்கள் பொது வாழ்வை சித்தரிப்பவையாக காணப்படுகின்றன.

2000ம் ஆண்டுக்குப் பின்போராட்ட வடிவங்கள் சர்வதேச முக்கியத்துவத்துடன் உலக வல்லரசுகளின் ஆலோசனைகள், பேச்சுவார்த்தைகள், போராட்டங்கள் வலுப்பெற்ற போதும் அவற்றின் தாக்கம் திருக்கோணமலை கலை இலக்கியத்தில் சொல்லக்கூடிய மாற்றங்களை கொண்டு வரவில்லை. இருந்த போதிலும் ஓடையின் நீரோட்டம் போன்ற ஒரு வளர்ச்சி மிக மெதுவாக ஊர்ந்து கொண்டு போவதை பொதுவாக அவதானிக்கக்கூடியதாக இருந்தது. அதிலும் கிண்ணியா, மூதூர் பிரதேசத்தின் புதிய கவிஞர்களின் பங்களிப்பு இக்காலப்பகுதியில் திருக்கோணமலையின் கவிதை துறையை சரியவிடாது காத்து நிற்கின்றது.

சிறுகதை துறையில் திருமலை சுந்தா, ச. அருளானந்தம், வீ.என் சந்திரகாந்தி, கிண்ணியா அமீரலி, கனகசபை தேவகடாட்சம், ராணி சீத்ரன் போன்றவர்கள் போதியளவில் எழுதி வந்தபோதும் தற்கால சூழ்நிலை நெருடல்களை அனுபவ துருவல்களை இவர்களது கதைகளில் காணமுடியவில்லை. இருந்தபோதும் மூதூர் ஏ.எஸ்.உபைத்துல்லா, (ஜலசமாதி 2008) நிழலைத்தேடி 2017) எம். எஸ். அமானுல்லா (வரால் மீன்கள். 2007 ஒரு பெண்ணின் கதை (2017) கனகசபை தேவகடாட்சம் காலக்கீறல்கள் (1996 குமுறல்கள் 1998) சூசைஎட்வேட் இங்கு வீசியது ஒரு சமாதானக்காற்று (2019) ஆகியோரின் படைப்புக்கள் பிரதேச மண்வாசைன செழுமைகளையும் இஸ்லாமிய மற்றும் தமிழ் மக்கள் வாழ்வுகலந்த பண்புகளையும் சித்தரிப்பவையாக காணப்படுகின்றன. 2000 ஆம் ஆண்டுக்குப்பின்னுள்ள நாவல் வளர்ச்சியை நோக்கின் மீண்டும் வ.அ. இராசரத்தினத்தின் வருகை புரட்சி பாலன் அன்வர்டீன், மைக்கல் கொலின் காதல் வெண்ணிலா கையில் சேருமா? (2003) வீணையடி நீ எனக்கு (2021) போன்றவர்களின் ஒரு சில நாவல்கள் பிரதேச வரலாற்றை நிரப்பிய பெருமை கொண்டவையாக இருக்கின்றன. பிற்காலத்தில் திருமலை மதன், ஆனந்தபிரசாத் போன்றோரின் படைப்புக்கள் அவதானம் கொண்டவையாக விளங்கியது.

மேடை நாடக துறையிலும், நாடக இலக்கிய துறையிலும் இக்காலப்பகுதி குறிப்பாக 2000ம் ஆண்டுக்குப்பின் பாடசாலை நாடகங்கள் அதிசயத்தக்க வளர்ச்சியை அமைந்துள்ளமையை பாடசாலை தரவுகள் எடுத்துக்காட்டுகின்றன. குறிப்பாக ராணி ஜெகசோதி, பிலிப் ஆனந்த ரமணன் நக்கீரன், தில்லை முகிலன், இரட்ணசிங்கம், எஸ். பற்குணம், த. அமரசிங்கம், திருமலை நவம் போன்றோரின் உழைப்பினாலும் திருமறைக் கலாமன்றம், கீழைத்தென்றல் கலாமன்றம் போன்றவற்றின் பங்களிப்பினாலும் பாடசாலை நாடகங்கள் காத்திரமான வளர்ச்சியை காணுகின்றது.

நாடக இலக்கியம் என்ற துறையில் 1887ம் ஆண்டு அகிலேசப்பிள்ளை என்பால் எழுதிய கண்டி நாடகத்தில் இருந்து வளர்ச்சி ஒன்று கருக் கொள்கிறது. ஏனைய மாவட்டங்கள் போல் நாடக இலக்கியத்தின் செம்மை சான்ற வளர்ச்சி திருக்கோணமலையில் குறிப்பிடக்கூடியதாக இல்லாது இருந்தபோதும் 1990ம் ஆண்டுக்குப் பின் பாலசுகுமார், த. அமரசிங்கம், த.பி. சுப்பிரமணியம், கா. சிவபாலன், திருமலைநவம் போன்றோர் ஆங்காங்கே எழுதிய நாடக இலக்கியங்கள் பற்றிய கட்டுரைகளை தவிர நாடக இலக்கியத்தின் நெறி சார்ந்த வளர்ச்சி திருக்கோணமலை பிரதேசத்தில் குறைவாகவே இருந்துள்ளது. அதேவேளை நாவலின் வரவு மிக அருந்தலாகவே இருந்துள்ளது. ஆனால் சிறுகதையில் தேவகடாட்சம், திருமலை சுந்தா, என்.சித்திரவேல், அ.ச. பாய்வா, வீ.என். சந்திரகாந்தி கிண்ணியா ஏ.எம்.எம் அலி போன்றோரின் படைப்புக்கள் திருமலை சிறுகதைகள் இலக்கியத்தை தூக்கிப்பிடிக்கும் கைங்கரியமாக இருந்தது. திருக்கோணமலை கலை இலக்கியத்துறையின் வளர்ச்சி ஓர் மந்தத்தன்மை கொண்டதாக இருந்தபோதிலும் நாவல், சிறுகதை, நாடகம், தொலைக்காட்சி, மெல்லிசை, சங்கீதம் என்ற தொகை வகைப்பட்ட கலை இலக்கியத்தின் கூட்டுமொத்த வளர்ச்சியையும் ஓரளவு காணக்கூடியதாகவுள்ளது. குறிப்பாக கவிதை துறையில் மூதூர், கிண்ணியா போன்ற கிராமங்களில் இருந்து பெருந்தொகையான கவிஞர்கள் எழுத முற்பட்டதும் பல்வேறு கவிதைகள், ஏடுகள் இக்காலப்பகுதியில் வெளி வந்தமையும் இதற்கு அடையாளங்களாகும். எஸ் ஆர். துனபாலசிங்கத்தை ஆசிரியராகக்கொண்ட நீங்களும் ஏழுதலாம் கவிதை ஏடு புதிய தலை முறையினருக்கு களமாக அமைந்தது.

2012ம் ஆண்டுக்குப்பின், திருக்கோணமலை பிராந்தியத்தில் இலக்கிய வடிவங்களின் உருவாக்கம் அருந்தலாக இருந்தபோதும் கவிதைத் துறையை பெரும்படியாக தேர்ந்தெடுத்த இளைய சமூகமொன்று அதிகமான வரவை பதிவு செய்துள்ளார்கள் அவ்வகையில், தில்லைநாதன் பவித்திரனின் ரசவாதம் (22010) குறியிடல் (2012) திருமலை அஸ்ரப்பின் கவிதைகள் கிண்ணியாவை சேர்ந்த ஜே. பிரோஸ்கான் என் எல்லா நரம்புகளிலும் 2013. தீ குளிக்கும் ஆ, ண்மரம் 2012, நாக்கு 2017, ஆண்வேசி 2014, இதுவும் பிந்திய இரவின் கனவுதான் 2009, மாயனின் சிறையிலிருந்து மடல்கள் 2016. ஏ. நஸ்புள்ளா காவிநரகம் 2013, கிண்ணியா சபருள்ளா. வியத்தொழுகும் மழைப்பொழுது 2009, கவிஞர் யோகானந்தனின் என்மனவானில் 2009, சுஜந்தன் நிலம் பிரிந்தவனின் கதை 20011, ஷெல்லிதாசனின் செம்மாதுளம் பூ 2010, நகரவீதிகளில் நதிப்பிரவாகம் 2013 ஆகிய தொகுதிகளில் இடம் பெற்றிருக்கும் கவிதைகள் ஈழத்து இலக்கியப்போக்கின் செழுமையையும் வளத்தையும் படம் பிடித்து காட்டுபவையபாக அமைந்துள்ளன.

இதேவேளை புலம் பெயர்ந்து சென்று திருகொணமலை இலக்கிய பார்வையூடாக புலம்பெயர் இலக்கியத்துக்கு வளம் சோத்து வருபவர்கள் என்ற வகையில் ஆழியாள் அவுஸ்திரேலியா ஆனந்த பிரசாத் கனடா பாரதிபாலன் டென்மார்க் மதிவதனி சுவீஸ்லாந்து சித்திரா நாகநாதன் இங்கிலாந்து மு. வே யோகேஸ்வரன் இந்தியா க. ரமணிதரன் அமெரிக்கா எஸ். சேல்வகுமார். கனடா புரட்சிபாலன் கனடா .உவர்மலை வி.எஸ். குமார். இங்கிலாந்து. மயில் மகாலிங்கம் ஜேர்மன் த. லிங்கரெட்ணம் நெதர்லாந்து போன்ற புலம் பேயர் இலக்கிய கர்த்தாக்களின் படைப்புக்கள் திருமலை பங்களிப்பை எடுத்துக்காட்டி நிக்கின்றன.

## வினை விதைத்தோர்

*செய்வினையெனும் தீவினையால் அன்று*
*செயற்பட்ட விதம் தவறென்று உணராது*
*உய்யும்படி ஒழுக்கம் பேணாது இருந்து*
*உருப்படாது போனதை உணரவில்லையே!*

*பொய்யும் களவும் போலி பேச்சுவார்த்தைகளும்*
*பொய்யாய்ப் பழங்கதையாய் போய் உண்மை விழித்தது*
*எய்தவன் இருக்க அம்பை நொந்து ஏமாந்துபோன*
*எதிர்ப்புக்கள் கொதிப்புகளாகி எரிகிறது இலங்கைத் தீவு*

*ஐயோ கடவுளே காப்பாற்று என்று அலறி*
*ஐயம் வெளிச்சத்திற்கு வரும் நாள் இந்நாள்*
*மையோ மரகதமோ மறிகடலோ விடைதருமோ*
*மானம் போனது ! நிதானம் மிக அவதானமானது*

*பட்டினி பசிப்பிணி தொட்டுத்தழுவ பாதை திறந்தது*
*பனையேறி விழுந்தவனை மாடு மிதிக்கிறதாய்*
*பட்டுப்போக நாடோ கெட்டுப்போய் கிடக்கிறது.*
*பாரப்பா! பழனியப்பா! பாதைத்தீ எரியுதப்பா!*

*கொத்தணிக் குண்டுகள் கொத்தாகக் கொட்டியோர்*
*கொத்தடிமையாகி கடனுக்கு வட்டிகட்டுகிறார்.*
*மெத்தப்படித்த மேதாவிப் பேச்சும் போச்சுதே*
*மொத்தமாகப் பார்த்தால் பஞ்சம் தலைதூக்குகிறது*
*எத்தனை காலந்தான் ஏமாற்றமுடியும் மக்களை*
*எட்டப்பர் கும்பலும் தட்டம் ஏந்தும் பிச்சைநிலை*
*சத்தியசோதனை இத்தரைமீதிலே சத்தியமானதுபார்*
*சாட்சியாயிருந்து காட்சிப் பொருளாவதை பார்*

*எப்படியோ நீதி விழித்துக் கொண்டது*
*ஏமாற்று வித்தைகள் ஒழித்துக்கொள்கிறது*
*தப்புத்தவறுகள் தன்நிலை அறியத் தெரிகிறது*
*தமிழர் தரப்புக்கும் புதிய காலம் பிறக்கிறது*

*பாதகம் செய்தோர் பயந்து ஓடுகின்றார்*
*பார்! பார்! நன்றாய்ப் பாடுபடுவதைப்பார்*
*சாதகமான நிலை ஒன்று உருவாகவே*
*சான்றிதழ் வெளிவரும் நீ கலங்காதே*

*************

**பாவலர் செ.ஞானராசா**
**993, அன்புவழிபுரம்**
**திருகோணமலை, இலங்கை**
**WhatsApp No. 0741447992**

# மலைநாட்டுத் தமிழ்மக்களின் உரிமைப் போர்த் தளபதிகள்

- விக்கி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸில் மூண்ட குழப்பத்திலிருந்தும் சண்டையிலிருந்தும் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தோன்றியது. அதன் தோற்றத்தையே கண்டஞ்சிய முதலாளிகள் அதை முளையிலேயே கிள்ளியெறியத் திட்டமிட்டனர். இதன் விளைவாக, இலங்கைத் தோட்ட முதலாளிகள் சம்மேளனம் ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசுக்கு அங்கீகாரம் வழங்காமலேயிருந்தது. இதனால், தங்களுக்கு விருப்பமான ஒரு தொழிற் சங்கத்தில் சேரத் தொழிலாளர்களுக்குள்ள உரிமையை நிலைநாட்டுவதற்காக ஒரு பெரிய போராட்டத்தை ஆரம்பிப்பதைத் தவிர, காங்கிரசுக்கு வேறு வழியிருக்கவில்லை. தியகமையைச் சேர்ந்த வீரம் பொருந்திய தொழிலாளர்கள் நூற்றுக் கணக்கில் சரித்திரப் பிரசித்தியுள்ள இப்போராட்டத்தின் முன்னணியிலே நின்றனர். இதிலேதான் திரு. ஆபிரகாம் சிங்கோ என்னும் வீரவாலிபர் 1956ம் ஆண்டுமேமாதம் 18ந் திகதியன்று தன் இன்னுயிரைப் பலிகொடுத்தார்.

### அபூர்வமான அறிவாற்றல்

அந்த வீரப் போராட்டம் திரு. எஸ்.நடேசனைக் காங்கிரசுக்கு - ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரசுக்கு ஈர்த்தது. வாலிப அரசியல்வாதியென்ற பிரசித்தியுடன் லண்டனிலே பல வருடங்கள் தங்கியிருந்த பின் அவர் அப்பொழுதுதான் இலங்கைக்குத் திரும்பியிருந்தார். ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் அவரை மனப்பூர்வமாக வரவேற்றது. சில அம்சங்களில் அவர் தமது நண்பர் திரு.பி. தேவராஜைப் போலவேயிருந்தார்ளு ஆங்கிலத்தின் சில சிறந்த பாரம்பரியங்களில் ஊறித் திளைத்திருந்த போதிலும் தமது சொந்தப் பண்புகளை இழக்காதவராகத் தோற்றினார். காங்கிரஸில் அதுவரை போற்றிப் பாதுகாக்கப்பட்டுவந்த சம்பிரதாயங்களுக்குச் சவால்விடுத்தார். அவருடைய சுயேச்சையான சிந்தனையையும் விவேகத்தையும், சங்கடமான நிலைமைகளைத் துரிதமாக மதிப்பிட்டறியும் அவருடைய மதிநுட்பத்தையும், காங்கிரஸின் உளுத்துப்போன பிரச்சினைகள் சிலவற்றை அணுகுவதில் அவர் காட்டும் புத்திகூர்மையையும் கவனிக்கும் போது, அவர் சாதாரண அறிவாற்றல் படைத்தவரல்லரென்பது தெளிவு. திரு. நடேசன் ஒளிவுமறைவின்றி வெளிப்படையாக, பட்டவர்த்தனமாகப் பேசுபவர்ளு தமது கருத்துக்களை நேருக்குநேர், வெளிப்படையாகத் தெரிவிக்க ஒரு போதும் தயங்குவதில்லை. விவாதங்களிலும் ஆலோசனைகளிலும் அவரை எதிர்த்திப் பேசுபவர்கள் சொற்பம். அவருடைய வாதங்களில் தொழிலாளர்களுக்கான அனுதாபமும் இரக்கமும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்.

### காங்கிரஸில் புதிய குரல்

அவர் வந்துசேர்ந்த ஒரு சில மாதங்களுக்குள் காலத்துக் கொவ்வாத பழைய உளுத்துப் போன சுலோகங்கள் நிராகரிக்கப்படவேண்டுமென்றும், தெரிவுசெய்யப்பட்ட அதிகாரிகளையும் சம்பளம் பெறும் அதிகாரிகளையும் பிரிக்கும் தடைகள் அகற்றப்பட்டு, அவற்றிற்குப் பதிலாக தோழமை பந்தங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும் வாதாடினார். 'பழைய காங்கிரஸ் எந்தத் திட்டவட்டமான கொள்கையையோ அல்லது அரசியல் வேலைத் திட்டத்தையோ கொண்டிருக்கவில்லை. இலங்கை ஜனநாயகக் காங்கிரஸ் போன்ற பலம் பொருந்திய ஒரு ஸ்தாபனம் மக்களைச் சரியாக வழிநடத்திச் செல்லத் தவறியதற்கு அதுவே பிரதான காரணம்' என்று சுட்டிக் காட்டினார். 'வேலை நீக்கம் செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலைபெற்றுக் கொடுத்ததற்கு மேல் அது வேறொன்றும் செய்யவில்லை' என்று அவர் அஞ்சாமல் தெரிவித்தார்.

### தொழிலாளர் விமோசனம்

காங்கிரஸின் கோத்திரத் தலைமையையும் பெரிய ஜில்லாக்களில் அது நிலச்சுவான் முறையில் அமைந்துள்ளதையும் அவர் வன்மையாகக் கண்டித்தார். திரு.எஸ்.தொண்டமானுக்காயினுமென், அல்லது டாக்டர் என்.எம்.பெரேராவுக்காயினுமென், தொழிலாளர்கள் தொழிலாளர்களையெதிர்த்துச் சண்டையிடுவதை அவர் கண்டிக்கிறார். தோட்டத் தொழிலாளர்கள் இந்நாட்டிலுள்ள தொழிலாளர் வர்க்கத்துடனும் மக்களுடனும் ஒற்றுமையாகச் சேர்ந்து செயலாற்றுவதன் மூலம் மட்டுமே தங்கள் சுதந்திரத்தைப் பெறமுடியுமென்று அவர் நம்புகிறார். தொழிலாளர் வர்க்கமும் முழுவதும் அடக்கு முறைகளிலிருந்தும் சுரண்டலிலிருந்தும் விடுதலை செய்யப்பட்டால் மட்டுமே. தோட்டத் தொழிலாளர் பிரஜா உரிமையும் வாக்குரிமையும் மற்றும் சுதந்திரங்களும் பெறுவது சாத்தியமாகுமென அவர் கருதுகிறார். இதனாற்றான் தொழிலாளர்கள் இந்நாட்டின் இடதுசாரி இயக்கத்தில் வழிநடத்திச் செல்லப்பட வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.



ஸி.வி.வேலுப்பிள்ளை



திரு.எஸ்.நடேசன்
உலகில் இணைவு 1920.09.04
உயிர்ப்பின் நிறைவு 2003.01.13

சோஷலிஸத்தின் கீழ் சகல கலாசாரங்களும் மலர்வதற்குச் சம சந்தர்ப்பத்துடன் கூடிய சமாதானமும் ஐக்கிய இலங்கையும் ஏற்படமுடியுமென அவர் நம்புகிறார்.

### பதவிக்கு பெருமை

1957ம் ஆண்டில் நாவலப்பிட்டியிலே நடைபெற்ற ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் வருடாந்த மகாநாட்டில் திரு. நடேசன் யூனியனின் உதவிப் பொதுக் காரியதரிசியாகத் தெரிவுசெய்யப்பட்டார். காங்கிரஸ் யூனியனிலுள்ள உதவிப் பொதுக் காரியதரிசிகளில் தமது பதவிக்குப் பெருமையைத் தேடிக் கொடுத்திருக்கும் ஒருசிலருள் அவரும் ஒருவர். தீர்மானங்களாயிருந்தாலென் அல்லது அறிக்கைகளாயிருந்தாலென் அல்லது கடிதங்களாயிருந்தாலென் அல்லது வேறெதுவாயிருந்தாலென், அவருடைய எழுத்துக்களிலே உயர்தர அரசியல் போக்குகளைப் பகுத்துணரும் ஒருவரின் ஆற்றலும் அறிவும் பிரதிபலிப்பதைக் காணலாம். அரசியல் சாத்திரத்தையும் சரித்திரத்தையும் அவர் ஆழ்ந்து படித்திருப்பதே இதற்கெல்லாம் காரணமாகும்.



### மிக முக்கியமான பெரும் பணிகள்

ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸின் அவர் கழித்துள்ள இரு வருடங்களில் வாலிபர்களின் மனத்தில் ஒரு ஜீவாதாரமானமாற்றத்தை உண்டாக்கியுள்ளன. துரிதமாக நிகழ்ந்து வரும் மாற்றங்களை உணரமுடியாத நிலையிலுள்ளவர்கள், திரு. நடேசன் 'நபர் தோத்திரக் கோட்பாட்டுக்கு' ஆபத்தானவரென எண்ணுகிறார்கள். இந்த முட்டுக் கட்டைகளெல்லாமிருந்த போதிலும் அவர் பயனுள்ள வேலைசெய்திருக்கிறார். தொழிலாளர் வாழ்க்கை நிலைமைகளை அபிவிருத்தி செய்வதற்காக அவர் உருவாக்கிய கோரிக்கைகளும் தொழிலாளர் சட்டங்களில் மாற்றங்களை உண்டாக்குவதற்காக அவர் தயாரித்த மகஜரும் மிக முக்கியமானவையாகும். மிக உபயோகமான பணிகளாகும்.

கண்டியில் ஆரம்பக் கல்வி பெற்ற திரு. நடேசன் பின்னர் லண்டன் சர்வ கலாசாலையில் சேர்ந்தார். முதலாவது வைத்தியப் பட்டப் பரீட்சையில் தேறியபின் அவர் எடின்பரோ சர்வகலாசாலையில் சேர்ந்தார். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அவருடைய சுகவீனம் அவரது படிப்பைத் தடைப்படுத்திவிட்டது.

### லண்டனில் ஆற்றிய சேவை

லண்டனில் நீண்டகாலம் தங்கியிருந்தபோது, வாலிபர்களின் அபிப்பிராயத்தை உருவாக்குவதில் அவர் ஜீவாதாரமாக பங்கெடுத்தார். 1950ம் ஆண்டிலே இலங்கை மாணவர்கள் சங்கத்தின் காரியதரிசி என்ற முறையில் தெலிங்கானா சம்பவத்தையொட்டி 25,000 முற்போக்குவாதிகளை விசாரணையின்றிச் சிறையிலடைத்ததற்காக நேரு அரசாங்கத்தையெதிர்த்து ஒரு அனுதாப ஆர்ப்பாட்டத்துக்கு ஏற்பாடுசெய்தார். திரு.கிருஷ்ணமேனன், பேராசிரியர் பேர்னல் போன்ற பிரமுகர்கள் இலங்கை மாணவர்கள் சங்கத்தில் சிரத்தை காட்டியதற்குத் திரு. நடேசன் எடுத்துக் கொண்ட முயற்சிகளே பெரும்பாலும் காரணமாகும்.

1951ம் ஆண்டில் பேர்லின் வாலிபர் விழாவில் கலந்துகொள்வதற்காகச் செல்லும் வழியில் பிரஸல்ஸில் திரு. நடேசன் கைதுசெய்யப்பட்டார். இந்தச் சம்பவம் பெல்ஜியம் அரசாங்கத்துக்கும் செக்கோஸ்லோவாக்கிய அரசாங்கத்துக்கு மிடையேயுள்ள விமான ஒப்பந்தம் முறிவதற்கு அடிகோலியது. திரு. நடேசன் இங்கிலாந்துக்குத் திருப்பியனுப்பப்பட்டாரெனினும், அவர் வேறுபாதையில் ஜெர்மனிக்குச் சென்று, பேர்லின் வாலிபர் விழாவில் கலந்துகொண்டார். அங்கிருந்து கிழக்கு ஐரோப்பாவிலுள்ள அநேக நாடுகளுக்கும் சோவியத் யூனியனுக்கும் மங்கோலியாவுக்கும் நவசீனாவுக்கும் விஜயம் செய்தார். சீனமக்களின் வேலைத் திறமையும் அறிவாற்றலும் அடக்கமும் அவரைப் பெரிதும் கவர்ந்தன.

இங்கிலாந்துக்குத் திரும்பிய பின் திரு. நடேசன் லண்டனிலுள்ள ஆயிரம் இலங்கை மாணவர்களின் கலாசார,அரசியல் வாழ்க்கையில் பெருஞ்சிரத்தையெடுத்தார். (45 குருப்பின் ஒரு பிரதிநிதியான திரு.ரஞ்சித் பேர்னாண்டோவுடன் அவர் ஹொல்போர்னில் இலங்கைக் கலைப்பொருட் காட்சியொன்றை அமைத்தார். சிங்களவர் - தமிழர் ஒற்றுமைக்காகவும், சீனாவில் மக்கள் பெற்ற வெற்றியைப் பாராட்டியும் மற்றும் முற்போக்கான இயக்கங்களைப் போற்றியும் பாடல்கள் இயற்றவும் திரு.எச்.எஸ்.பெரேராவுக்கு உதவி செய்தார். லண்டன் மக்களுக்குக் காட்டப்பட்ட ஆசிய கலாசாரத் திரைப்பட நிகழ்ச்சிகளுடன் தொடர்புகொண்டார். உதயசங்கரின் "கல்பனா" இத்தகைய படங்களில் ஒன்றாகும்.

### ஆராய்ச்சி வேலையின் ஆழம்

திரு. நடேசன் சிலவருடங்கள் வரை லண்டனிலுள்ள இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சிக் குழுவின் தலைவராயிருந்தார். லண்டனிலுள்ள இலங்கை மாணவர்களுக்கு ஒரு ஹாஸ்டலைப் பெற்றுக் கொடுக்க உதவி செய்தார். 1955ம் ஆண்டில் லண்டனிலே முதலாவது ஆசிய - ஆபிரிக்க மாணவர்கள் மகாநாட்டைத் தொடக்கி வைத்தார். டாக்டர் ஜகன் பிரதமர் பதவியை இழந்த போது, பிரிட்டிஷ் கயானாவின் முன்னேற்றக் கட்சி அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் இழைக்கப்பட்ட அநீதியை அம்பலப்படுத்துவதற்காக லண்டனில் கூட்டங்களை நடத்துவதற்கு ஏற்பாடு செய்வதில் உதவிசெய்தார்.

திரு. நடேசன் பிரிட்டிஷ் மியூஸியத்திலும் நூல் நிலையத்திலும் பல வருடங்கள் ஆராய்ச்சி வேலைகள் செய்துள்ளார். இலங்கையிலுள்ள தோட்டத் தொழிலாளர்களின் சுருக்கமான சரித்திரமொன்றை எழுதியிருக்கிறார். லண்டனில் நடைபெற்ற சாம்ராச்சிய கம்யூனிஸ்ட், தொழிலாளர் மகாநாட்டுக்காக இலங்கையின் அரசியல், பொருளாதார நிலைமைகளைப் பரிசீலனை செய்து ஒரு சிறு புத்தகம் எழுதினார். திரு. பாமிடட் போன்ற பிரபல எழுத்தாளர்கள் இந்த நூல்களை மிகவும் பாராட்டி விமர்சித்துள்ளனர். திரு. நடேசன் ஆங்கில சஞ்சிகைகளுக்கு ஒரு சில சிறுகதைகளும் எழுதியுள்ளார்.

### பரந்தமனம் படைத்த நண்பர்

பிரத்தியேக வாழ்க்கையில் திரு. நடேசன் உறுதியும் சௌஜன்னியமும் பொருந்திய நண்பர். பரந்தமனமும் விரிந்த நோக்கமும் படைத்த அவர் சுலபமாக நண்பர்களை ஈர்த்து விடுவதுடன், அந்நட்பை நீடித்தும் விடுகிறார். தமது உடையில் மிகுந்த கவனம் செலுத்தும் திரு. நடேசன் தமிழ் இலக்கியத்துடனும் ஆங்கில இலக்கியத்துடனும் மற்றும் கலாசாரத்துறைகளுடனும் நெருங்கிய தொடர்புகொண்டுள்ளார். திரு. நடேசனைப் போன்ற ஒருசிலர் மட்டும் இருந்தால், மலைநாட்டு மக்களின் சரித்திரத்தை நல்ல முறையிலே உருவாக்கமுடியும்.

# சென்னையில் பிரதமர் மோடிக்கு உற்சாக வரவேற்பு தமிழ் கலாச்சாரத்தை மேலும் பிரபலப்படுத்த மத்திய அரசு முயற்சிப்பதாக உறுதி

சென்னை வந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. நேரு உள்விளையாட்டு அரங்கில் நடந்த விழாவில் ரூ.31,500 கோடி மதிப்பிலான திட்டங்களை பிரதமர் தொடங்கி வைத்தார். தமிழ் மொழி, கலாச்சாரத்தை மேலும் பிரபலப்படுத்த மத்திய அரசு முயற்சி மேற்கொண்டு வருவதாக பிரதமர் தெரிவித்தார்.

தமிழகத்தில் மத்திய, மாநில அரசுகளின் பங்களிப்பில் நெடுஞ்சாலை, ரயில்வே துறையில் புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் முடிக்கப்பட்ட திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணிக்கும் விழா, சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் நேற்று மாலை நடந்தது. இதில் பங்கேற்பதற்காக பிரதமர் நரேந்திர மோடி, ஹைதராபாத்தில் இருந்து மாலை 4.56 மணிக்கு தனி விமானத்தில் சென்னை வந்தார். விமான நிலையத்தில் அவரை ஆளுநர் ஆர்.என்.ரவி, மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், தமிழக அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி, எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, தலைமைச் செயலர் வெ.இறையன்பு, டிஜிபி சைலேந்திர பாபு, சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, தமாகா தலைவர் ஜி.கே.வாசன் உள்ளிட்டோர் வரவேற்றனர்.அங்கிருந்து ஹெலிகாப்டரில் ஐஎன்எஸ் அடையாறு கடற்படை தளத்துக்கு வந்த பிரதமரை முதல்வர் மு.க.ஸ்டாலின் வரவேற்றார்.

பின்னர் அங்கிருந்து காரில் புறப்பட்ட பிரதமர் மோடி, மாலை 5.45 மணிக்கு நேரு உள்விளையாட்டு அரங்குக்கு வந்தார். தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா தொடங்கியது. மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் வரவேற்று பேசினார். முதல்வர் மு.க.ஸ்டாலின் முன்னிலை வகித்து உரையாற்றினார்.அதைத் தொடர்ந்து சென்னை பெங்களூரு அதிவிரைவு சாலை, சென்னை துறைமுகம் மதுரவாயல் ஈரடுக்கு மேம்பாலம், எழும்பூர் உள்ளிட்ட 5 ரயில் நிலையங்கள் நவீனமயமாக்கல், பன்மாதிரி சரக்கு போக்குவரத்து பூங்கா உள்ளிட்ட 6 திட்டங்களுக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். அத்துடன், நிறைவுபெற்றுள்ள மதுரை தேனி அகல ரயில்பாதை, தாம்பரம் செங்கல்பட்டு இடையே 3வது ரயில்பாதை மற்றும் இயற்கை எரிவாயு குழாய் பதிக்கும் திட்டங்களையும் பிரதமர் தொடங்கி வைத்தார்.

சென்னை பெரும்பாக்கத்தில் மத்திய, மாநில அரசு நிதியில் கட்டப்பட்ட குடியிருப்புகளை



திறந்துவைத்து, பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளையும் பிரதமர் வழங்கினார்.பின்னர் பிரதமர் மோடி, 'வணக்கம்' என்று தமிழில் கூறி தனது உரையை தொடங்கினார். அவர் பேசியதாவது:தமிழகத்துக்கு மீண்டும் வந்திருப்பது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. இந்த நிலம் மிகுந்த தனித்துவம் வாய்ந்தது. இங்குள்ள மக்கள், கலாச்சாரம், மொழி ஆகிய அனைத்தும் மிகச் சிறப்பானவை. மகாகவி பாரதியார் இதை 'செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத் தேன் வந்து பாயுது காதினிலே' என அழகாக பாடியுள்ளார்.தமிழகத்தை சேர்ந்தவர்கள் ஒவ்வொரு துறையிலும் சிறந்தவர்களாக விளங்குகின்றனர்.

சமீபத்தில் காதுகேளாதோருக்கான ஒலிம்பிக் போட்டியில் இந்திய வீரர்கள் பெற்ற 16 பதக்கங்களில், தமிழக இளைஞர்கள் 6 பேரின் சிறப்பான பங்களிப்பு இருந்தது.தமிழ் மொழி நிலையானது. தமிழ் கலாச்சாரம் உலகளாவியது. சென்னையில் இருந்து கனடா வரை, மதுரை முதல் மலேசியா வரை, நாமக்கல் முதல் நியூயார்க் வரை, சேலம் முதல் தென்னாப்பிரிக்கா வரை புத்தாண்டு மற்றும் பொங்கல் காலங்கள் மிகுந்த ஆர்வம் நிறைந்ததாக உள்ளது.பிரான்ஸ் நாட்டில் நடந்த கேன்ஸ் திரைப்பட விழாவில், தமிழகத்தின் மைந்தரான மத்திய அமைச்சர் எல்.முருகன் பாரம்பரிய உடையில் சிவப்பு கம்பள வரவேற்பில் சென்றது உலகத் தமிழர்களை பெருமிதம் கொள்ளச் செய்துள்ளது. தமிழகத்தின் வளர்ச்சிப் பயணத்தில் தற்போது மேலும் ஒரு உன்னதமான அத்தியாயத்தை கொண்டாட நாம் கூடியுள்ளோம். ரூ.31,000 கோடிக்கு மேற்பட்ட திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளது. சில திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.சென்னை பெங்களூரு விரைவு சாலை இரண்டு முக்கியமான வளர்ச்சி மையங்களை இணைக்கிறது.

மதுரவாயல் மேம்பால திட்டம், சென்னை துறைமுகத்தை திறன்மிக்கதாக மாற்றுவதுடன், போக்குவரத்து நெரிசலையும் குறைக்கும்.வீட்டு வசதி திட்டம்பிரதமரின் வீட்டுவசதி திட்டத்தின்கீழ் வீடுகள் பெற்றுள்ள அனைவருக்கும் வாழ்த்துகள். இது எங்கள் அனைவருக்கும் நிறைவு தரும் திட்டமாகும். பன்மாதிரி சரக்கு பூங்காக்கள், பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும்.உள்கட்டமைப்பு வசதிக்கு முக்கியத்துவம் அளித்த நாடுகள்தான் வளர்ந்த நாடுகள் என்ற நிலைக்கு உயர்ந்தன. அந்த வகையில், தலைசிறந்த உள்கட்டமைப்பு வசதிகளை உருவாக்க மத்திய அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. ஒவ்வொரு கிராமத்துக்கும் அதிவேக இணைய வசதி அளிப்பது தொலைநோக்கு பார்வையாக உள்ளது. தேசிய கட்டமைப்பு திட்டமானது, ரூ.100 லட்சம் கோடியில் செயல்படுத்தப்பட உள்ளது.தமிழ் மொழி, கலாச்சாரத்தை மேலும் பிரபலப்படுத்த மத்திய அரசு முழு முயற்சிகளை எடுத்து வருகிறது. எனது தொகுதியில் உள்ள பனாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் பாரதியார் தமிழ் இருக்கை அமைக்கப்படுவது மகிழ்ச்சி அளிக்கிறது. தேசிய கல்விக் கொள்கையில் இந்திய மொழிகளை ஊக்குவிக்க முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது. தேசிய கல்விக் கொள்கை மூலம், தொழில்நுட்பம், மருத்துவப் படிப்புகளை உள்ளூர் மொழிகளில் படிக்க முடியும். தமிழக இளைஞர்கள் இதில் பயனடைவர். அண்டை நாடு என்ற வகையில், இலங்கைக்கு அனைத்து உதவிகளையும் இந்தியா அளிக்கிறது. ஜனநாயக ஸ்திரத்தன்மை, பொருளாதார மீட்பில் இலங்கை மக்களுக்கு இந்தியா தொடர்ந்து துணை நிற்கும். நாம் அனைவரும் இணைந்து இந்தியாவை பலமானதாகவும், வளமானதாகவும் ஆக்குவோம். இவ்வாறு பிரதமர் பேசினார்.

விழாவில் தமிழக அமைச்சர்கள், எம்.பி.க்கள், எம்எல்ஏக்கள், பாஜக நிர்வாகிகள் உட்பட பலர் பங்கேற்றனர்.பிரதமரின் உரையை சென்னையில் உள்ள அகில இந்திய வானொலியின் நிகழ்ச்சி நிர்வாகி சுதர்ஷன் தமிழில் மொழி பெயர்த்தார். மோடியின் உரையை அச்சு பிசகாமல் அப்படியே அவர் மொழி பெயர்த்தது அனைவரையும் ஈர்த்தது. பிரதமரின் மன் கி பாத் உரையை தமிழில் மொழிபெயர்ப்பவரும் இவர்தான் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெளி மாநிலத்தவருக்கான உள் அனுமதிச் சீட்டு முறையை கொண்டு வாருங்கள்: வேல்முருகன்



"ராமேசுவரம் மீனவப் பெண் கொலை வழக்கு குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை பெற்றுத் தர வேண்டும்" என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் வேல்முருகன் வலியுறுத்தியுள்ளார். இது குறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழினத்தின் அரசுரிமையை மறுக்கின்ற மத்திய அரசு, வெளியார் ஆக்கிரமிப்பை ஊக்குவித்து வளர்த்து, தமிழர் தாயகத்தை சிதைக்க முனைகின்றது.

தமிழகத் தாயகத்தை அயல் இனத்தாரின் ஆக்கிரமிப்பிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியாமல் நாம் திணறி வருகிறோம். தமிழகத்தில் அதிகளவில் நடைபெற்றுக் கொண்டுள்ள குற்றச் செயல்களின் எண்ணிக்கை, தமிழகத்தில் குடியேறியுள்ள வெளி மாநிலங்களைச் சேர்ந்தவர்களால் மேலும் உயர்ந்து வருவதை தமிழக வாழ்வுரிமைக் கட்சி தொடர்ந்து சுட்டிக்காட்டி வருகிறது.இச்சூழலில், ராமேசுவரம் அருகேயுள்ள வடகாடு மீனவ கிராமத்தில் கடற்பாசி எடுக்கச் சென்ற மீனவப் பெண் எரித்துக் கொலை செய்யப்பட்டிருக்கும் செய்தி பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்துகிறது.கூட்டுப் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்டதாக சந்தேகிக்கப்படும் நிலையில், அங்கு இறால் பண்ணையில் வேலை பார்த்து வந்த வடமாநிலத்தைச் சேர்ந்த இளைஞர்களை போலீஸ் கைது செய்து விசாரித்து வருகிறது.

கடந்த ஏப்ரல் மாதம் ஈரோடு மாவட்டம் மொடக் குறிச்சியில் வட மாநிலத்தவர்கள், தமிழக காவல்துறையினரைத் தாக்கியதில் படுகாயமடைந்த காவலர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர். அப்போதே, தமிழகத்தில் வெளி மாநிலத்தவர்கள் நடத்தும் ஆக்கிரமிப்புகளும், குற்றச்செயல்களும் எவ்விதக் கேள்வி முறையின்றி தொடர்ந்து நடைபெற்று வருவதை சுட்டிக்காட்டிய தமிழக வாழ்வுரிமைக் கட்சி, வெளி மாநிலத்தவர்களின் நடவடிக்கைகளை கண்காணிக்க வேண்டும் என்று எச்சரிக்கை விடுத்தது.

அதோடு, தமிழகத்தில் அதிகரித்து வரும் வட மாநிலத்தவர்களின் எண்ணிக்கையை கட்டுப்படுத்தும் வகையில், உள் அனுமதி சீட்டு முறையை கொண்டு வர வேண்டும் என்று நான் சட்டமன்றத்தில் தமிழக முதல்வர்க்கு கோரிக்கை விடுத்திருந்த நிலையில், மீனவப் பெண் கொல்லப்பட்ட கொடூர நிகழ்வு அரங்கேறியுள்ளது.எனவே, வெளியாரை வெளியேற்றுவதென்பது வெறும், தமிழர்களின் வேலை வாழ்வுரிமை சார்ந்த சிக்கல் மட்டுமல்ல, அது தமிழர் தாயகத்தைப் பாதுகாக்கும் முக்கிய நடவடிக்கை என்பதை உணர்ந்து, இனியும் தாமதிக்காமல் உள் அனுமதி சீட்டு முறையை கொண்டு வர தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மீனவப் பெண் கொலைசெய்தவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி, கடுமையான தண்டனை பெற்றுத்தர வேண்டும். பாதிக்கப்பட்ட மீனவப் பெண்ணின் குடும்பத்திற்கு 50 லட்சம் ரூபாய் தமிழக அரசு இழப்பீடு வழங்க வேண்டும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி வலியுறுத்துகிறது" என்று வேல்முருகன் கூறியுள்ளார்.

# பேறிவாளனை தொடர்ந்து 6 பேரையும் விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்: முதல்வர் ஸ்டாலினுக்கு ரவிச்சந்திரன் கடிதம்

பேறிவாளன் விடுவிக்கப்பட்டதுபோல் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற மற்ற 6 பேரையும் விடுதலை செய்ய வேண்டும் என முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ரவிச்சந்திரன் கடிதம் எழுதியுள்ளார்.விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டையைச் சேர்ந்தவர் ரவிச்சந்திரன். இவர் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்று 32 ஆண்டுகளாக மதுரை மத்திய சிறையில்உள்ளார்.

தற்போது பரோலில்விடுதலையாகி தூத்துக்குடிமாவட்டம் சூரப்பநாயக்கன்பட்டியில் வசித்து வருகிறார்.ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற பேறிவாளன், உச்ச நீதிமன்ற உத்தரவின் பேரில் சில நாட்களுக்கு முன்பு சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார்.இந்நிலையில், பேறிவாளனை போல் ராஜீவ் காந்தி கொலையில் ஆயுள் தண்டனை பெற்ற தான் உட்பட 6 பேரையும் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கேட்டு முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு ரவிச்சந்திரன் கடிதம் அனுப்பியுள்ளார். 32 ஆண்டுகளாக சிறைஅந்த கடிதத்தில் அவர் கூறியிருப்பதாவது: 32 ஆண்டுகளாக சிறையில் உள்ளேன். தற்போது தங்கள் உத்தரவின் பேரில் சிறை விடுப்பில் இருந்து வருகிறேன். இதனால்உடல் நலம் குன்றிய என் வயதான தாயாரை அருகில் இருந்து கவனித்துக் கொள்ள முடிகிறது.

7 பேரை விடுதலை செய்யும் தமிழக அரசின் முடிவுக்கு ஒப்புதல்தராமல் காலம் தாழ்த்தி வந்த ஆளுநரிடம் மீண்டும் இவ்விவகாரத்தை கொண்டு செல்ல விரும்பாத உச்ச நீதிமன்றம், தனது உள்ளார்ந்த அதிகாரத்தை பயன்படுத்தி பேறிவாளனை விடுதலை செய்தது.நிர்வாக ஆணை இதேபோல் தமிழக அரசுக்கும் உள்ளார்ந்த அதிகாரம் உள்ளது. இந்த முன்விடுதலை தொடர்பாக நான் அனுப்பிய மனு மீது இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, எஞ் சியுள்ள நான் உட்பட 6 பேரையும் விடுதலை செய்யும் தீர்மானத்தை, ஆளுநரிடம் அனுப்பாமல் தமிழக அரசுக்குரிய நிர்வாக ஆணை அடிப்படையில் எங்களை விடுதலை செய்ய வேண்டும். இவ்வாறு கடிதத்தில் ரவிச்சந்திரன் குறிப்பிட்டுள்ளார்.

# RAYMOND CHO SAYS YES TO SCARBOROUGH

## ரேமண்ட் சோ அவர்கள் ஸ்கார்பரோவிற்கு 'ஆம்' என்று கூறுகிறார்

Yes ஆம் **Sheppard Subway** is coming to Scarborough
ஷெப்பர்ட் சுரங்க புகையிரதப் பாதை ஸ்கார்பரோவுக்கு வருகிறது



Yes ஆம் **$1B** investment in **Scarborough Hospitals**
ஸ்கார்பரோ மருத்துவமனைகளில் $1பில்லியன் முதலீடு



Yes ஆம் **First-ever Medical School** in Scarborough
ஸ்கார்பரோவில் முதல் மருத்துவக் கல்லூரி



Yes ஆம் **a new Tamil Community Centre**
ஸ்கார்பரோவில் தமிழர்களுக்கான ஒரு புதிய சமூக மையம்



Yes ஆம் **Free** license plate renewal
இலவசமாக வாகன உரிமத் தகடு புதுப்பித்தல்




**GET IT DONE**
செய்து முடிக்கின்றோம்

**Scarborough Matters Again!**
மீண்டும் ஸ்கார்பரோ ஒரு முக்கியமான விடயமாகிறது




**VOTE FOR RAYMOND CHO**
SCARBOROUGH NORTH




# ELECTION DAY

## Thurs, June 2 | 9AM - 9PM

**ADVANCE POLLS: May 19 - May 28 | 10 AM - 8 PM**

**Need a Ride?**
உங்களுக்கு வாகன வசதி தேவையா?

437-886-7CHO (246) Cho@VoteForCho.ca

Authorized by the CFO for the Raymond Cho Campaign







- ✔ First Tamil elected to political office with 16 years of experience
  வட அமெரிக்காவில் பொதுச்சேவைக்கு முதன்முதலில் தேர்ந்தெடுக்கப்பட்ட 16 வருடம் அரசியல் அனுபவம் கொண்ட தமிழர்.
- ✔ Championed the new Aaniin Community Centre and Library
  சன சமூகநிலையம், நூலகம் உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றியவர்.
- ✔ The First Politician to name 3 city streets in Markham in honor of the Tamil Community.
  கனடாவில் முக்கிய இடங்களுக்கு தமிழ் பெயர்களை சூட்டி தமிழ் அடையாளங்களை பேணியவர்.
- ✔ First municipality to recognize Thai Pongal & Tamil Heritage Month
  மார்க்கத்தில் இவரின் பதவிக்காலத்தில் கனடாவில் முதன்முதலில் தைப்பொங்கலும், தமிழர்மரபுரிமை மாதமும் உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்தப்பட்டது.
- ✔ Passed a resolution to investigate genocide in Srilanka
  தமிழர்கள் மீதான இனப்டுகொலையை விசாரிக்க வேண்டும் என்ற தீர்மானத்தை கனடாவில் முதன்முதலில் கொண்டுவந்தது மார்க்கம் மாநகரசபையாகும்.
- ✔ Friendship agreement between the City of Markham and Mullaitivu
  இவரது பதவிக்காலத்தில் மார்க்கம் மாநகர சபைக்கும் வடமாகாணத்துக்கும் (முல்லைத்தீவு) இடையே நட்பு ரீதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- ✔ Helped to introduce Bill 104, Tamil Genocide Education Week
  ஒன்ட்டாரியோ பாராளமன்றத்தில் தமிழ் இன அழிப்புக்கல்விவாரம் அறிமுகப்படுத்தப்பட்டு (bill104) மாணவர்கள் தமிழர் இனஅழிப்பு பற்றிய கல்வி கற்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டது.
- ✔ Committed to postsecondary education by helping secure the York University campus in Markham
  யோர்க் பல்கலைகழக உயர் கல்வி வளாகத்தை மார்கத்துக்கு கொண்டுவருவதற்கு பங்காற்றியவர்.

***IF YOU HAVE ANY QUESTIONS ABOUT VOTING OR NEED A RIDE, PLEASE DO NOT HESITATE TO CONTACT OUR TEAM!***

www.votelogan.ca | 905-209-6825 | logankanapathi

Authorized by the CFO of the Logan Kanapathi Campaign



MORTGAGES & REFINANCES
WE WILL GET THE MORTGAGE FOR
• LOW INCOME
• BAD CREDIT
• CONSUMER PROPOSAL
அனைத்துவிதமான மோட்கேஜ் தேவைகளுக்கும், ஆலோசனைகளுக்கும் அழையுங்கள்!
PRIVATE FIRST AND 2ND MORTGAGES WITHIN 24 HOURS
WE ARE CONFIDENT THAT WE CAN HELP YOU
Shan Thayaparan
Mortgage Architect
M08009140
MORTGAGE ARCHITECTS
416-826-7426
shan@shan123.com

Toshont Power Products
TPP
Motors • Drives • Control Panels

Canadian Distributor for **TOSHIBA**

Toshont Power Products, established in 1993, is a Canadian distributor of Toshiba Industrial Electrical Products. This includes low and medium voltage motors and VFDs, UPS, Power Apparatus and Components, PLCs and service.



**YOUR MOTORS & DRIVE EXPERTS**

In 1996, in response to our customer's custom needs, we expanded and opened our own Custom Controls Panel shop in Burlington. We also opened a sales office in Sudbury in 1996. In 2019 we opened a sales office in Montreal QC. Our dedicated team have made us one of the largest and fastest growing Toshiba distributors in North America.

தமிழர் நிர்வாகத்தில்

தனது கலை இலக்கிய மற்றும் ஊடகப் பயணத்தின் 50வது ஆண்டை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ள
**கனடா உதயன் பத்திரிகை ஆசிரியரை**
நாம் பாராட்டி மகிழ்கின்றோம்.

Toshont Power Products
1175 Corporate Drive Unit 2,
Burlington, ON
L7L 5V5

Burlington : (905) 333 - 0650
Sudbury : (705) 523 - 1759
Montreal : (514) 248 - 1772

**பட்டு உலகில் தனித்துவம் படைக்கும்**

**The Fashion world**

வெள்ளி விழாக் கண்ட உதயன் பத்திரிகையின்
**ஆசிரியர் லோகன் அண்ணா**
தனது எழுத்துப் பயணத்தில் பொன் விழாக் காணும்
இந்நாளில், அவரை வாழ்த்தி மகிழ்கின்றோம்



விழிகள் பார்த்திராத ரகங்கள்
THE Fashion WORLD INC
வியப்பூட்டும் கலெக்ஷன்



*Home of Tomnto's Most Exclusive & Unique Kancheepuram Collection*
Custom orders available for all your Occasions.

*Tel: 905 471 2223*
*www.thefashionworld.com*

7393 Markham Road, Unit 82, 83 & 84 Markham, ON L3S 0B5

**கனடா உதயன் லோகேந்திரலிங்கத்தை**
**இலங்கை எழுத்தாளர் மு. சிவலிங்கம் அவர்கள் வாழ்த்துகின்றார்**

# வாழ்த்துரை



கவிஞன்... கதாசிரியன்... பேச்சாளன்... பத்திரிக்கையாளன் எனும் ஒரு கலைஞனை "ன்" போட்டு பேசும் போதுதான் அவனது இளமையும் துடிப்பும் எகிறித் தொடர்கின்றன..! இந்தப் பன் முக ஆளுமையாளர் லோகேந்திரன் எனது நீண்ட கால நண்பர் மகேந்திரனின் தம்பி ஆவார்... அடைக்களம் புகுந்த நாட்டில்... தனது ஆற்றலை பல் துறையிலும் அடையாளப் படுத்தி வருகின்றவர்...

கலை, இலக்கிய, சமூகப் பணிகளில் அரை நூற்றாண்டு காலப் பயணத்தை முடித்திருக்கும் இவர், கனடா உதயன் என்ற தனது பத்திரிக்கையின் 25 ஆண்டு கால வெற்றி விழாவையும் கொண்டாடி... வெற்றி மலர் ஒன்றையும் வெளியிட்டு சாதனை படைத்தவர்! உதயன் 25வது ஆண்டு மலர் மிகக் காத்திரமான இலக்கியப் படைப்புக்களைத் தாங்கி... பல்வகை விசயதானங்களை உள்ளடக்கிய கதம்பமாக வெளி வந்திருந்தது.

ஓர் ஊடகவியலாளர் தன் நாட்டின் அரசியல் தலைவர்களின், அரசியல் பிரமுகர்களின் நல்லெண்ணத்தைக் கவர்ந்திருப்பது, அவரது பத்திரிக்கைத் துறை அணுகு முறையை எடுத்துக் காட்டுகின்றது. எழுத்துக் கலைஞர் லோகேந்திரனின் பணி தொடர்ந்து வளர என் இதயம் நிறைந்த வாழ்த்துக்களைப் பகிர்ந்துக்கொள்கின்றேன்!

**எழுத்தாளர் மு.சிவலிங்கம்.**
இலங்கை

**அரை நூற்றாண்டு கால கலை, இலக்கிய, ஊடகப் பணிபுரியும்**

## "நட்பின் நாயகன்"
## ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களை யேர்மனி "வெற்றிமணி" வாழ்த்தி மகிழ்கின்றது



கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர் நண்பர் ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களின் 50 ஆண்டு கால கலை, இலக்கிய, ஊடக, சமூக சேவையைப் பாராட்டியும், இம்மாதம் உதயன் இலங்கைச் சிறப்பிதழை வெளியிடும் (29-05-2022) தருணம் அறிந்து மகிழ்கின்றோம்.

கனடாவில் ஒரு வாரப்பத்திரிகையை 26 ஆண்டுகள் தொடர்ந்து நடத்துவது என்பது இலகுவான காரியமல்ல, ஆரம்பகாலத்தில் பத்திரிகையை அச்சேற்றுவதற்கான கணனி மென்பொருட்கள் போதிய அளவு இருக்கவில்லை. எனவே ஒரு செய்தியை முதலில் ரைப் செய்து பின் அதை வெட்டி ஒட்டித்தான் பிரதிகள் எடுக்க வேண்டியிருந்தது. அவரது மனைவி இந்த அரிய பணியை அழகாகச் செய்வதை அன்று பலதடவைகள் கண்டு உள்ளேன். குடும்பத்தில் பூரண ஆதரவின்றி இந்த வெற்றிசாத்தியமாகாது, என்பது எனது அனுபவ உண்மை. எனவே அவர் குடும்பத்தினர்க்கும் நண்பார்களுக்கும் எனது வாழ்த்துகள் உரித்தாகட்டும்.

அன்புடன்

**வெற்றிமணி**
**மு.க.சு. சிவகுமாரன்**
**ஜேர்மனி**
23.05.2022



MANIPAY HINDU COLLEGE - MANIPAY LADIES COLLEGE
OLD STUDENTS ASSOCIATION - CANADA (ESTD 1991)
மானிப்பாய் இந்துக் கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் - கனடா (ஸ்தாபிதம் 1991)

## மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

### 29ம் பொங்கும் பொழுது விழா - June 04, 2022

மானிப்பாய் இந்துக் கல்லூரி, மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா நடாத்தும் பொங்கும் பொழுது விழா ஜுன் 04ம் திகதி சனிக்கிழமை, மாலை பிற்பகல் 5:30 மணி தொடக்கம் இரவு 10:30 மணி வரை 1120 Tapscott Road Unit 3, Scarborough, வில் அமைந்துள்ள தமிழிசைக்கலா மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இவ்விழாவில் பிரதம விருதினர் உரை, விழா சஞ்சிகை வெளியீடு, திரையிசைப் பாடல்கள், மிருதங்கம், இணைவுநடனம் (Fusion Dance), ஆகிய நிகழ்சிகளோடு பழைய மாணவர் கலந்துரையாடுவதற்குரிய சந்தர்பங்களுக்கும் இடம் அளிக்கப்படும்

இவ்விழாவிற்கு பழைய மாணவர்கள், மாணவிகள் அவர்தம் வாழ்கை துணைவர்கள், பிள்ளைகள், நண்பர்கள், நலன்விரும்பிகள் யாவரும் சமூகமளித்து சிறப்பிக்குமாறு பழைய மாணவர் சங்க செயற்குழு அங்கத்தினர் அன்புடன் அழைக்கிறார்கள்.

தொடர்புகட்கு:

| | |
|---|---|
| **ச. வசந்தராஜன்** | **சி. கணேசலிங்கம்** |
| தலைவர் | உப தலைவர் |
| (416-289-9008) | (416-499-6248) |

**மானிப்பாய் இந்துக்கல்லூரி - மானிப்பாய் மகளிர் கல்லூரி பழையமாணவர் சங்கம் - கனடா**

*அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல், பின்னருள்ள தருமங்கள் யாவும், பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல், அன்னயாவினும் புண்ணியம் கோடி* ***ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்*** *- Bharathi*



House of Commons
Chambre des communes
Canada
Gary Anandasangaree
Member of Parliament
Scarborough—Rouge Park

May 29th, 2022

**Greetings from Gary Anandasangaree**

**Member of Parliament for Scarborough—Rouge Park, Toronto, Canada**

I want to sincerely congratulate Uthayan Newspaper on their 26th Anniversary and applaud editor-in-chief Nagamany Logendralingam on his remarkable 50 years in creative writing and journalism.

As Canadians, we know that diversity and culture are tremendous sources of strength that remain crucial to the promise of a more inclusive country. Thanks to the efforts of Uthayan Newspaper, generations of Tamil-Canadians are able to learn the Tamil language, our rich history and culture, and our achievements. As editor-in-chief, Nagamany Logendralingam has enabled the Tamil-Canadian community to stay connected with issues close to their hearts, both locally and internationally. I also want to commend the paper on the launch of its 'Sri Lankan Special Issue' to shed further light on the lives of Tamils on the island.

These remarkable milestones are a testament to the hard work and professionalism of Uthayan Newspaper and I wish you continued success in the years to come.

Yours very truly,

Gary Anandasangaree
Member of Parliament
*Scarborough—Rouge Park*

| Ottawa | Constituency Office |
|---|---|
| Room 1110, The Valour Building, Ottawa, Ontario K1A 0A6 | 3600 Ellesmere Road -Unit 3, Scarborough, Ontario, M1C 4Y8 |
| Tel.: 613-992-1351 Fax.: 613-992-1373 | Tel.: 416-283-1414 |
| Gary.Anand@parl.gc.ca | Gary.Anandasangaree.C1@parl.gc.ca |




கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Protect all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒரே கட்டுப்பணத்தில் எல்லாக் கடன்களையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வு ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions without Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com

# ஜேர்மனிய மண்ணில் தமிழர்களின் குடியேற்றமும் தற்கால வாழ்க்கை முறையும்

- கௌசி, ஜெர்மனி

**357,386** கி.மீற்றர் பரப்பளவுள்ள ஒரு நாடு ஜெர்மனி. இது இரும்பைக் கொண்டு உலகத்தைத் திரும்பிப் பார்க்க வைக்கும் பூமி என்று அழைக்கப்படக் கூடிய நாடு. அதன் முக்கிய வளமே இரும்புதான். இங்கு 83.02 மில்லியன் மக்கள் வாழுகின்றார்கள். வடக்கே வட கடலும், டென்மார்க்கும், கிழக்கே போலந்து, தெற்கே ஆஸ்திரியா, சுவிற்ஸலாந்து, மேற்கே பிரான்ஸ் லக்ஸம்பேர்க், பெல்ஜியம், நெதர்லாந்து ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டுள்ளன. 16 மாநிலங்களைக் கொண்ட ஒரு குடியரசு நாடாகும். இங்குள்ள மக்கள் ஜெர்மனிய மொழி பேசுகின்றார்கள்.

இலங்கை மண்ணில் நடைபெற்ற உள்நாட்டுப் போர் மக்கள் மத்தியில் பெரும் அழிவை ஏற்படுத்தி இருந்தாலும், ஜேர்மனிய மண்ணில் தமிழர்களின் குடியேற்றம் ஒரு வகையில் மக்களின் வளர்ச்சிப் போக்கிற்கு வழி வகுத்திருக்கின்றது, அவர்களின் மனங்களில் மாற்றங்களைக் கொண்டுவந்திருக்கின்றது, ஏற்றத்தாழ்வுகளை மாற்றியும் அமைத்திருக்கின்றது, கல்வியறிவில் பாரிய மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கின்றது. இவற்றைவிட கலாசார மாற்றங்களையும் ஏற்படுத்தியிருக்கின்றது. அத்துடன் போரின் தாக்கம் பாதிக்கப்பட்ட மனங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதனால் பின்விளைவுகள் பலவற்றை ஏற்படுத்தியுள்ளது என்பதையும் நாம் ஏற்றுக் கொள்ளவே வேண்டும்.

தாய்நாட்டில் வாழ்ந்த மக்கள் போரின் காரணத்தினால், உடைமைகளை இழந்து வெறும் கையுடன் புலம்பெயர்ந்த நாட்டுக்குள் நுழைந்தார்கள். அப்போது அவர்களிடம் இருந்த சொத்து மதிப்பு 10 விரல்களும், நம்பிக்கை என்னும் உயரிய ஆயதமும் மட்டுமே. அவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் கற்றவர்கள் மட்டுமன்றி சகல தரப்பினரும் கொழும்பு விமானநிலையத்தை முதல் தடவையாகப் பார்த்தவர்களும், வீட்டை விட்டு வெளியே போகாமல் குடும்பம், பிள்ளை என்று ஒரு குறுகிய வட்டத்திற்குள் தம்மை அடக்கிக் கொண்டு வாழ்ந்த எத்தனையோ தாய்மார்களும் இவர்களுக்குள் அடங்குகின்றார்கள்.

எம்முடைய தமிழர்கள் தம்முடைய வீட்டை விற்று, தாலிக்கொடியை விற்று, வளவை விற்று, கடன்கள் பெற்று, தரகர்களிடம் பணத்தை அள்ளிக் கொடுத்துத் தம் உறவுகளை விட்டு தம்முடைய உயிரைப் பாதுகாக்க என்று அந்நியநாடுகளுக்குள் புகுந்தார்கள். அவர்கள் எவ்வாறு எல்லாம் புலம் பெயர்ந்தார்கள் என்று எத்தனையோ எழுத்தாளர்கள் கதையாகக், கவிதையாகக், கட்டுரையாக விளக்கியுள்ளார்கள். ஆனால், இன்று தமிழ் மக்கள் போர் நிமித்தம் புலம்பெயர்ந்து சுமார் 36 வருடங்கள் கடந்துவிட்டன. தற்பொழுது 50.000 இலங்கைத்தமிழர்கள் ஜேர்மனியில் வாழுகின்றார்கள். தாம் எப்படியான நிலைமையில் இங்கு வந்தோம். எமது பிள்ளைகளை வளர்த்தெடுத்தோம் அவர்களின் எதிர்காலத்தை கட்டிக்காத்தோம் என்பதை இப்போது எமது மக்கள் மறந்து விட்டார்களோ என்று தோன்றுகிறது. இப்போது புலம்பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் மக்கள் நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றன என்பது பற்றிச் சிறிது சிந்திப்பதே இக்கட்டுரை.

உலகம் முழுவதும் சிதறிப் பரந்த தமிழ் இனம். ஜேர்மனி மண்ணையும் தொட்டது. ஒரு இடத்தில் நட்ட மரத்தை இன்னும் ஒரு இடத்தில் பிடுங்கி நட்டால், அம்மரம் தளர்ச்சி கண்டு மீண்டும் துளிர்க்கும் இல்லையேல் பட்டுப்போகும். அது போலவே இலங்கை மண்ணில் வாழ்ந்த மக்கள் புரியாத கலாசாரம், புரியாத காலநிலை, புரியாத மொழி, புரியாத மக்கள் என்று சிதம்பர சக்கரத்தைப் பேய் பார்த்தது போல் ஜேர்மனி நாட்டைப் பார்த்தார்கள். வலிமையுள்ளது வாழும் என்ற கூர்ப்புக் கோட்பாட்டின்படி இம்மண்ணிலும் தமிழ் இனம் தலைத்தோங்கியது. தமிழ் மொழி அறிவுடனும் சிறிதளவு ஆங்கில அறிவுடனும் ஜேர்மனிய நாட்டுக்குள் தமிழர்கள் புகுந்த போது அகதி அந்தஸ்தைத் தம்முடைய முதல் அடையாளமாகப் பெற்றுக் கொண்டனர்.

ஒரு இனம் வாழ வேண்டுமானால், அவ் இனத்தின் மொழி வாழ வேண்டும். தம்மை அடையாளப்படுத்துவதற்கு முதலில் மொழியை இறுக்கமாகப் பற்றிக் கொண்டனர். ஜேர்மனிய மொழி பாடசாலைக்குச் சென்று கற்கக் கூடிய வசதி வாய்ப்புக்கள் தமிழர்களுக்கு அவர்கள் புலம்பெயர்ந்த காலப்பகுதிகளில் கிடைக்கவில்லை. தம்முடைய இருப்புக்களை உறுதியாக ஊன்றிக்கொள்ள கிடைத்த வேலைகளை கிடைத்த போதெல்லாம் செய்யத் தொடங்கினர். தம்முடைய வளங்களைப் பெருக்கினர். ஜேர்மனிய இனமே மெச்சத்தக்க வகையில் வாழ்ந்து காட்டினர்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு
மாடுஅல்ல மற்றை யவை"

கொடுத்தாலும் குறைவுபடாத மேன்மையான செல்வம் கல்வியே. ஆகவே பிற செல்வங்கள் உயர்ந்த செல்வங்களாக மதிக்கப்படுவதில்லை என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க ஜேர்மனிய அரசின் உதவியுடன் தமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியறிவைப் பெற்றோர்கள் ஊட்டி வளர்த்தனர் என்றால், அது மிகையில்லை. பெற்றோர்கள் போட்டி போட்டுப் பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டிற்காக முயற்சி மேற்கொண்டனர். ஜிம்னாசியம் என்று அழைக்கப்படும் உயர்தர பாடசாலைக்குத் தம்முடைய பிள்ளைகளை அனுப்புவதற்காகத் தம்முடைய முழுமுயற்சிளையும் எடுத்தனர். இந்தப் போட்டியும், பொறாமையும் வேடிக்கையாக இருந்தாலும் இன்று ஜேர்மனிய மண்ணிலே சிறந்த தமிழ் கல்வியாளர்களை, பொறியியலாளர்களை, வைத்தியர்களை, கணக்காளர்களை, சிறந்த உத்தியோகத்தர்களை ஜேர்மனியர்களுக்கு இணையாகக் காண்பதற்கு இந்தப் போட்டியும், பொறாமையுமே காரணமாக இருந்திருக்கின்றது.

"ஒரு நாட்டிற்கு நிரந்தர செல்வத்தைத் தேடித் தருபவர்கள் ஆசிரியர்கள்" என்று அறிஞர் அண்ணா கூறியிருக்கின்றார். ஓய்வு நேரங்களில் தம்முடைய தாய் மொழியைத் தம்முடைய பிள்ளைகளுக்குக் கற்பிக்கத் தொடங்கினார்கள். இதற்குக் கற்றறிந்த பெற்றோர்கள் எவ்வித வேதனத்தையும் எதிர்பார்க்காது சேவை மனப்பாங்குடன் பிள்ளைகளுக்குத் தமிழ்க் கல்வி போதித்தார்கள். தாம் தங்கியிருந்த அகதி முகாமிலேயே ஒரு சிறு அறையில் தமிழ் கற்பிக்கத் தொடங்கினார்கள். அது வளர்ந்து தமிழாலயம், தமிழ் கல்விச்சேவை, தமிழ் கல்விக்கழகம் போன்ற பல பெயர்களில் விரிவடைந்தன. எதிர்காலத் தலைமுறையினருக்கு தாய்மொழியாம் தமிழ் மொழியை ஊட்டி வளர்த்தனர்.

"வேறுவேறு பாஷைகள் கற்பாய்
வீட்டு வார்த்தை கற்கிலாய் போ போ போ || என்றும்

"தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம்
பரவும்படிச் செய்ய வேண்டும் ||

என்று பாரதி கேட்டுக் கொண்டது போல் வாழ்ந்து காட்டினார்கள். உலகின் முதன்மொழி தமிழ் மொழி என்பதை உலக இனங்கள் எல்லாம் அறியும் வண்ணம் எடுத்துக்காட்டுகளை எம்முடைய இளந்தலைமுறையினரே இனங்காட்டுகின்றனர். மேடைகளில் தமிழ் முழக்கம் செய்தனர்.

(தொடர்ச்சி _75__ பக்கம்)



Salma Zahid
Member of Parliament for Scarborough Centre
Députée de Scarborough-Centre

May 29, 2022

**Re:** **26th Anniversary of "Canada Uthayan"**
**50th Anniversary Celebrations of the Editor in Chief's Journey in Creative Writing and Journalism**

Hello,

It is my sincere pleasure to extend my warmest personal greetings to everyone attending the 26th Anniversary of "Canada Uthayan", and the 50th Anniversary of Mr. Nagamany Logendralingam's journey in creative writing and journalism.

Uthayan Newspaper has been a strong leader in the Tamil Community, promoting community development and connecting Tamils both inside Canada and abroad. Throughout the years, the newspaper has served as a reliable purveyor of news articles and features on the arts, culture, politics, business, and social issues. In its 26 years of operation, and despite the many challenges it has faced, the Uthayan Weekly has never missed a week of publication.

I would also like to congratulate Mr. Logan Logendralingam for completing 50 years in creative writing and journalism and for the vital role he plays as an Editor in Chief of Uthayan Newspaper in keeping the community informed and bringing people together. I would also like to thank him for his leadership in organizing and hosting this important event.

I wish all the attendees of this year's event all the best, and I look forward to working with you in the year ahead to make our community an even better place to live, work, play and to raise a family.

Yours sincerely,

Salma Zahid, M.P.

Ottawa
Room 655 Wellington Building
Ottawa, Ontario K1A 0A6
Tel.: 613-992-6823
Fax: 613-943-1045

Constituency
5-2155 Lawrence Avenue East
Scarborough, Ontario M1R 5G9
Tel.: 416-752-2358
Fax: 416-752-4624

# அம்மாவும் மகளும்

- வே.தில்லைநாதன்

ஊடலோ கூடலோ அற்ற உப்புச்சப்பற்ற வாழ்க்கை சுசீலாவின் கனவுகளை ஈவிரக்கமின்றிக் கலைந்திருக்கிறது. இனியும் பொறுப்பதற்கில்லை. அவள் ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்திருக்கிறாள். இனி, பெட்டியைத் தூக்கவேண்டியதுதான் பாக்கி.

அந்தத் துணிச்சலிலும் அச்சத்தை உண்டாக்கும் ஒரு தயக்கம். பழைய சம்பிரதாயங்களில் ஊறிப்போன அம்மா என்ன சொல்வாளோ! ஓய்வுபெறும் காலத்தை அண்மித்திருக்கும் அப்பா வேலைக்குப் போயிருக்கக் கூடியவேளை சுசீலா தாயுடன் தொலைபேசித் தொடர்பை ஏற்படுத்துகிறாள்.

சுகநலம் விசாரித்து முடிந்ததும் முடியாததுமாக சுசீலா குண்டை வீசுகிறாள்.

'அம்மா, இந்த வாழ்க்கை சரிப்படாது. நான் விட்டிட்டு வரப்போறன்!'

'என்னடி சொல்லுறாய்?' அதிர்ச்சி தொனிக்கும் குரல் நடுங்குகிறது. கேள்விக் கணையை மீறும் பதற்றம்.

'இதை உங்களுக்குச் சொல்லுறதா விடுறதா எண்டு யோசிச்சே எனக்கு விசர் பிடிக்கப் போகுது. நான் இங்கை பெண்டாட்டியா வாழேலேல்ல அம்மா. சம்பளமில்லாத சமையல் காறியா, வேலைக்காறியாத்தான் இருக்கிறன. பெண்டாட்டியா யிருந்துகொண்டு வேலைக்காறியா இருக்கிறது வேற விசயம். சகிச்சுக் கொள்ளலாம். இது சரிப்படாது' சுசீலா விம்முகிறாள்.

'நீ என்னதான் சொல்ல வாறாயெண்டு எனக்கு ஒண்டுமே விளங்கேல்ல, பிள்ளை'.

'அம்மா, இத எப்பிடிச் சொல்லுறதெண்டுதான் தெரியேல்லை. கலியாணம் கட்டின ஆறு மாசத்தில நாங்கள் இன்னும் குடும்பமா இருக்கேல்லத் தெரியுமோ? இப்படி ஒரு நரக வேதனை யாருக்கு வேணும்? நான் வேலைக் போகோணும், கலியாணம் இப்ப வேண்டாம் எண்டு எவ்வளவு கெஞ்சினன். அப்பா கேட்டவரே? 'அரசாங்கத்தில உத்தியோகத்தோட நல்ல மாப்பிள்ளை கிடைச்சிருக்கு. இதை விடுறதே? உன்ர படிப்பிக்கு எப்பவும் நல்ல வேலை கிடைக்கும். அதை உன்ர மனுசன் பாத்துக் கொள்ளட்டும். இந்த நல்ல சந்தர்ப்பத்த நழுவ விடாத' எண்டு அப்பா தலைகீழா நிண்டார். இப்ப பார்த்தியளே?'

'என்ன?' அம்மா சில கணங்கள் பேச்சு மூச்சற்று நிற்கிறாள். பின்னர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு, 'அவருக்கு என்னம்மா பிரச்சினை?' என்கிறாள்.

'ஒண்டுமாத் தெரியேல்ல, அம்மா. ஆண்மைக் குறைபாடா இல்லையெண்டா ஏதும் கள்ளத் தொடுப்பா எண்டுதான் முதலில் சந்தேகமாயிருந்தது. ஆனா வேற உறவு இருக்கிற மாதிரியும் இப்ப தெரியேல்ல. முதலில் ஒரு வீடு கட்ட வேணும் பிறகு பிள்ளை பற்றி யோசிப்பம் எண்டு என்னென்வோ சாட்டுக்கள் சொல்லிச் சமாளிக்கிறார். அவற்ற மனசும் சரியில்ல. நான் வேலைக்கெண்டு குடுத்த அப்பிலிக் கேஷனையும் அவர் அனுப்பேல்லயெண்டு தற்செயலாகத் தான் கண்டு பிடிச்சன்'

'என்ன மனுசனடி இவன்?' அம்மாவின் நெடுமூச்சு தொலைத் தொடர்பு வழியாக சுசீலாவின் காதை அறைகிறது.

'இப்ப நாட்டில விலைவாசி இருக்கிற நிலையில் நான் அங்க வந்து உங்களுக்குப் பாரமா இருப்பனோ எண்டும் பயப்படுறன். இருந்திருந்திட்டு தற்கொலை செய்யலாமோ எண்ட எண்ணமும் பயங்காட்டுது. நான் வரவா, அம்மா?'

'எதையும் யோசிச்சு மனசக் குழப்பமா உடன வெளிக்கிட்டு வா, உன்னை வச்சுச் சோறு போடுற பெலப்பு எங்களிட்ட இருக்கு. எண்டாலும் நீ சொந்தக் காலில் நிக்கவேணும். வேலை தேடலாம். இல்லையெண்டா சுயதொழில் செய்யலாம். எங்கட காலத்துக்குப் பிறகும் அது உனக்கு உதவும்' அம்மா நிதானமாக வார்த்தைகளை அளந்து உறுதிபடக் கூறுகிறாள்.

'அம்மா எண்டா அம்மாதான். நான் இப்ப அவருக்கு அதிர்ச்சி வைத்தியம் செய்யத்தான் யோசிச்சிருக்கிறன். அவர் ஒண்டில் ஏதாவது சிசிச்சை செய்து தன்ர குறைபாட்டைச் சரிசெய்ய வேணும். கழுத்தை நீட்டின குற்றத்துக்காகக் கொஞ்சக் காலம் பொறுப்பன். இல்லையெண்டா நிரந்தரமான பிரிவுதான்.

'சரியம்மா. என்ர காலம் வேற, உன்ர காலம் வேற. நீ விரும்பினபடி செய்யலாம் நீ உடன வா' தலைமுறை இடைவெளியைப் புரிந்து கொண்டு அம்மா கூறுகிறாள்.



'எல்லாம் சரிதான், அம்மா. அப்பா என்ன சொல்லுவாரே?'

'அவர் கிடந்தார், நீ வா', பட்டென வருகின்றன வார்த்தைகள். அம்மாவின் வார்த்தைகளா இவை? சுசீலாவால் நம்பவே முடியவில்லை. படித்த பெண்ணாக இருந்தாலும் பழைய சம்பிரதாயங்களில் ஊறிப்போய் மிதக்கவோ தெரியாத அடிமை அவள். நாற்பதாண்டுக்கு மேலான இவ்வாழ்க்கையிலிருந்து கசப்புணர்வின் பிரதிபலிப்பா இந்த வார்த்தைகள் என சுசீலா தன்னைத் தானே கேட்டுக் கொள்கிறாள்.

அம்மாவின் வாயிலிருந்து இத்தகைய வார்த்தைகள் வெடிக்கக் கூடுமென சுசீலா கனவிலும் நினைத்தில்லை. அவள் கண்ட அம்மா ஒரு பெட்டிப் பாம்பு. அப்பா நில் என நிற்பவள், எழும்பென எழும்புவள். படு என்றால் உடம்பில் என்ன அசதி இருந்தாலும் மறுபுறம் திரும்பிப் படுக்கும் தைரியம் அவளுக்கு இருந்திருக்காது என்பது சுசீலாவின் ஊகம்.

சுசீலா வயதுக்கு வந்தபின்னர் ஒரு நள்ளிரவை அண்டிய சமயம் அம்மா இருந்த கோலம் அவள் நெஞ்சில் நிழலாடுகிறது. குசினியிலிருந்து வந்த வெளிச்சம் அவளது கவனத்தை ஈர்க்க அங்கே அம்மா கையில் தேனீர்க் கோப்பையுடன் கலைந்த கேசமும் ஆடையும் வெறித்த பார்வையுமாக இருக்கக் கண்டு 'அம்மா, ஏதம் சுகமில்லையா?' என்று கவலை ததும்பக் கேட்டதும் ஞாபகத்துக்கு வருகிறது.

'என்ர விசரக் கிளப்பாமல் போ பிள்ளை' என்று திடுக்குற்று நிமிர்ந்து அம்மா சொன்னது அவளைக் கலவரத்துக்குள்ளாக்கிறது. அடுத்த கணமே அம்மா சுசீலாவின் தலையை வருடியபடி தனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை என்று கூறியதும் அவளது மனதை விட்டு அகன்றதில்லை.

அப்பாவுக்கு வேளை கெட்ட வேளையிலும் தேவைப்பட்டது. தற்போது கணவன் என்ற பெயரில் இருக்கும் ராகவனுக்கு ஏன் தேவைப்படுவதே இல்லை என்பதே சுசீலாவால் புரிந்தும் புரியாத புதிராக இருக்கிறது.

பெண்களுக்கும் உணர்வுண்டு என்பதனை மதிக்கத் தெரியாத ஜடமாக, அநாகரிகமாக ராகவன் தன்னைக் காயப்படுத்தியதை அம்மாவிடம் கூறாது தவிர்த்து விடுகிறாள் சுசீலா. 'எனக்கு ஒரு பிள்ளை வேணும்' என அவள் கூற, 'ஓ! உமக்கு இப்ப அதுதான் வேணுமோ' என்று 'அது' என்பதில் அழுத்தம் கொடுத்து அவன் கூறியதைக் கேட்டு எழுந்து மனக்குமுறல், குமைச்சல் என்றைக்குமே தீராது என அவளுக்குத் தோன்றுகிறது. என்றாலும் கூட ராகவன் தனது குறையைக் களைந்து அவளது உறவை நாடுகின்றபோது அவனை மன்னிக்க அவள் தயாராகவே இருக்கிறாள்.

ராகவனுக்கு அப்பாவுக்குமிடையே ஒருவித ஒற்றுமை உண்டு. இருவருமே மனைவியரின் நாளாந்த தேவைகளுக்கு எவ்வித குறையும் வைத்ததில்லை. ஆடை, ஆபரணங்கள் மட்டும் அவர்களுக்கும் போதுமா என அப்பாவோ, ராகவனோ அறிய முயற்சிக்காத தன்மையிலும் இருவருக்கும் ஒற்றுமை நிறையவே உண்டு.

அப்பா தனது மனைவி மகிழ்ச்சியாக இருக்கிறாள் என்ற கற்பனையில் திருப்தியடையும் ஒரு சராசரி பாரம்பரியக் கணவன். ராகவனோ மனைவியின் தேவையை அறிந்தும் அதை மதிக்கத் தெரியாத அல்லது நிறைவேற்றும் திராணியற்ற உதவாக்கரை.

ராகவனுக்கு தனது முடிவை அறிவித்து மிகச் சுருக்கமாக எழுதிய கடிதத்தை அவன் எளிதில் காணக்கூடிய இடத்தில் வைத்துவிட்டு 'அவர் கிடந்தார் நீ வா', என்ற அம்மாவின் வார்த்தைகள் அளித்த தைரியத்தில் தேர்ந்தெடுத்த உடுப்புக்களுடனும், நகைப் பெட்டியுடனும் சில மணித்தியாலம் பயணத்தில் பிறந்த வீட்டை அடைகிறாள் சுசீலா.

அப்பா இன்னமும் பணி முடிந்து வீடு திரும்பவில்லை. அம்மாவும் மகளும் அப்பாவின் வரவுக்காக ஆவலுடன் காத்திருந்தனர். அப்பா வரும் அரவம் காதுக்கெட்டியதும் சுசீலாவின் இதயம் படக் படக் என அடிக்கிறது. மகளைக் கண்ட அப்பா மகிழ்ச்சியுடன், 'எங்கேயம்மா மருமகன்?' என்று கேட்கிறார். அவளின் மௌனமே பதிலாக இருப்பது கண்டு, 'தனியாகவா வந்தனி?' என்று கேட்கிறார்.

'ஓம், அப்பா?'

'அவருக்கு வேலையா?'

பதில் சொல்ல சுசீலாவுக்கு நா எழவில்லை.

'அவள் இப்பதான் வந்திருக்கிறாள். கேள்வி கேக்காம இதைக் குடியுங்க', தேனீர்க் கோப்பையை அவர் முன் வைக்கிறாள் அவாள்.

'நான் கேள்வி கேட்கிறன். நீ ஒண்டுமே சொல்லுறாயில்லை. ஏதும் பிரச்சினையா?'

'ஏன் அவசரப்படுறியள், சொல்லுவாள்தானே?'

'இல்லையம்மா. அப்பாவுக்கும் தெரியத்தானே வேணும்,' தைரியத்தை வரவழைத்துக்கொண்ட சுசீலா சொல்லுகிறாள்.

'நான் இனி அங்க போகமாட்டன், அப்பா. அவரும் வரமாட்டார்'.

முற்கோபியான அப்பா எதையுமே விசாரிக்காது, 'பொம்பிளையள் ஆட்டம் போடத் துவங்கிவிட்டியளோ?' உதட்டருகே சென்ற தேனீர்க் கோப்பையை படக் என்று கீழே வைத்துவிட்டு அவர் சத்தமிட அவரை மேலும் தொடரவிடாது அம்மா குறுக்கிடுகிறாள்.

'எல்லாம் நாங்கள் தெரிஞ்சுதான் செய்யிறம். நீங்கள் உங்கட வேலையை மட்டும் பாருங்க,' அம்மாவின் வாயிலிருந்து வீசிய தென்றல் திடீரென்று புயலாக மாற அவளின் மறு அவதாரத்தைப் புரிந்துகொள்ள முடியாத அதிர்ச்சியில் மௌனித்துப்போன அப்பா தேனீரையும் கைவிட்டு அறையை நோக்கித் தளர்நடை போடுவது பெண்களைச் சங்கடத்துக் குள்ளாக்கிறது.

தனது கலக்கத்தை வெளிக்காட்டாத அம்மா, 'நீ வா பிள்ளை, சாப்பிட' என மகளை ஆதரவாக அழைக்கிறாள்.

**********

# வேண்டாம் சீன வெடி



பட்டாசு வெடிக்காதீர்கள்
காட்டோசை காதைத்
துளைக்கும்
வீட்டு மிருகங்கள் தாங்காது
மட்டான ஓசையின்
மும்மடங்காகும்

மழை பெய்யும் பொழுது
தலைமயிர் அழிவடையும்
அழகான குளம் ஆற்று நீர் கெடும்
சூழற் தொகுதிக்குப் பாதிப்பு

வயோதிபர் அமைதி இழப்பர்
அமைதியான தூக்கத்தைக் கெடுக்கும்
சுவாசத்தில் தும்மல் இருமல் வரும்
பாசமான குழந்தைகள் அழுவர்

சுவாசிப்பு பழுதாக்கும் செம்புலோகம்
மங்கனீசு உலோகத்தால் பக்க வலிப்பு
சுகமாக நரம்பு மண்டலம் பழுதாகும்
மாசிலா அழகுத் தோல் அழிவடையும்

வைத்திய செலவைக் குறைப்போம்
வைத்தியரின் நேரத்தை சேமிப்போம்
கைத்தொழில் ஒன்றைக் கற்றிடுவோம்
கமத்தொழில் செய்து உயர்ந்திடுவோம்

~~~~~~~~~~~~~~~~

# கடல்



கடலோரக் கவிதைகள்
கடலிலே
மூழ்கியிருந்தார்கள்
கடலால் வருந்வோர்
பலர்
கலோடி திரவியம்
தேடியவர்கள்
மடலயம் பணி பலன் பல
படுக்கையில் அதியங்கள்
பசித்துள்ளும் பெரியன
புசிக்கப்பட்ட சிறயன
கடலிலே விடிவு காணும் பல
காலம் கடந்தாலும்
விடிவு வருமா?

- சி.குமாரலிங்கம்
நல்லூர், யாழ்ப்பாணம்.
~~~~~~~~~~~~~~~~



கனடா மிஸிஸாகா பிரம்ரன்

# அருள்மிகு கற்பக விநாயகர் தேவஸ்தானம் பிறம்ரன் வருடாந்த கொடியேற்ற-மஹோற்சவப் பெருவிழா விஞ்ஞாபனம்-2022

குலம்தரும் செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின எல்லாம்
நிலதரஞ்செய்யும் நீள் விசும்பருளும் அருளொடு பெரு நிலமளிக்கும்
வலம் தரும் மற்றும் தந்திடும் பெற்றதாயினும் ஆயின செய்யும்
நலம் தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்.

சீர்மேவு மதி நதியுமரவும் சிறப்பும் சூழ்ந்த
பார்போற்றும் சிவனுமையின் மைந்தராகி
கார்மேவும் கனடாவின் களிறு நாயகனாகி
நேர்மேவு கற்பகத்து கணபதியே காப்பு.

அருவமும் உருவுமாகி அநாதியாய் பலவாய் ஒன்றாய்
பிரம்மமாய் நின்றசோதி பிளம்பதோர் மேனியாக
கருணைகூர் முகங்கள் ஆறும் கரங்கள் பன்னிரெண்டும் கொண்டே
ஒரு திரு முருகன் வந்தாங்கு உதித்தனன் உலகமுய்ய

## ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் அடியார்களே!

சகல செல்வங்களும் நிறைந்து விளங்கும் கனடா மிஸிஸாகா பகுதியில் பிரம்ரன் மாநகரில் எழுந்தருளியிருந்து தம்மை பக்தியுடன் வந்து வழிபடும் மெய்யடியார்களின் இன்னல்களைப் போக்கி நல்லருள் பாலித்து ரட்சிப்பவராகிய ஸ்ரீ கற்பகவிநாயகப் பெருமானின் பெருங்கருணையினால் அழகிய திருமணமண்டபம் மணிமண்டபம் கொடிஸ்தம்பத்துடன் கூடிய புதிய திருக்கோவில் நிர்மாணிக்கப்பட்டு மஹா கும்பாபிஷேகம் நிகழ்ந்தேறிய பின்னர் பதினான்காவது முறையாக நிகழும் மங்களகரமான சுபகிருது வருஷம் வைகாசி மாதம் ஏழாம் நாள் (ஆங்கிலம்20-05-2022)வெள்ளிக்கிழமை பகல் 11:30 மணிக்கு கொடியேற்று விழாவுடன் மஹோற்சவம் ஆரம்பமாகி வைகாசி மாதம் 30ம் நாள் (ஆங்கிலம் 12-06-2022)ஞாயிற்றுக்கிழமை வைகாசி விசாகத் தினத்தில் தேர்த்திருவிழாவும் 13-06-2022 திங்கட்கிழமை தீர்த்தோற்சவம் கொடியிறக்கல் திருவிழா வரையில் வழமைபோல இருபத்தைந்து தினங்களுக்கு பகலும் இரவும் கொடிஸ்தம்ப பூஜை மஹாயாக பூஜை ஆகியவற்றுடன் வருடாந்தப் பெருவிழா மிகவும் சிறப்பாக நடைபெற ஸ்ரீ கற்பகவிநாயகர் நல்லருள் பாலித்துள்ளார். விரதகாரர்கள் உபயகாரர்கள் அனைவரும் கீழ்காணும் காலநேர அட்டவணைப்பிரகாரம் நிகழவிருக்கும் திருவிழாக்களை ஆசார நியமங்களுடன் தினமும் வந்து தரிசித்து கண்கண்ட தெய்வமாம் கற்பகவிநாயகரின் அருளால் வேண்டியவரங்களைக் குறையாது பெற்றுச் சகல செல்வயோகமிக்க பெருவாழ்வு வாழும் வண்ணம் அன்புடன் வேண்டுகிறோம். சுபம்

மஹோற்சவ சிவாச்சாரியார்:
சிவாகமநிதி, அஹோரசிவம் சாண்டில்ய
சிவஸ்ரீ சோம பிரணவ சிவாச்சாரியர்
London U.K
ஆலய குருமார்:
சிவஸ்ரீ சண்முகம் ஜனார்த்தனன் (பாண்டிச்சேரி, இந்தியா)
"சிவாகமரத்தினம்" சிவஸ்ரீ S. மதன் குமார் சிவம்
(தமிழ்நாடு, இந்தியா)

கனடாவாழ் குருமார்கள் அனைவரையும் மஹோற்சவ விழாக்காலங்களில் வருகைதந்து சிறப்பிக்கும் வண்ணம் பணிவன்புடன் அழைக்கிறோம்.
முக்கிய குறிப்பு:
தேர்த்திருவிழாவன்று காவடி கற்பூரச்சட்டி, எடுக்க விரும்புவோர் தயவுசெய்து உங்கள் பெயர்களை முன்னரே பதிவு செய்து கொள்ளும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

19-05-2022 வியாழன் மாலை 5மணிக்கு கணபதி ஹோமம் தொடர்ந்து அனுக்ஞை கிராமசாந்தி வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம் நடைபெறும்.

**கொடியேற்றத் திருவிழா காலை 11:30மணி தேர்த்திருவிழா காலை 11:30மணி தீர்த்தத் திருவிழா காலை 11:30 மணி**

**விழாக் கால நிகழ்வுகளின் நேர கால விபரங்கள்**

| | | | காலை உபயம் | மாலை உபயம் | திருவிழா அலங்காரங்கள் |
|---|---|---|---|---|---|
| 01 | 20-05-2022 | வெள்ளி | கொடியேற்ற விழா திரு. கு.முத்துக்கிருஸ்ணன் குடும்பம் - சுழிபுரம் | திரு. பிரதீபன் சிவராஜா குடும்பம் | ஓங்கார வடிவம் |
| 02 | 21-05-2022 | சனி | திரு. பரஞ்சோதி-ரஜனி குடும்பம் (கனடா) | தம்பிஐயா-மனோன்மணி குடும்பம் சிவனேசன் சுசீலா குடும்பம் சந்திரகுமார் உதயலட்சுமி குடும்பம் | சூரியப்பிரபை |
| 03 | 22-05-2022 | ஞாயிறு | திரு. கனகசபை பாலகாந்தன் குடும்பம் கரவெட்டி | திரு.அருட்பிரகாசம் ரெங்கநாதன் குடும்பம் சுளிபுரம் | சந்திரப்பிரபை |
| 04 | 23-05-2022 | திங்கள் | திரு. தியாகராஜா அன்பழகன் குடும்பம் கிளிநொச்சி | திரு. சிவஞானம், திரு. பரமேஸ்வரன், திரு.பூலோகசிங்கம் திரு. செல்வரத்தினம் குடும்பம் -நயினாதீவு மக்கள் | நட்சத்திர வடிவம் |
| 05 | 24-05-2022 | செவ்வாய் | திரு. மேனுஷன் தவச்செல்வன் திருஞானம் குடும்பம் (புங்குடுதீவு) | திரு. நாதன் குடும்பம் திரு. கதிர்காமநாதன் குடும்பம் - சுழிபுரம் | திருத்தொங்கல் வடிவம் |
| 06 | 25-05-2022 | புதன் | திரு. இராசையா நகுலேஸ்வரி குடும்பம் | திரு. சந்திரமோகன் சுகிர்தா குடும்பம்-துன்னாலை | கப்பல் திருவிழா |
| 07 | 26-05-2022 | வியாழன் | திரு. கருணாகரன் சறோஜினி-கலா குடும்பம்-நல்லூர் | திரு. ஆறுமுகம் ஞானச்சந்திரன் குடும்பம் கொடிகாமம் | சிவலிங்க வழிபாடு |
| 08 | 27-05-2022 | வெள்ளி | திரு. நடராசா பிரதீபன் நிஷா குடும்பம் தச்சன்தோப்பு | திரு. இரத்தினவடிவேல் குடும்பம் சுழிபுரம்- தும்பளை | நாக வாகனம் |
| 09 | 28-05-2022 | சனி | செந்தூரன் லாவன்யா குடும்பம் மட்டக்களப்பு | திரு. ஜெகதேவா குடும்பம் சோமாஸ்கந்தன் கொக்குவில் | மூஷிக வாகனம் |
| 10 | 29-05-2022 | ஞாயிறு | திரு. வாமதேவன் முகுந்தன் கணனி குடும்பம் ஏழாலை | திரு. சந்திரபோஸ் குடும்பம் Plastform Countertops Ltd. | மஞ்சம் |
| 11 | 30-05-2022 | திங்கள் | திரு. சின்னத்தம்பி குடும்பம் கோப்பாய் | திரு. தியாகராஜா குடும்பம் -தாவடி | மயில் வாகனம் |
| 12 | 31-05-2022 | செவ்வாய் | திரு சிவகுரு பத்மநாதன் குடும்பம் நுணாவில், சாவகச்சேரி | ஓர் அன்பர் | கற்பகதரு வடிவம் |
| 13 | 01-06-2022 | புதன் | Steve பாலசிங்கம் குடும்பம், மட்டுவில் ONGO I LOGISTIC | திரு. ஜெய்கீதா குடும்பம் கேரளா-இந்தியா | குதிரை வாகனம் |
| 14 | 02-06-2022 | வியாழன் | ஓர் அன்பர் | திரு பசுபதிப்பிள்ளை குமரசற்குணன் குடும்பம் - குறிகட்டுவான் | மஞ்சள் அலங்காரம் |
| 15 | 03-06-2022 | வெள்ளி | திரு. பொன்னம்பலம் சுகுனேந்திரன் குடும்பம் -புங்குடுதீவு | திரு. நிரஞ்சன் நிரு குடும்பம் பிரம்ரன் | கஜ அலங்காரம் |
| 16 | 04-06-2022 | சனி | திரு. ஸ்ரீதரன் குடும்பம் தவராசா குடும்பம் -கிளிநொச்சி | திரு. இ. வேணுகோபாலன் குடும்பம் புன்னாலைக்கட்டுவன் | கருட வாகனம் |
| 17 | 05-06-2022 | ஞாயிறு | திரு. பிரபாகரன் குமாரசாமி குடும்பம் சங்கரத்தை, வட்டுக்கோட்டை | திரு. ரத்னபாலன் சோபா ராஜ் குடும்பம் -மானிப்பாய் | பக்தி முக்தி பாபநாசம் |
| 18 | 06-06-2022 | திங்கள் | திரு. பொன்னையா கனகலிங்கம் குடும்பம் - அல்வாய் | திரு. ராமு சாந்தரூபன் குடும்பம் உரும்பிராய் | நர்த்தன வடிவம் |
| 19 | 07-06-2022 | செவ்வாய் | ஓர் அன்பர் | திரு. நிரஞ்சன் அருணாசலம் குடும்பம் Top Quality Plastic Ltd. | கைலாச வாகனம் |
| 20 | 08-06-2022 | புதன் | திரு. சிபின் சுந்தர் குடும்பம் கனடா | திரு. யோகி முருகேசு மஞ்சு குடும்பம் அனலைதீவு | காமதேனு வாகனம் |
| 21 | 09-06-2022 | வியாழன் | திரு. கஜதீபன் சுஜா குடும்பம் விமலநாதன் சத்தியவதி குடும்பம் கிளிநொச்சி | திரு. பொன்னம்பலம் சர்வேஸவரன் குடும்பம், சுழிபுரம் | மாம்பழத் திருவிழா |
| 22 | 10-06-2022 | வெள்ளி | காரைநகர் மக்கள் - வேட்டைத் திருவிழா | ஓர் அன்பர் | வேட்டைத் திருவிழா |
| 23 | 11-06-2022 | சனி | திரு. சு. கிருஷ்ணபகவான் குடும்பம்-கைதடி | திரு. வரன் நாதன் குடும்பம் VIA REALTY INC | சப்பறத் திருவிழா |
| 24 | 12-06-2022 | ஞாயிறு | தேர்த் திருவிழா DYNEVOR EXPRESS Kumar - Canada | ஓர் அன்பர் | வைகாசி விசாக முருகன் விழா தேரடி உற்சவம் |
| 25 | 13-06-2022 | திங்கள் | தீர்த்தத் திருவிழா - பத்மராஜா சிவசக்தி குடும்பம்-அனலைதீவு | திரு. கிருபானந்தராஜா நமணி குடும்பம் தொல்புரம் | கொடியிறக்கல் விழா சண்டேஸ்வரர் விழா ஆச்சார்ய உற்சவம் |
| 26 | 14-06-2022 | செவ்வாய் | கற்பக விநாயகர் ஆலய அந்தணர்கள் | | காலை: பிராயச்சித்தம் |
| 27 | 17-06-2022 | வெள்ளி | ஸ்ரீநிவாஸ் கிருஷ்ணா கஸ்தூரி குடும்பம் விஜயவாடா, இந்தியா | | மாலை: வைரவர் மடை |
| 28 | 18-06-2022 | சனி | திரு. நடராஜா ஸ்ரீரங்கன் குடும்பம் - (V S N Sons Express Ltd.) | | பூங்காவனம் |


**முக்கிய குறிப்பு: ஆடிவேல் திருவிழா இருபத்தி ஒன்றாவது தடவையாக ஜூலை மாதம் 21, 22, 23ம் திகதிகளில் வெகு சிறப்பாக நடைபெற்று 24ந் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆடிவேல் இசைமாலையும் சிறப்பாக நடைபெறும்**

**திருவிழாக்கால நிகழச்சிகள் நேரகால அட்டவணை**

காலை திருவிழா
6:30 மணி காலை பூஜை
7:30 மணி காலை சாந்தி பூஜை
09:00 மணி ஸ்நபனகும்ப அபிஷேகம்
10:30 மணி உச்சிகால பூஜை- யாகபூஜை கொடிஸ்தம்ப பூஜை
11:30 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம்
01:00 விபூதி, பிரசாதம் வழங்கப்படும்

மாலை திருவிழா
05:00 மணி ஸ்நபன கும்ப அபிஷேகம்
06:30 மணி மூலஸ்தான பூஜை பஞ்சமுகார்சனை யாக பூஜை கொடிஸ்தம்ப பூஜை
07:30 சமய கலை நிகழ்ச்சிகள்
07:45 மணி வசந்தமண்டப பூஜை சுவாமி வீதியுலா மஹாயாக தரிசனம் பிரசாதம் வழங்கல்.
10:00 மணி அர்த்தஜாமப் பூஜை

தேவஸ்தான மங்கள இசை: கற்பக விநாயகர் தேவஸ்தான இசைக் கலைஞர்கள்
சிவப்பிரகாசம் வாஞ்சிநாதன் - செல்லத்துரை வீரமணி
சக்திவேல் கார்த்திகேயன் - வெங்கடேசன் மதன்ரஜ்
அபிராமசுந்தரம் ராஜேஷ் - முனிரத்தினம் முனிராஜ்
விசேடமங்கள இசை: கனடா, இலங்கை, இந்தியா கலைஞர்கள்
புஷ்பமாலைகள், புஷ்ப அலங்காரங்கள்: M, குமார் Mark Florist
(விசேஷ திருவிழாத் தினங்களில் நிகழ்ச்சிகளின் காலநேர மாற்றம் அறிவிக்கப்படும்.)




**ARULMIGU KATPAGAVINAYAGAR HINDU TEMPLE BRAMPTON**
200 Advance Blvd, Unit 1, Brampton, (Dixie & Advance Blvd) L6T 4V4
Tel: 905-458-9701 / 905-458-0623 / 416-471-0255 Fax: 905-458-0326
www.srikatpagavinayagar.ca

இங்ஙனம்
என்றும் இறைபணியில் நிற்கும்
கணகுக சிவத்தொண்டர்,
திரு. இரா. விஜயநாதன்
(தேவஸ்தான தர்மகர்த்தா)

# கிழக்கும் மேற்கும்

வேரற்கேணியன் - தென்மட்டுவில்

யூலியட் ஜோன்சன் ஒரு பாராளுமன்ற உறுப்பினர். வரவேற்பறையில் அமர்ந்திருக்கிறார்.

எதிரே விருந்தினர்கள், அறுபது பேர் வரை. அத்தனை பேரும் தமிழர்கள். அம்மையாருடன் ஆங்கில மொழியில் உரையாடுகின்றார்கள். தைப்பொங்கல் விழா. பூசை, படையலுக்கு ஏற்ற ஒழுங்குகளை நிறைவேற்றும் பணியில் இருவர் ஈடுபட்டுள்ளனர். இடது பக்கத்து அறையிலிருந்து பொங்கல் பானையும் பழவகை, வடை, அவல், சுண்டல், போன்றவையும் எடுத்துவரப்பட்டு எதிரே உள்ள கண்ணாடி அறையில் இருக்கும் நீள் சதுர மேசையில் வைக்கப்படுகிறது.

ஒரு செல்வி, பாராளுமன்ற உறுப்பினரின் சகோதரி போலும், வந்து இரு அறைகளையும் கண்காணிப்பவர்போல், பார்த்துக் கொண்டு போகிறார்.

விருந்தினருக்கு தேனீர் தரப்படுகிறது.

சுவைத்துக்கொண்டே தங்களுக்குள்ளும் சிலநேரம் பாராளுமன்ற உறுப்பினருடன் ஆங்கிலத்தில் கதைக்கிறார்கள். சிலர் கேட்கும் கேள்விகளுக்கு புன்சிரிப்புடன் பதிலளிக்கிறார் யூலியட்.

ஒருவர் மட்டும், சாமியார் போல், காவிநிற உடை அணிந்தவர். ஏனையவர் பேசுவதைச் செவிமடுத்துக்கொண்டு அமைதியாய் இருக்கிறார். அவருக்கு ஆங்கிலம் பேச வரதோ!

அத்தருணம்தான் என்னை கண்டவர்போல் ஒருவர் 'ஹலோ மிஸ்ரர் புருசோத்தமன்' என விழித்து, 'எப்போது வந்தது? உங்களை இப்பதான் கவனிச்சேன்... நீங்கள் எழுதிய புத்தகம் 'ஒன்றே தெய்வம்' வாசித்தேன். பிறகு புத்தகம் வெளியிடேல்லையா?' என கேள்விகளைத் தொடர்ந்தவர் 'இவர் ஒரு எழுத்தாளன்.. இல் ஏ றைற்ரர், பப்ளிஷர் ஏ பொயற் ஓல்சோ...' என அங்கிருந்தவர்களுக்கும் யூலியற் அம்மையாருக்கும் அறிமுகம் செய்து வைத்தார். அவர் எனது பாடசாலைக் கால நண்பர் மிஸ்ரர் குமாரசாமி.

'தாங் யு மிஸ்ரர் குமாரசாமி'

'கும்... கனடாவுக்கு எப்போ வந்தது'

'நான் வந்தது 2005ஆம் ஆண்டு'

'எங்க இருக்கிறீங்கள்?'

'பிரம்டன் நகரில் ரசெல் கிறீக் அவனியுவில்'

'நானும் அந்தத் தெருவில்தானே இருக்கிறேன்.... உங்கள் வீட்டு நம்பரை சொல்லுங்கோ'

'தருகிறேன்.... பொங்கல் விருந்து முடியட்டும் பேசுவோம்'

'நீங்கள் யூனிவேசிற்றிக்கு போனபிறகு நாங்கள் சந்திக்கவேயில்லையே.... என்ஜினியராக அரச கட்டடத் திணைக்களத்தில் பணியாற்றுகிறார் என அறிந்திருந்தேன்.... மீண்டும் இத்தனை ஆண்டுகளுக்கு பிறகு சந்திக்கின்றோமே!'

'ஆச்சரியம்தான்...!'

அழைப்பு எழுந்தது.

'ஓல் ஓவ் யு வெல்கம் ரு த பூசா றூம். தாங்ஸ்.'

எல்லோரும் எழுந்து சென்று மேசையை சுற்றி நிற்கின்றோம்.

யூலியட் அம்மையாரும் எழுந்து நின்று பூசையை அவதானிக்கிறார்.

வாழை இலையில் பொங்கல் படைக்கப்படுகிறது. கற்பூரம் கொழுத்தப்படுகிறது. ஊதுபத்தி நறுமணம் கமழும் புகைக்கிறது. சில பூசைப் பொருட்கள் மேமைசில் இல்லாமை தெரிகிறது. நிறைகுடத்தில் வைக்கப்பட்டுள்ள தேங்காயைச் சுற்றி செருகப்பட்டிருக்க வேண்டிய மாவிலைகள் இல்லை. முக்கனிகளில் ஒன்றான வாழைப்பழம் மாத்திரம் இருக்கிறது. மாம்பழம் இல்லை. பலாப்பழம் இல்லை. கரும்பு ஒரு துண்டு இல்லை. பொங்கல் பானையில் வெளிப்புறத்தில் பூசப்படும் மூன்று திருநீற்று வரிகள் தென்படவில்லை. திருநீற்று சிமிழ் இருக்கிறது. சந்தனம் இல்லை. குங்குமம் இல்லை. நிறைகுடம் அருகில் இருக்கவேண்டிய முழு முதற் கடவுள் என நாம் வணங்கும் விநாயகரை அடையாளப்படுத்தும் பசுவின் சாணகத்தினால் உருவாக்கப்பட்டு அறுகம்புல் சூடிய கோபுர வடிவ உருவம் காணப்படவில்லை.

எல்லாரும் கைகூப்பி வணங்கி நிற்கிறார்கள்.

ஒருவர் தேவாரம் பாடுகிறார்.

பாடி முடித்து திருநீற்று சிமிழ் எடுத்து சுற்றி நிற்பவர்களுக்கு திருநீறு தருகிறார். நெற்றியில் தரித்துக் கொள்கின்றார்கள்.

யாரும் சொல்லாமலே பூசை அறையை விட்டகன்று சென்று வரவேற்பறையில் அமர்கிறார்கள்.

வெள்ளிநிறத் தட்டுக்களில் பொங்கல் பரிமாறப்படுகிறது. தொடர்ந்து வடை, பழம், சுண்டல், அவல் வழங்கப்படுகிறது.

எதுவும் பேசமாட்டார் என நான் எண்ணியதைப் பொய்யாக்கி 'சாமியார்' ஆங்கிலத்தில் கதைக்கிறார். அவர் சொன்ன கருத்தைத் தமிழால் பார்ப்போமா! 'எங்கள் தைப்பொங்கல் விழாவை நீங்கள் கொண்டாடுவதை எண்ணி இதயம் பூரிக்கிறோம். எங்கள் கலாசாரம் நாம் பிறந்த மண்ணில் மாற்றானின் அராஜகத்தால் அவமதிக்கப்படுகிறது. இங்கே வாழ்கிறது. எழுச்சி பெறுகிறது. எங்களுடைய தைத்திங்கள் திருநாளைக் கொண்டாடும் உங்கள் பண்பையும் அன்பையும் பாராட்டுகின்றோம். நன்றி'

மற்றொருவர் சொல்கிறார் 'எங்கள் மண்ணில் சைவ கோயில்களில் உள்ள தொய்வச் சிலைகளை எடுத்தெறிந்துவிட்டு பரமஞானி புத்தரின் உருவச் சிலைகளை வைக்கிறார்கள். அருகே விகாரைகள் கட்டுகிறார்கள். இங்கே நாங்கள் கோயில்கள் கட்டவும் திருவிழாக்கள் நடத்தவும் அனுமதிக்கிறீர்கள். பல்லின மதக் கொள்கைகளை ஆதரிக்கும் உங்கள் பண்பாடு பாராட்டுக்குரியது'

'எங்கள் மாவீரரை நினைவுகூர்ந்து சுடரேற்றி வணங்கவும் போற்றவும் வாய்ப்பளிக்கும் இந்நாட்டு அரசியல் நாகரீகத்தைப் பார்த்து உள்ளம் பூரிக்கிறோம். இன்னல்கள் ஆயிரம் அனுபவித்து ஆறாத் துயரங்களைச் சுமந்து கொண்டு ஆறாயிரம் மைல் தூரம் பறந்து வந்து இந்த மண்ணில் அமைதியாக வாழ்ந்துகொண்டிருக்கின்றோம்' என்று கூறிக் கண்கலங்கினான் காளை ஒருவன்.

'தமிழ் பத்திரிகைகள் வருகின்றன. வாசித்து மகிழ்கிறோம். உயர் கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் எங்கள் பிள்ளைகள் வெள்ளையின மாணவர்களுடனும் பல் நாட்டு பல் இன மாணவர்களுடனும் கலந்து கல்வி கற்கிறார்கள். ஆபிரிக்க கருமைநிற மாணவர்களுடன் சகோதர மனத்துடன் பழகுகிறார்கள். சமூகவியல் என்றொரு பாடம் கல்லூரிகளில் கற்பிக்கப்படுதல் சிறப்பம்சம் என்பேன். உலகின் இன, மத, மொழி நெறியால் அல்லல்படும் வறிய நாடுகள் பின்பற்ற வேண்டிய கல்விக் கொள்கை இது' என ஆவெசமாக உரைத்துவிட்டு அமர்ந்த ஒருவர் தன் சொந்த நாட்டை மனதில் வைத்தே எச்சரித்தார் எனக் கொள்ளலாம்.

'வர்த்தக நிறுவனங்களில் வெள்ளை நிறத்தவரும் கறுப்பினத்தவரும் நிறபேதம் பாராட்டாது பணியாற்றும் பான்மையும் சீனரும் ஆபிரிக்கர்களும் சீக்கியரும் சிறிலங்காவினரும் அடுத்தடுத்த வீடுகளில் குடியிருக்கும் காட்சியும் வியப்பளிக்கிறது. வாழ்க உங்கள் மனிதநேயம்' என உரைத்தார் ஒருவர்.



'வீதியோரம் வளரும் உங்கள் தேசிய மேபிள் மரங்களைப் பார்க்கின்றோம். அவற்றின் பச்சை, சிவப்பு இலைகள் பனித் தூறலைத் தாங்கி பளபளக்கும். தரை நோக்கி வளையும். வெளியில் கண்டு மீண்டும் நிமிரும். மனதைக் கவரும் காட்சி வேறெங்கும் காண்பதரிது' தெருக்கரையில் நடந்து அவதானித்த ஒருவரின் அனுபவம்.

'வெலிங்டன் கடற்கரையை அண்மிய தடாக நீர்ப்பரப்பில் கரியநிற தேசிய தாராப் பறவைகள் ஊர்ந்து செல்லும் அழகையும் நயகாரா நகரில் அமெரிக்க முனையில் இரவு பகலாய் சொட்டும் அருவியின் பாய்சலையும் பனிபொழியும் தைமாத நாளில் தரிசித்த ஒருவரின் சிற்றுரை.

இன்சுவை பொங்கலை சுவைத்துக்கொண்டே அந்தப் பாரிய தேசத்தின் விளை வளங்களான தங்கம், வெள்ளி, பளிங்குச் சிலிக்கன் போன்றவற்றைப் பார்த்தவர்போல் வியந்துரைத்து யூலியிடம் ஜோன்சனுக்கு நன்றியும் வணக்கமும் சொல்லிக்கொண்டே புறப்பட்ட ஒருவரையும் அவரைத் தொடர்ந்து வெளியேற முனைந்தவர்களையும் திரும்பிப் பார்க்க வைத்தது. 'தாங் யூ .'.போர் யுவர் சுவீற் பொங்கல் .... பட்....' என நான் எழுப்பிய குரல் 'என்ன சொல்லப்போகிறார் இவர்?' என எண்ணியவர்கள் நின்று அவதானித்தனர்.

'Our Prime God is Vinayagar. In every celebration we worship Vinayagar. Incase of Pongal vizla we prepare cone shape shrine out of cow dong with an arugam grass planted on it; embodying lord Vinayar. Today it is not to be seen on the Pooja table... இவ்வாறே பூசை மேசையில் நான் அவதானித்த குறைகளைச் சொல்லி நிறுத்தினேன். நான் சொன்னவற்றை பொறுமையாக செவிமடுத்த பாராளுமன்ற உறுப்பினர் யூலியட் அம்மையார் 'Thank you for your advice. I will call you to help for a perfect Pongal Celebration next year'' என்றார்.

---

மேதகு யூலியட் ஜோன்சன் பாராளுமன்ற உறுப்பினர் அவர்களுக்கு,

கடந்த மாதம் உங்கள் இல்லத்தில் கொண்டாடப்பட்ட எங்கள் தைப்பொங்கல் விழாவில் நானும் சமூகமளித்திருந்தேன். உங்கள் நாட்டில் நிலவும் சமநல வாய்ப்புகள் பற்றியும் ஜனநாயக வளங்கள் சிறப்புகள் பற்றியும் பல்லின மக்களையும் சுதந்திரமாக வாழ வைக்கும் சமத்துவ கொள்கை பற்றியும் பலரும் கருத்துரைந்தனர். முடிவுரையாக நான் அப்பொங்கல் கிரியைகளில் காணப்பட்ட சில குறைகளைச் சுட்டிக் காட்டினேன். என் கருத்துக்கள் ஏற்று அடுத்த ஆண்டு பொங்கல் விழாவை கொண்டாடும் வேளை குறையற்ற விழாவாக நடத்த ஒழுங்கு செய்வதற்கு உதவியாக என்னை அழைப்பதாக கூறினீர்கள். ஆனால் அடுத்து வரும் தைப்பொங்கல் விழாக் காலத்தில் சமூகமளித்து ஆலோசனை கூறும் வாய்ப்பை இழந்தவனாக நான் என் சொந்த நாட்டுக்குத் திரும்பிவிட்டேன்.

புகலிடக் கோரிக்கையாளருக்கு உலகில் சிறப்பான முதன்மை நாடு கனடா என்ற செய்தியை பத்திரிகையொன்றில் பார்த்ததாக நான் திரும்பி வந்ததை அறிந்து என்னைப் பார்க்க வந்திருந்த நண்பர் ஒருவர் சொன்னார்.

என் இல்லாள் இயற்கையெய்தினமையாலும் அறம் பிழைத்த ஆட்சியின் அக்கிரமங்களால் என் தனயர் இருவர் காணாமலாக்கப்பட்டமையாலும் துயர்மிகுந்த தனிமையில் வாழ்ந்திருந்த நான் அத்துயரிலிருந்து விடுதலை பெறும் விருப்புடன் உங்கள் நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கும் எனது மற்றொரு மகனுடன் வாழ்வின் இறுதி நாட்களைக் கழிக்கவெண்ணி வந்திருந்தேன். அங்கே தங்குவதற்கு அனுமதிக்கப்பட்ட விசா காலம் முடிய என் வேண்டுதலை ஏற்று மேலும் ஆறுமாத காலத்தை உங்கள் நிர்வாகம் அனுமதித்தது.

அன்பாதரவற்ற ஒருவன் தனது மகனுடனோ பேரனுடனோ அங்கு நிரந்தரமாக தங்கியிருக்கலாம் எனும் ஒரு விதி உண்டென்று வெள்ளி தோறும் அங்கே வரும் தமிழ்ப் பத்திரிகை ஒன்றில் பார்த்திருந்தேன். எனினும் உங்கள் அரசியலமைப்பின் எந்தப் பிரிவின் எந்த பந்தியின்படி நான் உங்கள் நாட்டில் வாழ்ந்திருக்கும் அனுமதி மறுக்கப்பட்டது? இத்தகைய கேள்விகள் எனக்கு நியாயம் பெற்றுத் தரும் என்றோ நான் திரும்பிவரும் வாய்ப்பு வரும் என்றோ கனவு காணவில்லை.

எவ்வாறாயினும் அந்த குறுகிய காலத்தில் பிரம்டன் நகரை அண்மிய பிரதேசங்களையும் ஸ்காபறோ, மிசிசாகா, ரொறன்ரோ, ஸ்ரோவில் நகரங்களையும் நயகாரா நீர்வீழ்ச்சியையும், சைவக் கோயில்களையும் தமிழ் அரங்குகளையும் கலை நிகழ்ச்சிகளையும் பார்க்கும் வாய்ப்பைப் பெற்று நாட்களையும் பனிப்படிவுகளில் கால் புதைத்து நடுங்கிய குளிர் அனுபவத்தையும் நினைவில் கொண்டு நன்றியுரைக்கின்றேன்.

அன்று வெண்பனிப் பரப்பில் கால் புதைய நடுங்கி நடந்தவன் இன்று வெண்மணல் பாதைகளில் வெற்றுக்கால் புதைய நடமாடுவதில் காணும் சுகம் சொர்க்கம் என்பேன்.

தேன் சிந்தும் பூக்கள் மலர்ந்துள்ள செடிகள் சூழ்ந்துள்ள என் வீட்டு முற்றத்தில் தென்றல் தவிழும் வேப்பமர நிழலில் அமர்ந்திருக்கிறேன். 'காக்கை குருவி எங்கள் ஜாதி' என மகாகவிஞன் பாரதியினால் மகிழ்ந்துரைக்கப்பட புள்ளினம் என் தலைக்குமேல் வேப்பமரம் பூக்களைப் புசிப்பதிலும் பறப்பதுமாய் வட்டமிடும் சூழலே தனிமை என்றும் என் கவலையை மறக்க செய்கிறது.

மழை பெய்கிறது. கூடவே காற்று வந்து மரக்கிளைகளை உலுப்பிவிட்டுப் போகிறது.

வெண்கதிர்களைப் பரப்பியபடி ஆதவன் கிழக்கு வானிலிருந்து எழுத்துவரும் காட்சி காண மேனி சிலிர்க்கிறது. இந்த வசந்தம்தான் சூரிய ஒளியையே காணாது வாழ்ந்து கொண்டிருக்கும் மேற்கு நாட்டவரை உல்லாசப் பயணி என்னும் பெயருடன் வரவழைக்கிறதோ! நன்றி.

- இவ்வண்ணம் புருசோத்தமன்


(பாராளுமன்ற உறுப்பினர் பெயர் கற்பனை)

# யாழ்ப்பாணத்து நல்லூரின் பெருமையும் நல்லூரான் மகிமையும்



இலங்கையின் வடபகுதியிலுள்ள யாழ்ப்பாண மாவட்டத்தில் அமைந்துள்ள ஒரு பிரதேசம் நல்லூர். இந்தப் பிரதேசத்திற்கான அரச நிர்வாக கட்டமைப்புக்குள் தனியானதொரு பிரதேச செயலகம் இங்கு இயங்கி வருகிறது. யாழ். மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி அமைப்புகளில் ஒன்றாக நல்லூர் பிரதேச சபை அமைந்துள்ளது. 1960 ஆம் ஆண்டிலிருந்து 1989 வரையிலான காலப்பகுதியில் நல்லூர் தனியானதொரு பாராளுமன்றத் தொகுதியாகவும் இருந்தது. இப்போது இது யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.


நல்லூர் பிரதேசம் பலவகையிலும் சிறப்புப்பெற்றிருப்பதை அவதானிக்க முடிகிறது. யாழ்ப்பாணத்தை தமிழ் மன்னர்கள் ஆட்சிபுரிந்த காலப்பகுதியில் குறிப்பாக 1215ஆம் ஆண்டிலிருந்து 1619 வரையில் நல்லூர் இராசதானியாக விளங்கிய பெருமைக்குரியது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றி, தங்கள் ஆளுகைக்குள் கொண்டுவந்த பின்னர், யாழ்ப்பாண நகரின் கரையோரப்பகுதிக்கு தங்கள் ஆட்சிப் பரிபாலன பணிமனையை மாற்றிக் கொண்டதாக வரலாறு சொல்கிறது. தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்து நினைவுகளையும் வரலாற்றுக் கதைகளையும் சொல்லும் ஒருசில கட்டடங்களும், கட்டட எச்சங்களும் தொல்பொருள் மரபுரிமை சின்னங்களாக நல்லூர் பிரதேசத்தில் இப்போதும் காணப்படுவது வரலாற்றுச் சிறப்பாகவே அமைந்துள்ளன. இவற்றுள் மந்திரிமனை, சங்கிலியன் தோப்பு கற தோரண நுழைவாயில் மற்றும் சங்கிலியன் அரண்மனையின் கட்டட அத்திவாரம், யமுனா ஏரி போன்றவைகள் குறிப்பிடத்தக்கன.


ஆலயத்தின் பழைய தோற்றம்

ஐந்தாம் குரவர் எனப் போற்றப்பட்ட ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர், சின்னத்தம்பிப் புலவர், சரவணமுத்துப் புலவர் போன்ற அறிஞர் பெருமக்கள் தோன்றிய பிரதேசமும் நல்லூர்தான். அறிஞர் பெருமக்கள் மட்டுமல்ல ஞான பரம்பரையொன்றை தோற்றுவித்த பெருமையும் நல்லூருக்குண்டு. யாழ்ப்பாணத்து சித்தர் பரம பரையில் முதல்வராகப் போற்றப்படும் கடையிற் சுவாமிகள் நடமாடிய புண்ணிய பூமியாக நல்லூர் விளங்குகிறது. இவரது சீடரான செல்லப்பா சுவாமிகள் நல்லூர் தேரடியில் வாழ்ந்தவர். அவரது ஞானஉபதேசம் பெற்று சீடரான யோகர் சுவாமிகள் நல்லைக் கந்தன் ஆலய புண்ணிய பூமியில் நடமாடியவர். தன் ஞானகுருவை மட்டுமல்ல நல்லைக் கந்தனையும் போற்றிப் பல பாடல்களைப் பாடியிருக்கிறார். பின்னாளில் வாழ்ந்த குடைச் சுவாமிகளும் நல்லூர் கந்தனின் புனித பூமியில் பாதங்களை பதித்தவர். இத்தகைய ஞானபரம்பரையினரின் திருப்பாதங்கள் பதிந்த பெருமைக்குரியது நல்லூர்.

நல்லூரில் அமைந்துள்ள நாவலர் மணிமண்டபமும், அங்குள்ள நாவலர் சிலையும், நாவலர் கலாசார மண்டபமும் இன்றும் நாவலர் பெருமானின் நினைவைமீட்டிக் கொண்டிருக்கும் சின்னங்களாக முக்கியத்துவம் பெறுகின்றன. இன்னொரு நினைவுச் சின்னமான அரியாலையிலிருந்து நல்லூர் பிரதேசத்தை ஊடறுத்து யாழ்ப்பாண நகரத்தை சென்றடையும் நாவலர் வீதி, யாழ். குடாநாட்டின் மிகநீண்டதூர வீதியாக பிரபலம் பெறுகிறது.

இலங்கையில் முதலாவதாக தோற்றம்பெற்ற சைவ ஆதீனமாக பெருமை பெறும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனமும், 2020ஆம் ஆண்டு நவம்பர் மாதம் உதயமான யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீனமும் நல்லூரிலேயே அமைந்திருப்பதும் சிறப்புக்குரியது. நல்லூர் கந்தன் ஆலயத்திற்குப் பின்னால், ஆலய மேற்கு வீதியில் நல்லை ஆதீனத்தின் எழில்மிகு கட்டடம் காட்சி தருகிறது. இலங்கையிலுள்ள பெரும் இந்துமத அமைப்புகளுள் ஒன்றான அகில இலங்கை இந்து மாமன்றத்தின் யாழ். பிராந்திய பணிமனை, இலங்கை சின்மயா மிஷனின் வடபிரதேச நிலையம், திவ்ய ஜீவன சங்கம், துர்க்காதேவி மணிமண்டபம், கம்பன் கோட்டம் போன்ற சமய மற்றும் கலை, கலாசார நிறுவனங்கள் பல நல்லூர் பிரதேசத்திலிருந்தே சேவையாற்றிக் கொண்டிருக்கின்றன. பாரதநாட்டின் இலங்கைக்கான யாழ். துணைத் தூதரகமும் நல்லூரிலேயே இயங்கிக் கொண்டிருப்பதும் இன்னொரு சிறப்புக்குரியது. நல்லூர் முத்திரைச்சந்தி அருகே யாழ்ப்பாணத் தமிழ் மன்னனான சங்கிலியனின் உருவச்சிலை கம்பீரமாகக் காட்சிதருவதும் நல்லூரின் பெருமைக்கு சான்றாகும்.


ஆலயத்தின் பழைய தோற்றம்

கடந்த போர்க்கால நிலைமைகளுக்குப் பின் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம், தனது தலைமைப் பணிமனையையும், ஏனைய உப செயலகங்களையும் நல்லூர் பிரதேசத்தில் அமைத்திருப்பதையும் இங்கு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். இந்த செயற்பாடானது, தமிழ் மன்னர்களது ஆட்சிக் காலத்தின்போது நல்லூர் பிரதேசம் இராசதானியாக விளங்கியிருப்பதை மீளவும் நினைவுபடுத்தும் வகையில் இருப்பதாகவே சொல்லத் தோன்றுகிறது.

நல்லூர் பிரதேசத்திலுள்ள பல கோவில்கள் பழந்தமிழ் மன்னர்களது ஆட்சியுடன் தொடர்புபட்டதான வரலாற்றுப் பெருமைக்குரியது என ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. நல்லூர் கந்தசுவாமி ஆலயம், இதற்கு கிழக்கே வெயிலுகந்த பிள்ளையார் கோவில், தெற்கில் கைலாசநாதர் கோவில், மேற்கே வீரமாகாளி அம்மன் கோவில், வடக்கில் சட்டநாதர் கோவில் என்பனவற்றை காவல் அரண்களாக்கி அரச ஆட்சிப் பரிபாலனம் மேற்கொள்ளப்பட்டதாக வரலாறு சொல்கிறது. போர்க்காலத்தின்போது அரசர்கள் இந்த ஆலயங்களில் தங்கள் ஆயுதங்களை வைத்து வழிபட்டுச் சென்றிருப்பதாக வரலாற்றுப் பதிவுகளிலிருந்து அறிய முடிகிறது. நல்லூர் கந்தசுவாமி ஆலயத்திற்குப் பின்னால் அமைந்துள்ள நல்லூர் சிவன் கோவிலும் இன்னொரு வகையில் சிறப்புப் பெறுகிறது.

நல்லூர் பிரதேசத்தில் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் வேலவனுக்கு இங்குள்ள ஏனைய ஆலயங்களை விட தனித்துவமான மகிமை இருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். நல்லூர் பிரதேசத்தில் சிறியது, பெரியது என பெருமளவு ஆலயங்கள் அமைந்திருக்கும் நிலையில், ஒவ்வொரு ஆலயமும் அங்கு எழுந்தருளியிருக்கும் மூலமூர்த்தியின் பெயரைக் குறிப்பிட்டுத்தான் அறிமுகம் செய்து கொள்வது வழக்கம். ஆனால், நல்லூர் கந்தப் பெருமானை மட்டும் "நல்லூரரான்" என்று குறிப்பிட்டால் போதுமானது. மேலதிக விளக்கம் எதுவுமே தேவையில்லை.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் வரலாற்றுப் பதிவுகளை நோக்கும்போது, ஆலயம் ஸ்தாபிக்கப்பட்ட காலப்பகுதி தொடர்பான சரியான தகவல்களை வரலாற்று ஆய்வாளர்களால் பெறமுடியாமலிருப்பதாகவே தெரிகிறது. எனினும், இந்த ஆலயம் யாழ்ப்பாணத்து தமிழ் மன்னர் காலத்தில் தோற்றம் பெற்றதாக தெரியவருகிறது. ஆரம்பத்தில் நல்லூர் முத்திரைச் சந்தியை அண்மித்த பகுதியில் ஆலயம் அமைந்திருந்ததாக சொல்லப்படுகிறது. அந்தக் காலப்பகுதியில் அங்கு ஏற்பட்ட உள்நாட்டுப் போர் காரணமாக ஆலயம் சேதமடைந்ததாகவும், அந்தப் போரின் போது வெற்றிபெற்று யாழ்ப்பாண இராச்சியத்தை கைப்பற்றிய மற்றுமொரு தமிழ் மன்னன் பிராயச்சித்தமாக ஆலயத்தை புனரமைப்பு செய்தான் என்றும் வரலாற்றுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. 1505ஆம் ஆண்டு இலங்கையை போர்த்துக்கேயர் கைப்பற்றி ஆட்சி செலுத்துவதற்கு பல வருடங்களுக்கு முன்னதாகவே ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கலாம் என கருதுவதற்கு இடமுண்டு. ஏனெனில், இலங்கையில் போர்த்துக்கேயர் ஆட்சியின் போது இந்து ஆலயங்கள் முற்றாக அழிக்கப்பட்டு மத வழிபாட்டுக்கும் தடை ஏற்படுத்தப்பட்டது என்ற தகவல் வரலாற்று நூல்களிலிருந்து அறியக்கூடியதாக இருக்கிறது.



போர்த்துக்கேயருக்குப் பின் இலங்கையில் ஏற்பட்ட ஒல்லாந்தர் ஆட்சியின் இறுதிப் பகுதியில், இந்துமத வழிபாட்டு செயற்பாடுகளில் சிறிது தளர்வு ஏற்பட்டது. இவ்வேளையிலேயே இப்போதுள்ள இடத்திலிருக்கும் முருகப்பெருமான் ஆலயம், 1734ஆம் ஆண்டில் இரகுநாத மாப்பாண முதலியாரால் சிறிய கோவிலாக ஸ்தாபிக்கப்பட்டதாக வரலாறு சொல்கிறது. இவரே ஆலய பரிபாலனத்தையும் மேற்கொண்டு வந்தார். இவரது வழிவந்த சந்ததியினரே அன்று தொடக்கம் இன்றுவரை ஆலயத்தை சிறப்பாக நிர்வகித்து வருகின்றனர். இப்போது அமைந்துள்ள இடத்திற்கு முன், இதற்கு அண்மையிலுள்ள வெவ்வேறு இரு இடங்களில் ஆலயம் அமைக்கப்பட்டு பூசை வழிபாடுகள் நடைபெற்று வந்ததாக வரலாற்றுத் தகவல்களிலிருந்து அறிய முடிகிறது.

நல்லூர் பிரதேசத்தில் அமைந்துள்ள இந்துக் கோவில்களில் காலத்துக்குக் காலம் மகோற்சவங்கள் நடைபெற்று வந்தாலும், நல்லூர் கந்தனின் மகோற்சவம் ஆரம்பித்துவிட்டால் வடபகுதியிலுள்ள அடியார்கள் மட்டுமல்ல, நாடளாவிய ரீதியிலும், அதற்கு மேலாக வெளிநாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்து மக்களும் விரதமிருந்து முருகப்பெருமானை மனதாரப் போற்றி வழிபாடு செய்வது வழமையாகும். வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த நம்மவர்களும், தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல்வாதிகள், பிரமுகர்கள் உட்பட சிங்கள மக்களும் நல்லூர் மகோற்சவகாலத்தின் போதும் ஏனைய நாட்களிலும் ஆலயத்திற்கு வருகைதந்து முருகப்பெருமானை தரிசித்து செல்வதும் வழமையான ஒரு நிகழ்வாக இடம்பெற்று வருகிறது. நல்லூரரானைப் போற்றி பழந்தமிழ்ப் புலவர்கள் பலர் பாமாலைகளை சூட்டியிருக்கிறார்கள். சித்தர் பரம்பரையில் வந்த யோகர் சுவாமிகள் தனது நற்சிந்தனைப் பாடல்கள் பலவற்றில் நல்லைக் கந்தனைப் போற்றித் துதித்திருக்கிறார்.





தெற்கு வீதி இராஜகோபுரம்

தனது பாடல் வரிகள் பலவற்றில் "நல்லூரான்" என்ற சொல்லைப் பிரயோகித்து இருப்பதை காணமுடிகிறது. "நல்லூரான் திருவடியை நான் நினைத்த மாத்திரத்தில் எல்லாம் மறப்பேனடி" என்பதுடன், "நல்லூரான் திருவடியைப் பாடு" என்று சொல்லும் அவர், "நல்லூரான் கிருபை வேண்டும், வேறென்ன வேண்டும்?" என்கிறார். "கடல்சூழ் கவினிலங்கை கார்சூழ் நல்லூரான் தொடுக்கும் வல்வேலைத் துதி" என்று இன்னொரு வெண்பா பாடலிலும் நல்லூர் கந்தனைப் போற்றுகிறார். "நல்லூரான் திருவடியைப் பாடு, நாமே நாம் என்று சொல்லி நாடு" என்றும், "நல்லூரான் திருப்பாதம் காப்பு - அடடா நமக்குக் குறைவில்லை நல்ல வாக்கு" என்றெல்லாம் நல்லூர் கந்தன் புகழ்பாடும் யோகர் சுவாமிகள் "எந்நாளும் நல்லூரை வலம்வந்து வணங்கினால் இடர்கள் எல்லாம் போமே" என்றும், "நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு - அதனாலே நாட்டிலுள்ள பிணிகள் ஓடும்" என்றும் நல்லூரான் மகிமையைச் சொல்லும்போது, வேறு சான்று எதுவுமே தேவையில்லை.

அலங்காரக் கந்தனாகப் போற்றப்படும் சிறப்பு நல்லூரானுக்கு உண்டு. மகோற்சவ காலங்களில் கந்தப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக வெவ்வேறு அலங்காரங்களுடன் வீதியுலாவரும் காட்சி பக்திபூர்வமானது. முருகப் பெருமானுக்குரிய சாத்துப்படியும் வீதியுலாவரும் வாகனமும் விதம்விதமான சோடனையுடனான அலங்கரிப்பில் அமைந்திருக்கும். சில முக்கிய உற்சவங்களின் போது வீதியுலாவரும் முருகப் பெருமானின் அலங்காரத்துடன் இணைந்த நிறங்களிலான வஸ்திரங்களையே மகோற்சவத்தை நடத்திவைக்கும் குருமார்களும் அணிந்திருப்பார்கள். இதற்கும்மேலாக நல்லூர் கந்தன் ஆலயமும் அலங்காரச் சிறப்பினையும், ஓர் அழகுப் பாரம்பரியத்தையும் கொண்டு விளங்குகின்றது. ஆலயத்திலும் அதன் சூழலிலும் நிலவுகின்ற தூய்மை, ஆலய நித்திய நைமித்திய பூசை ஆராதனைகளில் நேரந்தவறாமை, ஆலய முகாமைத்துவச் சிறப்பு, குருமார்கள் தொண்டர்கள் வழிபடுவோர் ஆகியோரின் ஒத்துழைப்பு ஒழுங்குமுறைகள் என்பன அழகுக்கு அழகு செய்வனவாக அமைந்துள்ளதையும் சிறப்பாகச் சொல்லலாம்.

இங்கு தினந்தோறும் ஆறு காலப் பூசை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன. மகோற்சவ காலத்தில் காலை, மாலை என இருநேர திருவிழாக்கள் நடைபெறுகின்றன. திட்டமிடப்பட்டு குறிக்கப்பட்டிருக்கும் நேரத்திற்கு, ஆலயத்தில் பொருத்தப்பட்டிருக்கும் கடிகாரத்தின் மணி ஒலிக்கவும் பூசை வழிபாடுகள் ஆரம்பமாகும். இதுபோலவே மகோற்சவ காலங்களிலும் குறிப்பிடப்பட்ட நேரத்திற்கு சகல கருமங்களும் ஆரம்பமாகி நடைபெறுவது வழக்கமாகும். உபயகாரர்களின் அல்லது முக்கிய பிரமுகர்களின் வருகையை எதிர்பார்த்து பூசைகள், கிரியைகள், உற்சவங்கள் என்பன பிற்போடப்படும் அல்லது காலதாமதம் செய்யும் வழக்கம் இந்த ஆலயத்தில் முற்றாகக் கிடையாது.


வடக்கு வீதி இராஜகோபுரம்

(தொடர்ச்சி _57__ பக்கம்)

சிறுகதை

# தனிமை

புயல்நேசன்

நீங்கள் தனிமை பற்றி அறிந்துள்ளீர்களா? எமது சுயநல சூதாட்டத்ததைப் போல் அதில் ஒன்றும் இல்லை. நாங்கள் காலந்தோறும் இயற்கையை அழித்து – விரோதமாக செயற்பட்டு – பெற்றுக்கொண்ட காலப் பயிரின் அறுவடைதான் என்று எண்ணி மனத்திருப்த்திக் கொள்ள வேண்டிய ஊழ்வினையின் காய்தான். ஒரு சில விசமிகள் தங்களின் சுகபோக வாழ்விற்காக தொழிலாளிகளைச் சுரண்டுவதற்காக அவர்களின் கைகளில் கிடைத்த மனிதக் கனிகளும் ஒரு வகையில் தனிமைதான். ஆழ்ந்த மனித சிந்தனையைத் தூண்டினால், கல்லறையில் துயிலுவதும் வாழ்க்கையில் வாழ்வதும் தனிமைதான். வயதிற்கு ஏற்ற சுதந்திரம் கிடைக்காமல் இருப்பதும் ஒரு வகையில் தனிமைதான்.

யாழ்ப்பாண மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட பகுதியில் அரச அனுமதி பெற்ற சாராயக் கடைகளும் மதுபான விடுதிகளும் கிட்டத்தட்ட இருபத்தைந்து வரும். அவையெல்லாம் அரசியல்வாதிகளினதும் இனவாதிகளினதும் மதவாதிகளினதும் சாதிவாதிகளினதும் வர்க்கவாதிகளினதும் அடையாளமாக – பிற்போக்கு இருப்பிடமாக – திகழ்ந்தன. கஸ்தூரியார் வீதியின் இருபக்கமும் ‘வைன்சொப்’கள். இடையே திரையரங்கு ஒன்று பத்து மாதங்களாகப் பூட்டியே கிடக்கின்றது. ‘வைன்சொப்’ எதிரே சிறிய சந்து ஒன்று. அதுதான் சுண்டல் வண்டிக்காரர் சிலரின் வண்டித் தரிப்பிடமும் இருப்பிடமும். சந்தின் இரு மருங்கிலும் கிழிந்த சேலைகளாலும் காலாவதியான பொலித்தின் தாள்களினாலும் அடைக்கப்பட்ட ஏழெட்டு குடில்கள். அவை ‘முனிசிபல்’ காரர்களால் பல முறை அகற்றப்பட மீண்டும் மீண்டும் புதிதாய் எழும்.

இந்த புனித பிரதேசத்தில் மனிதர்கள் ஒன்று தேர்தல் காலத்திலும் இரண்டு இலேசான மழைத் தூறலுக்கும் மூன்று நாட்டாமிகளும் நின்று கொண்டு குடிப்பவர்களும் நகர சுத்திகரிப்பாளர்களும் இடுப்பிலும் மடியிலும் ‘கால் போத்தல்’களுடனும் ‘பீர் டிண்கள்’ உடனும் வந்து போவார்கள். இது வண்டிக்காரர்களின் மனைவிமாருக்கு வேடிக்கையாக இருக்கும். சில வேளைகளில் ஓரிரு பெண்காடையர்கள் அங்கு வேட்டையாடுவது வழக்கம். அதற்குக் காவல்துறையினரும் உடன்பாடு. ஏதும் அறியாத கன்னியர் பலரின் கற்பும் களவாடப்பட்டுள்ளது. அங்கு வாழ்பவர்களுக்குப் பொது குளியலறையும் மலசலக்கூடமுமே தஞ்சம். நோய்நொடிகள் வந்தால், ஒன்று அனாதைப் பிணம். இரண்டு அரசினர் வைத்தியசாலையில் தஞ்சம். சந்தின் கரையோரம் வெற்று சாராய போத்தல்களுக்கும் ‘பீர் டிண்’களுக்கும் பஞ்சம் இல்லை. அடிக்கடி அவற்றைப் பொறுக்க காக்கா வருவார். காக்கா அப்படியே அங்குள்ள கன்னிப்பெண்களுக்கும் விலை பேசியே போவார்.

சந்தின் இரு அந்தத்திலும் பிரதான வீதிகள் - ஆமாம், இவற்றாலும் சாராய கடைகளாலுமே வண்டிக்காரர்களின் சீவியம் ஓடுகின்றது. தெருக் கம்பங்களில் உள்ள பொது மின்குமிழ்களின் ஒளி தனித்தனி குடில்களுக்குள் புகுந்தாலும் அந்த ஒளி போதாது. ஒவ்வொரு குடிலிலும் குப்பி விளக்குகள் மின்னிக்கொண்டிருக்கும். பெண்கள் சிலரும் மதுவிற்கு விலக்கல் போயா காலத்தில் அவர்களுக்கு மௌஷ்சு அதிகம். சில வேளைகளில் காவற்துறையினர் அவர்களைக் கைது செய்வதும் உண்டு. அடுத்த நாள் விடுதலை. தாய்க்குலம் அல்லவா?



அந்த தனிமைப் பகுதியில் வாழும் சிறுவர் - சிறுமியருக்கு மாலைப்பொழுதில் ‘டிண் போல்’ விளையாடுவதில் அலாதிப் பிரியம். இவர்கள் பாடசாலை சென்றாலும்; செல்லாவிட்டாலும் யாரும் கணக்கெடுக்கமாட்டார்கள். மாடி வீடுகளிலிருந்தும் கடைகளிலிருந்தும் சில நேரங்களில் புரியாணி சாப்பாடுகளின் மிச்சசொச்சம் விழும். அதன் அறுசுவை அந்த சந்து சிறுவர் - சிறுமியர்களுக்குத்தான் தெரியும்.

இவர்கள் வசிக்கும் நகரைச் சுற்றி பல பிரபல்யமான பாடசாலைகள் உண்டு. ஒரு பாடசாலையில் கூட பாதங்கள் பதித்திருக்கமாட்டார்கள். சிறிய வயதில் வீட்டு வேலைகளுக்குப் பழகிப் போனதால், வீட்டு எஜமானிகள் மலிவாக கூலிக்கும் தங்கு வேலைக்கும் ஆடு மாடுகளைப் போல அழைத்து செல்லும் இரகசியத்தைக் காக்காமர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். ஒரு குடிலில் நான்கு ஐந்து பிள்ளைகள். இங்கு பெற்றோர்கள் பிள்ளைகளைப் பெறுவது வருமானத்திற்கே.

கடந்த ஒன்பது மாதங்களாக யாழ் நகரத்தில் சன நடமாற்றம் குறைவாகவே காணப்பட்டது. மனிதர்கள் எல்லோரும் வாயையும் மூக்கையும் துணியால் கட்டிக்கொண்டு பட்டப்பகலிலும் திருடர்கள் போல நடமாடினார்கள். சந்துப் பிரதேசத்திற்குள் யாரும் போகக் கூடாது; அங்கிருந்து எவரும் வெளிவரக் கூடாது என்று காவற்துறையினர் ‘சீல்’ வைத்தனர். அந்த நகரில் ஒரு சில இடங்களைத் தவிர ஏனைய இடங்களில் குடி நீரில் உப்பு கலந்துள்ளமையால், உவர்த்தன்மையாக இருந்தது. சந்து பகுதியில் வாழும் மனித எழும்பு கூடுகளுக்கு குழாயால் வரும் குடி நீர் பிடிப்பதற்கு கஸ்தூரியார் வீதியில் அமைக்கப்பட்ட குழாயில் மட்டும் மாநகர மேயரால் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அந்த குழாயில் குடிநீர் பிடிப்பதென்றால், புண்ணியம் செய்திருக்க வேண்டும்.

ஊரடங்கு சட்டக் காலத்தில் பக்கத்தில் உள்ள செல்வந்தர்கள் இவர்கள் மீது ஓளரவுக்குக் கருணை காட்டினார்கள். எப்படியோ அதன் மூலம் அவர்களின் மூன்று மாத வாழ்வு சாமானியமாக ஓடியது. இப்போது தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் நடைமுறைக்கு வந்த முதல், சுண்டல் வண்டிக்காரர்களின் உழைப்பில் மண் விழுந்துவிட்டது. சில சுண்டல் வண்டிகள் நிலையாக ஓர் இடத்தில் ஓய்வு பெற்றுவிட்டன் வேறு சில ‘முனிசிபல்’ வாகனத்தில் சென்று விட்டன. வீட்டு வேலைக்கு செல்லும் பெண்கள் குடில்களுக்குள் ஒடிங்கி விட்டார்கள். ஏதோ உயிர் வாழ்வதற்கு பிரதேச செயலகத்தினால், கொடுத்த அரிசியும் பருப்பும் சோயா மீட்டும் உதவின. பக்கத்தே ஓடும் அழுக்கு வாய்கால் இப்போது சற்று தெளிவான நீருடன் இடையிடையே சில தீன்பண்டங்களையும் சுமந்து வந்தது. அவை சிறுவர்களுக்குத் திவ்விய அமுதமாக இருந்தன.

‘சாராய பார்’களைத் திறப்பதற்கு அனுமதி வழங்கிய அரசாங்கம். சந்து பகுதிக்குள் கழிவு நீரையும் கழிவுப் பொருட்களையும் அனுப்புவதற்குத் தடைவிதிக்கவில்லை. அந்த பகுதியில் மனிதர்களின் நடமாட்டத்தினை விட குப்பைகளும் கழிவுப் பொருட்களுமே நாளுக்கு நாள் அதிகரித்தன. இங்கிருந்தே பங்கசுகளும் பாக்டீரியாக்களும் விஷக்கிருமிகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. உலகத்தில் ஜீவன்கள் உயிர் வாழ வேண்டும் என்றால், எல்லாம் அரங்கேறும். உள்நாட்டு யுத்த

(62.ம் பக்கம் பார்க்க)

(55 பக்கம் தொடர்ச்சி)

# யாழ்ப்பாணத்து நல்லூரின் பெருமையும் நல்லூரான் மகிமையும்

இங்கு பேணப்பட்டு வரும் நேரமுகாமைத்துவ செயற்பாடானது, இலங்கையிலுள்ள ஏனைய ஆலயங்களில் நடைமுறைப்படுத்தப்படுவது குறைவு அல்லது முற்றாகவே இல்லை என்றுகூட சொல்லலாம்.

இப்போது இந்து ஆலயங்களில் பல்வேறு கட்டணங்களில் பலவகையான அர்ச்சனைகள் செய்யப்பட்டு வருகின்றபோது, நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் அன்றுமுதல் இன்றுவரை அர்ச்சனைக் கட்டணமாக ஒரு ரூபாய்தான் பெற்றுக் கொள்ளப்படுகிறது. அர்ச்சனைச் சீட்டில் ஒரு ரூபாய் என்றுதான் குறிக்கப்பட்டிருக்கும். அடியார் ஒருவர் பத்து, இருபது, ஐம்பது அல்லது நூறு ரூபா கொடுத்து அர்ச்சனை செய்ய விரும்புகிறார் என வைத்துக்கொள்வோம். ஆலய அலுவலகத்தில் விரும்பிய பணத்தைக் கொடுத்து அர்ச்சனை சீட்டைக் கேட்டால் அவரது பணத்தின் பெறுமதிக்கு ஏற்றவகையில் (ஒரு ரூபாவுக்கு ஒன்று என்ற ரீதியில்) சீட்டுகள் வழங்கப்படும். இதுவே இங்குள்ள நடைமுறையாகும்.

இலங்கையிலுள்ள பல வர்த்தக நிறுவனங்கள் தங்கள் விளம்பர செயற்பாடுகளின்போது நல்லைக் கந்தன் ஆலய முகப்பை பயன்படுத்துவது வழக்கமாக இருந்து வருகிறது. இலங்கை அரசு 2013ஆம் ஆண்டில் இலங்கையின் இருபத்தைந்து மாவட்டங்களைப் பெருமைப்படுத்தும் வகையில் அந்தந்த மாவட்டங்களின் சிறப்புக்குரிய பொதுச் சின்னம் தாங்கியதாக பத்து ரூபா பெறுமதியான வெள்ளி நாணயக் குற்றிகளை வெளியிட்டிருந்தது. இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்திற்குரிய நாணயக் குற்றியில் நல்லூர் கந்தசுவாமி கோவில் முகப்பு பொறிக்கப்பட்டமையானது நல்லூரான் பெருமைக்கு இன்னுமொரு சான்று என்றுதான் சொல்லவேண்டும். கந்தபுராண கலாசாரம் மேலோங்கியிருப்பதாக சிறப்பித்துச் சொல்லப்படும் யாழ்ப்பாணத்து சமயப் பண்பாட்டு அடையாளங்களுள் ஒன்றாகவும், ஆலயம் சிறப்புப் பெறுகிறது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் நிர்வாகச் சிறப்பு ஆலய வளர்ச்சிக்கு பெரிதும் துணையாகவிருக்கிறது. மாப்பாண முதலியார் பரம்பரையினரின் சிறப்பான பரிபாலன செயற்பாடுகளினால் காலத்துக்குக் காலம் புனருத்தாரண வேலைகளும்,

திருத்தப் பணிகளும், புதிய வடிவமைப்பு செயற்திட்டங்களும் ஆலயத்திற்கு அதிசிறப்பான நிலையை தோற்றுவித்துக் கொண்டிருக்கின்றன. 1964ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய சித்திரத்தேர், அலங்கார வளைவுகளுடன் அமைந்த வகையிலான ஆலய நுழைவாயில், புதிதாக அமைக்கப்பட்ட வசந்த மண்டபம் என்பன கடந்தகால செயற்பாடுகளுள் சிலவாகும். ஆலயத்தின் தெற்குவீதியில் புதிதாக அமைக்கப்பட்ட நவதள இராஜகோபுரம் 2011ஆம் ஆண்டு மகோற்சவ காலத்தின் போதும், ஆலய வடக்கு வீதியில் புதிதாக அமைக்கப்பட்ட நவதள குபேரவாசல் இராஜகோபுரம் 2015ஆம் ஆண்டு மகோற்சவ காலத்தின் போதும் மகா கும்பாபிஷேகம் செய்து வைக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு ஆலய தீர்த்தக் கேணியின் நான்கு பக்கங்களிலுமுள்ள படிக்கட்டுகள் திருத்தியமைக்கப்பட்டு, பிறநாட்டு மாபிள் கற்களால் அழகுபடுத்தப்பட்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

ஆறுமுகப்பெருமான் வள்ளி தெய்வயானை சமேதராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சண்முக சுவர்ண சபா மண்டபம் 2018ஆம் ஆண்டு புனர்நிர்மாணம் செய்யப்பட்டு விமானத்திற்கு (தூபி) தங்கக் கலசத்துடன் இணைந்த பொற்கூரை அமைக்கப்பட்டிருப்பது சிறப்பாகக் குறிப்பிடத்தக்க விடயமாகும். இதன் மூலம் இலங்கையில் பொற்கூரை வேயப்பட்ட முதலாவது கோவிலாக நல்லூர் கந்தசுவாமி ஆலயம் பெருமை பெறுகிறது.

அரை நூற்றாண்டு காலத்திற்கும் மேலாக மகோற்சவ நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி நேரடியாக அஞ்சல் செய்து வருகின்ற பெருமையைப் பெறும் ஒரேயொரு இந்து ஆலயமாக நல்லூர் கந்தசுவாமி கோவில் விளங்குகிறது. ஐம்பதுகளின் பிற்பகுதியிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் தேர், தீர்த்த நிகழ்ச்சிகளை இலங்கை வானொலி நேர்முக வர்ணனையாக வழங்கி வந்துள்ளது. கடந்தகால நெருக்கடியான போர்க்காலச் சூழ்நிலைகளின்போதும், அப்போது இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தமிழ்ச்சேவைப் பணிப்பாளராக கடமையாற்றிக்கொண்டிருந்த வி.என். மதிஅழகன் அவர்களது ஏற்பாட்டில் ஆலய தேர், தீர்த்த நிகழ்ச்சிகள் மட்டுமல்ல, பூங்காவன நிகழ்ச்சியையும் இலங்கை வானொலி நேர்முக வர்ணனையாக வழங்கியமை ஒரு வரலாற்றுப் பதிவாகவே அமைந்துள்ளது. நவீன தொழில்நுட்ப மற்றும் தொலைத்தொடர்பு வசதிகள் இல்லாத அன்றைய காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இந்த நேர்முக அஞ்சல் செயற்பாடு ஏராளமான நேயர்களால் பெரிதும் வரவேற்றுப் போற்றப்பட்டது. இதுவும் நல்லூரான் மகிமைக்கு ஒரு சான்று என்றுதான் சொல்லவேண்டும்.

நல்லைக் கந்தன் ஆலய வரலாற்றுப் பதிவுகளை மீள்நோக்கிப் பார்க்கும்போது, கடந்த காலங்களில் குறிப்பாக போர்க்காலச் சூழ்நிலையின் போதும், கொரோனா கிருமித் தொற்று மேலோங்கியதால் ஏற்பட்ட முடக்க காலத்தின்போதும் ஆலயத்தின் வருடாந்த மகோற்சவம் ரத்துச் செய்யப்பட்டதாகவோ அல்லது பிற்போடப்பட்டதாகவோ தகவல் இல்லை. திட்டமிடப்படி குறிக்கப்பட்ட தினங்களில், குறிக்கப்பட்ட கால அட்டவணையின் பிரகாரம் ஆலய உள்வீதியில் அனைத்து உற்சவங்களும் சிறப்பாக நடத்தி முடிக்கப்பட்டிருப்பது ஒரு சாதனைக்குரிய விடயமாக போற்றப்படுகிறது.

இங்கு வருடந்தோறும் ஆடி அமாவாசை தினத்திலிருந்து ஆறாவது நாள் கொடியேற்றத்துடன் மகோற்சவம் ஆரம்பமாகி இருபத்தைந்து நாட்கள் நடை பெறுவது வழக்கம். இவ்வருட மகோற்சவம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 2ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. பத்தாவது நாளாகிய ஆகஸ்ட் 11ஆம் திகதி மாலை மஞ்சம் உற்சவமும், 18ஆம் திகதி மாலை அருணகிரிநாதர் உற்சவமும், 19ஆம் திகதி மாலை கார்த்திகை உற்சவமும், 21ஆம் திகதி மாலை கைலாச வாகனம் உற்சவமும், 22ஆம் திகதி மாலை வேல்விமானம் (தங்கரதம்) உற்சவமும், 23ஆம் திகதி காலை தெண்டாயுதபாணி உற்சவமும் (மாம்பழத் திருவிழா), அதேதினம் மாலை ஒருமுகத் திருவிழாவும், மறுநாள் 24ஆம் திகதி மாலை சப்பரத் திருவிழாவும் நடைபெறவிருக்கின்றன. 24ஆவது நாளாகிய ஆகஸ்ட் 25ஆம் திகதி காலை இரதோற்சமும் 25ஆவது நாளாகிய ஆகஸ்ட் 26ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று, மறுநாள் 27ஆம் திகதி மாலை பூங்காவன உற்சவத்துடன் நல்லூரானின் இவ்வருட மகோற்சவப் பெருவிழா நிறைவுபெறும்.

"நல்ல மலரெடுத்து நல்லூரை நாடிப்போய்
நல்ல மனத்தோடு நாம்பணிந்தால் - நல்லமயில்
ஏறிவந்து காட்சி கொடுப்பான் எழில்முருகன்
தேறிவிடும் சிந்தை தெளி."

(சிவயோக சுவாமிகள்)

**- ஊரெழு அ. கனகசூரியர்**

ஞானம் கலை இலக்கியச் சஞ்சிகை
பதிப்பகம்

பிரதம ஆசிரியர்
தி. ஞானசேகரன்

இணை ஆசிரியர்
ஞானம் ஞானசேகரன்

நிர்வாக ஆசிரியர்
ஞா. பாலச்சந்திரன்

Chief Editor
T. Gnanasekaran

Co-Editor
Gnanam Gnanasekaran

Managing Editor
G. Balachandran

தி. ஞானசேகரன்
பிரதம ஆசிரியர் - ஞானம் சஞ்சிகை
3-பி, 46ஆவது ஒழுங்கை
கொழும்பு -06
15-04-2022

## வாழ்த்துரை

இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாகக் கால்பதிக்கும் கனடா உதயன் 'இலங்கைச் சிறப்பிதழை' வெளியிடுவது தாயகப் படைப்புகளையும் படைப்பாளிகளையும் கௌரவிக்கும் ஒரு சிறப்பான செயற்பாடாகும்.

கனடா உதயன் ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் எதனையும் திட்டமிட்டுச் சிறப்பாகச் செய்பவர். அவர் தமிழினத்தின் சுயகௌரவத்திற்கும் உயர்விற்கும் பாதுகாப்பிற்கும் உரிமைக்கும் ஒற்றுமைக்கும் எனப் பல தளங்களில் சிந்தித்து சமூகம் சார்ந்து செயலாற்றுபவர் என்பதை நான் கனடா சென்றிருந்த வேளையில் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.


அதேவேளை அவர் ஒரு கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர் எனப் பல்துறைசார்ந்து இயங்கும் இலக்கியவாதியுமாவார். இலங்கையில் இருந்த காலத்தில் அவர் தனது எழுத்து முயற்சிகளில் ஈடுபட்டதோடு 'கீற்று' என்ற இதழை சில இலக்கியவாதிகளோடு இணைந்து நடத்தியவர். பின்னர் 'மாற்று' என்ற இதழையும் சிலகாலம் வெளியிட்டவர். சமீப காலத்தில் எமது ஞானம் சஞ்சிகையிலும் சிறுகதை எழுதி வாசகர்களின் பெரும் பாராட்டைப் பெற்றவர்.

ஓர் இலக்கியவாதி வெகுசனப் பத்திரிகை நடத்தும் போது அப்பத்திரிகை தனித்தவமான சில சிறப்பம்சங்களையும் செயற்பாடுகளையும் கொண்டிருக்கும் என்பதற்கு கனடா உதயன் வெளியிடும் இலங்கைச் சிறப்பிதழ் ஒரு சான்றாக அமைகிறது. கனடா உதயனின் இலங்கைச் சிறப்பிதழ் சிறக்க எனது வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

அன்புடன்

தி. ஞானசேகரன்

(பிரதம ஆசிரியர் - ஞானம் சஞ்சிகை)



'பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்'

3பி, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு - 6, இலங்கை. 3B, 46th Lane, Colombo - 6, Sri Lanka.
Tel: 0094 11 2586013 Mob: 0094 777 306 506 Fax: 0094 11 2362862 Email: editor@gnanam.info Web: www.gnanam.info

# மகாஜனாக் கல்லூரி தந்த ஈழத்து இலக்கிய வித்தகர் கோகிலா மகேந்திரன்

குரு அரவிந்தன்



இன்று தமிழ் இலக்கிய உலகில் பலராலும் அறியப்பட்ட இலக்கியவித்தகர் கோகிலா மகேந்திரன் அவர்களைப் பற்றி 'ஈழத்துப் பெண் எழுத்தாளர் வரிசையில் கோகிலா அவர்கள் தனக்கெனத் தனிப்பண்புகளுடன் வேறு பட்டுத் திகழ்வதை அவரது படைப்புக்கள் எமக்குப் புலப்படுத்துகின்றன. சமூக நோய்களுக்கான காரணிகளை உளவியல் அடிப்படையில் பகுப்பாய்வு செய்பவராக கோகிலா அமைகிறார்' என்று பேராசிரியர் சு. வித்தியானந்தன் 1980களில் குறிப்பிட்டிருந்தார்.

இவரது இலக்கிய ஈடுபாடுபற்றிக் குறிப்பிடும் போது, 'ஈழத்து இலக்கிய வரலாற்றில் கோகிலா மகேந்திரன் அவர்கள் பல்துறை ஆளுமையுடையவராக, இலக்கியம், கல்வியியல், உளவியல், ஆன்மிகம், அரங்கியல் போன்ற துறைகளில் தொடர் செயற்பாட்டாளராக இன்றும் இயங்கி வருகின்றார்' என்று ஜீவநதி ஆசிரியர் பரணிதரன் 162 வது சிறப்பிதழில் குறிப்பிட்டிருக்கின்றார். மகாஜனக் கல்லூரி இவரை எப்படி ஒரு சிறந்த இலக்கியவாதியாக உருவாக்கியது என்பதை நானறிந்தவரை இங்கே தருகின்றேன்.

மகாஜனக் கல்லூரியில் கல்வி கற்கும் போது கோகிலாதேவி என்ற பெயரிலேயே இவர் அறிமுகமானார். விழிசிட்டி கிராமத்தைச் சேர்ந்த இவரது தந்தையாரின் பெயர் செல்லையா சிவசுப்ரமணியம். இவர் நகுலகிரிப்புராண உரை நூலுக்காக சாகித்திய விருது பெற்றவர். தாயார் பெயர் செல்லமுத்து. 1950 ஆம் ஆண்டு பிறந்த இவர் பன்னாலை சேர். கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்ப கல்வியைக் கற்றார். அதன்பின் இவர் 1959 ஆம் ஆண்டு தொடக்கம் 1968 ஆம் ஆண்டு வரை மகாஜனாக் கல்லூரியில் உயர்வகுப்புவரை கல்வி கற்றார். 1970 ஆம் ஆண்டு பேராதனை மருத்துவகல்லூரி அனுமதி இவருக்குக் கிடைத்தது. மருத்துவ மாணவியாக 1974 ஆம் ஆண்டுவரை கல்விகற்ற இவர், அத்துறையில் ஆர்வம் இல்லாததால் மருத்துவக் கல்வியைத் தொடராமல் திடீரென நிறுத்திக் கொண்டார். அதிபர் கனகசபாபதி குடும்பத்தினர் கோகிலாதேவி மீது அதிக பாசம் வைத்திருந்தனர். இதைப்பற்றிக் கேள்விப்பட்ட எனது அக்கா கௌரி 'இந்தப் பிள்ளை ஏன் இப்படி அவசரப்பட்டு முடிவெடுத்துதோ தெரியவில்லை' என்று அதிர்ச்சியோடு என்னிடம் சொல்லிக் கவலைப்பட்டார். அவர் ஏன் அந்த முடிவெடுத்தார் என்பதன் காரணம் தெரியாமல் எனக்கும் அப்போது தாக்கத்தை ஏற்படுத்தி இருந்தது, அனாலும் 'அவரவர் விருப்பம்' என்று சொல்லி அக்காவைச் சமாதானப் படுத்தியிருந்தேன். அந்தத் தாக்கம் காரணமாக, பெற்றோரின் ஆசையை நிறைவேற்ற சில மாணவர்கள் தமக்கு விருப்பமில்லாத துறையைத் தெரிவு செய்வதால், அவர்களின் எதிர்காலம் எப்படி எல்லாம் பாதிக்கப்படுகிறது என்பதைக் கருப்பொருளாக வைத்து எழுதிய கதைதான் ஆனந்த விகடனில் வெளிவந்த 'புல்லுக்கு இறைத்த நீர்' என்ற சிறுகதை. ஆனால் கதையின் போக்கையும், முடிவையும் சுவார்சியம் கருதி மாற்றி இருந்தேன். கதையை வாசித்ததும் அத்தான் அதைப் புரிந்து கொண்டு, தன்னிடம் படித்த மாணவர்கள் பலர், பெற்ரோரின் விருப்பத்திற்காக அப்படி இருந்ததாகக் குறிப்பிட்டு, அந்தக் கதையைப் பாராட்டியிருந்தார்.

நாட்டின் சேவைக்கு நல்லதொரு மருத்துவர் கிடைக்கப்போகிறார் என்ற ஒரு ஆசிரிய ருக்கான கனவு அவரிடம் இருந்ததால், தன்னுடைய மருத்துவ மாணவர்கள் பட்டியலில் ஒருவர் இல்லாமல் போய்விட்டாரே என்ற கவலை அவருக்கு இருந்தது. ஒரு மருத்துவரை அந்த நாட்களில் உருவாக்குவது என்பது எவ்வளவு கடினமான காரியம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனாலும் கோகிலாதேவி தான் எடுத்த முடிவு சரிதான் என்பதைப் பின்நாளில் நிரூபித்துக் காட்டியிருந்தார். 'உள்ளத்துள் உறைதல்' என்ற கோகிலா மகேந்திரனின் நூலுக்கு அணிந்துரை எழுதிய அதிபர் கனகசபாபதி அவர்கள் இப்படிக் குறிப்பிட்டிருந்தார். 'கோகிலா மருத்துவராக வந்திருந்தால் மக்களது உடல் நோய்க்குப் பரிகாரம் கண்டிருப்பார், புகழ் ஈட்டியிருப்பார், பொருள் சேர்த்திருப்பார். ஆனால் இப்போது அவர் மனித சமூகத்தின் உளக்கோளாறுகளுக்குப் பரிகாரம் தேடும் சமூக உளமருத்துவராக உயர்ந்து நிற்கின்றார்' என்று குறிப்பிட்டிருந்தார். இவரைப் போன்ற மதிப்புக்குரியவர்களின் மனதை வென்றெடுக் கோகிலா எவ்வளவு கஷ்டப்பட்டிருப்பார் என்பதை அவரோடு பழகியவர்கள் நன்கு புரிந்து கொண்டிருப்பார்கள்.

1976 ஆம் ஆண்டு அருணோதயக் கல்லூரி அதிபராக இருந்த கிருஷ்ணர் மகேந்திரராஜாவை திருமணம் செய்து கொண்டார். ஆசிரியர் தொழிலில் இருந்த ஈடுபாடு காரணமாக இவர் பலாலி ஆசியர் பயிற்சிக் கல்லூரி விஞ்ஞானப் பிரிவில் 1979 ஆம் ஆண்டு தொடக்கம் 1981 ஆம் ஆண்டுவரை பயிற்சி பெற்றார். பொலிகண்டி த. க. பாடசாலையில் இரண்டு வருடங்கள் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர் 1976 ஆம் ஆண்டு கீரிமலை நகுலேஸ்வர ம. வித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றார். மகாஜனக் கல்லூரியில் 1982 ஆம் ஆண்டு தொடக்கம் 1993 வரை கடமையாற்றினார். 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 1999 ஆம் ஆண்டுவரை சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபராகக் கடமையாற்றினார். 1999 ஆம் ஆண்டு தொடக்கம் 2007 ஆம் ஆண்டுவரை பிரதிக் கல்விப் பணிப்பாளராக வலிகாமம் கல்வி வலயத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றபின், அவுஸ்ரேலியாவுக்குச் சென்று மகனுடன் குடியிருந்தார். அங்கும் காலத்தை வீணாக்காது, 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டுவரை அவுஸ்ரேலியாவில் ஆசிரியர் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இவர் கவிதை, சிறுகதைகள், குறுநாவல், நாவல், கட்டுரைகள், அறிவியல் சார்ந்த சிறுவர் நூல்கள் போன்ற ஆக்கங்களில் மட்டுமல்ல, நாடகத்திலும் தனது திறமையை வெளியே கொண்டு வந்திருக்கின்றார். இவர் சிறந்த சமயச் சொற்பொழிவாளராகவும் இருக்கின்றார். இதுவரை சுமார் 100 மேற்பட்ட சிறுகதைகளை எழுதியிருக்கின்றார். தொடக்க காலங்களில் இவர் விழி, விழிசைக்குயில், பசுந்தி, பதுமலாஞ்சனன் போன்ற புனைப்பெயர்களில் எழுதிவந்தார். இவரது படைப்புக்களில் விஞ்ஞான, மருத்துவ, உளவியல் கருத்துக்கள் நிறைந்திருப்பதாக எம். கே. முருகானந்தன் குறிப்பிட்டிருக்கின்றார். மனக்குறைமாற வழி, எங்கே நிம்மதி, மனச்சோர்வு, மனமெனும் தோணி, உள்ளம் பெருங் கோயில், உள்ளத்துள் உறைதல், நேர்கொண்ட பார்வை, திருமனிதர் வாழ்வு, சீர்மியத்தில் சிறப்புமுறைகள் போன்ற உளவியல் நூல்களையும் எழுதி வெளியிட்




டுள்ளார். இதுவரை சுமார் 44 நூல்களின் ஆசிரியராகவும், தொகுப்பா சிரியராகவும் இருந்து இவர் நூல்களை வெளியிட்டிருக்கின்றார். இலக்கிய வித்தகர், கலைச்சுடர், சமூக ஒளி, கலா பூஷணம், சமூகதிலகம், கலைப்பிரவாகம் போன்ற கௌரவப் பட்டங்களையும் இவர்

(59.........ம் பக்கம் பார்க்க)

(...58...ம் பக்கத் தொடர்ச்சி)

# மகாஜனாக் கல்லூரி தந்த
## ஈழத்து இலக்கிய வித்தகர் கோகிலா மகேந்திரன்

பெற்றிருக்கின்றார்.
மகாஜனக் கல்லூரியில் படிக்கும் போது, இவர் எனக்கு அதிக அறிமுகம் இல்லா விட்டாலும், அதிபர் பொ. கனகசபாபதியின் மதிப்புக்குரிய மாணவியாக இவர் இருந்ததால் இவருடன் பழக எனக்குப் பல சந்தர்பங்கள் கிடைத்தன. தமிழ் மட்டுமல்ல ஆங்கிலத்திலும் சிறந்த அறிவு கொண்டிருந்தார். அனைவருடனும் இனிமையாகப் பழகக்கூடிய இவர், மகாஜனக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் ஆசிரியர் செ. கதிரேசம்பிள்ளை அவர்களின் நெறியாள்கையில் 'அம்பையின் வஞ்சினம்,' 'கோமகளும் குருமகளும்' போன்ற சில நாடகங்களில் நடித்திருக்கின்றார். அந்த அனுபவத்தின் மூலம் சுமார் 30க்கும் மேற்பட்ட நாடகங்களை நெறியாள்கை செய்திருக்கின்றார். 'என் காதலி ஒரு கண்ணகி' என்ற எனது சிறுகதைத் தொகுப்பு ஒன்றை அதிபர் அவரிடம் கொடுத்த போது அவர் அந்த நூலைப்பற்றித் திறனாய்வு செய்து நிறை குறைகளைக் குறிப்பிட்டுப் பாராட்டி எழுதியிருந்தார். அதிபரின் நூல் ஒன்றை இலங்கையிலே பதிப்பித்து வெளியிட உதவியாக இருந்த இவர், கொழும்பிலே நான் நின்ற போது, என்னை வந்து சந்தித்து நூல் வெளியீடு பற்றிக் கலந்துரையாடியது மட்டுமல்ல, அந்த வெளியீட்டு விழாவைத் தமிழ் சங்கத்தில் சிறப்பாகவும் நடத்தி முடித்தார். கனடா தமிழ் எழுத்தாளர் இணையம் எனது இலக்கிய முயற்சியைப் பாராட்டி வெள்ளிவிழா மலர் ஒன்றை வெளியிட்ட போது, அப்போது தலைவராக இருந்த எஸ். சிவநாயகமூர்தி அவர்களுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றையும் அனுப்பி இருந்தார். 2019 ஆண்டு மகாஜனாக்கல்லூரி நிறுவுனர் நினைவு நாளில் மகாஜனக்கல்லூரியில் நிறுவுனர் பேருரையாற்ற எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த மேடையில் சிறந்த பழைய மாணவருக்கான விருது தந்து என்னைக் கௌரவித்த போது, அதே மேடையில் எனது 'சொல்லடி உன் மனம் கல்லோடி' என்ற நாவலையும் வெளியிட்டிருந்தேன். கல்லூரிக்கு முன்னால் உள்ள வீதியில் இருந்து மாலை அணிவித்து 'பான்ட்' இசையோடு, அதிபர், ஆசிரியர், மணவதலைவர், சாரணர் புடைசூழ எங்களை அழைத்துச் சென்றபோது, கோகிலா மகேந்திரன் அவர்கள் 2015 ஆம் ஆண்டு அனுப்பிய வெள்ளிவிழா வாழ்த்துச் செய்தியில் உள்ள கவிதையில் அவர் எதிர்வுகூறிய நான்கு வரிகள் என் நினைவில் வந்தன. 'கனடா தமிழர் இலக்கியம்' என்ற நூலில் இடம் பெற்ற அவரது கவிதையின் நான்கு வரிகளை இங்கே தருகின்றேன்.

'அம்பனைக்கு முன்னால் அடிக்கும் வயற்காற்றில்
கொப்புலுப்பிப் பூச்சொரியும் குடைவாகை - குரு
அரவிந்தனின் வெற்றிகளுக்கும் நாலு
மலர் சூட்டி வரவேற்று நிற்கிறது.'

மகாஜனக்கல்லூரிக்கு முன்னால் வீதியின் மறுபக்கத்தில் இருந்த வாகை மரங்களின் அழகிய பூக்கள் வயற்காற்றில் உதிர்ந்து பூச்சொரியும் காட்சியை, ஒரு கவிஞரால்தான் இப்படியெல்லம் கற்பனை பண்ணிப் பார்க்க முடியும் என்பதை நினைத்துப் பார்த்து, கல்லூரியில் படிக்கும் காலத்தில், அந்த வாகை மரங்களையும், அவை சொரியும் பூக்களையும் கவனமாக அவதானித்துக் கவிதை வடித்த அவரது கவியுள்ளத்தையும், ஆளுமையையும் அப்போது மனதுக்குள் வியந்தேன். கௌரவம் என்பது பெரிய மேடைகளில் கிடைப்பதல்ல, எந்த ஊரில் வாழ்ந்தாரோ அந்த ஊரும், எந்தக் கல்லூரியில் படித்தாரோ அந்தக் கல்லூரியும் ஒருவருக்குக் கொடுப்பதுதான் உண்மையான கௌரவம். இந்தக் கௌரவம் இரண்டும் கோகிலா மகேந்திரனுக்கும் கிடைத்திருக்கின்றது.
கனடாவில் எந்வொரு மேடை நிகழ்ச்சியாக இருந்தாலும், குறைந்தது இரண்டு மகாஜனன்களையாவது நிகழ்ச்சி மேடையில் காணமுடியும். அந்த அளவிற்கு மகாஜன மாணவர்கள் படிப்பில் மட்டுமல்ல, கலை, இலக்கிய நிகழ்வு களிலும் ஈடுபாடு கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்றால் அது மிகையாகாது. மகாஜனக்கல்லூரி நூற்றாண்டு மலர் வெளிவந்தபோது, 'மகாஜனா இலக்கிய பாரம்பரியம்' சார்ந்த மகாஜனன்கள் பலரின் விபரங்கள் அதில் பிரசுரிக்கப்பட்டன. கதை, கவிதை, சினிமா, நடனம், இசை, நாடகம், பத்திரிகை, வானொலி என்று பல துறைகளிலும் ஈடுபாடு கொண்ட மகாஜன பழைய மாணவர்களின் பெயர்கள் அதில் இடம் பெற்றிருந்தன. இந்த மகாஜனன் நூற்றாண்டு மலரின் 167 ஆம் பக்கத்தில் படங்களுடன் இடம் பெற்ற இலக்கிய படைப்பாளிகளின் பெயர்களை 'மகாஜனாவின் நவரத்தினங்கள்' என்று முன்னாள் அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் குறிப்பிட்டிருந்தார். அ.ந.கந்தசாமி, மகாகவி உருத்திரமூர்த்தி, அ. செ. முருகானந்தம், எம். பார்வதிநாதசிவம், பி. நடராஜன், ஆ. சிவநேசச்செல்வன், கே. சண்முகலிங்கன், திருமதி. கோகிலா மகேந்திரன், குரு அரவிந்தன் ஆகிய ஒன்பது பேரின் பெயர்களும் புகைப்படங்களுடன் அந்தப் பக்கத்தில் பிரசுரமாகியிருந்தன. ஈழத்துப் புகழ் பெற்ற எழுத்தாளர்களான இவர்களை, இந்த நூற்றாண்டு மலரின் சர்வதேச தொடர்பாளராக இருந்த மகாஜனக் கல்லூரி முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் 'மகாஜனாவின் நவரத்தினங்கள்' என்று கனடா பீல் குடும்ப மன்ற கலை நிகழ்ச்சியில் புகழ்ந்து பாராட்டி இருந்தது குறிப்பிடத்தக்கது. இந்த நிகழ்ச்சியில் கனடாவின் நாடாளுமன்ற முதலாவது தமிழர் பிரதிநிதியான ராதிகா சிற்சபைஈசனும் கலந்து கொண்டிருந்தார். இந்த ஒன்பது எழுத்தாளர்களின் படங்களும் மகாஜனக் கல்லூரியில் பெரிதாகக் காட்சிப்படுத்தப் பட்டிருக்கின்றன. மகாஜனா தந்த இலக்கிய ஆளுமைகளில், அவர் குறிப்பிட்ட ஒன்பது எழுத்தாளர்களில் ஒருவராகக் கோகிலா மகேந்திரனும் இடம் பெற்றிருந்தது, மகாஜனக் கல்லூரிக்கும் தமிழ் இலக்கிய உலகிற்கும் பெருமைக்குரியதே!
கோகிலா மகேந்திரன் அவர்கள் என்னைப் பற்றிக் குறிப்பிடும் போது, 'மகாஜக் கல்லூரி என்ற கலை நிறுவனம் குரு அரவிந்தனிடம் ஒரு பெரிய செல்வாக் கைச் செலுத்தி இருக்க வேண்டும், மகாஜனாவின் இலக்கிய கர்த்தாக்கள் இவரிடம் தாக்கம் செலுத்தி இருக்க வேண்டும்' என்று ஓரிடத்தில் குறிப்பிட்டிருந்தார். கோகிலா மகேந்திரனின் இலக்கிய செயற்பாடு களை அவதானிக்கும் போது, இதே பாராட்டுக்கள் கோகிலா மகேந்திரனுக்கும் சாலப்பொருந்தும் என்று குறிப்பிட்டு, இவரது இலக்கிய, தன்னார்வத் தொண்டுப் பணிகள் தொடர்ந்தும் எம்மினத்திற்குக் கிடைக்க வேண்டும் என வாழ்த்தி, விடைபெறுகின்றேன், நன்றி.

உசாத்துணை:
மகாஜனன் நூற்றாண்டு மலர்
ஜீவநதி சிறப்பிதழ் -162

# வாழ்தல்

அன்பால் உயிரை நிரப்பி வைப்போம்
பண்பால் உலகை வியக்க வைப்போம்
உண்மை நிலையை உணர வைப்போம்
ஊமை நாடகம் விலக்கி வைப்போம்

நன்றெது தீதெது சொல்லி வைப்போம்
நன்மைகள் நூறு செய்து வைப்போம்
நலிந்த மக்களை அரவணைப்போம்
ஞானிலம் பயனுற வாழ்ந்திருப்போம்

தன்னலம் அற்ற சேவை செய்வோம்
தன்னம்பிக்கையே வேதம் என்போம்
தானே நடக்கும் நதி போல
தனித்துவமாய் வாழ்ந்திருப்போம்

தானியப் பயிர் பல நூறு செய்வோம்
தளர்ந்த உடலுக்கு பலம் சேர்ப்போம்
ஏர் பிடிக்கும் ஏழை கரங்கள்
இறையென்று மரியாதை செய்வோம்

பாசம் திசையெங்கும் பரப்பிடுவோம்
பகைமை நிலை ஒழித்திடுவோம்
பாரின் துயரினை துடைக்கின்ற
பேரின் உருவமே கடவுள் என்போம்

வீணே மண்ணில் புரண்டெழுந்து
வெறுமனே கதை பேசித் திரிந்து
இருந்து மடிதல் வாழ்தல் இல்லை
என உணர்ந்தே செயலில் முனைந்திடுவோம்

நான்கு மரத்தை நட்டு வைத்து
நன்றாய் நீர் பாய்ச்சிவிட்டோர்
வீதியெங்கும் நிழல் பரப்பும் - உயர்
விருட்சங்களை நட்டுவைத்தோர்

ஏழைக்கு மகற்கு கல்வி தந்து
வாழை பனை போல் உதவி நிற்போர்
பேணும் கலைகல்வி வளர்த்துவிட்ட - நம்
பேரர்களாம் போற்றிப் பின் தொடர்வோம்

வவுனியாவிலிருந்து
**- கவிஞர் நந்தா -**

வாழ்த்துப்பா
அன்பும், மதிப்பும் மிகுந்த
திரு. R.N. லோகேந்திரலிங்கம் ஐயா

# காப்பு வெண்பா

*அன்னைத் தமிழுக்காய்*
*உழைத்திடும் தொண்டர்...*
*தன்னையே இலக்கியத்துக்காய்*
*அர்ப்பணித்து - நன்றே...*
*பொன்விழாக் காணும் லோகேந்திரலிங்கம் வாழ்கவென*
*பாவியற்றிட...*
*மன்னவா முழுமுதற் கடவுளே விநாயகா காப்பாய்...*

*திருநெல்வேலி யாழ் நாகமணி செல்லம்மா தம்பதியின் ...*
*பெருநற்பேறாய் அவதரித்த மகனார் மனிதநேயமிக்க மனிதர்...*
*விருப்போடு கல்விதனைக் கற்றிட்டே விரும்பியபடியே...*
*முருகன் துணையோடு வாழ்வினில் உயர்ந்து நிற்கும்*
*பத்திரிகையாசிரியர்...*

*மாற்று பத்திரிகைதனை தொடக்கி பணி செய்திட்ட பண்பாளர்...*
*கீற்று சஞ்சிகையின் ஊடே இலக்கியம் வளர்த்திட்ட தங்களின்...*
*ஆற்றல் கண்டு வியந்து மகிழ்வோடு பணிகின்றேன்...*
*ஏற்றம் பெற்று சிறந்திடும் தங்கள் நற்பணி...*

*செந்தமிழ் மொழி வளர்க்க இன்று உதயன் பத்திரிகையாசானாய்*
*தொண்டாற்றும்...*
*எந்தையே உங்கள் இலக்கியப் பணி நன்றே வாழி...*
*சந்திரன் ஒளிபோலே உந்தன் புகழ் பரவிட முத்தென வாழி...*
*வந்தனம் கூறி பாவினை உங்களுக்காய் உவந்தளிக்கின்றேன்*
*நீடுழி நீவிர் வாழி...*

பணிவுடன்,
"சம்பூரணி"
சுஜந்தினி யுவராஜா
திருகோணமலை, இலங்கை
0775403125

# நான் உங்கள் நண்பன்

***** ***** ***** ***** *****

- கவிஞர் தியாரூ

ஏழை ஒருவன் குளிர்காய
என்னை விறகாய் நான்தருவேன்!
எரிந்து முடிந்து சாம்பலின்மேல்
ஃபீனிக்ஸ் போலே நானெழுவேன்!

விரல்கள் தேடும் நேரத்தில்
வீணை யாக நான்வருவேன்!
உயிரில் கலந்து தித்திக்கும்
தேனார் இசையை நான்தருவேன்!

உழைத்துப் படுக்கும் பாட்டாளி
உடலை வருடும் காற்றாவேன்!
வறண்டு கிடக்கும் வாழ்வினிலே
வளமார் இன்ப ஊற்றாவேன்!

ஏங்கும் நெஞ்சம் இளைப்பாற
என்னை நிழலாய் நான்விரிப்பேன்!
தூங்கும் விழிகள் சுகம்காணத்
தோளில் ஏந்தி நான்சுமப்பேன்!

அன்பு செய்வார் கைகளுக்குள்
அணிலைப் போலே நானிருப்பேன்!
நன்றி மறவார் காலடியில்
நேச மலராய் தேன்சுரப்பேன்!

ஒன்று சொல்வேன் உலகத்தீர்!
உங்கள் நண்பன் நானென்பேன்!
இன்று இந்தக் கணத்தினிலே
இனிதே வாழ்தல் வாழ்வென்பேன்!




# MONEY PROBLEMS?
## பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

### நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

### நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.



எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

**416-671-0577**

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

**MISSISSAUGA OFFICE**
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

**SCAROBOROUGH OFFICE**
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

**HEAD OFFICE - TORONTO**
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

**RICHMONDHILL OFFICE**
10255 Yonge St. Suite # 204
Richmondhill

**NORTH YORK OFFICE**
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# பொன்விழா நாயகன் புகழ் வாழிய!



சுருதியின்கண் முனிவரும் பின்னே
தூமொழிப்புல வோர்பலர் தாமும்
பெரிது நின்றன் பெருமையென் றேத்தும்
பெற்றி கண்டுனை வாழ்த்திட வந்தேன்:
பரிதியே! பொருள் யாவிற்கும் முதலே
பானுவே! பொன்செய் பேரொளித்திரளே!
சுருதிநின்னை வணங்கிட வந்தேன்:
கதிர்கொள் வாண்முகம் காட்டுதீ சற்றே, யென
பாரதிவழிநின்று அந்த 'சூரியன்' முகம்வணங்கி
எங்கள் கனடியத் தமிழ் 'சூரியன்' அறிமுகம்
செய்த ஆர்.என்.லோகேந்திர லிங்கம்கலை -
இலக்கிய - ஊடகத்துறையின் பொன்விழா
நாயகனாக வலம்வரும் இவ்வாண்டை
வருக! வருக! என வரவேற்போம்!

'இதனை, இதனால், இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்' - அய்யன் வள்ளுவன்
சொல்லியவாறு இவனைக்
கொஞ்சம் பின்னோக்கிப் பார்ப்போம்.
யாரிவன்?
'நாகமணி தம்பதிகள் மைந்தனிவர்
நாடறிந்த தமிழரிவர்!
பாடுபொருள் பாரதி போல்
சூடாக இயற்றிடுவார்!

ஆடு குட்டி போட்ட கதை - புதுக்
கவிதையாய் இவரெழுதிக்
கண்ணீரை வரவழைக்க
இன்னுமொரு தடவை இங்கு
நான் சொல்லிடுவேன்.

'என் அம்மாவின் வளர்ப்பில்
இரண்டு ஒரு வாரக்குட்டிகளோடு
நின்ற என் வீட்டுத்தாய் ஆடு
நேற்று வீழ்ந்திறந்த போது
அனுதாபம் தெரிவிக்க
அங்கு வந்த சிலரின் ஒழுவரைத் தேடினேன்!
வளர்ந்தபின் எனக்கொன்று - என்று
ஈனுமுன்னே இரந்து கேட்ட
அயல்வீட்டுப் பெண்
அங்கு வரவேயில்லை...........'

ஊருக்குப் பழையவர்
கவிதைக்குப் புதியவர்
எழுதியதோ புதுக்கவிதை
இப்போதும் இக்கவிதை
இலஞ்சம் கேட்போரைத்
தோலுரித்துக் காட்டிவிடும்
இதோ (அவரின்) புதுவரிகள்.....

'அந்தப் பதவிக்கு
அவர்கள் கேட்டிருந்த
ஆகக்குறைவான உயரம் எனக்கில்லை,
வந்திருந்த நண்பன் வழிசொல்ல
ஐயாயிரம் ரூபாய் பணக்கட்டு
ஒன்றின் மேல்
ஏறிநின்ற வண்ணம்
என்னை அளக்க விட்டேன்,
உயரம் அப்போது
சரியாகவிருந்தது!'

பதினேழு வயதினிலே
பாட்டெழுதிப் பழகியவர்
'இதுவரை' எழுதியதும்
ஏராளம்....... ஏராளம்!

ஊரோடும் உறவோடும்
பேர்சொல்லும் பிள்ளையென
தமிழோடு விளையாடும்
புதுவைக்கு நட்பாகி
'சிரித்திரன்'ல் முதன்முதலாய்
வரிவரியாய்க் கவியெழுதி
நிமிர்ந்த நடைக் கவிஞரானார்!

'பிறந்த பதியினும்
சிறந்ததொன்றில்லை'
இவர் பிறந்த பதுளை நகர்,

சிறந்த மொழி தமிழின் மேல்
தீராக் காதல் கொண்டு
போராடும் மலையகத் தொழிலாளர்
இன்னல்கள் துயர்கண்டு
இடித்துரைக்க வீறுகொண்டு
படித்த தமிழ் துணைக்கு வர
'மலையன்பன்' பேர்சொல்லி
பாட்டாளித் தோழரானார்!
பொங்குதமிழர்க்கு
இன்னல் வருமென்றால்
சங்காரம் நிஜமென்று
சங்கொலித்த தாசன்வழி
சிவப்புக் கொடி பிடிப்போர்
சீற்றத்திலும் பங்குகொள்வார்,
சினம்காத்து எழுதி நின்றார்.
'அக்னி'யில் குளித்தேதான்
எழுச்சியுடன் வலம்வந்தார்.

அக்காலப் போர்க்களத்தில், 'எக்காளம்' எழுச்சிபெற
சொற்கோலம் வரைந்துவிட்ட பொற்காலக்
கவிச்சித்தர் புதுவையுடன் கைகோர்த்து - நல்லை
அமுதனுடனும் நட்பாகிக் 'கீற்று', 'மாற்று' என,
புதுக்கவிதைக் கிறுக்கல்களை, 'கல்லூரான்' துணையுடனே
பூரிப்பாய்த் தவழவிட்ட பூந்தமிழ்ப்புலவன் 'மண்பித்து'
மோகத்தால் தாய்மண் பிரியாமல்,
கிழக்கிலங்கைச் சோதரர்கள் சொந்தங்கள் ஆகிவிட,
பழந்தமிழர் புறப்பட்டாய் பல செய்தி
எழுதி நின்றார்!

முற்போக்கு எழுத்தாளர்: முத்தமிழின் உறவினர்கள்
சொற்போர் தொடுப்போர்கள்
மண்மீட்புப் போராளர்
கலைப்பிரிவில் தொடர்பாகி: சிந்தனைகள் சிவப்பாகி
வாசிப்பு பசியெடுக்க யோகநாதன் - பிரபஞ்சன்
மு.மேத்தா - கணேசலிங்கன் - கல்லூரான்
சண்முகம் சிவலிங்கம் - காரியப்பர் - நுஹ்மானுடன்,
கவிஞர் மருதூர் கொத்தனுடன் -
சில்லையூர் செல்வராசன் - சிவத்தம்பி ஆசிரியர் -
பஸில் - காரியப்பர் என்றெல்லாம்,
ஈழத்து - தமிழகத்து - இலக்கியச் செம்மல்களுடன்
இனிதே நட்பாகி இருந் தமிழில் கரும்பெடுத்து
கனிச்சுவையைப் பருகியேதான்,

காலத்தின்
கட்டளைக்குக் கீழ்ப்படிந்து
காடுமலை வான் கடந்து: கடல் கடந்து
கனடியத் தாய்மடியில் இளைப்பாற வந்தமகன்
சூரியன் போற்றுதும்: சூரியன் போற்றுதும்
உதயன் போற்றுதும்: உதயன் போற்றுதும், என
எழுத்தாணி எடுத்தே தான்
விருப்புடன் எழுதி
வெள்ளிதோறும் வெளிவரும்
தண்ணிலவுப் பெட்டகமாம்
தரணி போற்றுகின்ற
தமிழின் வாரஇதழ் தவறாது வெளிவந்து

அகவை இருபத்து ஆறாகித் தொடர்கையிலே
ஆசிரியப் பிரதமரும் 'இதுவரை' தமிழ் எழுதி
ஆண்டு ஐம்பது கலைவிழாக் கோலம் கொண்டு
கலை, இலக்கிய ஊடகத்துறையின் நாயகனாய்ப்
பொன்விழாப் பொலிவு கண்டு
பூரணத் தமிழனாகப் பூமியெங்கும் பவனிவந்து
கனடியக் கலைத்தூதுவராக உயர்ந்துவிட
புதுவிழா நாம் எடுக்க
மதுவுண்ணும் தேனீக்கள் மொய்த்து நிற்கும்
மாலைசூடி அவரை நாம் வாழ்த்திடுவோம்!

**(தொடரும் இதழ்களில் தொடர்ந்து நான் எழுதுவேன் வாழ்க வளமுடன்.)**

**- வீணைமைந்தன்.**

# நான்

நான் தமிழுக்கு இலங்கையன்
நான் அமிழ்துக்கு புலவன்
நான் பிறந்தது குடிசை
நான் உண்டது ஏழ்மை

நான் விண்ணோடிகள் விதைப்பு
நான் முன்னோடிகள் சிவப்பு
நான் இறந்தது மிருகத்தால்
நான் உயிர்த்தது மனைவியால்

நான் மாக்சின் கீற்று
நான் மாவோவின் மாற்று
நான் ஹோசிமின் எளிமை
நான் சேகுவோராவின் மகிமை

நான் சுமந்தது புத்தகம்
நான் சுவீகரித்தது தத்துவம்
நான் கொன்றது வறுமையை
நான் வென்றது பொறுமையை

நான் சாவை வெல்வேன்
நான் சாதீயத்தை கொல்வேன்
நான் சுற்றங்களின் சுடலை
நான் பட்டங்களின் படலை

நான் நிலவை அழைப்பேன்
நான் கனவில் விழிப்பேன்
நான் விருதுகளுக்கு விறகு
நான் பரிசுகளுக்கு துறவு

நான் தோழமைக்கு கரும்பு
நான் ஆளுமைக்கு விருந்து
நான் ஆண்மைக்கு குறும்பா
நான் பெண்மைக்கு வெண்பா

நான் இறைவனிடம் கெஞ்சாதவன்
நான் மனிதனிடப் பந்தானவன்
நான் பூபதி புத்திரன்
நான் வித்யா சித்திரன்

நான் உலகத்தை வெறுப்பவன்
நான் கலகத்தை ஒறுப்பவன்
நான் எனக்குள் மனிதமானவன்
நான் உனக்குள் புனிதமானவன்

நான் சாவை வெல்பவன்
நான் புகழை சொல்பவன்.

**~ நல்லை அமிழ்தன்.**
**யாழ்ப்பாணம்.**



(56.ம் பக்கத் தொடர்ச்சி)

# தனிமை

காலத்தில் பல இழப்புக்களைக் கண்டு துவண்டு போகாத இதயங்கள். இந்த தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்தினாலா? துவண்டு போகப் போகின்றன. வாழ்க்கை என்பதே போராட்டத்தின் வடிவந்தானே. சந்தின் இரு முனைகளிலும் நிறுத்தி வைக்கப்பட்ட காவல்துறையினர், வேறு இனத்தையும்; வேறு தனிமையையும் சேர்ந்த மக்கள் என்பதால், கண்களை மூடியே இருந்தனர். கொட்டகைக்குள் பல உயிர்கள் உணவுக்குப் போராடி, வெற்றியளிக்காமல் இப்போது உயிருக்குப் போராடுகின்றன. ஒருசில உயிர்கள் போராட்டத்தை நிறுத்தி உலகத்திலிருந்து விடை பெற்றன. அந்தப் பகுதியில் இப்போது பிண வாடையும் வீசத் தொடங்குகின்றது. சிற்சில நேரங்களில் ஓரிரு நோய் காவுகை வண்டி உள்ளே வந்து போகும். முகக்கவசம், உடற்கவசம் - அணிந்த ஓரிரு மனிதர்கள் அந்தப் பகுதிக்கு மேற்பார்வை செய்ய வருவதுண்டு. அவர்கள் இறந்த உடல்களையே கணக்கெடுப்பதில் தீவிர கரிசணைக் காட்டினார்கள். உணவின்றி வாடும் சிறுவர்களின் அடைக்கலம் கழிவு வாய்க்கால்தான், யாரோ ஒருவர் மினுவாங்கொடையிலிருந்து இந்தப் பகுதிக்கு வந்துப் போனாராம். அன்று முதல் தனிமையாக இருந்த பகுதி தனிமைப்படுத்தல் ஊரடங்கு பகுதியாக மாறியது.

ஊடகவியலாளர்கள் ஒவ்வொரு அரசியல் தளத்தில் இயங்கிக்கொண்டு, அந்த பிரதேசத்து மக்களின் தனிமையைக் கண்டும் காணாமல் இருந்தனர். பேருந்துகளின் போக்குவரத்தும் தொடரூந்துகளின போக்குவரத்தும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளமையால், அந்தப் பகுதியிலிருந்த உப்பு மாங்காய், அவித்த சோளம், கச்சான், வடை, குடிநீர் போத்தல் - வியாபாரம் எல்லாம் தடைப்பட்டன. அன்றாடம் உழைத்து வாழ்பவர்களிடம் ஏது சேமிப்பு, அப்படி சேமிப்பு இருந்தாலும் வெளியில் எங்கே போவது.?

நவீன உலகில் நகரத்துக்குள் சந்து கிராமங்கள் போல பல கிராமங்கள் தோன்றத்தான் செய்கின்றன. நீங்கள் நினைக்கலாம் இது கற்பனைக் கிராமம் என்று என்றாவது ஒரு நாள் அங்கு சென்று ஒரு நாள் முழுவதும் இருந்து பாருங்கள் உங்களுக்குத் தெரியும் அவர்களின் வலியும் வேதனையும். இலவசக் கல்வி இப்படியான சிறுவர் - சிறுமியரையா எமக்கு உருவாக்கிக் கொடுக்கின்றது?.

டிலுக்ஷன் தொடரூந்தில் ஒரு கச்சான் வியாபாரி. வயது பத்து அல்லது பன்னிரண்டிற்கு மேல் போகாது. இவனது மூத்த சகோதரிகள் இருவர் இறந்தே பிறந்தனர், மூத்த சகோதரர்கள் இருவர் பிறந்தே இறந்தனர். தகப்பன் சுண்டல் வண்டி வைத்திருக்கான்; கட்டுப்பண வண்டிதான். காயத்திரி, தர்ஷன் (பெற்றோர், ஆறுமுகம்,வசந்தா (டிலக்ஷினின் பாட்டன், பாட்டியர்). தாயார் காயத்திரி வீடு வீடாக பிள்ளைப் பேறு பார்ப்பதில் கைதேர்ந்தவள். தர்ஷன் எவ்வாறு இரவு முழுவதும் போத்தலுக்கு அடிமையோ, அவ்வாறே காயத்திரி நுண்கடனுக்கு அடிமை. குடிலில் மூன்று பேர் உழைத்தும் உய்வில்லை; ஒழுங்கான உணவில்லை. சாவகச்சேரி நகரில் வாழும் போது, தாத்தா ஆறுமுகத்தின் உதவியுடன், டிலுக்ஷன் ஐந்தாம் தரம் வரை கல்வி கற்றான். ஓரளவுக்கு எழுத வாசிக்க தெரிந்திருந்தான். அது அவனுக்குச் சக வியாபாரிகள் மத்தியில் சற்று கௌரவத்தைக் கொடுத்தது. தர்ஷனுக்குக் கட்டுப்பணம் போக ஒரு நாளைக்கு ஆயிரம் மிஞ்சும் அதில் போத்தலுக்குப் போக, ஐந்நூறு தேறும். இது வழமை. உடல் சுகவீனமுற்றால் அதுவும் இல்லை. காயத்திரி ஏதோ ஒரு 'இன்சூரன்ஸ்' செய்திருக்காள். ஒவ்வொரு மாதமும் இருபதாம் திகதி 'இன்சூரன்ஸ்' காரன் ஒருவன் அவளின் கொட்டகைக்கு முன் மோட்டார் சைகிளில் 'கெல் மட்'டுக்குள் 'போன்' உடன் நிற்பான். அவளின் பெயரில் ஒரு வங்கிப் புத்தகம் கூட இல்லை. பகுதி நேர 'இன்சூரன்ஸ்' காரன் மகாண சபை உறுப்பினர், மாநகர மேயர் - பல பதவிகள் வகித்தவன்.

டிலுக்ஷன் சற்று வாட்ட சாட்டமான பையனாக அந்த சந்து குடியிருப்பில் காணப்பட்டான். தொடரூந்தில் வியாபாரம் செய்யும் போது, கிழவர்கள் பலரும்; இளைஞர்கள் பலரும் அவனது அந்தரங்க இடத்தைத் தொட முற்படுவார்கள். அவன், அவற்றையெல்லாம் பொருட்படுத்தாமல் வியாபரத்தில் மூழ்கியிருப்பான். தாத்தா ஆறுமுகத்தின் ஆலோசனை இவனை ஓரளவு செம்மைப்படுத்தியது.

இங்குள்ளவர்கள் உழைப்புக்குப் போய், மூன்று மாதங்களாகி விட்டன. டிலுக்ஷனின் தாத்தாவும் பாட்டியும் உயிருக்குப் போராடினார்கள். பெற்றோர் உணவுக்காக வாடினார்கள். அப்போது எந்த சிறுவனுக்கும் தான் போகும் பாதை சரியாகவே தெரியும். மேல் மாடியின் மூன்றாவது தட்டில் தனிமையில் வாழும் பணக்காரக் கிழவனின் ஞாபகம் வந்தது. சிறுவன் மேலே மேலே அண்ணார்ந்துப் பார்கின்றான். தாயும் தகப்பனும் அனர்த்தும் அரவம் அவனது காதுகளில் ஓயாது ஒலிக்கின்றது. காவற்துறையினர் அலுப்பில் சிறிது கண்ணயர்ந்து விட்டனர். பணக்காரக் கிழவனின் சைகையைக் கண்டுவிட்டான், டிலுக்ஷன். அன்று தெருவிளக்குகள் எல்லாம் திட்டமிட்டது போல அணைந்து விட்டன. 'கும்'மிருட்டு உதிரியாக ஓரிரு மின்மினிப்பூச்சிகள் மட்டும் சந்துப் பகுதியில் வட்டமிடுகின்றன. சந்திரன் மேகக் கூட்டத்திற்குள் யாரையோ பிடிக்கப போறவன் போல வேகமாக ஓடுகின்றான். டிலுக்ஷன் காவற்துறையினருக்கு கண்களில் மண் தூவி விட்டான். பாணக் கார கிழவனின் வாயிற் கதவு திறக்கின்றது. சிறுவன் உள்ளே நுழைகின்றான்.

இரண்டு நாட்களும் அந்த சிறுவனுக்கு உணவு போதுமான அளவு கடைத்தாலும் குடிலுக்கு உணவு கொண்டு செல்வதற்காக, பணக்கார கிழவனின் 'ஹோமோஸெக்ஷ்வோலட்டி' யைப் பொறுத்துக்கொண்டான். சிறுவன் மூன்றாம் நாள் அதிகாலை உணவுப் பொதிகளுடன் கீழே இறங்குகிறான். சந்து வீதியில் யாரையும் காணவில்லை; குடில்கள் இருந்த இடத்தையும் காணவில்லை. வீதி துப்பரவாக இருந்தது. மினுவாங்கொடை மனிதன் அந்த சந்து வீதியில் அதே வியாபாரத்தில். சிறுவன் கொண்டு வந்த உணவு பொதிகள் காகத்திற்கு இரையாகின. நாளுக்கு நாள் பல நகரங்கள் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டத்திற்கு உள்ளாகினாலும் சந்து பகுதியைப் போல் அழிக்கப்படுவதில்லை. சந்துப் பகுதியில் கடைசி வரையும் ஒரு நோயாளியும் இனம் காணப்படவில்லை.

சந்திலிருந்து - இல்லை... இல்லை... இப்போது குறுக்கு வீதி – புதிதாக பதாதை முளைத்துள்ள பகுதியிலிருந்து - விடுதலையாகி மீண்டும் அந்த பணக்காரக் கிழவனின் இல்லத்திற்குள் நுழைகின்றான். மீண்டும் சிறுவனின் உடல் வேதனைப்படுகிறன்றது. அந்த வேதனை இறந்து போன தமது உறவினர்களையும் இனத்தவர்களையும் நினைத்து அல்ல பணக்காரக் கிழவனுடன் தனது தனிமையைக் கழிப்பதை எண்ணி.

என்னன்னமோ தனிமைப்படுத்தல் சமூக இடைவெளி, தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம், ஒருவரை ஒருவர் தொடாமை, முகக் கவசம,, அடிக்கடி கை கழுவுதல், தனித்து வாழ்தல் பற்றியெல்லாம் சொல்லுகிறார்களே! இதுதான் இப்போதைய உலகத்தின் தனிமை

– தனிமைப்படுத்தல் நியதி.

முற்றும்.

# The Immune System

**By: Akshay Jeyabalasingham**

The narrative of the immune system starts with the tale of life itself, practically 3.5 billion years ago, in some bizarre puddle on an unfriendly and tremendous void planet. We don't have the foggiest idea what these first living creatures did, Or what their arrangement was, yet we realized they very soon started to be hateful toward one another. In the event that you think life
is a struggle since you really want to rise and shine promptly toward the beginning of the day to prepare yourself for the afternoon, or in light of the fact that your burger is just luke-warm, the first living cells on Earth would like a word with you. As they sorted out some way to change the chemistry around them into stuff they could use while additionally getting the energy expected to
continue onward, a portion of the primary cells pursued a faster route.

What's the point of doing all the work yourself if you can just steal from someone else? Now, there were a number of different ways to do that, like swallowing someone else whole, or ripping holes into them and slurping their insides. But this could be dangerous, and instead of getting a free meal, you could end up as the meal of your intended victim, especially if they were bigger
and stronger than you. So another way to get the prize with less of the risk might be to just get inside them and make yourself comfortable. Eat what they eat and be protected by their warm embrace. KInd of beautiful, if it wasn't so horrible to the host.

As it became a valid strategy to become good at leaching from others, it became an evolutionary necessity to be able to defend yourself against the leeches. And so microorganisms competed and fought each other with the weapons of equals for the next 2.9 billion years. If you had a time machine and went back to marvel at the wonders of this competition, you would be pretty bored, as there was nothing big enough to see other than a few faint films of bacteria on some wet rocks. Earth was a pretty dull place for the first few billion
years. Until life made, arguably, the single largest jump in complexity in its history. We don't know what exactly started the shift from single cells that were Immune mostly on their own to huge collectives working closely together and specializing. Around 541 million years ago, multicellular animal life suddenly exploded and became visible. And not only that, it became more and more diverse, extremely quickly. This, of course, created a problem for our newly evolved ancestors.
For billions of years the microbes living in their tiny world had competed and
fought for space and resources in every ecosystem available. And what are animals really to bacteria and other critters if not a very nice ecosystem?

An ecosystem filled top to bottom with free nutrients. So from the very start intruders and parasites were an existential danger to the existence of multicellular life. Only multicellular beings that found ways to deal with this threat would survive and get the chance to become even more complex. Unfortunately, since cells and tissues do not really preserve well over hundreds of millions of years, we can't look at immune system fossils. But through the magic of science we can look at the diverse tree of life and the animals that are still around today and study their immune systems. The farther separated two creatures are on the tree of life and still share a trait of the immune system, the older that trait must generally be.
So the great questions are: Where is the immune system different, and what are the common denominators between animals?
Today virtually all living beings have some form of internal defense, and as living things become more complex, so do their immune systems. We can learn a lot about the age of the immune system by comparing the defenses in very distantly related animals. Even on the smallest scale, bacteria possess ways to defend against viruses, as they can't get taken over without a fight. In the animal world, sponges, the most basic and oldest of all animals, which have existed for more than half a billion years, possess something that probably was the first primitive immune response in animals. It is called humoral immunity. "Humor," in this context, is an ancient Greek term that means "bodily fluids." So humoral immunity is very tiny stuff, made out of proteins, that floats through the bodily fluids outside of the cells of an animal. These proteins hurt and kill microorganisms that have no business being there.

This typeof defense was so successful and useful that virtually all animals around today have it, including you, so evolution did not phase this system out, but rather, made it crucial to any immune defense. In principle, it hasn't changed in half a billion years. But this was only the start.
Being a multicellular animal has the perk of being able to employ many different specialized cells. So it probably did not take animals too long, in evolutionary terms, to get cells that did just that: Specialize in defense. This new cell-mediated immunity was a success story right from the start. Even in worms and insects we find specialized soldier immune cells that move freely through the tiny critter bodies and can fight intruders head-on. The further up we climb the evolutionary tree, the more sophisticated the immune system becomes. But already, on the earliest branch of the vertebrate part of the tree of life, we see major innovations: The first dedicated immune organs and cell training centers, together with the emergence of one of the most powerful principles of immunity--the ability to recognize specific enemies and quickly produce a lot of dedicated weapons against them, and then to remember them in the future!

Even the most primitive vertebrates, jawless fish, who look ridiculous, have these mechanisms available to them. Over hundreds of millions of years, these defense systems got more and more sophisticated and refined. But in a nutshell, these are the basic principles, and they work well enough that they were probably around in some forms around half a billion years ago. So
while the defenses you have at your disposal today are pretty great and developed, the underlying mechanisms are extremely widespread and their origins reach back hundreds of millions of years. Evolution did not have to reinvent the immune system over and over again--it found a great system and then refined it.
Which finally brings us to humanity. And to you. You get to enjoy the fruits of hundreds of millions of years of immune system refinement. You are the height of immune system development Although, your immune system is not really inside of you. It is you. It is an expression of your biology protecting itself and making your life possible. So when we are talking about your immune system, we are talking about you. But your immune system is also not a singular thing. It is a complex and interconnected collection of hundreds of bases and recruitment centers all over your body. They are connected by a superhighway, a network of vessels, similarly vast and omnipresent as your cardiovascular system. Even more, there is a dedicated immune organ in your chest, as big as a chicken wing, that gets less efficient as you age. On top of organs and infrastructure, dozens of billions of immune cells patrol either these superhighways or your bloodstream and are ready to engage your enemies when called.
Billions more sit guard in the tissue of your body that borders your outsides waiting for invaders to cross them. On top of these active defenses you have other defense systems made up of quintillions of protein weapons that you can think of as self-assembling, free-floating land mines.

Your immune system also has dedicated universities where cells learn who to fight and how. It possesses something like the largest biological library in the universe, able to identify and remember every possible invader that you may ever encounter in your life. At its very core, the immune system is a tool to distinguish the other from the self. It does not matter if the other means to harm you or not. If the other is not on a very exclusive guest list that grants free passage, it has to be attacked and destroyed because the other might harm you. In the world of the immune system, any "other" is not a risk worth taking. Without this commitment you would die within days. And as we will learn later, sadly, when your immune system under- or overcommits, death or suffering are the consequences.
While identifying what is self and what is other is the core, it is not technically the goal of your immune system. The goal above all things is maintaining and establishing homeostasis; the equilibrium between all the elements and cells in the body. Something that can't be overemphasized enough about the immune system is how much it tries to be balanced and how much care it puts into calming itself down and not overreacting. Peace, if you so want a stable order that makes being alive pleasant and easy. The thing that we call health. The basis for a good and free life where we can do what we desire, not held back by pain and disease.

How crucial health is becomes most apparent when it is missing. Health is really an abstract concept because it describes the absence of something. The absence of suffering and pain, the absence of limitations. If you are healthy, you feel normal, you feel right. Once you witness your health go away, even for a brief time, it is hard to forget how fragile you are and how much you are living on borrowed time. Disease is an unavoidable fact of life. If you have been lucky, you have not had to face it up to this point. If you or one of your loved ones has had to deal with it already, you know that nothing is more elemental for a pleasant life than being healthy. To the immune system, this means homeostasis. While the battle to stay healthy is ultimately futile and
will be lost in the end, we still fight it to carve out more years, months, days, and hours. Because, overall, it is pretty good to be a human and it is worth it to have this experience a little bit longer.
But health is a hard thing to maintain because every day of your life you are in contact with hundreds of millions of bacteria and viruses that would love to make your body their home, as we saw in those single-celled organisms billions of years ago. For a microorganism you are an ecosystem waiting to be conquered. An endless continent full of resources, breeding grounds, and opportunities to thrive, a really nice home. Arguably at some point they will succeed, as when you die, the decomposition of your body will be immensely sped up by an army of unhinged microbes no longer kept in check by your defenses.
And not only do you need to worry about the plethora of life trying to get inside, but also about your own misguided self that can cancel the social contract of the body: Cancer. Making sure that doesn't happen is one of the most important jobs of your immune system. In fact, while you were reading, somewhere inside you a young cancer cell was quietly eliminated by your immune cells.
But the part meant to protect you also can go wrong and be corrupted. When it is tricked, your immune system can help diseases spread or protect cancer cells from detection. Or if the system is out of tune or flawed, it can get confused and decide that the body itself is the enemy.
It can decide that self is other and literally start attacking the cells it exists to protect, resulting in any number of autoimmune diseases that need constant calming by medication, sometimes with harsh side effects.

Or take allergies, which are a very intense reaction of your immune system against things it should not be concerned about. An allergic shock shows strikingly how truly powerful your defense system is and how horribly it can go wrong: it may take a disease days to kill you- your immune system can do so in minutes.
Oh, and even if your immune system works as intended, it can be as much of a burden as it is helpful; Many of the unpleasant symptoms you feel when you are sick are the consequences of your immune system doing its job when activated--in some diseases the most crushing damage or even death are caused by an unhinged response to an intrusion. For example, many deaths from COVID-19 come from the immune system doing its job with too much enthusiasm.
The collateral damage your defense networks dish out against you can build up over time and today it is thought that many deadly diseases start with your immune system working as intended. So as important as it is for your health to have an immune system that is fast and brutal, it is just as important to keep it in check and prevent it from becoming unhinged and destructive. Just like in the human world, if you need to go to war, you at least want your wars to be over quickly and end with a clean victory. You don't want decades of occupation or conflict that eat up resources and leave destroyed infrastructure.

So in the hands of your immune system lies an enormous responsibility to keep you well for as long as possible. Even if the battle will certainly be lost in the end, it matters to you today, right now, that it is fought well and with the necessary responsibility.
To summarize, distinguishing between self and other is core, homeostasis is the goal, and there are seemingly infinite ways for it to all go wrong.
What makes the immune system so fascinating is that all of this complex work has to be done by parts that are mindless and, individually, pretty dumb, And yet they are able to coordinate and react to dynamic and quicky developing situations, imagine the Second World War happening, but ten times as large and without generals. Only mindless immune soldiers on the around trying to figure out if they need tanks or fighter jets and where they need to go. And it all happens within days. That's what it is like for you to battle even a common cold.
So now let us discover your immune system, so the next time you step into the shower, annoyed about the cold symptoms you are feeling, you can at least pause for a moment to appreciate what is going on inside you before you go back to being annoyed.

# 50 ஆண்டு கால கலை, இலக்கிய, ஊடக, மற்றும் சமூகப் பணியை கொண்டாடும் நட்பின் நாயகன் ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஆரம்பகால, ஆயுட்கால அங்கத்தவரும், முன்னாள் தலைவரும், தற்போதைய செயலாளருமான நண்பர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் 50 ஆண்டு கால கலை, இலக்கிய, ஊடக, சமூக சேவையைப் பாராட்டிக் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பாகவும், எனது குடும்பத்தின் சார்பாகவும் முதற்கண் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

புலம்பெயர்ந்த மண்ணில் ஒரு வாரப்பத்திரிகையை 26 ஆண்டுகள் தொடர்ந்து நடத்துவது என்பது இலகுவான காரியமல்ல, எத்தனையோ விதமான சவால்களை எதிர்கொண்டு ஊடகத்துறையில் தொடர்ந்தும் பயணிப்பது என்பது மிகவும் கடினமானது என்பதை நான் அறிவேன். தொடக்க காலத்தில் பத்திரிகையை அச்சேற்றுவதற்கான கணனி மென்பொருட்கள் போதிய அளவு இருக்கவில்லை. எனவே ஒரு செய்தியை முதலில் ரைப் செய்து அப்புறம் அதை வெட்டி ஒட்டித்தான் பிரதிகள் எடுக்க வேண்டியிருந்தது. ஆனாலும் வாராவாரம் தவ-றாமல் பத்திரிகை இன்றுவரை வெளிவந்து கொண்டே இருக்கிறது.

கனடாவுக்குப் புலம் பெயர்ந்த புதிதில் எனது சிறுகதைகள், தொடர் நாவல்கள், பயணக் கட்டுரைகள் என்று கனடிய வாசகர்களை எனக்குத் தேடித்தந்தது உதயன் பத்திரிகைதான். சிறுகதைப் போட்டியில் அறிமுகமே இல்லாத எனக்குத் தங்கப் பதக்கம் தந்து என்னைக் கௌரவித்த பெருமையும், அதன் பின் நடந்த உதயன் சிறுகதைப் போட்டிகளுக்கு என்னை நடுவராகத் தெரிவு செய்த பெருமையும் உதயன் பத்திரிகை ஆசிரியரான அவருக்கே உரி-யது. 1000 மாவது இதழில் "குமுதினி" என்ற எனது குறுநாவலையும் வெளியிட்டு என்னைக் கௌரவப்படுத்தி இருந்தார்.

சமீபத்தில் இலங்கையில் இருந்து வெளிவரும் ஞானம் இதழ் நடத்திய சர்வதேச இலக்கியப் போட்டியில் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தைச் சேர்ந்த உதயன் ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் (எதுவரை), சிந்தனைப்பூக்கள் எஸ். பத்மநாதன் (சிந்தனைப்பூக்கள்), எழுத்தாளர் குரு அரவிந்தன் (அம்மாவின்பிள்ளைகள்) ஆகிய மூவருக்கும் சிறப்புப் பரிசுகள் கிடைத்திருந்தன. சர்வதேசப் போட்டியில் எமது இணையத்தைச் சேர்ந்த மூவர் பரிசு பெற்றதை ஒரு சாதனையாகவே கருதுகின்றேன்.



சிறந்த கவிஞரும், எழுத்தாளருமான நண்பர் லோகேந்திரலிங்கம், மலையன்பன் என்ற பெயரிலும் எழுதி வருகின்றார். விழாக் காணும் இச்சந்தர்ப்பத்தில் அவரது கலை, இலக்கிய, ஊடக, சமூக சேவைகளைப் பாராட்டி, எனது குடும்பத்தின் சார்பாகவும், கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் சார்பாகவும் அவரையும், அவரது குடும்பத்தினரையும் வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். வாழ்க வளமுடன்!

**குரு அரவிந்தன்**
**தலைவர், கனடா தமிழ் எழுத்தாளர் இணையம்.**




## அன்னையை மறப்பேனோ? மறந்தால் அருந்தமிழை மறப்பேனே

*தாய் பிறந்த மண்: தந்னத நடந்த மண்:*
*வாயிலதை நான்போட்ட நாளில் வழித்தெடுத்து*
*"ஆயிரந்தான் சொன்னாலும், என்னுடைய ராசாத்தி*
*தான் நினைச்சதைத் தான் செய்வாள்:*
*வாவந்து முகங் கழுவு: வெண்போங்கல் சோறுண்ணு" என்றுசெல்லி*
*பாயிரம் பாடுமொரு நிதானத்தில் நின்றுகொண்டு,*
*பாசமுத்தம் தந்து எந்தன் தவறுகளைத் திருத்திடுவாள்:*
*தாயவள் தன்பேரன்பு, தணியாத நூல் தாகம், தேர்ந்த வார்த்தைத்*
*தூய நெறி, துயரினிலே தளராத துணிந்த மனம், பொறுமையெல்லாம்*
*சோராமல் எந்தனுக்கும் சோதரர்க்கும் தந்துநின்ற*
*அன்னையை மறப்பேனா? மறந்தால்*
*அருந்தமிழை மறப்பேனே*

*பேசித் தெரியாது: பிரம்பு வரும் என்று வார்த்தை*
*வீசத் தெரியாது; அவள் விழியசைவில் பொருள் இருக்கும்:*
*ஊசிமுனை அளவு உடல்வருத்தம் நாமுற்றால்*
*உயிரில் துடித்து நின்று, ஊண் மறந்து - எம்முகத்தை*
*வாசித்து, வாசித்து அடுக்கடுக்காய்ப் பணிபுரிவாள்:*
*நேசம் வாயால் செல்வதில்லை: அவள் நெஞ்சில் ஊற்றெடுக்கும்:*
*பாசச் செயல்கள் பல புரிவாள்: புரிகின்றாள்:*
*பரம்பொருளே, இந்தப் பேரற்புதத்தின் மணி வயிற்றில் வந்தோம்:*
*வாசமலர் எல்லாம் தினந்தூவி வாழ்த்தியுமை - ஆழ*
*யோசித்து நன்றி நன்றியென, நாம்ஐவர் தினம்வாழ்த்தும்*
*அன்னையை மறப்பேனோ? மறந்தால்*
*அருந்தமிழை மறப்பேனே*

*மண்ணள்ளி மடிநிரப்பி, மலர்கோர்த்து விளையாடி,*
*பண்பாடிப் பள்ளிக்கும் போகும் வழியினிலே*
*வெண்மேகம், எழு கதிரோன், விரிகின்ற தாமரைப்பூ*
*கண்கலங்கும் ஓர் சிறுமி, காலில்லாப் போர்வீரன்,*
*தண்ணீர் தளம்புகின்ற தெருவோரத் தொரு கிணறு,*
*வண்ணப் பூச்செடிகள், வனப்புமிக்க விருட்சங்கள்,*
*திண்ணமாய் அறிவுசொல்லும் திருக்குறளில் சிலகீற்று*
*எண்ணுக் கணக்கில்லை "இதைப் பார்: அதைக் கேள்" என்று*
*எண்ணத்தில் நாமுயர இனியபண்பை ஊட்டி நின்ற*
*அன்னையை மறப்பேனோ? மறந்தால்*
*அருந்தமிழை மறப்பேனே.*

*போர்தின்ற பூமியிலே, பிறந்து வளர்ந்தவர் நாம்*
*யாரென்று இல்லை, அனைவருக்கும் இழப்புகள் தான்:*
*பாரெல்லாம் கைவிட்டுப் பலஇடர்கள் சூழ்கையிலும்,*
*ஊரெல்லம் போற்ற உத்தமராய் வித்தகராய்*
*பேரெடுக்கப் பிள்ளைகளை வளர்ப்பதையே தவம் ஆக்கி*
*சோர்விலா துழைத்து நின்ற சீமாட்டி: பெருமாட்டி:*
*சீராட்டி அவளெம்மைச் செம்மையாய் வளர்த்த கதை*
*பாராட்டிப் பேசுதற்குப் பாமலர்கள் கொண்டு வந்தும்*
*"நாரெடுத்து நட்சத்திரம் கோர்ப்பவர் யார்?" எனச்சோரும் நாம்*

*அன்னையை மறப்பேனோ? மறந்தால்*
*அருந்தமிழை மறப்பேனே*

*முத்துப்போல் கையெழுத்து: முகத்தில் ஒரு புன்சிரிப்பு*
*சத்தங் காட்டாத அஹிம்சைக் குடும்பநெறி*
*நித்தம் அவள் வோழ்ந்த நீதிநெறிப் பண்புகளை*
*பத்திரமோய்ச் சேர்த்து எடுத்தோல் பலப்பலவோய் முனளத்தெழும்பும்*
*உத்தமராய்த் தான் பெற்ற ஒவ்வொரு பிள்ளையையும்*
*வித்தகங்கள் பலசேர தன்வாழ்வு தந்த தெய்வம்:*
*"இத்தனையும் செய்தீரே, எப்படி அம்மா?" தெய்வம்:*
*"என்னத்தைச் செய்தன் பிள்ளை? என்னையே கேட்டுநிற்கும்*
*அன்னையை மறப்பேனோ? எனில்*
*அருந்தமிழை மறப்பேனே*

*தந்தை அறிவாசான்: தனித்துவங்கள் உடையவர்தன்*
*சிந்தை முழுதாகச் சமூகம்: சீர்திருத்தம்:*
*விந்தைதான் : நாற்பதுக்கும் மேற்பட்ட பாடநூல்கள்:*
*வந்தாரை வரவேற்று வாழவைக்கும் அன்புநெறி - சோம்பலில்*
*குந்தி அறியார் குறுக்குவழி போனதில்லை*
*பந்த பாசம் வீட்டுக்கும் நாட்டுக்கும் சரிசமம் தான்*
*இந்தச் சீமாட்டி எங்கள் ஐந்து பேரையுமே*
*சந்தத் தேனொழுகும் செந்தமிழ்ப் பாக்களைப் போல்*
*நிந்தை எவரும் சொல்லா நிறைகுடமாய் வளர்த்தெடுத்தாள் அநத்*
*அன்னையை மறப்போனா? மறந்தால்*
*அருந்தமிழை மறப்பேனே*

*சுற்றமெல்லாம் சேர்ந்திருக்கச் சுகித்திருந்த நன்னாடு*
*கற்ற பள்ளி, ஓடிவந்து கால்நனைத்த கடல் அலைகள்,*
*உற்ற முதல்காதல், உயிர் அசைத்த கடிதங்கள்*
*சற்றும் குறைகாணாச் சகோதரங்கள், சிநேகிதங்கள்,*
*குற்றமற்ற வாழ்வினிலே குதூகலிக்கும் குடும்பமலர்*
*பற்றுறுதி மிகக்கொண்டு பிரார்த்திக்கும் திருக்கோவில்,*
*தொற்றுக்குள் தப்புவிக்கும் தொகைதொகையாய் வக்ஸின்கள்,*
*"சிற்றி" எல்லாம் மாறிமாறி வாழ்ந்திட்ட கடந்தகாலம்*
*மற்றபிற கருத்தெல்லாம் நான்மறக்க நினைவெல்லாம்*
*வற்றிப் போம் பொல்லா மறதிநோய் வந்தாலும் - என்னை பெற்ற*
*அன்னையை மறப்பேனோ? நான் மறவேன்*
*நான் மறவேன்: நான் மறவேன்:*

**நன்றி வணக்கம்** **குணாளினி தயாநந்தன்**
(சாரங்கா)

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் வரிசையில் நின்ற மக்கள் எரிவாயு கிடைக்காமையால் முரண்பாடு



மன்னாரில் எரிவாயு விநியோகிக்கப்படுவதாக கிடைத்த தகவலையடுத்து மன்னார் வைத்தியசாலை பிரதான வீதியில் உள்ள லிற்றோ எரிவாயு முகவர் நிலையத்திற்கு முன்பாக பொது மக்கள் ஒன்று கூடியதால் குறித்த பகுதியில் முரண்பாடு தோற்றம் பெற்றதுடன் போக்குவரத்து தடங்களும் ஏற்பட்டது.

ஞாயிற்றுக்கிழமை (22) அன்று ஒரு தொகுதி எரிவாயு சிலிண்டர்கள் மன்னார் லிற்றோ எரிவாயு முகவர்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வெளிவந்த தகவலை தொடர்ந்து மக்கள் நீண்ட வரிசையில் எரிவாயு சிலிண்டர்களுடன் காத்திருந்த போதிலும் எரிவாயு சிலிண்டர்கள் முகவர் நிலையங்களுக்கு கிடைக்கப்பெறவில்லை.

இந்த நிலையில் வரிசையில் நின்ற மக்கள் மத்தியில் வாய்த்தர்க்கம் மற்றும் முரண்பாடு தோற்றம் பெற்ற நிலையில் அப்பகுதியில் பதற்ற நிலை ஏற்பட்டது.

இந்த நிலையில் குறித்த பகுதிக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்ட மன்னார் பிரதேச செயலாளர் ம.பிரதீப் பொது மக்களிடம் கலந்துரையாடி பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்ததுடன் எரிவாயு விற்பனையின் போது வீண் முரண்பாடு தோற்றம் பெறாத வகையில் எரிவாயு சிலிண்டர்கள் முகவர்களுக்கு கிடைக்கப்பெறும் பட்சத்தில் அதை விநியோகிக்க வேண்டாம் எனவும் நாளைய தினம் (23) உரிய தரப்பு மற்றும் உயர் அதிகாரிகளிடம் கலந்துரையாடிய பின்னர் பொது தீர்மானத்தின் அடிப்படையில் விநியோக நடவடிக்கையை முன்னெடுக்குமாறு எரிவாயு உள்ளூர் விநியோகஸ்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.



நீண்ட நேரம் எரிவாயுக்காக வரிசையில் காத்திருந்த மக்கள் வெற்று சிலிண்டர்களுடன் ஏமாற்றத்துடன் திரும்பியதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

- மன்னார் நிருபர் (

# மன்னாரில் எரிபொருள் நிரப்புவதற்கும் எரிவாயு பெறுவதற்கும் நீண்ட வரிசை



மன்னாரில் திங்கட்கிழமை (23) அதிகாலை தொடக்கம் எரிபொருள் நிரப்புவதற்கும் எரிவாயுவை பெற்றுக் கொள்வதற்கும் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

அன்று அதிகாலை லிற்றோ நிறுவனத்தின் ஒரு தொகுதி எரிவாயு சிலிண்டர்கள் குறிப்பிட்ட சில விநியோகஸ்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்ட நிலையில் அவற்றை பெறுவதற்கு நேற்று நள்ளிரவும் முழுவதும் மக்கள் வரிசையில் நின்று அதிகாலை பெற்று சென்றனர்.

அதே நேரம் மன்னாரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அதிகளவானவர்கள் எரிபொருள் பெறுவதற்காக வரிசையில் காத்திருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக உள்ளது.



தொடர்ச்சியாக எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மற்றும் எரிவாயு விநியோக நிலையங்களில் முரண்பாடுகள் ஏற்படாத வகையில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

- மன்னார் நிருபர்

# இலங்கையில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் கோடீஸ்வரர்களாக இருந்தும் வாக்களித்த மக்களுக்காக ஒரு ரூபாய் கூட தானம் செய்யவில்லை

## மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் கேள்வி



இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நிதி நெருக்கடி காரணமாக இலங்கை மக்கள் அன்றாட உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொள்வதற்கு பாரிய சிரமங்களை எதிர்நோக்கி உள்ளார்கள். ஆனால் இலங்கையில் உள்ள 225 பாராளுமன்ற உறுப்பினர்களும் கோடீஸ்வரர்களாக இருக்கின்றார்கள். அவர்களால் ஏன் ஒரு ரூபாய் கூட தங்களுக்கு வாக்களித்த மக்களுக்கு தானமாக வழங்க அவர்கள் முன்வரவில்லை என மன்னார் மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

மன்னாரில் புதன்கிழமை (25) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,
பொருளாதார நிதி நெருக்கடியால் இலங்கை மக்கள் படும் துன்ப துயரங்களை பார்த்து தமிழக உறவுகளால் எங்களுக்கு வழங்கிய அந்த உதவி நிச்சயமாக நினைத்து பார்க்க முடியாத இதுவரை எந்த நாடுகளும் அமைப்புகளும் எமக்கு அள்ளி தராத பெரிய தொகையை தமிழக மக்கள் ஒன்று சேர்த்து வந்திருக்கிறார்கள்.

அதற்கு முதற்கண் நாங்கள் நன்றியை கூறிக் கொள்ள விரும்புகிறோம். இது இன்று நேற்றல்ல பல வருடங்களாக யுத்த காலத்தில் இருந்து இதை செய்து கொண்டிருக்கிறார்கள். எமக்கு அதில் நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகிறது.

ஆனால் எமது பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்லது கட்சி தலைவர்கள் என்று கூறிக் கொள்ளும் பாராளுமன்ற உறுப்பினராக 225 பேர் இங்கு இருக்கிறார்கள்.

இந்த அன்பளிப்பை அல்லது உதவியை பெற்று ஊடக வாயிலாக மகிழ்ச்சிகளையும் நன்றிகளையும் தெரிவிக்கும் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்களது கட்சி சார்ந்த அல்லது தாங்கள் சார்ந்த நிதியை இந்த அரசுக்கும் மக்களுக்கும் அவர்களால் வழங்க முன்வரவில்லை ஏன்?

நிச்சயமாக ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களும் கோடீஸ்வரர்களாக இருக்கிறார்கள். அவர்களின் கடந்த காலத்தோடு ஒப்பிடும் போது அவர்களுடைய இன்றைய சொத்துக்கள் எங்கிருந்து சேர்த்தார்கள்? உண்மையில் அரசியல் வாயிலாகத்தான் இந்த சொத்துக்களை அவர்கள் தேடி இருப்பார்கள்.

எனவே இன்று இலங்கையின் அவல நிலையை பார்த்து பொருளாதார நெருக்கடியை பார்த்து இந்தியா தமிழக மக்களும் உதவும் போது ஏன் இங்கு உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு ரூபாய் கூட உதவி செய்ய முடியவில்லை.

நிச்சயமாக இவர்களிடம் நிதி இருக்கிறது. கட்சி சார்ந்த பணங்களும், கோடிக்கணக்காக இருக்கிறது, இவை கட்சி தலைமையகங் களில் அல்லது வங்கிகளில் தனிநபர் மூலம் அந்த சொத்துக்கள் முடங்கிப் போய்க் கிடக்கிறது.

இன்றைய சூழலில் கூலி வேலை செய்யும் மக்கள் சாப்பாட்டுக்காக படும் துன்பத்தை அவர்கள் ஏரெடுத்து பார்க்க வில்லை அவர்கள் பாராளுமன்ற உணவை உண்டு கொண்டு ஏசி அறையில் சுகபோகமான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

ஆனால் அன்றாடம் கூலி வேலை செய்யும் மக்கள் ஒருவேளை கஞ்சி குடிப்பதற்கு கூட கஷ்டப்படுகிறார்கள். மா, சீனி உட்பட எந்த பொருளை எடுத்துக் கொண்டாலும் மூன்று மாதத்திற்கு முன் இருந்த நிலையை ஒப்பிடும்போது 3 மடங்கு விலை உயர்ந்து உள்ளது.

எனவே நான் யாரையும் சுட்டிக் காட்ட விரும்பவில்லை. நிச்சயமாக தங்களால் முடிந்த நிதியை இக்கட்டான பொருளாதார நெருக்கடி சூழ் நிலையில் மக்களுக்காக வழங்கி உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்றார். குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட கிராமிய அமைப்புகளின் சம்மேளன தலைவர் ஜஸ்ரின் சொய்சா, வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் பொருளாளர் அன்ரனி சங்கர் ஆகியோரும் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தனர்.



# தனுஷ்கோடியில் 58 ஆண்டுகளுக்கு முன்பு மூழ்கிய தரைப்பாலம்

இந்தியா செய்திகள்
India News

ராமேசுவரத்தில் இருந்து சுமார் 25 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது தனுஷ்கோடி பகுதி. அதுபோல் 1964-ம் ஆண்டுக்கு முன்பு வரையிலும் ராமேசுவரத்தை விட தனுஷ்கோடி மிகப்பெரிய தொழில் நகரமாக விளங்கி உள்ளது. தனுஷ்கோடியில் இருந்து இலங்கையின் தலைமன்னாருக்கு கப்பல் போக்குவரத்து மற்றும் தனுஷ்கோடி வரை ரெயில் போக்குவரத்தும் இருந்துள்ளது. மேலும் பள்ளிக்கூடம், தபால் நிலையம், மருத்துவமனை, கோவில்கள், துறைமுகம் உள்ளிட்ட அனைத்து வசதிகளுடன் அது மிகப்பெரிய தொழில் நகரமாக விளங்கியது. கடந்த 1964-ம் ஆண்டு டிசம்பர் 23-ந்தேதி அன்று ஏற்பட்ட புயல் காரணமாக தனுஷ்கோடி நகரமே முழுமையாக அழிந்து போனது. புயல் ஏற்பட்ட பிறகு தனுஷ்கோடியில் பொதுமக்கள் வாழ்வதற்கும் அரசால் தடை விதிக்கப்பட்டது. ஆனால் தனுஷ்கோடி பகுதியில் இன்று வரையிலும் மீன்பிடித் தொழிலை நம்பி வாழும் ஏராளமான மீனவர்கள் குடிசை அமைத்து வசித்து வருகின்றனர். இந்த நிலையில் தனுஷ்கோடி பகுதியில் கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாகவே வழக்கத்திற்கு மாறாக பலத்த சூறாவளி காற்று வீசுவதுடன் கடல் சீற்றம் அதிகரித்து காணப்பட்டு வருகின்றது. ஒரு வாரத்திற்கு மேலாக தொடர்ந்து கடல் சீற்றம் அதிகமாக காணப்பட்டு வருவதால் எம்.ஆர்.சத்திரம் பகுதியில் இருந்து அரிச்சல்முனை வரையிலான இடைப்பட்ட கடற்கரை பகுதி முழுவதும் கடல் அரிப்பு ஏற்பட்டு உள்ளது.

இதனிடையே தனுஷ்கோடி பகுதியில் ஏற்பட்டுள்ள தொடர் கடல் சீற்றத்தால் ஏற்பட்டுள்ள கடல் அரிப்பு காரணமாக 1964-ம் ஆண்டுகளுக்கு முன்பு புயலில் கடலில் மூழ்கிப்போன தரைப்பாலம் ஒன்று தற்போது தெளிவாக வெளியே தெரிகிறது. இந்த பாலமானது பார்ப்பதற்கு கான்கிரீட் குழாய்கள் அமைத்து அதன்மீது தளம் அமைத்து தரைப்பாலம் கட்டப்பட்டுள்ளதாகவும், கடற்கரை பகுதியில் பதிக்கப்பட்டுள்ள இந்த கான்கிரீட்குழாய்கள் வழியாக தெற்குப் பகுதியிலிருந்து கடல் நீரானது வடக்கு பகுதிக்கும், வடக்கு கடல் பகுதியில் உள்ள கடல் நீரானது கடலிலும் தென் கடல் பகுதிக்கும் சேரும் வகையிலும் இந்த தரைப் பாலம் அமைக்கப்பட்டு உள்ளதாக கூறப்படுகிறது. சுமார் 58 ஆண்டுகளுக்கு முன்பு புயலால் கடலில் மூழ்கிப்போன கான்கிரீட் குழாய்களுடன் கூடிய தரைப்பாலம் தற்போது தெளிவாக வெளியே தெரிவதை தனுஷ்கோடி வரும் சுற்றுலாப் பயணிகள் மிகுந்த ஆச்சரியத்தோடு பார்த்து செல்போனில் புகைப்படம் எடுத்து மகிழ்ந்தனர்.

# 'நட்பின் நாயகனை' வாழ்த்துவதில் அவர் நண்பர்களுக்கும் பங்குண்டு



நாம் வாழும் கனடிய மண் எமக்கு பதுவாழ்வு தந்த புண்ணிய பூமியாகும். வளர்ந்தோருக்கு மட்டுமல்ல. எமது பிள்ளைச் செல்வங்களையும் அவர்களின் கல்வியிலும் தொடர்ந்து அவர்களின் பணியிடங்களிலும் தலை நிமிர்ந்து நிற்க வாய்ப்புக்களை வழங்கியது இந்த "கனடா" தான்.

ஒரு தேசத்தில் அதிகம் பலமிக்க துறைகளில் அரசியல். வர்த்தகம். ஊடகம் ஆகியவைதான் முன்னிலையில் வைத்துப் பார்க்கப்படுகின்றன. கனடாவில் என் பான்றவர்கள் வர்த்தகத் துறையில் புகுந்து இங்குள்ள வாய்ப்புக்களை பயன்படுத்தி நாமும் உயர்ந்து, மற்றவர்களின் கரங்களைப் பற்றி கைகோர்த்து நடப்பதில் எப்போதும் பெரும் மகிழ்வு கொள்கின்றோம்.

அண்ணன் லோகேந்திரலிங்கம் அவர்கள் தாயகத்தில். கல்வியில் கவனம் செலுத்தி அத்துடன் கலை இலக்கியத் துறையிலும் கால் பதித்து பெற்ற வெற்றிகளுடன் கனடாவில் கால் பதித்தவர். கனடாவில் அவர். நண்பர்கள் சிலரால் ஊடகத்துறைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர் என்பதை நான் நன்கு அறிவேன். அவர் விரும்பி ஏற்றுக்கொண்ட அந்த பொறுப்பை இதய சுத்தியோடு தொடர்ந்து வரும் அவர். இங்கு வர்த்தகம் மற்றும் அரசியல் துறைகளில் பயணிக்கும் ஆயிரக்கணக்கானவர்களோடு "கைகோர்த்து" பயணிக்கும் "வித்தையை" தனதாக்கிக் கொண்டவர்.

மேற்படி இரண்டு துறைகளில் உள்ளவர்களில் பலருக்கு இவர் நெருங்கிய நண்பர். அவ்வாறான நண்பர்களில் நானும் ஒருவனாக அவரோடு பயணிப்பதில் மிகவும் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றேன். அவர் இன்னும் பல ஆண்டுகள் தன் பணி தொடர இறைவனை வேண்டுகின்றேன்.

அன்புடன்,

**சங்கர் நல்லதம்பி**

ROOBAM MEDIA GROUP

RAMSANKR SIVANATHAN
Managing Director
75 Orenda Court, Unit#101,
Brampton ON, L6W 3N2
Canada
Email: info@roobamfm.com
Tel: +1 647 891 7725
Website: www.roobamfm.com

வாழ்த்துரை



தேடரிய கலைஞானம்
செகமீதில் பெற்றுதந்து
நிருபுகழ் கொண்டோங்கும்
**லோகேந்திரலிங்கம்**
ஊடக இலக்கிய
கலையெனும் தளங்களில்
ஈடில்லா புகழ் கொண்டு
ஐம்பதின் ஆண்டுகள்
சொல்லரிய செயலாற்றல்
சிறப்புடனே நல்கியெங்கும்
உள்ளமெலாம் மகிழ்வோங்கி
உவட்டிடனே எந்நாளும்
நல்லதோர் வாழ்வினையே
ஞானம் உள்ளவரை
தள்ளாது பெற்றுயர்க
என்றுமை வாழ்த்தினேனே!

இங்ஙனம்

AC TOUR
ALL COUNTRIES TOUR SERVICES

கனடா ஈஸ்ற்கோஸ்ற் சுற்றுலா

6 இரவுகளும் 7 பகல்களும் கொண்ட பயணம்

2022 ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாசி மாதத்தின் முதல் கிழமை



ரொறன்ரோவில் இருந்து புரப்பட்டு, இரண்டாவது கிழமை திரும்பி வருதல்.

Quebec, Prince Edward Island, Nova Scotia & New Brunswick

ஆகிய 4 மாகாணங்களிலும் உள்ள முக்கியமான சுற்றுலா இடங்களை பார்வையிடலாம்.

- Hopewell Rocks
- Fisherman-House
- Swiss Air Flight
- Potato Farm
- Magnetic Hill
- Cavendish-Beach
- Longest Covered Bridge
- Quebec City Tour
- Peggys Cove
- Shediac
- Maritime Museum
- st.joseph church
- Charlotte Town
- Green Gables
- Reversing Falls
- and More...



ஒருவருக்கு கட்டணம் C$ 800 மட்டுமே

3 to 4 Star Hotel or Motel

a1actour.com@gmail.com

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது

முதலில் வருபவருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் இருக்கைகளின் இலக்கங்கள் ஒதுக்கப்படும்.

சொகுசு பேருந்து | தங்குமிட வசதி | காலை உணவு | பேருந்து சேவை

முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guide, மொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

Email: a1actour.com@gmail.com
facebook.com/Allcountriestour

CANADA - TEL : 1 416 644 7273 CELL : +1 416 857 5252 +1 416 272 9007
CUBA - CELL & WHATSAPP +53 55 591 557 +53 52 978 956

# FOR SALE/ LEASE

FOR ALL YOUR REAL ESTATE NEEDS

கனவு இல்லம்

கைகளில் வர...

உங்கள் வீடு விற்பனை முகவர்...





#1 RE/MAX

Outstanding Agent *for* Outstanding Results.

RE/MAX Excel Realty Ltd., Brokerage*

Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3

**RAJ NADARAJAH**

SALES REPRESENTATIVE

**DIR: 416.333.6115**

nanohomes@gmail.com




# மொன்றியல் தமிழர் மூத்தோர் இணையம் கொண்டாடிய "அன்னையர் தினம்"

கனடிய செய்திகள்
Canadian News









கடந்த வாரம் மே 21-ம் நாள் சனிக்கிழமை காலை 11.00 மணியளவில் அன்னையர் தினத்தைக் கொண்டாட வேண்டி அழைக்கப்பட்ட விருந்தினர்கள் அனைவரும் மொன்றியல் மூத்தோர் அரங்கில் உற்சாகமாகக் கூடியிருந்தனர்.

இணையத்தின் தலைவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. முத்துக்குமார் சிவானந்தம் தலைமையில் விழா இனிதே ஆரம்பமானது. இறைவணக்கம் - தமிழ்மொழி வாழ்த்து - அகவணக்கம் என மரபு பேணிய ஆரம்பம்.

தலைமையுரையை தலைவர் திரு.மு. சிவானந்தம் சுருக்கமாக நிகழ்த்த - நிர்வாக உறுப்பினர் திரு. கேதீஸ்வரன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து அரங்கைச் சுறுசுறுப்பாக்கினார்.

மொன்றியல் நகர நகைச்சுவைப்புயல் - கூடவே கேகீஸ்சும் இணைந்து அன்னையரையும் - முதியோரையும் சிரிப்பூட்டி மகிழ வைத்தார்கள்.

சமுகமளித்திருந்த அன்னையர்க்கும் - சகோதரிகளுக்கும் பூச்செண்டு வழங்கி மரியாதை செய்யப்பட்டது.

பிரியஷேத்திரா நாட்டியப்பள்ளி ஆசிரியை திருமதி. பிரியா பிரதீபன் நெறியாள்கையில் அவருடைய மாணவன் செல்வன். பிரவீன் இருதயதாஸ் நடன விருந்தளித்தார்.

திருமதி. நாமகள் கவிதை வாசிக்க, சிறப்பு விருந்தனராக வருகை தந்திருந்த திரு. வீணைமைந்தன் கவிதை வரிகளுடன் சிற்றுரை நிகழ்த்தினார். ரெபின்சன், சௌதா, மகேஸ்வரி, திருமதி. லதா ஆகியோரின் பாடல்கள் காதுகளில் ரீங்காரமிட அனைவரும் மகிழ்ச்சியுடன் கூடிக் களித்தனர். மதிய போசன விருந்துடன் மூத்தோர் இணையத்தின் இவ்வாண்டுக்குரிய அன்னையர் தினக் கொண்டாட்டங்கள் இனிதே நிறைவேறிற்று.

***- உதயன் செய்தியாளர்***

## நீ யார்?

*என் அன்னையின் உதரத்தில் நான்*
*உருவாகிக் கொண்டிருக்கும் போதே*
*என்னைப் போசித்தது*
*என் அன்னை உண்ட*
*இம்மண்ணின் விளைச்சல்*

*இப் புவியில் நான் பிறந்த வினாடியே*
*வாய் திறந்து சுவாசித்தது*
*இத்தேசத்தில் வீசிய காற்றை*

*நான் பருகிய என் அன்னையின்*
*பாலமுதம் உருவாகியதே*
*இத்தேசத்தில் விளைந்த*
*உயிர் ஊட்டத்தால்*

*நான் புரண்டு தவழ்ந்தது*
*நிமிர்ந்து காலூன்றி*
*முதலடி வைத்ததும்*
*இத்தேசத்தின் மண்ணில்*

*உழைக்கும் போது*
*என் நெற்றியின் வியர்வைத் துளிகள்*
*விழுந்ததும் இப்புனித மண்ணில்*

*கலவரங்களும், யுத்தங்களும்*
*வெடித்த போதெல்லாம்*
*அடிபட்டு விழுந்ததும்*
*என் குருதித் துளிகள் சிதறியதும்*
*இப்புனித மண்ணில்*

*என் இறுதிச் சுவாசமொடுங்கி*
*கலக்க போவதும்*
*இத்தேசத்தின் காற்றில்*

*என் உடல் எரிந்து சாம்பலாகி*
*மக்கிப் போகப் போவதும்*
*இப்புனித மண்ணிலேயே*

*இந்த மண்ணுக்கும் எனக்கும்*
*இத்தனை இறுக்கமும் நெருக்கமும்*
*இருக்கும் போது*
*இம்மண்ணில் எனக்குரிமை இல்லை*
*என்று சொல்வதற்கு*
*நீ யார்?*

*****************

**அ.சந்தியாகு**
**34/12**
**செமனரி வத்த ரோட்**
**தென்னக்கும்புர**
**கண்டி - இலங்கை**

**A.Santiago**
**34/12 Seminary**
**Watte Road**
**Tennekumbura**
**Kandy – Sri Lanka**

தொ.பே: 081-2222161



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் இடம்பெற்ற வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான விசேட செயலமர்வு



இலங்கையில் வன்முறை தீவிரவாதத்தை தடுப்பதற்கான சமூக குழுக்களின் திறன்களை மேம்படுத்துவதற்கான விசேட செயலமர்வு தேசிய சமாதானப் பேரவையின் பிரதிநிதியான அமில மதுஷங்க அவர்களின் பங்குபற்றுதலுடன் மன்னார் மாவட்ட தொடர்பாடலுக்கான மையத்தின் (CCT) இணைப்பாளர் யசோதரன் தலைமையில் மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் ஞாயிற்றுக்கிழமை (22) காலை இடம்பெற்றது.

தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் இலங்கை கெல்விட்டாஸ்க் அமைப்பு மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் அனுசரனையில் மாவட்ட ரீதியில் உள்ள இளைஞர்கள், சர்வமத குழு உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், கிராம மட்ட அமைப்புக்களை உள்ளடக்கி மேற்படி செயலமர்வு இடம் பெற்றது.

பிரதேச ரீதியாக ஏற்படும் பிரிவினைகள், வன்முறை தீவிரவாத செயற்பாடுகளை நோக்கி நகர்வதை தடுக்கும் நோக்கிலும், பிரதேச மற்றும் மாவட்ட ரீதியில் இயங்கி வரும் சிவில் சமூக குழுக்களின் தீவிரவாதத்திற்கு எதிரான செயல் திறன்களை மேம்படுத்தும் விதமாக குறித்த செயலமர்வு ஒழுங்கமைக்கப்பட்டு இடம் பெற்றது.

குறித்த செயல் திட்டமானது ஐரோப்பிய ஒன்றியத்தினால் இலங்கை மற்றும் பங்களாதேஷ் ஆகிய இரு நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் இலங்கையில் இன ரீதியான முரண்பாடுகள் அதிகம் காணப்படும் ஆறு மாவட்டங்கள் உள்வாங்கப்பட்டு அப் பகுதிகளில் இச் செயற்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதியில் விபத்து — சிறுவன் படுகாயம்

மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதியில் ஞாயிற்றுக்கிழமை (22) காலை இடம்பெற்ற விபத்தில் படுகாயம் அடைந்த 07 வயது சிறுவன் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

குறித்த சிறுவன், அவருடைய தாய் உள்ளடங்களாக மூவர் 22ம் திகதி காலை மன்னார் சிறுவர் பூங்கா பிரதான வீதியூடாக நடந்து சென்ற நிலையில் குறித்த வீதியூடாக அதி வேகமாக மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் குறித்த சிறுவனை மோதியதோடு, சிறிது தூரம் மோட்டார் சைக்கிலில் குறித்த சிறுவன் இழுத்துச் செல்லப்பட்டார்.

உடனடியாக குறித்த சிறுவன் அப்பகுதியில் சென்றவர்களால் மீட்கப்பட்டு மன்னார் வைத்தியசாலையில், அனுமதிக்கப்பட்டார்.

விபத்தை ஏற்படுத்திய இளைஞர் அவ்விடத்தில் இருந்து சென்ற நிலையில் தற்போது மன்னார் மாவட்ட வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற்று வருவதாக தெரிய வருகின்றது.

இந்த நிலையில் குறித்த சிறுவன் படுகாயம் நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

எனினும் குறித்த விபத்து தொடர்பாகவும், விபத்தை ஏற்படுத்தியவருக்கு எதிராகவும், பொலிஸார் இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

**- மன்னார் நிருபர்**

# மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து நடுக்குடா வரையிலான கடற்கரை கரையோர பகுதி தூய்மையாக்கும் நடவடிக்கை முன்னெடுப்பு

மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து நடுக்குடா வரையிலான கடற்கரை கரையோர பகுதி தூய்மையாக்கும் நடவடிக்கை ஞாயிற்றுக்கிழமை (22) காலை இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் அவ் அமைப்பின் தலைவர் வி.ஸ்.சிவகரன் தலைமையில் குறித்த தூய்மையாக்கல் நடவடிக்கை இடம் பெற்றது.

இதன் போது மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மற்றும் இளைஞர்கள், யுவதிகள், சிறுவர்கள் கலந்து கொண்டு தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து நடுக்குடா கடற்கரை வரையிலான கரையோரப்பகுதியில் சிரமதானம் இடம் பெற்றது.

இதன் போது கண்ணாடி மற்றும் பிளாஸ்டிக் கழிவுப் பொருட்கள், உள்ளிட்ட கழிவுப்பொருட்கள் அப்பகுதியில் இருந்து அகற்றப்பட்டது.

அகற்றப்பட்ட கழிவுப்பொருட்கள் மன்னார் பிரதேச சபையின் உதவியுடன் அப்பகுதியில் இருந்து கொண்டு செல்லப்பட்ட மை குறிப்பிடத்தக்கது.



**- மன்னார் நிருபர்**



# மொந்தையும் பழசு, கள்ளும் பழசு!

- கனடா நக்கீரன்

புதிய மொந்தையில் பழைய கள் ( **"Old Wine in a New Bottle"**) என ஒரு பழமொழி உண்டு. அதாவது முட்டி புதிது கள் பழசு என்று பொருள். இலங்கையில் உருவாக்கப்பட்ட 'புதிய' அமைச்சரவை பழைய முகங்களால் நிரப்பப்பட்டுள்ளன என விமர்ச்சிக்கப்படுகிறது. என்னைக் கேட்டால் மொந்தையும் பழசு, கள்ளும் பழசு என்பேன். பிரதமர் இரணில் தலைமையில் 21 அமைச்சர்களைக் கொண்ட அமைச்வரவை உருவாக்கப்பட்டுள்ளது. அதில் இடம் பெற்றவர்கள் கடந்த ஆட்சிகளின் போது அமைச்சராக இருந்த பழைய முகங்கள்தான். இந்த 21 25 ஆக உயரவுள்ளது. அமைச்சரவையில் கல்வி, தி-றமை இரண்டுக்கும் முதல் இடங்கொடுத்து பல புதிய முகங்கள் இடம்பெறும் என்ற மக்களின் எதிர்பார்ப்பு மழுங்கடிக்கப்பட்டுள்ளது. வயது வந்த குரங்குக்கு புதிய வித்தைகளைக் கற்பித்துக் கொடுக்க முடியாது என்பதைத்தான் இது காட்டுகிறது. இதில் சோகம் என்னவென்றால் குதிரை வியாபாரத்தின் மூலம் எதிரணியில் இருந்த நா.உறுப்பினர்களை வலை வீசிப் பிடித்து அவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் கொடுத்துள்ளார்கள். இது சனாதிபதி கோட்டாபய மற்றும் பிரதமர் இரணிலும் முன்னர் மகிந்த இராசபக்ச விளையாடிய அரசியல் விளையாட்டைத்தான் விளையாடுகிறார்கள். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் முக்கிய பதவிகளில் இருந்த இரண்டு நா. உறுப்பினர்கள் அமைச்சர்களாக மே 23 அன்று நியமனம் பெற்றுள்ளார்கள். இந்த இருவரில் நிமால் டி சில்வா மற்றும் மகிந்த அமரவீர சிறிலங்கா கட்சியின் மூத்த துணைத் தலைவர்கள் ஆவர். புதிதாக அமைக்கப்படும் அமைச்சரவையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி நா.உறுப்பினர்கள் அமைச்சர் பதவி எதையும் ஏற்பதில்லை எனத் தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. கட்சி தாவிய இந்த இருவர் மீதும் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேனா அறிவித்துள்ளார். இது வெறும் கண்துடைப்பு. காரணம் சிறிலங்கா சுதந்திரக் கட்சி வேட்பாளர்கள் சிறிலங்கா பொதுசன முன்னணியின் மொட்டுச் சின்னத்தில் நின்றுதான் தேர்தலில் வெற்றிபெற்றார்கள். சட்டப்படி இவர்களுக்கு எதிரான கட்சித் தாவல் குற்றச்சாட்டு பொருந்தி வராது. சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நிமால் டி சில்வாவும் மகிந்த அமரவீராவும் கட்சிக் கட்டுப்பாட்டை மீறி அமைச்சர் பதவிகளை எடுத்தது போலவே ஐக்கிய மக்கள் சக்தி கட்சியில் இருந்தும் அக் கட்சியின் முக்கிய தலைவர்களில் ஒருவரான ஹரின் பெர்னாந்துவும் மற்றும் மனு' நாணயக்காரவும் அதே பாணியில் வேலி பாய்ந்து அமைச்சரவையில் இடம் பிடித்துள்ளார்கள். இந்த இருவரும் நேற்றுவரை இராசபக்ச குடும்ப அரசியலுக்கு எதிராக - குறிப்பாக கோட்டாபயவுக்கு எதிராக - மேடைகளில் இராசபக்சா குடும்பத்தை மிகக் கடுமையாக விமர்ச்சித்து முழக்கம் இட்டவர்கள்.



இப்படிக் குதிரை வியாபாரம் மூலம் கட்சி தாவியவர்களில் சிறிலங்கா முஸ்லிம் கட்சியைச் சேர்ந்த நசீர் அகமதுவும் ஒருவர். இவர் 2020 நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பாகப் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு முதல் தடவையாகத் தெரிவு செய்யப்பட்டவர். இப்போது புதிய அமைச்சரவையில் சுற்றுச்சூழல் அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த மே 9 இல் நாடு முழுதும் 80 க்கும் அதிகமான அரசியல்வாதிகளின் வீடுகள் கலகக்காரர்களால் எரியூட்டப்பட்டன. ஏறாவூரில் இருந்த இவரது வீடும் எரியூட்டப்பட்டது. நா.உறுப்பினர்களின் கட்சித்தாவல் இத்தோடு நிற்கப் போவதில்லை. முப்பதற்கும் மேலான இராசாங்க அமைச்சர்களை நியமிக்கும் போது மேலும் பலர் கட்சி தாவுவார்கள் என எதிர்பார்க்கலாம். மீன்கள் எப்படி தண்ணீரில் இல்லாவிட்டால் வாழமாட்டாது இறந்து போகுமோ அது போல சில அரசியல்வாதிகள் அமைச்சர் பதவி இல்லாமல் உயிர் வாழமாட்டார்கள். பிறவிப் பயன் எடுத்தது அமைச்சர் பதவி பெறுவதற்வே என்பது அவர்களது கோட்பாடு. இப்படி வெட்கம் துக்கம் எதுவுமின்றி அமைச்சர் பதவிகளுக்குஆசைப்பட்டு கட்சி தாவுகிறவர்கள் அதனை நியாயப்படுத்த நாட்டைப் பொருளாதார நெருக்கடியில் இருந்து காப்பாற்றவே அமைச்சர் பதவிகளை ஏற்றுக் கொண்டோம் என வியாக்கியானம் வேறு கொடுக்கிறார்கள். மகிந்த இராசபக்ச 1977 இல் நாடாளுமன்றத்துக்குத் தெரிவா-னவர். அதன்பின் கடந்த 50 ஆண்டுகளில் அமைச்சர், பிரதமர் இருமுறை சனாதிபதி ஆகவும் ஆட்சிக் கட்டிலில் இருந்தவர். பல பல்கலைக்கழகங்கள் அவருக்கு பல முனைவர் பட்டங்கள் வழங்கியுள்ளன. அதில் ஒன்று உருசிய மக்கள் நட்புறவுப் பல்கலைக்கழகம் 2010 பெப்ரவரி 6 இல் உலக அமைதிக்கான பங்களிப்பு மற்றும் பயங்கரவாதத்தை தோற்கடிப்பதில் சிறந்த வெற்றி பெற்றமைக்காகவும் மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கியது.

"முன்னாள் பிரதமர் மகிந்த இராசபக்ச, இலங்கையின் சனாதிபதியாக இருமுறை பதவி வகித்த பின்னர் ஓய்வு பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு செய்யத் தவறியதன் விளைவாகவே தற்போதைய நிலைமைக்கு மகிந்த இராசபக்ச முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. கிட்டத்தட்ட 50 ஆண்டுகால அவரது சிறப்பான அரசியல் சாதனைகள் மற்றும் பயணம் தற்போது தொலைந்து போயுள்ளது. அரசியலில் நுழைவது மற்றும் அதில் ஈடுபடுவது சரிதான். ஆனால் சரியான நேரத்தில் அதிலிருந்து விலகவும் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் அதி-காரம் மற்றும் அரசியல் பதவிகளுக்கு பேராசைப் பட்டால் இன்று நாம் காணும் இத்தகைய விளைவு-களை எதிர்கொள்வதைத் தவிர வேறு வழியில்லை" என்று மகிந்த இராசபக்ச அவர்களின் அண்ணன் சாமல் இராசபக்ச நாடாளுமன்றத்தில் பேசும் போது சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அமைச்சரவை அமைப்பது தொடர்பாக இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம் சனாதிபதி கோட்டாபய அவர்களுக்கு 13 அம்ச யோசனைகளை முன்வைத்தது தெரிந்ததே. மொத்த அமைச்சரர்களின் எண்ணிக்கை 15 ஆக இருக்க வேண்டும். அரசியல் சட்ட திருத்தம் 20 திருத்தப் படவேண்டும். பிரதமர் பதவிக்கு எல்லாக் கட்சிகளது நம்பிக்கையைப் பெற்றவராக இருக்க வேண்டும். பதினைந்து நிபுணர்கள் கொண்ட ஒரு ஆலோசனை சபை. நிறைவேற்று அதிகாரம் படைத்த சனாதிபதி பதவி 15 மாதங்களில் ஒழிக்கப்பட வேண்டும் என்பதே அந்த யோசனைகளாகும். □நம்பிக்கையில்லாப் பிரேரணை நிறைவேற்றப்பட்டாலும் இல்லாவிட்டாலும் தேசிய அரசாங்கத்தை அமைக்க நாங்கள் முன்மொழிகிறோம். நாட்டின் பொருளாதார நிலை குறித்துப் பலருக்கு சரியான புரிதல் இல்லை. எனவே, இந்த யோசனைகளை விரைவில் நிறைவேற்ற வேண்டும். அரசியல் உறுதித்தன்மை இல்லாமல் பொருளாதார உறுதித்தன்மையை உருவாக்க வழி இல்லை. இந்நாட்டு மக்கள் தங்களுக்கு உள்ள சிக்கல்களுக்காக நியாயமான வழி-யில் போராடுகிறார்கள். அரசியலமைப்பின் கட்டமைப்பிற்குள் நடைமுறைப்படுத்தக் கூடிய ஒரு வேலைத்திட்டத்தை நாங்கள் முன்மொழிகிறோம். இந்தச் சிக்கலின் தீவிரத்தை அனைவரும் புரிந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். இறுதியில் இந்நாட்டு மக்களின் நலனுக்காக ஏதாவது செய்ய வேண்டும். இனி எந்த மக்களையும் ஆதரவற்றவர்களாக ஆக்க முடியாது" என இலங்கை வழக்கறிஞர் சங்கத்தின் தலைவர் பீரீஸ் பேசியிருக்கிறார். ஆனால் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் அதனைக் காதில் போட்டுக்கொள்ள மறுக்கிறார்கள்.

மகாநாயக்க தேரர்கள் மற்றும் மகா சங்கத்தினர் சார்பாக ஒலகன்வத்த சந்திரசிறி பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்தார்.

(1) மந்திரிசபையைக் கலைத்தல்

(2) பொதுத் தேர்தல் நடைபெறும்வரை இடைக்கால அனைத்துக் கட்சி நிர்வாகம்

(தொடர்ச்சி 79ம் பக்கம்)





ONE STOP
WINDOW
D?COR

CALL US FOR FREE
IN HOME
CONSULTATION

| VERTICAL BLINDS | VENETIAN BLINDS | DRAPERIES | CURTAIN | SHUTTERS ROLLER BLINDS

தனது கலை இலக்கிய மற்றும் ஊடகப் பயணத்தில் பொன்விழாக் காணும் அண்ணன் லோகேந்திரலிங்கம் அவர்களின் பாராட்டு விழாவில் பங்கெடுப்பது எமக்கும் பெருமையே!

இன்று வெளிவரும் 'இலங்கைச் சிறப்பிதழை' அவர் படைத்ததன் மூலம், புலம் பெயர்ந்து வாழ்ந்தாலும் எம் தாயாக விளங்கும் தாயகத்தையும் அங்கு வாழும் படைப்பாளிகளையும் மறந்து விடக்கூடாது என்பதை அவர் பறை சாற்றுகின்றார்.

வெள்ளி விழாக்களைக் கண்ட எங்கள் என்கேஎஸ் நிறுவனமும் அனைவரும் அறிந்த உதயனும் நட்பாக பயணிக்கும் நாட்கள் தொடர வேண்டும்.




NKS
Drapery & Blinds Ltd.

210 SILVERSTAR BLVD, UNIT 825 SCARBOROUGH, ON M1V 5/9
TEL: 416-321-6420 | DIR: 416-738-3370
EMAIL: INFO@NKSDRAPERY.COM

# ஈழத்துத் திருக்கோவில்கள் 999



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## நீராவியடி கடையிற்சுவாமிகள் சமாதிச் சிவாலயம் நீராவியடி, யாழ்ப்பாணம்

*"ஆகமத்தின் உட்பொருள் அகண்டமூலம் ஆதலால்*
*தாகபோக மின்றியே தரித்ததற் பரமும்நீ*
*ஏகபாதம் வைத்தனை உணர்த்தும் அஞ்செழுத்துளே*
*ஏகபோகம் ஆகியே இருந்ததே சிவாயமே"*

புராணங்களிலே கூறப்பட்டுள்ள திருவுருவங்களின் பெயர்களை அடிப்படையாக வைத்தும், கோவில்களை எழுப்புவோரின் பெயர்களைக் கொண்டும், நாட்டிற்கு நன்மை புரிந்து மக்களால் போற்றப்பட்டோரின் பெயர்களிலும், சித்தர் பெருமக்களின் பெயர்களிலும் ஆலயங்கள் காணப்படுகின்றன. ஈழத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து, சித்தத்தைச் சிவன்பால் வைத்து, சீவனே சிவனெனக் கண்ட, நான்கு சித்தர்களுடைய சமாதிக்கோயில்கள் ஈழத்தின் நான்கு பகுதிகளிலும் காவல் அரண்கள்போல அமைக்கப்பட்டுள்ளன.

வடக்கே, யாழ்ப்பாணத்தில் நீராவியடியில் கடையிற்சுவாமிகள் சமாதி, தெற்கே நாவலப்பிட்டி, குயின்ஸ்பரியில், நவநாதச் சித்தரின் சமாதி, மேற்கே கொழும்பு, முகத்துவாரத்தில், பெரியானைக்குட்டி சுவாமிகள் சமாதி, கிழக்கில் காரைதீவில் சித்தானைக்குட்டி சுவாமிகள் சமாதி என, ஈழத்தின் நாற்புறமும் சித்தர் சமாதிகள் அமைந்து, அருள்ஒளி ஊட்டுவதாகக் காணப்படுகின்றன.

சித்தர்கள் உலகெங்கும் உள்ளனர். எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் இருக்கின்றனர். சித்தர்கள், உலகமக்கள் அனைவருக்கும் பொதுவானவர்கள். சாதிமத வேறுபாடு அற்றவாகள். நாடு, மொழி, இனம் ஆகிய குறுகிய எல்லையைக் கடந்தவர்கள். சித்தர்கள் எங்கும், எப்போதும் தோன்றி, மக்கள் இன்புற்று வாழ வழிகாட்டுகின்றனா. சித்தர்கள், ஆன்மநேய ஒருமைப்பாட்டை, எம்மதமும் சம்மதம் என்ற சமரச சன்மார்க்கத்தை வளர்க்கின்றனர். "யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதே சித்தர்களின் குறிக்கோள். "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்பதே சித்தர்களின் சமயக் கோட்பாடு. "எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டும்" என்பதன்றி வேறொன்றும் அறியாதவர்கள் சித்தர்க்ள.

சித்தர்கள் சிலர் தமது இயற்பெயரை இழந்து, வாழ்ந்த இடத்தின் பெயரால், தோற்றத்தால், மக்கள் மனதில் நிலைத்துள்ளனர். ஈழத்தில் ஏறக்குறைய நாமறிந்த சித்தர்களாக, பதினேழு சித்தர்களின் பெயரைக் குறிப்பிடலாம். கடயிற்சுவாமிகள், பரமகுரு சுவாமிகள், குழந்தைவேற் சுவாமிகள், அருளம்பல சுவாமிகள், நவநாதசித்தர், பெரியானைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள், சடைவரத சுவாமிகள், ஆனந்த சடாட்சர குரு சுவாமிகள், செல்லாச்சிஅம்மையார், தாளையான் சுவாமிகள், மகாதேவசுவாமிகள், சடையம்மா அம்மையார், நாகநாத சித்தர், நயினாதீவுச் சுவாமிகள், சிவ.சண்முகவடிவேல் சுவாமிகள் என்போரைக் குறிப்பிடலாம்.

இவ்வாறே தமிழகத்திலும் சித்தர்கள் பதினெண்மர் வாழ்ந்ததாகக் கூறுவர். இவ்வழக்கு மிகப் பழமையானது. தற்காலத்திலும் பலர் சித்தர்களாகி, மக்களை நெறிப்படுத்தி வாழ்ந்து வருகின்றனர். இவ்வாறான சித்தர் மரபு, காலத்திற்குக் காலம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. திருமூலர், தமிழ்ச்சித்தர் பரம்பரையின் தலைவராகப் போற்றப்படுகின்றார். மற்றும், கருவூர்த்தேவர், நக்கீரதேவர், கபிலதேவர், பட்டினத்தார், இடைக்காடர், கொங்கணவர், அகப்பேய்ச்சித்தர், குதம்பைச் சித்தர், அழுகணிச்சித்தர் ஆகியோரும் சித்தர்களே.

சித்தர்கள் மனித சமுதாயத்திற்குப் பெரும்பணியாற்றியுள்ளனர். மக்களின் மனஇருளைப் போக்கி, ஞானஒளிபரப்பி, சிந்தனைச் செல்வத்தை வாரி வழங்கினர். உடல் நோய்களைத் தீர்க்கும் மூலிகைகளைக் கண்டறிந்து, மருந்து செய்யும் முறைகளைத் தரிவித்து, நூல்களை இயற்றியுள்ளனர். கோள்களின் நிலை, காலமாறுபாடு, சுடர்களின் இயக்கம், ஆகியவற்றை விளக்கி, சோதிடநூல்கள் எழுதியுள்ளனர். நிறைமொழி மாந்தர்களாக விளங்கிய சித்தர்கள், மறைமொழிகளை மந்திரம் என்ற பெயரால் வழங்கினர். மனித ஆற்றலை ஒருமைப்படுத்தவும், கூர்மையாக்கவும், வெளிப்படுத்தவும், மாந்திரீகங்களை வெளியிட்டனர். தெய்வங்களுக்கு முறைப்படி பூசை செய்ய, பூசைவிதிபற்றிய பாடல்களைப் பாடியுள்ளனர். ஆத்மசக்தி, யோகநிலை ஆகியவற்றை விளக்கி இலக்கியம் படைத்தனர்.

ஆயினும் மாயையில் உழலும் மாந்தர்களால், சித்தர்களின் போக்கை முற்றாக உணர்ந்து, பயன்பெற முடியாத கர்மநிலை எக்காலத்திலும் காணப்பட்டுள்ளது. சித்தனை பித்தனாகக் கருதி, கல்லாலும், சொல்லாலும் அடித்துத் துன்புறுத்திய சம்பவங்களும், சித்தர் வரலாறுகளில் மாறாத கறையாகக் காணப்படுகின்றது. ஆயினும், சித்தர் வாழ்வும், அவர்கள் மனித குலத்தின்மீது கொண்ட நேயமும், படிப்படியாக காலவரலாற்றிலே உணரப்பட்டுள்ளது.

இவ்வாறான சித்தர் பரம்பரையினர் ஈழத்திலும் இலைமறை காயாக வாழ்ந்து, பாமரமக்களிடமும், மற்றோரிடமும் பக்திமார்க்கத்தைப் பரப்பி, நல்வழிகாட்டியுள்ளனர். ஈழத்திலே வாழ்ந்த சித்தர்களால், ஈழத்தமிழ் மக்களுடைய அகவாழ்விலே மாற்றம் ஏற்பட்டது. சித்தர்கள் "உட்சுவர் இருக்க புறச்சுவர் தீட்டுவதில் பயனேது" என்பதற்கமைய, புறச்சீர்திருத்தத்திற்கு முக்கியத்துவம் அளிக்காது அகச் சீர்திருத்தம்பற்றியே சிந்தித்துள்ளனர். ஈழத்திலே வாழ்ந்த சித்தர்களுள் ஆதிக்கடைநாதன் எனப்போற்றப்படும், யாழ்ப்பாணம் கடையிற்சுவாமிகள் ஈழத்தின் சித்தர் பரம்பரைக்கு வித்திட்ட, மூலகுருவாகப் போற்றப்படுகின்றார். இச் சித்தர்பெயரால் அமைந்த கடையிற்சுவாமிகள் சமாதிச் சிவாலயம், யாழ்ப்பாணத்திலுள்ள நீராவியடியில் அமைந்துள்ளது.

*வளரும்...*




50- ஆண்டு கால கலை,
இலக்கிய, ஊடக மற்றும்
சமூகப் பணியை கொண்டாடும்
உதயன் பத்திரிக்கை
பிரதம ஆசிரியர்
ஆர். என். லோகேந்திரலிங்கம்
அவர்களுக்கு
மனுஜோதி ஆசிரமத்தின் சார்பாக
நல்வாழ்த்துக்களைத்
தெரிவித்துக்கொள்கிறோம்.
ஸ்ரீமத் பகவத் கீதை, சங்கைமிக்க குர்–ஆன் சாராம்சம், நீதியின் சூரியன், நித்திய ஜீவ வார்த்தைகள் மற்றும் "மனுஜோதி" – அனைத்து வேதங்களின் ஆய்வு இதழ் புஸ்தகங்கள் மற்றும் CD–க்கள் தேவைப்படுவோர் எங்களது முகவரிக்கு எழுதவும்.
மற்றும் விபரங்கட்கு:
தலைவர், மனுஜோதி ஆசிரமம், சத்திய நகரம்,
(வழி) பாப்பாக்குடி, திருநெல்வேலி – 627 602
தமிழ் நாடு, தென் இந்தியா.
போன்: 04634–274543, 94884 – 34543.
E- mail : manujothi@bsnl.in
manujothi.com


LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON
CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
RE/MAX
ROYAL PROPERTIES
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
BUYING | SELLING | INVESTING


STEELES
PODIATRY CLINIC
கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்
ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது
WE ACCEPT
• Extended Health Care
• Private - Work Insurance
• MVA - WSIB
• ODSP - Social Service
LIST OF SERVICES
• General & Diabetic Care
• Foot Pain Treatment
• Sports Medicine
• Surgical Procedures
• Custom-Made Orthotics
• Orthopaedic Shoes
• Compression Stockings
• Ankle - Knee - Back Braces
ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM,
DOCTOR OF PODIATRIC MEDICINE
உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).
Compression Level
5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7
416.298.FOOT (3668)

# திருச்சி தமிழ்ச் சங்கத்தில் சிங்கப்பூர் எழுத்தாளருக்கு வரவேற்பும் கலந்துரையாடலும்

இந்தியா செய்திகள் India News



திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கமும் இனிய நந்தவனமும் இணைந்து சிங்கப்பூர் எழுத்தாளரும் மக்கள் மனம் இதழின் ஆசிரியருமான பிச்சினிக்காடு இளங்கோ அவர்களுக்கு வரவேற்பும் - கலந்துரையாடலும் (21/05/2022) இன்று திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்கத்தில் சிறப்பாக நடைபெற்றது.

திருச்சிராப்பள்ளி தமிழ்ச் சங்க அமைச்சர் (பொறுப்பு) பெ. உதயக்குமார் தலைமை நடைபெற்ற நிகழ்வில் திருச்சி மாவட்ட எழுத்தாளர் சங்கத் தலைவர் வை. ஜவஹர் ஆறுமுகம் பிச்சினிக்காடு இளங்கோவை அறிமுகம் செய்து வைக்க திருச்சி பாட்சா பிரியாணி சென்டர் உரிமையாளர் முகம்மது அபூபக்கர் சித்திக் நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார்.

மேலும் நிகழ்வில் திருக்குறள் நாவை சிவம், பேராசிரியர் நெடுஞ்செழியன், ஆங்கரை பைரவி, மணப்பாரை சூர்யா கவிஞர் ஆறிவுச்செல்வன் மற்றும் திருச்சி பத்மஸ்ரீ விருதாளர்கள் சுப்ராயன், கிராமாலயா தாமோதரன் போன்றோர் கலந்துகொண்டனர் நிகழ்வில்.

இறுதியில் நடந்த கலந்துரையாடலில் சிங்கப்பூர் பற்றி அனைவரும் கேட்ட கேள்விகளுக்கு நேர்த்தியான பதில்களை தந்து தனது ஆளுமை வெளிப்படுத்தினார் பிச்சினிக்காடு இளங்கோ.

# மொத்த வீட்டையே விஷவாயு கூடமாக மாற்றி.. கூட்டாக தற்கொலை செய்த டெல்லி குடும்பம்



டெல்லியில் ஒரு குடும்பம் மொத்த வீட்டையே விஷ வாயு கூடமாக மாற்றி தற்கொலை செய்து கொண்டுள்ளனர். கடந்த 2018ம் ஆண்டு ஜூன் மாதம் 6ம் தேதி டெல்லி புராரி பகுதியில் ஒரு வீட்டிலிருந்து 11 பிணங்கள் கண்டெடுக்கப்பட்டது. அந்த வீட்டில் போலீஸ் விசாரணையில் நிறைய கடிதங்கள், குறிப்பேடுகள் கைப்பற்றப்பட்டுள்ளது. எப்படி தற்கொலை செய்தால் மோட்சம் கிடைக்கும் என்று குறிப்புகள் இதில் இருந்தது. இந்த விசாரணை நாட்டையே உலுக்கியது. இது தொடர்பாக நெட்பிளிக்ட்ஸில் "ஹவுஸ் ஆப் சீக்ரெட் - புராரி டெத்" என்ற தொடர் கூட வெளியாகி இருந்தது. இறந்து போன அப்பாவின் ஆவி பேசியதாகவும், அவர்கள் வழிகாட்டியாகவும் கூறி இந்த தற்கொலையை மொத்த குடும்பமும் சேர்ந்து செய்தது. இந்தியா மட்டுமின்றி உலக நாடுகளையே இந்த தற்கொலை சில்லிட வைத்தது. இந்த நிலையில்தான் தற்போது டெல்லியில் ஒரு குடும்பம் மொத்த வீட்டையே விஷ வாயு கூடமாக மாற்றி தற்கொலை செய்து கொண்டுள்ளனர். டெல்லியை இந்த சம்பவம் உலுக்கி உள்ளது.

தெற்கு டெல்லியில் வசந்த் விஹார் பகுதியில், வசந்த் அடுக்குமாடி குடியிருப்பில் இந்த சம்பவம் நடந்து உள்ளது. இங்கு வீட்டில் உள்ளவர்கள் வெளியில் வராமல் உள்ளேயே இருந்ததை வைத்து அக்கம் பக்கத்தினர் சந்தேகம் அடைந்து வீட்டிற்கு சென்று பார்த்து உள்ளனர். அப்போது வீடு உள்ளே பூட்டப்பட்டு இருந்தது. வீட்டின் கதவும் திறக்கப்படவில்லை. வீட்டின் ஜன்னல்கள் பாலிதீன் உறை போட்டு மூடப்பட்டு இருந்தது. வீடு மொத்தமும் காற்று வெளியே போகாத அளவிற்கு இறுக்கமாக மூடப்பட்டு இருந்தது. இதையடுத்து சந்தேகம் அடைந்த மக்கள் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். உடனே அங்கு வந்த போலீசார் கதவை உடைத்து உள்ளே சென்றனர். அப்போது கதவிற்கு அருகே காகிதங்கள் சில கிடைத்துள்ளன. இதை கைப்பற்றிய போலீசார் அதிர்ச்சி அடைந்தனர். அந்த காகிதங்களில், நாங்கள் தற்கொலை செய்து கொண்டுள்ளோம். இந்த வீடு முழுக்க வி'வாயு இருக்கிறது. (எல்லாம் கார்பன் மோனாக்சைட்) இது தீ பிடிக்க கூடியது. அதனால் கதவை திறந்ததும் உள்ளே வர வேண்டாம். ஜன்னலை எல்லாம் திறந்து விடுங்கள். உள்ளே நெருப்பு பற்ற வைக்க வேண்டாம். மெழுகுவர்த்தி ஏற்ற வேண்டாம். தீ பிடிக்கும். ஜன்னலை திறக்கும் போதும் கவனமாக திறங்கள். ஏனென்றால் முழுக்க முழுக்க இது விஷ வாயு ஆகும். உள்ளே இருந்து வரும் நச்சு புகையை சுவாசிக்க வேண்டாம் என்று கடிதம் எழுதப்பட்டு இருந்தது.

இந்த கடிதத்தை படித்துவிட்டு உள்ளே போலீசார் கவனமாக சென்றனர். உள்ளே சென்ற போலீசாருக்கு பெரிய அதிர்ச்சி. காரணம் வீட்டிற்கு உள்ளே 50 வயது பெண் ஒருவரும் அவர்களின் இரண்டு பெண் குழந்தைகளும் இருந்தனர். இவர்கள் உள்ளேயே நச்சு புகையை சுவாசித்து தற்கொலை செய்துள்ளனர். வீட்டிற்கு உள்ளே நிலக்கரியை தீ வைத்து கொளுத்தி அதன் மூலம் நச்சு புகையை உண்டாக்கி தற்கொலை செய்து கொண்டுள்ளனர். இதன் மூலம் உருவான கார்பன் மோனாக்சைட் காரணமாக இவர்கள் பலியாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது. வீட்டில் இருந்து நச்சு புகை வெளியே போக கூடாது என்பதால் இவர்கள் மொத்தமாக வீட்டு கதவுகளை மூடி, ஜன்னலை மூடி, எல்லா இடங்களிலும் பாலீதின் உறை வைத்து மறைத்து காற்று போகாமல் செய்து, நச்சு புகையை சுவாசித்து பலியாகி உள்ளனர். அதோடு வீட்டில் இருக்கும் எரிவாய்வையும்.

திறந்துவிட்டுள்ளனர். இதனால் எல்லாம் சேர்ந்து நச்சு தன்மையை ஏற்படுத்தி அவர்கள் பலியாகி உள்ளனர். போலீஸ் வந்த போது கூட உள்ளேயே நிலக்கரி எரிந்து கொண்டு இருந்துள்ளது. இறந்த பெண்ணின் பெயர் மஞ்சு. அவர்களின் பெண் குழந்தைகள் பெயர் அனுஸ்கா, அன்கு. இவர்கள் தற்கொலை செய்ததற்கான உண்மையான காரணம் தெரியவில்லை. ஆனால் அதே சமயம், கடந்த வருடம் அந்த பெண்ணின் கணவன் கொரோனா காரணமாக பலியாகிவிட்டார். இதனால் உடைந்து போன குடும்பம் யாரிடமும் பேசாமல் இருந்துள்ளது. இந்த நிலையில் தற்போது தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று கூறப்படுகிறது.

# சிதம்பரத்தை குலுங்க வைத்த சிவனடியார்கள்: யூடியூப் சேனலை கண்டித்து ஆர்ப்பாட்டம்



சிதம்பரத்தில் ஆர்ப்பாட்டத்துக்காக சிவனடியார்கள் பல்லாயிரக்கணக்கில் குவிந்ததால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. உலகப் புகழ்பெற்ற நடராசர் கோயில் சிதம்பரத்தில் உள்ளது. சைவத் திருத்தலங்களில் இது முதன்மையானதாகும். வெளிநாடு, வெளி மாநிலம், வெளி மாவட்டம் மற்றும் உள்ளூர் பக்தர்கள் ஏராளமானோர் தினசரி கோயிலுக்கு வந்து நடராஜர் மற்றும் சிவகாமி அம்பாளை வழிபட்டு செல்வர். எப்பொழுதும் கோயிலில் பக்தர்கள் கூட்டம் இருந்துகொண்டே இருக்கும்.

இந்த நிலையில், சுவாமி நடராஜரை பற்றி விமர்சனம் செய்து ஒரு யூடியூப் சேனலில் செய்தி வந்தது. இதற்கு பக்தர்கள் உள்ளிட்ட பல்வேறு ஆன்மிக அமைப்புகள் எதிர்ப்பு தெரிவித்து வந்தனர்.

சுவாமி நடராஜர் பற்றி தவறான கருத்துகளை வெளியிட்ட யூடியூப் சேனல் நிர்வாகியை கைது செய்யக் கோரி சிவனடியார்கள் சார்பில் போராட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி (மே.23) சிதம்பரத்தில் ஆர்ப்பாட்டம் நடந்தது. இதனையொட்டி இன்று அதிகாலை முதலே சிவனடியார்கள் சிதம்பரம் நகரில் குவிந்தனர். இன்று மாலை 4 மணி அளவில் இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிதம்பரம் நடராஜர், தில்லை காளி ஆகிய சுவாமிகள் நடனத்தை அவதூறாக ஒளிபரப்பிய விவகாரத்தில் அந்த யூடியூப் சேனல் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி 10,000க்கும் மேற்பட்ட சிவனடியார்கள் மற்றும் பக்தர்கள் குவிந்து கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி சிதம்பரத்தை குலுங்கச்செய்தனர்.

# தமிழகத்தில் தனியார் பொறியியல் கல்லூரிகள் மூடப்படுவதாக அண்ணா பல்கலைக்கழகம் அறிவிப்பு




தமிழகத்தில் சமீபகாலமாக பொறியியல் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை குறைந்து வருவதாக கூறப்படுகிறது. இந்நிலையில், வருகின்ற கல்வியாண்டுக்கான அங்கீகாரம் பெறுவதற்கு 10 பொறியியல் கல்லூரிகள் விண்ணப்பிக்கவில்லை என்பதனால் அவை வரும் கல்வியாண்டு முதல் மூடப்படவுள்ளதாக அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, போதிய மாணவர்கள் இல்லாத காரணத்தினால், வருகின்ற கல்வி ஆண்டிற்கான முதலாமாண்டு மாணவர் சேர்க்கையை நாங்கள் நடத்தவில்லை என்று கூறி தமிழகத்தில் 10 தனியார் பொறியியல் கல்லூரிகள் கடிதம் அனுப்பியுள்ளதாக அண்ணா பல்கலைக்கழகம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் அண்ணா பல்கலைக் கழகத்தின் கீழ் 494 தனியார் கல்லூரிகள் உள்ள நிலையில், தற்போது அவற்றில் 10 கல்லூரிகள் மூடப்படவுள்ளதாக கூறப்படுகிறது.

(_51__ பக்கம் தொடர்ச்சி)

# ஜேர்மனிய மண்ணில் தமிழர்களின் குடியேற்றமும் தற்கால வாழ்க்கை முறையும்

**- கௌசி, ஜேர்மனி**

அது மட்டுமன்றி பெற்றோரின் அயராத உழைப்பிற்கும் ஊக்குவிப்புக்களுக்கும் ஏற்ப இன்று எமது தமிழ் இளந்தலைமுறையினர் ஜேர்மனிய மொழி கற்று ஜேர்மனிய நாட்டு அரசாங்கத் திணைக்களங்களிலும், மருத்துவ மனைகளிலும், பிரபல நிறுவனங்களிலும் முக்கிய பதவிகளை வகிப்பதுடன் தமிழர்களின் திறமையை இனம் காட்டுகின்றனர்.

கூறுபடும் மொழிகளைப் போல் புதையவில்லை
கொஞ்சிப் பேசும் வழக்கற்றுக் குமையவில்லை
சாறுபட்ட மரங்களைப் போல் சாயவில்லை
தரங்கெட்ட மனிதர்களைப் போல் தாழவில்லை ||

என்ற பெருஞ்சித்திரனார் பாடலுக்கமைய ஜேர்மனி தமிழ் எழுத்தாளர் சங்கம், பன்னாட்டுப் புலம்பெயர் தமிழ் எழுத்தாளர் சங்கம் போன்ற அமைப்புக்களை அமைத்துப் பல எழுத்தாளர்களின் நூல்களை வெளியீடு செய்வதுடன் பல எழுத்தாளர்களை இனங்காட்டி, வெளிக் கொண்டு வருகின்றனர். இதற்குப் பல அமைப்புக்களும், ஊடகங்களும் கூடப் பணிபுரிகின்றன.

தமிழ்மொழியிலே என் அறிவுக்கு எட்டிய வரையில் வெற்றிமணி, ஐ.பி.சி, அகரம், தமிழ்ரைம்ஸ் போன்ற பத்திரிகைகள் வெளிவருகின்றன. சிவத்தமிழ், மண் போன்ற சஞ்சிகைகள் வெளிவருகின்றன. எம்.ரி.வி, எஸ்.ரி.எஸ் போன்ற தொலைக்காட்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. நுவுசு, தமிழருவி போன்ற வானொ-லிகள் ஒலிபரப்பப்படுகின்றன. இவ்வாறு தமிழ் பரப்பை விரிவுபடுத்துவதற்குப் பல அர்ப்பணிப்புக்களைச் செய்கின்ற மக்கள் ஜேர்மனி மண்ணில் வாழ்ந்து வருகின்றார்கள்.

தமிழர்கள் ஒரு கிறிஸ்தவ நாட்டில் வாழ்ந்தாலும் பாரம்பரியமாக எம்முடைய பரம்பரை பண்பாட்டுக் கூறுகளை, உணவு உடை பழக்கவழக்கங்களை, சமய நம்பிக்கைகளை சிறிதளவும் மறந்ததில்லை. தம்முடைய அகதி முகாமிலேயே ஒரு சிறிய அறையில் சுவாமிப் படங்களை வைத்து இந்து ஆலயமாக வழிபடத் தொடங்கினார்கள். அது விரிவடைந்து பல பரப்பில் கட்டப்பட்ட கோபுரங்களுடன் கூடிய கோயில்களாக மாறியுள்ளன. 2019 இல் கிட்டத்தட்ட 14.000 மக்கள் ஹம் என்னும் நகரத்தில் அமைந்திருக்கின்ற காமாட்சி அம்மன் ஆலய உற்சவத்திற்கு வந்திருந்ததாக கணிப்பீடுகள் எடுத்துக்காட்டுகின்றன. இதேபோல் ஸ்வெற்றா, ஹற்றிங்கன், டோட்முன்ட், ஸ்ருட்காட் என்று ஜேர்மனியில் தமிழ் மக்கள் பரவலாக வாழுகின்ற நகரங்களில் எல்லாம் பல ஆலயங்கள் அமைக்கப்பட்டு சிறப்புப் பெற்று திருவிழாக்கள் நடத்தப்படுகின்றன.

மொழியும், மதமும் போற்றிப் பாதுகாக்கப்படுவதுபோல் கலைகளையும் தம்முடைய பிள்ளைகளுக்குக் கற்பிக்க பெற்றோர் தயங்கியதில்லை. கர்நாடக சங்கீதம், வயலின், பரதநாட்டியம், வீணை, மிருதங்கம், தவில் போன்ற கலைகளும் மேற்கத்தைய நடனங்களையும், இசைக்கருவிகளையும் கூட தம்முடைய பிள்ளைகளுக்குக் கற்பித்துப் பேரும் புகழும் அடைந்துள்ளார்கள்.

தாம் வாழும் மண் தமக்களித்த வசதி வாய்ப்புக்களை வைத்துத் தாம் பிறந்த மண்ணை மறக்காத தமிழர்கள் அதிகமானவர்கள் நம் மத்தியில் வாழுகின்றார்கள். இலங்கையிலுள்ள அநாதை விடுதிகளுக்கும், வாழ்வாதாரங்களை இழந்தவர்களுக்கும் ஜேர்மனியில் இருந்தவண்ணம் பண உதவிகளையும் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கான உதவிகளையும் செய்து கொண்டு வருகின்றார்கள்.

இவ்வாறு ஜேர்மனியில் தமிழ் இனம் வளர்ச்சி கண்டு சொந்தமாக வீடு, வியாபார ஸ்தாபனங்கள், உற்பத்தி நிறுவனங்கள், வாகன வசதிகள் போன்ற சகல சௌகரியங்களுடனும் ஜேர்மனிய மக்களுக்கு நிகராக வாழ்ந்து வருகின்றார்கள். இவ்வாறு எமது தமிழ் மக்கள் ஜேர்மனிய மண்ணில் வாழ்ந்து வருவதற்கு முக்கிய காரணமாக இருப்பது ஜேர்மனிய மக்களின் மனிதாபிமானப் பண்புகளும், விட்டுக்கொடுப்புக்களும், எல்லோரையும் சமமாக மதிக்கும் உயரிய பண்புமே என்பதில் சிறிதளவும் சந்தேகமில்லை.

ஜேர்மனி நாட்டில் தமிழர்கள் மூன்றாவது தலைமுறையினரைக் கண்டுவிட்டார்கள். இப்போது விரும்பியோ விரும்பாமலோ பெற்றோர் தம்முடைய பிள்ளைகளின் கலாசார கலப்புக்கு தம்மை ஆசுவாசப்படுத்திக் கொண்டார்கள். பன்மொழிக்கலாசாரததி;ல் வாழும் பிள்ளைகளின் இயற்கை விருப்பிற்கு ஏற்ப இந்த மண்ணில் வாழுகின்ற ஜேர்மனி, போலந்து, துருக்கி, மொறக்கோ, கிறிஸ்லாந்து, போன்ற பல நாட்டு பிள்ளைகளின் தொடர்புகள் ஏற்பட்டு அவர்களைத் தம்முடைய வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொண்டு வாழ்கின்றார்கள். ஆயினும் சில பெற்றோர்கள் வெள்ளை இன மக்களைத் திருமணம் செய்தாலும் பரவாயில்லை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால், சாதி குறைந்தவர்களை வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள முடியாது என்று பிடிவாதமாக இருப்பதனால், பெற்றோரைப் பிரிந்து வாழுகின்ற பல இளந்தலைமுறையினர் ஜேர்மனியில் இப்போதும் காணப்படுகின்றார்கள். ஆனால், மக்களை சாதி வழமையால் பிரிப்பது அருவருக்கத்தக்கது என்று இளந்தலைமுறையினர் கூறுவதை நாம் அறியக்கூடியதாக இருக்கின்றது. இம்மனப்போக்கு எதிர்காலத் தலைமுறையினருடன் எம்முடைய பெற்றோரின் பிடிவாதப் பண்பு உடைத்தெறியப்படும் என்பது நிச்சயமான உண்மையாக கருதப்படுகின்றது.

பண பலம் மிக்க தமிழ் தனவந்தர்கள் தம்முடைய பணபலத்தைப் பலருக்கும் காட்டுவதற்கு விழாக்களைக் கோலாகலமாக நடத்துகின்றனர். அதனைப் பார்த்து பண பலமற்றவர்கள் கூட கடன் பெற்று திருமண வைபவங்களையும், பூப்புனித நீராட்டு விழாக்களையும், பிறந்தநாள் வைபவங்களையும் நடத்தி கடன்காரர்களாக வாழ்வதைத் தற்போது காணக்கூடியதாக இருக்கின்றது. ஓயாத உழைப்பும், கடன் தொல்லையும் பல ஆண்களை இருதய நோயாளிகளாக்கி மரணத்தைத் தழுவச் செய்திருக்கின்றது. 18 ஆவது பிறந்தநாள் விழாவில் தம்முடைய பிள்ளைகளுக்கு அதிக விலை மதிப்புள்ள வாகனங்களைப் பெற்றோர் பரிசளிப்பதும். அதன் பெறுமதி உணராது வயதுக் கோளாறினால், பிள்ளைகள் விபத்துக்களைச் சந்திப்பதும், ஹெலிகொப்டர்களில் மாப்பிள்ளை, பெண் அழைப்பு, தேரில் பவனி, போன்ற ஆடம்பரான விழாக்களும் தற்போது நடக்கின்றன. கடினமான தொழில்களைச் செய்து சம்பாதிக்கின்ற பணத்தை, இவ்வாறான அர்த்தமற்ற செலவுகளைச் செய்வதன் மூலம் பணத்தின் பெறுமதியைப் பிள்ளைகள் உணர்ந்து கொள்வதில்லை.

போர்க் காலங்களில் தம்முடைய உடைமைகளையும், உறவுகளையும் பறி கொடுத்த தாக்கம் மனிதர்கள் மனநிலையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. தம்முடைய நினவுகளை மறப்பதற்காக குடிக்கு அடிமையான பலர் புலம்பெயர்வில் இளவயதிலேயே உயிரை இழக்கின்றார்கள். மனநிலை பாதிக்கப்பட்ட பல கணவன்மார்கள் மனைவிமாரைத் துன்புறுத்தி பல இன்னல்களை அனுபவிக்கின்றார்கள்.

இவ்வாறான சூழ்நிலையிலும் விவாகரத்து ஜேர்மனிய மண்ணிலே தமிழர்களிடையே அதிகரித்துள்ளதை நாம் அறியக் கூடியதாக இருக்கின்றது. பணத்தைக் கொட்டித் திருமணவிழாவை நடத்தி அடுத்த இரு மாதங்களின் பின் விவாகரத்துக் கேட்டு பெற்றோரிடம் திரும்பும் எத்தனையோ இளைய தலைமு-றயினரை தற்காலத்தில் காணக்கூடியதாக இருக்கின்றது. அளவுக்கு மிஞ்சிய பெண் சுதந்திரமும் விவாகரத்துக்களை அதிகரிக்கச் செய்துள்ளது. இது தற்போது சர்வசாதாரணமாகப்படுகின்றது. இதனால் பல பெற்றோர்கள் மனஉழைச்சலுக்கு உள்ளாகியுள்ளார்கள்.

சில பெற்றோர்களின் தவறான வழிகாட்டலில் வாழுகின்ற பிள்ளைகள் தம்முடைய சுயபண்புகளை இழந்து காணப்படுகின்றார்கள். தாம் வாழுகின்ற நாடு எமக்கு வசதி வாய்ப்புக்களைத் தந்திருக்கின்றது. பொது உடைமைகளை சீரழிக்கக் கூடாது. கிடைக்கின்ற பயன்களைச் சரியான முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதை அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றனர். அரசாங்கப் பணத்தில் வாழ்வதும். அப்பணத்தை முறையற்ற வழியில் செலவு செய்வதும் சில தரமற்ற பிள்ளைகளிடையே காணப்படுகின்றது. இவ்வாறான பிள்ளைகளுக்குச் சூழலும் கைகொடுக்கின்றது. பல மொழி கலாசாரத்தில் வாழுகின்ற போது இவற்றை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

இவ்வாறான தவறுகள் சிலவற்றைக் காலம் மறக்கச் செய்யும் என்றே கருதுகின்றேன். இந்த மண்ணில் கால் வைத்தபோது நாம் எவ்வாறு இருந்தோம் என்பதை எமது மக்கள் பலர் மறந்து விட்டனர். ஆயினும் காலம் ஒவ்வொன்றையும் ஒவ்வொருவருக்கும் கற்றுத் தருகின்றது என்பதே உண்மை.

ஆனால், இனிவரும் காலங்களில் எமது மொழி, கலாசார பண்புகள் எதிர்வரும் தலைமுறையினருக்கு எவ்வாறு கடத்தப்படும், போற்றிப் பாதுகாக்கப்படும் என்பது பெற்றோர்களுக்கும், தமிழ் ஆர்வலர்களுக்கும் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. கலப்புத் திருமணமானது மொழி, கலாசாரத்தை எதிர்காலத்தில் எந்த அளவில் பாதுகாக்கும்? வேற்றுமொழியில் கல்வி, தொழில் புரிகின்ற எமது இளஞ்சமுதாயம் எமக்குப் பின் தமிழ் மொழியை எந்த அளவிற்குக் கொண்டு செல்வார்கள்? என்ற சந்தேகங்களுடனேயே இங்குள்ள தமிழ் கல்வி நிறுவனங்களும், இலக்கிய சங்கங்களும், தமிழ் ஊடகங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. எமக்குப் பின் இவற்றையெல்லாம் யார் தொடர்ந்து கொண்டு செல்வார்கள் என்ற நம்பிக்கையற்ற மனங்களுடனேயே புலம்பெயர்ந்த ஜேர்மனியத் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

---

# ஈழத்துச் சிறப்பிதழை படைக்கும் குழுவினரைப் போற்றுவோம்

கீழ்வானில் எழுந்துவரும்
இளம் பரிதி ஒளிவீச்சின்
செழுங்கதிராய்ச் சிவந்து விடும்,
“கதிரோட்டம்” தலை தாங்கி
வாரத்தில் வெள்ளிதோறும்
விருப்புடன் விரிகின்ற உதயன்
தமிழ் ஏட்டின் அகவை
வெள்ளி ஆண்டு கடந்து - மேலும்
ஓராண்டு கூடி வாசிக்கத்தூண்டி
நேசிக்க வைக்கும் பல்சுவைச் செய்திகளை
கவிதை - கட்டுரை, காதல் கதைகள்,
களமாடும் அரசியம் சமூகத் தகவல்களுடன்
வளம் பெருக்கும் வாணிப வர்த்தக
விளம்பரங்களுடன் வேடிக்கை விநோத
சினிமாப் புதினங்களையும் படம் பிடித்து
பளபளப்பாய் பக்கங்கள் கூடிவர
படிப்போரின் ஆவலும் கூடியே வருகிறது!

இற்றைக்குக் கால் நூறு ஆண்டுகள்
முன்பாக, வற்றாத தமிழூற்றில்
மூழ்கிய ஐவர் கைகோர்த்து
தமிழ் பரிதி இதுவென்று! சூரியன்
நாமத்தைத் தாங்கிவரும் ஏடாக
அறிமுகம் செய்து வைத்து,
ஆனந்தம் மிகக் கொண்டார்!

பாண்டவர்கள் ஐவரும்
வேண்டிய தமிழ் ஏட்டை
தலைமையேற்று எழுதுதற்கு
கலையுணர்வு மிகக் கொண்டு
கதை - கவிதை - கட்டுரைகள்
கல்லூரி நாட்களிலே
“மலையன்பன்” புனைபெயரில்
எழுதியே புகழ் பெற்ற
இளந்தமிழர் ஆர்.என். லோகேந்திரலிங்கம்
தலைமையிலே ஒப்படைத்து உயர்வு கண்டார்!
தமிழுக்கும் தமிழருக்கும் ஊறு வந்தால்
துடித்தெழுதும் எழுத்தாணிக் காவலன்
இவராமோ! என வியப்புற்ற தமிழரெல்லாம்
தமிழின் விடியலுக்கு உரமூட்டும்
“கதிரோட்டம்” எழுதி “இதுவரை”
தலை நிமிர வைத்தார்!

கலையுணர்வு மிகக் கொண்டு
அரங்க நிகழ்வுகளை அறிமுகம் செய்து வைப்பார்,
ஆடல் பாடலுடன் அரிதாரம் பூசிவரும்
நாடக வடிவங்கள், நாட்டியப் படைப்புக்கள்
கவியரங்கு - கதை சொல்லல் - மெல்லிசை பாடுதல்,
வானொலி - தொலைக்காட்சி நேர் காணல்கள்,
அதுமட்டுமல்ல, இணையவழி உரையாடல்கள்
ஆண்டுதோறும் தகுதிகண்டு “நண்பன் விருதும்,
“உதயன்” தமிழ்ப்பணியை உலகிற்குப் பறைசாற்றும்
“உதயன் விழா” விருதும் வழங்கியேதான்,
கடல் கடந்து, தமிழ்கூறும் நல்லுலகில்
கனடாவின் கலைத்தூதுவராகப் பவனி வந்து
பொன்விழாக் காணும் புதிய தமிழரிவர்,
“மண்பித்து” மிகுந்துவர
தாய்மண்ணாம் இலங்கையிலே
இலக்கியம் செய்தோர்கள்
ஏடெடுத்து எழுதினோர்கள்
எழுதுகோல் வேந்தர்கள்
ஈழத்து - மலையகத்து மற்றும் மாகாண,
மாநகரத்துப் படைப்பாளிகள்
பலரை நினைவு கூர்ந்து,
பட்டியலை எழுதுங்கால்
ஈழத்தின் வணக்கத்திற்குரிய எழுத்துச் சித்தர்களையும்
வாழும் இலக்கியப் படைப்பாளிகளையும்
வாழ்த்தி வணங்கியேதான், தங்களை வாசிக்க
வைத்தவர்களைப் பதிவு செய்து மகிழ்கிறேன்.

| | |
|---|---|
| அகஸ்தியர் | மாத்தளை சோமு |
| அ. முத்துலிங்கம் | நந்தினி சேவியர் |
| தெணியான் | டொமினிக் ஜீவா |
| திக்குவெல கமால் | கே. டேனியல் |
| பெனடிகற் பாலன் | சொக்கன் |
| தெளிவத்தை ஜோசப் | தேவன் |
| நெல்லை க.பேரன் | நீர்வை பொன்னையன் |
| இளங்கீரன் | குறமகள் |
| திமிலைத் துமிலன் | பாலேஸ்வரி |
| செங்கை ஆழியான் | காவலூர் ராஜதுரை |
| செம்பியன் செல்வன் | காரை சுந்தரம்பிள்ளை |
| மு. நித்தியானந்தன் | கைலாசபதி |
| க. நவம் | கா. சிவத்தம்பி |
| சிவசேகரம் | சு. வித்யானந்தன் |
| செ.யோகநாதன் | வறணியூரான் |
| திருமலை.நவம் | வ.இ. ராஜரத்தினம் |
| மு. சிவலிங்கம் | லெ. முருகபூபதி |
| சுபத்திரன் | என்.கே. ரகுநாதன் |
| உ.சேரன் | வவுனியா உதயணன் |
| உருத்திரமூர்த்தி (மகாகவி) | தையிட்டி அ. ராஜதுரை |
| நல்லை அமுதன் | நடமாடி கே.வி.ஆர். |
| புதுவை இரத்தினதுரை | சில்லையூர். செவ்வராஜன் |
| கொற்றை கிருஷ்ணா | கமலினி |
| எஸ். பொன்னுத்துறை | வல்லை அனந்தராஜா |
| கவிஞர். சோ.ப. | கமலா பெரியதம்பி |
| ஈழவாணன் | பால மனோகரன் |
| செ, கதிர்காம நாதன் | ஐ. ரி. சம்பந்தன் |

இன்னமும் மனதில் புதைந்து நினைவில் வருவதற்கு தாமதமாகிறவர்களுக்கும் - இன்று புதிதாகப் பிறந்து உதயன் ஈழத்துச் சிறப்பிதழை உரமூட்டி அலங்கரிக்கும் அனைத்துப் படைப்பாளர்களுக்கும் எனது வாழ்த்துக்கள்!

**- வீணைமைந்தன்**

# நானும் ஒரு தாய் தான்



என்.எஸ்.சதீகா ரஸ்லி.
புத்தளம்.

'வாடி வா.... வா..... எங்க வராம போயிருவியோன்னு பயந்துட்டே இருந்தன். நீ வந்தது ரொம்ப சந்தோஷம். தங்ஸ்டி உள்ள வா'

'உன்னோட பங்சனுக்கு வரனுன்னு எனக்கும் ஆசை தாண்டி. பட் என்னோட நிலைமை என்னன்னு உனக்கு நல்லாவே தெரியும்ல. இருந்தாலும் நீ கட்டாயப்படுத்துனதால தான் வந்தன்'

'அதெல்லாம் போக போக சரியாயிடும்... நீ உள்ள வா போலாம்' என ரேகாவை அழைத்துச் சென்றாள் கவிதா.

'ஏன்டி உனக்குக் கொஞ்சமாவது அறிவிருக்கா? அவளே ஒரு புழு, பூச்சி உண்டாக வக்கில்லாம இருக்கா. அவளப் போய் வலகாப்புக்குக் கூட்டிட்டு வந்திருக்க. விளங்குமா இந்த பங்சன்?' என்றார் கவிதாவின் அத்தை. 'என்ன அத்த நீங்க, அவளுக்கென்ன அம்பது வயசா ஆயிடுச்சு? இப்போ தான கல்யாணம் பண்ணி ஒன்னரை வருசம். அதுக்குள்ள அவளுக்கு இனி குழந்தையே பிறக்காத மாதிரி பேசுறிங்க. அவ என் பிரண்டு.... என்னோட பங்சனுக்கு வரத்தான் செய்வா' என்று அவரை அதட்டி ரேகாவை உள்ளே அழைத்துச் சென்றாள் கவிதா.

'இதுக்குத் தாண்டி நான் அப்பவே வர மாட்டன்னு சொன்னன். நீ தான் கட்டாயப்படுத்தி கூட்டிட்டு வந்த. இப்போ என்னால உனக்கும் தேவையில்லாத கஷ்டம்' எனக் கண்களைக் கசக்க, 'அவங்கு குணந்தான் உனக்குத் தெரியும்ல. என் மாமியாரும் உன் மாமியாரும் ஒரே ரகம். அவங்களுக்கு கல்யாணம் ஆன மறுநாள் பிள்ளைப் பெத்துக் கொடுத்தாக் கூட அவங்க வாய் சும்மா இருக்காது. அதெல்லாம் நீ கண்டுக்காம இரு' என தன் தோழியை கவிதா சமாதானப்படுத்தினாள்.

கவிதா மற்றும் ரேகா இருவரும் சிறுவயது முதலே நெருங்கிய நண்பிகள். ஒரே பாடசாலையில் ஒன்றாகப் படித்து ஒரே நாளில் திருமணமும் செய்து கொண்டனர். இருவரது வீட்டாரும் கணவன்மாரும் இதுவரை இந்த நட்பிற்குத் தடை விதித்தது கிடையாது. இருவருக்கும் திருமணம் நடந்து இன்றுடன் ஒன்றரை வருடங்களாகின்றன. கவிதாவிற்கு இது தலைப்பிரசவம் என்பதனால் அவளது வளைக்காப்பு நிகழ்வு கோலாகலமாக நடைபெற, ரேகாவிற்கோ இன்னும் குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை. இதனால் அவள் பட்ட துன்பங்களோ ஏராளம்.

ரேகாவின் கணவன் சிவா அழகான, அன்பானவன். அவளை மிகவும் காதலித்து திருமணம் செய்து கொண்டான். இன்று வரை அந்தக் காதல் மாறாமல் அவளை நேசித்து வருகின்றான். ஆனால் அவனது அம்மா சாஸ்திரம், சம்பிரதாயம் என்பவற்றில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். ரேகா திருமணம் செய்து ஒரு வருடமானதிலிருந்து அவள் கர்ப்பமாகாமல் இருப்பதை ஒவ்வொரு நிமிடமும் குத்திக்காட்டிக் கொண்டேயிருந்தார். 'என்னடா சிவா ஒரு வருஷமாச்சு? இனனும் எதையும் காணல். இதுக்குத் தான் பெத்தவங்களாப் பாத்து கல்யாணம் பண்ணி வைக்கனும்னு சொல்வாங்க. இது எங்க, எப்படிப்பட்டதோ காதல் கீதல்னு போனா நாம என்னதான் பண்ண முடியும்' என்றார்.

ஆனால் சிவாவோ இந்த விடயத்தில் ரேகாவை எந்த கஷ்டமும் படுத்தாமல் சந்தோஷமாகப் பார்த்து வந்தான். 'அம்மா சொல்றத நீ கண்டுக்காதம்மா. அவங்களப் பத்தி தான் உனக்குத் தெரியும்ல. அந்தக் கடவுள் நம்ம கை விடமாட்டாரு. கண்டிப்பா நமக்கு குழந்தை பிறக்கும். அதுவரைக்கும் உனக்கு நான் குழந்தை. எனக்கு நீ குழந்தை' என்று சமாதானப்படுத்தி வந்தான்.

'நான் அத்தைய எந்தக் குறையுமே சொல்லலங்க. அவங்களுக்கு நீங்க ஒரே பையன். உங்களுக்கு வாரிசு இல்லாமப் போயிருமோன்னு அவங்க பயப்படுறது நியாயம் தான. இதனால எனக்கு எந்த வருத்தமும் இல்ல. கூடிய சீக்கிரமே நமக்கு குழந்தை பிறக்கும். எனக்கு அந்த நம்பிக்கை இருக்கு' என இருவரும் ஒருவர் மாற்றி ஒருவர் சமாதானம் செய்து கொண்டாலும் குழந்தை ஆசை இருவருக்கும் இல்லாமல் இல்லை.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தான் கவிதா அவளது வளைகாப்பிற்கு ரேகாவை அழைக்க வீட்டிற்கு வந்திருந்தாள். 'அம்மாடி! அவளுக்கு தான் இது வரைக்கும் எதுவுமில்லை. இப்படி நாலு சடங்குகளுக்குப் போனாலாச்சும் அவ வயித்துல எதாச்சும் உண்டாகு தான்னு பாப்பம். அவள கூட்டிட்டுப் போமா' என்றார் சிவாவின் தாய். 'அப்படிலாம் பேசாதிங்கம்மா. அடுத்த வருஷம் இந்நேரம் உங்க பேரன் உங்க மடில தவழுவான். சரியா?' எனக் கூறி சிரிக்க, 'உன் வாய் முகூர்த்தம் பலிக்கட்டும்மா' என்றதோடு கவிதாவையும் மனதார வாழ்த்தினார்.

'கவி நான் பங்சனுக்கு வரலடி. அங்க வந்த ஆளாளுக்கு எதாச்சும் பேசுவாங்க. அதனால ரெண்டு பேருக்குமே கஷ்டம் நான் வரலடி ப்ளீஸ்'

'இதோ பாருடி பேசுறவன் ஆயிரம் செய்வான். அதெல்லாம் கணக்கெடுத்தா வாழ்க்கையில நிம்மதியாகவே இருக்க முடியாது. நீ வரலன்னா இனி உன் மூஞ்சிலையே முழிக்க மாட்டன் பாத்துக்க' என கவிதா முகத்தைத் திருப்பிக் கொண்டாள். 'ஏன்டி உனக்குத் தான் எந்த நல்லதும் நடக்க மாட்டேங்குது. இப்படி நல்லது நடக்குற இடத்துக்குப் போயிட்டு வந்தா உனக்கும் எதாச்சும் நல்லது நடக்க வாய்ப்பிருக்குல்ல. அவளும் வர சொல்லி இவ்வளவு தூரம் கெஞ்சுறா. போயிட்டு வா' என்று சிவாவின் தாய் கூற அரைமனத்துடன் கிளம்பினாள் ரேகா.

அங்கே நடந்த கவிதாவின் மாமியாரின் சம்பாஷனைகளால் மனமுடைந்து போனாலும் அவை எதனையும் வெளிக்காட்டுக் கொள்ளாமல் சிரித்த முகத்துடன் வலம் வரும் ரேகாவின் இவ்வேதனை கவிதாவிற்கும் புரியாமல் இல்லை. தன் நண்பிக்குக் கூடிய சீக்கிரத்தில் குழந்தை கிடைக்க வேண்டுமென அவள் மனது வேண்டிக் கொண்டது.

இவ்வாறு வழமையான குத்தல், வேதனைகள் என ரேகாவின் வாழ்க்கை பயணித்துக் கொண்டிருந்தது. திருமணம் முடிந்து மூன்று வருடங்களாகியும் இன்னும் அவளுக்கென்று ஒரு குழந்தை கூடப் பிறக்கவில்லை. 'ஏங்க, நம்ம வேணா ஒரு டாக்டர் கிட்ட செக்கப் போயிட்டு வருவமா?' 'ஏமா அதெல்லாம் ஒன்னும் வேணாம். நக்கு எப்போ குடுக்கனுன்னு அந்த கடவுளுக்குத் தெரியும். அப்போ பெத்துக்கலாம். நீ தேவையில்லாம எதையும் யோசிச்சு மனசக் குழப்பிக்காத' என்று அவளை அணைத்துக் கொண்டு 'என்ன மன்னிச்சுரு ரேகா எல்லாப்பிரச்சினையும் எங்கிட்டத் தான் இருக்கு. ஆனா கூடிய சீக்கிரம் அதெல்லாம் சரியாயிருன்னு டாக்டா சொல்லிருக் காங்க. இத வெளிய சொல்லி என்ன எல்லாரும் தப்பா பாக்குறது எனக்குப் பிடிக்கல. அதனால தான் யாருகிட்டையும் சொல்லாம எனக்குள்ளேயே வச்சிருக்கன. என்ன மன்னிச்சிருமா' என்று மனதிற்குள் அழுது கொண்டிருந்தான் சிவா.

மறுநாள் ரேகா வழமை போல வேலைக்குச் சென்றாள். அங்கு வழமைக்கு மாற்றமாக கவிதா தன் குழந்தையுடன் வந்திருந்தாள்.

'ஏய், என்னடி குழந்தைய ஒபிஸ்*க்குக் கொண்டு வந்திருக்க?'

'ஆமாடி. அத்தை' மாமா எல்லாருமே ஊருக்குப் போயிருக்காங்க. அவரும் வேலைக்குப் போயிட்டாரு. அதனால தான் இன்னைக்கு ஒரு நாளைக்கு குழந்தையை கொண்டு வர வேண்டியதாப் போச்சு' என்றாள்.

'ரேகா புள்ளையப் பாத்துக்கடி முக்கியமான பைல்ஸ் சப்மிட் பண்ண வேண்டியிருக்கு. கொடுத்துட்டு வந்துடுறன்.

'அதுக்கென்னடி தாராளமாகப் பாத்துக்குறன். நீ பொறுமையா வா' என்று குழந்தையைத் தூக்கிக் கொஞ்சிக் கொண்டிருக்கும் போது தவறுதலாகக் குழந்தை கீழே விழுந்து கையில் சிறிய கீறல் ஏற்பட வீறிட்டு அழுதது. அழுகுரல் கேட்டு அங்கு ஓடிவந்த கவிதா 'என்னடியாச்சு? ஏன் இப்படி அழுது?' என்று கேட்டாள் பதற்றத்துடன். 'லேசா கை தவறிடுச்சு கவி'

'கை தவறிடுச்சுன்னு எவ்வளவு அசால்டா சொல்ற? ஒன்று கிடக்க ஒன்று நடந்தா நீயா என் குடும்பத்துக்குப் பதில் சொல்லுவ? அது சரி, முன்ன பின்ன புள்ள தூக்கிப் பழக்கமிருந்தா தான இதெல்லாம் தெரியப்போகுது?' என வார்த்தைகளைப் பொரிந்து தள்ளிவிட்டுக் குழந்தையுடன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள். யார் எத்தனை தடவை காயப்படுத்தினாலும் கவிதாவின் ஆறுதல் வார்த்தைகளே இதுவரை அவளை சமாதானம் செய்து வந்தாலும் அந்த ஆறுதலே இன்று அவளது காதுகளில் அம்பாகப் பாய நொறுங்கி விட்டாள் ரேகா. தவறுதலாகத் தான் செய்த காரியத்திற்கு கவிதா அவ்வாறு கூறியதும் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. ஒபீஸிலும் அனைத்து வேலைகளையும் செய்யும் தன் மருமகள் இன்று எதுவுமே செய்யாது அமைதியாக, அதுவும் அழுது கொண்டிருந்தது அவளது அத்தைக்கு அதிசயமாக இருந்தாலும் எதுவும் கேட்காது நடப்பதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

சிவா வேலை முடிந்து வந்த 'ரேகா காபி கொண்டு வா' என்றான். உள்ளிருந்து காபிக்குப் பதிலாக ரேகாவின் விசும்பல் சத்தமே வந்தது. 'என்னம்மா நீங்க எதாச்சும் சொன்னிங்களா?' என்றான் கோவத்துடன். 'என்ன குறை சொல்றதே உனக்கு வேலையா போச்சு இல்லடா? அவ எப்போ என்ன நிலைல இருப்பான்னு யாருக்குத் தெரியும். எங்க கிட்டலாம் அந்த மகாராணி எதுவும் சொல்ல மாட்டாங்க. நீயே உள் ஆசைப் பொண்டாட்டிக்கிட்டப் போய் கேட்டுக்கோ. யாரு கிட்ட சரி புள்ள இல்லையேன்னு பொழம்பி திட்டு வாங்கிட்டு வந்திருப்பா' என்று கூற,

'போதும் நிறுத்துங்க அத்த ....... புள்ள இல்ல, புள்ள இல்லன்னு எத்தன காலத்துக்குத் தான் என்ன இப்படியே குத்திக் காட்டிப் பேசிட்டிருப்பிங்க? ஒரு வேளை என் லைப் புல்லாவே எனக்குப் புள்ள பிறக் கலன்னா அதுக்கு நானா பொறுப்பு? நான் ஆசப்பட்டா புள்ள வேணாம்னு இருக்கன். உங்களுக்கு பேரப்புள்ள இல்லன்னு வர்ற கவலைய விட எங்களுக்குப் புள்ள இல்லையேன்னு வர்ற கவலை அதிகம். அத மொதல்ல புரிஞ்சுக்குங்க. இன்னும் எத்தன காலத்துக்குத் தான் புள்ள இல்லன்னு பொம்பளைங்களத் தப்பு சொல்லிக் குத்திக் காட்டப் போறீங்க? ஏன் ஆம்பளைங்களுக்கு, அதுலையும் உங்க புள்ளைக்கு எந்தக் குறையுமே இருக்காதா? உங்க பையன் கிட்ட குறை இருந்து எங்களுக்குப் புள்ள பிறக்கலன்னா என்ன பண்ணுவீங்க? சொல்லுங்க அத்த?'

'போதும் நிறுத்தடி.... நீ மலடியா இருந்துட்டு என் பையன் குத்தம் சொல்றியா? எங்க உன்ன குறை சொல்லி என் பையனுக்கு வேற கல்யாணம் பண்ணி வச்சுருவன்னு பயப்படுறியா? அப்படி ஒரு காரியத்த கூடிய சீக்கிரம் பண்ண தான்டி போறன். பாத்துட்டே இரு.... என் குடும்பத்துக்கு ஒரு வாரிசுப் பெத்துக் குடுக்க வக்கில்ல நீ எல்லாம் பேச வந்துட்ட?' என்றதும் 'அம்மா!......' என அலறினான் சிவா.

'இதுக்கு மேல ஒரு வார்த்த அவளப் பத்தி தப்பா பேசுனீங்க இங்க நடக்குறதே வேற'

'என்னடா அப்படி அவள தப்பா சொல்லிட்டன்? நமக்கு ஒரு வாரிசுப் பெத்து தர ஏலாத மலடி தான அவ'

'போதும்மா... போதும்....' என்று சத்தம் போட்ட சிவா கோபத்தில் அருகிலிருந்து மீன் தொட்டியைக் கீழே தட்டி விட்டான். நீண்ட நேர மௌனத்தின் பின் 'மலடி மலடின்னு சொல்றிங்களே உண்மையல மலடி அவ இல்ல. குறை இருக்கிறது முழுக்க முழுக்க எனக்கு..... அதாவது உங்க பையனுக்கு' என்றான்.

'என்னடா! புதுக்கத சொல்ற? உன் பெண்டாட்டியக் காப்பாத்துறதுக்காக பழிய உன் மேல போட்டுக்குறியா? இதெல்லாம் வேற யாருகிட்ட சரி சொல்லு'

'அம்மா இது ஒன்னும் புது கதையுமில்ல.... அவள நான் காப்பாத்தவும் இல்ல. இது எல்லாத்துக்கும் நீங்க செஞ்ச பாவம். அது இப்போ என் வாழ்க்கைய ஆட்டிப் படைக்குது'

'என்னடா உளற்ற? புத்தி கித்தி பேதலிச்சுட்டா உனக்கு? நான் உனக்கு என்ன பண்ணன்?'

'என்னம்மா பண்ணல நீங்க? பிறந்ததுல இருந்து பணம் பணன்னு அப்பாக் கூட டெய்லி சண்ட போட்டு அவர் பணம் தரலன்னதும் என்னைப்போட்டு அடிச்சு சித்ரவத பண்ணிங்க. உங்கள தொல்ல தாங்க ஏலாம நான் குடிக்க ஆரம்பிச்சன். அதனோட விளைவு இன்னைக்கு ஆண்மைக் குறைபாடுன்னு ஒரு பிள்ளையைக் கொடுக்க வக்கில்லாம இப்படி வந்து நிற்கின். ரேகா மட்டும் என் லைப்ல வரலன்னா இந்நேரம் ஏதாவது தெருவுல குடிச்சுட்டு கிடந்திருப்பன். அவ வந்த டைம் நான் முழு மனுசனா மாறுனன். ஆறுதலா ஒரு வார்த்த பேசக்கூட ஆள் இல்லாம பைத்தியக்காரன் மாதிரி அலைஞ்சு திரிஞ்சப்ப தான் என் ரேகா எனக்கு அடைக்கலம் கொடுத்து என்னக் காப்பாத்துனா.

கல்யாணம் ஆன கொஞ்ச நாள்லயே எனக்குத் தெரிஞ்ச அறிகுறியினால டாக்டர் கிட்டச் செக்கப் போனன். அவரு தான் குடிபோதை, மனஉளைச்சல் எல்லாம் உங்களோட ஆண்மைக்குப் பாதிப்ப ஏற்படுத்திருக்கு....... முயற்சி செஞ்சா மட்டுந்தான் இதுல இருந்து வெளில வரலான்னு சொல்லி அதுக்குரிய ட்ரீட்மென்ட் எல்லாம் தந்திருக்காரு. பாவம் என்னால ரேகா ரொம்ப கஷ்டப்பட்டுட்டு வர்றா. ஒரு புருஷனா அவளுக்குக் கொடுக்க வேண்டிய எதையுமே என்னால ஒழுங்காகக் கொடுக்க முடியல. விஷயம் தெரிஞ்சா எல்லாரும் என்னக் கேவலமாகப் பேசுவாங்கன்னு யாருக்குமே இதப்பத்தி சொல்லல.என்ன மன்னிச்சிரு ரேகா. எல்லாம் சரியாயிடுன்னு தான் இவ்வளவு காலம் நான் அமைதியா இருந்தன். ஆனா இப்போ எல்லாமே கைமீறிப் போறத என்னால பார்த்துட்டு இருக்க முடியல. இன்னைக்கு ஒபிஸ்ல நடந்தத கவி போன் பண்ணி சொன்னாள். கண்டவ எல்லாம் கேவலப்படுத்துற அளவுக்கு என் ரேகா ஒன்னும் மலடி இல்லன்னு சொல்லிட்டுத் தான் வந்தன். இவ்வளவு நாளும் உன்கிட்ட இந்த விஷயத்த மறச்சதுக்காக என்ன மன்னிச்சிரு ரேகா' என தன் மனக்குறையைக் கொட்டியவனாக ரேகாவைக் கட்டியணைத்தான் சிவா.

கணவனது அணைப்பில் தன் கஷ்டங்களை மறந்த ரேகா கண்களைத் துடைத்துக் கொண்டு, 'இப்போ என்ன சொல்றீங்க அத்தை? உங்க பையனுக்குக் குறை இருக்குறதனால எனக்கு வாரிசத் தரமுடியலையேன்னு நான் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கவா? அதெப்படி அத்தை எல்லா அம்மாக்களுமே தன் பையன மட்டும் முக்கியப்படுத்தி அவனுக்கு வர்ற பொண்டாட்டிய எதிரியாவே பாக்குறீங்க?' எனக் கேட்டுப் பதில் கூற முடியாது தலையைக் குனிந்து கொண்டார் சிவாவின் தாய்.

'அம்மா! இதுவரைக்கும் உங்களால நாங்க பட்ட கஷ்டம் போதும். அப்பாவ இழந்ததுக்கப்பறம் நீங்க மாறுவிங்கன்னு நம்பித்தான் இத்தன காலமும் உங்களோட இருந்தன். ஆனா ஆரம்பத்துல எப்படி இருந்தீங்களோ அதேமாதிரித்தான் இன்னைக்கு வரைக்கும் இருக்கிங்க. இனியும் ரேகா இந்த வீட்ல இருந்தா இப்போ நான் பேசுனதுக்கும் அவ தான் காரணம்னு அவளக் குத்திக்காட்டியே கொன்னுடுவீங்க. அதனால இத்தன நாளும் பேரப்பிள்ளை இல்லன்னு தவிச்சிட்டு இருந்த நீங்க இனி பெத்த பிள்ளையும் இல்லன்னு நினைச்சுக்குங்க' என்று கூறிய வேகத்திலே தன் அன்பு மனைவியுடன் அவ்வீட்டை விட்டுச் சென்றான்.

இதுவரை தன்னை எதிர்த்து ஒரு வார்த்தை கூடப் பேசாத தன் அன்பு மகன் இனி குழந்தை பிறக்கும் வரை தன் முகத்தில் முழிக்கப்போவதில்லை என்று சபதம் எடுத்து வீட்டை விட்டுச் சென்றதை இமைக்க மறந்து பார்த்துக் கொண்டிருந்தார் சிவாவின் தாய். இத்தனைக்கும் தனது தவறே காரணம் என உணர்ந்த அவர் தன்னையே நொந்து கொண்டார். இவ்வாறு நாட்கள் கழிந்தன. ரேகா வேலைக்குச் செல்வதை நிறுத்தவே, தன்னால் தான் அவள் வேலைக்கு வருவதில்லை என்பதை கவிதா புரிந்து கொண்டாள். தான் பேசியது தவறென மன்னிப்புக் கேட்டு மீண்டும் வேலைக்கு வருமாறு அழைத்தாள்.

'இல்ல கவி, என்னால திரும்பவும் அந்த வேலைக்கு வர முடியாது. எனக்கு உன்மேல எந்தக் கோவமும் இல்ல. ஆனா என்ன ஒன்று இத்தனை நாளும் அடுத்தவங்க குத்திக் காட்டிப் பேசும்போது எனக்குத் துணையா இருந்த ப்ரண்டுன்னு ஒருத்தி இப்போ இல்ல. அவ்வளவு தான்'

ஏன்டி இப்படிப் பேசுற? நான் அப்படிப் பேசுனது தப்புத்தான். என்ன மன்னிச்சிரு ப்ளீஸ்... ஏதோ குழந்த மேலே இருந்த பாசத்துல, அதுக்கு எதாச்சும் நடந்துருமோன்னு பயத்துல அப்படிப் பேசிட்டன். என்ன மன்னிச்சிரு ரேகா. நீ வேலைய விட்டு நின்னதுக்கு நான் தான் காரணம்னு என் மனசுக்கு உறுத்தலா இருக்குடி'

'வேலைக்கு வராம இருந்தா உன் மனசு மட்டுந்தான் உறுத்தும். அதுவும் கொஞ்ச நாள்ல சரியாகிடும். ஆனா நான் அதே வேலைக்குத் திரும்பவும் வரும்போது, அவங்க என்ன சொல்வாங்க? இவங்க என்ன சொல்வாங்கன்னு பயந்து பயந்தே சாகனும். அதுக்கு என் வீட்ல, என் புருசனோட நான் நிம்மதியா இருந்துருவன்'

'ஏன்டி! நான் இருக்கும்போது இந்தக் கவி இருக்கும் போது யாரு உன்ன கிட்ட அப்படிப் பேசுவாங்க?'

'இவ்வளவும் பேசுற அந்தக் கவியே அன்னைக்கு அப்படிப் பேசும் போது அடுத்தவங்க பேசுறதுக்கு நேரமா எடுக்கும்?' என்று நக்கல் கலந்த பார்வையாய் ரேகா கவிதாவைப் பார்க்க, மௌனமே

(...80...ம் பக்கம் பார்க்க)

# பொன்விழா காணும் நட்பின் நாயகன் நண்பன் லோகன் லோகேந்திரலிங்கம்



கலை, இலக்கிய, பத்திரிகை துறைகளில் ஐம்பது ஆண்டுகள் அயராது இயங்கி, பணியாற்றி, பொன்விழா காணும் எனது இனிய நண்பர், நட்பின் நாயகன் திரு. ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு வாழ்த்து சொல்லும் தருணம் இது. “மலையன்பன்” என்ற பெயரில் தாயகத்தில் இருக்கும் போதே பத்திரிகைகளில் பல படைப்புகளை எழுதிய படைப்பாளி. எழுபதுகளில் கல்முனை பிராந்தியத்தில் மின்சார திணைக்களத்தில் இவர் பணிபுரிந்தபோது அனைத்து ஊர்களுக்கும் பணி நிமித்தம் சென்று வருவார். எனது ஊரான திருக்கோவிலுக்கும் வருவார். ஊரில் நான் ஒரு கலை நிகழ்ச்சி செய்தபோது (மறைந்த நண்பர் கே. எஸ். ராஜாவுடன்) அந்த நிகழ்ச்சிக்கும் வந்திருக்கின்றார். அப்போதே கலை இலக்கியத்தில்மிகுந்த ஈடுபாட்டோடு இருந்தவர். நாட்டில் ஏற்பட்ட அசாதாரண நிலையால் நாட்டைவிட்டு புறப்பட்டு கனடாவுக்கு புலம்பெயர்ந்தார்.

கனடாவுக்கு வந்தும் தமிழ் பற்றும், இலக்கிய ஆர்வமும், படைப்பாற்றாலும் அவரை பத்திரிகைத் துறையில் கால்பதிக்க வைத்தது. இவர் “உதயன்” வாரப் பத்திரிகையை ஆரம்பித்து அதற்கு கடந்த வருடம் வெள்ளிவிழாவும் கண்டார். 26 ஆண்டுகளாக இந்த பத்திரிகையை மிக சிறப்பாக அதன் ஆசிரியராக, வெளியீட்டாளராக இருந்து நடத்திக்கொண்டு வருவது சாதாரண விசயமில்லை. இது ஓர் இமாலய சாதனை என்றே சொல்லுவேன். நானும் ஆரம்பத்தில் பத்திரிகைத் துறையில் இருந்தவன் என்ற அனுபவத்தில் இதை என்னால் உணரமுடியும். அந்த வகையில் நண்பர் லோகன் அவர்கள் பாராட்டுகளுக்கும், வாழ்த்துகளுக்கும் பாத்திரமானவரே. இவருக்கு பல நாடுகளில் பாராட்டுகளும், விருதுகளும் கிடைத்திருக்கின்றன. ஒருமுறை எனக்கும், இவருக்கும் அவுஸ்திரேலியாவில் வாழ்நாள்சாதனையாளர் விருது கிடைத்தது. கனடாவிலிருந்து அவரும், லண்டனிலிருந்து நானும் சென்று அந்த விருதைப் பெற்றோம். அவை மறக்கமுடியாத தருணங்கள். அவர் விருதுகள் பெறுவது ஒருபக்கம் என்றால் இவர் தனது “கனடா உதயன்” பத்திரிகை விருதுகளை வருடா வருடம் கொடுப்பது மறுபக்கம். ஆம் வருடா வருடம் கனடா விருதுகளை சர்வதேச ரீதியில் இவர் வழங்கி வருகிறார். இந்த கனடா உதயன் விருது எனக்கும் 2017ல் இவரால் வழங்கப்பட்டது. விருது வழங்கும் விழாக்களை மிக சிறப்பாக செய்து முடிப்பதில் நண்பன் லோகனுக்கு நிகர் அவரே. இவர் உதயன் பத்திரிகையில் வாராவாரம் “கதிரோட்டம்” என்ற தலைப்பில் எழுதிவரும் ஆசிரியர் தலையங்களை தொகுத்து “இதுவரை” என்ற நூலை 2013ல் பதிப்பித்து வெளியிட்டார். இந்த நூலை அறிமுகம் செய்ய லண்டன் வந்திருந்தார். அந்த நேரம் இவருடன் இருந்த தருணங்கள் அலாதியானவை. அவ்வப்போது எனது கட்டுரை, கவிதை, சிறுகதை என்று எனது படைப்புகளும் இவரது உதயன் பத்திரிகையில் வருவதுண்டு. எனது நூல்கள் கனடாவில் அறிமுகம் செயப்படும்போதெல்லாம் தனது ஆதரவையும், ஒத்துழைப்பையும் தருபவர். தனது கடின உழைப்பால் ஐம்பது ஆண்டுகள் கலை, இலக்கிய, பத்திரிகைத் துறையில் பயணித்து பொன்விழா காணும் எனது அன்பு நண்பன் லோகேந்திரலிங்கம் அவர்களை மனதார வாழ்த்தி மகிழ்கின்றேன்.

**கோவிலூர் செல்வராஜன்**

*இலண்டன்*



## கவிதை உறவு

மனிதநேய இலக்கியத் திங்களிதழ்

ஆசிரியர் : கலைமாமணி ஏர்வாடி எஸ்.இராதாகிருஷ்ணன்

420இ, மலர் குடியிருப்பு, அண்ணாநகர் மேற்கு, சென்னை 600040

21 05 2022

### வாழ்த்துச் செய்தி

என் இனிய நண்பர் பத்திரிகையாளர் கவிஞர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் அறிமுகம் என் மணிவிழாவுக்குப்பின் வாய்த்த மணியான பேறு. இளமையிலேயே இருவரும் சந்தித்திருக்கலாமே என்று அந்த தாமத்தை நிந்திக்க வாய்ப்பில்லாமல் நூறாண்டு பழகிய நிறைவை கவிதையிலும் உறவிலும் அவர் ஏற்படுத்தியிருப்பது அவரது பேராற்றலும் பண்பு நலன்களும் தான்.

தேனீயைப் போல எப்போதும் அவர் சுறுசுறுப்பாக இருப்பது மட்டுமல்ல அதன் பயனைச் சமூகத்துக்கும் கொண்டு செல்வதில் அவர் தனித்திருக்கிறார். என்னை அவருக்குப் பிடிக்கும் என்பதைப்போல அவரையும் எனக்குப் பிடிக்கும். அதன் காரணமாகவே நான் ‘கவிதை உறவு’ மாத இதழில் எழுதி வரும் மனத்தில் பதிந்தவர்கள் தொடரில் அவர் குறித்தும் எழுதி அகம் மகிழ்ந்திருக்கிறேன். மிக அபூர்வமானவர்களே இத்தொடரில் இடம்பிடிக்க முடியும் என்பதை என் நட்பு வட்டம் அறியும்.

கவிஞர் லோகேந்திரலிங்கம் அவர்களின் படைப்பாற்றல் என்னை பிரமிக்க வைத்திருப்பதில் வியப்பில்லை. எளிமையான சொற்கள், இதமான நடை, எடுத்துக்கொண்ட செய்தியை இதயம் தொடக் கொண்டு செல்லும் லாவகம் யாவும் அவரது திறன்கள் எனலாம். சமூகத்தைப் படம் பிடிக்கிற பாட்டுத் திறனும் மனித நெஞ்சங்களில் இடம்பிடிக்கிற பண்பு நலன்களும் பொதிந்த கவிஞர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் எழுத்துப் பொன்விழா காண்பதோடு இலங்கைச் சிறப்பிதழையும் கொணர்கிறார் என்றறிய மகிழ்ச்சிடைகிறேன். பொன்விழா வளர்ந்து நூறாண்டு நிறைய வாழ்த்தி மகிழ்கிறேன். நலத்தோடு அவர் நீடுவாழும் காலம் தமிழுக்கும், தமிழ்ச் சமுதாயத்துக்குமான கொடை. இக்கொடையை அவர் தந்து மகிழ இறையருள் வேண்டுகிறேன்.

என்றும் அன்புடன்,

(ஏர்வாடி எஸ். இராதாகிருஷ்ணன்)

## வாழ்த்துரை

**சிறுகதை போட்டிகள் வைத்து பல சிறுகதையாளர்களையும், நாவலாசிரியர்களையும் உருவாக்கிய பெருமை ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்களையே சேரும்.**



பல வருடங்களுக்கு முன்னர் நான் ஒரு கவிதையை சந்தித்தேன். அப்பொழுது மிகவும் பிரபலமானது.

***இலஞ்சம்***

அந்தப் பதவிக்கு

அவர்கள் கேட்டிருந்த

ஆகக் குறைவான உயரம் எனக்கில்லை.

வந்திருந்த நண்பன் வழிசொல்ல

ஐயாயிரம் ரூபாய் பணக்கட்டு

ஒன்றின்மேல்

ஏறி நின்ற வண்ணம்

என்னை அளக்க விட்டேன்

உயரம் அப்போது சரியாக இருந்தது.

அதன் பின்னர்தான் கவிதை எழுதியவரை சந்தித்தேன். மலையகத்தில் பிறந்த அவருடைய புனைபெயர் “மலையன்பன்” என்றார். அவர் வேறு யாருமல்லல. கவிஞர், எழுத்தாளர், பேச்சாளர் பத்திரிகையாளரான ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள்தான்.

இவர் கனடாவில் 25 வருடங்களாக தொடர்ந்து “உதயன்” பத்திரிகையை நடத்தி வருகிறார். வாரம் ஒன்று என வருடத்தில் 52 இதழ்கள், அப்படியே தொடர்ந்து 25 வருடங்கள். மிகப் பெரிய சாதனை. பத்திரிகை மட்டும் நடத்தாமல் சிறுகதை போட்டிகள் வைத்து பல சிறுகதையாளர்களையும், நாவலாசிரியர்களையும் உருவாக்கிய பெருமை இவரையே சேரும். அத்துடன் இலங்கையிலிருந்தும், இந்தியாவிலிருந்தும் எழுத்தாளர்கள், கல்வியாளர்கள், அறிஞர்கள் ஆகியோரை வரவழைத்து கனடாவின் அறிவியக்கம் வளர பங்களித்தவர்.

இவரை சந்திக்கும்போது பத்திரிகை துறையில் ஏற்படும் சிக்கல்கள் பற்றி பேசுவார். அவருடைய வெற்றிக்கு காரணம் “தடைகள் என்பவை மாறுவேடத்தில் வரும் வாய்ப்புகள்” என்று உணர்ந்து தக்க நடவடிக்கை எடுத்து அவற்றை தாண்டிச் செல்லும் இவரது மதிநுட்பம்தான்.

திரு. லோகேந்திரலிங்கம் அவர்கள் முன்னெடுக்கும் “உதயன் இலங்கைச் சிறப்பிதழுக்கு” என் மனமார்ந்த வாழ்த்துகள்.

**அ.முத்துலிங்கம்**
**எழுத்தாளார், கனடா**

(_38_ பக்கம் தொடர்ச்சி)

# அடக்கமும் முடக்கமும்

- கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ் -

---

மேலிடத்துத் தீர்மானமாம். பீசீஆர் பொஸிடிவ் காட்டினால் எவராயிருந்தாலும் உடல் எரிக்கப்படுமாம். அவ்வாறான உடல்களை அடக்கம் செய்வதற்கு சுகாதாரப் பகுதியினர் அனுமதி தரவில்லையாம். உறவினர்களிடம் 'பொடி' வழங்கப்படவும் மாட்டாதாம்.

இந்தப் பிடிவாதத் போக்கினால் ஐம்பதுக்கு மேற்பட்ட முஸ்லிம்கள் இதுவரை எரிக்கப்பட்டு விட்டனர். சாதாரண நோயாளி கூட ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டால் 'பொஸிடிவ்' வாகி கொரோனா நோயாளியெனப் பிரகடனப் படுத்தப்படும் அவலம் ........ சமூகத்தவர்களின் உணர்வுகளெல்லாம் கொதித்துக் காணப்பட்டது. ஜடீஎச் ஆஸ்பத்திரியிலிருந்து எரிப்பதற்காக எடுத்துச் செல்லப்படும் காட்சிகள் தொலைக்காட்சி அலைவரிசைகளில் காட்டப்பட்டபோது கண்ணீர் வடிக்காதவர்கள் இல்லை; சாபமிடாதவர்கள் இல்லை.

உயர் மட்டத்தினரோடு மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தைகள் எதுவுமே பலனளிக்கவில்லை. கொரோனாவால் இறந்தவர்களின் உடல்களை அடக்கம் செய்வதனால் கொரோனா பரவப் போவதில்லையென இன நட்புறவை விரும்பும் பிறமத சகோதரர்கள், புகழ்பெற்ற மருத்துவர்கள், துறைசார் வல்லுனர்கள் பலரும் ஆதாரங்களுடன் எடுத்துரைத்தும் அரசாங்கம் அசைந்து கொடுக்கவில்லை.

கொரோனாவைச் சாட்டாக வைத்து ஒரு சமூகத்தைப் பழிவாங்குவதே இதன் அடிப்படை நோக்கமென்பது வேறு கதை.

``எரித்தாலும் பரவாயில்லை சாம்பலையாவது தாருங்கள்`` என உலமா சபைத் தலைவர் கூறியது அவர்களுக்கு இன்னும் வாய்ப்பாகிவிட்டது.

இப்படியிருக்கும் போதுதான் அந்த நாள் வந்தது. இருபது நாள் குழந்தைக்குக் கூட 'பொஸிடிவ்' வாம்.

அரசியலோடு சம்பந்தப்பட்டவர்கள், சமயப் பெரியார்கள், சிவில் செயற்பாட்டாளர்கள் எடுக்காத முயற்சிகளில்லை. அந்தப் பிஞ்சை எரிக்காமல் அடக்க அனுமதி தரும்படி விடுக்கப்பட்ட வேண்டுகோள் அனைத்தும் புறக்குடத்தில் ஊற்றப்பட்ட நீராகிவிட்டது. அரசாங்கமும் சுகாதாரத் துறையினரும் ஆளுக்காள் 'போல்பாஸ்' பண்ணி நழுவி விட்டதோடு சரி. அத்தனை பேரினதும் கண்ணீருக்கு மத்தியில் கைக்குழந்தைக்கும் நெருப்பாலேயே பரிசளித்தனர்.

வீடே கதியெனக் கிடந்த தொண்ணூறு வயது பாட்டிக்கும் 'பொஸிடிவ்'வாம். இவ்வாறு தினம்தினம் கொரோனாவைக் காட்டி எரிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துச் சென்றது.

நேரம் இரவு பதினொரு மணி. பேஸ்புக்கில் இது சம்பந்தமான பதிவுகளை வாசித்துக் கொண்டிருந்த ரமீஸுக்கு வீட்டினுள்ளே இருக்கப் பிடிக்கவில்லை; மன ஆழுத்தத்தோடு வெளியே வந்தான்.

``பச்ச பாலகனுக்கேம கேம குடுத்திட்ட ஹறபா போனவனுக`` என்று சொல்லிக்கொண்டே இர்சாதும் வந்து சேர்ந்தான். அவனது குரலும் கம்மியிருந்தது.

மனதால் அழுததைத் தவிர நீண்ட நேரமாக இருவருமே எதையும் கதைக்கவில்லை.

ரமீஸ் தான் மௌனத்தைக் கலைத்தான். ``சுத்தி வளச்சி எங்களுக்கு அடிச்சி கொண்டிருச்சிய. ஒரு காலத்தில சஹ்றான வெச்சி இப்ப கொரோனாவ வெச்சி .......``

``பொதச்சா நெலத்துகுள்ளிருச்சிய தண்ணீல கொரோனா கிருமிக சேந்திடியாமே`` - இர்சாதின் உற்சாகமற்ற பதில்.

``டப்ளியூ எச் ஓவேம செல்லிய அப்பிடி கொரோனா பரவீல்லயெண்டு. லண்டன் அமெரிக்காவிலேம அடக்கியதுக்கு பேர்மிஷன் குடுத்திருச்சிய. இவங்கதான் பெரிய சயன்டிஸ்ட் ஆகப் போற ......``

ரமீஸின் குரலில் சோகம்,கவலை எல்லாம் கலந்திருந்தது.

``எங்கட நாட்டில நடக்கியது சைகலொஜி அடக் ரமீஸ், எப்பிடிசரி எங்கள பணிய போட போற...... முந்தி தமிழாக்கட தலய தின்ட. இப்ப எங்கட தலய தின்ன வார ........``

``அதுதான் இர்சாத், மினிஸ்டர்மாருகளே அநியாயங்கள ஞாயப்படுத்தி பேசிய. செல டொக்டர்மார்களும் அப்பிடிதான். பெரிய எடத்திலிருந்து கீழ வரங்காட்டும் துவேஷம். கொரானாவ பாக்க பெரிய கொரோனா அரசாங்கத்திட கொரோனா. ......``

சொல்லிக் கொண்டிருக்கையில் நண்பனொருவனிடமிருந்து ரமீஸ ுக்கு 'கோல்' ஒன்று வந்தது.

``என்தேன் கோல் ரமீஸ்?``

``செல்லி வேலில்லப்பா. அடுளாமத்தில ஒராள்ட பொடிய ஒரு மாசம் மட்டு வெச்சிருந்து இண்டக்கு பத்திச்சிட்டாம். ......`` நீண்ட பெருமூச்சுடன் கூறிவிட்டு நிறுத்தினான்.

பதிலொன்றும் கூறாது அமைதியாக இருந்த இர்சாத், ரமீஸே தொடரும் வரை காத்திருந்தான்.

``நாப்பது வயசு. மல மாதிரி இருந்த மனிஷன். கொஞ்சம் காலத்துக்கு முன்னுக்கு எங்கடூட்டுக்கும் வந்திட்டு போன. மையத்து தொழுகேம் இல்லயாம் சொந்த மகனுக்கேம பாக்க எடமுடோம் இல்லயாம்.``

``நேத்து போட்டிருந்த பேஸ்புக்ல முந்நூறேம் தாண்டீட்டாம் எங்கடாக்க. பொஸிடிவ் பொஸிடிவ் எண்டு செல்லி சும்மிருச்சியவங்களேம் சுடுகிய .....`` அதற்கு மேல் இர்சாதால் கதைக்க முடியவில்லை.

``ஓட்டமாவடீம் விருப்பத்தோட தந்ததில்லயெலீன்! இம்ரான்கான் வராட்டி அதுமில்ல``

``இப்ப தண்ணீல கிருமிக கலக்கியில்லயோ தெரியா? ஒரு மண்ணங்கட்டியும் இல்ல எல்லம் துவேஷ நாய்கள்ட சதித்திட்டம்........``

கோபத்துடன் இர்சாத் சொல்லி முடிப்பதற்குள் குறுக்கிட்டான் ரமீஸ். ``பிளச்ஜ வரோணும், கொரனர்ட ரிபோட் வேணும், அவங்க துவேஷ காரனுகளெண்டா எல்லம் நடந்த மாதிரிதான்!``

``அது மட்டுமோ ரமீஸ், தேவபட்டா வேண்டிய நேரத்தில அடக்கிய அனுமதிய ரிடன் எடுக்கோம் ஏலுமெண்டு மினிஸ்டர்ட வாயாலேம செல்லீட்ட.``

``இவனுகட திமிர் மட்டும் போறில்ல. அல்லா நெனச்சா மறுபொக்கம் பெரட்டியதுக்கு ஒரு செக்கன் போதும்``

ரமீஸின் பேச்சுக்கு இர்சாதும் தலையாட்டினான்.

``அநியாயமா மனிஷருகள பத்தேச்சத்த எனக்கெண்டா உசிரிருச்சங்காட்டும் மறக்கேலா. கொஞ்சம் சரி மனிஷதனம் இல்லாம .......``

``ஒனக்கு மட்டுமில்ல இர்சாத், ஒத்தருமே இத சரிகாணீல்ல. சிங்களாக்கட ஓட்டு கெடச்சுமெண்டு நெனச்சிகொண்டு எங்கள பிலீக்கு குடுக்கிய. இந்த பருப்பு எந்த நாளும் வேகீல்ல. எழுதி வெச்சிக்கோ சிங்கள மக்களேம இன்னம் கொஞ்சம் காலத்தில ரோட்டுக்கெறங்கி அடிச்சி வெரட்டிய.``

``நாங்களும் அதில சேந்து கொளத்தான் வேணும்`` எனக் கூறிக் கொண்டே இர்சாத் விடைபெற்றான்.

அவர்களது மனோநிலை போலவே, பெரும் மழையொன்று கொட்டப் போவதை முன்னறிவிப்பு செய்வது போல் வானமும் இருண்டு காணப்பட்டது.

## உள்ளிருந்து ஒலிக்கும் குரல்

*மாதராய்ப் பிறக்கவே*
*மாதவம் வேண்டுமம்மா*
*என்றுரரத்த பாரதியே!*
*இன்று நீர் இருந்திருந்தால் - ஏனம்மா நீ*
*மாதராய்ப் பிறந்தாயென்று கேட்டிருப்பீரோ!*

*பள்ளி செல்லும் மழலையும்*
*பாடம் சொல்லும் ஆசானும்*
*ஊட்டி வளர்த்த அன்னையும் - இன்று*
*பாகுபாடில்லாமல் சிக்குகிறார்கள்*
*காமர்களின் கொடூர வலையில்*

*அப்பா, அண்ணா, மாமா என்றாலும்*
*சும்மா விடு தாத்தா என்றாலும்*
*உடலின் வேட்கை உலகை மறக்க*
*இங்கு சிதைந்தே போகிறது*
*உறவும் முறையும்*

*பெற்ற தந்தையையும்*
*உடன் பிறந்த தமையனையும்*
*பத்தடி தூரம்*
*தள்ளி நின்று பார்க்க வைத்த*
*மோகப் பிரியர்களே!*

*நீங்கள் ஆளத் துடிக்கும்*
*பிறப்பு மேனியில் இருந்து தான்*
*நீங்களும் பிறந்தீர்கள்*
*என்பதனை உங்கள் பசி மறக்க வைத்ததோ???*

*பசி வந்தால் பத்தும் பறக்கும் என்பார்களே*
*உங்கள் பசியில் பறப்பதோ*
*துள்ளித் திரியும்*
*பெண்மைகள் அல்லோ!*

*கானுங் கிழவரெலாம் காமனாகவே பிரதிபலிக்கும்*
*இந்த மானங் கெட்ட மனித மிருகங்கள் மத்தியில்*
*ஆஷிபா, தீபா, வித்யா, சபியா என்ற*
*வரிசையில் மட்டும் - ஏனில்லை*
*இன, மத பாகுபாடு???*

*காளி உருவெடுத்து*
*சுட்டுச் சரித்த பூலான் தேவிக்கே*
*கிடைத்திடாத நியாயம்*
*நசுக்கப்பட்ட இந்தப் பச்சைப் புழுக்களுக்கா*
*கிடைத்திடப் போகிறது???*

*பேச முடியவில்லை - அதனால் தான்*
*உளறுகிறேன் காகிதத்திடம் ....*
*கடவுளிடம் நன்றி சொல் காகிதமே*
*நீயும் பெண்ணாகப் பிறக்காததை எண்ணி*

*இல்ரையேல் என்றோ ஓர்நாள்*
*உன்ரனயும் கசக்கி எறிந்திருப்பார்கள்*
*இப்பாழாய்ப் போன பூவுலகில்....*

**என்.எஸ். சதீகா ரஸ்லி**
**புத்தளம் , றசூல் நகர்**

(70ம் பக்கத் தொடர்ச்சி)

# மொந்தையும் பழசு, கள்ளும் பழசு!

(3) இடைக்கால நிர்வாகத்திற்கு ஆலோசனை வழங்க ஒரு நிபுணர் குழு
(4) நாடாளுமன்றத்தில் எட்டப்பட்ட கருத்தொற்றுமையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தேசியக் கொள்கையைப் பின்பற்றுவதற்கு இடைக்கால அனைத்துக் கட்சி நிர்வாகம்
(5) ஒப்புக்கொள்ளப்பட்ட முன்மொழிவுகளைப் பற்றி பொதுமக்களுக்குக் கற்பித்தல், மற்றும்
(6) இடைக்கால நிர்வாகத்தால் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கு சனாதிபதி கட்டுப்பட வேண்டும்.

ஆனால் நடைமுறையில் வழக்கறிஞர் சங்கத்தின் 13 அம்ச யோசனைகளையோ அல்லது மகாசங்கம் சமர்ப்பித்த முன்மொழிவுகளையோ கோட்டாபய - இரணில் அரசு ஏற்றுக் கொள்ளவில்லை. இலங்கை வழக்கறிஞர் சங்கமோ அல்லது மகா சங்கமோ சனாதிபதி கோட்டாபய இராசபக்ச உடனடியளாகப் பதவி துறக்க வேண்டும் என்று கேட்கவில்லை. அவரது நிறைவேற்று அதிகாரத்தை அகற்றினால் போதும் என அவை நினைக்கின்றன.



ஆனால் நிறைவேற்று அதிகாரம் படைத்த சனாதிபதி கோட்டாபய பதவியைத் துறந்து வீட்டுக்குப் போக வேண்டும் என்பதே மக்களது கோரிக்கையாக இருக்கிறது. முக்கியமாக காலிமுகத் திடலில் போராடும் போராட்டக்காரர்களது கோரிக்கையாக இருக்கிறது.

வி.புலிகளைத் தோற்கடித்தார் என்ற ஒற்றைக் காரணத்துக்கு ஆகவே சனாதிபதி தேர்தலில் சிங்கள - பவுத்த மக்கள் அவருக்கு வாக்குகளை அள்ளிப் போட்டு அவரை நாட்டின் சனாதிபதியாக அமர வைத்தார்கள். ஆனால் போரை வெல்வது வேறு நாட்டை ஆளுவது வேறு. முன்னதற்கு ஆட்பலமும் ஆயுதபலமும் இருந்தால் போதும். ஆனால் நாட்டை ஆளுவதற்கு சில சிறப்பான தகைமைகள் வேண்டும். இயற்றல், ஈட்டல், காத்தல், வகுத்தல் போன்ற கடமைகள் மன்னனுக்கு இருக்க வேண்டும்.. இவை இருந்தால் மட்டும் போதாது. அவற்றைச் செயல்படுத்துவதில் தான் ஒரு மன்னனின் திறன் அமைந்திருக்கிறது என்று குறிப்பிடுகிறார் வள்ளுவர். மேலும் கொடை வழங்குவதிலும், இரக்கம் காட்டுவதிலும், செங்கோல் செலுத்துவதிலும், குடிகளைப் பாதுகாத்தலிலும் ஒரு மன்னன் தன்செயல் திறனைக் காட்ட வேண்டும். அவ்வாறு செயல்திறனைக்காட்டுகின்றவன் அரசர்களிடையே ஒளிதரும் விளக்காகத் திகழ்வான் என்கிறார் வள்ளுவர்.

கோட்டாபய இராசபக்ச அவர்களது இரண்டரை ஆண்டு கால ஆட்சியில் நாட்டின் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குள் தள்ளப்பட்டு விட்டது. அதற்கு முக்கிய காரணம் அவர் எடுத்த தவறான முடிவுகள். இரசாயன உரத்தின் இறக்குமதிக்கு தடை விதித்தது பெரும்போக நெல்விளைச்சலை பாதியாகக் குறைத்து விட்டது. சனாதிபதியின் நோக்கம் நல்லது. ஆனால் இயற்கை வேளாண்மையை படிப்படியாக நடைமுறைப்படுத்தியிருக்க வேண்டும். 2019 இல் வட் வரி 15 இல் இருந்து 8 ஆகக் குறைக்கப்பட்டது. ஐந்து இலட்சம் வரியிறுப்பாளர்களுக்கு வரிவிலக்கு அளிக்கப்பட்டது. 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் சுமார் 1,550,000 வரி செலுத்துவோரின் எண்ணிக்கை 2020 இல் 1,036,000 ஆகவும், 2021 இல் 412,000 ஆகவும் குறைந்துள்ளது. இவற்றால் ஆண்டு தோறும் ரூபா 600 பில்லியன் வரியிழப்பு ஏற்பட்டு வரப்போகிறது.



உத்தியோகபூர்வ மதிப்பீடுகளின்படி, இலங்கையின் வெளிநாட்டுக் கையிருப்பு 2019 யூன் மாதம் $8,864 மில்லியனாக இருந்தது. 2022 சனவரியில் $2,361 மில்லியனாகக் குறைந்து இன்று ஒரு மில்லியனாக வீழ்ச்சி கண்டுள்ளது. இது ஒருநாள் இறக்குமதிக்கும் போதாது.

நாட்டில் அத்தியாவசியப் பொருட்களான வாகன எரிபொருள், சமயல் எரிபொருள், மண்ணெண்ணை போன்றவற்றுக்கு நாட்கணக்கில் மக்கள் வரிசையில் தவம் இருக்கிறார்கள். மண்ணெண்ணை இல்லாததால் மீனவர்கள் தொழில் செய்ய முடியாமல் பட்டினி கிடக்கிறார்கள்.

அதே சமயம் அத்தியாவசியப் பொருட்களின் விலையும் விஷம் போல் ஏறுகிறது. காலையில் ஒருவிலை அடுத்த நாள் இரவு முதல் இன்னொரு விலையாக இருக்கிறது. உணவுப் பொருட்களின் விலை 46.6% அதிகரித்துள்ளது. வாகன எரிபொருள் 95 ஒரு லிட்டர் ரூபா 373 இல் இருந்து இந்த மாதம் ரூபா 450 ஆக உயர்ந்துள்ளது. வாகன எரிபொருள் 92 ரூபா 338 இல் இருந்து 420 ஆக உயர்ந்துள்ளது. டீசல் 289 இல் இருந்து ரூபா 400 ஆகவும் சுப்பர் டீசல் 329 இல் இருந்து 448 ஆக உயர்ந்துள்ளது. இதன் காரணமாக தொடர்வண்டி மற்றும் இபோச பயணக் கட்டணங்கள் அதிகரித்துள்ளது. இதனால் அரசாங்கம் வெளியிட்ட தரவுகளின்படி கடந்த மார்ச் மாதத்தில் 21.5% இருந்த பணவீக்கம் ஏப்ரில் மாதத்தில் 33.8% ஆக எகிறியுள்ளது.

"நான் பதவி விலக மாட்டேன். என்னைப் பதவி விலகுமாறு சனாதிபதி கேட்கவும் மாட்டார்" என மகிந்த இராசபக்ச கடைசிவரை அழுங்குப் பிடியாக பதவியில் ஒட்டிக் கொண்டிருந்தார். ஆனால் நாடு முழுதும் வெகுண்டெழுந்த மக்களின் எதிர்ப்புக் காரணமாக தனது பிடிவாதத்தை கைவிட்டுப் பதவி துறந்தார். அது போல சனாதிபதி கோட்டாபய அவர்களும் மக்கள் கழுத்தைப் பிடித்துத் தள்ளுமட்டும் சனாதிபதி பதவியில் இருந்து விலகப் போவதில்லை என அடம் பிடிக்கிறார். இப்போது விலகினால் மரியாதையோடு விலகலாம். இல்லையேல் மகிந்த இராசபக்ச போல அவமானப்பட்டுப் பதவியைத் துறக்க நேரிடும். அவர் பதவியில் இருக்கு மட்டும் பொருளாதார நெருக்கடிக்குள் மட்டும் அல்ல பொருளாதார நெருக்கடிக்குள் இருந்தும் இலங்கையைக் காப்பாற்ற முடியாது.




(...76...ம் பக்கத் தொடர்ச்சி)

# நானும் ஒரு தாய் தான்

மொழியாய் அவ்விடத்தை விட்டு நகர்ந்தாள் அந்த ஆசைத் தோழி.

இத்தனைக்கும் கேட்டுக் கொண்டிருந்த சிவா, 'ரேகா! உனக்கு என் மேல கோவமே இல்லையா?' எனக் கேட்டான். 'நான் ஏங்க உங்க மேல கோவிக்கனும், எதுக்காக?' என்று வினவ, 'இல்லம்மா எல்லாக் குறையுமே என்கிட்டத் தான் இருக்குன்றத இத்தன நாள் யாருகிட்டையும் சொல்லாம மறச்சிருக்கன். எல்லாருமே உன் தப்பா பேசும் போது அத எப்படி தாங்கிக்குற?'

'உங்களுக்கு இப்படி ஒரு பிரச்சினை இருக்குறது எனக்கு முன்னாடியே தெரியுங்க'

'என்னது! தெரியுமா? தெரிஞ்சும் என் கிட்ட கேக்காம ஏன் அமைதியா இருந்த?'

'நீங்க என்ன விட்டுத் தள்ளிப் போகும் போதெல்லாம் என் உடம்புல தான் பிரச்சினை இருக்குன்னு நினைச்சு செக்கப் பண்ணன். அதுக்கப்பறம் தான் டாக்டா சொன்னாங்க எனக்கு எந்தப் ப்ராப்ளமும் இல்ல. குழந்தையப் பெத்து வளக்குறதுக்கான எல்லாத் தகுதியுமே இருக்குன்னு சொன்னாங்க. ஒருவேளை உங்களுக்கு எதுவும் பிரச்சினை இருக்குமோன்னு கேட்டாங்க. நானும் யார் கிட்டையும் இதப்பத்தி எதுவும் கேக்காம யோசிச்சிட்டு இருக்கும் போது தான் நீங்க செக் பண்ண ரிப்போர்ட் பாத்தன். இது ஒன்னும் அவ்வளவு பெரிய ப்ராப்ளம் இல்லங்க. ஏதோ கடவுள் நமக்குன்னு இப்போதைக்கு எதையும் தரல்ன்னு நினைச்சுக்குவன். ஆனா இதுக்காக நீங்க என்ன விட்டுத் தள்ளிப் போறது ரொம்பத் தப்புங்க. கல்யாணம் பண்ணிக்கிறது குழந்தையைப் பெத்துக்குறதுக்காகவும் சுகத்த அனுப விக்கிறதுக்காகவும் மட்டும் இல்லன்னு புரிஞ்சிக் கிட்டாலே இப்படியான எந்தப் பிரச்சினையும் குடும்பத்துக்குள்ள வராதுங்க'

'எப்படி ரேகா உன்னால இவ்வளவு சாதாரணமா பேச முடியுது?'

'என்னங்க பண்றது...... பொம்பளைங்க நாங்க வாங்கி வந்த வரம் அப்படி. வயதுக்கு வந்துட்டா சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கனும். கல்யாணமாகி இரண்டு மாசத்துலையே குழந்தை உண்டாகிரனும். இதுல எது சரி ஒன்னு ஒழுங்கா நடக்கலன்னாலும் இல்ல தள்ளிப் போச்சுன்னாலும் ஆயிரம் பேர் குத்திக்காட்டி குத்தம் சொல்ல கிளம்பிருவாங்க. அதுலையும் பையனோட அம்மாக்கள்....ஹ்ம்......ஏங்க அந்தக் கவல எல்லாம் பொண்ணு வீட்டாக்களுக்கு இருக்காதாங்க?

ஒரு பொண்ணுக்கு மட்டும் வாழவெட்டி, விதவை, மலடி, ராசி கெட்டவன்னு ஓராயிரம் பேர் சொல்லிக் கூப்பிட்ற இந்த சமூகம் ஆணுக்கு ஒரு பிரச்சினன்னா வளத்தவ சரியில்ல, வாழ வந்தவ சரியில்லன்னு அப்பவும் அந்தப் பொம்பளைங்களத் தான குத்தம் சொல்லுது. இதெல்லாம் இப்போ எல்லாப் பொண்ணுக்குமே பழகிப் போச்சுங்க. ஆனா ஒன்று.... எவ்வளவு கஷ்டம், அவமானப்பட்டாலும் அத தாங்கிக்குற மனச அந்தக் கடவுள் அதே பொண்ணுங்களுக்கு நிறையவே தந்திருக்காரு. ஆனா ஆணுக்கு அப்படி இல்லங்க. ஒரு வார்த்த இந்த சமூகம் அவனத் தப்பாப் பேசுனாலும் அவனால அதத் தாங்கிக்க முடியாது. அதுலையே மனசு உடைஞ்சு வாழ்க்கை வெறுத்துருவான். அதனால தான் எவ்வளவு கஷ்டம் வந்தாலும் என்னோடையே போகட்டுன்னு அமைதியா இருக்கன்' என்று ரேகா கூறிக் கொண்டிருக்க, அவளை இறுக அணைத்து முத்தமிட்டான்.

நாட்கள் வேகமாக சுழலவே சிவாவும் ரேகாவும் இல்லாது மிகவும் தனிமையாக உணர்ந்த சிவாவின் தாய், தான் செய்த தவறுக்காக பல தடவை அவர்களிடம் மன்னிப்புக் கேட்டு வீட்டிற்கு அழைத்த போதும் இருவரும் பிடிவாதமாக மறுத்து விட்டனர். எனவே தன் தனிமையைப் போக்குவதற்கு சிறந்த இடமெனக் கருதி தன் மகளின் வீட்டை நோக்கிச் சென்றார்....

'அம்மா வாம்மா! நானே கூப்பிட்டாலும் வீட்டுப் பக்கமே வர மாட்ட இன்னைக்கு நீயாத் தேடி வந்திருக்க. அதிசயம் தான். எப்படியோ நீ வந்தது ரொம்ப சந்தோஷம். ஒரு மாசத்துக்கு இங்க இருந்துட்டுத் தான் போவனும்' என தாயைக் கண்ட சேயாய் மகிழ்ச்சியுடன் உள்ளே அழைத்துச் சென்றாள்.

'அடடே சம்பந்தி, வாங்க! வாங்க! எவ்வளவு நாளாச்சு உங்களப் பாத்து? உள்ள வாங்க..... உங்க பொண்ணு சொன்ன மாதிரி ஒரு மாசத்துக்கு இங்க இருந்துட்டுத் தான் போகனும்' என அன்பாக உள்ளே அழைத்துச் சென்றார் மரகதம்.

அந்த வீட்டில் காலடி வைத்ததும் தன் மனம் இலேசானதைப் போல உணர்ந்த சிவாவின் தாய்க்கு, மகளை மருமகளாக எண்ணாது சொந்த மகள் போல பார்த்துக் கொள்ளும் சம்மந்தி வீட்டாரை எண்ணிப் பூரிப்பாக இருந்த அதேநேரம் தான் மருமகளைக் கவனித்த விதம் கண் முன்னே தோன்றி மறைய குற்ற உணர்வால் கண்கள் குளமாகின. தன்னை வேற்றார் போல எண்ணாது சொந்தத் தங்கை போலவே கவனித்து வரும் சம்மந்தி வீட்டார் கிடைக்கத் தான் கொடுத்து வைத்திருக்க வேண்டும் என்ற சந்தோஷத்தில் லயித்துப் போனவர் மகளுடைய வீட்டில் நிம்மதியாகத் தன்னுடைய நாட்களைக் கழித்து வந்தார்.... தன் நிம்மதி பறிபோகப் போவதை அறியாமல்....

இவ்வாறிருக்க ஒருநாள் சந்தியா வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுமங்கலிப் பூசைக்கு உற்றார், உறவினர், ஊர்க்காரர் என அனைத்துப் பெண்களும் வருகை தந்திருந்தனர். அங்கு வேலைகளும் அதிகமிருந்ததால் சிவாவின் தாயும் சில பல வேலைகளில் ஈடுபட வேண்டியதாக இருந்தது. இதனைக் கண்ணுற்ற பெண்மணி ஒருத்தி, 'என்னடி இது கொடுமை? சுமங்கலிப் பூஜை நடக்குற இடத்துல இந்த மாதிரி மூலிய வச்சு வேலை நடத்துனா விளங்குமா இந்தப் பூஜை? கொஞ்சமும் அறிவில்லாம இப்படியா பண்ணுவாங்க? சே.....' எனக் கூறி ஆளாளுக்குக் கிசுகிசுத்துக் கொண்டிருக்க, இவருக்குத் தலையில் இடி இறங்கியது போலிருந்தது. அதற்கு மேல் அங்கு நிற்க மனமில்லாமல் வெளிவந்த அழுகையைக் கட்டுப்படுத்திக் கொண்டு அறைக்குள் ஓடினார்.

'ஏன்டி சனியனே! நீ ஒரு மலடி, உங்க அம்மா ஒரு மூலி.... இது இரண்டு இந்த பங்சனுக்கு வரலன்னு யார் அழுதது? எல்லாம் என் தலையெழுத்து? என்னைக்கு இந்த மூதேவியைக் கல்யாணம் பண்ணிக் கூட்டிட்டு வந்தானோ அன்னைக்குப் பிடிச்சது இந்த வீட்டுக்கு சனி' என்று ரேகாவையும் அவளது வளர்ப்புத் தாயையும் சந்தியாவின் திருமணத்தில் நோகடிக்கும் போது தனது கணவன் எதுவும் கூறாது அவ்விடத்தை விட்டு நகர்ந்தது அப்போது அவரது கண் முன்னே நிழலாடியது.

அன்று தான் செய்த தவறு அவர்களுக்கு எவ்வளவு வலித்திருக்கும் எனப் புரியவே தன் தவறுக்காக இறைவனிடம் மன்றாடினார். 'அம்மா! என்னம்மா தனியா உக்காந்து யோசிச்சிட்டு இருக்க? அங்க அத்தை வீட்டாளுங்க எல்லாம் உன்ன எங்கன்னு கேக்குறாங்க. உள்ள இருந்து என்ன பண்ற வா போலாம்' எனக் கையைப் பிடித்து இழுத்தாள்.

'இல்லம்மா சந்தியா.... இது சுமங்கலிங்க பண்ற பூஜை இங்க நான் வரக்கூடாதும்மா... எல்லாரும் போனதுக்குப்புறம் நான் வெளிய வர்றன்'

'என்னம்மா பேசுற நீ? இந்த பூஜை, புனஸ்காரம் எல்லாம் வெறும் சடங்கு தான். அத தாண்டி நாம எல்லாம் மனுசங்க. அதுல ஆயிரம் நல்லது நடந்தா நூறு கெட்டதும் நடக்கும்... அதுதான் வாழ்க்கை, நீ விதவையா இருக்கலாம் அதுக்கு முன்னாடி என்னோட அம்மா. வர்றவங்க ஆயிரம் பேசுறாங்கன்னு என்னால உன்ன விட்டுக் கொடுக்கா முடியாது' என்றவாறே வலுக்கட்டயமாகக் கையைப் பற்றி இழுத்தும் செல்லும் சந்தியாவைப் பார்த்து, 'தான் அடுத்தவர்களுக்கு எவ்வளவு கெடுதல் செய்த போதிலும் தன் வளர்ப்புத் தப்பாகவில்லை' என்று உச்சி குளிர்ந்தார் அவளது தாய்.

பூஜை வழிபாடுகள் முடிந்து பலர் வெளியேற, இரவானதால் தொலைவிலிருந்து வந்த உறவினர்கள் சிலர் மரகதத்தின் வீட்டிலேயே தங்க வேண்டியிருந்தது. அவர்கள் ஒவ்வொருவரும் தத்தமது குடும்பங்களைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது, அவர்களுள் ஒருவர் 'ஏம்மா சந்தியா! கல்யாணமாகி எத்தன வருஷமாச்சு?' என்ற கேள்வியை எழுப்பினார்.

'இரண்டு வருஷமாச்சத்த'

'ம்ம்ம்.... இரண்டு வருசமாச்சுன்னு சொல்ற, இன்னும் குழந்தை இல்லாம இருக்கியே ஏதாவது டாக்டரப் போய் பாக்குறியா இல்லையா?'

'பாத்துட்டுத் தான் வர்றோம் அத்தை. அது அதுக்குன்னு ஒரு காலம் வரனுல்ல'

'என்னமோ சொல்ற.... ஆனா எனக்கென்னமோ உன் குடும்பத்துக்குத் தான் வாரிசு ராசி இல்லையோன்னு தோனுது'

'ஏன் அத்தை அப்படி சொல்றிங்க?'

'பின்ன என்னம்மா? உங்கண்ணன் கல்யாணம் பண்ணி மூனு வருசமாச்சு. இன்னும் எதையும் காணல. நீ கல்யாணம் பண்ணி இரண்டு வருசம்ன்னு சொல்ற உனக்கும் ஒன்னும் தங்கல. எல்லாத்தையும் வச்சுப் பாக்கும் போது உன் குடும்பத்துல தான் பிரச்சினை இருக்கும் போல... அதனால தான் உங்க வம்சம் விருத்தி அடையவே மாட்டேங்குது. ஆனா உங்கம்மா என்னடான்னா உங்க அண்ணிக்கு குறை இருக்குறதா ஊர் பூரா சொல்லி வச்சிருக்கா. இப்போ தான விளங்குது தன்ன தப்பா சொல்லிறப் போறாங்கன்னு தான் முந்திக்கிட்டு ஒருத்தி மேலப் பழியப் போட்டிருக்கான்னு... நல்ல குடும்பம்' எனத் தலையில் அடித்துக் கொண்டு தான் வந்த வேலையைச் சிறப்பாக முடித்த திருப்தியில் 'நமக்கெதுக்கு வம்பு' என்றவாறே வெளியேறினார்.

இவை அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த சந்தியா வேதனை தாங்க முடியாது அழுது கொண்டே அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டாள். அவளது அம்மாவிற்கோ எல்லாவற்றையும் அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்த மரகதம் இப்போது எதுவும் பேச வேண்டாம் என எண்ணி அவரைக் கட்டிலில் படுக்கவைத்து விட்டு, சந்தியாவையும் தொல்லை செய்யாது அமைதியாகப் படுத்துக் கொண்டார்.

மறுநாள் அனைவருக்கும் வழமை போல விடியவில்லை. அதுவரை அமைதியாகவும் கலகலப்பாகவும் ஓடிக் கொண்டிருந்த அந்தக் குடும்பம் புயலடித்து ஓய்ந்தது போல சோகமே உருவாய் நகர்ந்து கொண்டிருந்தது. அனைத்திற்கும் ஒரு முடிவெடுத்தவராய் அனைவரையும் வீட்டு முற்றத்தில் ஒன்று கூட்டினார் மரகதம். இரவு பூராக அழுத சந்தியாவினதும் அம்மாவினதும் கண்கள் சிவந்திருந்ததை அவர் உணராமலில்லை. இருவரும் வெளிவர மறுத்ததால் கட்டாயப்படுத்தி அழைத்து வந்து பேசத் தொடங்கினார்.

'சம்மந்தி உங்க வீட்ல நடந்த எல்லாத்தையும் தெளிவா சொல்லுங்க' என்று கேட்க சிவாவின் தாயார் நடந்த அனைத்தையும் கூறி முடித்தார். யாரும் எதுவும் கூறாது அமைதியாகக் கேட்டுக் கொண்டிருக்க, மரகதம் தன் மருமகளை நோக்கி 'சந்தியா! இப்போ உனக்கு என்னம்மா பிரச்சினை?' எனக் கேட்க எதுவும் கூறாது அமைதியாக இருந்தாள். 'சரி ..... நான் கேக்குறதுக்கு ஒழுங்கா பதில் சொல்லு' என்றதும் சரி எனத் தலையாட்டினாள்.

'இதுவரைக்கும் நான், உன் மாமா, இல்ல உன் புருஷன் யாராவது ஏன் குழந்தை இல்லன்னு உன்ன ஒரு வார்த்தை கேட்டிருக்கோமா?' எனக் கேட்க இல்லை எனத் தலையாட்டினாள். 'உன்ன சுத்தியிருக்குற நாங்களே அதுப்பத்தி எந்த கவலையும் படாதப்போ யாரோ மூனாவது மனுசன் சொன்னதுக்காக இப்படி கவலப்பட்டு அழுதுட்டு இருக்கியே என்னம்மா நியாயம் இது?'

'இதுவரைக்கும் என்கிட்ட அப்படிக் கேக்காம இருக்குறது உங்க எல்லாரதும் பெருந்தன்மை அத்தை... எங்க என்கிட்ட கேட்டா நான் கஷ்டப்படு வேனோன்னு உங்களுக்குள்ளையே உங்க ஆசைய மறைச்சு வச்சிருக்கலாம். ஆனா உங்க பேரப்பிள்ளையைப் பாக்கனுன்னு உங்களுக்கும் ஆசை இருக்கும் தான?'

'இதோ பாரு சந்தியாமா..... ஆசைக்கிறது மனுசனா பிறக்குற எல்லாருக்குமே இருக்கும். ஆசை இல்லன்னா அது மனுசனே இல்ல. அதுக்காக எங்க ஆசைய அடுத்தவங்க மேல திணிக்க ஏலாதுமா. உன்ன கட்டாயப்படுத்தி பேரப்பிள்ளையைப் பெத்துக் கொடுக்க சொன்னா நீ எங்க இருந்து பெத்துத் தருவ? எல்லாமே கடவுள்ட நாட்டம்தானே. அவன் எப்போ தரனும்னு இருக்கானோ அப்போ தருவான். அதுக்காக தரவே மாட்டன்னு முடிவெடுக்கக் கூடாது. நம்பிக்கையோட இருப்பம். நம்ம நம்பிக்கை தான் நமக்கு எப்பவுமே துணையா இருக்கும்' எனக் கூறி சந்தியாவை அணைத்துக் கொண்டார்.

'இவ்வளவு பேசுறீங்களே சம்மந்தி..... நேத்து உங்க சொந்தக்காரங்க அப்படிப் பேசும்போது அமைதியா தான இருந்தீங்க?' எனக் கேட்டார் சந்தியாவின் தாய். பதிலுக்கு புன்சிரிப்பை உதிர்த்த மரகதம், 'அவங்க பேசிட்டுப் போது வரைக்கும் தான உங்களுக்கு தெரியும் சம்மந்தி. அதுக்கப்புறம் என்ன நடந்ததுதுன்னு உங்க யாருக்குமே தெரியாதே... அவ்வளவு தூரம் பேசுன அவங்க கிட்டப் போயிட்டு என் மருமகக் கிட்ட இப்போதைக்கு குழந்தை வேணாம். மொதல்ல உங்க லைப்ல முன்னுக்கு வரப் பாருங்க... .அப்புறமா குழந்தை பெத்துக்குறதப் பத்தி யோசிக்கலாம்னு சொல்லி வைச்சிருக்கன்னு சொல்லி, என் குடும்பத்துல எனக்கில்லாத அக்கறை உங்களுக்கு எங்க இருந்து வந்ததுன்னு கேட்டன்.... யாரும் வாயத் தொறந்து ஒரு வார்த்தை பேசலையே..... விடியிறதுக்குள்ள எல்லாரும் காணாமப் போயிட்டாளுங்க' என்று கூறி சிரிக்கவும் சந்தியா ஓடி அவரது காலில் விழுந்து அழுதாள்.

'இப்படியொரு மாமியார் கிடைக்க நான் கொடுத்து வச்சிருக்கனும் அத்தை. இந்த இரண்டு வருஷத்துக்கு என்ன கஷ்டப்படுத்துற மாதிரி ஒரு வார்த்தை கூட நீங்க பேசுனதில்ல. இப்போ இவ்வளவு பேசுன உங்க சொந்தக்காரங்க முன்னாடி கூட என்ன விட்டுக் கொடுக்காமத் தான் பேசிச்சிருங்க.... ரொம்ப நன்றி அத்தை' என்றாள்.

'என் பொண்ணு சொல்றது உண்மை தான் சம்மந்தி. அவ எந்த ஜென்மத்துல செய்த புண்ணியமோ தெரியல. உங்க வீட்டுக்கு மருமகளா வந்திருக்கா. ரொம்ப நன்றி சம்பந்தி' என்று கை கூப்பி நன்றி செலுத்தினர் தாயும் மகளும்.

'அதெல்லாம் இருக்கட்டும் சம்மந்தி. வீட்டுக்கு வார மருமகள நாம ஏன் அடுத்த வீட்டுக்குப் பொண்ணாப் பாக்குறம்? அவளும் இன்னொரு வீட்டுல மகாராணியா வாழ்ந்த பொண்ணுதான? நம்ம வீட்டுக்கு வந்ததும் தான் பிறந்து வளர்ந்த குடும்பத்த விட்டு, அங்க இருந்த வசதி - வாய்ப்பு எல்லாத்தையும் விட்டுட்டு கட்டுன புருசனும் அவன் குடும்பமும் தான் எல்லான்னு நினைச்சிட்டு வாறா. இங்க கஷ்டமோ, நஷ்டமோ எல்லாத்தையும் பொறுத்துக்கிட்டு தனக்குள் ளையே எல்லாக் கஷ்டத்தையும் புதைச் சிகிட்டு முழுக் குடும்பத்தையும் தாங்கி நிக்குற அவள நாம ஒரு சம்பளமில்லாத வேலைக்காரியாகத் தான பாக்குறம்....

அவளுக்கும் மனசுக்கும் ஒன்னு இருக்கு. அதுலையும் ஆசை இருக்கும்னு நாம ஏன் யோசிக்க மாட்டேங்குறம்? குழந்தை இல்லைன்னு குத்திக் காட்டுறமே அதுங்க மனசுல குழந்தை இல்லைன்னு எவ்வளவு ஏக்கம் இருக்கும்? எல்லாத்தையும் யாருகிட்ட சொல்வாங்க? அம்மா ஸ்தானத்துல இருக்குற நாம தான எல்லாத்தையும் புரிஞ்சிக்கனும். அத விட்டுட்டு நாமலே அவங்கள நோகடிக்குறது எந்த விதத்துல நியாயம்?

ஒரு பொண்ணுக்குக் குறையிருந்தா உடனே நம்ம பையனுக்கு அடுத்த கல்யாணம் பண்ணி வைக்கப் பாக்குறோமே அதே பையனுக்குக் குறையிருந்தா அந்தப்பொண்ணு என்ன உடனே அடுத்த கல்யாணம் பண்ணிக்குறாளா? இல்லையே..... தன் புருஷன் தான் எல்லாம்னு அவனப்பிள்ளை மாதிரில பாத்துக்குறா...... அத ஏன் இந்த சமூகம் புரிஞ்சுக்க மாட்டேங்குது? குழந்தை முக்கியம் தான் இல்லேன்னு சொல்லல. ஆனா இல்லாத குழந்தைக்காக ஏன் இருக்குற மனுசங்கள சாகடிக்கப்பாக்குறோம்...... அதான் எனக்குப் புரியல......

இது எல்லாத்தையும் விட நீங்க மருமகளுக்குச் செய்தது ரொம்ப பெரிய அநியாயம். அவள மாதிரி ஒரு மருகள் கிடைக்க நீங்க கொடுத்து வைச்சிருக்கனும். தன் புருஷன் மேல தான் குறை இருக்குதுன்னு தெரிஞ்சும் எல்லாப் பலியையும் தன் மேலே போட்டுக்கிட்டாளே.... ஏன்? .... என் புருஷனுக்குத் தான் குறை இருக்குதுன்னு சொல்லத் தெரியாமலா? இல்லங்க.... அதுதான் அவங்களோட குணம், அவங்கள விட வயசுலையும் அனுபவத்துலையும் கூடுன நமக்கு ஏன் இருக்க மாட்டேங்குது?' என்று தங்கைக்கு கூறுவதைப் போல பேசிக் கொண்டிருந்தார்.

அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த சந்தியாவின் அம்மா எதுவும் கூறாது வீட்டை விட்டு வெளியேற, அம்மா எங்கம்மா போற? என சந்தியா கேட்க, 'என் மருமகளப் பாக்கனும் போல இருக்கும்மா' எனக் கண்ணீருடன் வெளியேறினார்.

'பாத்து ரேகா.... கீழ விழுந்துறப் போற, நான் தான் எல்லா வேலையும் செய்றன்னு சொன்னன் தான! நீ உள்ள போய் ரெஸ்ட் எடுத்துக்கோ.... போ.... போ.....' என ரேகாவின் கையிலிருந்த துணிகளை வாங்கிய சிவா தன் பின்னால் நிழலொன்று ஊசலாடுவதை உணர்ந்து திரும்பிப் பார்த்தான்.

'நீ எதுக்கும்மா இங்க வந்த? அவ சந்தோஷமா இருக்காளா, இல்லையான்னு பாத்துட்டு போக வந்தியா? அவள நிம்மதியா இருக்க விடவே மாட்டியாமா?.... சே...' என தன் தாயைப் பார்த்துப் பொறிந்து தள்ளினான்.

'போதும் சிவா.... போதும்.... இதுக்கு மேல வார்த்தையால என்னக் கொல்லாத. நான் பண்ண தப்பெல்லாம் உணர்ந்து என் மருமக கிட்ட மன்னிப்புக் கேட்க வந்தன்... எங்கடா அவ?' என்றவாறே தரையிலமர்ந்து அழுத தாயைப் பார்த்த சிவாவின் கண்கள் கசிந்தன.

ஓடிவந்து அவரைத் தூக்கிய ரேகா 'என்ன அத்த இது? நீங்க எதுக்கு எங்க கிட்ட மன்னிப்புக் கேக்கனும்? அதெல்லாம் எதுவும் வேணாம். உங்க மேல எனக்கு எந்த வருத்தமும் இல்ல' என்றாள். 'ஏம்மா நான் உன்ன எவ்வளவு கஷ்டப்படுத்தி இருக்கன். எந்தக் கோவமும் இல்லன்னு இவ்வளவு சாதாரணமா சொல்ற? இந்த மனசு வேற யாருக்குமே வராது. இனி உங்கிட்ட குழந்தையப் பத்திப் பேசவே மாட்டன். எனக்குப் பேரக்குழந்தையே வேணாம்மா. நீயும் என் பிள்ளையும் காலம் முழுக்க என்னோட இருங்க. இது போதும்.

'நீங்க திருந்தி வாழனும்னு தான் இவ்வளவு காலமும் உங்களப் பிரிஞ்சு நாங்க தனியா இருந்தோம் அத்த. இப்போ எல்லாத் தப்பையும் நீங்க உணர்ந்துட்டிங்க..... இனி எப்பவும் நாம ஒன்னாவே இருப்போம்... ஒரு தாயா.... பிள்ளை இல்லாம நீங்க பட்ட கஷ்டம் என்னன்னு எனக்கும் உணர முடியும் அத்த. ஏன்னா.....' என்றவாறு தன் வயிற்றை வெட்கத்துடன் தடவினாள் ரேகா.

'உண்மையாவா.......' என்றவாறே அவளை தன் மார்போடு அணைத்துக்கொள்ள, ஆனந்தக் கண்ணீரோடு ரேகா சிவாவை பார்க்க, காதல் கலந்த பார்வையுடன் அவளைப் பார்த்துக் கண்ணடித்தான் சிவா. (முற்றும்)

# வீணைமைந்தனின் 'தொலைந்துபோன வசந்தகாலங்கள்' பற்றிய சில சிந்தனைகள்

- வசந்தி தயாபரன்



தனிமனிதன் ஒருவனின் உணர்வுகளின் வெளிப்பாடு அவனது ஆத்மாவுக்கு ஆறுதல் அளிப்பதாக அமைவதில் வியப்பில்லை. ஆனால், அதுவே ஒரு கலைவடிவமாக மாறுகையில், வேறு சிலரது உள்ளங்களில் இரசவாத மாற்றங்களை நிகழ்த்தும் ஆற்றலை அது பெற்றுக் கொள்கின்றது. பசுமையான நினைவுகளை உயிர்ப்பிப்பது மட்டுமன்றி, இரணமாகக் கிடக்கும் ஆறாத காயங்களையும் அது பிறாண்டுகிறது. எனினும் உணர்வுகள் சாகமறுப்பவை. அதிலும் புலம்பெயர்ந்து வாழ்வோருக்குச் சொந்தமானதோ, உரத்துச் சொல்லவேண்டிய ஓராயிரம் மனப்பதிவுகள்.

'தொலைந்துபோன வசந்தகாலங்கள்' நூலைத் தந்த வீணைமைந்தனும் அத்தகைய ஒருவர். அவரது பிறந்தமண், அங்கு அவர் கற்றுக்கொண்ட அனுபவங்கள், மறக்கமுடியாத மனிதர்கள், அம்மண்ணின் மைந்தர்கள் என விரிகின்ற வாழ்வியல் நூல் என்று அந்நூலை வரையறுக்கலாம். பிறிதொரு கோணத்தில், யாழ்.மைந்தன் ஒருவனது நாட்குறிப்பேடு அல்லது சுயசரிதையின் ஒருபாகம் எனவும் அது தோற்றம் காட்டுகிறது. எனினும், அதன் உள்ளடக்கம் கற்பனை கலக்காத உண்மையை மட்டுமே பேசுகின்றது என்பதில் மட்டும் எவ்வித மாற்றுக் கருத்துக்களும் இல்லை.



தனது வாழ்வின் கணங்களை, கலையழகோடு புனைவிலக்கியல் போன்று படைத்திருப்பது நூலா சிரியரது சிறப்பு. அவர் கண்டும் கேட்டும் வாழ்ந்தும் அனுபவித்த ஒரு காலத்தைய வாழ்வின் ஆவணமாக 'தொலைந்துபோன வசந்தகாலங்கள்' திகழ்கிறது. போலிப் படாடோபங்கள், வார்த்தை விளையாட்டுகள் அற்ற அவரது எழுத்து நடையில் ஒருவித அறப்பண்பு இழையோடக் காண்கின்றேன். இன்றைய தலைமுறை அறியாத, சென்ற தலைமுறை மெல்ல மெல்ல மறந்து கொண்டிருக்கின்ற ஒரு காலகட்டத்து வாழ்க்கை அந்நூலினூடாக உயிர் பெற்றிருக்கிறது. அதிலும் காங்கேசன்துறையின் அன்றைய வாழ்வு சிறப்பாகத் துலக்கம் பெற்றிருக்கிறது. காங்கேசன்துறையில் பிறந்து வளர்ந்த ஒருவர், அரை நூற்றாண்டுக்கு முன்னான யாழ்ப்பாணம் பற்றியும், தனது ஊர் பற்றியும், அன்றைய சமூக நடப்புகள் பற்றியும் எழுதுவதன் மூலம் எம்மைக் கடந்த காலத்திற்கு அழைத்துச் செல்ல முயல்கிறார். அவரது எழுத்தினூடே நாம் எமது பண்பாட்டு அசைவியக்கம் குறித்த வரலாற்றுப் பார்வை ஒன்றினைப் பெற்றுக் கொள்ளலாம்.

அன்றைய பாடசாலை மாணவர்கள், வாலிபர்கள், முதலியோரின் இரசனைப் போக்குக் குறித்த சுவையான தகவல்களை இந்நூல் சொல்கிறது. தொலைக்காட்சியின் ஆக்கிரமிப்பு இல்லாத அந்நாட்களில், அவர்களது ஓய்வு நேரங்கள் எப்படிக் கழிந்தன என்பன மிகவும் சுவாரசியமாக விவரிக்கப்பட்டுள்ளது. வாசிப்பு, ரேடியோப்பாட்டு, விளையாட்டு, ஊர்ப்புழுதி அளைதல், கூத்துப் பார்த்தல், டூரிங் சினிமா முதலியன பல இடங்களில் சுவையாகப் பதிவாகியுள்ளன. வீணைமைந்தனின் ஊரான காங்கேசன்துறைக்கே உரிய தனித்துவமான சிறப்புகளும் வாசகரைக் கவர்வன. காங்கேசன்துறை வாடி வீடும் அங்கு வருகின்ற நடிக நடிகையர், குத்துச் சண்டை வீரர்களும் அவரது இள மனதில் ஏற்படுத்திய வியப்பும் உற்சாகமும், கடற்கரையுடன் அவர் கொண்டிருந்த தோழமையும் பிரியமும், நடிகர் எம்.ஜி.ஆரைப் பார்த் அவரது வாலிப வயதில் ஆர்வமும் அனுபவமும் என நினைவுகள் கதையாக நீளுகின்றன. 'துறைமுகம்', 'கடலும் நிலவும்', 'அலையோடு விளையாடி' முதலிய பல அத்தியாயங் கள், இயற்கையின் பிரமாண்டத்தின் முன் தன்னை இழந்து சொக்கிக் கிடந்த கிராமத்துப் பையன் ஒருவனது மண் மீதான காதலின் சாட்சி.

யாழ்ப்பாணத்தின் சராசரிக் குடிமகனின் ஆசைகள், எதிர்பார்ப்புகள் மட்டுமன்றி அரசியல் நிலவரங்கள், ஏமாற்றங்கள், துளர்விட்ட தொடர் மாற்றங்கள் பற்றிய தகவல்களும் நூலில் ஊடாவாக ஆங்காங்கே நெய்யப்பட்டிருக்கின்றன. எமது நினைவுகளில் படிந்துவிட்ட காலத்தூசி துடைப்பனவா யும், அறியாத புதிய விடயங்களை எடுத்துரைப்பனவா யும் எம் கண்முன்னே அன்றைய யாழ்ப்பாணத்தை ஓரளவேனும் மீளக் கொணர்வதில் ஆசிரியரது எழுத்துக்கள் துணை செய்கின்றன.

அன்றைய வாழ்வியல் வளர்த்தெடுத்த யாழ்ப்பாண இளைஞனது நினைவு ஒரு திறந்த புத்தகமாக நம் முன் விரிகிறது. அவனுக்குத் தமிழறிவு வளரவும், தன்னினம் பற்றிய உணர்வு பிறக்கவும், சுற்றமும், நண்பரும், ஆசிரியரும் நல்லோர் கேண்மையும் அவனைத் தாங்கிக் கொண்டன. மண்ணின் மைந்தனாக அவனை ஆதரவுடன் வளர்த் தெடுத்தன. அதேமண்ணின் மீதான வீணை மைந்தனின் அபரிதமான நேசம், இந்நூலை காங்கேசன்துறையினருக்கே உரிய சிறப்புக் கையேடாக நோக்கச் செய்யும் மயக்கத்தையும் ஏற்படுத்தாமலில்லை. எனினும் அவரது வாழ்வின் படிநிலை மாற்றங்களினூடு, ஒரு சமுதாயத்தின் அரை நூற்றாண்டு வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளமை போற்றத்தக்கது. யாழ் நூலக எரிப்பைப் பற்றிய அத்தியாயத்தை இதற்கு ஓர் உதாரணமாகக் கூறலாம். தமிழகப் பேச்சாளரது உரைகள், அறிஞர் அண்ணாவினது வழிகாட்டல்கள், மட்டுமன்றி தன்னைச் சுற்றி நடப்பன குறித்து அவரது விழிப்புணர்வுடன் கூடிய அறிகை என்பவற்றின் ஒருமித்த கலவையே வீணைமைந்தன் எனும் எழுத்தாளரின் முகிழ்ப்பு, கலைஞர் கருணாநிதியின் அன்றைய ஆளுமையைப் போற்றுவது போலவே, அவரது இன்னைய தடுமாற்றங்களைக் கண்டிக்கவும் ஆசிரியர் பின்பற்றவில்லை. நூலெங்கும் துலங்குகின்ற வீணைமைந்தனின் எழுத்தின் நேர்மைக்கு இது ஒரு சான்றாகிறது.

அறுபதுகளில் யாழ் மண்ணில் வளர்ந்த சராசரி இளைஞன் ஒருவனுக்கு, தமிழ்மொழியின் மீதிருந்த பற்றும், பழந்தமிழ்க் கவிதைகள் மீதிருந்த நாட்டமும், தரமான வாசிப்பும் ஆசிரியரது எழுத்து நடையின் வழி நிறுவப்படுகின்றன. அவரது சுளுவான எழுத்து நடை, நீண்டகால வாசிப்புப் பயிற்சியின் பயனே. இன்று அது வலிந்து ஊட்டப்பட வேண்டியதாக மாறிப்போய்விட்டது என்ற துயர் எம் மனத்தினைத் தொட்டுச் செல்கின்றது.

'தொலைந்துபோனவை பல, ஆனால் கலங்கரை விளக்கு உள்ளது' என்ற நூலாசிரியரின் கூற்று அடிக்கடி மனதில் வந்துபோகிறது. அந்த நினைவுடன் நூலின் பின்புற அட்டையைப் பார்க்கையில், எம்மனங்களில் ஒருபொறி தட்டுகிறது. ஆசை இராசையா என்ற அற்புதமான ஓவியர் தீட்டியுள்ள காங்கேசன்துறையின் கலங்கரை விளக்கு எமக்குள் ஏதோ ஒரு வெளிச்சத்தைப் பாய்ச்ச விழைவதாக நாம் உணர்கிறோம்.

மனித வாழ்வின் மிகப்பெரிய சோகங்களில் ஒன்றுதான புலம்பெயர்வு. மீண்டும் வந்தாலும், தனது சொந்த மண்ணில் அந்நியனாக உணர்வதும், தனது ஊருக்குப் போக முடியாமல் வெதும்புவதும் அதிலும் கொடுமை. தனது இனத்தின் வரலாற்றுச் சின்னங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றமை நெஞ்சைக் கீறிக் கிழிப்பதுவும் உண்மை. ஆயினும் நாம் வாழ்ந்த காலங்களை மீட்டெடுத்து எதிர்காலச் சந்ததிக்குக் கையளிப்பது சாத்தியமாகுமா என்பது ஒரு கேள்விக் குறி. காலம் மாற்றங்களைக் கொண்டு வருவது தவிர்க்கமுடியாதது. அந்தக் கணங்களை அதே உணர்வுச் சிலிர்ப்புடன் மீளப் படைக்க முடியாது. அந்த மறக்க முடியாத நினைவுகள் எமக்குள் பொத்தி வைத்துப் பேணத்தக்கன. எனவேதான், நூலின் பெயர் குறித்த ஒரு நெருடலும் எழுகிறது. 'தொலைந்து போன' என்பதற்குப் பதிலாக ஆசிரியரே ஓரிடத்தில் கூறுமாற்போல, 'மறக்க முடியாத வசந்த காலங்கள்' என்று தலைப்பிட்டிருக்கலாமோ என எண்ணத் தோன்றுகிறது.


புலம்பெயர் வாழ்க்கையில் பெற்றவை போலவே இழந்தவையும் ஏராளம். அதனால்தான் ஆத்மாவின் அலைவும் வலியும் அடிக்கடி பிறந்த மண்ணைத் தேடி ஓடிவிடுகின்றன. இது எமது தலைமுறைக்கு மட்டும் வரையறுக்கப்பட்டதன்று. தமது வேர்களையும் மூதாரையரின் அடையாளங் களையும் தேடிப் பயணிக்கும் புதிய தலைமுறையை இன்றைய உலகில் காண்கிறோம். அந்த நீண்ட நெடும் பயணத்தில் எமது சந்ததியும் இணைந்து கொள்ளும். அவர்களுக்கு சிறந்ததொரு ஆவணமா கவும் கையேடாகவும் பயன்படும் வகையில் வீணை மைந்தனின் நூல் எளிமையான, சுவையான தமிழ் நடையில் எம்மை வந்தடைந்திருக்கிறது. அதுகாட்டும் ஒளியில் தமிழ்ச் சந்ததி தாம் தொலைத்தவற்றைக் கண்டடையும் என்ற நம்பிக்கையை தொலைந்துபோன வசந்தங்கள்' ஏற்படுத்தியுள்ளது.

# நட்பு



தோழன்
நட்பை எழுதாத கவிதை
சாய்ந்திட
தோள் இன்றி தவிக்கின்றது...
தோழன் இன்றி தவிக்கின்றது..
பள்ளியில்..
வகுப்பறை
இருக்கைகளை நிரப்பியது நட்பு !
ஒன்றாய் விளையாடி
ஒரு தட்டில் உணவருந்தி
கன்றாய் குதித்து ஓடி
நன்றாய் கழிந்தது பால்ய காலம்..!
ஆழ் மன ஞாபகங்களில்
ஒளிந்திருக்கும்
முதல் நண்பனை அறிவாயா..?
உனது பென்சில் சீவி கொடுத்திருப்பான்
நீ அடித்தாலும் வலிக்காமல்
சிரித்திருப்பான்..
மாங்காய்,புளியம்பழம்
பக்கத்து வயலில் திருடி
கொடுத்திருப்பான்..
அம்மா அப்பாவை விட
அங்குலம் கொஞ்சம் அதிகமாக
உன் நண்பனை பிடித்திருக்கும்
அவன் தங்கை உன் தங்கையாய்
பிடித்திருக்கும்
உன் வீடு உன்னை பிடித்து இழுக்கும்
உன் கால்கள் வரவோ வழுக்கும்..!
முதல் காதலை..முதல் ஈர்ப்பை
தாங்கிய கடிதங்களின் தூதன் அவன்!
கடிதம் கிழிக்கப்பட்டு
நீ புறக்கணிக்கப்பட்டு
உன் கண்ணீர்க்கடிதம்
மாற்றி எழுத அவன் விரல்கள்
பேனாவாகும்.
பூக்களை விட மெலிதானவன் நண்பன்
காதலியை விட ரகசியமானவன்
நண்பன்.
தோழி
ஒரு பெண் தோழியாய் அருகில்
வருகையில்
"பால்" திரிவதில்லை!
அவள்
விண்மீன்களை
கண்களில் கொணர்கிறாள்
முழுவதுமான வெள்ளை வானத்தில்
உனக்காக கவிதைகள் வடிக்கிறாள்..
உனது மனது
ஏங்கித் தவித்த
ஓய்வையெல்லாம்
உன் மடியில் இடுகிறாள்
அவள் கவி ஆகிறாள்
மழையாய் குளிர்கிறாள்
நீ வெயிலில் குளிக்கிறாய்..!
நட்பு..
பால் பேதம் கடக்கிறது
சுவர்களை உடைக்கிறது
அங்கே கூண்டுகள் இல்லை
அங்கே முள் வேலிகள் இல்லை
அங்கே பதுங்கு குழிகள் இல்லை
அங்கே பலாத்காரம் இல்லை
அணுக்குண்டுகளை
நட்பு தயாரிப்பது இல்லை
எந்தத்தோட்டாவும்
நண்பனின் இதயத்தைத் துளைப்பது
இல்லை..
நாடுகளின் எல்லைக்கோடுகள்
பயமுறுத்துவது இல்லை
எந்த சித்தாந்தமும்
நட்பிடம் நொறுங்கி போகிறது!
ஒரு நண்பனின் புன்முறுவலில்
மலர்கள் தோல்வியை சந்திக்கின்றன..!

– ஆஸ்பான் இனியன்




10

# அச்சம் இல்லை

*அச்சம் இல்லை அச்சம் இல்லை*
*அச்சம் என்பதில்லையே*
*உச்சி மீது வானிடிந்து வீழுகின்ற போதிலும்*
*அச்சம் இல்லை அச்சம் இல்லை*
*அச்சம் என்பதில்லையே*

-பலரும் விரும்பிப் பாடுகின்ற பாரதி பாடல் இது.

எதையும் சமாளிக்கலாம் என்றொரு நினைப்பும், நம்பிக்கையும், அஞ்சாமையும் பொதுவில் நன்மை அளிப்பனவே. ஆனாலும் அதீத நம்பிக்கையும் அளவுக்கு மீறிய துணிவும் இடையூறுகளைக் கொண்டுவரும் என்கின்ற அறிவும் மனிதர்க்கு அவசியம்.

*அஞ்சுவது அஞ்சாமை பேதமை அஞ்சுவது*
*அஞ்சல் அறிவார் தொழில்*

இந்தத் திருக்குறளையும் நாம் கருத்தில் கொள்ளுவது நன்று.

அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சத்தான் வேண்டும். ஆனால் அஞ்ச வேண்டாத அற்ப விடயங்களுக்கெல்லாம் பயந்து கொண்டே இருப்பது அறிவீனம்.

பாரதி எனும் கவிஞன் கவலைப்பட்டான்.

*நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த*
*நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்*
*அஞ்சி அஞ்சிச் சாவார் - இவர்*
*அஞ்சாத பொருளில்லை அவனியிலே*

அந்தக் கவிஞன் புதிய ஆத்திசூடியில் மீண்டும் நம்பிக்கையூட்டுகிறான்.

*அச்சம் தவிர்*
*உடலினை உறுதி செய்*
*ஐம்பொறி ஆட்சி செய்*
*ஔடதம் குறை*
*குன்றென நிமிர்ந்து நில்*
*சிதையா நெஞ்சு கொள்*

இதயமே... இவை எல்லோர்க்கும் பயன்படும் மந்திரங்கள்.

இந்தப் பாரதி பாடலுக்கு இப்போது என்ன தேவை என்று இதயமே நீ கேட்பதும் புரிகிறது.

"நோய்ப்பயம்" என்பதுதான் இதன் இணைப்பு.

பிறருக்கு வரும் நோய்களைக் கண்டும் கேட்டும் அவையெல்லாம் தமக்கும் வந்து விடும் என்று நினைத்துப் பயப்படும் பலரையும் பார்த்திருக்கிறோம்.

ஒரு சிறிய தலையிடிக்கே உலகத்தைக் கூவி அழைப்பவரையும் பார்க்கிறோம்.

உலகத்தில் எங்கோ ஒரு கோடியில் ஒருவருக்கு வந்த நோயின் அறிகுறிகளை தமக்கும் இருப்பது போல நினைந்து சதா பயப்படுவோரையும் பார்க்கிறோம்.

எங்கள் உடம்பில் உள்ள உறுப்புக்களில்

கையில், காலில் ஒரு சிறிய வெட்டுக் காயம்.

சுகப்படுத்தி விடலாம்.

இதயமே... உனக்கு ஏற்படும் காயங்கள் அப்படியில்லை. உன்னைப் போலவே உன்னுடன் சேர்ந்து இயங்கும் மிக முக்கியமான உள்ளுறுப்புக்களுக்கும் (Vital Organs) அப்படித்தான்.


பல முக்கியமான உள்ளுறுப்புகளோடு நீ சேர்ந்து இயங்குகிறாய்.

கூடித் தொழில் செய்வது உங்கள் கொள்கை. உங்களுக்குள் பிரிவினைகள் வந்துவிட்டால் ஒன்றின் பின்னால் ஒன்று என்று மேலும் மேலும் பிரச்சினைகள் வந்து சேரும். உடம்பின் இயக்கத்தின் கட்டுப்பாட்டு நிலையமாயும், அறிவுப் பெட்டகமாயும், கதிர் வீச்சுக்களைப் போல உணர்ச்சிக் கீற்றுக்களைப் பாய்ச்சும் இருப்பிடமாயும் விளங்கும் மூளை (Brain) மண்டை ஓடு எனும் இரும்புப் பெட்டகத்துள் பாதுகாப்பாக இருக்கிறது.

உன் புத்தியைச் செருப்பால் அடிக்க வேணும் என்று சிலர் சொல்லுவார்கள்.

ஆனால் அதைச் செய்ய முடியாது.

பேசுவதும் - பேசாதிருப்பதும்,
பேசுவதைக் கேட்பதும் - கேளாதிருப்பதும்,
கேட்டதைச் சிந்திப்பதும் - சிந்திக்காதிருப்பதும்,
ஆர்வப்படுவதும் - ஆர்வமின்றி இருப்பதும்,
அக்கறைப்படுவதும் - உதாசீனப்படுத்துவதும்,
அச்சப்படுவதும் - அச்சமின்றி இருப்பதும்,
கண்களைத் திறப்பதும் - மூடுவதும்,
பார்ப்பதும் - பாராததும்,
மன்னிப்பதும் - மறப்பதும்,
துயரப்படுவதும் - ஆனந்திப்பதும்
என்று ஓராயிரம் வேலைகள்.



அவை அனைத்துக்குமான கட்டளைச் செயலகந்தானே மூளை. பிராண வாயுவை (Oxygen) உள்வாங்கி இரத்தத்தை சுத்தப்படுத்தி கழிவுகளாகிய கரியமிலை வாயுவை (Carbon Dioxide) வெளிவிடும் கடமையை உன்னைப் போலவே தவறாது செய்து வருகிறது சுவாசப்பை (Lungs).

இதயமே... உனக்கும் சுவாசப் பைக்கும் இடையில் கொடுத்து வாங்கும் அளவுக்கு மிக நெருக்கமான தொடர்பு இருக்கிறது.

இப்படி இன்னும் பிரதானமான உள்ளுறுப்புக்கள் (Vital Organs) பலவும் உன்னோடு சேர்ந்து இயங்கிவருவதை நீ அறிவாய்.

அசுத்தங்களை வடிகட்டும் சிறுநீரகம் (Kidney), கழிவு நீரை சிறுநீர் எனும் பெயரில் சேர்த்து வெளிவிடும் ப்ளாடர் (Bladder), சிறுகுடல் (Small Intestine), பெருங்குடல் (Colon). இப்படி எத்தனை உறுப்புக்கள்...சிறியதும் பெரியதுமாய் இப்படிப் பல.

*"வயிற்றுக்கு சோறிட வேண்டும் - இங்கு*
*வாழும் மனிதர்க்கு எல்லாம்"*

வயிற்றை யாரும் நினைப்பதில்லை.

பசி நினைக்க வைத்துவிடும்.

அந்த வயித்துமாறி அம்மனுக்கு தினம் தினம் வேளைக்கு வேளை படையல் இல்லையென்றால் என் இதயமே... நீ உட்பட எல்லோரும் பட்டினிதான்.

இவை எம்மை எச்சரிக்கும் போது எங்கள் புத்தி நிச்சயமாக கேட்க வேண்டும், கவனிக்க வேண்டும். பிறகு பார்க்கலாம் என்பது சரியல்ல. உதாசீனப்படுத்தவே கூடாது. உடல் என்னும் இந்த இயந்திரத்தில் பிரதான உறுப்புக்களை பழுதடைய விட்டால் நிலைமை என்ன?

நீங்கள் எல்லோரும் - சொந்தச் சகோதரர்களே பிணக்குப் பட்டுக் கொண்டிருக்கிறது போல் இல்லாமல் - எங்கடை தமிழ்க் கட்சிகள் அடிபட்டுக் கொண்டிருக்கிறது போல் இல்லாமல் - ஒற்றுமையாக சேர்ந்து இயங்குவதைக் காணப் பெரும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கிறது.

ஆனால் புத்தி பேதலித்துப் போய் பழக்க வழக்கங்கள் மாறி மதுவுக்கு அடிமையாகி போதை மருந்துகளுக்குள் புதைந்து போய் சிறுநீரகத்தை சீரழித்து, சிக்குப் புக்கு சிக்குப் புக்கு என்று நீராவியில் இயங்கிய புகைவண்டியைப் போல புகை ஊதி ஊதி சுவாசப் பையை புகைமூட்டி எரியூட்டி கொடுமைப்படுத்தினதாலை எவ்வளவு பிரச்சினைகள் வந்திட்டுது. இதாலை கனபேர் கெதியாய் போய்ச் சேர்ந்திடுகினம்... இவற்றையெல்லாம் என் புத்தி நினைத்துப் பார்த்தது.

எட... நான் புகைத்தல் இல்லை, குடியில்லை, இறால், நண்டு, கணவாய், ஆடு, மாடு, பன்றி என்று அதிகம் கொழுப்புச் சாப்பாடுகள் எதுவும் இல்லை.

இதயமே எப்படி நீ சுகவீனப்பட்டாய்... இந்தக் கேள்விகளை எல்லாம் திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருக்க சண்ணி புரூக் வைத்தியசாலைக்கு (Sunnybrook Hospital) போகவேண்டும்.

அம்பியூலன்ஸ் (Ambulance) தயார் என்று சொன்னார்கள்.



*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 57)*


# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

இதற்கு பெரிய பிராட்டி 'எல்லாம் மகேஸ்வரன் சித்தம்' என்றார். திருமலை சக்கரவர்த்தி குமாரனை சம்புவரையர் விருந்துக்கு அழைத்து இப்படிச் செய்திருக்க மாட்டார்! பின் இச் சம்பவம் எப்படி நடந்திருக்கும் எனக் கேட்டார். 'தாயே வாணர் குலத்து வாலிபன் ஒருவனிடம் இளைய பிராட்டி ஓலை கொடுத்து அனுப்பினாராம் அவன் தான் உயிரற்ற உடல் அருகில் இருந்தானாம். அதனால் அவன் செய்து இருக்கலாம் என்கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல என்று நான் நம்புகிறேன் கரிகாலர் மரணத்தில் ஏதோ ஒரு மர்மம் இருக்கிறது அதைக் கண்டு பிடிக்க நான் போக வேண்டும் தங்களிடம் கொள்ளிடக் கரையில் விடை பெறுகிறேன்' என்றார். கொள்ளிடத்தின் உடைப்புக் காரணமாக எங்கும் வெள்ளம் பரந்து நின்றது ஆனாலும் தண்ணீர் வேகமாக வடிந்தது ஆழ்வார்க்கடியானும் விரைந்து திருப்புறம்பயத்தை அடைந்தான். அங்குள்ள பள்ளிப் படைக் காட்டில்தான் வீரபாண்டியனின் ஆபத்துதவிகள் சதி செய்யும் இடம் ஏதாவது துப்புக் கிடைக்கும் என்று மனதில் எண்ணிக் கொண்டு வந்தான். அவன் நினைத்தபடி சதிகாரர்கள் சோம்பன் சாம்பவன், கிராமவிருத்தன், இடும்பன்காரி இவர்களுடன் பூங்குழலியின் தமையன் படகோட்டி முருகையனின் மனைவி ராக்கம்மாளும் இருந்தாள். இவர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள் இதனை ஆழ்வார்க்கடியான் மறைந்திருந்து பார்த்துக் கொண்டிருந்தான். அவர்கள் பேசியபடி பச்சைமலை அடிவாரத்திற்கு புறப்படுகிறார்கள் என்று தெரிந்து கொண்டு தானும் அங்கு போக எண்ணினான். சதிகாரர்கள் அங்கிருந்து போகும்வரை காத்திருந்துவிட்டு புறப்பட எண்ணியபோது எதிரில் பூங்குழலி வந்தாள். 'தஞ்சாவூரில் இருந்து நீ எப்படி இங்கு வந்தாய் எதற்காக வந்தாய்?' என்று வியப்புடன் கேட்டார். அதற்கு பூங்குழலி 'என் அத்தையைக் கொன்ற பாதகனைப் பழி வாங்க வந்தேன் இவர்களுள் என் அண்ணியும் கூட நிற்பது கண்டு வியந்து நின்றேன். இவர்களைத் தொடர்ந்து போய் கொலைகாரனைக் கொன்று விட்டு வருவேன்' என்றாள்.

அப்பொழுது ஆழ்வார்க்கடியான் 'என்ன சொல்கிறாய் உன் அத்தை மந்தாகினி தேவியை இவர்களுள் ஒருவன் கொன்றானா? ஊமைராணி இறந்து விட்டாளா?' என்று கேட்டார். 'ஆமாம் என் அத்தை இறந்து விட்டாள் சக்கரவர்த்தியைக் கொல்ல நினைத்து எறிந்த வேலை என் அத்தை தன் மார்பில் தாங்கிக் கொண்டாள் தன் உயிரைக் கொடுத்து சக்கரவர்த்தியயைக் காப்பாற்றினாள்' என்றாள் பூங்குழலி. பின்னர் இருவரும் மூன்று நாட்கள் இரவும் பகலும் பிராயாணம் செய்து பச்சை மலை அடிவாரத்தை அடைந்தனர். அந்த அடர்ந்த காட்டுக்குள் ரவிதாசனும், அவனைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள் அதன் அருகில் ஒரு மலைக் குகை இருந்தது. அதனைச் சுட்டிக் காட்டி ஏதோ சொன்னான் ரவிதாசன். அப்பொழுது ஆழ்வார்க்கடியான் 'பூங்குழலி அந்தக் குகைக்குள் சென்று பார்த்து வருகிறேன் நீ இங்கே இரு' என்று சொல்லிவிட்டு குகைக்குள் செல்ல முயன்றான். அங்கே காணப்பட்ட பெரிய துவாரத்தினூடாக உள்ளே பார்த்தான் பெரிய பழுவேட்டரையர் காளாமுகச் சாமியார் போல் வேடத்துடன் தரையில் மிகக் களையுடன் படுத்திருந்தார். அருகில் நந்தினி உட்கார்ந்து இருந்தாள். குடந்தை சோதிடர் வீட்டில் இருந்து புறப்பட்ட பெரியபழுவேட்டரையர் கடம்பூர் அல்லவா திரும்பினார். அவர் தன்னை யாரும் அடையாளம் கண்டு கொள்ளா வகையில் காளாமுக வேடம் தரித்திருந்தார். அவர் நந்தினியின் அந்தப்புர அறைக்கு வரும் வழியில் யாழ் களஞ்சியத்தில் ஒழிந்திருந்த வந்தியத்தேவனைத் தாக்கிவிட்டு நந்தினியின் அறைக்கு வந்தார். அப்பொழுது ஆதித்தகரிகாலன் வீரபாண்டியனின் வாளால் குத்தபட்டுத் தரையில் கிடந்தான். பின்னர் மந்திரவாதி ரவிதாசனும், அவனைச் சேர்ந்த சதிகாரரும், நந்தினியும், பெரியபழுவேட்டரையரும் கடம்பூர் கோட்டைக்கு வெளியே தப்பிச் செல்வதாக வந்தார்கள். அவ்வேளை பெரியபழுவேட்டரையர் மயக்கம் அடைந்தார் அவரை நந்தினியின் வேண்டுகோளின் பெயரில் பச்சைமலை வரை சுமந்து வந்தனர். அதனால் பெரியபழுவேட்டரையர் இந்த குகைக்குள் இருக்கின்றார். சதிகாரர்கள் வீரபாண்டியனின் ஆபத்து உதவிகள் நந்தினியை தங்களுடன் வருமாறு அழைத்தும் அவள் பெரியபழுவேட்டரையர் விழித்த பின் அவரிடம் மன்னிப்புக் கேட்டு விடைபெற காத்திருந்தாள். அவ்வேளை ஆழ்வாரக்கடியான் அங்கு வந்து அவர்களைக் கண்டு கொண்டான். மறைவில் நின்று அவர்கள் சம்பாசனையைக் கேட்டுக் கொண்டார். 'இந்த மூன்று வருட காலமாக தாங்கள் என்னை அரண்மனையில் பேரரசியாக வைத்து இணையற்ற பெருமை அளித்து வந்தீர்கள். அதற்கு கைமாறு இந்த ஜென்மத்தில் செய்ய முடியாது ஆனாலும் இந்த மூன்று நாள்அதங்களுக்கு என் கையால் பணிவிடை செய்ய நான் கொடுத்து வைத்திருந்தேன். இந்த நினைவு என் உயிர் உள்ள வரையில் எனக்குத் திருப்தி அளிக்கும். நான் தங்களை வஞ்சித்து தங்கள் அரண்மனையில் வாழ்ந்தாலும் தங்களுடைய பொக்கிக்ஷத்தின் பொருளை என்னுடைய பழி முடிக்கும் காரியத்திற்கு உபயோகப்படுத்தியதும், கடைசியாக கடம்பூர் அரண்மனையில் விதி வசத்தால் நேர்ந்த வினையும் எமக்கு மறு ஜென்மத்தில் நினைவுக்கு வராது இருப்பின் நான் தங்களை மணந்து, நல்ல வாழ்க்கைத் துணையாக இருப்பேன்! என்னை மன்னித்து விடையளியுங்கள்' என்று கெஞ்சினாள்.

அதைக் கேட்ட பழுவேட்டரையர் 'நந்தினி ஏன் என்னிடம் விடை கேட்கிறாய் விடை கேட்காமலே போய்விடு போகும் முன் நான் அங்கு வராவிட்டால் உன் நோக்கத்தை எப்படி முடிக்க எணண்ணியிருந்தாய் என்று கூறிவிட்டு போ' என்றார். அதற்கு நந்தினி 'சுவாமி தாங்கள் சோழ மன்னர் குலத்திற்கு உண்மையாக நடக்கவும் சோழ குலத்தின் சேவையில் உயிரைக் கொடுக்கவும் பரம்பரையாக உறுதி பூண்ட குலத்தில் வந்தவர். நானோ சோழ குலத்தின் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்ள வந்தவள் ஆகையால் தங்களிடம் என் உண்மை நோக்கத்தை தெரிவிக்கவில்லை தாங்கள் துரோகச் செயல் புரிந்து தங்கள் குலத்திற்கு களங்கம் உண்டாக்க நான் விரும்பலில்லை இதனாலேயே தங்களை கடம்பூரில் இருந்து தஞ்சைக்குப் போகச் செய்ய பெரும் பாடுபட்டேன். தாங்கள் தஞ்சை போகும் போது தங்கள் குலதர்மத்திற்கு என் கையால் களங்கம் நேரிடாது என்று உறுதி கொடுத்தேன் அதை நிறைவேற்ற பெரும் பாடுபட்டேன் மணிமேகலை, கந்தமாறன், வந்தியத்தேவன் இவர்கள் ஒருவர் மூலமாக என் நோக்கத்தை நிறைவேற்ற எண்ணினேன் தாங்களும் தஞ்சை போனீர்கள் ஆனால் விதியானது இவ்வாறு நடந்தேறியது நீர் என்னில் காட்டிய கருணைக்கு நான் உயிர் உள்ள வரை நன்றி சொல்வேன்' என்று கூறிவிட்டு வெளி வந்தாள். அவ்வேளை ஆழ்வார்க்கடியானும் யாவற்றையும் கேட்டுவிட்டு மீண்டும் பூங்குழலியிடம் வந்தான். 'நான் வந்த காரியம் ஆகிவிட்டது புறப்படுவோமா?' என்றான் அதற்கு பூங்குழலி 'இதோ அந்த சதிகாரர் கூட்டத்தில் அவன் இருக்கிறான் என் அத்தையைக் கொன்ற பாதகன் கொலைக்கு கொலை பழிக்குப் பழி வாங்க வந்தேன்' என்றாள். ஆழ்வார்க்கடியான் 'பூங்குழலி குற்றம் செய்தவர்களைத் தண்டிக்க நாம் யார் அதற்கு கடவுள் இருக்கிறார் சரி கடவுளை விடுவோம் இந்த உலகில் குற்றங்களைத் தண்டிக்கும் பொறுப்பு அரசர்களுடையது அரசர்கள் நியமிக்கும் அதிகாரிகளுடையது' என்றான். 'என்ன வைஷணவரே இந்த பாதகன் என் அன்பு மயமான அத்தையை கொன்றான் அப்பொழுது சக்கரவர்த்தியும் அவருடைய ராணிமார்களும் தஞ்சைக் கோட்டை அதிகாரியான சின்னப் பழுவேட்டடரையரும் பார்த்துக் கொண்டு நின்றார்கள். பாதகன் தப்பி ஓட விட்டு விட்டார்கள் அதனால் நான் கொலைகாரனை தொடர்ந்து போகிறேன்' என்று சொல்லிக் கொண்டு ஓடினாள். சின்னப் பழுவேட்டரையரும் எழுந்து வந்தார். 'சுரங்கப் பாதையில் இருவரும் வந்தோம்




அப்பொழுது சின்னப் பழவேட்டரையர் திடீர் என்று கொலைகாரன் அகப்பட்டு விடடான்' என்றார் அப்பொழுது இன்னுமொரு குரல் நான் கொலை செய்யவில்லை என்றது. சின்னப் பழுவேட்டரையர் திகைத்துப் போய் 'நீரா ஏன் இங்கு வந்தீர்? யாராவது உம்மை பார்த்தால் நீர் தான் சக்கரவர்த்தியை கொன்றவன் என்பர் என்னுடன் வாரும்' என்று அழைத்துக் கொண்டு போனார் அவர் 'சக்கரவர்த்தி செத்துப் போய்விட்டாரா?' என்று கேட்டார். சின்னப் பழுவேட்டரையர் மருமகன் மதுராந்தகனை அழைத்துக் கொண்டு போனார். நான் இவனைத் தொடர்ந்து வந்தேன். அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்ய மறந்த போது நாம் செய்வதில் என்ன தவறு? என்றாள் பூங்குழலி. 'கேள் சோழ சாம்ராஜ் ஜியத்தின் தனாதிகாரி தஞ்சை அரண்மனையின் சர்வாதிகாரி, இருபத்து நான்கு போர்களில் போரிட்டு அறுபத்து நான்கு விழுப்புண்களை தம் திருமேனியில் சுமந்திருக்கும் வீராதி வீரர் குறுநில மன்னர் குழுவின் தலைவர், நந்தினி தேவியின் கணவர், நந்தினியும் அந்தக் குகைக்குள் இருக்கிறார்கள். இவர்களில் ஒருவர் ஆதித்தகரிகாலனைக் கொன்றவன். ஆனால் அவரைக் கொல்ல வேண்டும் என்று கொல்லவில்லை வேறொருவரைக் கொல்ல எறிந்த கத்தி ஆதித்தகரிகாலன் மீது விழுந்து அவரைக் கொன்று விட்டது அவரைக் கொலைகாரன் என்று தண்டிக்க முடியுமா?' என்று கேட்கும் நேரம் ரவிதாசன், தேவராளன், பரமேசுவரன் சோம்பன் சாம்பவன் திருதிருவென்று வந்து ஆழ்வார்க்கடியானை சூழ்ந்து கொண்டனர். 'வைகூஷ்ணவரே அன்பின் அநிருத்தரின் ஒற்றனே எங்களிடம் அகப்பட்டுக் கொண்டாய் நாம் செய்த மூன்று முயற்சியில் ஒன்றில்தான் வெற்றி கண்டோம். எம் தோல்வி பற்றி எமக்கு கவலை இல்லை நீ அகப்பட்டுவிட்டாய் உன்னை உயிரோடு விடமாட்டோம்' என்று கூறி தன் தடியை ஓங்கினான் ரவிதாசன். அவ்வேளை மலைக்குகையில் இருந்து வெளியேறிய நந்தினி ஆழ்வார்க்கடியானை நோக்கி ஓடிவந்தாள். 'என் சகோதரனை ஒன்றும் செய்யாதே' என்றாள். அப்போது ஆழ்வார்க்கடியான் 'நன்றி சகோதரி அவனால் என்னை என்ன செய்ய முடியும்?' இறைவன் என்னைக் காப்பாற்றுவான் என்றான் அதற்கு நந்தினி 'திருமலை என்னை என் அன்னையிடம் அழைத்துப்போ இல்லாவிட்டால் நான் இவர்களுடன் போகிறேன்' என்றாள். திருமலை 'நந்தினி இவர்களில் ஒருவனான சோமன் சாம்பவன் தான் உன் அன்னையை வேல் எறிந்து கொன்றான் இவனைப் பழிவாங்க இந்தப் பெண் காத்திருக்கிறாள்' என்றான். அப்பொழுது பூங்குழலி நந்தினியின் தோற்றம் தன் அத்தையை போல் உள்ளது என்று பிரமித்து நின்றாள். அச்சமயம் சின்னப் பழுவேட்டரையரும், கந்தமாறனும் குதிரை மீது பாய்ந்து வந்தார்கள் மூன்றாவது குதிரையும் வந்தது அதில் சேந்தன் அமுதன் கட்டப்பட்டிருந்தான். இவற்றைக் கண்ட சதிகாரர் ஓட்டம் பிடித்தனர். நந்தினி விம்மி அழுதபடி கீழே உட்கார்ந்தாள். ஆழ்வார்க்கடியான் சின்னப் பழுவேட்டரையரைப் பார்த்து 'வாருங்கள் நல்ல சமயம் வந்தீர்கள் என்றார் இதோ சதிகாரர் வீரபாண்டியனின் ஆபத்துபதவிகள் சக்கரவர்த்தியை கொல்ல முயன்றவர்கள் ஆதித்தகரிகாலரை கொன்றவர்கள் இதோ ஓடுகிறார்கள்' என்றார். சின்னப் பழுவேட்டரையர் 'என்ன சொல்கிறாய் நீ எப்படி இங்கு வந்தாய் ஏன் இவள் இப்படி அழுகிறாள் எங்கே என் தமையனார்' என்று வினாவினார். அதற்கு ஆழ்வார்க்கடியான் 'உங்கள் தமையனார் அந்தக் குகைக்குள் இருக்கிறார் அவரை பழுவூர் ராணி காப்பாற்றினாள் இவர் தன் அன்னை இறந்து விட்டதால் சோகத்தில் அழுது கொண்டிருக்கிறாள்' என்றார். அப்போது சின்னப்பழுவேட்டரையர் 'திருமலை நீ என் தமையனாரிடம் போய் நான் வந்திருப்பதாக சொல் நான் முதலில் அவரைப் பார்க்க வேண்டும்' என்றார். அதற்கு ஆழ்வார்க்காடியான் 'அப்படியானால் தப்பி ஓடும் சதிகாரரை விட்டு விடுவீர்களா?' என்றார். அப்போது சின்னப் பழுவேட்டரையர் தன் ஆட்களுக்கு கட்டளையிட்டார் பின்னர் 'குகைக்குள் இரகசிய வழி உள்ளது என்று தோன்றுகிறது வாருங்கள் போய் பார்ப்போம்' என்றபடி ஆழ்வார்க்கடியான் முன் செல்ல சின்னப் பழுவேட்டரையர், கந்தமாறன் பின் தொடர்ந்தார்கள். அப்பொழுது நெடிய கம்பீரமான உருவம் தள்ளாடியபடி வெளியே வந்தது. சின்னப் பழுவேட்டரையர் தன் தமையன் என்று அடையாளம் கண்டு கொள்ளவில்லை அவ்வாறு பெரியபழுவேட்டரையர் தோற்றம் மாறி இருந்தது. தன் தம்பியைக் கண்ட ஆச்சரியத்தில் 'தம்பி நீ பலமுறை எச்சரிக்கை செய்தாய் அதைப் பொருட்படுத்தாமல் நான் மோசம் போய்விட்டேன்' என்று முணுமுணுத்தார. சின்னப் பழுவேட்டரையர் 'அண்ணா' என்றபடி கட்டித்தழுவினார். 'இந்தச் செய்தியைக் கடம்பூரில் இருந்து கந்தமாறன் கொண்டு வந்தான் நம்முடைய பலத்தை உடனே திரட்டிச் சேர்த்து மதுராந்தகரைச் சிம்மாசனம் ஏற்ற ஏற்பாடு செய்ய வேண்டும் என்று சம்பபுவரையர் செய்தி அனுப்பியுள்ளார். தஞ்சையில் நடந்ததைக் கேளுங்கள் சக்ரவர்த்தியயை வேல் எறிந்து கொல்ல முயன்றனர் ஆனால் மந்தாகினி உதவி தன் உயிரைக் கொடுத்து சக்கரவர்த்தியை காப்பாற்றினார். கொடும்பானார் ளோளர் பெரிய படையுடன் தஞ்சாவூர் கோட்டையை முற்றுகையிட்டுள்ளார் தாங்கள் இல்லாத படியால் அதையும் நிச்சயிக்க முடியவில்லை. அநிருத்தரும் தாங்கள் வந்தபின் பார்க்கலாம் என்றார்.

மேலும் கொடும்பனார் வேளாளருடைய மகள் வானதி இளையபிராட்டி அனுப்பிய செய்தி கொண்டு வந்தாள் அவளது யானைப் பாகனாக அருமொழிவர்மன் அரண்மனைக்கு வந்தான. ஏனென்றால் இளவரசர் என்று தெரிந்தால் கொடும்பனார் வேளாளர் தடுத்து நிறுத்தியிருப்பார். அத்துடன் சக்கரவர்த்தியும் படுக்கையில் இருந்து எழுந்து நடந்து சென்று கொலையுண்ட மந்தாகினியை அணைத்துக் கொண்டார். கொலைகாரனைப் பிடிக்க இதோ இந்த பெண் பூங்குழலி சென்றாள். அவளுடன் நானும் பொக்கிஷ நிலவறைக்குச் சென்றேன் அங்கு மதுராந்தகர் இருந்தார். ஏன் என்று தான் தெரியவில்லை, காரணமும் சரியாகச் சொல்லவில்லை அந்த இருட்டில் ஒருவனைகக் கைப்பற்றி கொலைகாரன் இவன் என்று எண்ணினேன். ஆனால் அவன் மதுராந்தகதேவர். யாராவது சந்தேகம் கொள்ளப் போகிறார்களே, இவன் ஒரு சாதுப்பிள்ளை ஒருவாறாக அவரை அரண்மனைக்குக் கொண்டு போய் சேர்த்தேன். பொக்கிஷ நிலவறைக்கு செல்வதற்கு காரணம் கேட்டேன் எதுவும் சொல்லவில்லை இந்த நிலையில் சக்கரவர்த்தி இறந்து விட்டார் என்று பொய்ச் செய்தி வெளியில் பரவியதும், கொடும்பாளூர் வேளாளர் படைகளுக்கு கோட்டையைத் தாக்க கட்டளையிட்டாராம் கோட்டைக் கதவுகள் உடைக்கப்பட்டன. கோட்டை மதில்கள் மேல் ஏறி வீரர்கள் உள்ளே குதித்தார்கள். மதுராந்தகரை அரண்மனையில் விட்டு விட்டு அவசரமாக சென்று சண்டையை நிறுத்தினேன். பின்னர் பழுவூர் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்காவது மதுராந்தகருக்காவது ஒரு சிறிய கெடுதல் நேர்ந்திடினும் கொடும்பானார் வம்சத்தை பூண்டோடு அழித்து விடுவேன் என்று பூதிவிக்கிரம கேசரிக்கு செய்தி அனுப்பினேன. தாங்கள் கடம்பூரில் இருப்பீர்கள் என்று எண்ணி கடம்பூர் புறப்பட்டேன் குடமுருட்டி ஆற்றுக் கரையில் கந்தமாறன் குதிரையின் மேல் மிக அவரசமாக வந்து கொண்டிருந்தான்.

*தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன்

# ஜீவன் முக்தி 583

*(சென்ற வார தொடர்ச்சி...)*

நம்மைப் படைத்து நம்மை இயக்கும் பிரபஞ்ச சக்தி முழுமையானது பூரணமானது. அந்தச் சக்தியின் ஓட்டம் நம்முள் பொங்கியோடுவது குறையும்போது ஏற்படும் முதல் குறை உணர்வுதான் 'மனிதன்' என்ற உணர்வு அதற்குக் கீழும் குறையும் போதுதான் மனநோய்கள் உடல் நோய்கள் என்ற எல்லாமே பிறக்கின்றன.

புரஸ்சரணம் அபூரணத்தை சரிசெய்து பூரணத்தன்மையை உங்களுக்குள் மலர்த்தும் சக்தி படைத்தது.

புரஸ்சரணம் உங்களுக்குள் பல உன்னதமான மாற்றங்களையும் மங்களத் தன்மையையும் எடுத்து வருகிறது.

புரஸ்சரணத்தில் உபயோகிக்கப்படும் பூர்ண மூலமந்திரமானது உங்களை நேரடியாகப் பிரபஞ்ச சக்தியோடு இறை சக்தியோடு இணைத்து மகோன்னத மயமான மாற்றங்களை உங்களுக்குள் உருவாக்கும் சக்தி படைத்தது.

புரஸ்சரணம் உங்களுக்குள் பல உன்னதமான மாற்றங்களையும் மங்களத் தன்மையையும் எடுத்து வருகிறது.

புரஸ்சரணத்தில் உபயோகிக்கப்படும் பூர்ண மூலமந்திரமானது உங்களை நேரடியாகப் பிரபஞ்ச சக்தியோடு இறை சக்தியோடு இணைத்து மகோன்னத மயமான மாற்றங்களை உங்களுக்குள் உருவாக்கும் சக்தி படைத்தது.

படிப்படியாக இந்த மூலமந்தரத்தை உச்சாடனம் செய்வதனால் ஏற்படும் மாற்றங்களைப் பார்ப்போம்.

உன்னத மாற்றம் 1:


புரஸ்சரணத்தால் பிரம்மத்தத்துவம்... பிரபஞ்சசக்தி உங்களுக்குள் உயிர்ப்பிக்கப்படுகிறது.

Big Bang Theory யில் இந்த மொத்த பிரபஞ்சத்தின் அடிப்படை அலகு என்ன என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். உடலின் அடிப்படை அலகு செல். பொருளின் அடிப்படை அலகு அணு. அதே போல் 'பிரபஞ்சத்தின் அடிப்படை அலகு அதிர்வுகள். அது Hum என்ற நாதமாக இருக்கிறது' என்று Big Bang Theoryல் விஞ்ஞானிகள் நிரூபிக்கிறார்கள்.

ஓம் எனும் நாதத்தை ஆங்கிலத்தில் சரியாக மொழிபெயர்த்தால் அது hum என்றுதான் வருகிறது.

ஓம் எனும் பிரணவம் இந்த பிரபஞ்சம் முழுவதும் நிரம்பி இருக்கிறது என்று உபநிடதங்கள் சொல்லும்போது ஏற்றுக் கொள்ளாதவர்கள் கூட விஞ்ஞானம் சொல்லும்போது எளிதாய்ப் புரிந்து கொள்கிறார்கள்.

## அண்டம் பிண்டான்டமாகும் அறிவியல்



அதனால்தான் 'ஓம்' என்கிற மந்த்ரத்தை உச்சாடனம் செய்வதை அருமையான தியானமாக உலகளவில் இன்று ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

என்ற Primordial sound therapy, Root sound technique, Om chanting என்ற பல்வேறு விதமான சிகிச்சை முறைகளாகவே இன்று 'ஓம்' எனும் மந்திர உச்சாடனமானது மக்கள் மத்தியில் பயன்பாட்டில் இருக்கிறது.

'ஓம்' எனும் மந்திரத்தை உச்சாடனம் செய்வதினால் ஏற்படும் உன்னதமான மாற்றம் உங்களுக்குள் அபரிமிதமான விழிப்புணர்வை அதிகரிக்கிறது என்று சொல்கிறார்கள்.

Om chanting awakens super consciousness and rest full awareness... என்று அவர்கள் இப்போது சொல்வதைத்தான்... 'ஓம் எனும் பிரணவத்தை எப்போதும் உச்சாடனம் செய்தால் உயர்ந்த உணர்வு நிலையிலேயே ஆரோக்கிய நிலையிலேயே இருக்க முடியும்' என்று நம் ரிஷிகள் அப்போதே சொல்லியிருக் கிறார்கள்.

பூரண மந்திர உச்சாடனத்தில் இந்தப் பிரணவ மந்திரத்தைத்தான் முதல் பாகத்தில் உச்சரிப்போம். இது நம்முள் இருக்கும் பிரம்ம தத்துவத்தை விழிக்கச் செய்கிறது. எல்லா இடத்திலும் நிரம்பியிருக்கும் பிரம்ம உணர்வை பிரம்ம அதிர்வை உங்களுக்குள் செறிவூட்டும் சக்தி படைத்தது இந்த 'ஓம்' உச்சாடனம்.

புரஸ்சரணத்தால் பிரம்ம தத்துவமும் பிரபஞ்ச உணர்வும் உங்களுக்குள் உயிர்ப்பிக்கப் படுகிறது.



உன்னத மாற்றம் 2:

புரஸ்சரணத்தால் தேவி தத்துவமும் பிரபஞ்ச சக்தியும் உங்களுக்குள் உயிர்ப்பிக்கப்படுகிறது.

'ஹ்ரீம்' பீஜத்தை உச்சரிப்பதனால் நமமுடைய உடலுக்குள் இருக்கும் 3rd layer energy திறக்கப்படுகிறது.

தொண்டைக் குழியிலிருக்கும் விசுத்தி சக்கரத்தை இந்த 'ஹ்ரீம்' பீஜமானது திறக்கிறது. சின்ன பரிசோதனை. இப்போதே முயற்சி செய்து பார்க்கலாம்.

இருக்குமிடத்திலேயே நிமிர்ந்து அமர்ந்து உங்களின் கவனம் முழுவதையும் தொண்டைக் குழியில் ஒன்றாக்கி 'ஹ்ரீம்' எனும் பீஜத்தை ஆழமாக சப்தமாக நீளமாகத் தொடர்ந்து 11 நிமிடங்களுக்கு உச்சாடனம் செய்து பாருங்கள்.

11 நிமிடங்கள் 'ஹ்ரீம் ஹ்ரீம்' எனும் பீஜத்தை தொடர்ந்து உச்சாடனம் செய்துவிட்டு பிறகு 10 நிமிடங்கள் ஓய்வாகத் தொண்டைக்குழியில் கவனம் முழுவதையும் ஒன்றாக்கி அமர்ந்திருங்கள். எவ்வளவு பெரிய சக்திப்பெருக்கு உங்களுக்குள் ஏற்படுகிறது என்பதை அனுபவமாகப் பார்ப்பீர்கள்.

3 மணி நேர தூக்கம் தரும் புத்துணர்வை இந்த 11 நிமிட உச்சாடனம் தந்துவிடும். அவ்வளவு சக்தி வாய்ந்தது. உங்களுக்குள் இருக்கும் பிரபஞ்ச சக்தியைத்தான் 3rd layer energy என்கிறோம். இதைத்தான் பராசக்தி என்றும் தேவி தத்துவம் என்றும் சொல்கிறோம்.

புரஸ்சரணத்தில் பயன்படுத்தும் பூரண மூலமந்திரத்தின் இரண்டாவது பாகம் 'ஹ்ரீம்' எனும் மந்திர உச்சாடனம். இதை உச்சரிப்பதினாலேயே பராசக்தியின் சக்திப் பெருக்கை உங்களுக்குள் உருவாக்க முடியும்.

புரஸ்சரணத்தால் தேவி தத்துவமும் பிரபஞ்ச சக்தியும் உங்களுக்குள் உயிர்ப்பிக்கப்படுகிறது.

உன்னத மாற்றம் 3:

புரஸ்சரணத்தால் குருதத்துவமும் ஞானசக்தியும் உங்களுக்குள் உயிர்ப்பிக்கப்படுகிறது.

நீங்கள் எப்படி நித்யானந்தம் என்ற நிலையை வழிபடுகிறீர்களோ நானும் அந்த நிலையை அதை விட ஆழ்ந்த பக்தியோடு வழிபடுகிறேன்.

ஒரே ஒரு சின்ன வித்யாசம்...

நீங்கள் நித்யானந்தம் எனும் அந்த நிலையான எதனாலும் மாறாத தெவிட்டாத ஞானப் பெருக்கின் உச்சமான நித்யானந்த நிலையை அடைவதற்கு பிரார்த்திக்கிறீர்கள்' தியானம் செய்கிறீர்கள்.

அதாவது நித்யானந்தத்தை அடைவதற்காக நீங்கள் பிரார்த்திக்கிறீர்கள். அந்த நிலையை அடைந்ததினால் நான் பிரார்த்திக்கிறேன்.

ராமகிருஷ்ணருடைய படத்திற்கு ஒரு முறை ராமகிருஷ்ணரே பூஜை செய்கிறார்.

அப்போது ஒருவர் கேட்கிறார். உங்களுடைய படத்திற்கு நாங்கள் பூஜை செய்தால் அது பக்தி. ஆனால் உங்களுடைய படத்திற்கு நீங்களே பூஜை செய்தால்...

ராமகிருஷ்ணர் மிக அழகாகத் தந்த பதிலின் சாரத்தைத் தருகிறோம்.

'என்னுடைய உடல் எப்படி உங்களுடைய உடல் அல்லவோ அப்படித்தான் எனக்கும். இது என்னுடைய உடல் அல்ல.

இது எப்போதோ தேவிக்குச் சொந்தமாகிவிட்டது. இது தேவிக்குச் சொந்தமான உடல். அதனால்தான் நானும் இதைப் பூஜிக்கிறேன்' என்று சொல்கிறார்.

ஞானமடையும்போது
மனிதன் இறக்கிறார்!
கடவுள் பிறக்கிறார்!

அதனால்தான் அவரே அவருடைய உடலைப் பூஜித்தார்.

அண்ணாமலை சுவாமிகள் ரமணரைப் பற்றி என்னிடம் பகிர்ந்து கொண்ட அருமையான சம்பவம் ஒன்று...

ஒரு முறை ரமண மகரிஷியும் அவருடைய பக்தர்களோடு சேர்ந்து கொண்டு 'ரமண சத்குரு! ரமண சத்குரு! ரமண சத்குருராயனே' எனும் பாடலைப் பாடுகிறார்.

பக்தர்கள் ஆனந்தத்தோடு அந்தப் பெயரை உச்சாடனம் செய்வதைப்போல அவரும் ஆனந்தத்தோடு அந்தப் பெயரை உச்சாடனம் செய்வதைப் பார்த்த பக்தர் ஒருவர் ஆச்சர்யப்பட்டுக் கேட்கிறார்.

'பகவானே! நாங்கள் ரமண சத்குருராயனே! என்று பாடுவது சரி. இது ஒரு ஆழமான தியானம் புரிகிறது. பலநூறு தியானங்களைச் செய்வதை விட இந்த ஒரு தியானம் செய்வதே போதுமானது. நீங்கள் இருக்கும் நிலைக்கு நாங்கள் வரவேண்டும். அதற்கு மிக எளிதான வழி குரு மந்திர உச்சாடனம் என்று பாகவதத்தில் படித்து உணர்ந்ததால் நாங்கள் உச்சரிக்கிறோம். எங்களுக்குள் மிக ஆழமான மாற்றங்களை இந்த உச்சாடனம் உருவாக்குவதால் நாங்கள் இதை செய்கிறோம்.

'தனிமனிதனாய்க் கடுந்தவம் செய்து பிரபஞ்ச சக்தியோடு எங்களை இணைத்துக் கொள்ள முடியும் அல்லது ஏற்கெனவே பிரபஞ்ச சக்தியோடு தம்மை இணைத்துக் கொண்ட குரு சக்தியோடு பிரபஞ்ச சக்தியோடு எங்களை இணைத்துக் கொள்ள முடியும்.

இதையெல்லாம் எங்களுக்குச் சொல்லிப் புரிய வைத்ததே நீங்கள்தான்.

நாங்கள் பிரார்த்திக்கலாம் அது சரி. அது புரிகிறது. ஆனால் நீங்களும் அதையே பிரார்த்திக்கிறீர்களே அதுதான் எங்களுக்குப் புரியவில்லை!' என்று அழகாக ரமண மகரிஷி இந்தப் பதிலளித்தாராம்.

'அப்பனே ரமணன் எனும் சக்தியை, ஏன் இந்த ஆறடி உடலுக்குள் அடைத்துப் பார்க்கிறீர்? எல்லாவற்றையும் இயக்கும் குரு சக்திதான் இந்த உடலையும் இயக்குகிறது.

நீங்கள் கூட என்னை வழிபடுவது என்னுள் குடியிருக்கும் தெய்வ சக்தியால்தானே! அந்தத் தெய்வ சக்திதான் ஆதிகுரு தக்ஷிணாமூர்த்தியாக தம்ம வெளிப்படுத்திக்கொண்ட நாளிலிருந்த இன்று வரை அந்தந்த காலத்திற்கு உதவும் அவதார புருஷர்களாக இறங்கி வந்துகொண்டே இருக்கிறது.

நானும் என்னுள் குடியிருக்கும் அந்தச் சக்தியை எப்போதும் வழிபட்டுக் கொண்டே இருக்கிறேன்.

இறை சக்தியை எப்பொழுதாவது வழிபட்டால் அவன் மனிதன்.'

இறை சக்தியை எப்போதும் வழிபட்டுக் கொண்டிருந்தால் அவன் ஞானி!

ரமணராய் உங்களுக்கு வந்து உதவி கொண்டிருக்கும் அந்தச் சக்தியை ஏனப்பா இந்த ஆறடி சரீரத்திற்குள் அடைத்துப் பார்க்கிறீர்கள்?

அந்தச் சக்தி எங்குமல்லவா பரவி இருக்கிறது!

நீங்கள் பக்தியோடு பிரார்த்திக்கிறீர்கள். நான் நன்றியோடு பிரார்த்திக்கிறேன்' என்று ரமண மகரிஷி மிக அழகாகச் சொன்னாராம்.

நிஜத்தில் குரு சக்தியோடு நம்மை இணைத்துக் கொள்வதால் குருவுக்கு நேரடியாக எந்த பலனும் இல்லை.

சொல்லப் போனால் அவருக்கு அதனால் இன்னும் கொஞ்சம் வேலை அதிகமாகிவிடும்.

நீங்கள் ஒரு புது ஊருக்குச் செல்ல வேண்டுமானால் ஏற்கெனவே சென்றவரிடம்வழிகேட்டு அவரின் உதவியோடு அங்குச் செல்வீர்கள்.

அதேபோல, ஏற்கெனவே இறைசக்தியோடு இணைத்து இறைசக்தியின் ஸ்வரூபமாக வாழும் சத்குருநாதரின் உதவியை பயன்படுத்திக் கொண்டு ஏற்கெனவே அனுபவம் பெற்ற அவரின் ஞானத்தை பயன்படுத்திக் கொள்வதுதான் குருபக்தி.

நித்யானந்தம் எனும் மந்திரத்தை உணர்வுப்பூர்வமாகச் சொல்லும்போது நேரடியாக குருசக்தியோடு உங்களை இணைத்துக் கொள்கிறீர்கள். நேரடியாகப் பிரபஞ்ச சக்தியோடு உங்களை இணைத்துக் கொள்கிறீர்கள்.

புரஸ்சரணத்தால் குருசக்தியும் ஞான சக்தியும் உங்களுக்குள் உயிர்ப்பிக்கப்படுகிறது.

உன்னத மாற்றம் 4:

புரஸ்சரணத்தால் ஆன்ம தத்துவமும் ஆனந்த சக்தியும் உங்களுக்குள் உயிர்ப்பிக்கப்படுகிறது.

எதைச் செய்தாலும் பேசினாலும் நான் எனது' என்று மட்டுமே எல்லோரும் செயல்படுகிறார்கள்.

Attitude of I and mine strengthens your ego.

புரஸ்சரணத்தின் நான்காவது பாகமான 'நமஹ' எனும் மந்திரம் உங்களின் ஆன்ம தத்துவத்தை விழிப்படைய வைக்கிறது.

'நமஹ' என்றால் 'நான் இல்லை' என்றர்த்தம்.

ஒவ்வொரு முறையும் இந்த 'நமஹ' எனும் மந்திரத்தை உச்சரிக்க உச்சரிக்க உங்களின் அகங்காரம் வலுவிழந்து கொண்டே இருக்கும்.

*(தொடர்ச்சி _87_ பக்கம்)*

# இவ்வார ராசிபலன்

## 27-05-2022 வெள்ளி தொடக்கம் 02-06-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** எதிரிகள் உதிரியாகக்கூடிய வாரம். செயல் திறமை வெளிப்படும். உடல்நலனில் அக்கறை தேவை. விருந்தினர் வருகை உண்டு. உத்தியோக இடமாற்றம் ஏற்படும். புதிய நட்பு உருவாகும். வாகன செலவு ஏற்படும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். ஆலோசனை பலன் தரும். குடும்ப கௌரவம் உயரும். அலைச்சல் அதிகரிக்கும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். கண் நோய் வந்து போகும். திடீர் திருப்பம் ஏற்படும். கன்னிப்பெண்களிடம் கவனம் தேவை. புதிய நட்பு உருவாகும். மனைவியால் மரியாதை உயரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். வெறுப்புகள் அகலும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். உத்தியோக உயர்வு கிட்டும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். பெரிய வாயப்புகள் தேடி வரும். பணியில் ஆர்வம் ஏற்படும். கடன்சுமை குறையும். விருப்பமான தொழில் அமையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். தனலாபம் கூடும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை. பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். மற்றசரிடத்தில் மரியாதை உயரும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க வேண்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆறுமுக பெருமாள், அதிர்ஷ்ட எண்: 8,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,H




**ரிஷபம்:** மனம் எதிர்பார்த்த வளர்ச்சி கிட்டும் வாரம். திறமைகள் வெளிப்படும். பணியில் உயர்வு கிட்டும். ஆறுதலான சூழ்நிலை அமையும். கடல் கடந்த பயணம் உண்டாகும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். வங்கி சேமிப்பு உயரும். அனுகூலம் கிட்டும். குடும்பத்தில் கருத்து வேறுபாடு தோன்றும். கஷ்ட காலம் மறையும். பணிவும், துணிவும் கூடும். உற்சாகம் அலைமோதும். இடமாற்றம் உண்டு. தொழில் மேன்மை உண்டு. பயணத்தடை ஏற்படும். வேலை வாய்ப்புக் கூடும். ஆலோசனை பலன் தரும். அணிகலன் தரும். பணப்பிரச்சனை தீரும். புதிய எண்ணம் நிறைவேறும். கல்வியில் ஈடுபாடு அதிகரிக்கும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பதவி வாய்ப்பு வரும். முயற்சிகள் பலன் தரும். பொன், பொருள் சேரும். விருப்பங்கள் நிறைவேறும். வருத்தங்கள் மறையும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். முயற்சிகள் வெற்றி தரும். பெருமைகள் உயரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். பொறியியல் துறை லாபம் தரும். தோற்றப் பொலிவு கூடும். எதிரிகள் பலம் குறையும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். நட்பு வட்டம் விரிவடையும். ரகசியம் காப்பது நல்லது. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் பெருகும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோகப் பலன் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பகை மறையும். கணவன், மனைவி உறவு தித்திக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பூமாதேவி, அதிர்ஷ்ட எண்: 3,1,6,9
அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,S




**மிதுனம்:** பணவரவு அதிகரிக்கும் வாரம். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும். கடன் தொல்லைகள் குறையும். பங்குச்சந்தையில் கவனம் தேவை. குடும்ப அன்யோன்யம் கூடும். மாற்று யோசனை பலன் தரும். விளையாட்டுத்துறையில் ஆர்வம் கூடும். வரவுகள் திருப்தி தரும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். சொத்துப் பிரச்சனை தீர்வு ஏற்படும். பெண்களுக்கு பெருமை சேரும். ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். நட்டமில்லாமல் திட்டங்கள் நிறைவேறும். குடும்பத்தில் குழப்பம் நீங்கும். புத்திரர் வகையில் சந்தோஷம் கூடும். பெருமைகள் கூடும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து போகும். பொருளாதாரம் உயரும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். தெளிவான முடிவுகள் உதயமாகும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிடைக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப்போடுங்கள். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. மனதில் மகிழ்ச்சி கூடும். புத்தி சாதுர்யம் கூடும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சிக்கனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: கோமாதா, அதிர்ஷ்ட எண்: 6,2,1,7
அதிர்ஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,C




**கடகம்:** விரக்திகள் மறையும் வாரம். தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அரசியல்வாதிகளுக்கும் கலைஞர்களுக்கும் ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேசப் பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்தி சாதுர்யம் பெருகும். புதிய நட்பு உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். வெளியூர்ப் பயணம் உண்டு. உடல் நலனில் அக்கறை தேவை. பிள்ளைகளின் தொல்லைகள் ஒழியும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. நவகிரஹ அனுகிரஹம் கூடும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுபகாரியம் கைகூடும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைக்கூடும். இல்லத்தில் அமைதி கூடும். வார்த்தைகளில் நிதானம் தேவை. காதல் கைக்கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்ட காரியம் ஜெயமாகும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். இனம் புரியா சந்தோஷம் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பெரியோர்களின் வாழ்த்துக் கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். அதிர்'ட வாய்ப்புகள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். கால்நடைகளால் லாபம் கிட்டும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசு வழியில் கவனம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 5,4,1,3
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,S




**சிம்மம்:** சொந்தங்களால் மனநிறைவு கிடைக்கும் வாரம். பெருமைகள் கூடும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். நீண்டநாள் பிரச்சனை முடிவிற்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேலைபளு அதிகரிக்கும். உதவிகள் கிட்டும். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். நல்லோர்களின் பாராட்டு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். உண்மைகள் வெளிப்படும். பூமி வாங்கும் யோகம் உண்டு. பெண்களுக்கு சுபசெய்தி வரும். தொல்லைகள் ஒழியும்.



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377


நினைத்த காரியம் நிறைவேறும். ஆடை, அணிகலன்கள் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கைத் தேவை. பழையக் கடன் பஞ்சாயத்து மூலம் தீர்வுக்கு வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. மருத்துவச் செலவு குறையும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. சாதனையான காலம். எதார்த்தமாக செயல்படவும். பக்குவமான பேச்சு பயன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 3,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,A




**கன்னி:** புகழும், புண்ணியமும் கிடைக்கும் வாரம். கலைத்தொழில் திருப்தி ஏற்படுத்தும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண் வழி பிரச்சனைகள் முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். பணவரவு உண்டு. கமிஷன் தொழிலில் லாபம் தரும். பயணத்தால் லாபம் கூடும். பேச்சில் நிதானம் தேவை. பிள்ளைகளால் பலன் உண்டு. ஆலோசனைகள் பலன் தரும். காதல் கைக்கூடும். விவசாயிகள் பயன் பெறும் காலம். வாகன செலவு ஏற்படும். விருந்தினர்கள் வருகை உண்டு. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். உடல்நலனில் அக்கறை தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்த தொழில் லாபம் தரும். திடீர் செலவு ஏற்படும். நன்மைகள் அதிகமாகும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். ஆண்கள் அதிகாரம் உயரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 8,1,4,5
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,H




**துலாம்:** தொட்டது துலங்கும் வாரம். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. கணவன் மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய் வழி உறவில் விரிசல் ஏற்படும். பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். உறவினர் வருகையால் உள்ளம் மகிழும். சாமார்த்தியமாக செயல்படுவீர். தாய்ப்பாசம் அதிகரிக்கும். பாகப்பிரிவினை ஏற்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு படிப்பில் எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். சேமிப்பு உயரும். புதுமைகள் நிறைந்த காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப்பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விறுவிறுப்பான காலம். உடல்பொலிவு கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அரசமரப் பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 6,9,7,2
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,J




**விருச்சிகம்:** சாதனைகள் படைக்கும் வாரம். பெண்களுக்கு யோகம் கூடும். காதலர்களுக்கு கசப்பு நீங்கும். கடன்சுமை குறையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். தாய்வழி தகராறு குறையும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகரிக்கும். சொத்துக்களால் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். எதிர்பார்த்த உதவி தாமதமாகும். கனிவான பேச்சு அவசியம். கலைகளில் ஆர்வம் கூடும். மனைவி அன்பு அதிகரிக்கும். புது முயற்சிகள் பலன் அளிக்கும். மருத்துவச் செலவு குறையும். பேச்சில் நிதானம் தேவை. விரயங்கள் கூடும். பயணங்களால் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் கவனம் தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பொருளாதாரம் உயரும். கௌரவம் கூடும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். பிரச்சனைகள் முடிவிற்கு வரும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல்கள் அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திருப்தி பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விருட்ஷ தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,F




**தனுசு:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். பெற்றோர்களின் ஆசி கிட்டும். உஷ்ணம் அதிகரிக்கும். பொருளாதார உயர்வு ஏற்படும். காரியம் இழுபறியாகும். அரசு வழியில் கவனம் தேவை. பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. கல்விச்செலவு உண்டு. உறவினர் வருகை உண்டு. உலோகத்தொழில் உயர்வு தரும். இடமாற்றம் ஏற்படும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். முயற்சி பலன் தரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டு பெருகும். புதிய தொழில் அமையும். வீண் விரயம் அதிகமாகும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். சஞ்சலம் மறையும். வேண்டாத விஷயங்கள் விலகும். பணியாட்கள் தொல்லை ஏற்படும். வாகனச் செலவு உண்டு. பாதகம் விலகும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பொருள்சோதம் தரும். கல்வி மேன்மை தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழையக்கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. பிரார்த்தனை நிறைவேறும். மாணவர் திறமை பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். அறிவாற்றல் பளிச்சிடும். புதிய பதவிகள் கிட்டும். தன்னம்பிக்கை கூடும். வேண்டாத நபர் விலகுவர். பேரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிதுர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 3,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,E

*(தொடர்ச்சி _86__ பக்கம்)*

# வழிய போய் ராகவா லாரன்சுக்கு ரூ.5 லட்சம் கொடுத்த நடிகர் விஜய்



நடிகர், இயக்குனர், நடன இயக்குனர் என தமிழ் சினிமாவில் பன்முகத்தன்மை கொண்ட ராகவா லாரன்ஸ், தளபதி விஜய்யின் நெருங்கிய நண்பர் என்பது அனைவருக்கும் தெரிந்ததுதான்.

இந்த நிலையில் சமீபத்தில் தளபதி விஜய் ராகவா லாரன்ஸிடம் கோச்சுகிட்ட சம்பவத்தை பற்றி தற்போது ராகவா லாரன்ஸ் தெரிவித்துள்ளார். நடிகர் ராகவா லாரன்ஸ் நடிப்பையும் தாண்டி, மாற்றுத்திறனாளி குழந்தைகள், இளைஞர்களுக்கு உதவிகளை அவரால் முடிந்த அளவுக்கு தனது சாரிட்டபிள் ட்ரஸ்டின் மூலமாக நிதிகளை திரட்டி உதவி செய்து கொண்டு வருகிறார். மேலும் இவரது சாரிட்டபிள் டிரஸ்டிற்கு பல நடிகர், நடிகைகளும் உதவி செய்து வருவர்.

இதனிடையே நடிகர் ராகவா லாரன்ஸ் சிம்புவிற்கு தொலைபேசியில் அழைத்து தனது சாரிட்டபிள் டிரஸ்ட் இருக்கு பணம் அனுப்புமாறு உதவி கேட்டுள்ளார். உடனே சிம்புவும் ஒரு லட்சம் ரூபாய் அனுப்பி உள்ளார். இதனிடையே இந்த விஷயத்தைக் கேள்விப்பட்ட விஜய் ராகவா லாரன்ஸை தொடர்பு கொண்டு பேசியுள்ளார். அப்போது ஏன் நண்பா என்னிடம் எல்லாம் உதவி கேட்க மாட்டாயா என்று விஜய் கேள்வி எழுப்பினார். உடனே ராகவா லாரன்ஸ் பதறிக்கொண்டு, அப்படி எல்லாம் இல்லை நண்பா, நீ பிஸியாக இருப்பாய் என்பதால் தான் உன்னிடம் உதவி கேட்க முடியாமல் போய்விட்டது என்று கூறியுள்ளார். உடனே விஜய் ராகவா லாரன்சின் தேவையை புரிந்து கொண்டு ஐந்து லட்சம் ரூபாய் பணத்தினை அவரது சாரிட்டபிள் டிரஸ்டிற்கு அனுப்பி வைத்து உதவியுள்ளார். நடிகர் விஜய் பொதுவாகவே தன்னை சுற்றி உள்ள நண்பர்களுக்கு ஏதேனும் உதவி என்றால் கேட்ட உடனே செய்து கொடுப்பார். ஆனால் கேட்காமலேயே ராகவா லாரன்ஸுக்கு உதவிகளை செய்தது, தனக்கு ஆச்சரியத்தையும் சந்தோஷத்தையும் அளித்துள்ளதாக ராகவா லாரன்ஸ் தெரிவித்துள்ளார். இதனிடையே இவரது பேட்டி தற்போது வைரலாகி வரும் நிலையில் விஜய்க்கு உள்ள உதவும் மனப்பான்மையை பார்த்து அவரது ரசிகர்கள் சந்தோ'த்தில் ஆழ்ந்துள்ளனர். மேலும் விஜயை போலவே அவரது ரசிகர்களும் பல உதவிகள் செய்யும் வகையில் இந்த நிகழ்வு அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# டி.ராஜேந்திரருக்கு வெளிநாட்டில் சிகிச்சை குறித்து சிம்பு அறிக்கை

இயக்குனர், நடிகர், இசையமைப்பாளர், அரசியல் கட்சி தலைவர் என பன்முகம் கொண்டவரான டி. ராஜேந்தர் உடல் நல பாதிப்பு காரணமாக சென்னை போரூரில் உள்ள ராமசந்திர மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்பு அவருக்கு நெஞ்சு வலி ஏற்பட்டதால், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட அவருக்கு இருதயத்தில் அடைப்பு இருப்பது தெரிய வந்துள்ளது. அதனை அடுத்து, மருத்துவர்கள் மேற்கொண்ட சிகிச்சையில் அடைப்பு சீர் செய்யப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இந்தநிலையில், தனது தந்தையின் உடல்நலம் குறித்து சிலம்பரசன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில், எனது ஆருயிர் ரசிகர்களுக்கும், அன்பான பத்திரிகை, ஊடக நண்பர்களுக்கும் வணக்கம்.



“எனது தந்தைக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்ட நிலையில், அவரை தனியார் மருத்துவமனையில் சேர்த்தோம். அங்கு பரிசோதனையில், அவருக்கு வயிற்றில் சிறிய இரத்த கசிவு ஏற்பட்டுள்ளதாகவும், அவருக்கு உயர் சிகிச்சை தரவேண்டும் எனவும் மருத்துவர்கள் அறிவுறுத்தியதால், அவர் உடல் நலன் கருதியும், உயர் சிகிச்சைக்காகவும், தற்போது வெளிநாட்டுக்கு அழைத்து செல்கிறோம். அவர் முழு சுய நினைவுடன், நலமாக உள்ளார். கூடிய விரைவில் சிகிச்சை முடிந்து, உங்கள் அனைவரையும் சந்திப்பார். உங்கள் பிரார்த்தனைகளுக்கும், அனைவரின் அன்புக்கும் நன்றி. உங்கள் அன்புள்ள சிலம்பரசன்” என்று அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிகிச்சை முடிந்திருக்கும் நிலையில், அவர் முழுமையாக குணமடையாததால் மேல் சிகிச்சைக்காக அவர் அமெரிக்கா அல்லது சிங்கபூர் அழைத்துச் செல்லப்படலாம் என்ற தகவல் கிடைத்துள்ளது. இந்நிலையில், அவரது மனைவி உஷா, மகன்கள் சிம்பு, குறலரசன், மகள் இலக்கியா ஆகியோர் டி. ராஜேந்தருடன் அமெரிக்கா செல்ல இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சிகிச்சைக்காக அவர் அமெரிக்கா செல்வதற்கான ஏற்பாடுகளை பிரபல திரைப்பட தயாரிப்பாளர் ஐசரி கணேஷ் செய்து வருவதாக டி.ஆரின் நெருங்கிய வட்டாரம் தகவல் தெரிவித்திருக்கிறது. டி.ஆரின் உடல் நலம் அபாய கட்டத்தில் இல்லை என்றாலும், தொடர் சிகிச்சை தேவைப்படுவதால் அவர் வெளிநாட்டிற்கு அழைத்துச் செல்லப்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், டி.ஆரின் உடல் நலம் குறித்து சிம்பு இன்று அறிக்கை மூலம் தகவல் தெரிவித்துள்ளார். 67 வயதான டி.ஆர் 1980-களில் இருந்து தமிழ் சினிமாவில் பணியாற்றி வருபவர், தனக்கென தனி முத்திரையை பதித்தவர். விரைவில் அவர் உடல் நலம் குணமாகி வீடு திரும்ப வேண்டும் என கோலிவுட்டில் பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

## இவ்வார ராசிபலன்

(_85_ பக்கம் தொடர்ச்சி)





**மகரம்:** கன்னியமான புண்ணியங்கள் சேரும் வாரம். பதவி உயர்வு ஏற்படும். பக்குவமான பேச்சு அவசியம். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். உடல் உபாதை தோன்றும். வியாபார விரயம் கூடும். குழந்தைகளால் குதூகலம் கூடும். வழக்கு வெற்றி தரும். பயணம் ஆதாயம் தரும். தொழில் வழி தொல்லை குறையும். சுயபலம் கூடும். பொறுப்புக்கள் கூடும். கணவன், மனைவி வேறுபாடு அகலும். சலசலப்பு குறையும். உடல்நலனில் கவனம் தேவை. பற்றாக்குறை நீங்கும். சகோதர்களால் சஞ்சலம் ஏற்படும். காதல் எண்ணம் உருவாகும். முத்தான வாய்ப்பு பெருகும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். கடன் சுமை குறையும். பூர்வீகச் சொத்து வந்து சேரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். குடும்பச் செலவு அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பயணம் தவிர்ப்பது நல்லது. பெண்களுக்கு வேலை பளு கூடும். பயணங்களால் பணம் கரையும். கண் சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பாக்கிகள் வசூலாகும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வீடு தேடி வரும். பணிவான பேச்சுக்கள் தேவை. மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் நிறைவேறும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். புதிய கடன் வாங்க நேரிடும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். சகோதரியினால் நன்மை உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிரபஞ்ச கடவுள், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,N




**கும்பம்:** பங்குச்சந்தையில் லாபம் தரும் வாரம். சச்சரவுகள் அகலும். உடல்நலம் மேம்படும். கணவன், மனைவி உறவு மேம்படும். கணினி துறையில் ஊதிய உயர்வு கிட்டும். நலமும், நன்மையும் பெருகும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளிலிருந்து விடுபடுவீர். மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். மாணவர்களுக்கு மகிழ்ச்சியான காலம். இனிப்பான செய்திகள் வரும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். முதலீடுகளில் முன்னேற்றம் உண்டு. பணப்புழக்கம் அதிகரிக்கும். மனநெருக்கடிகள் தீரும். மனமகிழ்ச்சி கூடும். மேன்மையான காலம். விவேகமான பேச்சுக்கள் குறையும். வீண் வம்பு அகலும். தந்திரமாக செயல்படுவீர்கள். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சித் தரும். சொத்துக்களால் லாபம் தரும். சுறுசுறுப்பு பெருகும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு கூடும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. உறவினர் பகை ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் தேவை. வாழ்க்கையின் பிடிப்பு அதிகரிக்கும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோகப் பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பாராட்டுக்கள் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமான திருப்தி தரும். புது முயற்சிகளை தள்ளிப் போடவும். பெருமிதம் நிறைந்த காலம். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். மனநிம்மதி அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பார்வதிதேவி, அதிர்ஷ்ட எண்: 5,2,1,3
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,Z




**மீனம்:** சாதனை படைக்கும் காலம். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதுமுயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். கல்வியில் ஆர்வம் கூடும். கடன் சுமை குறையும். பருப்பு தானம் பாவம் போக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பணம் புரளும். ஏற்றம் அதிகரிக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கடன் பாக்கிகள் வசூலாகும். வரவுகள் திருப்தி தரும். வாகன யோகம் உண்டு. ஆபரணச் சேர்க்கை உண்டு. அதிகாரம் குவியும். ஆபத்துக்கள் விலகும். பயண முயற்சி பலன் தரும். நினைத்த வி'யம் நிறைவேறும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். பாதகமான சூழ்நிலை விலகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். மெத்தனப்போக்கு விலகும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். கனவுத்தொல்லை உண்டு. நிதி நிலைமை சீராகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பிணிகள் நீங்கும். பல்வலி வந்து நீங்கும். பெண்களின் கௌரவம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குருபகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,9,8
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,B

# வியாபாரத்துக்காக திணிக்கப்படும் ஆபாச, வன்முறை காட்சிகள்.. இணையதளத்தால் சீரழியும் தமிழ் சினிமா



முன்பெல்லாம் தமிழ் சினிமாவில் குடும்பம், காதல், போன்ற திரைப்படங்கள் தான் அதிக அளவில் வெளிவந்து கொண்டிருந்தது. அது போன்ற கதையம்சம் கொண்ட படங்கள் அனைத்தும் பல நாட்கள் கடந்தும் மக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது. ஆனால் தற்போதைய தமிழ் சினிமாவின் தலையெழுத்தே முற்றிலுமாக மாறிவிட்டது. எந்த திரைப்படத்தை பார்த்தாலும் ஆபாசம், வன்முறை, கெட்ட வார்த்தைகள், பாதக துன்புறுத்தல் போன்ற காட்சிகள் தான் தலைவிரித்து ஆடுகிறது. குடும்பத்துடன் படங்களை பார்த்து ரசித்த மக்கள் தற்போது குழந்தைகளுடன் ஒரு திரைப்படத்தை பார்ப்பதற்கு அச்சப்படுகின்றனர். அந்த அளவுக்கு தமிழ் சினிமா தற்போது ஒரு வியாபார நோக்கில் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

இதற்கு பின்னணியில் பிரபல இணையதள நிறுவனங்கள் இருப்பது பலரையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. ஏனென்றால் திரையரங்குகளில் வெளியாகும் திரைப்படங்களுக்கு தான் தணிக்கை சான்றிதழ் வாங்க வேண்டும். அதனால் அப்படிப்பட்ட திரைப்படங்களில் அதிக பட்ச வன்முறை காட்சிகள் இடம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்காது. ஆனால் இணையதளத்தில் வெளியாகும் படங்களுக்கு இப்படி எந்தவித நிபந்தனையும் கிடையாது. அதனால்தான் பல இணையதள நிறுவனங்களும் சம்பந்தப்பட்ட இயக்குனர்களிடம் இதுபோன்று வன்முறை ஆபாச காட்சிகள் நிறைய இருக்க வேண்டும் என்கிறார்கள். சமீபத்தில் வெளியான சாணி காகிதம் திரைப்படத்தில் கூட நாயகி கீர்த்தி சுரேஷ் எக்கச்சக்க கெட்ட வார்த்தைகளை பேசி இருப்பார். அதுமட்டுமல்லாமல் கூட்டுப்பாதக காட்சிகள், தொடர் கொலைகள் என்று பல காட்சிகள் பார்க்கும் அனைவரையும் குலை நடுங்கச் செய்தது. இதுபோன்ற தேவையற்ற வன்முறை காட்சிகள் எதற்காக திணிக்கப்படுகிறது என்ற கேள்விதான் அனைவருக்கும் எழுகிறது. அப்படி என்றால் தமிழ் சினிமாவில் ஆபாசம் இல்லாத திரைப்படங்கள் வருவதற்கு சாத்தியமே இல்லையா என்று கூட பலருக்கும் தோன்றலாம். அப்படி வன்முறை இல்லாத திரைப்படங்களை எடுப்பதற்கு பல இயக்குனர்கள் தயாராக இருந்தாலும், வியாபார நோக்கிற்காக அவர்களும் இது போன்ற ஒரு சூழ்நிலைக்கு தள்ளப்படுகின்றனர் என்பது தான் கசப்பான உண்மை. அதனால் இணையதளத்தில் வெளியாகும் திரைப்படங்களுக்கும் தணிக்கை சான்றிதழ் அளிக்க வேண்டும் என்று பலரும் கோரிக்கை வைத்து வருகின்றனர். இன்றைய தலைமுறையினரின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டாவது அரசு இதுபோன்ற விஷயங்களில் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் சீரழிந்து கொண்டிருக்கும் தமிழ் சினிமா காப்பாற்றப்படும்.

# அன்பின் தொனி - 652

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே -** Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு -** Worship your Creator

**விக்கிரக ஆராதனை தண்டனைக்குரியது**

உன் தேவனாகிய கர்த்தரின் கண்களுக்கு முன்பாக எந்தப் புருஷனாவது ஸ்திரீயாவது உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற வாசல்கள் ஒன்றில் அக்கிரமஞ்செய்து, அவருடைய உடன்படிக்கையை மீறி, நான் விலக்கியிருக்கிற வேறே தேவர்களையாது சந்திரசூரியர் முதலான வானசேனைகளையாவது சேவித்து, அவைகளை நமஸ்கரிக் கிறதாகக் காணப்பட்டால், அது உன் செவிகேட்க உனக்கு அறிவிக்கப்படும்போது, நீ அதை நன்றாய் விசாரிக்கக்கட வாய், அது மெய் என்றும், அப்படிப்பட்ட அருவருப்பு இஸ்ரவேலில் நடந்தது நிச்சயம் என்றும் கண்டாயானால், அந்த அக்கிரமத்தைச் செய்த புருஷனையாவது ஸ்திரீயையாவது உன் வாசல்களுக்கு வெளியே கொண்டுபோய், அப்படிப்பட்ட வர்கள் சாகும்படி கல்லெறியக்கடவாய். - **உபாகமம் 17: 2-5**

யூதாவின் பட்டணங்களிலும், எருசலேமின் வீதிகளிலும், நீங்களும் உங்கள் பிதாக்களும் உங்கள் ராஜாக்களும், உங்கள் பிரபுக்களும், தேசத்தின் ஜனங்களும் காட்டின தூபங்களை அல்லவோ கர்த்தர் நினைத்துத் தம்முடைய மனதிலே வைத்துக்கொண்டார். உங்கள் கிரியைகளின் பொல்லாப்பையும், நீங்கள் செய்த அருவருப்புகளையும், கர்த்தர் அப்புறம் பொறுத்திருக்கக்கூடாதபடியினால் அல்லவோ, உங்கள் தேசம் இந்நாளில் இருக்கிறபடி குடியற்ற அந்தர வெளியும் பாழும் சாபமுமாயிற்று. நீங்கள் தூபங்காட்டி, கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்து, கர்த்தருடைய சத்தத்துக்குச் செவிகொடாமலும், அவருடைய வேதத்துக்கும், அவருடைய கட்டளைகளுக்கும், அவருடைய சாட்சி களுக்கும் இணங்கி நடவாமலும் போனபடியினாலே இந்நாளில் இருக்கிறபடி இந்தத் தீங்கு உங்களுக்கு நேரிட்டது என்றான். - **எரேமியா 44: 21-23**

மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. அப்படியே வம்பும், புத்தியீனமான பேச்சும், பரியாசமும் தகாதவைகள், ஸ்தோத்திரஞ்செய்தலே தகும். விபசாரக் காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக் காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந் திருக்கிறீர்களே. இப்படிப்பட்ட வைகளினிமித்தமாகக் கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வருவ தால், ஒருவனும் உங்களை வீண்வார்த்தைகளினாலே மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள், அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள். - **எபேசியர் 5: 3-7**

அவர்களுக்குப் பின்னே மூன்றாம்தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித்தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிறவனெவனோ, அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து, பரிசுத்த தூதர்களுக்குமுன்பாகவும், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதி க்கப்படுவான். அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்: மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது. - **வெளிப்படுத்தல் 14: 9-11**

பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார்.
- **வெளிப்படுத்தல் 21: 8**

மேலே கொடுக்கப்பட்ட வேத வசனங்களின்படி விக்கிரக ஆராதனை எவ்வளவு தவறானது என்பதையும், விக்கிரகங் களை உருவாக்கிறவர்களின் அறியாமையையும் விபரித்துக்காட்டுகிறது. எனவே, இவைகளை நாம் சரிவரப் படித்து அறிந்து செயற்பட கர்தராகிய தேவன்தாமே உங்களை வழிநடத்துவாராக.

**எரிச்சலுள்ள தேவன்**

அண்டசராசரங்களையும் படைத்து அவற்றை ஒருவராய் ஆளுகை செய்கிற தேவாதி தேவன் தமக்கு வரவேண்டிய கனம், துதி வணக்கத்தை, அவர் உருவாக்கிப் படைத்த மனிதன், அவரை விட்டு விலகி அவர் சிருஷ்டித்த ஏனைய படைப்புக்களை வணங்குவதில் அவர் எரிச்சல் அடைகிறார். தன்னுடைய இந்த நிலையை தேவன்தாமே தாம் படைத்த மக்களுக்குப் பல தடைவ வெளிப்படுத்தி, எடுத்துரைத்திருப்பதை மேலும் பரிசுத்த வேதாகமத்தில் காணலாம்.

என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்கவேண்டாம் நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம், உன் தேவனாகிய கர்த்தராயிருக்கிற நான் எரிச்சலுள்ள தேவனாயிருந்து, என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தைப் பிள்ளைகளிடத்தில் மூன்றாம் நான்காம் தலைமுறைமட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன். - **யாத்திராகமம் 20: 3-5**

கர்த்தருடைய நாமம் எரிச்சலுள்ளவர் என்பது, அவர் எரிச்சலுள்ள தேவனே, ஆகையால், அந்நிய தேவனை நீ பணிந்துகொள்ளவேண்டாம்.
- **யாத்திராகமம் 34: 14**

நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தர் உங்களோடே பண்ணின உடன்படிக்கையை மறந்து, உங்கள் தேவனாகிய கர்த்தர் வேண்டாம் என்று விலக்கின எவ்வித சாயலான விக்கிரகத்தையும் உங்களுக்கு உண்டாக்காதபடிக்கு எச்சரி கையாயிருங்கள். உன் தேவனாகிய கர்த்தர் பட்சிக்கிற அக்கினி, அவர் எரிச்சலுள்ள தேவன். - **உபாகமம் 4: 23-24**

*தொடரும்...*

*(_84_ பக்கம் தொடர்ச்சி)*

**'நான் நான்' என நம் உயிரையே குடித்துக் கொண்டிருக்கும் நஞ்சு நம்மை விட்டு அகல ஆரம்பிக்கும்.**

**'நமஹ நமஹ'**

**'நான் அல்ல நான் அல்ல' என்று பக்திப்பூர்வமாகச் சொல்லச் சொல்ல இதுவரை நீங்கள் பார்த்த மூன்று தத்துவங்கள் உங்களுக்குள் உயிர்ப்பிக்கப்பட்டிருக்கும். அந்தச் சக்தியாகவே நீங்கள் மாற ஆரம்பிப்பீர்கள்.**

**நான்காவது பகுதியை உச்சாடனம் செய்யச் செய்ய துக்க சக்தி மறைந்து ஆனந்த சக்தி பொங்க ஆரம்பித்து விடும்.**



**புரஸ்சரணத்தால் ஆன்ம தத்துவமும் ஆனந்த சக்தியும் உங்களுக்குள் உயிர்ப்பிக்கப்படுகிறது.**

**பூரணத் தியானம்**
**பிரம்ம தத்துவம்**
**தேவி தத்துவம்**
**குரு தத்துவம்**
**ஆத்ம தத்துவம்**

**இந்த நான்கு தத்துவங்களையும் உங்களுக்குள் உயிர்ப்பிக்கும் மந்திரம்தான். பூரண மூலமந்திரம். இந்தப் பூரண மூல மந்திரத்தைத்தான் பூரணத் தியானம் என்றழைக்கிறோம்.**

**ஓம் - பிரம்ம தத்துவம்**
**ஹ்ரீம் - தேவி தத்துவம்**
**நித்யானந்தாய - குரு தத்துவம்**
**நமஹ - ஆத்ம தத்துவம்**

**இந்த நான்கு மந்திரங்களைப் பக்திப்பூர்வமான பிரார்த்தனை உணர்வோடு உச்சாடனம் செய்பவர் யாராக இருந்தாலும் அவருக்குள் இந்த நான்கு தத்துவங்களும் விழிப்படைய ஆரம்பிக்கும்.**

**'ஓம் ஹ்ரீம் நித்யானந்தாய நமஹ' எனும் மந்திரத்தை தொடர்ந்து 21 நிமிடத்திற்குப் பக்திப்பூர்வமான பிரார்த்தனை உணர்வோடு உச்சாடனம் செய்வது புரஸ்சரணம்.**

**இது மிகவும் சக்தி வாய்ந்த தியானம்.**

**பல தெய்வ தரிசனங்களையும் ஆன்மீக அனுபவங்களையும் அற்புதங்களையும் உங்களுக்குத் தரவல்ல தியானம்.**

**நான்கு தத்துவங்களையும் ஒன்றாய் இது உயிர்ப்பிப்பதனாலும் நேரடியாக குருசக்தி உடலில் இருக்கும்போது இந்த மந்திரங்களை உச்சரிப்பதனாலும்... அற்புதங்கள் உங்களுக்கு நிகழ்வது மட்டுமல்லாமல் அற்புதங்களை நிகழ்த்தும் பலவிதமான சக்திகளும் உங்களுக்குக் கிடைக்க ஆரம்பிக்கும்.**

**ஆனால் இதையெல்லாம் தாண்டிய அற்புதம் ... இந்த மனத்தையே மாயமாக்கும் அஜபாஜெப நிலைக்கு மனம் கடந்த பக்தி நிலைக்கு இந்தத் தியானம் உங்களை எடுத்துச் செல்லும். எனவே எவ்வளவு முடியுமோ அவ்வளவு ஆழமாக இந்தத் தியானத்தில் மூழ்குங்கள். மீதம் நடக்க வேண்டிய அனைத்தையும் நான்கு தத்துவங்களும் பார்த்துக் கொள்ளும்.**

# கடந்தவையும் கடப்பவையும் (33)

- உமா மோகன் -

***அப்பாடசாலையில் கழிந்த நற் பொழுதுகளை***
***இப்பொழுது நினைப்பதிலும் ஒரு மகிழ்வு - அது***

***அமைதியான சூழலுள்ள பாடசாலை - அன்று***
***அமைதியற்று இடம் பெயர்ந்த மாணவர்க்கும்***

***அங்கும் கவலையான நிகழ்வு ஒன்று - அதையும்***
***இங்கு பகிர வேண்டும் அதற்கு முன்னம்***

***ஆறாத தழும்பாக அடிமனதில் இருப்பவை - புது***
***நீறு பூத்த நெருப்புப்போல் மறுபடியும் - இந்த***

***டாங்கிகளின் அணிவகுப்பும் பெரும் அதிர்வில்***
***குண்டுகளின் வெடிப்புகளும் அதால் எழும்***

***பேரழிவுச் சுவாலைகளும் அதில் பொசிந்து***
***அழியும் உடல்களும் உடமைகளும்***

***உயிரை மட்டும் காக்க என***
***பதறித் திரியும் மக்களையும் அவர்கள்***

***பதுங்கிக் கொள்ளும் இடங்களையும் புதிதாய்***
***ஒதுங்கி வாழவெனப் புலம்பெயர்ந்து திரிவதையும்***

***தம்மினம் என்பதனால் கைகொடுக்க ஓடிவரும்***
***எம்மினம் காணாத எமைக்காணவும் விரும்பாத - அவர்***

***இனத்திற்கு உதவ உருகித்துடிக்கும் கரங்களையும் - அவர்***
***உதவுகின்ற விதங்களையும் மட்டும் அன்றி***

***நாட்டைப் பிடிப்பதற்காய் ஆணிவகுத்து வருவோருக்கு - தம்***
***நாட்டை விட்டுக் கொடுக்கோமென வீறுகொண்டு***

***போத்தல் குண்டுகளைத் தயாரித்தும் - தம்***
***போர்க்களத்து வீரர்கள் உண்பதற்காய்***

***சற்றேனும் பயமின்றி சமையலையும் செய்யும் - நாட்டு***
***பற்றுடைய பெண்களையும் பார்க்கும் போது - எம்***

***இனத்திற்கு நடந்ததெல்லாம் மீண்டும்***
***மனக்கண் முன் வந்து நிற்க***

***சிலசமயம் மனநோயா இது எனவே - தன்***
***மதிப்பீடும் நடக்கிறதாம் சில இடத்தில்***

***உக்ரைனில் நடப்பதை உன்னிப்பாய் - எம்மவர்***
***அக்குவேறு ஆணிவேறாய் அனேகம் பேர் - இன்று***

***பார்க்கின்றார்கள் என்பதனைக் கேட்கும் போது - எம்நாட்டுப்***
***போரின் வடுக்களைச் சுமக்கும் ஒவ்வொருவருக்கும் - உக்ரைன்***

***ஒரு மீள் வாசிப்பே.........***

**(தொடரும்)**

# நெருக்கடி காலங்களில் வழிகாட்டுவதற்குத் தமிழர்களுக்கு இப்போது தலைமை இல்லை

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## பசுமை அறிவொளி நிகழ்ச்சியில் பொ. ஐங்கரநேசன்



இலங்கை முன்னெப்போதும் சந்தித்திராத பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித்தவித்துக் கொண்டிருக்கிறது. சிங்கள மக்களைப் போன்றே தமிழ்மக்களும் பெரும் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், யுத்த காலத்தில் பாரிய நெருக்கடிகளுக்குப் பழக்கப்பட்டுவிட்டோம் என்ற மனோநிலையில் இருக்கும் தமிழ்மக்கள் இந்தப் பிரச்சினைகளை அவற்றின் பாரதூரம் புரியாமல் இலகுவாக எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

யுத்த காலத்தில் தமிழ் மக்களை வழிப்படுத்த விடுதலைப்புலிகள் இருந்தார்கள். ஆனால், நெருக்கடி காலங்களில் வழிகாட்டுவதற்குத் தமிழர்களுக்கு இப்போது ஒரு தலைமை இல்லை. இப்போதைய நெருக்கடிச் சூழலை நாம் சரியான முறையில் கூட்டாக எதிர்கொள்ளத் தவறினால் தமிழினம் பாரிய எதிர்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம் திங்கட்கிழமை (23.05.2022) நாவற்குழியில் முன்னெடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருந்த பெற்றோர்களினதும் மாணவர்களினதும் மத்தியில் உரையாற்றும்போதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு எச்சரித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், தமிழ் மக்களின் பெரும் மூலதனம் கல்வி ஒன்றுதான். இதனாலேயே யுத்த நெருக்கடிகளின் மத்தியிலும் விடுதலைப்புலிகள் கல்விக்கென்று தனியானதொரு பிரிவை உருவாக்கி மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் கூடிய சிரத்தை எடுத்திருந்தார்கள். இடப்பெயர்வுகளின் மத்தியில் குப்பி விளக்குகளில் படித்தும்கூட மாணவர்களால் சிறந்த பெறுபேறுகளை எட்டக்கூடியதாக இருந்தது. ஆனால், இப்போது தமிழ்மக்கள் தொடர்ந்து கல்வியில் வீழ்ச்சியையே சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள்.

விடுதலைப்புலிகள் காலத்தில் இருந்த இறுக்கமான கட்டுப்பாடுகள் இப்போது இல்லாத நிலையில் வன்முறைகளுக்கும் போதைப் பொருள் பாவனைக்கும் மாணவர்கள் திட்டமிட்டுப் பழக்கப்படுகிறார்கள். இந்தத் திசைதிருப்புதல்களுக்கும் மேலாக, கொரோனாப் பெருங்கொள்ளை நோயால் பல மாதங்களாகப் பாடசாலைகள் மூடப்பட்டதாலும் மாணவர்கள் கல்வியில் பெரும் பின்னடைவைச் சந்தித்தார்கள். இவற்றுடன் இப்போது நாட்டின் பொருளாதாரச் சீர்குலைவும் கல்வியைப் பாதித்துக் கொண்டிருக்கிறது.

போரின் பாதிப்புகளில் இருந்து மீண்டெழ முடியாமல் இருக்கும் தமிழ் மக்களைப் பொருட்களின் உச்ச விலையேற்றம் கடுமையாகப் பாதிக்கத் தொடங்கியுள்ளது. வறுமை கல்வியை மோசமாகப் பாதிக்கும். ஏழைக் குடும்பங்கள் மாணவர்களை வேலைக்கு அனுப்புகின்ற சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எந்தக் கடுமையான சூழ்நிலையிலும் எதற்காகவேனும் பிள்ளைகளின் கல்வியை நாம் பலியிட்டுவிடக்கூடாது. இவ்விடயத்தில் தமிழ்த்தேசியம் பேசிக்கொண்டிருக்கும் அனைவரும் உடனடியாகக் கரிசனை கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்துள்ளார்.

# யாழ் – நாவற்குழியில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம்



தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித்திட்டம் திங்கட்கிழமை (23.05.2022) நாவற்குழியில் இடம்பெற்றது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பின்தங்கிய கிராமங்களில் மாணவர்களிடையே சூழல் அறிவைப் புகட்டி சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும், அவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் நோக்கோடும் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இதன் ஒரு கட்டமாகவே அன்று நாவற்குழி ஐயனார் கோவிலடியில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் அப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிட்ட மாணவர் குறிப்பேடுகள் வழங்கப்பட்டன. இக்குறிப்பேடுகளுக்கான அனுசரணையைக் கனடா ரொறன்ரோவின் மனித நேயக்குரல் அமைப்பு (Toronto Voice of Humanity) வழங்கியிருந்தது.





Chapel Ridge

FUNERAL HOME & CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



**CHRISTEEN SEEVARATNAM**

**(416) 258-6759**

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமீடலாம்

**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca



# Carefirst Family Health Team




## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com




பைரவி நுண்கலைக்கூடமும் ஈழத்தாய் தொலைக்காட்சியும்
இணைந்து நடாத்தும்
இசைச்சாரல்-3
Senior
GREENFLAME ONTARIO ன்
இசைச்சாரல்-3
குரலிசை போட்டி
Bhairavi Music Academy
eet TV
Grand Finale
June 11, 2022 @6:30pm
Thamil Isai Kalaamanram 1120 Tapscott Rd #3, Toronto, ON M1X 1E8
ARABI PRODUCTION
RAGEEF SUBRAMANIAM
416-509-4450
KT Media Solutions
•Stage Program Events
•Commercials
•Live Streaming on Social Media
Brampton & Toronto
416.617.3924
sathiy@yahoo.com
www.kannatech.com
SAI ACCESSORIES
SAI ACCESSORIES
HAND BAGS
BACK PACKS
WALLETS
KIDS HAIR BANDS
SANDALS
BATAS AND MORE
HARAN THANGAVADIVEL
416.880.4829
BRIGHTON
CAR RENTAL
Kingston & Morningside
4600 Kingston Road
Scarborough, ON M1E 2P4
416-284-4600 · 647-852-9110
PRIMERICA
Esha Candappu
Representative
Earn What You're Worth! Keep your full-time job and start part-time with Primerica. We'll show you how to build you business
For more information, Call
416.502.1600 Business
647.300.9364 Mobile
416.502.8478 Fax
esha.candappu@primerica.com
Primerica
150 Consumers Rd
Ste 506
Toronto On M2J 1P9
CALL MANO SAVE THE TIME AND MONEY
416.843.0646
manogaran85@hotmail.com
www.manohomes.com
FREE LEGAL FEES &
FREE HOME STAGING
Certified Negotiation Expert
Over Decade Of Experience
3rd Top Producer-2020
Super Elite Club Member 2018-2021
MANOGARAN
SUBRAMANIAM
GME FACILITY CLEANING SERVICE
GME
GREENFLAME
24/7 Service Available
HEATING & COOLING
Call us for a FREE CONSULTATION
416 827 4111
VIBRANT HOSPITALITY GROUP
WINSMART
PROFESSIONAL CLEANING COMPANY
Ragu
President
10 Milner Business Court
#300, Scarborough ON
M1B 3C6
416.821.7870
info@winsmart.ca
www.winsmart.ca
RAMANAN
SANTHIRASEGARAMOORTHY, MBA
416.290.6000
www.getnewhomes.com
TAMIL HERITAGE MONTH COUNCIL
SIGARAM learning
Phone: (416) 577-4233
(647) 774-6972
Email: sigaramlearning@gmail.com
Website: www.sigaramlearning.com
PixelImage
SKY LIMIT
MACHINING INC

எம் உதயன் ஆசிரியரின் கலை இலக்கிய ஊடகப் பயணம்
50 ஆண்டுகளை அடைந்து விட்டது ஆச்சரியமே இல்லை!
ஊர் கூடி தேர் இழுக்க வேண்டிய சாதனை விழாவில்
நாமும் பங்கெடுப்பதை பெருமையாகக் கருதுகின்றோம்.

# கனடா உதயனை வாழ்த்தி மகிழ்கின்றேன்



EXPERIENCE THE DIFFERENCE
RE/MAX
REALTY INC., BROKERAGE
INDEPENDENTLY OWNED AND OPERATED

RE/MAX ACE
Experts In The Local Market

கனடாவில் வீடு விற்பனைத் துறையில் பல விருதுகளைப் பெற்றவர்.
நீங்கள் விரும்பும் வர்த்தக நிறுவனங்களை வாங்குவதற்கு
நாடவேண்டிய நம்பிக்கையான முகவர்

## பாஸ்கரன் சின்னத்துரை

**416 880 8585 | 416 710 6169**

**RE/MAX ACE Realty Inc., 1286 Kennedy Road, Unit: 3 Scarborough, Ont M1P 2L5.**

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழ் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

LOOKING FOR YOUR Dream House?
647-401-9211
416-321-0110
@REALTORSEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
RE/MAX ROYAL PROPERTIES
Call SEYON CHANDRAKUMAR
BUYING SELLING INVESTING

உதயம் 1364 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 27, 2022

# இலங்கையின் தற்போதை பொருளாதார வீழ்ச்சிக்கு காரணகர்த்தாக்கள் ஊழல் அரசியல்வாதிகளும் உச்ச நிலையில் உள்ள உள்நாட்டு செல்வந்தர்களுமே

**- பல்கலைக் கழகமொன்றின் பொருளாதாரப் பேராசிரியர் ஒருவர் தெரிவிப்பு**

*(கொழும்பிலிருந்து எமது செய்தியாளர் விஜய்)*





இலங்கையின் தற்போதை பொருளாதார வீழ்ச்சிக்கு காரணகர்த்தாக்கள் அங்குள்ள ஊழல்அரசியல்வாதிகளும் உச்ச நிலையில் உள்ள உள்நாட்டு செல்வந்தர்களுமே என தெரிவிக்கப்பட்டுள்ளது

இலங்கையின் தென்பகுதியிலுள்ள பல்கலைக் கழகம் ஒன்றின் பொருளாதாரப் பேராசிரியர் ஒருவர் பகிர்ந்து கொண்ட சமூக ஊடகப் பதிவு ஒன்றிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளதாக அறியப்பட்டுள்ளது. இலங்கையின் உச்ச நிலைச் செல்வந்தர்களில் ஒருவரான தம்மிக பெரேரா மற்றும் ரவி விஜேரத்தின உள்ளிட்ட கோடீஸ்வரர்கள் சுமார் சில வருடங்களில் சுமார் ஐம்பதாயிரம் கோடி ரூபாய் வரி ஏமாற்று நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் இதன் காரணமாகவே இலங்கையில் பொருளாதாரச் சீரழி ஏற்பட்டு ஏழைகளும், மத்திய தர வர்த்தகத்தைச் சேர்ந்தவர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

இது தொடர்பான தகவல்களை முன்னிலை சோசலிசக் கட்சியின் பிரச்சாரச் செயலாளர் புபுது ஜயகொட அவர்களும் வெளியிட்டுள்ளார் என்றும் இதைப் போன்ற கருத்துக்களை பகிர்ந்தும் பல புத்திஜீவிகள் காலி முகத் திடல் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் அறியப்படுகின்றது

கடந்த 2015 தொடக்கம் 2020 வரையான ஐந்து வருடக் காலப்பகுதிக்குள் கோடீஸ்வர வர்த்தகர்கள் சுமார் ஐம்பதினாயிரம் கோடி ரூபா வரி ஏய்ப்புச் செய்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையும் தெரிவிக்கின்றது.

இலங்கையின் முதல்தர செல்வந்தர் தம்மிக பெரேரா மீ-தான குற்றச்சாட்டு

அதில் இலங்கையின் முதல்தர செல்வந்தர் தம்மிக பெரே-ரா 575 மில்லியன் ரூபாவையும் இன்னொரு கோடீஸ்வரரான ரவி விஜேரத்தின 760 மில்லியன் ரூபாவையும் வரி ஏய்ப்புச் செய்திருப்பது குறித்து கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐம்பதாயிரம் கோடி வரி ஏய்ப்புச்செய்துள்ள இலங்கையின் முதல்தர செல்வந்தர்கள்

இவ்வாறாக இலங்கையின் முன்னணி கோடீஸ்வரர்கள் பலரும் வரி ஏய்ப்புச் செய்து செலுத்தாமல் உள்ள நிலுவைத் தொகை மட்டும் ஐம்பதினாயிரம் கோடி ரூபா ஆகும்.

எனவே நாடு பெரும் பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களிடமிருந்து குறித்த வரி நிலுவையை அறவிட அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் புத்திஜீவிகள் சிலர் கருத்துக்களைப் பகிர்ந்துள்ளனர்.

# கனடா மனித நேயக்குரல் அமைப்பின் அனுசரணையில் நாவற்குழியில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டம் அறிமுகம்

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் பசுமை அறிவொளி நிகழ்ச்சித்திட்டம் கடந்த திங்கட்கிழமை 23.05.2022 அன்று நாவற்குழியில் இடம்பெற்றது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் பின்தங்கிய கிராமங்களில் மாணவர்களிடையே சூழல் அறிவைப் புகட்டி சூழல் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும், அவர்களின் கல்வி வளர்ச்சி மற்றும் ஆளுமை விருத்தியை மேம்படுத்தும் நோக்கோடும் பசுமை அறிவொளி நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்து வருகிறது. இதன் ஒரு கட்டமாகவே அன்று நாவற்குழி ஐயனார் கோவிலடியில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் பங்கேற்ற இந்நிகழ்ச்சியில் அப்பகுதியைச் சேர்ந்த மாணவர்களும் பெற்றோர்களும் கலந்து கொண்டிருந்தார்கள். மாணவர்கள் அனைவருக்கும் சூழல் விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிட்ட மாணவர் குறிப்பேடுகள் வழங்கப்பட்டன. இக்குறிப்பேடுகளுக்கான அனுசர-ணையைக் கனடா ரொறன்ரோவின் மனித நேயக்குரல் அமைப்பு **(Toronto Voice of Humanity)** வழங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.



# மொன்றியல் தமிழர் மூத்தோர் இணையம் கொண்டாடிய 'அன்னையர் தினம்'




கடந்த வாரம் மே 21-ம் நாள் சனிக்கிழமை காலை 11.00 மணியளவி-ல் அன்னையர் தினத்தைக் கொண்டாட வேண்டி அழைக்கப்பட்ட விருந்தினர்கள் அனைவரும் மொன்றியல் மூத்தோர் அரங்கில் உற்சாகமாகக் கூடியிருந்தனர்.

இணையத்தின் தலைவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு.முத்துக்குமார் சிவானந்தம் தலைமையில் விழா இனிதே ஆரம்பமானது. இறைவணக்கம் – தமிழ்மொழி வாழ்த்து – அகவணக்கம் என மரபு பேணிய ஆரம்பம். தலைமையுரையை தலைவர் திரு.மு. சிவானந்தம் சுருக்கமாக நிகழ்த்த – நிர்வாக உறுப்பினர் திரு. கேதீஸ்வரன் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்து அரங்கைச் சுறுசுறுப்பாக்கினார். *(உள்ளே கட்டுரையின் தொடர்ச்சி 68ம் பக்கத்தில்)*

# இலங்கைக்கு தேவை ஒரு லீ குவான் யு - ரணில் மாறுவாரா?

**கொழும்பிலிருந்து வி.தேவராஜ் (மூத்த ஊடகவியலாளர்)**





"கோதா கோ கம" என்பது ஜனாதிபதி கோதாபய ராஜபக்' மற்றும் ராஜபக்' குடும்பம் அவர்களுடன் இணைந்த ஆளும் வர்க்கம் அரசியலில் இருந்து அகற்றப்பட வேண்டும். ஊழல் மோசடிகள் அற்ற புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்படல் வேண்டும் என்ற கருத்தியலில் கட்டிஎழுப்பப்பட்டதாகும்.

இது இலங்கைக்கான பொதுவான கருத்தியலாக பொதுவில் பேசப்பட்டபோதும் உண்மையில் "கோதா கோ கம" வில் குடியேறி இருக்கின்ற இளைஞர் யுவதிகள் மற்றும் இவர்களைத் தத்தெடுத்துக் கொண்டுள்ள தென்னிலங்கை மக்களுமே இந்தக்கருத்தியலுக்கானசொந்தக்காரர்களாகும்.

ஏனெனில் வழமையாக தென்னிலங்கையில் முன் வைக்கப்படும் அரசியல் கருத்தியல்கள் நடைமுறையில்தென்னிலங்கையைநோக்கியதாவே அமைவது வழமை.

- 2010 ஆம் ஆண்டு அதாவது போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டதை அடுத்து நலலாட்சி குறித்த அரசியல் கருத்தியல் முன்வைக்கப்பட்டது.

*(உள்ளே கட்டுரையின் தொடர்ச்சி 12ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Realty Inc., Brokerage
Siva Shanmuganathan Broker
Joy H.Selvanayagam Broker